உ

திருமால் துணை.

கலித்தொகை

மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

நான்காவது முல்லைக்கலி.

(௱௧.) களிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்ற
முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலையேபோற் றடவுபு துடுப்பீன்ற
ஞெலிபுட னிரைத்த ஞெகிழிதழ்க் கோடலும்
மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்ட தம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினோன் கணிச்சிபோற் கோடுசீஇ
யேறுதொழூஉப் புகுத்தன ரியைபுட னொருங்கு;

௧0 அவ்வழி, முழக்கென இடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்
துறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ;
௧௫ மேற்பாட் டுலண்டி னிறனொக்கும் புன்குருக்க
ணோக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் றோற்றங்கா

ணஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியா
னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்;

௨௧ சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றோற்றங்காண்
படரணி யந்திப் பசுங்கட் கடவு
ளிடரிய வேற்றெருமை நெஞ்சிடந் திட்டுக்
குடர்கூளிக் கார்த்துவான் போன்ம்;

௨௭ செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி
நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றோற்றங்கா
ணொருவ னிருங்கங்குல் வந்துதன்
றுளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தேடுளிற் றிருகுவான் போன்ம்;

எனவாங்கு;

௩௪ அணிமாலைக் கேள்வற் றரூஉமா றாயர்
மணிமாலை யூதுங் குழல்;

௩௫ கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சா வேற்றை
விடாஅதுநீ கொள்குவை யாயிற் படாஅகை
யீன்றன வாயமக டோள்;

௩௬ பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்
சுவன்மிசைக் கோலசைத்த கைய னயலது
கொல்லேறு சாட விருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்த லணைகொடுப்பேம் யாம்;

௪௩ கோளாள ரென்னொப்பா ரில்லென நம்மானுட்
டாளாண்மை கூறும் பொதுவ னமக்கொருநாட்
கோளாள னாகாமை யில்லை யவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்;

௪௭ ஆங்கு, ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு.

இஃது "ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெய, ராவயின் வரூஉங் கிழவரு முளரே" என்னும் (௧) சூத்திரத்தில் 'திணைநிலைப்பெயராகிய கிழவருங் கிழத்தியரும் உளர்' என்னும் விதியாற்கொண்ட அத்தலைவிக்கு அவள் தோழி ஆயர் ஏறுதழுவுகின்றமைகாட்டி அவள் அதுகண்டு வருந்தாமல் ஆண்டுப் பெற்ற நன்னிமித்தங் கூறித்தெளிவித்து, *அதனை அவ்விதியாற்கொண்ட தலைவற்குங்கூறி, மீட்டும் அத்தலைவிக்குத் தீச் சுற்றத்தார் கூறியிருக்குங் கூற்றினையுங் கூறி, தலைவனும் இன்னும் ஒருஞான்று ஏறு தழுவி நம்மை வரைந்துகொள்வனென்று ஆற்றுவித்தது.

இதன் பொருள்.

தளிபெறு தண்புலத்துத் (௨)தலைப்பெயற் கரும்பீன்று
முளிமுதற் பொதுளிய (௩) முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலைபோற் (௪) றடவுப (௫) துடுப்பீன்று
ஞெலிபுட னிரைத்த †ஞெகிழிதழ்க் (௬)கோடலு

௧. தொல். அகத். சூ. ௨௧.

௨. "தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்,. திருள்படப் பொதுளிய பராரை மராஅத்து" முருகு. ௬ - ௧௦.

௩. பிடாவென்பதுமுட்காலையுடையதொரு புதல்;' மழைக்குத் தளிர்த்து அரும்பிக் குலையாகப் பூப்பது; இதன்பூ நீண்ட காம்பையும் வெண்

ணிறத்தையுமுடையது (அ)"முட்பிடவார்சிறுநெறி" (ஆ)"வான்பிசிர்க் கருவியிற் பிடவுமுகை தகையக், கான்பிசிர்கற்பக்கார்தொடங்கின்றே" (இ) "சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல், கண்ணியின் மலருந் தண்ணறும் புறவில்" (ஈ) "குறும்புதற்பிடவி னெடுங்காலவரி" (உ) "நிலவெனத், தொகுமுகை விரிந்த முதுகாற் பிடவின்" எனவருதலும் காண்க. பிடாவென ஒரு மரமும் உண்டென்பர்.

௪. "தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்" தொல். உரி. ௫. ௨௫.

௫. (அ) "கார்தட் டுப்பிற் கமழ்மடல்" மலை. ௩௩௪. என்பதும் (ஆ) கலி. ௯௧: ௩ - ௪வது அடிக்குறிப்பில் கார்தட்டுப்பென வந்திருப்பனவும் ஈண்டு அறிதற்பாலன.

௬. கோடலென்பது பெரும்பாலும் முல்லைநிலத்துக்குரித்தாகக் கூறப்படும்ஒருபூக்கொடி ; இதன்குலைக்குப் பாம்பின் படமெடுத்தநிலையும்

(பிரதிபேதம்) * இதனை, † நெகிழதழ்க் கோடலும்.

(௧)மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்டதம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினோன் (௨)கணிச்சிபோற் கோடுசீஇ
யேறுதொழூஉப் புகுத்தன ரியைபுட னெருங்கு

எ - து: மழைபெய்யப் பெறுகின்ற குளிர்ந்த நிலத்தே நின்ற கார்காலத்து முற்பட்ட மழைக்கு *அரும்பீனுகின்று முன்புஉலர்ந்த முதலிடத்தே தழைத்த முள்ளைப் புறத்தேயுடைய பிடவம்பூவும், (௩) கள்ளுண்டு†களித்தலுற்றவனிலைமைபோல அசைந்து ‡ வளைந்து துடுப்புப்போலும் முகையை முன்னர்

இதன்பூவுக்கு விளக்கும் உவமையாகக் கூறப்படுகின்றன; இஃது இடையரால் சூடப்படுவது; இது பெரும்பாலும் வெண் காந்தளுக்கே பெயராய்வருமென்பர்; இங்குச்செங்காந்தட்கு வந்திருப்பது புண்டரீகமென்பது செந்தாமரைக்கு வருவதுபோல அருகியவழக்கு; (அ) "குருவுடையன கொடிமிடைவொடு குலைவிரிவன கோடல்" (ஆ) "வெஞ்சின வரவின் பையணந் தன்ன, தண்கமழ் கோட றாதுபிணி யவிழ" (இ) "அணர்த்தெழு பாம்பின் றலைபோற் புணர்க்கோடல், பூங்குலையீன்ற புறவு" (ஈ) "கோடலர் தீப மேந்தி" (உ) "வரிவெண்கோடல் வாங்குகுலை வான்பூப், பெரிய சூடிய கவர்காற் கோவலர்" என்பவற்றால் இவை விளக்கும்; இதுவும் மகளிர்விரலும் ஒன்றற்கொன்று உவமையாதல் இந்நூற்பக்கம் சக: க-ஆம் குறிப்பால் அறியலாகும். தோன்றி யென்பதும் இதன்வகைபோலும்.

க. (அ) "மணிக்காயா" பொருந. உ௦க. (ஆ) "மணியெனத், தேம்படு காயா மலர்ந்த" ஐங். சஉ௦.

உ. கணிச்சி, மழுவின் வேறாய தொருபடை; இதனை, "கையது கணிச்சி யொடு மழுவே மூவாய், வேலு முண்டத் தோலாதோற்கே" என்பது வலியுறுத்தும்.

ந. (அ) "நாளா தந்து நறவுநொடை தொலைச்சி, யில்லடு கள்ளின் றோப்பி பருகி..........தோளோச்சி வலன் வளையூடப், பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை" பெரும்பாண். கசக - கசரு. (ஆ) "தசும்பு துளங்கிருக்கையென்றது தன் களிப்புமிகுதியால் தன்னை யுண்டாருடல்போல அத்தசும்பிருந்து ஆடும்படியான இருப்பென்றவாறு; இச்சிறப்பான், இதற்கு, 'தசும்புதுளங்கிருக்கை' என்றுபெயராயிற்று" பதிற். சஉ: கக,உ௦. (இ) "துழந்தடு கள்ளின் றோப்பியுண் டயர்ந்து, பழஞ்செருக் குற்ற வனந்தர்ப் பாணியும்" மணி. எ: எக - எஉ. (ஈ) "அரிய லார்ந்த வனந்தர்" தணிகை. திருநாட்டு. ச௦௦.

(பிரதிபேதம்) * அரும்பியீனுகின்ற, † களித்ததும்பவணியிலமை ‡ யீன்றதுடைப்பு.

ஈன்று, பின்னர்த்(க)தீயைக் கூடைந்து, அதிற்பிறந்த நெருப்பைச்சேரநிரைத் தாற்போன்ற அலர்ந்த இதழினையுடைய செங்காந்தட்பூவும், நீலமணியை யொக்கும் நிறத்தினையுடையவாகிய(உ)*காயாம்பூக்களும் பிறவும் அழகுகொள் ளும்படி சூடிய கண்ணியையுடையவர் சேரத்தொக்கு ஏறுதழுவுவாரோடே மாறுபடுதலை ஏறட்டுக்கொண்ட தம் மைந்தினைச் சேரநிறுத்துதற்கு மகட் கொடை நேர்ந்த ஆயர் சேரக்கூடி, பிறரால் சீறுதற்கரிய வலியினையுடைய இறைவனுடைய குந்தாலிப்படைபோலே கூரிதாகக் கொம்புகளைச் சீவி, ஏறு களைச் சேரத் தொழுவிடத்தே புகுதவிட்டார். எ - று.

தண்புலத்துநின்ற பிடவும் காந்தளும் காயாவும் பிறவுமென்க. இவை (௩)முதற்பொருட்கேற்ற அடையடுத்துநின்ற ஆகுபெயர். ஈன்றென்பதுநிகழ் காலமுணர்த்துஞ் செய்தெனெச்சம். (௪) ஞெகிழியுடனென்னுது ஞெலிபட னென எச்சமாகக்கூறுதலின் இவ்வாறு பொருள் †கூறினும். "ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழி" (௫)என்பதனுனும் இது வினைச்சொல்லாம்.

அவ்வழி, முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்
(௬)துறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ

எ - து: அவ்விடத்து ஏறுகளைத் தழுவிப்‡போக்கும்படியை உட்கொண்டு வந்து வந்து திரண்டு மழைமுழக்கென்ன இடியென்ன நடுவானநிலத்தின்

க. "தீயி னன்ன வொண்செங் காந்தட்,... ....நெருப்பி னன்ன பல்லிதழ்" மலை. ௧௪௫-௧௪௬.

௨. "காயாம்பூங் கண்ணிக் கருந்துவராடையை" கலி. ௧0௮: ௧0.

௩. 'தளிபெறு...................பிடவமும்" என்பது பூங்குமிழென்பது முதலாகிய தன் பொருட்கேற்ற அடையடுத்து நின்ற நோராகுபெய ரென்பதற்கும் (கோவையார். ௯: பேர்.) செய்தென்னும் வினை யெச்சத்திற்கு நிகழ்கால வாய்பாடும் சிறுபான்மையுண்டென்பதற்கும் (தொல். வினை. சூ. ௩௧. நச்.) உகரவீறுசிறுபான்மை நிகழ்காலம் பற்றி வருமென்பதற்கும் (இ - வி. சூ. ௨௪௬.) மேற்கோன்.

௪. "சொடு மழைக் காற்று தங்கட் குளிர்பெயன் மாறவெண்ணி, நெடு மலை யெடுத்துக் காட்டு செட்டிதழ்க் கார்தட் கொள்ளி"

௫. பெரும்பாண். ௧௭௮.

௬. (அ) "யாறுங்குளனும் வேறுபல் வைப்புஞ், சதுக்கமுஞ் சந்தியும் புதுப் பூங் கடம்பும்" முருகு. ௨௨௪-௨௨௫. (ஆ) "ஆலமுங் கடம்பு நல்யாற்று நடுவும், கால்வழக் கறுங் லைக் குன்றமும்பிறவு, மவ்வவை மேய வேறு

பிரதிபேதம்) * காயாம் பூக்களுமழகுகொளளும்படி, † கூறிற்று. ஞெகிழ்கோத், ‡ போகும் படியை யுரைகொண்டு வந்து வந்து.

முன்னே ஆரவாரமெழப் புகையொடு துகள் எழ ஏறுதழுவினோர்க்குக் கொடுத் தற்கு நல்லமகளிர் திரண்டுநிற்ப * நீர்த்துறையிலும் (௧) ஆலமரத்தின்கீழும் பழையவலியினையுடையமாமரத்தின்கீழும் உறையுந்தெய்வங்கட்குச் செய்யும் முறைமைகளைப் பரவித் தொழுவிலே பாய்ந்தார். எ - று.

"வளிவழக் கறுத்த வங்கம்" (௨) என்றாற்போல வழக்குப் போக்குதன் மேல்நின்றது.(௩) இடி எற்றின் இடிப்பிற்கு உவமம். அவர்பாய்ந்த அளவிலே தோழி தலைவியை அழைத்துக்காட்டுகின்றாளாக மேற்கூறுக.

கடு மேற்பாட் டுலண்டி ஞிறஞெக்கும் புள்குருக்க

ஞெக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்

கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் றோற்றங்கா
ணஞ்சி நசையியல் கூந்தற்கை நீட்டியா
(ச)னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்

எ - து: உயர்ந்த கொம்பிடத்தே வைத்த(ரு)உலண்டினது நிறத்தை யொக்கும் புல்லியநிறத்தைத் தன்னிடத்தேயுடைய எருத்தினது நோக்கை அஞ்சானாய் அதின்மேலே பாய்ந்த இடையனைச் சாவக்குத்திக் கொம்பிடத்தே எடுத்துக்கொண்டுடலைக்குலைக்கின்றதனுடையதோற்றரவைக்காணாய்; அழகிய

வேறு பெயரோ, யெவ்வயி னோயு நீயே" பரி ச: கள - எ௦. (இ) "துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்" சிலப். உ.ச. 'குறமகள்'

க. (அ) "ஆலுங் கடம்பு மணிமார் விலங்கிட்ட" கலி. க௦௬: உ௬. (ஆ) "கடவுளாலத்து" நற். ௩சந: ச; புறம். சக௬: க.

உ. புறம். ௩௬அ: க.

௩. "உருமி னதிருங் குரல்போற் பொருமுரா, ணல்லேறு" கலி. சக௩: உச - உ௫. என்பதும் அதன் குறிப்பும் இங்கே நோக்கற்பாலன.

ச. "நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன், வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்" என்பது 'இட்டு' என்னு மிடைச்சொல் அசைநிலையாய் வருதற்கு மேற்கோள். நன். இடை. சூ. உஉ. மயிலை; விருத்தி; இரா. இ - வி. சூ. உஎஎ.

௫. உலண்டென்பது தான் வெளிப்படுதற்கு வழியின்றித் தன்னுடம்பைத் தானூற்கு நூலாற் சுற்றிக் கூடாக்கிக் கொண்டு அதனுளிருந் திறக்கும் இயற்கையையுடையதொரு புழு; அந்நூலியற்ற அதுவே வல்லது. அது காட்டிலமிர்தென்று சிறப்பிக்கப்படுவது; அதனாலால் சிறந்த ஆடை செய்தலுண்டு; இவை (அ) "வரியுடல் குழக்குடம்பை நூறெற்றிப், போக்குவழி படையா துள்ளுயிர் விடுத்தலி, னறிவு

புறம் போய வுலண்டது போல" (ஆ) "போக்குவழி கண்டிடை (பிரதிபேதம்) * நீர்த்துறையும் ஆலத்தின் மூழும்.

தலைமையினையுடைய மனமசைந்த இயல்பினையுடையளாகிய துரோபதையது தூய்ய கூந்தலிலே கையை நீட்டிய* துச்சாசனனுடையநெஞ்சைப் பிளந்து போகட்டுப் பகைவர்களிடையே தான்சொன்ன வஞ்சினத்தை வாய்க்கச்செய்த வீமசேனனைப்போலும். ¹எ - று.

போலும் போன்மெனத் திரிந்தது. † "ணகாரை முன்னர் மகாரங் குறுகும்" (க)என்பதனான் மகாரங் கான்மாத்திரையாய் நின்றது. புன்குருக்கண், ஆகுபெயர். சாவக்குத்தியென்பது "சாவ வென்னுஞ் ‡செயவெனெச்சத் திறுதி வகரங் கெடுதலு முரித்தே" (உ) என்பதனால் வகரங்கெட்டது.

௩க (ங)சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றோற்றங்காண்
படரணி யந்திப் பசுங்கட் கடவு
ளிடரிய(ச)வேற்றெருமை நெஞ்சிடந் திட்டுக்
குடர் ‖ கூளிக் கார்த்துவான் போன்ம்

புகாது று முலண்ட, மாக்கியிடு கூடதனை யாத்திடுதல் போல" (இ) "குடம்பையுளுலண்டுபோலக்கோட்படும்வினையன்"(ஈ) "வாலுலண்டு கோற்றருக, றேன்புரிந்தி யார்க்குஞ் செயலாகா" (உ) "அரக்குலண்டு செந்தே னணிமயிற்பீலி, திருத்தகு நாவியோடைந்து" (ஊ) "தாவிலு

மூலண்டினு நாரினு மியன்றன" என்பவற்றால் அறியப்படுகின்றன; இங்கே அதனிறம் புற்கென்றநிறமென்று சொல்லப்படுகிறது. இவ் வகை ஆராய்ச்சியால் இது பட்டுப்பூச்சி யென்பது விளங்கும்.

௧. தொல். மொழிமரபு. சூ. ௧௧.

௨. சாவ வென்னும் எச்சத்து இறுதிக்கணின்ற வகரவுயிர்மெய் கெட்டு நிற்றற்கு, "கோட்டிடைச் சாக்குத்தினன்'' என்பது (தொல். உயிர் மயங்கு. சூ. எ. நச்; இ - வி. சூ. அகு) இவற்றிலும், 'சாக்குத்தினன்' என்பது (தொல். உயிர்மயங்கு. சூ. எ. இளம்.நன். உயிரீற்று. சூ. ௧௧. மயிலை. விருத்தி. இரா); இவற்றிலும் மேற்கோளாகக் காணப்படுகின்றன. 'சாக்குத்தினன்' என்பதனை முதனிலைவினை வினைமாத்திரையாய் நில்லாது வினையெச்சப் பொருட்டாய் நின்றதென்பர் பிரயோக விவேக நூலார். பிரயோக. ௩௫.

௩. "வள்ளுரு ணேமியான் வாய்வைத்த வளைபோலத், தெள்ளிதின் விளங்குஞ் சுரிநெற்றிக் காரியும்" கலி. ௧0௫: ௯-௧0.

௪. (அ)"எற்றெருமைநெஞ்சம் வடிம்பினிடர்திட்டு" கலி.௧0௩: ௪௯. எனவும் (ஆ) "எற்றெருமை புகைத்தடரு மிருணிறத்த வெரிகுஞ்சிக்,

(பிரதிபேதம்) *துச்சவாசனுடைய, † 'மகர முன்னர் மகரங்குறுகும்' ‡ செய்தெனெச்சத் திறுதி, || கனிக் காத்துவான். .

எ- து: மதிவிரித்தாற்போன்ற சுட்டியைப் பெற்றநெற்றியிலேயுடைய கரிய எருது முழைஞ்சினையுடைய மலையிற்பூவாற்செய்த அழகையுடையகண்ணியை யுடைய பொதுவனைத் * துகைத்துக் குடர்சரியும்படி குத்திக் கோட்டிடைக் கொண்டு குலைப்பதனுடைய தோற்றரவைக் காணாய்; பல்லுயிரும் வருத் தத்தை அணிகின்ற வீழ்முடியிலே (க)பசியநிறத்தைத் தன்பாகத்தேயுடைய உருத்திரன் வருத்தத்தைச்செய்த எருமையின் எருமையையேறுகின்ற(உ)கூற்றுவ னுடையநெஞ்சைப் பிளந்துபோகட்டு அவன் குடரைக் கூளிக்கிட்டு அவற்றின் வயிற்றை நிறைவிக்கின்றவனைப்போலும். எ - று.

எருமை, † ஆகுபெயராய்க் கூற்றுவனை உணர்த்திற்று.

உஎ (௩)செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி
நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றோற்றங்கா
ணிரு ளென்னு னருங்கங்குல் வந்துதன்
றுளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளிற் றிருகுவான் போன்ம்

எ - து: செவிமறுவாயிருக்கின்ற விளங்கும் நுண்ணிய சிவந்த பொறி களையுடைய ஆயர் நேர்ந்துவிட்ட வெள்ளை யெருத்தினது கோபத்தை ‡ அஞ்சா னாய் அதன்மேலே பாய்ந்த பொதுவனை நுதிபைத் துகைத்து முனையினை யுடைய கோட்டாலெடுத்துக் குலைப்பதனுடைய தோற்றரவைக் காணாய்; வருதற்கரிய கங்குலிலே அரிய இருளென்று கருதானாய் வந்து துரோணா சாரியனைக் கொன்ற (௪)சிகண்டியைத் தன்முயற்சியாலே வென்று கொன்று தன் தோளால் தலையைத் திருகும் || அச்சுவத்தாமாவைப்போலும். எ - று.

கூற்றம்" நைடத. போர்புரி. சுஙு. (இ)"கூற்றினெருமை யேறணிந்த கண்டையொலி" காசி. மணிகன்னிகை.கஅ. எனவும் வருதல் காண்க.

க. பசியநிறமென்றது அர்த்தநிறத்தையுடைய உமாதேவி பாகமை.

௨. "சுடர்பொதி மூவிலை வேலுடைக் காலனைத் துண்டமதா, வுடறிய சேவடி யான்" தேவாரம்.

௩. (அ) "செம்மறு வெள்ளை" (ஆ) "சில்லைச் செவிமறை கொண்டவன்" கலி. ௧௦௫: ௧௨, ௧௦௭: ௬. (இ) "நுண்பொறி வெள்ளை யடர்த் தார்க்கே", "பொற்பொறிவெள்ளை யடர்த்தார்க்கே", "தூநிறவெள்ளை யடர்த்தார்க்கு" சிலப். ௧௭: ௪, ௫, ௭.

௪. துரோணரைக்கொன்றவன் திட்டத்துய்மனும்வீடுமரைக்கொன்றவன் சிகண்டியுமாதலால் இங்கே சிகண்டியை யென்பது திட்டத்துய்மனை

(பிரதிபேதம்) * தெறுகைத்து. † ஆபேப்பெயராய்க், ‡ 'அஞ்சாறுய்த் தன்மேலே பாய்ந்த பொருவினைத் தகைத்து முன்னினது தனிபோதும் முனையினையுடைய' என்பது முந்திய பதிப்பு. || அசுவத்தாமாவைப்போதும்.

நேர்வெள்ளையென்க. நுதியென்றது முனை; எனவே, தலை யென்பது தோன்றிற்று. *"நுதிக்கோலஞ்செய்து"(௯) என்றாற்போல.

எனவாங்கு அசை.

இங்ஙனம் தோழி காட்டக்கண்டு நங்கணவற்கும் இங்ஙன மாகுமோ வென்று அஞ்சின தலைவியது அச்சத்தை ஆண்டுப்பெற்ற நன்னிமித்தங்கண்டு தோழி †போக்குவாளாக மேற்கூறுகின்றாள்.

௩.௪ அணிமாலைக் கேள்வற் றரூஉமா (௨)‡சாயர்
மணிமாலை யூதுங் குழல்

யென்றிருக்க வேண்டியதென்று தோற்றுகிறது. வியாஸபாரதத்தில்

அசுவத்தாமா திட்டத்துய்மனை அவனுறங்குகையில் காலாலுதைத்து நிலத்திற்தேய்த்துத் தன்வில்லின் நாண்கயிற்றினால் அவன் கழுத்தைக் கட்டி இழுத்து அவனை மிதித்து வருத்தாநிற்க, அவன் வலியற்று, 'குரவன் காதலா! யான் புண்ணிய வுலகடையுமாறு என்னைப் படைக் கலத்தால் விரைந்து கொல்' என்று வேண்டவும், 'குரவனைக்கொன்ற பாவிகட்கு நல்லுலகங்கள்கிடையா; ஆதலால் நீ படைக்கலத்தால் கொல்லத் தக்காயல்லை' என்று மறுத்து மீட்டும் தன்காலகளால் உயிர் நிலைகளில் உதைத்துக் கொன்றான்" என்று காணப்படுஞ் செய்தியும் பின்பு, "வீடுமனைக்கொன்ற சிகண்டி எதிர்த்துப் புருவங்களுக்கிடையே வில்லால் அடிக்க, அவனைக் கத்தியால் இருதுணியாகத் துணித்தா னென்று காணப்படுஞ் செய்தியும் இங்கே அறிதற்பாலன. வில்லிபுத் தூரரும்,"பருவரலகற்றி யிருவர்வீரரையும் பாசறை வாயிலி்னிறுத்தி, மருவரும் கமல மாலையான்கடப்ப மாலையானெனமனங் களித்துப், பொருவரு முனைக்குக் குரிசிலா யெல்லாப் போரினும் புறமிடா தடர்த்த, துருபதன் மதலை வரிசிலைத் திட்டத் துய்மனை மணித்தலை துணித்தான்", "கயில்புரி கழற்காற் றந்தையைச் செற்ற காளையைப் பாளையத் திடையே, துயில்புரி யமையத் திமைக்குமுன் சென்னி துணித்தனன் சுதனெனக் கலங்கி, வெயில்புரி வதன்முன் வல்விரு ளிடையே யுணர்ந்தவர் வெருவுட னரற்றப், பயில்புரி சிலைக்கைச் சிகண்டியை முதலோர் பலரும்வர் தனர்கள்பாஞ் சாலர்", "உத்தமோ சாவு முதாமனு முதலிட் டுள்ளவர் யாவரும் பிறருந், தத்த மோ கையினால் வந்தெதிர் மலைந்தோர் தலைகளாற் பலமலையாக்கி" என்று கூறியிருக்கிறார்; வில்லி. பதினெட்டாம். உகரு - உசு.

க. கோவையார். உகூ0.

உ. "அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன், குழல்போலுங் கொல்லும் படை" குறள். கஉஉஅ.

(பிரதிபேதம்) *, தரிக்கோலஞ் செய்ததென்றற்டே ஈல. † போதி[illegible]னாக மேற்கூறுக. அணிமாலைக். ‡ ஆயன்.

எ - று: ஆயர் ஈண்டு ஊதுகின்ற குழல் நீலமணிபோலுங் காயாம்பூவாற் செய்த மாலையினை அணியும் இயல்பினையுடைய கேள்வனை நமக்குத் தருதற்கு நன்னிமித்தமாக இசைத்தது காண்; நீ அஞ்சாதேகொள்ளென்றாள். எ - று.

அது, மங்கலமான பண்ணைத் தருதலின் நிமித்தமாயிற்று.

ரு.சு கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சா வேற்றை
விடாஅதுநீ *கொள்குவை யாயிற் படாஅவை
யீன்றன †வாயமக டோள்

எ - து: தோழி, தலைவனிடத்தே சென்று ஆண்டுச்செய்த நிமித்தத்தை ஆராய்ந்துபார்க்கில், மதத்தையுடைய களிற்றினுக்காட்டிற் றறுகண்மையை யுடைய ஏற்றை நீ கைநெகிழவிடாது கொள்வை; இப்பொழுது இவ்வாய மகள் ‡தோள்·எனைமகளிர் தோள்களிற்காட்டில் ||வெற்றிக்கொடியை உண்டாக் கினவாமென்றாள். எ - று.

ரு.கூ பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்
சுவன்மிசைக் கோலசைத்த கைய னயலது
கொல்லேறு சாட விருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்த லணைகொடுப்பேம் யாம்

எ - து: பின்னர்த் தலைவியிடத்தே வந்து எம்முடைய பலவான கரிய கூந்தலினையுடையவளை யாம் கூடுதற்குக் கொடுப்பேம்; கொல்லேற்றைச் சாடுதற்குச்சமைந்திருந்தவர்களுக்கென்று ÷ நமர்கூறி, கூற்றம் தலைவினையொழிந்த பகற்பொழுதிலேஅலர்ந்த கண்ணியையுடையவன் வருத்தத்தையுடைத்தாகிய குழலினையுடையவன் × சுவலின்மேலே கோலைவைத்தகையையுடையவனாகிய வினைவலபாங்கினோர்க்கு அயலதாயிருக்குங்காலென்றான். எ - று.

அயலதென்றது ஏறு தழுவுதற்கு அரிதென்னும் + பொருட்டு. இம்மூன்று பெயரும் ஏறுதழுவினவர்களை நோக்கிக் கூறிற்று.

சங. (க)கோளாள ரென்னொப்பா ** ரில்லென நம்மானுட்
டாளாண்மை கூறும் பொதுவனமக்கொருநாட் .

க. "தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன், வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான், கோளாள னென்பான் மறவாதா னிம் மூவர்,கேளாக வாழ்த லினிது" (திரிகடுகம்.கஉ.) என்னுஞ் செய்யுளினும் இப்பகுதியிலுமுள்ள எதுகைச்சொற்கள் ஒப்பு நோக்கற்பாலன.
(பிரதிபேதம்) * கொன்னுனையாயிற், † ஆயர்மகன், ‡ தோளைமகளிர், தோள்வீரமகளிர், || வெற்றிக்கொம்பையுண்டாக்கின, ÷ நமர்கூடிக்கூறுந்தலைவினை × சுவன் மேலே[illegible]வைத்த கையையுடையவனு:யொழிந்தவினைவல, + பொருட்டாயிற்று. இம்மூன்று, ** இல்லே னம்மானுட்.

நான்காவது முல்லை க. கஉள்

*கேளாள னுகாமை யில்லை யவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்

எ - து: யான் முற்கூறிய நிமித்தமேயன்றித் தலைவனைக் கண்டு என் கண்கள் உபகாரத்தைச் செய்கையினாலே ஏறுகொள்ளவல்லார் என்னை யொப்பார் பிறரில்லை யென்று நம்முடைய பசுத்திரளிலே நின்று தனது தாளாண்மையைக் கூறுந் தலைவன் பின்பு ஒருநாளிலேயாயினும் ஏறுதழுவி †நம்மைத் தனக்குக் கேளாக ஆளுந் தன்மையையுடையனாகாமை இல்லை யென்றாள். எ - று.

தாளாண்மை - முயற்சியை. ....ஆண்டு ‡போதுவன். நம்மை, நமக்கு; உருபுமயக்கம். கண் வேளாண்மை செய்தலாவது, (க)இடக்கண் துடித்தல்; வலக்கண் ‖ துடிக்கலாதிருத்தலும் நன்னிமித்தமாதலிற் செய்தனவெனப் பன்மையாற் கூறினன்.

சஎ × ஆங்கு, ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
(உ)நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
(ஈ)முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு

எ - து: அவ்விடத்தில் ஏறுகளும் வருந்தின; இடையரும் புண்மிக்கா ரென்று எல்லாம் (விலக்குகையினாலே) தம்மைக் கொள்ளுதற்கு நின்ற

க. (அ) "கண்ணகி கருங்கணு மாதவி செங்கணு, முன்னிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன, வெண்ணுமறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன" சிலப். ௫: உ௩எ - உ௩௧ (ஆ) "போக மகளிர் வலக் கண்க டெடித்த" சீவக. உசஎ௩. (இ) "நலந்துடிக் கின்றதோ நான் செய் தீவினைச், சலந்துடித் தின்னமுந் தருவ துண்மையோ, பொலந் துடி மருங்குலாய் புருவங் கண்முதல், வலந்துடிக் கின்றில வருவ தோர் கிலேன்" (ஈ) "வஞ்சனை யான்வனத் திழைக்கு நாளிடை, வஞ்சனை யால்வலந் துடித்த வாய்மையா, லெஞ்சலை வீண்டோ மிடந் துடித்ததா, லஞ்சலென் றிரங்குதற் கடுப்ப தியாதென்றாள்" கம்ப. காட்சிப். ௬௨, ௬௰. என்பவைகளும் (உ) கலி. ௧௧: ௧௧ - உ௨. அடிக்

குறிப்பில் இடந்துடித்தல் நன்மைக்குறியென்பதை யறிவிக்கும் மேற்கோள்களும் ஈண்டு அறிதற்பாலன.

௨. (அ) "நரந்தநா றிருங்கூந்தல்" (ஆ) "நாறிருங் கூந்தலார்" கலி. ௱௪: ௫, ௧௫: ௨.

௩. "முல்லையங் தண்பொழில்" நாற். ௬. ௧. மேற்கோள்.

(பிரதிபேதம்) *கோளாளருகாமை, † மெய்ம்மைக்கொள்ளுதலையாளுயிர், ‡ பொதுவன்றன்மை சமைக்கு, || துடித்தலாயிருத்தலும், × ஆங்க.

௬௨அ கலித்தொகை ௧௦௨.

பொதுவரோடே தாம் புணர்தற்கு வேண்டும் நிமித்தங்களைப் பெற்று நாறுகின்ற கரிய கூந்தலையுடைய பொதுமகளிரெல்லாரும் முல்லையையுடைய குளிர்ந்த பொழிலிடத்தே விளையாடுதற்குப் புக்கார்; நாமும் பொழிலிடத்தே விளையாடுதற்குப் போதுவாயாகவென்றான். எ - று.

அச்சூத்திரத்துட் பொதுவனென்னும் பெயர் முதலியனவும் அச்சாதியிற் றலைவர்க்கு வருதலுங் *கொண்டவாறுணர்க. "புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்ல, தகத்திணை மருங்கி னளவுத லிலவே" என்னும் (௧) சூத்திரத்திற் கைக்கிளை பெருந்திணைக்கும் தலைவருந் தலைவியரும் பலராய் வருவரென்றலின், இதன் கரிதகத்துத் தலைவருந் தலைவியரும் பலராகக் கூறினர்.,இது சிறப்பில்லா ஆசுரமாகிய கைக்கிளை.

இதனால், தலைவிக்கு *கிளைதல் பிறந்தது.

இது கொச்சகம் இரண்டும் வந்தமையிற் கலிவெண்பாவின் †வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. (௧)

(௧௦௨.) கண்ணக னிருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்ணறும் பிடவமுந் தவழ்கொடித் தளவமும்
வண்ணவண் டோன்றியும் வயங்கிணர்க் கொன்றையு

மன்னவை பிறவும் பன்மலர் துதையத்

ரு தழையுங் கோதையு மிழையு மென்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடு
மடமொழி யாயத் தவரு ளிவள்யா
ருடம்போ டென்னுயிர் புக்கவ ளின்று;

கூ ஓஒ இவள், பொருபுக னல்லேறு கொள்பவ ரல்லாற்
திருமாமெய் தீண்டல ரென்று கருமமா
வெல்லாருங் கேட்ப வறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட் டவள் ;

கரு சொல்லுக; பாணியே மென்றூ ரறைகென்றூர் பாரித்தார்
*மாணிழை யாருகச் சாறு ;

ச. தொல். அகத். சூ. ருரு. இச்சூத்திர வுரையிலும் அகப்புறமாகிய கைக்கிளை பெருந்திணைக்குச் சிறபான்மை தலைவரும் தலைவியரும் பலராகவருவ ரென்று கூறி, "ஏறம் வருந்தின.........புணர்குறிக் கொண்டு" என்பதை மேர்கோள் காட்டினர்; நச்.

(பிரதிபேதம்) *மிளைத்தல். † வேறுபாட்டுவந்த.

கடு சாற்றுள், பெடையன்னூர் கண்பூத்து நோக்கும்வா யெல்லா
மிடைபெறி னோராத் தகைத்து ;
கள தகைவகை மிசைமிசைப் பாயிய ரார்த்துட

னெதிரெதிர் சென்றார் பலர் ;

௧௯ கோலமலி சிலைசெறி செயிரயர் சினஞ்சிறந்

துருத்தெழுந் தோடின்று மேல் ;

௨௧ எழுந்தது துக

ளேற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்புக்

கலங்கினர் பலர் ;

௨௫ அவருள், மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள்
பிணைஇ

யெருத்தோ டிமிலிடைத் தோன்றினன் றோன்றி

வருத்தினன் மன்றவவ் வேறு ;

௨௮ ஏறெவ்வங் காணு வெழுந்தா ரெவன்கொலோ

வேறுடை நல்லார் பகை ;

௩௦ மடவரே நல்லாயர் மக்க ளொருந

லடலேற் றெருத்திறுத்தார்க் கண்டுமேற் றின்று

முடலேறு கோட்சாற்று வார் ;

௩௩ ஆங்கினி,

தண்ணுமைப் பாணி தளரா தெழூஉக

பண்ணமை யின்சீர்க் குரவையுட் டெண்கண்ணித்

திண்டோட் டிறலொளி மாயப்போர் மாமேனி

யந்துவ ராடைப் பொதுவனோ டாய்ந்த

முறுவலாண் மென்றோள்பா ராட்டிச் சிறுகுடி

முன்றம் பார்த்த துறை.

*இஃது ஆயன் தலைவனாய் ஏறுதழுவினமை †சுற்றத்தார் கண்டுநின்று கூறியது.

இதன் பொருள்.

(பிரதிபேதம்) * இது, † சுற்றத்தார்க்கண்டு.

கண்(௧)ணக னிருவிசும்பிற் கதழ்(௨)பெயல் *கலந்தேற்ற
தண்ணறும் (௩)பிடவமுந் தவழ்(௪)கொடித் தளவமும்
வண்ணவண் டோன்றியும் (௫)வயங்கிணர்க் கொன்றையு
† மன்னவை பிறவும் பன்மலர் துதையத்
தழையுங் கோதையு மிழையு மென்றிவை
தைஇனர் மகிழ்ந்து ‡திளைஇ விளையாடு
மடமொழி யாயத் தவரு ளிவள்யா
‖ருடம்போ டென்னுயிர் புக்கவ ளின்று

எ - து: இடமகன்ற பெரிய விசும்பிலே விரைந்துவருகின்ற மழை தன்னிடத்தே கலக்கையினாலே அதனை ஏற்றுநின்ற + தண்ணிய நறிய பிடவமும் படர்கின்ற கொடியினையுடைய முல்லையும் நிறத்தினையுடைய வளவிய (௬) தோன்றியும் விளங்குகின்ற கொத்தினையுடைய கொன்றையும் இவை

௧. (அ) "அகலிரு விசும்பில்" பெரும்பாண். ௧. (ஆ) "அகலிருவானத்து" மது. ௨௬௭; மணி. ௧௬: ௬௧.

௨. "தண்டுளிக் கேற்ற பைங்கொடி முல்லை, முகைதலை திறந்த நாற்றம் புதன் மிசைப், பூமலர் தளவமொடு தேங்கமழ்பு" குறுந். ௩௮௨.

௫. "தளிபெற தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்ற, முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமும்" கலி. ௧௦௧: ௧-௨.

௬. "கொடித்தளவமே" சீவக. ௧௬௩௧.

௭. "கொன்றை யொள்ளிணர்", "நீடுசுரி யிணர சுடர்வீக் கொன்றை" நற். ௨௨௧: ௪; ௫௦௨: ௬.

௧. தோன்றி, ஒருபூக்கொடி. மழைக்குத்தளிர்க்கு மியற்கையையுடையது; அதன் மலர் செந்நிறமானது. அம்மலருக்கு விளக்கும் பவழமும், கோழிச்சேவலின்றலைக்கு அம்மலரும் உவமையாகக்கூறப்படுகின்றன. இவற்றை, (அ) "வீடுகொடிப் பிறந்த மென்றகைத் தோன்றி, பவழத் தன்ன செம்பூத் தாஅய்" (ஆ) "கார்க்கேற், றெரிவனப் புற்றன தோன்றி" (இ) "நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட, தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப், புலமெலாம் பூத்தன தோன்றி" (ஈ) "வான்றோன்றி, வில்விளக்கே பூக்கும் விதர்ப்பகாடு" (உ) "மரகதத் தண்டிற் றோன்றி விளக்கெடுப்ப" (ஊ) "தோன்றி தோன்றுபுபுதல் விளக்குறூஉ" (எ) "ஒண்சுடர்த் தோன்றி" (ஏ) "தோன்றி யொண் பூவன்ன, தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்" என வருவன வற்றால் அறிக.

(பிரதிபேதம்) * கலந்தெற்றத் தன்னன்றும், † இன்னவும் பிறவும், ‡ நினைவிளையாடு, || உடம் போடின்னுயிர், + கன்னிய.

போல்வனபிறவும் பூத்த பலமலர்கள் நெருக்கும்படி (க) தழையும் கோதையும் இழையுமென்று சொல்லுகின்ற இவற்றைக் கட்டினராய் அணிந்துமகிழ்ந்து நினைத்து விளையாடும், மடப்பத்தையுடைத்தாகிய மொழியினையுடைய, ஆயத்தாருள்ளே * இன்று உடம்போடே என்னுயிர்க்குள்ளே புக்கவளாகிய இவள் யார்தானென்றான் தலைவன். எ - று.

இழை, பூண்வடிவாகக் கட்டினது.

௧௨ †ஓஒ இவள், (௨)‡பொருபுக னல்லேறு கொள்பவ ரல்லாற்
றிருமாமெய் தீண்டல ரென்று கருமமா
வெல்லாருங் கேட்ப வறைந்தறைந் ||தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட் டவள்

எ - து: அதுகேட்ட பாங்கன், ÷ஓஒவென வியந்து இவள் பொருகின்ற Xபுகற்சியையுடையநல்ல எற்றைத் தழுவுமவரல்லது அழகினையுடைய மாந்தளிர்போலும் =நிறத்தையுடைய மெய்யைச் சேராரென்று எல்லாருங் கேட்டிருப்ப இதுகாரியமாகப் பலகாலுஞ் சாற்றிச் சாற்றி எப்பொழுதுஞ் சொல்லிய சொல்லாலே +அடிப்படக் கொண்டுவரப்பட்டவளென்றான். எ - று.

௧௩ சொல்லுக

எ - து: அது கேட்ட தலைவன், அச்சுற்றத்தைநோக்கி இவன் ஏறுதழுவி இவளைக் கொள்வனென்று அவர்க்குக் கூறுகவென்றான். எ - று.

பாணியே மென்றா ரறைகென்றார் பாரித்தார்

மாணிழை யாறாகச் சாறு

௧. தழை, பலவகையான தளிர் அரும்பு பூ முதலியவற்றாற் செய்து ஓரங்களை ஒழுங்காகக் கத்தரித்து இளைய மகளிர் உடுக்கும் உடை விசேடம்; "முடித்த குல்லை யிலையுடை நறும்பூச், செங்கான் மராஅத்த வாலிணர்இடையிடுபு, சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை, திருந்துகாழல்கு றிளைப்ப வுடீஇ" முருகு. ௨0௩-௨0௪. "அரிய தாமே சிறுவெள்ளாம்ப, லிளைய மாகத் தழையா யினவே", "அணித்தழை நுடங்கவோடி மணிப்பொறிக், குரலங் குன்றி கொள்ளு மிளையோள்", "அம்பூந் தொடலை யணித்தழை யல்குற், செம்பொறிச் சிலம்பி னிளையோள்" புறம். ௨௪௮: ௧-௨, ௩௪0: ௧-௨, ௩௪௧: ௨-௩. என வருதல் காண்க.

உ. "கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும், புல்லாளே யாய மகள்" கலி. ௧0௩: ௬உ-௬௩.

(பிரதிபேதம்) * நின்றுடம்போடே, † ஒஔிவள், ‡ பொருபுகழினல்லேறு, பொருபுகழ் கல்லேறு, || எப்போதும், ÷ ஒவெனவியந்து, × புகழ்ச்சியை, = சிறத்தினை யுடைய, + படிபடக்.

விடின் நின்னையின்றி *இறையினெல்லைநில்லாமற் கழன்ற வளையினையுடைய இவட்கு இனிப் பிறையையொக்குந்திருநுதலிற் றோன்றியபசலை ஒருகாலமும் வாராமல் மறையும்படியாகப் போமென வரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவற்குப் புணர்ச்சியுவகை † பிறந்தது.

இது "பரத்தை மறுத்தல்வேண்டியும்" என்னும் (க) சூத்திரத்தாற் கைகோளிரண்டற்கும் பொதுவாகப் பொருள் கூறவும் பெறும்.

இது தாழிசையல்லா இடைநிலைப் பாட்டுப்பெற்றுப் புல்லாது விடுவா யெனக் குறைந்துவருதலின் யாப்பின்வேறுபட்டகொச்சகம். (அ)

(கஉ௫.) பொன்மலை சுடர்சேரப் புலம்பிய விடனோக்கித்
தன்மலைந் துலகேத்தத் தகைமதி யேர்தரச்
செக்கர்கொள் பொழுதினா னொலிநீவி யினநாரை
/முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
லெக்கர்மே லிறைகொள்ளு மிலங்குநீர்த் தண்சேர்ப்ப;
அணிச்சிறை யினக்குரு கொலிக்குங்கா னின்றிண்டேர்
மணிக்குர லென்னிவள் மதிக்குமன் மதித்தாங்கே
யுள்ளான்ற வொலியவா யிருப்பக்கண் டவைகானற்
புள்ளென வுணர்ந்துபிற் புலம்புகொண் டினையுமே;

௧0 நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கா னின்மார்பிற்
றூர்நாற்ற பெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யலர்பதத் தசைவளி வந்தொல்கக் கழிப்பூத்த
மலரென வுணர்ந்துபின் மம்மர்கொண் டினையுமே;

௧௪ நீணகர் நிறையாற்றா ணினையுநள் வதிந்தக்காற்
றோண்மேலா யெனநின்னை மதிக்குமன் மதித்தாங்கே
கனவெனப் புல்லுங்காற் காணாளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துபிற் கைபற்றுக் கலங்குமே;
எனவாங்கு;

---

௧. தொல். கற்.சூ ௩௭. இச்சூத்திரத்தினுரையிலும் இவர் இச்செய்யுளை இச்செய்திக்கே மேற்கோள்காட்டி, இதனைக் கைகோ ளிரண்டிற்குங் கொள்கவென்பர்.

(பிரதிபேதம்) * இனி இறையினொல்லே. † பிறந்தது. இது தாழிசை............கொச்சகம். இல பாத்தை மறுத்தல்வேண்டியும்.

ஏ – து: அவரும் ஆண்டுச்சென்று தழுவுதற்கு யாங்கள் * தாழ்த்திரேமென்றார்; அதுகேட்டு அவள் சுற்றத்தார் மாட்சிமைப்பட்ட இழையினையுடையாள் வழியாக நிகழ்த்தும் ஏறுவிடுகின்ற விழவைப் பரக்கச்செலுத்தி இவனேயன்றி மற்றும் ஏறுதழுவுவார் உளராயினும் வருகவென்று பறையறைகவென்றார். எ – று.

௧௫ † சாற்றுள், பெடையன்னார் கண்பூத்து ‡நோக்கும்வா யெல்லா
(க)மிடைபெறி னோரத் தகைத்து

எ-து. இந்தவிழவினைப் ‖ பெடையையொப்பார் தங்கண்கள் பொலிவு பெற்று இவ்வழகைப் பார்க்குமிடமெல்லாம் நின்று பார்க்கும் பரணைப் பெறு வார்களாகில் அது தகைமையையுடைத்தென்றார். எ - று.

இதற்குமுன் உள்ளனவும் மேல்வருகின்றனவும் கண்டசுற்றத்தார் கூறிய தாகப் பொருளுரைக்க.

கஎ தகைவகை மிசைமிசைப் = பாயிய ரார்த்துட

× னெதிரெதிர் சென்றார் பலர்

எ - து: அழகினையுடைத்தாகிய வகுப்பையுடைய அவ்வேறுகளின்மேலே பாய்கைக்குச் + சேர ஆர்ப்பரித்து ஏறுகளினெதிரேயெதிரே பலருஞ்சென்றார். எ - று.

கஅ கொலைமலி சிலைசெறி *செயிரயர் சினஞ் †† சிறந்

துருத்தெழுந் தோடின்று மேல்

எ-து: அப்பொழுது அவ்வேறுகள் கொலைத்தொழின்மிக்க ‡‡சிலைசெறிந்த குற்றத்தைச்செய்யுஞ் சினமிக்கு வெவ்விதாயெழுந்து அவர்மேலே ஓடிற்று. எ - று.

உக எழுந்தது துகள்

எ - து: அப்பொழுது துகள் எழுந்தது. எ - று.

‖‖ஏற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்புக்

கலங்கினர் பலர்

எ - து: அவர்களும் மார்புகளை எதிரே கொடுத்தார்; அவற்றின் கொம்பு களுங் கவிழ்ந்து குத்தின; அதனால், தழுவினவர்கள் பலருங் கலங்கிப்போனார். எ - று.

---

௧. மிடை - பரண்.

பிரதிபேதம்) * தாழ்த்திறென்றூர், † சாற்றுவன், ‡ கோக்குவாயெல்லா, || பெடையொப் பார், = பாயப்பார், பாய்மார், × எதிர்சென்றூர், + சேர வாரவாரித்து. ** செயிரனெஞ். †† கொக்து, செறித்து, ‡‡ மிலைச்செறித்த, |||| மந்தணமார்பு.

ஐந்தாவது நெய்தல் ௯. ௭௩

கசூ பலநினைந் தினையும் பைதனெஞ்சி
னலமர லேயு ழுழக்குமென் றோழி
மதிமருள் வாண்முகம் விளங்கப்
புதுநல மேர்தரப் பூண்கநின் றேரே.

இது தோழி தலைவியது ஆற்றமை கூறித் தலைவனை வரைவுகடாயது.

இதன் பொருள்.

பொன்மலை (௩)சுடர்சேரப் புலம்பிய விடனோக்கித்
தன்மலைந் துலகேத்தத் *தகைமதி யேர்தரச்
செக்கர்கொள் பொழுதினா னொலிநீவி யினநாரை
முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
லெக்கர்மே லிறைகொள்ளு (௨)மிலங்குநீர்த் தண்சேர்ப்ப

எ-து: (௩)பொன்னையுடைய அத்தகிரியிலே ஞாயிறு †சென்றுசேர, அஞ் ஞாயிறு †உடனேபட, ஞாயிறின்றி வருந்தின உலகைநோக்கி உலகங்கொண் டாடும்படியாகத் தகைமையினையுடைய மதி எழாநிற்க, செக்கர்வானத்தைக் கொண்ட அந்திக்காலத்தின்கண்ணே, (௪) முக்கோலைக் கையிலே கொண்ட அந்தணர் முதியமொழியை நினைக்கின்றவர்களைப்போலே, இனமான நாரை கள் ஆரவாரத்தைக் கைவிட்டு இடுமணன்மேலே இறுத்தலைச் செய்யும் இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே ! எ - று.

(௫) அந்தணர், காஷாயம் போர்த்த குழாங்கள். முதுமொழி - பிரணவம்,

பெரியநாரைசிறகுசிவந்திருத்தலானும்மூக்குச்‡தரையிலேசென்று||குத்துதலானும் அதனை முக்கோலை ஊன்றியிருந்தஅந்தணரோடு ÷ ஒப்புரைத்தார்.

(௬) நாரை பகற்பொழுதெல்லாம் பல்லுயிர்க்கு வருத்தஞ்செய்து இரைகவர்ந்து அந்திக்காலத்து ஓர் ஆரவாரமின்றித் தீங்குசெய்யாதாரைப் போலே

---

௧. "தினக ரன்கரந் திகழ்க மண்டலம், பணிகொள் செக்கர்தம் படமதாகவே, யினிய வந்தனைக் கெறியும் வேலைசேர், புரித ரோத்ததப் புன்கண் மாலையே" வில்லி. சூதுபோர். ௧௪௨.

௨. "இலங்குநீர்ச் சேர்ப்ப" கலி: ௧௨௫: ௧௫.

௩. "அத்தமென்னும், பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும்" இறை. சூ. ௧௮. மேற்கோள்.

௪. இந்நூற்பக்கம் ௫௮: ௨ - ஆம் குறிப்புப் பார்க்க.

௫. "சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்" ஐந் - எழு. ௧௮.

௬. "கூர்வாய்ப் பறைதபு பெருங்கிழ நாரை, வஞ்சனை தூங்கி யாரதுண்ணு, நீங்காப் பழனப் பெருநகர்க் கூடல்" கல். ௩௧: ௨ - ௪.

(பிரதிபேதம்) * தரைமதி, † உடனேபட்டு, ‡ தரையிலே, || குத்துதலானுமுக்கோலை, ÷ ஒப்புத்தார்.

கலித்தொகை ௧௨௬.

குவிந்திருக்குஞ் சேர்ப்பன் என்றதனால், நின்னுட்டின் மகளிர் பிரிந்திருந்தார் உயிர்போதற்கு வேண்டுந் தீங்குகளைப் பகற்பொழுதெல்லாங் கூறி அந்திக்காலத்து ஆரவாரத்தைத் தவிர்ந்து நல்ல மகளிரைப் போலே ஒதுங்கி உறைகின்றார் என உள்ளுறையுவமங்கூறியவாறு உணர்க.

௬ அணிச்சிறை யினக்(௧)குரு கொலிக்குங்கா னின்றிண்டேர்

மணிக்குர லெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யுள்ளான்ற வொலியவா யிருப்பக்கண் (உ)டவைகானற்
புள்ளென வுணர்ந்துபிற் புலம்புகொண் டினையுமே

எ - து: அழகினையுடைத்தாகிய சிறகினையுடைய குருகுகள் இராக்காலத்து ஒருகால் ஒலிக்குமிடத்து நின்னுடைய திண்ணிய தேரின்மணியினோசையென்று இவள் மிகவும் துணியாநிற்கும்; துணிந்த அப்பொழுதே அப்பறவைகள் உள்ளடங்கிய ஒலியையுடையவாய் ஆரவாரியாதிருக்க, அதனைத் தன் (ங)மனத்தாலே தேர்மணியொலியல்லவென்று கண்டு, பின்னர் அவ்வொலியைக் கானலிடத்துப் பறவைகளொலியென்று உணர்ந்து, பின்பு தனிமைகொண்டு வருந்தாநிற்கும். எ - று.

க0 நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கா னின்மார்பிற்
றார்நாற்ற மெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யலர்பதத் தசைவளி வந்தொல்கக் கழிப்பூத்த
மலரென வுணர்ந்துபின் மம்மர்கொண் டினையுமே.

எ - து: நீரைக் கைவிட்டு மேலாய் நெருங்கின பூ அலர்ந்து நாறுமிடத்து நின்மார்பிற் கிடந்த மாலையினது நாற்றமென்று இவள் மிகவுந் துணியாநிற்கும்; துணிந்த அப்பொழுதே அப்பூக்கள் அலருஞ் செவ்வி

க. இந்நூற்பக்கம் எசுங: ௫ - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ); "அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமா பூண்ட, மணியரவ மென்றெழுந்து போந்தேன் - கனிவிரும்பும், புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா, யுள்ளுருகு நெஞ்சினே னாய்" ஐந்-ஐம். ௫O.
(ஆ)"இமெணலெக்க ரகன்கானற்சேர்ப்பன், கடுமாமணியரவமென்று-கொடுங்குழாய், புள்ளரவங் கேட்டுக் கலுழ்ந்தாள் சிறுகுடிய, ருள்ளரவ நாணுவ ரென்று" ஐந் - எழு. ௫க.

௩. காணுதலென்பதற்கு விளங்கவறிதலென்று நீலகேசியுரையாசிரியர் பொருள் கூறுதலால், இங்கே அது காதினால் விளங்கவறிதலின்மேல் நின்றதென்றலுமாம். "நம்பி தந்த கீத மோர யர்ந்து காண வோடினார்" (சீவக.உ0௩௭) என்புழி, காணவென்பதற்கு, கேட்கவென்றுபொருள் கூறியிருத்தலும் இங்கே அறிதற்பாலது.

ஐந்தாவது நெய்தல் ௬. ௭.௮௫

பிடத்து அவற்றை அசைத்த காற்றுவந்து தன்மேற்பட, அதனைக் கழியிற் பூத்த மலரினது மணமென்று உணர்ந்து, பின்பு மயக்கங்கொண்டு வருந்தா நிற்கும். எ - று.

௧௪ நீணகர் நிறையாற்று ணினையுநள் வதிந்தக்காற்
(௧)றேண்மேலா யெனநின்னை மதிக்குமன் மதித்தாங்கே
(௨)நனவெனப் புல்லுங்காற் காணாளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துபிற் கையற்றுக் கலங்குமே

எ-து: உயர்ந்தமனையிலே மனத்தைநிறுத்துதலைமாட்டாளாய்(௩)நின்னை நினைத்து அவசத்தாற் சிறிதுதுயின்றவிடத்துத் தன்தோண்மேற்கிடந்தாயாக நின்னை மிகவுந் துணியும்; துணிந்த அப்பொழுதே மெய்யென்று கருதித் தழுவுமிடத்து உன்வடிவைக் காணாளாய்த் * தான்கண்டது கனவாயிருந்த தென்று அறிந்து பின்பு செயலற்றுக் கலங்காநிற்கும். எ - று.

†எனவாங்கு

எ - து: என்று; எ - று. ஆங்கு, அசை.

௧௫ (௪)பலநினைந் தினையும் பைதனெஞ்சி
னலமர னோயு முழக்குமென் (௫)றோழி

௧. (அ) "துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா, னெஞ்சத்தராவர்

விரைந்து" குறள். கஉகஅ. என்பதும் (ஆ) "வேய்புரை மென்றோ ளின் றுயி லென் றும், பெருஅன் பெயரினும்" குறிஞ்சி. உசஉ-உசங. (இ) "ப்பாயல்கொண் டென்றோட் கனவுவார்" கலி. உச: எ. (ஈ) "இளையோள், பெருந்தோ ளின் றுயில் கைவிடு கலனே" அகம். கசங: கங - கச. (உ) "நறுநுதலா, ராவி தளிர்ப்ப வவர்தோண்மேற் றுஞ்சி ஞர்" (ஊ) "நல்லா ரவர்தோண்மேற் றுஞ்சினர்" சீவக. கக௱ளகூ, கக௱எக. என்பவைகளும் (எ) "மென்றோட் டுயில்பெறும்" (கலி. கர௦ச: உச) என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. "நனவினு னல்காக் கொடியார் கனவினு, னென்னெம்மைப் பீழிப் பது" குறள். கஉகஎ.

ங. "நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற், கனவிற் கண்டு" (கலி. சக: ங - ச) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ச. (அ) "பலநாடு நெஞ்சினேம்" (ஆ)"பலசூழு மனத்தோடு பைதலேன்" கலி. ஙகூ: கக, சகூ: கஎ.

ரு. "ஆய்நலம் பெயர்தரப், புரியுளைக் கலிமான்றேர் கடவுபு, விரிதண் டார் வியன்மார்ப விரைகநின் செலவே" (கலி. கஉச: கக - உக.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * நாங்கண்டது. † எனவாங்கு, அசை,

99

எஅகூ கலித்தொகை கஉஎ.

மதிமருள் வாண்முகம் விளங்கப்
புதுநல மேர்தரப் பூண்கநின் றேரே

*எ-து: பலவற்றையும் நினைத்து வருந்தும் நோயையுடைய நெஞ்சாலே சுழலுதலையுடைய காமநோயிலே அழுந்தும் என் தோழியுடைய மதியென்று மருளும் ஒளியினையுடைய முகம் விளங்கும்படி புதிய நலம் எழுதலைச் செய்ய

நின் தேர் குதிரையைப் பூண்பதாகவென வுரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவற்குப் புணர்ச்சி யுவகை பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௧)

(௧௨௭.) தெரிமிணர் ஞாழலுந் தேங்கமழ் புன்னையும்
புரியவிழ் பூவின கைதையுஞ் செருந்தியும்
வரிஞிமி றிமிர்ந்தார்ப்ப விருந்தும்பி யிசைபூதச்
செருமிகு நேமியான் றார்போலப் பெருங்கடல்
வரிமணல் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப;

௬ கொடுங்கழி வளைஇய குன்றுபோல் வாலெக்கர்
நடுங்குநோய் தீரநின் குறிவாய்த்தா ளென்பதோ
கடும்பனி யறலிகு கயலேர்கண் பனிமல்க
விடும்பையோ டினைபேங்க விவளைநீ துறந்ததை;

௧௦ குறியின்றிப் பன்னாளின் கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான லெதிர்கொண்டா ளென்பதோ
வறிவஞ ருழந்தேங்கி யாய்நலம் வறிதாகச்
செறிவளை தோளூர விவளைநீ துறந்ததை;

௧௪ காண்வர வியன்றவிக் கவின்பெறு பனித்துறை
யாமத்து வந்துநின் குறிவாய்த்தா ளென்பதோ
வேய்நல மிழந்ததோ ளிலங்கிழை பொறையாற்றா
வாணுதல் பசப்பூர விவளைநீ துறந்ததை;

அதனால்;

௧௮ இறைவளை நெகிழ்ந்த வெவ்வநோ யிவடர

வுரவுக்கதிர் தெறுமென வோங்குதிரை விரைபுதன்
கரையம லடும்பளித் தாஅங்
குரவுநீர்ச் சேர்ப்ப வருளினே யளியே.

(பிரதிபேதம்) * எ - து: என்று பலவற்றையும்.

ஐந்காவதுநெய்தல் கO. எஅள

இதுவுமது.

இதன் பொருள்.

தெரியிணர் ஞாழலுந் தேங்கமழ் புன்னையும்
புரியவிழ் பூவின கைதையுஞ் செருந்தியும்
(க)*வரி(உ)ஞிமி (ங)றிமிர்ந்தார்ப்ப (ச)விருந்தும்பி யிமைபூதச்
செருமிகு (ரு)நேமியான் றார்போலப் பெருங்கடல்
வரிமணல் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப

எ - து: போரின்கண் மிகுகின்ற சக்கரத்தையுடைய திருமால் திருத்தோளிற் சேர்ந்த மாலேபோலே பெரிதாகிய கடற்கரையில் அறலையுடைய மணலிடத்தே விளங்குகின்ற கொத்தினேயுடைய(சு)ஞாழற்பூவும் தேன்நாறு

க. "வரிஞிமிறு" குறிஞ்சி. கக்க.

உ. "நரம்பின் றீங்குரலிறக்குங்குழல்போ, லிரங்கிசைமிஞிறொடு தும்பிதாது" கலி. ருரு: உஉ - உரு.

ங. "இமிர்ந்தார்ப்ப" கலி. கங்க: கூ.

ச. "இருந்தும்பி யிமைபூத" கலி. கஉங: உ.

ரு. பலமலர்கள் விரவி நீளக் கிடத்தல்பற்றி, 'நேமியான்றார்போல' என்றார்; (அ) "பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போற், றிருவில் விலங்கூன்றி" கார். க, எனவும் (ஆ) "அகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப, அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி, முரட்பூ மலிந்த முது நீர்ப் பொய்கை" பெரும்பாண். உகூஉ-உகூச. (இ) "எருவை கோப்ப வெழிலணி திருவில், வானி லணிந்த வரிபூதும் பன்மலரால், கூனி வளைத்த சுனை" பரி. கஅ: சஅ - ரு0, எனவும் வருபவற்றைநோக்குக.

சு. ஞாழல் - நெய்தனிலத்துக்கு உரித்தாகக் கூறப்படுவதொரு பூமரம்; (அ) அது "ஊர்க்கா னிவந்த பொதும்ப ரெக்கர்க்காற், கொழுநிழல் ஞாழன் முதிரிணர்கொண்டு, கழுமமுடித்துக் கண்கூடு கூழை" (கலி. ருசு: க - ந) என்பதன் விசேடவுரையில் 'ஞாழன் முடித்தாளென நெய்த்றலைவிபோலவும், ஊர்க்கா னிவந்த பொதும்பரென்றதனான் மருதத்துக்கண்டான் போலவுங்கூறி' என்றும் (ஆ) நெய்தற்கு, 'மரம், புன்னையும் ஞாழலும் கண்டலும்' (தொல். அகத். சூ. கஅ. உரை.) என்றும் இவ்வுரையாசிரியர் எழுதியிருத்தலானும் (இ) நெய்தற்றிணைக் கருப்பொருளுக்கு, "கழுஞாழல் கையினேந்தி என்பதனாற் பூவுங் கூறினார்" (சிலப். பதி. விசேடவுரை) என்று அடியார்க்குநல்லார் எழுதியிருத்தலானும் (ஈ) பரிபாடலும் புறநானூறுமொழிந்த மற்றைத் தொகை நூல்களினும் சீவக. சிலப். மணி முதலிய நூல்களிலும்

(பிரதிபேதம்) + வரியின்று.

கின்ற (க) புன்னைப்பூவும் தலையவிழ்ந்த பூக்களையுடையனவாகிய (உ) தாழம்பூவும் தலையவிழ்ந்த பூக்களையுடையனவாகிய (ங) *செருந்திப்பூவும் வரியினையுடைய

நாற்கவி உச-ஆம் சூத்திரத்திலும் இது செய்தற்கே உரித்தாகக் கூறப் பட்டிருத்தலானும் அறியலாகும். இம்மரம் எக்கரிற்செழித்துவளர்வது; (உ) அது ஐங்குறுநூற்று ஞாழற்பத்தால் அறியலாகும். இதன் அரை யும் கொம்பும் கருநிறமுடையன; அவற்றை (ஊ) "ஏனோன்போ னிறங் கிளர்பு கஞலிய ஞாழலும்" (கலி. உகூ: ச) என்பதும் (எ) 'ச்யாமா' என வடமொழியிலுள்ள பெயரும் (ஏ) "செவ்வீ ஞாழற் கருங்கோட் டிருஞ்சினை" அகம். உசO: ௧. என்பதும் வலியுறுத்தும். அவ்வரை பொரிந்திருப்பது; அது (ஐ) 'பொரியரை ஞாழலும்' சீவக. ௰கடு. என் பதனால் அறியப்படும். நெய்தனிலத்து மகளிர் இதன்குழை கொய்தும் இதனாலாக்கிய தழையுடுத்தும் இதிற்றூக்கிய ஊசலாடியும் இன்புறுவ ரென்பது மரபு; அவற்றை (ஒ) "ஞாழன் மலரின் மகளிர், ஒண்டழை யயருந் துறைவன்" ஐங். கசஎ. (ஓ) "கொய்குழை யரும்பிய குமரி ஞாழல்" நற். ௯ச: ௧. (ஔ) "கானன் ஞாழற் கவின்பெறு தழையள்" ஐங். ககக. (ஃ) "ஞாழ லோங்குசினைத் தொடுத்த, தாழைவீழ் கயிற் றூசல்" அகம். உO௯-௧. என்பவை வலியுறுத்தும். இது செறிந்தபூங் கொத்தினது; (அஅ) "இணர்ததைஞாழல்" பதிற். ௩O: ௧. என்பதனால் உணர்தற்பாலது. இது பசிய அரும்புள்ளது; (ஆஆ) "பசுநனைஞாழல்" குறுந். அச. என்பதனாற் பெறப்படும். இதன்பூ, பொன்னிறமும் சிறிய உருவமும் நன் மணமும் வண்டினமொய்த்தலுமுடையது; அவற்றை (இஇ) "பொன்னிணர் ஞாழல்" ஐங். ககூ. (ஈஈ) "ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்" குறுந். ௫O. (உஉ) "நறுவீ ஞாழல்" நற். கூ: ௧. (ஊஊ) "தணக்கொள்வண் டார்த்துலாங் கன்னி நறுஞாழல்" என்பவற்றால் அறிக. இப்பூ, பசப்புக்கும் சுணங்குக்கும் உவமையாதல் இந்நூல் ௩௧: கக - ஆம் அடிக்குறிப்பிற் காட்டப்படும். ஞாழலென்பது குங்குமம், ஒருவகைக் கொன்றை, கோங்கு, புலினி முதலிய பலமரத்துக்கும் பெயராமாயினும் செய்தற்கருப்பொருளில் அதுபுலினியையேகுறித்து வருமென்ப; புலினி யென்பது வடமொழிச் சிதைவு.

க. புன்னையின் செய்தி கலி. க௩௯: க௩-ஆம் அடிக்குறிப்பிற்காணலாகும்.

உ. தாழையின் செய்தி கலி. க௩க: க0 ஆம் அடிக்குறிப்பிற் குறிக்கப் பெறும்.

௩. (அ) "பாசிலைச், செருந்தி தாய விருங்கழிச் சேர்ப்பன்" (ஆ) "எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழ" (இ) "வண்டுபட, விரிந்த செருந்தி வெண்மணன் முடுக்கர்" (ஈ) "செருந்தி, யிருங்கழி தாழு மெறிகடற்

(பிரதிபேதம்) * செருந்திப்பூவும் சூழ்ந்துகிடக்கும் விளங்குகின்ற சேர்ப்பனே, எங்ஙனம் *சூழ்ந்துகிடக்குமென்னில் வரியினை,

மிஞிறு சிறிதே ஒலித்து மிக ஆரவாரிப்பக் *கரிய தும்பிகள் தம்மில் இயைந்து தேனையூதச் †சூழ்ந்துகிடக்கும் விளங்குகின்ற நீரையுடையசேர்ப்பனே! எ-று.

கடலினது புலால்நாற்றமாகிய தீங்கினைப் பூக்களின்மணம் போக்கினவதனை அக்கடல் அறியாதிருக்கின்ற சேர்ப்பனென்றதனுன், நின்வருத்தத்தைத் தீர்க்க ‡ வேண்டுமென்று கருதி அவள் நின்னிடத்தே வந்து தீர்த்த நிலையை நீயறிந்திலையென மேல்வருகின்ற தாழிசைப்பொருளையுள்ளுறுத்து உள்ளுறையுவமந் தந்தவாறுகாண்க.

௯ கொடுங்கழி வளைஇய குன்றுபோல் வாலெக்கர்
(க) நடுங்குநோய் தீரநின் குறிவாய்த்தா ளென்பதோ
கடும்பனி யறலிகு கயலேர்கண் பனிமல்க
விடும்பையோ டினைபேங்க விவளை நீ துறந்ததை

எ - து: முன்னர்க் கடியதாகிய நீர் பின்னர்ச் சுவறுதலின் அறுநிலையை யுடைத்தாய் விழுகின்ற, கயலையொத்த கண் நீரற்று(உ)மல்குகின்ற அளவாய் நிற்க, வருத்தத்தோடே கெட்டு அழும்படி இவளை நீ துறந்தது, நின் மனம் நடுங்குதற்குக் காரணமாகிய காமநோய் தீரும்படியாகச் சுறவு முதலியன வற்றையுடைமையாற் ‖ கொடிய கழிகள் சூழ்ந்த மலைபோல் உயர்ந்த வெண்மையையுடைய இடுமணலிடத்து நீ செய்த குறியிடத்தே தப்பாமல் வந்தாளென்பதோ? எ - று.

என்பதோ என்றது என்று சொல்லப்படுவஃதாவென்னும் பொருடந்து நில்லாது வாய்த்தாளென்னுஞ் சொல்லுணர்த்திய செய்கையின்மையைத் தானும் உணர்த்திப் பிரிவிலசைநிலையாய் நின்றது. இஃது "ஆக வாக வென்ப

றண் சேர்ப்ப" (உ) "பொன்னடர்ந் தன்ன வொள்ளிணர்ச் செருந்தி" (ஊ) "பருதியஞ் செல்வன்போ லினரூழ்த்த செருந்தியும்" (எ) "அரும்பலர் செருந்தி நெடுங்கான் மலர்" (ஏ) "தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்" (ஐ) "செருந்தி, காலை யேகன கம்மலர் கின்ற சாய்க் காடே" (ஓ) "பொன்னியன்ற, தட்டலர்த்த பூஞ்செருந்தி" என்பவற்றால் செருந்தி நெய்தற்குரித்தாதலும் அதன் பூவினியல்பு முதலியனவும் அறியப்படும்.

க. "நடுங்குநோய் செய்தவர் நல்காமை நினைத்தலிற். கடும்பனிகைம்மிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே, நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணனேக்கி, யிடும்பைநோய்க் கிகுவன போலுமஃ தெவன்கொலோ" கலி. கஉ௬: கரு - க௮.

உ. "கண்ணிறை நெடுநீர் கரந்தன னடக்கி" என்பதும் அதனுரையும் இங்கே அறிதற்பாலன. சிலப். கஉ: ளஎஉ; அடியார்க்கு.

(பிரதிபேதம்) * கரியதாகிய. † சூழ்ந்துகிடக்குமென்ச, கடலினது, ‡ வே[illegible]மென்று கருதியவண்டத்தே, ‖ கொடியதாகிய.

தென்னு, * மாவயின் மூன்றும் பிரிவி லவைநிலே" என்னும் (க) சூத்திரத்து என்ப † தென்றதற்கு உதாரணமாகக்காட்டினும்; அதனுலுணர்க. ஏனையவும் இவ்வாறேகொள்க.

கூ0 (உ)குறியின்றிப் பன்னுளின் கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான லெதிர்கொண்டா ளென்பதோ.
வறிவஞ ருழந்தேங்கி (ங)யாய்நலம் வறிதாகச்
செறி(ச)வளை தோளுநர விவளைநீ துறந்ததை

எ - து: தன்னறிவு வருத்தத்தே அழுந்தி அழுது ஆராய்ந்தநலம் சிறிதாகையினுலே முன்புசெறிந்தவளைதோளினின்றுங்கழன்றுவிழும்படி இவளை நீ துறந்தது, எறிகின்றதிரை யொலிக்கின்ற கடற்கரையிலே நின்னுடைய கடியதாகிய தேர் இன்ன காலத்தே வருமென்னுங்குறிப்பின்றிப் பலநாளும் வருங்காலத்தை(ரு)மனத்தாலே நோக்கி எதிர்கொண்டாளென்பதோ? எ-று.

திரையொலியால், தேரொலி கேட்டற்கு அரிதாகவும் அவ்வொலிகேட்டு எதிர்கொண்டாளென்றான்.

கச காண்வர வியன்றவிக் கவின்பெறு பனித்துறை
யாமத்து வந்துநின் குறிவாய்த்தா ளென்பதோ

க. தொல். இடை. சூ. ௩உ. இச்சூத்திரத்தின் இவருரையிலும்,'என்பது' என்றது என்றுசொல்லப்படுவதென்னும் பொருள்தந்து நில்லாது வாய்த்தாள், எதிர்கொண்டாள் என்னுஞ்சொற்கள் உணர்த்திய செய்கன்றியைத் தானும் உணர்த்தி நின்றதென்பதற்கு "நடுங்குநோய்... ......துறந்ததை" "எறிதிரை...... .....துறந்ததை" என்னும் பகுதிகள் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன.

௨. களவொழுக்கத்துத் தேரேறிச்சென்று தலைவர்கூடுதற்கு, "குறியின்றி ... .தோளூர விவளைநீ துறந்ததை" என்னும் பகுதி மேற்கோள்; தொல். பொருளி. சூ. கஅ. நச்.

௩. "மென்றோண் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும், பொன்போல் விறற் கவின் றொலைத்த குன்ற நாடற்கு" ஐங். ௨௩௦.

௪. வளையென்றது தொடியை; அது முன் 'செறி' என அடைகொடுத்த லானும் பின் 'தோள்' என இடங்குறித்தலானும் துணியப்படும். தொடி, வளையென்றும் வழங்கப்படுதற்கு, குறள். ௧௨௩௪, ௧௨௩௫, பரிமேலழகருரையும் சான்று பகரும். 'மூன் வளை கழல நின்றார்க்கு வருத்தமிகுதியால் தொடியுங் கழன்றன வென்க' (சீவக. ௪௬௬. விசேடவுரை) என்பதும் இங்கே அறிதற்பாலது.

௫. இந்நூற்பக்கம் எ௮௪: ௩ - ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * ஆவியன் மூன்றும். † என்பதற்குக் காரணமாகக் காட்டினும்.

ஐந்தாவது நெய்தல் ௧௦. எ௬௬

வேய்நல மிழந்ததோள் விளங்கிழை பொறையாற்றாள்
வாணுதல் பசப்பூர விவளைநீ துறந்ததை

எ - து: மூங்கில் நன்னலனிழத்தற்குக் காரணமான தோள்களிற் கிடந்து விளங்குகின்ற பூண்களை அத்தோள் பொறுத்தலைச் செய்யாமல் மெலிந்து(௧)வாணுதல்பசப்புப்ப ர்க்கும்படி இவளைநீ துறந்ததுநோக்கினார்க்குக் காட்சி வரும்படியாகப் பண்ணினதோர் அழகைத்தான்பெறுகின்ற இப்பனித் துறையிலே ஈடியாமத்தே நீ வந்து செய்த நின் வரவு உணர்த்திய குறியிலே தப்பாமல் வந்தாளென்பதோ ? எ - று.

தன்மெலிவு தோள்பொருமைக்குக் காரணமாய் நின்றது. ஆற்ருளா யென்றவும் முதல்வினை நுதல்பசப்பூரவென்ருஞ் சினைவினையோடு முடிந்தது. (உ) †இவளேயென்றது இங்ஙனம் நன்மை செய்தவளேயென்றும், நீயென்றது அங்ஙனங் குறைந்துநின்ற நீயென்றும் பொருள் தந்தன.

தாழிசைமூன்றும், பொச்சாப்பென்னுமெய்ப்பாடு ‡பயந்தன.

கஅ அதனால்

இறைவளை நெகிழ்ந்த வெவ்வநோ யிவடர
வுரவுக்கதிர் தெறுமென வோங்குதிரை விரைபுதன்
கரையமம் (ங)||படும்பளித் தாழங்
(௪) குரவுநீர்ச் சேர்ப்ப வருளினை ÷யளியே

எ - து: வலியினையுடைத்தாகிய நீரையுடைய சேர்ப்பனே! நினக்குச் செய்ந்நன்றிக்கேடு உண்டாம், ஆகையினாலே அதுநீர வலியினையுடைய ஞாயிறு சுடுமென்று கருதி ஓங்குகின்ற திரை தன் கரையில் நெருங்கின

க. (அ) "நீ துறத்தலிற், பல்லோரறியப் பசந்தன்று நுதலே" (ஆ) "வாணுதல் பசப்பச் செலவயர்ந் தனையே" ஐங். ருகு, சஉங. (இ) "நுதலூரும் பசப்பு" (ஈ) "பிறைநுதல் பசப்பூர" கலி. உஅ: கறு, ககு: கO.

உ. "அந்தா மரையன்ன மேனிந்னை யானகன் ருற்றவனே" (கோவையார். கஉ) என்பதன் விசேடவுரையில் 'நின்னையென்புழி உயிரினுஞ் சிறந்த நின்னையென்றும், யானென்புழி இருதலைப் புள்ளினோருயிரோகிய யானென்றும், அச்சொற்களால் விளங்கி நின்றன' என்று பேராசிரியர் எழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலது.

ங. அடும்பின் செய்தியை, கலி. கசச: ஙO-ஆம் அடிக்குறிப்பிற் காண்க.

௪. (அ) "உரவுநீ ரழுவத்து" மணி. எ: கஉகு. (ஆ) "உரவுநீர் ஞாலத்து" பு - வெ. பாடாண். சங. (இ) "உரவுநீர் நிலத்து" கம்ப. பால. ஆற்றுப். கஉ. உரவு - வலி; உரவுதலெனின், உலவுதலென்ருக்கி, பரத்தலென்றலுமாம்.

(பிரதிபேதம்) * கலியாமத்தே, † இவளென்றது, ‡ பயன், || அடும்பளித்தாழங் குரவுநீர், ÷ அளியே.

அம்மை விரைந்தளித்தாற்போல இவளுடைய இறையில் வளைகழன்ற வருத்தத்தையுடைய நோய்தீரும்படி அருளினையாய் வரைந்துகொள்ளென வரைவுகடாயினள். எ - று.

(க)வளைகழலுதல் வெளியாக வருத்தத்தைவிளக்குதல்பற்றிச் சரிதகத்து வளைநெகிழ்தலைக்கூறினள்.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (சO)

(கஉஅ.) தோடுறந் தருளா தவர்போ னின்று
வாடை தூக்க வணங்கிய தாழை
யாடுகோட் டிருந்த வசைநடை நாரை
நளியிருங் கங்கு னந்துய ரறியா
தளியின்று பிணியின்று விளியாது நரலுங்
கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை யென்றி யாயி
னனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி;
அலந்தாங் கமையலெ னென்றானைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்;
முலையிடைத் துயிலு மறந்தீத் தோயென
நிலையழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்

வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்;
கஅ கோதை கோலா விறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும்;
ஆங்கு;

க. "துறைவன் றுறந்தமை தூற்றாகொன் முன்கை, யிறையிறவா நின்ற வளை" குறள். ககருஎ.

நான்காவது முல்லை உ. ஙஙரு

முன்னர்ப் பலரும் வருகவென்று சாற்றுதலிற் பல ஏறுகளும் விடப் பலருந் தழுவித் தோற்றா *ரென்றார்.

உரு அவருள், (க) மலர்மலி †புகலெழ வலர்மலிர் மணிபுரைநிமிர்தோள்
‡பிணைஇ
§யெருத்தோ டிமிலிடைத் தோன்றினன் றோன்றி
வருத்தினான் மன்ற ||வவ் வேறு

எ - து: அங்ஙனம் ஏறுதழுவ ÷ வந்தவர்களுட் பாய்தல் மிக்க விருப்பம் எழுதலாலே பூமலிந்த நீலமணியையொக்கும் நிறத்தையுடைய நெடிய தோள்களாலே ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவிக் கழுத்தோடேகூடக் கிடக்கின்ற (உ)குட்டேற்றிடத்தே தோன்றினான்; அங்ஙனந் தோன்றிப் பின்னர் அறுதியாக அவ்வேற்றை வருத்தினானென்றார். எ - று.

உஅ = ஏறெவ்வங் காணா வெழுந்தா ரவன்கொலோ

×வேறுடை நல்லார் பகை

எ-து: எற்றையுடைய நல்லவர்கள் தங்கள் எற்றினுடைய வருத்தத்தைக் கண்டு எழுந்திருந்தார்; அவன் தழுவினவாற்றிற்கு மகிழ்வதன்றிப் + பகையாதல் என்னபயன் தருமென்றார். எ - று.

கொல்லும் ஓவும், அசை.

௯0 மடவரே நல்லாயர் மக்க ×*ளொருந
லடலேற் றெருத்திருந்தார்க் ††கண்டுமற் றின்று
முடலேறு கோட்சாற்று வார்

எ - து: முன்னைநாளிலே கொல்லுதலையுடைய எற்றின் கழுத்திலே தங்கினவர்களைக் கண்டு வைத்தும்‡‡ இன்றும் உடலுகின்ற எற்றைத் தழுவச் சாற்றுவாராகிய நல்ல ஆயர் மக்கள் அறியாதவர்களேயென்றார். எ - று.

௯௯ ||||ஆங்கு

தண்ணுமைப் பாணி தளரா ++தெழூஉக
பண்ணமை யின்சீர்க் குரவையுட் டெண்கண்ணித்

க. அறுசீரடி முடுகி வந்ததற்கு "மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ" என்பது மேற். தொல். செய். சூ. ௬௩. பேர்.

உ. குட்டேறு-எற்றின்முதுகில் புறக்கழுத்தையடுத்துத் திரண்டு உயர்ந்து தோன்றும் ஒருதப்பு; இச்சொல் இவருரைநடையில் பயின்று வரும்.

(பிரதிபேதம்) *என்றான், † புகலெழ அலர்மலி மணிபுரை நிரைதோள், ‡ பிணைஇ, விணைஇ. § எருத்தோட்டியில், || இவ்வேறு, ÷ வந்தவர்கள் பார்த்தன்மிக்க, ∴தோன்றிய பின்னாறுநியாகவேற்றை, = எற்றெய்வம், × எற்றுடை நல்லார்ப்பகை, + பகையாதலால்என்ன, ** தெருநேயடல், தெருளையடல், †† கண்டுமேற்றின்று முடலேற்றுக்கோட், ‡‡ மீண்டுமுடது. |||| ஆங்கு தன். ++ எழுவுகப்ப

80

உரு. கனவினற் கண்டேன் றோழி காண்டகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்ப

னனவின் வருதலு முண்டென
வனைவரை நின்றதென் னரும்பெற லுயிரே.

இது வரைவிடையாற்றளாய்ச் செல்கின்ற தலைவியது கவின்கண்டு வினயதோழிக்கு அவள் தான்கண்ட கனவுநிலையுரைத்தது.

இதன் பொருள்.

தோடுறந் தருளா தவர்போ னின்று

வாடை தூக்க வணங்கிய தாழை

யாடுகோட் டிருந்த வசைநடை நாரை

நளிபிருங் கங்கு னந்துய ரறியா

இ தளியின்று பிணியின்று விளியாது நரலுங்
கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை யென்றி யாயி
னனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி

எ - து: வாடைக்காற்று அசைக்கையினாலே வளைந்த தாழையின் அசைகின்ற கொம்பிலே இருந்த அசைந்தநடையினையுடைய நாரை நம் தோளைத் துறந்து நமக்கு அருளாதவரைப்போலே நின்று பெருமையையுடைய கங்குலிடத்து நந் துயரை அறியாமல் நம்மேலளித்தலின்றாய்த் (க)தனக்குக் காம நோயாலே வருத்தமின்றாய் மாறுமற் கூப்பிடுங் கானலையுடைய அழகிய சேர்ப்பினையுடையவனைக் கண்டு (உ) கூடினாய்போலே புதிதாக ஓர் அழகினை

க. "தேற றேங்குழிக், களிப்பவுண் டிள்வனக் கன்னி நாரையைத், திளைத்தலின்" (சீவக. ௫௦.) என்பதற்கு, 'தேறல் மிக்குச் செறிந்த இடத்தே, காமவின்பம் அறிந்த அன்னம் அதனையுண்டு காமவின்ப

துகர்ந்தறியாத நாரையைப் 'புணர்தலின்' என இவ்வுரையாசிரியர் எழுதியிருப்பது இங்கே அறிதற்பாலது.

உ. (அ) "ஆரிடை யென்னுய்நீ யாவஞ்சாய் வந்தக்கா, னீரற்ற புலமே போற் புல்லென்றாள் வைகறை, கார்பெற்ற புலமேபோற் கவின் பெறும்" (கலி. ௩அ: ௪௦ - ௪௨) என்பதும் (ஆ) இந்நூற்பக்கம் ௨௪௨: ௪-ஆம் குறிப்பும் (இ) "நாடன், புணரிற் புணருமா ரெழிலே பிரியின், மணியிடை பொன்னின் மாமை சாயவென், னணிநலஞ் சிதைக்குமார் பசலை" என்பதும் இங்கே அறிதற்பாலன.

புடையையானுயென்று கூறுகின்றாயாயின் வெளியாக வாராத உறவில்லாத வினைக் கனவிடத்தே கண்டு யான் செய்த காரியத்தை இப்பொழுது கேள். எ - று.

அலந்தாங் (௧)கமைபலெ (௨)னென்றானைப் பற்றி(௩)யென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்

எ - து: நின்னைப் பிரிந்த இடத்து வருந்தி உயிர்வாழேனென்று கூறினவனைப் பிடித்துக்கொண்டு நீகொண்ட என் நலத்தை இனித் தாராயென்று வளைத்துக்கொள்வேன்போலேயும், அவ்விடத்தே என்னுடையகழிந்த அழகை யான் பெறும்படி புல்லிக் கூடி இனி வருந்தாதேகொள்ளென்று கூறி என்னையும் அளிப்பான்போலேயும். எ - று.

கச (ச)முலையிடைத் துயிலு மறந்தீத் தோயென
நிலைபழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்

க. "நின்னின்றி யமையலேன் யானென்னு மவனுழையின்" கலி சஎ: கூ.

உ. (அ) "தந்தனை சென்மோ... .....தண்கடற் சேர்ப்பநீ யுண்டவென் னலக்கே" (ஆ) "என்னலந் தந்து, கொண்டனை சென்மோ" (இ) "தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலங், கொள்வா மென்றி தோழீ" குறுந். உரு௬; உரு௮; ௩சக. (ஈ) "நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த, பன்மீ னுணங்கல் கவருந் துறைவனைக், கண்ணினுற் காண வமையுங்கொ லென்றோழி, வண்ணந்தா வென்கந் தொடுத்து" ஐந் - எழ. கக. எனவும் (உ) "இரவுகந்தருளு கனவினிர், பகலிழந்த நிறை பெறமுயன் றுமொழி பதறுமாதர்" கலிங். உஎ. எனவும். வருவன காண்க.

௩. தொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கட் செல்லாதனவற்றை இரத் தற்கண் தாவென் கிளவி வருவதற்கு, "என்னலந்தாராய்" என்பது மேற்கோள்; தொல். எச்ச. ரு. ௫௦. நச்.

ச. (அ) "நீயுந், தேம்பா யோதி திருநுத லீவிக், கோங்குமுகைத்தன்ன குவிமுலையாகத், தின் றுயி லமர்ந்தனை" அகம். உச௦: க - கஉ. (ஆ) "அவர்நம், மேந்துமுலை யாகத்துச் சார்ந்துகண் படுப்பவும்" தொல். கற். சூ. சு,நச். மேற்.(இ) "விரிந்த பைத்தலை வெள்ளிவெம் பாப்பணைத் துயின்ற, கருந் துழாய் முகில் கார்நிறக்கட்செவிச்சேக்கை, பொருந்தி யாங்கொரு புரிகுழல் புணர்முலைக் கோட்டி, னாந்த மூழ்கிய நறு மலர்ப் பிணையன்மேற் றுயிலும்" பாக. பதினுருயிரந் திருவிளை. ௩உ.

(பிரதிபேதம்) * கலந்தாக்கே.

ஐந்தாவது நெய்தல் கக: எரு

வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்

(க) தலையுற முன்னடிப் * பணிவான் போலவும்

எ-து: என்னை மறத்தலேயன்றிப் பின்னர் அவசத்தான் முலையிடையிற் றுயிலுந் துயிலையும் மறந்தாயென்றுகூறிப் பழைய (உ) தன்மைகெட்ட நெஞ்சத்தையுடையேன் அழுவேன்போலேயும், அதுகண்டு (ங) வலையிலே அகப்பட்ட மயில்போலே காவலிலே அகப்பட்டுப் பெரிதும் வருந்தினையேயென்று கூறி அடிமுன்னே தன் தலையுறும்படி வணங்குவான் போலேயும். எ - று.

க. (அ) "முன்னடிப் பணிந்தெம்மை யுணர்த்திய வருதிமன்" கலி. எஉ: கஞ. என்பதும் அதன் குறிப்பும் (ஆ) "பொய்ப்ப விடேஎ மென நெருங்கிற் றப்பினே, னென்றடி சேர்தலு முண்டு" கலி. அக: கச - கஞ. (இ) "சிற்றடிப் போது புல்லித் திருமகன் கிடப்ப" சீவக. உஙிOஅ. (ஈ) "தோடவிழ்தார் யானுந் தொடா வவனுமென், பாடகச் சீறடியின் மேற்பணிய - நாடகமா, வைகிய கங்கு றலைவரி, னுய்குவெனுலகத் தனியேன் யானே" பு - வெ. கைக்கிளை. பெண்பாற். கO. (உ) "நெய்யுண் சுரிகுழ னேரிழை யாய்நென்ன னீளிரவின், மையுண் குவளை மலிபுன லூரன் மலர்க்கமலக், கையுந் தலையுமென் காலுமொன் றுன கனவுதன்னை, மெய்யென் றருவினை யேன்விழித் தேனென் விழியின்மையே" (ஊ) "கதந்தணியத், தொடர்ந்தகலாத துணையடித்தாமரை சூடவள்ளல்" (எ) "ஊர வணங்கியபின், முடிவைத்த செங்கையு மென்முலையாக முயங்கவுந்தென், னடிவைத்த செங்கையு மெங்கையர்காணி னறவுகன்றே" (ஏ) "எங்போன நெஞ்சமு நீரு மென் பாத மிறைஞ்சுதனுங், கண்போலு மெங்கையர்காணினன்றே" (ஐ) "அளகையன்னீ, ரெல்லாக் குறையும் பொறும்பணிந் தேனும் மிணையடியே" (ஒ) "போரட்டி யின்றென் பிழையை யெண்ணிச், சீறேலுஞ் சீறடி பற்றினன் யான்" (ஓ) "பிழையைக் கருதிடலுன், சரணஞ் சரண மடியேற் கருளுன் றலையளியே" (ஔ) "நூபுரஞ்சேர், சீறடி மேல்விழுந் தேன்றவிர் வாயிக்தச் சீற்றத்தையே" (ஃ) "எங்கால் பிடிக்கின்ற தெங்கையர் காணி னியல்பலவே" (அஅ) "ஊரன் மலரடி

வீழ்ந்து" (ஆஆ) "இளம்பிடி பஞ்சடி தொட்டவன்றே, கஞ்சமுத் தின்றன" (இஇ) "சிறந் தொண்டனென்னக், காலை முடித்தவை யெம்மையர் காணிற் கலக்குவம்" என்பவைகளும் ஈண்டு அறிதற் பாலன.

உ. நிலை - தன்மை; "நிலையொன்று பாடுதும்யாம்" என்பது சிலப். உச.

ந. (அ) "முரி முருங்கப் பீலிசாய, நன்மயில் வலைப்பட் டாங்கியா, முயங்கு தொறு முயங்கு மரனில் யாயே" குறுந். உசச. (ஆ) "வலைப்படு மஞ்ஞையி னலஞ்செல" குறிஞ்சி. உ௫௦. (இ) "வலைபிடைப்பட்ட (பிரதிபேதம்) * பணிப்பான் போலவும்.

எச்ச் கலித்தொகை க௨அ.

கஅ (க)கோதை கோலா விறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும்

எ-து: அன்னம் வணங்குகின்ற (உ)ஊதைக்காற்றையுடைய சேர்ப்பனை மாலையே கோலாகக்கொண்டு அடிப்பேன் போலேயும், அவ்விடத்தே யான் செய்த தப்பு யாதென்று கூறி நடுங்கி நீ பெரிதும் அறியாமையையுடையை யென்று தெளிவிப்பான் போலேயும், எ - று.

இத்தாழிசைகளுள் நெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்தலுமுடைய தாகக் கூறி, எதிர்பெய்துகொண்ட தலைவ *னுருவும் அம்மூன்றுமுடைய தாய்ச் செய்யாமரபின செய்தனவாகக் கூறி, (ந)†உயர்திணையாகக் கூறிய வாறும் பிறவும் உணர்க.

“தனவு ‡ முரித்தா லவ்விடத் தான” (சு) என்பதனாற் கனவுகொள்க.

மானே போன்றாங், கஞ்சிகின் றழைக்கு யாத்துயர் கண்டு” மணி. கங: ௩௨ - ௩௩. (௬) ‘வலைப்படு மயிலென வருந்தினரென்க’ சீவக. சஉச. உரை என்பன இங்கே ஒப்புநோக்கற்பாலன.

க. “நல்லார்தங் கோதையா, லலைத்த” (கலி.சுஎ: சு-எ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. ஊதைக்காற்று - ஊதையாகிய காற்று. ஊதை - பெருங்காற்று; குளிர் காற்றென்றலுமாம். இது செய்யுள் வழக்கில் “ஊதைகூட் டுண்ணு முகுபனி யாமத்து” என ஊதையென்றேவழங்குமாயினும் உலக வழக்கில் ஊதலென வழங்கும். இதனைக் கடற்காற்றென்பாருமுளர்; இச்சொல் காற்றுக்குப் பொதுப்பெயராயும் வரும்.

௩. “உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன், மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்துஞ், சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்” என்பது தொல். பொருளி. சூ. உ.

௪. தொல். பொருளி. சூ. ௩. இச்சூத்திரவுரையிலும் இவர் “அலந்தாங்கு ....பணிவான் போலவும்” என்ற பகுதிகளை மேற்கோள்காட்டி, தன்னெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்துரைத்தலுமுடையதாகக் கூறியவாறும், ஆங்கு எதிர்பெய்துகொண்ட தலைவனுருவும் உறுப்பும் உணர்வும் மறுத்துரைத்தலுமுடையதாகச் செய்யாமரபின செய்த வாகக் கூறியவாறும் அவை உயர்திணையாகக் கூறியவாறும் பிறவு முணர்க’ என்று தெளிவாக எழுதியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * டுருவு முடிய மூன்று, † உயர்திணையாயவாறும். ‡ உரித்தாதலவ்விடத்,

முன்னடிப்பணிவான்போலவும் அலைப்பேன்போலவும் என்றாள்; முன்னே தன்மனத்தின் அது நிகழ்தலுடைமையின். இதுவும், "மனைவி யுயர்வுங் கிழ வோன் பணிவு, நினையுங் காலைப் புலவியு ளுரிய" (க)என்பதனாற்கொள்க.

ஆங்கு, அசை.

உங. கனவினுற் கண்டேன் றோழி காண்டகக்
(உ)கனவின் வந்த கானலஞ் சேர்ப்ப
னனவின் வருதலு முண்டெனை
(ங)*வனைவரை நின்றதென் னரும்பெற லுயிரே

எ - து: தோழீ! கனவிடத்தே கண்டேன்; அதனாலே என்னுடைய பெறுதற்கரிய உயிர் எனக்குக் † காட்சி தரும்படி கனவிலே வந்த கானலை யுடைய அழகிய சேர்ப்பன் (௯)வெளியிலே வந்து கூடுதலும் உண்டென்று கருதி அவன் அருளும் எல்லைக்கண்ணே அது நசையாக நின்றதுகாணெனக் கனவில் நிகழ்ந்தது கூறினள். எ - று.

க. தொல். பொருளி. சூ. ஙங. இச்சூத்திரவுரையிலும் இவர் "வலையுறு ....அலைப்பேன் போலவும்" என்னும் பகுதிகளை மேற்கோள் காட்டி, 'இது முன்னே தலைவி மனத்து நிகழ்தலுண்மையிற் கனவி லுங் கண்டாளென்றுணர்க' என்று குறிப்பும் எழுதியிருக்கிறார்.

உ. (அ) "கனவினு னல்கா தவரைக் கனவினுற், காண்டலி னுண்டென் னுயிர்" (ஆ) "கனவினு னுண்டாகுங் காம நனவினு, னல்காரை நாடித் தரற்கு" குறள். கஉகங - கஉகச.

ங. (அ) "அனைமது கையர் கொல்" (ஆ) "அனைத்தானு, மான்ற பெருமை தரும்" குறள். சகக.

௯. (அ) "வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும், குரூஉமயிர்ப் புருவை யாஅசயி னல்கும்" (ஐங். உ௩அ.) என்பதற்கு, 'வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும் பின்பு வரக்கூடுமென்னும் ஆசையாலே புருவை தங்குமென்றது, இவளும் இவ்வாறே நின்னைக் காணலாமென்னும் ஆசையாலே உயிரோடு வாழாநின்றாளென்பதாம்' என்றெழுதியிருக்குமுரையும் (ஆ) "பொறையிருத் தாற்றியென் னுயிரும் போற்றினே, னறையிருங் கழலவற்காணு மாசையால்" (இ) "புண்ணிய மூர்த்திதன்னைக், காணலா மின்னுமென்னுங் காதலாலிருந்தேன் கண்டாய்" (ஈ) "என்றன் பொருசிலை மேகந்தன்னைக், காணலாமென்னு மாசைகடுக்கவென்னுவிகாத்தே னேலா வுடலினிங்க வெளிதெனக் கெனவுஞ் சொன்னாள்" கம்ப. உருக்காட்டு. கக. மாயாசனக. உஉ, சீதைகளங்.

௩க. என்பவைகளும் இங்கே ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * தரும்படி. † அயன்வரை.

இதனால், (க) கனவொடு மயங்கலென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோன்றிற்று.

இஃது "இடைநிலைப்பாட்டு" (உ) என்றதனால், தாழம்பட்ட வோசையின்றி வந்த இடைநிலைப்பாட்டுப் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (கக)

(கஉ௯.) தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போ
லெல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர

வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை;

அ பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட
லாவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற
னோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றாரை யுடையையோ நீ;
கஉ மன்றிரும் பெண்ணை மடல்சேர் றன்றி
லன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய
வென்றுய ரறிந்தனை நரறியோ வெம்போல
வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ;

ககூ பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழ
லினிவரி னுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டினைதியோ வெம்போல
வினியசெய் தகன்றாரை யுடையையோ நீ;
எனவாங்கு;
உக அழிந்தய லறிந்த வெவ்வ மேற்படப்
பெரும்பே துறுதல் களைமதி பெரும.

க. இம்மெய்ப்பாட்டுக்கே "அலந்தாங்...........அளிப்பான் போலவும்" என்பது மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது; தொல். மெய்ப். சூ. உஉ. பேரா. இ - வி. சூ. இஅ௦.

உ. தொல். செய். சூ. ககஉ.

வருந்திய செல்ல றீர்த்த திறனறி யொருவன்
மருந்தறை கோடலிற் கொடிதே யாழநின்
னருந்தியோர் நெஞ்ச மழிந்துக விடினே.

இது "தன்னுட் கையாறெய்திடு கிளவி"(க)யால்தலைவி ஆற்றளாயின வாறு தோழி தலைவற்குக் கூறியது.

இதன் பொருள்.

(உ)தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போ
லெல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
(ரு)நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை

எ - து: பல உலகங்களில்உயிர்களெல்லாம் பழைதாகிய ஊழிக்காலத்தே பிறந்திறந்து தடுமாறித் திரியும்படி அயனாய்நின்று படைத்த முதல்வன் (சு)அரனாய் அவ்வுயிரெல்லாந்தன்னிடத்தேவந்துதொகுதலைத் தான்விரும்பும்

க. இறை. சூ. ௩௦.

உ. "தொன்முறை யியற்கையின் மதியொ,........மரபிற் றாகப், பசும்பொ னுலகமு மண்ணும் பாழ்பட, விசும்பி னூழி யூழூழ் செல்லக், கருவளர் வானத் திசையிற் றோன்றி, யுருவறி வாரா வொன்ற னூழியு, மூந்து வளி கிளர்ந்த வூழூ ழூழியுஞ், செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு. தண்பெய றலைஇய வூழியு மவையிற், றுண்முறை வெள்ள மூழ்கி யார் தருபு, மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கு, முள்ளீ டாகிய விருநிலத்

தாழியு, செய்தலுங் குவளையு மாம்பலுஞ் சங்கமு, மையில் கமலமும் வெள்ளமு நுதலிய, செய்குறி யீட்டம்" பரி. உ: க - கரு.

ங. (அ) "அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே, கோடியாத்து நாடு பெரிது நந்து, மெல்லியன் கிழவ னாகி...... .....பிண்ட நச்சின்,... .. தானு முண்ணா னுலகமுங் கெடுமே"(ஆ)"காவற் சாகா டுகைப்போன் மாணி, னூறின் றாகி யாறினிது படுமே, யுய்த்த றேற்றா னாயின் வைகலும், பகைக்கூ ழள்ளற் பட்டு, மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே" புறம். கஅச: ரு - கக; கஅரு: உ - சு.

ச. "பல்லுருவம் பெயர்த்துநீ" (கலி. க: ரு) என்பதும் அதன் உரையின் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

௮00 கலித்தொகை கஉக.

ஊழி முடிந்த காலத்திலே தன்னிடத்தே மீட்டு ஒடுக்கிக்கொள்கின்றவனைப் போலே ஞாயிறு பகற்பொழுது வந்துசேர்தற்குக் காரணமான *தன்னுடைய தெறுகின்ற கிரணங்களைத் தன்னிடத்தே மீட்டுக்கொண்டு மறைகையினாலே (க)நல்ல நீதிநூல் வழியாலே உலகை நெறியிலே நிறுத்தி அவ்வுலகை ஆண்ட அரசன் போயபின்னர் நீதியல்லதனை ஏறட்டுக் கொண்டிருந்து அறநெறியை உலகத்து நிறுத்தமாட்டாத குறுநில மன்னன்காலம்போலே மயங்கின இருள் உலகிடத்தேவரும்படி பகற்பொழுதிற்கு ஓரெல்லையாகிய, வருத்தம்மிகுதற்குக் காரணமான, மயக்கத்தையுடைய மாலைக்கண்ணே. எ - று.

மடக்கி, மடங்கியென விகாரம்.

மெல்லியான், படைமுதலியன இன்றி இளைத்தவன்.

எல்லை, (உ)மரணகாலமுமாம்.

அ (ங)பாய்திரை †பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட
(ச)லாவறத் ‡துறந்தனன் றுறைவனென் றவன்றிற

நோய்தெற ||வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றாரை யுடையையோ நீ

க. "அறமாவது: உயிர்களுக்கு இதமாவன செய்தலும் சத்தியஞ் சொல்லுதலும் தானதன்மங்கள் செய்தலுமாம்" என்று பதுமனார் கூறுதலால், 'நல்லற நெறிநிறீஇ' என்பதற்கு, நல்ல அறங்களைத் தன்னெறியால் உலகில் நிறுவியென்றலுமாம்; "நடையி னின்றுயர் நாயகன்" "என், னுயிரொழுக் கதற்கு வேண்டு முவமையொன் றுரைக்க வேண்டின்" "நெறியி னின்றதன் னாயகன்" கம்ப. பாயிர. கக. நாடவிட்ட. சக. பாசப் சக. எனவருதலும் அறிக.

உ. "புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக், கொல்லாது போத லரிதா லதனொடியான், செல்லாது நிற்ற லிலேன்" கலி. கசB:

உக - ருக.

ந. (அ) "இடையேவிளை சோரவெழுந் துவிழுந், தடலேய்மத னன்சர மஞ்சினையோ, வுடலோய்வுற நாளு முறங்கலையால், கடலேயுரை நீயு மொரர் கன்னிகொலாம்" கம்ப. கடிமணப். கக. என்றும் (ஆ) "போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி, நாவாய் குழற நடுங்குறுவாய் - நீவா, யரவகற்று மென்போல வார்கலியே மாதை, யிரவகற்றி வர்தாய்கொ லின்று" நள. கலிநீங்கு, உக. என்று ஒருவாறு இதனையொத்தும் வருவன காண்க.

ச. (அ) "தாவுறத் துறந்தாரை" கலி. ககஅ: க. (ஆ) "தாவுறத் துறத்த னன்றென" மணி. உக: கூஉ. என்பவைகளும் இந்நூற்பக்கம் எசஎ: ஞ - ஆம் குறிப்பில் இதற்கு பொருந்துபவையும் ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * தனதுடைய, † பாட்டோவா. ‡ துறந்தனன்றையன், || உமிழ்ப்பார்கண்.

எ - து: பரக்கின்ற திரை ஒலித்தல் மாறாத பரத்தலை யுடைத்தாகிய நீரையுடைய பனிக்கடலே! துறைவன் எமக்கு வலியில்லையாம்படி துறந்தானென்று அவன் கூற்றாலே உண்டான காமநோய்சுட அதன்கண் அழுந்துவாரிடத்தே நின்று வருந்தவேண்டி முழங்குகின்றாயோ? அன்றியே முன்னர்க் காதல்செய்து பின்பு நீங்கினாரை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ? எ - று.

கஉ (க)மன்றிரும் பெண்ணை மடல்சேர் அன்றி
னன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய
வென்றுய ரறிந்தனை நரறியோ (உ)வெம்போல
வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ

எ - து: மன்றிலே நின்ற கரியதாகிய பனையின்மடலைச் சேர்ந்திருக்கும் (ங.)அன்றிலே! நந்தலைவர் தாஞ்செய்த நன்றுகளை யான் இருந்துசொல்லுதலைக்

க. (அ)"மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத், துணைபுண ரன்றில்" நற். நஙந: ச - ரு. (ஆ) "மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை, யன்றிலும் பையென நரலும்" குறுந். கள எ.

உ. இணையும் பாலும் விளங்கவில்லாத சொற்களுள் நீஎன்பது குறிப்பான் அஃறிணையுணர நிற்றற்கு, (அ) "எம்போல... ......நீ" என்பது (தோல். பெயர். சூ. நஎ. 'இன்னபெயரே' தெய். உரையிலும்) (ஆ) "இன்றுணை..........நீ" என்பது (தோல். பெயர். சூ. நக. நச். உரையிலும்) மேற்கோள்.

ங. அன்றிலென்பது நெய்தனிலத்துக்கு உரித்தாகக் கூறப்படுவதொரு

பறவை; கழிமீன் முதலியவற்றையுண்டு பனைமரத்திற் சிறுகோலாற் கூடுகட்டிக்கொண்டு வதிவது; செந்தலையையும் வளைந்ததும் செந் நிறத்ததுமாகிய வாயையும் கரிய காலையுமுடையதென்று கூறப்படு கிறது; துணையின்மேன் மிக்க காதலையும் அதனைப் பிரியாத தன்மையையும் பிரியின் துயிலாது நடுங்கி வருந்திக் கதறுந் தன்மையையுமுடையது; நள்ளிரவின் அகவுவது; பிரிந்திருப்பவரைத் தன்குரலால் வருத்துவது; இவை, (அ) "தெண்ணீ ரிருங்கழி வேண்டு மிரைமாந்திப், பெண்ணைமேற் சேக்கும் வணர்வாய்ப் புணரன்றில்" (ஆ) "நெருப்பி னன்ன செந்தலை யன்றில், இறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு......... ..கட்சியிற் பிரிந்தோர் கையற நரலு நள்ளென் யாமத்து" (இ) "மனைசேர் பெண்ணை மடிவா யன்றில், றுணையொன்று பிரியினுந் துஞ்சாகா ணென" (ஈ) "பராரைப் பெண்ணைச் சேக்குங் கூர்வா, யொருதனி யன்றி லுயவுக்குரல் கடைஇய, வுள்ளே கனலு

(பிரதிபேதம்) * அன்றிலென்றதை.

கெடுத்துவிட்டாரென்று கலங்கிய (க) என் வருத்தத்தை அறிந்தனையாய் மிகவும் வருந்தவேண்டி ஆரவாரிக்கின்றாயோ? அன்றியே முன்பு இனிய துணையாய்ப் பின்புபிரிந்தாரை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ? எ - று.

நன்றறைகொன்றனர் என்றதனால் தீங்கே செய்தமை கூறினாள். இனி மிகவும் மறைந்துநின்ற களவை வெளிப்படுத்தினரும் என்பாரும் உளர்.

கங பனியிருள் சூழ்தரப் பைதலஞ் (உ)சிறுகுழ

இனி*வரி னுயருமற் பழியெனக் கலங்கிய

தனியவ ரிடும்பைகண் (௩)டினைதியோ வெம்போல

இனியசெய் தகன்றாரை யுடையையோ நீ

எ - து: வருத்தத்தினையுடைய அழகினையுடைய சிறியதாகிய குழலே! இக்காலத்தே வருவாராயின், தாஞ்செய்த பழி மிகவும்போமென்று கருதிப் பனியோடு கூடிய இருள்சூழ்ந்து வருகையினாலே கலங்கின தனித்தவருடைய

முள்ள மெல்லெனக், கனையெரி பிறப்ப வூதுங், கினையா மாக்க டீங்குழல் கேட்டே" (உ) "செவ்வாய வன்றி றுணையிழப்ப" (ஊ) "முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக், கொழுமடல் விழைத்த சிறுகோற் குடம்பைக், கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல், வயவுப்பெடை யகவும் பானாள்" (எ) "கனைத்ததங் காதலிற் கனவிற் கண்டிறந், தினைக்க போன் றிடையிடை நோக்கி யின்குரல், புனைந்தகம் புணர்பெடை புல்லி மெல்லவே, யனர்தருந் முரன்றன வன்றிற் சேவலே" (ஏ) "புணர்பிரியா வன்றிலும்போ, னித்தலு நம்மைப் பிரியல மென் றுரைத்த, பொற்றொடியும்" (ஐ) "ஒன்றில் காலை யன்றில் போலப், புலம்புகொண் டுறையும் புன்கண் வாழ்க்கை" (ஒ) "துணைபிரிந் தயரு மன்றிற் சேவலிற் றளங்குகின்றான்" (ஓ) "பெண்ணைமேற், பின்னுமவ் வன்றிற் பெடைவாய்ச் சிறுகுரலுக், குன்னி யுடலுருகி நையாதார்" என்பவற்றால் அறியப்படும். பெரும்பாலும் இவ்வியல் பினதாக மகன்றிலென்று ஒருநீர்வாழ்பறவைகூறப்படுகிறது. இதுவும் அதுவும் ஒன்றென்றும் கூறுவர். அன்றிலென்பது வடமொழியில், 'க்ரௌஞ்சம்' என வழங்குமென்ப.

க. "தன்றுணை யில்லாள் வருந்தினள் கொல்லென, வின்றுணை யன்றி லிரவி னகவாவே" (கலி. ௧௨௯: ௨௭ - ௨௮) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "குழலினு மினைகுவள் பெரிதே" ஐங். ௩௱௪. (ஆ) "கோவலர்

தீங்குழ வினைய வரோவென், பூவெழி லுண்கண் புலம்புகொண்
(பிரதிபேதம்) * வரிதுயரும்.

கலித்தொகை ௯௨.

திண்டோட் டிறலொளி மாயப்போர் * மாமேனி
(௧)யந்துவ ராடைப் பொதுவனோ டாய்ந்த
†முறுவலாண் மென்றோள்பா ராட்டிச் சிறுகுடி

மன்றம் பரந்த துரை

எ - து: இப்பொழுது அவ்விடத்துச் சிறுகுடியன மன்றத்தில் ஆடுகின்ற பண்ணமைந்த இனிய தாளத்தையுடைய ‡ குரவைக்கூத்திலுள்ளே விளங்கிய கண்ணியையும் திண்ணிய தோளினையும் திறலினது விளக்கத்தினையும் மாயத்தையுடைய போர்த்தொழிலினையும் கரியமேனியினையும் அழகிய துவருட்டின ஆடையினையுமுடைய பொதுவன் தோளையும் ஆராய்ந்த முறுவலாளுடைய மென்றோளையுங் கொண்டாடி எறுதழுவின புகழ் பரந்தது; இனி மணஞ் செய்தற்குத் தண்ணுமையில் தாளந்தளராமல் எழுப்புவார்களாகவெனக் கண்ட சுற்றத்தார் ||கூறினர். எ - று.

பொதுவன் தோளிற்கு அவள் தோள் நிகர் ஒக்குமென்று பாராட்டி, இனிப் பொதுவனோடே மென்றோளையுடைய முறுவலாளையும் பாராட்டியென்றலும் ஒன்று. இதுவும் சிறப்பில்லா ஆசுரமாகிய கைக்கிளை. ÷"பாங்க னிமித்தம் பன்னிரண் டென்ப"(௨)என்றதனான் ஆசுரத்திற்கும் பாங்கி நிமித்த மாயினள்.

இதனால், இருவர்க்கும் × நினைதல் பிறந்தது.

+இஃது "ஆசிரிய மருங்கினும் வெண்பாமருங்கினு,மூவகை யடியு முன்னுதலிலவே" என்னும்(ங.)சூத்திரத்திற் கொண்ட நாற்சீரடி ** மூடுகியலோடு தொடர்ந்த "தகைவகைமிசைமிசை","கொலைமலி††சிலைசெறி"என்னும்வெண்

க. "ஆயர்களுக்குத் துவராடையுடை கூறப்படுதலை, (அ) "கருந்துவ ராடையை" கலி. க0அ: க0. (ஆ) "செந்துவ ராடையாயர்" சீவக. சஅரு. (இ) "அலங்கு செந்துவ ,ராடையர்" பாக. (க0) கஞ்சனைக் கொன்ற. கூ. என்பவற்றாலும் அறிக.

உ. தோல். கள. சூ. கங.

ந. தோல். செய். சூ. கள. இச்சூத்திரவுரையிலும்தகைவகை மிசைமிசைப் ....சென்றார் பலர் என்னும் பகுதியை நாற் சீரடி மூடுகியலோ டொன்றாய் வந்த வெண்பாவுக்கும்,"மலர்மலி புகவெழ .. .. வருத்தினான் மன்றவவ் வேறு" என்னும் பகுதியை அறுசீரடி மூடுகிய லோடொன்றாய் வந்த வெண்பாவுக்கும்.மேற்கோள் காட்டினர் நச்.

(பிரதிபேதம்) * மாமணி, † முறுவலாய்மென்றோன், பாராட்டச், ‡குரவைக் கூத்தினுள்ளே பொதுவன்றோளேயும்,|| கூறினார். விளக்கியகண்ணியையுக்........ஆடையினை யுமுடையபொதுவனென்க. பொதுவன் தோளிற்கு, ÷ பாக்ஙெளிமித்தம், × விளைத் தல்பிற்றது,+ இது ஆசிரிய. ** மூடுகியலுந் தொடர்ந்த, ††சிலைசெறி.

ஐந்தாவது நெய்தல் கஉ. அ0ந

வருத்தத்தைக்கண்டு நீயும் வருந்துகின்றாயோ? அன்றியே முன்பு இனியன வற்றைச் செய்து பின்பு நீங்கினை: எம்மைப்போலே நீயும் உடையையாய்

வருந்துகின்றாயோ? எ - று.

(க)உயர்தல், "கோன்புயர்தல்" போல நீக்கத்தின்கணின்றது.

(உ)கடலும் அன்றிலும் குழலும் உற்றபிணியைத் தம்பிணிக்கு வருந்தின வாகச்சேர்த்தி உயர்திணையாக்கி உவமவாயிற்படுத்தவாறு காண்க. இஃது "அவாவ றுறபிணி தமபோற் சேர்த்தியது" (ங.)

*எனவாங்கு

எ - து: என்றுசொல்லி. எ - று.

ஆங்கு, அசை.

உக அழிந்தய லறிந்த வெவ்வ மேற்படப்
பெரும்பே துறுதல் களைமதி பெரும
வருந்திய செல்ல †தீர்த்த திறனறி யொருவன்
(ச)மருந்தறை ‡கோட லிற் கொடிதே யாழநின்
‖னருந்தியோர் நெஞ்ச ÷மழிந்துக விடினே

×எ - து: நெஞ்சழிந்து, அயலிலுள்ளார் அறிந்தவருத்தம் மேலிட்டுவருகையினாலே பெரியதாகிய பித்தேறுதலைப் பெரும! வரைந்துகொண்டு போக்குவாய்; அங்ஙனம் போக்குங்கால் நின்னை நுகர்ந்தோருடைய நெஞ்சம் அழிந்து கெட்டுப்போம்படியாக அவரைக் கைவிடுவையாயின், அது வருந்தியவருத்தத்தைப் போக்கும் மருந்தின்திறத்தை அறிந்த ஒருவன் அம்மருந்தை அறியேன்

டினையும்" கலி, கஙo: கடு-கசு. (இ) "குழலினை வதுபோ லழுதனள் பெரிதே" புறம். கசங: கடு.

க. "தாளுயர்ந்த தவத்தினன்" கம்ப. கும்ப. ககக.

௨. "அன்றிற் கமைக்காழிக்கு ....அயர்ந்தான்"

௩. தொல். பொருளி. சூ. ௨. (அ) இச்சூத்திரப்பகுதியினுரையிலும் இவர் இச்செய்திக்கு இத்தாழிசை மூன்றையும் மேற்கோளாகக் காட்டி, இக்குறிப்பையும் எழுதியிருக்கிறார். (ஆ) தலைமகள் அவரவருறுபிணி தமபோற் சேர்த்திக் கூறியதற்கு, "பாய்திரை...........காதல்செய் தகன்றாரை யுடைமையயோ நீ" என்னும் பகுதிமட்டும் (தொல். பொருளி. சூ. ௨; இளம். இ - வி. சூ. ௫௭௦.) மேற்கோள்.

௪. "இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை" முதுமொழி. ௫௫.

(பிரதிபேதம்) * ஆங்கசை அழிந்தயல், † தீர்திறமெனறி, ‡ கோறலிற், || அருக்தோர்நெஞ்ச, அருந்தொடுநெஞ்ச. ÷ அளிந்தக, இழந்தக. × எ-து: என்றுசொல்லி நெஞ்சழிந்து

என்று வஞ்சித்து அம்மருந்தின் காரியத்தைக் கெடுக்குமதிலும் கொடிதுகா ணென் அவளாற்றாமையைத் தோழி கூறி வரைவுகடாயினள். எ - று.

இது "காமஞ்சிறப்பினும்" (க)என்பதனாற்கொள்க.

இதனால், தலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

(௨)இதுவும் காலம்மயங்கிற்று. செல்லநீரத் திறனறியொருவன்என்பதும் பாடம்.

இது நீ நீ நீ என ஓரசைச்சீர் வந்து ஐஞ்சீரடிவந்த *மண்டிலவாசிரியத்தா னிற்று யாப்பின்வேறுபட்ட கொச்சகம். (௧௨)

(௧௯௦.) நயனும் வாய்மையு நன்னர் நடுவு
மிவனிற் றோன்றிய விவையென விரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத் தினிதாண்ட
வரைசனோ டுடன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போ
னிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்

கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போற்
புல்லிருள் பரத்தரூஉம் புலம்புகொண் மருண்மாலை;

அ இம்மாலை;
ஐய ரவிரழ லெடுப்ப வரோவென்
கையறு நெஞ்சங் கனன்றுதீ மடுக்கும்;

கக இம்மாலை;
இருங்கழி மாமலர் கூம்ப வரோவென்
னரும்படர் நெஞ்ச மறிவொடு கூம்பும்;

கச இம்மாலை;
கோவலர் தீங்குழ லிணைய வரோவென்
பூவெழி லுண்கண் புலம்புகொண் டிணையும்;

க. தொல். கள. சூ. உ௦.

உ. (அ)முதற்பொருள்களுள் காலம்மயங்கிவருமென்பதற்கு இச்செய்யுளை மேற்கோள்காட்டுவர் இளம்பூரணர்; தொல். அகத். சூ. கச. 'திணை மயக்கு' (சூ) நச்சினார்க்கினியரும் அச்சூத்திரவுரையில் "தொல்லூழி .... வினியசெய் தகன்றரை யுடையையோ நீ" என்னுமடிகளை மேற்கோள்காட்டி 'நெய்தற்கலியுட் கங்குலும் மாலையும் முன்பனியும்

(பிரதிபேதம்) *, மண்டலவாசிரியத்தான்

எனவாங்கு;

கஅ படுசுடர் மாலையொடு பைதலே யுழப்பானைக்
குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை

விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே.

இது பிரிவிடையாற்றாத தலைவியது ஆற்றாமை தலைவன் வந்துசார்தலின் நீங்கினமைகண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

இதன் பொருள்.

நயனும் வாய்மையு நன்னர் நடுவு
மிவணிற் றோன்றிய வினையென விரங்கப்
புரைதவ நாடிப்(க)பொய்தபுத் தினிதாண்ட
*வரைசனோ டுடன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போ
னிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்
(உ)கல்லாது முதிர்ந்தவன்(ங)கண்ணில்லா நெஞ்சம்போற்
புல்லிருள் †பரத்தரூஉம் புலம்புகொண் மருண்மாலை

எ-து: (அ) இவனாலேவிளங்கின கலந்தஉறவும் உண்மைகூறலும் நன்மையையுடைய நடுவுநிலைமையுமாகிய இவை, இனி விளக்கமின்றிப் போயினவென்று தனக்குப்பின்பு உலகத்தார் இரங்கும்படியாக அவற்றிற்கு உயர்ச்சி

வந்தன' என்பர்; இ - வி. நூலாரும் அவ்வாறே கூறுவர்; இ - வி· சூ. ஙகச.

க. "பொய்யறியா வாய்மொழியாற், புகழ்நிறைந்த நன்மாந்தரொடு, நல்லூழி யடிப்படர,........ ......வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக" மது. கக - உங.

உ. "கல்லா தவருளம் புல்லிய குழலும்"

ங. (அ) "கண்ணில்புன் மாக்கள்" நாலடி. சச. (ஆ) "கண்ணிழந்த மாயக் கவறாடி" நள. சுயம்வர. சo. (இ) "கண்ணுடைய ரென்பவர் கற்றோர்" குறள். ஙகங. (ஈ) "கைப்பொருள் கொடுத்துங் கற்றல்

கற்றபின் கண்ணு மாகும்'' சீவக. கதுகஙு. (உ) ''கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவழி'' நீதிவெண்பா.

௬. (அ) ''கலையின தகலமுங் காட்சிக் கின்பமுஞ், சிலையின தகலமும் வீணைச்செல்வமு, மலையிணி னகலிய மார்ப னல்லதிவ், வுலகினி லிலையென வொருவ னுயினுன்'' சீவக. ௬கக. (ஆ) ''ஆற்றலு நிறையுங்

(பிரதிபேதம்) * அரசனோடு, † பரத்தரும்.

மிகும்படி ஆராய்ந்து (க)பொய்யைக்கெடுத்து நன்றாக ஆண்ட அரசனோடே சேரக்கெட்ட நல்ல ஊழால் உண்டாகிய செல்வம்போலே நிரைத்த கதிரை யுடைய ஞாயிறு படுதலோடே பகற்காலமும்போகப் பின்பு வருத்தங் கோடற்குக் காரணமாகிய மாட்சிமையயுடைய மாலைக்காலம் ஒன்றையுங் கல்லாமல் மூத்தவனுடைய ஞானக்கண்ணில்லாத நெஞ்சுபோலே புற்கென்ற இருள் உலகிலே பரத்தலைத் தாராநிற்கும். எ - று.

ஊழ், ஊழி எனத் திரிந்தது.

''நயனு * நண்பு நாணுநன் குடைமையும், பயனும் பண்பும் பாட்டறிந் தொழுகலும்''(உ)என்றாராகலின், நயன் பண்பன்மைஉணர்க. இரங்கப் புரைதவநாடியென்க. அச்செல்வம் அரசனோடு போனாற்போலப் பகற்காலமும் ஞாயிற்றோடே போயிற்றென் றுணர்க.

அ (௬)இம்மாலை

ஐய ரவிரழ லெடுப்ப வரோவென்
கையறு நெஞ்சங் கனன்றுதீ மடுக்கும்

கல்வி யமைதியு மறிவு மென்னும்,வேற்றுமை யிவனோ டில்லை" கம்ப. அனுமப்., கசு. (இ) "மறமும் வாகு வலியும் வல்வின் முதலெப் படையின், றிறமுந் தேசும் வாழ்வுஞ் சீருங் கேள்விச் செல்வு, நிறமு முண்மை யறிவு நெறியும் புகழுந் திகழ்பே, ரறமும் பொன்று நின்னோ டையா வந்தோ வந்தோ" (ஈ)"வில்லாய் நீவெம் போர்முனை வெல்லும் விறலாய்நீ, சொல்லாய் நீதொல் வேதிய ருட்குந் தொழி லாய்நீ, வல்லார்வல்ல கலைகளனைத்தும் வல்லானே, யெல்லாமின்றே பொன்றின வுன்னோ டெந்தாயே" வில்லி. பத்தாம்போர். ௬௦. பதினெந்தாம். ௩௩.

க. (அ) "பொய்சேணீங்கிய வாய்நட் பினையே" மது. ககூஅ. (ஆ) "தேற் றாய் பெரும பொய்யே" புறம். இக: ௬. (இ) "புகழ்வாய்மை வழீஇய சொல்லும் ....இலன் கொற்ற வேலான்" நாரதசரிதை. (ஈ) "மன்னனுக், கைய மின்றி யறங்கட வாதருண், மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ" (உ) "பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன்" கம்ப. மந்தரை. கஎ; கைகேயி. ௩க. (ஊ) "சத்தியம் பிறழ்வது தரியேம்" அரிச். மயான. கஉஅ.

உ. நற். ககூ௦: க - உ.

௩. (அ) "அந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து, செந்தீச் செவ்வழ றொடங்க வந்ததை........ மாலை யென்மரோர்" கலி. ககக: ௩உ - கசு; (ஆ) "அந்தி யந்தணர் செந்தீப் பேண" மணி. இ: க௩௩.

(பிரதிபேதம்) * 'கன்றும்.

ஐந்தாவது நெய்தல் க௩. அ௦எ

எ-து: இம்மாலைக்கண்ணே? இருடிகள் விளக்குகின்ற அழலை (க)*ஆவுதி பண்ணிஎழுப்ப, என்செயலறுநெஞ்சம் தானுங்கொதித்து எனக்கும்(உ)காமத்

தீயைக் கொளுத்தும். எ - று.

கக (ஙு)இம்மாலை

இருங்கழி மாமலர் கூம்ப வரோவென்
னரும்படர் நெஞ்ச மழிவொடு கூம்பும்

*எ - து: இம்மாலைக்கண்ணே, † கரிய கழிகளிற் பெருமையையுடைய மலர்கள் குவிய, என்னெஞ்சம் அவனை ‡ உள்ளுதலால் அழிதலோடே தான் நினைவின்றிக் குவியும். எ - று.

கஉ (ச)இம்மாலை

கோவலர் தீங்(ரு)குழ ||லினைய வரோவென்
(ங)பூவெழி லுண்கண் புலம்புகொண் டினையும்

எ - து: இம்மாலைக்கண்ணே, கோவலருடைய இனியதாகிய குழலாலே நெஞ்சுவருந்த, ÷ எனது பூவினதழகையுடைய உண்கண் தனிமையைக்கொண்டு வருந்தும். எ - று.

இஃது, இன்பத்தைவெறுத்தல். அரோ, அசை.

க. வடமொழியின் முப்பத்துமூன்றாம் மெய்யாகிய ஹகாரம் சேர்ந்த மொழிகளைத் தமிழில்வழங்கும்போது அம்மெய் மொழிமுதலில்வரின் அதனைக்கெடுத்தும் இடையேவரின் ககரமாகவாவது யகரமாகவாவது திரித்தும் வழங்குவதன்றி வகரமாகவும் திரித்து வழங்குவரென்பதை, (அ) "ஆவுதி மண்ணி" மது. ௪௯௪. (ஆ) "ஆவுதி நறும்புகை" பட். ௫௫. சிலப். ௧௦: ௧௪௪. (இ) "ஆவுதி யருத்தியும்" பட். ௨௦௦. (ஈ)"பெரும்பெய ராவுதி" பதிற். ௨௧: ௭ (உ)"ஆவுதி பொங்க" புறம். ௧௫: ௧௯. என இச்சொல் பயின்று வருதலாலும் வைதேஹியென்பது (ஊ) வைதேவியென வழங்கப்படுதலாலும் அறிக.

௨. "மாலை மலருமிந்நோய்" குறள். ௧௨௨௭.

௩. "இல்லவ ரொழுக்கம்போ லிருங்கழி மலர்கூம்பச், செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை" கலி. ௧௪௮ ௬ - ௭.

௪. "ஆயர் மணிமாலை யூதுங் குழல்" (கலி. ௧௦௯: ௩௪ - ௩௫) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௫. இந்நூற்பக்கம் ௮௦௨: ௨ - ஆம் குறிப்புப் பார்க்க.

௬. "பூவெழி லிழந்தகண் புலம்புகொண் டமையாது, பாயலோ யிகும்" கலி. ௨௮: ௧௮ - ௧௯

(பிரதிபேதம்) * ஆநி. † கரியதாகிய கழி. ‡ உள்ளி அழித, || இனைப்ப, ¶ என் றுடைய பூ.

எனவாங்கு

* எ - து: எனச் சொல்லி, எ - று.

ஆங்கு அசை.

௧௮ (௧)படுசுடர் மாலையொடு பைதலோ யுழப்பாளைக்
(௨)குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
(௩)விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி † நீங்கின்றாற் பசப்பே

‡ எ-து: (௪)படுகின்ற சுடரையுடைய மாலையாலே வருத்தத்தையுடைய காமநோயிலே அழுந்துகின்றவளைக் குடிமக்களைப் பாதுகாத்துப் பின்னர்த் தன்னைப் பாதுகாக்கும் பாண்டியனுடைய அகற்சியையுடைய (௫) படை விட விடப் பகைவர் நீங்கினாற்போலப் பிரிந்தவர்வந்து தீண்டத்தீண்டப் பசப்பு நீங்கிற்று; ஈதிருந்தவாறு என்னென (௬)வாயில்கள் தம்முட்டம்முட் கூறினர். எ - று.

க. "படுசுடர்..........பசப்பே" என்பது, வழியீற்று வினையெச்சத்திற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. ௩௧. கல். இவ்வினையெச்சத்திற்கு, கடையிரண்டடிமேற்கோள்; தொல். வினை. சூ. ௩௨. நச். இ - வி, சூ. உசசு. நன். வினை. சூ. உ௬. இரா. இது இறப்புப்பற்றிவந்ததென்பர்.

உ. (அ) "குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல், வடுவன்று வேந்தன் றொழில்" (குறள். ௫௪௯) என்புழி, 'குடிபுறங் காத்தோம்பல்' என்பதற்கு, குடிகளைப் பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாது பேணுதலென்று பொருள்கூறுவர். பரி. (ஆ) "குடிபுறங் காத்து" மணி. உ௩: கக. பெருங். (இ) அ: உ௦. (ஈ) "ஊர்வேந்தன் றன்னூடு, வாட்டானன் றென்றல் வனப்பு" சிறுபஞ்ச. க.

௩. (அ) "தொவுழித் தொவுழி நீங்கி, விடுவழிவிடுவழிப் பரத்தலானே" குறுந். ௩௯௯; (ஆ) "கொழுநனைச் சேர்ந்தோர், பசலை யென்னவே யுடைந்தது பாதக னிரதம்" விநாயக. மகோற்கடர். ௬௮௩.

௪. படுகின்ற சுடர் - அத்தமிக்கும் சூரியன்; மாலைக்காலத்துக்கு விளக்கேற்றல் கூறப்படுதலால், 'உண்டாகின்ற விளக்கு' எனினுமாம்.

இ. படைவிடல் - சேனைகள்போய்த் தங்குதல்; படைக்கலங்களைச் செலுத்தலென்பாருமுளர்.

க. வாயில்களென்பது சொல்லால் அஃறிணையாயினும் பொருளால் உயர்திணையாதலின், கூறினரென உயர்திணையால் முடித்தார்.

(பிரதிபேதம்) * என்றதில் ஆக்கசை. † நீங்கின்று பசப்பே, நீங்கிற்றுப் பசப்பே. ‡ சு-து: னைச் சொல்லிப்படுகின்ற.

ஐந்தாவது நெய்தல் க௬. அ௦க

"வாயிலுசாவே தம்முளுரிய" (க) என்பதுவிதி. உழப்பாளைத்தொவேழியென்க. விடுவழி தொவேழி என்பன செயவெனெச்சக் குறிப்புச்சொல்லாகிய வழி என்னும் வினையெச்சம்.

இதனால், வாயில்கட்குப் பெருமிதமென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

(உ) இஃது இடையிடை சொற்சீரடி வந்த கொச்சகம். (கரு)

(கருக.) பெருங்கடற் றெய்வநீர் நோக்கித் தெளித்தென்
றிருந்திழை மென்றோண் மணந்தவன் செய்த
வருந்துயர் நீக்குவேன் போன்மற் பொருந்துபு
பூக்கவின் கொண்ட புகழ்சா லெழிலுண்க
ணோக்குங்கா ணோக்கி னணங்காக்குஞ் சாயலாய் தாக்கி
யினமீ னிகன்மாற வென்ற சினமீ
னெறிசுறு வான்மருப்புக் கோத்து நெறிசெய்த
நெய்த னெடுநார்ப் பிணித்தியாத்துக் கையுளர்வின்
யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்பத்
தாழா துறைக்குந் தடமலர்த் தண்டாழை
வீழுச றாங்கப் பெறின்;

மாழை, மடமான் பிணையியல் வென்றாய் நின்னூசல்
கடைஇயா னிகுப்பநீ நீங்காய் தடமென்றோ
ணீத்தான் றிறங்கள் பகர்ந்து
நாணினகொ றோழி நாணினகொ றோழி
யிரவெலா நற்றோழி நாணின வென்பவை
வாணிலா வேய்க்கும் வயங்கொளி யெக்கர்மே
லானாப் பரிய வலவ னளைபுகூஉங்
கானற் கமழ்ஞாழல் வீயெய்பத் தோழியென்
மேனி சிதைத்தான் றுறை;

க. தொல். செய். சூ. உ00.

உ. (அ) இச்செய்யுள் இடையிடையே சொற்சீரடி பல விரவி யாப்பின் வேறுபடவந்த கொச்சகமென்பதும் இவர் கருத்துப்போலும்; (ஆ) "நயனும் வாய்மையு நன்னர்நடுவுமென, அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியதுபோலுங் கொச்சகம்வருங்கால் ஒத்தாழிசையும் வண்ணக மும்போலத் தனிச்சொற் பெற்றும் பெறாதும் வரும்" என்பது பேராசிரியருரையிற் காணப்படுவது; தொல். செய். சூ. ௧௪௯.

௨௧ மாரிவீ ழிருங்கூந்தன் மதைஇயநோக் கெழிலுண்கட்
டாழ்நீர முத்தின் றகையேய்க்கு முறுவலாய்
தேயாநோய் செய்தான் றிறங்கிளந்து நாம்பாடுஞ்
சேய்ய ரூசற்சீர் நீயொன்று பாடித்தை;
௨௫ பார்த்துற் றனதோழி பார்த்துற் றனதோழி
யிரவெலா நற்றோழி பார்த்துற்றன வெள்பவை
தன்றுணை யில்லாள் வருந்தினள் கொல்லென
வின்றுணை யன்றி லிரவி னகவாவே
யன்றுதா னீர்த்த கரும்பணி வாடவென்
மென்றோண் ஞெகிழ்த்தான் றுறை;
௩௧ கரைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினந்
திரையுறப் பொன்றிய புலவுமீ னல்லதை
யிரையுயிர் செகுத்துண்ணாத் துறைவனை யாம்பாடு
மசைவர லூசற்சீ ரழித்தொன்று பாடித்தை;
௩௫ அருளினகொ றோழி யருளினகொ றோழி

யிரவெலாந் தோழி யருளின வென்பவை
கணங்கொ ளிடுமணற் காவி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் தளிக்கு
மணங்கம ழைம்பாலா ரூடலை யாங்கே
வணங்கி யுணர்ப்பான் றுறை;
எனநாம்;

௪௨ பாட மறைநின்று கேட்டனை னீடிய
வானீர்க் கிடக்கை வயங்குநீர்ச் சேர்ப்பனை
யானென வுணர்ந்து நீநனி மருளத்
தேனிமிர் புன்னை பொருந்தித்
தானூக் கினனவ் வூசலை வந்தே.

இது வரைவுநீட ஆற்றளாயதலைவியைத் தோழி அவன் முன் அருமை செய்து அயர்த்தகாலத்து*அவன்வரைவினையாளறிந்து ஊசலாட நின்னைக் கொண்டுபோம் ஆகின்ற காலத்து யான் இயற்பழிக்க நீ இயற்பட மொழிவது கேட்டுவந்து ஊசலை ஊக்கியவன் இக்காலத்து வருந்தவிடாது வருத்தமறிந்து வரைந்து கொள்வனென ஆற்றுவித்தது.

(பிரதிபேதம்) * அவன் வரவினை.

ஐந்தாவது நெய்தல் ௧௭. அ௧௩

இறைன் பொருள்.

பெருங்கடற் றெய்வநீர் நோக்கித் தெளித்தென்
றிருந்திழை மென்றோண் மணந்தவன் செய்த
வருந்துயர் நீக்குவேன் போன்மற் *பொருந்துபு

(௧)பூக்கவின் கொண்ட (௨)புகழ்சா லெழிலுண்கண்
(௩)நோக்குங்கா னோக்கி னணங்†காக்குஞ் சாயலாய் தாக்கி
யினமீ னிகன்மாற வென்ற சினமீ
(௪)னெறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த
(௫)நெய்த னெடுநார்ப் ‡பிணித்தியாத்துக் கையுளர்வின்
(௬)யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்பத்
தாழா துறைக்குந் தடமலர்த் தண்(௭)டாழை
வீழூச றூங்கப் பெறின்;

---

௧. "பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்கண்" கலி. ௧௪௨: ௧௧.

௨. "தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று" புகழ்தல்.

௩. "நோக்கினா ணோக்கெதிர் நோக்குதற் றாக்கணங்கு, தானைக்கொண் டன்ன துடைத்து" குறள். ௧௦௮௨.

௪. (அ) "எறிசுறாக் குப்பை யினங்கலக்கத்தாக்கு, மெறிதிரை" ஐந்-எழு. ௬௫. (ஆ) "எறிசுறா நீள்கட லோத முலாவு" திணைமொழி. ௪௩. (இ) இந்நூற்பக்கம் ௭௭௨: ௩ - ஆம் குறிப்புப் பார்க்க.

௫ "குவளையைத், தன்னுபா லியாத்து விடல்" (பழ. ௩௬௫.) எனவும் "குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யா ழிசைக்கும் விரலெறிகுறிஞ்சிப், பல்காற் பறவை கிளைசெத்தோர்க்கும்" (பெரும்பாண். ௧௮௦-௧௮௩.) எனவும்வருவன இங்கேநோக்கற்பாலன.

௬. "யாழ்போல வண்டார்க்கும்" கலி. ௩௨: ௬ என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௭. (அ) "தாழை வீழ்க் கயிற்றூச றூங்கி" அகம். ௨௦: ௬. (ஆ) "கான லொருசிறை, மகிழ்பூ மாலையொடு மருதிணர் மிடைந்த, வவிழ்பூங் கோதையோ டவிரிழை பொலங்க, வெக்கர்த் தாழை, நீர்த்துறைத்

தாழ்ந்த, நெடுவீ ழூசன் முடிபிணி யேறித், தொடுவேன் முற்றத்துத் தோழியோ டாடா" பெருங். (க) சO: கOக - ககச. எனப் பிற நூல்களுள்ளும் வருதல் காண்க. இது விழுதுடைமையால் (இ) 'வீழ்த் தாழை' என்றும் தாழையென்னும்பெயரைத் திரிசொல்லாகவுடைய தென்னை வீழின்மையால் (ஈ) 'வீழ் ருழை' என்றும் கூறப்படும்.

(பா.பேதம்) * பொருந்து பூக்கவின். | அருஞ் சாபல், ‡ பிணித்தியார்த்து, பிணியாத்து.

ஏ - து: நோக்குங்காலத்து அப்பார்வையாலே பிறர்க்கு *வருத்தமுண்டாக்கும், தன்னில்இணையொத்துப் பூவினதழகைத் தன்னிடத்தேகொண்ட

இங்கே கூறப்படும் வீழ்த்தாழை (உ) புறக்காழுடையதாதலாற் புல்வகையுள் ஒன்றாக எண்ணத்தக்கது. இது கடலலை மோதுமிடத்துள்ள எக்கரிற் செழித்துவளர்வது, வளைந்தவடிவும் சருச்சரையான அரையு முடையது. தோல்திரைந்தாற்போன்ற திரையலையுடைய தென்றும் கூறுவர். இதன் இலை மிக்க நீளமுடையதாயும் இரு விளிம்பிலும் புறத்திடையிலும் கூர்மையும் வளைவுமுள்ள சிறு முட்களையுடையதாயும் ஒவ்வொரு இலையின் நுனியிலும் அடர்ந்திருக்கும். அதனால் இதற்குப் பேயை உவமையாகக் கூறுவர். இவ்விலையால், குடை செய்யப்படுகின்றது. இதன் முள்ளுக்குச் சுறாக்கோடும் வாளரமும் பாம்பின் எயிறு(பல்லு)ம் உவமையாக்கப்பட்டுள்ளன. இம்முள் எயிறுபோலுதலால் எயிறெனவும் படும். புறமடலிலும் இவ்வகை முள்ளுண்டு. இதில் ஆணென்றும் பெண்ணென்றும் உலக வழக்கில் இருபிரிவுள்ளது. ஆண்டாழை காய்க்கும். அது அக்காயையடுத்துள்ள காய்மடலெனப்படும் புறமடல் சிலவற்றையேயுடையது; வேறுபூஇல்லாதது. பெண்டாழை காயாது. மேற்கூறியஇலையினடுவேயிருந்து பலமடல்களையுடைய அரும்பையீன்று பூக்கும். இப்பூவில்

வெண்ணிறமுடையது வெண்டாமரையென்றும் பொன்னிறமுடையது செந்தாமரையென்றும் வழங்கப்படும். இவற்றுள் செய்யுளிற் பெண்டாமரையும் வெண்டாமரையுமே பயின்றுவரும். ¦ஆண்டாமரையும் செந்தாமரையும் அருகிவழங்கும். வெண்டாமரைமுகிழுக்கு யானைத்தந்தமும் நகிலும் அதன்பூவுக்கு அன்னம் குருகு கொக்குமுதலியபறவைகளும் சங்கமும் உவமையாக உரைக்கப்படுகின்றன. செந்தாமரைப்பூவுக்குப் பொன் உவமையாக ஓதப்படுகிறது. இஃது உலகவழக்கில் மோத்தை யென்று மொழியப்படும். (௬) இதன்முகிழ் கருவிலிருக்கும்போதே வண்டுகள் அதனை அறிந்து அதிற் செல்லுமென்பார். குருகுகள் இதனைத் தம்பார்ப்பென்றும் பெடையென்றும் மயங்கிப் புல்லுமென்பது கவிமரபு. இப்பூ, பறவைபோலத் தோன்றுதலால் இதனிழலைக் கயல் கெண்டை இறு முதலிய மீன்கள் தம்மையுண்ணும் புட்களென்று அஞ்சி ஒளிக்குமென்றும் உரைப்பதுண்டு. இது காலையில் மலர்வதாகக் கூறுவர். இது மின்னல் மின்னுங்காலத்தும் பெருங் காற்று வீசுங்காலத்தும் மிகப் பூப்பது. இப்பூ ஓலைப்பூவென்றும் கூறப்படும். இப்பூவின்மடல்களுக்கிடையே பூந்தாதையுடைய சோறெனப்படும் இமிழ்துபோன்ற உறுப்பு ஒன்றுண்டு. (எ) இப்பூவில் இத்தாதே உண்டென்றும் தேன் இன்றென்றும் சிலர் கூறுவர். இப்பூ, புலவு

(பிரதிபேதம்) * வருத்தமுண்டாக்கும் கண்ணியையுடைய சாயலாயென்க. சாயல் ஈண்டுத் ' தலைவிக்கு ஓர் பெயர்த்தன்மையாய் நின்றது. தன்னில்,

பாக்களும் "மலர்மலி புகலெழூஉ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணை இ" என அறுசீரடி முடுகியலோடு தொடர்ந்த வெண்பாவும் இருசீர்ச்சின்னமும் பெற்றுக் கலிவெண்பாவுறுப்பில் வேறுபட்டு வந்த (க)கொச்சகக்கலி. (உ)

(௧0௫.) மெல்லிணர்க் கொன்றையு மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங்
குல்லையுங் குருந்துங் கோடலும் பாங்கருங்
கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்
பல்லான் பொதுவர் கதழ்விடை கோட்காண்மார்
முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லர் பெருமழைக் கண்ணர் மடஞ்சேர்ந்த
சொல்லர் சுடருங் கனங்குழைக் காதினர்
நல்லவர் கொண்டார் மிடை;
அவர்மிடைகொள;
மணிவரை மருங்கி னருவி போல
வணிவரம் பறுத்த வெண்காற் காரியு
மீன்பூத் தவிர்வரு மந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையுங்
கொலைவன் சூடிய குழவித் திங்கள்போல்
வளையுபு மலிந்த கோடணி சேயும்
பொருமுரண் முன்பிற் புகலேறு பலபெய்
தரிமாவும் பரிமாவுங் களிறுங் கராமும்
பெருமலை விடரகத் தொருங்குடன் குழீஇப்

க. இச்செய்யுளை அம்போதரங்கவொருபோகென்று கூறி, "கண்ணகன்...... ....ளின்று" இது தரவு. "ஒஒஇவள்...........தகைத்து" இவை கொச்சகம். "தகைவகை ....மேல்" இவை அராகம். "எழுந்தது .... பலர்" இவை சிற்றெண். "அவருள்..........வேறு" இது முடுகியலடிவந்த கொச்சகம். "ஏறெவ்வும்..........சாற்றுவார்"

இவையுங் கொச்சகம். "ஆங்கு" தனிச்சொல். "தண்ணுமை .... துரை" இது சுரிதகம்." என்று பிரித்துக்காட்டி, தாவு, கொச்சகம், அராகம், சிற்றெண், சுரிதகமென்னும் ஐந்துறுப்பும் முறையானே வருதலின்றிச் சில மீள வந்தன என்பர், இளம்பூரணர்; தோல். செய். சூ. கஉ௯. 'எருத்தே கொச்சகம்'.

(பிரதிபேதம்)* அலர்மலி மணிபுரை கிமிர்தோள் பிணைமென அறிசொடி.

ஐந்தாவதுநெய்தல்கஉ. அக௬

புகழ்ச்சியமைந்த * அழகினையுடைய கண்ணினையுடையாய்! சாயலாய்! இனமான மீன்களது மாறுபாடுகெடத் தாக்கிவென்ற சினத்தையுடைய

நாற்றத்தை நீக்கி நன்மணம் வீசுமென்ப. இதன் மடலைப் பண்டைக் காலத்தும் மகளிர் தலையிலணிந்துவந்தனர். ஆடவரும் மாலையாக அணிதலுண்டென்ப. இதனைக் காமவேளின் வாட்படையென்பதும் மரபு. தாழைவேறு கண்டல்வேறு. தாழைக்கும் கண்டலென்று ஒரு பெயருண்டு. இவற்றுட் பலவும் (1) "வீழ்தாழ் தாழை பூழுறு கொழுமுகை, குருகுளரிடத்தின் விரிபுதோடவிழ்ந், கானல்" (2) "அல்கலுங், தயங்குதிரைபொரும் தாழை வெண்பூக், குருகென மலரும் பெருந்துறை" (3;"முழங்குதிரை கொழீஇய மூரி யெக்கர்த், தடந்தாட் டாழை முள்ளுடை நெடுந்தோட், டகமடற் பொதுளிய முகைமுதிர் வான்பூங், கோடுவார்ந் தன்ன வெண்பூ" (4) "உப்வுத் திரை பொருத பிணர்படு தடவுமுத, லரவுவாள் வாய முள் ளிலைத் தாழை" (5) "எக்கர்த் தாழை மடல்வயி னானும்" (6) "முடவுடற் கைதை மடன்முறித் திட்டும்" (7) "திரைமுதி ரரைய தடந் தாட் டாழைச, சுறவுமருப் பன்ன முட்டோ டொசிய, விறவா ரினக்குரு கிறைகொள விருக்கும்" (8) "நீடிலைத் தாழை" (9) "முடம்படு முள்ளிலை முடங்கன் மூரிசால், கடம்படு கரிமருப் பீன்று"

(10) "முடமுட்டாழை" (11) "கொடுமுண் மடற்றாழைக் கூன்புற வான்பூ, விடையு ளிழுதொப்பத் , தோன்றிப் - புடையெல்லாந், தெய்வங் கமழும்" (12) "பல்பூங்கானன் முள்ளிலைத் தாழை, சோறு சொரி குடவயிற் கூம்புமுகை யவிழ" (13) "அள்ளிலைத், தடவுநிலைத் தாழை" (14) "கழுதருவின கஞலிலையன கழிமடலின கைதை" (15) "இறவுப்புறத்தன்ன பிணர்படுதடவுமுதற், சுறவுக்கோட்டன்ன முள்ளிலைத் தாழை, பெருங்களிற்று மருப்பி னன்ன வரும்புமுதிர்பு, நன்மானுழையின் வேறுபடத்தோன்றி" (16) "வாள்போல் வாய கொழுமடற் றாழை" (17) "அரவெயிற் றணிமுட் கைதை" (18) "மோட்டுமணலடைகரைப், பேஎய்த் தலைய பிணரரைத் தாழை, யெயிறுடை நெடுந்தோடுகாப்பப் பலவுடன், வயிறுடைப்போது வாலி தின் விரீஇப், புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பின்" (19) "தாழை மூகிழ்வேழமிரு தந்தமென வுந்துக்கு சண்பை"(20)"யானைக் கூர்நுதி மருப்பிற் றோன்றி, வண்டொடு சுரும்பர் மூச மன்றலம் பொதிவாய் விண்டு, கண்ட ஞண்மடற்றேன் சிந்துங் கண்டகி" (21) "மோடுடை நெட்டிலை முடவெண் டாழையந், தோடுடை நறுமலர் தோன்றல் கொய்வது, பாடுடை நெடுமடற் பனைக்கை வேழவெண், கோடடி படுத்திய கோலம் போன்மபோ" (22) "பீடுடைத் தவர்படர் புடைப்ப வானையின், கோடுடைத் துதிர்ந்தன கொடுமுட்கேதகைத், தோடுடைத்

(பிரதிபேதம்) * அழலினையுடைய கண்ணெனக. சாயலினமாக மீன்களது,

மீனுகிய எறியுஞ்(க)சுறவினது மருப்பாற் செய்த பலகையைக் கோத்துப் புற விதழொடித்த நெய்தற் பூவை நெடியநாரிலே தொடுத்து அழகுபெறக் கட்டிக் கையாலே வாசித்தலையுடைய யாழினது ஓசையைத் *தம்மிடத்தேகொண்ட இனமான †வண்டுகள் ‡ஆளா[ப்]பஞ்செய்து பாடத்தாழாமல் தேன்றுளிக்கும்

தொருவழித் தொகுத லொத்தவே" (23) "முட்டாழைக ளானே, வெள்ளைக் கொம்பினும் விரிபொழில்" (24) "மாமன்றற் கைதையங் கன்னிதன் மொக்குள் வனமுலைமேல்"(25)"அலைநீர்த்தாழை யன்னம் பூப்பவும்" (26) "தாழை குருகீனுந் தண்ணந் துறைவனே" (27) "தோடவிழ் தாழை துறைகமழக் கோடுடையும்" (28) "பழந்தூங்கு முடத்தாழை" (29) "சோறுவாய் திறந்த செம்பொற் றெருகுமடற் கைதை" (30) "முருகுவாய் முட்டாழை நீண்முகைபார்ப் பென்றே, குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா - தருகிமிக, வின்னு வெயில்சிற கான்மறைக்குஞ் சேர்ப்ப" (31) "நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச்சென்று, கைதை யடல்புல்கு தென்கழிப் பாலை" (32) "எழை வெண்குரு கயலே யிளம்பெடை தனதெனக் கருதித், தாழை வெண்மடற் புல்குந் தண்மறைக் காடு" (33) "பிணர்முடத் தாழை விரிமலர் குருகென, நெடுங்கழிக் குறுங்கயல் நெய்தலுண் மறைந்தும்" (34) "புனற்கயல் கொக்கென்றஞ்சக், கண்டலங்கார மலரரங் கேசர்க்கு" (35) "மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று, தடமண்டு துறைக்கெண்டை, தாமரையின் பூமறைய" (36) "கருங்காற் குருகின்கோளுய்ந்து போகிய, முடங்குபுற விறவின் மோவா யேற்றை, வெறிதிரை தொகுத்த வெக்கர் நெடுங்கோட்டுத், துறுகடற் றலைய தோடுபொதி தாழை, வண்டுபடு வான்போது வெரூஉந், துறை" (37) "வேலை மடற்றாழை யுட்பொதிந்த வெண் டோட்டு, மாலைத் துயின்ற மணிவண்டு - காலைக், களிநறவந் தாதூதத் தோன்றிற்றே" (38) "தடித்தெழுந்தொறுந் தாழை பூப்பன" (39) "மீரனுக்கு வாளாமோ லைப்பூவு மால்" (40) "காற் றடித்தது தாழை பூத்தது" (41) "கைதை, சுரும்புந் தும்பி களுமருந்த மாறு தென்றஞ் சோறிடுமால்" (42) "கண்ட லவிர்பூங் கதுப்பினுய்" (43) "இடைநிலத் தியாத்த, முதிர்பூந் தாழை முடங்கல்வெண் டோட்டு" (44) "சங்குடைத் தனைய தாழைத் தடமலர்த் தொடைய லானே" (45) "அடும்பி னயலது நெய்ம்பூத் தாழை, தாழை யயலது வீழ்குலைக் கண்டல்" (46) "கண்டலங் கைதையொடு விண்ட

முண்டகம்" என் று வருவனவற்றால் அறியலாகும்.

க. சுறுவினது மருப்பு, சுறுவகையுள் ஒன்றாகிய வேளாவினது கொம் பென்பர். இம்மருப்பில் இரு விளிம்பிலும் வேல்போலக் கூரிய முனைகள் உண்டு.

(பிரதிபேதம்) *தன்னிடத்தே. † வண்டு களாரப்பஞ்செய்து, ‡ ஆர்ப்பரவஞ்செய்து.

ஐந்தாவது நெய்தல் கசு.

அகரு

வளைவையுடைத்தாகிய மலரையுடைய தாழையினது விழுதாற் றிரித்து இட்ட ஊசலை நீ போந்து ஆடப்பெறின், நீரையுடைய பெரிதாகிய (க) கடலாகிய தெய்வத்தை நோக்கி நின்னிற் பிரியேன் என்று தெளிவித்து, உன்னுடைய திருந்தின இழையையுடைய மென்றோளைக் கூடினவன் அருமைசெய் தயர்த்ததால் நினக்குண்டாகிய அரிய வருத்தத்தை யான் அவனை எதிர்ப்பட்டு மிகவும் தீர்க்குவேன்போலே இராநின்ற *தென்றாள். எ - று.

சாயல், ஈண்டுத் தலைவிக்கோர் பெயர்த்தன்மையாய் நின்றது. பெறின், தீர்க்குவேன்போலுமென்க.

போலும் என்னும் †முற்றுச்சொல் ஈற்றுமிசை உகரம் மெய்யொழித்துக் கெட்டுநின்றது. நோத்து யாத்து என்னுஞ் செய்தெனெச்சம் இட்டஎன்னும பெயரெச்சத்தோடு முடிந்தது.

"தாயத்தினடையா" என்னும் (உ) பொருளியற் சூத்திரத்தால் என் றோ‡ளென்றாள். இது மேல் வருவனவற்றிற்குங் கொள்க.

கஉ (ங)மாழை, மடமான் பிணையியல் வென்றாய்நின் னாசல்
கடைஇயா ளிருப்பநீ நீங்காய் தடமென்றோ
ளீத்தான் றிறங்கள் || பகர்ந்து

எ - து: அதுகேட்டு ஊசலிடத்தேசென்ற தலைவியைநோக்கி,¹ இளமையையுடைய மடமான் ÷பிணையினது நோக்கினியல்பை வென்றவளே! நின் தடமென்றோளைக் கைவிட்டவனுடைய கொடுமையினது கூறுகளைச் சொல்லிப் பாடி நீ எறின ‡ஊசலை யான் உயரச்செலுத்தித் தாழ்த்தாட்ட நெடும்பொழுது ஆடாயென்றாள். எ - று.

க. (அ) "பிரிவில்லாய் போலநீ தெய்வத்திற் றெளித்தக்கால்" கலி. கஉச: கஅ; (ஆ) "தோள்புதி துண்ட ஞான்றைச், சூளும் பொய்யோ கடலறி கரியே" அகம். ௩உ0: க௩ - கச.

உ. தொல். பொருளி. சூ. உஎ.

௩. (அ) "மாழை மானோக்கியு மாற்றாள்" திணைமொழி. எ. (ஆ) "மாழை மானோக்கின் மடமொழி" கைந்நிலை. நெய்தல். கக. (இ) "மாழை மான் மடநோக்கியுன் றோழி" நாலா. பெரியதிரு. ௯: அ. க. என்பவை ஒப்புநோக்கற்பாலன. (ஈ) "மாழைமென்னோக்கி" நைடத. சுயம். கடுகூ. (உ) "மாழை யுண்கண்" (ஊ) "மாழை யொண்கண்" என மாழை கண்ணுக்கும் அடைமொழியாய் வருகிறது. பெருங். (க) ச0: ௩0க; ருசு: கககூ.

(பிரதிபேதம்) * என்றான். பெறிற்றீர்க்கு. † பெயரெச்ச மீற்றுயிர்மெய்யுகரம் மெய்யொடுங் கெட்டுநின்றது. ‡ என்றன்மாழை. ‖ படர்ந்து, ÷ பிணையது.

அகூ கலித்தொகை க௩க

(க) நீள், காலத்தின் நீட்சியை உணர்த்திநின்றது.

கநி நாணினகொ றோழீ நாணினகொ றோழீ

யிரவெலா நற்றேழி காணின வென்பவை
வா(உ)ணிலா வேய்க்கும் வயங்கொளி யெக்கர்மே
லானுப் பரிய(ங)வவை னளைபுகூஉங்
கானற் கமழ்(ச)ஞாழல் வீயேய்ப்பத் தோழியென்
மேனி சிதைத்தான் றுறை

எ - து: தலைவி அங்ஙனம் பாடாமையிற் றோழி * தான், தோழீ! கான லிடத்துக் கமழ்கின்ற ஞாழற்பூவின் நிறத்தையொப்ப நின்மேனி பசப்பித்தவ னுடைய துறையிடத்து ஒளியையுடைய நிலாவையொக்கும் விளங்குகின்ற ஒளியினையுடைய இடுமணலின்மேலே ஓடும் அமையாத செலவுகளையுடைய ஞெண்டுகளென்று சொல்லப்படுமவை, இப்பொழுது நம்மைக்கண்டு † தம்

க. நீடேங்காய் என்பதை, நீடு ஊங்காய் எனப் பிரித்தலுமாம்; நீடு, நெடுங் காலமென்னும் பொருளிலும் ஊங்குதல், ஆடுதலென்னும் பொருளி லும் வருதலை, "நீநீடு வாழிய" "ஊக்க லூங்காள்" என்பவையும் வலி யுறுத்தும்.

உ. (அ) "நிலவெக்கர்" பொருந. உகங. (ஆ) "நிலாவி னிலங்கு மணன் மலிமறுகின்" அகம்-உ00: க.(இ)"நிலவுமணல் வியன்கானல்" புறம். கள: கக. (ஈ) "நிலவோ ரன்ன வெண்மணற் பாக்கத்து" தமிழ்நெறி. மேற். (உ) "அறல்விளங்கு நிலாமணல்" மணி. அ: கக. (ஊ) "செழு நிலவின் றகளனைய மணற்பரப்புந் திருப்பரப்பு" பெரிய. கலிய. ச.

ங. (அ)"அடும்பிவரெக்க ரலவன் வழங்குங், கொடுங்கழிச்சேர்ப்ப னருளா னெனத்தெளிந்து, கள்ள மனத்தா னயனெறிச் செல்லுங்கொ, னல்வினை சோர நடந்து" ஐந் - எழு. சுஉ. (ஆ) "அழிவா யாங் கலவ வோடி, யொளிக்கின்ற தென்னே" நள. கலிநீங்கு. கக.

௪. ஞாழற்பூ இங்கே பசப்புக்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. (அ) "சிறுவீ ஞாழற் றேன்றோ யொள்ளிணர், சேரிலை மகளிர் வார் மண லிழைத்த, வண்டற் பாவை வனமுலை முற்றத், தொண்பொறிச் சுணங்கி னிழைபடத் தாஅம், கண்டல் வேலி" நற். ௧௯௧: ௧ - ௫. (ஆ)"எக்கர் ஞாழற் பூவி னன்ன, சுணங்குவளரிளமுலை மடந்தைக்கு" ஐங். ௧௪௯: என்புழி சுணங்குக்கும் உவமையாகக் கூறப்பட்டிருக் கிறது.(இ) இதனைப் பற்றிய மற்றச் செய்திகளை இந் நூற்பக்கம் ௭அ௭: ௬ - ஆம் குறிப்பால் அறிக.

(பிரதிபேதம்) * தானே. † தன்னை.

ஐந்தாவது நெய்தல் ௧௪. அ௧௭

அலையிலேயுகாநின்றன; அங்ஙனம் புகுகையினாலே(க) அத்துறைவன்நம்பாற் செய்தகொடுமையை நினைத்துத் தோழீ! நம்முன் தாம்நிற்றற்கு நாணினவோ? தோழீ ! நம்முன் தாம் நிற்றற்கு நாணினவோ ? எங்ஙனம் நாணினவாயின், தோழீ !. இராக்காலமெல்லாம் நாணிக்கிடந்தனவாய் இருக்குமென இயற் பழித்தாள். ௭ - று.

துறையிடத்து அலவனென்பவை என்க. என்பவை, தொழிற்பெயர்.

௨௧ (௨)மாரிவீ ழிருங்கூந்தன் (௩)மதைஇயநோக் கெழிலுண்கட்
டாழ்நீர முத்தின் றகையெய்க்கு முறுவலாய்
தேயாநோய் (௪)செய்தான் றிறங்கிளந்து நாம்பாடுஞ்
சேயுய ருசற்சீர் நீயொன்று (௫)பாடித்தை

எ - து: அது கேட்ட தலைவி பாடாமையிற் பின்னும் தோழி, மழை விரும்புகின்ற பெரிய கூந்தலையும் மதர்த்த நோக்கினது அழகையுடைய *கண்ணினையும் தாழ்ந்த கடலிற் பிறந்த முத்தினது அழகை ஒக்கும் முறுவலினையுமுடையாய்! மாயாத நோயைச் செய்தவனுடைய கொடுமையின் கூற்றினைச் சொல்லி நாம் பாடும் மிக உயர்ந்த ஊசற்பாட்டை நீ ஒன்றுபாடுவாயென்றாள். எ - று.

(சூ)சீர் என்றது, தாள அறுதியையுடைய ஊசற்பாட்டை.

க. "வாணிலாநகை மாதரார்செயல் கண்டுமைந்தர்மு னிற்பவு, நாணிலுளென வேகிஞெண்ணிர் கங்குலாகிய நங்கையே" கம்ப. கைகே. சக.

உ. "மாரிவீ ழிருங்கூந்தல்" (கலி. கச: ச) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. (அ) "பேரமர் மழைக்*கட் கொடிச்சி, (* கண் மடந்தை, என்றும் பிரதிபேதம்)மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே" குறுந். உஅக.
(ஆ) "மாதர் வாண்முக மதைஇய நோக்கே" அகம். கஙO: கச.
(இ) "மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு" சிலப். அ: எக.

ச. "கோதையுங் குழையின் பட்டின் கொய்சகத் தலையுந் தாழ, மாதர் வண் டொருங்கு பேர மழைபிடை நுடங்கு மின்போற், போதலர் பொதும்பிற் றூழ்த்த பொன்னெழி லூச றன்மேல், லோதநீர் வண்ணத்

பாடி யூழினூ ழியங்கு வாரும்" சூளா. சுயம்வர. அக.

ரு. "பாடித்தை" (கலி. சO: கO) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

சு. 'சீரென்பதற்கு, 'தாள முடிந்துவிடுங்காலத்தினைத் தன்னிடத்தே கொண்ட சீர்' என (கலி. க: எ) இவ்வுரையாசிரியர் விளக்கியிருப்பதும் இந்நூற்பக்கம் கO: க - ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * கண்ணினையுமுடைய தாழ்ந்த.

உரு. பார்த்துற் றனதோழி பார்த்துற் றீனதோழி
யிரவெலா நற்றோழி பார்த்துற்றன வென்பவை
தன் றுணை யில்லாள் வருந்திஞள் கொல்லென
வின் றுணை யன்றி விரவி னகவாவே
யன்றாதா (க)ளீர்த்த †கரும்பணி வாடவென்
(உ)மென்றோண் ஞெகிழ்த்தான் றுறை

எ - து: அது கேட்ட தலைவி பின்னும் பாடாமையின் தோழி, நம்மேல் அன்புற்றுப் புணர்ந்த அன்று தா(ங)னெழுதிய கரும்பினது அழகு கெடும்படி மென்றோளை மெலிவித்தவனுடைய துறையிடத்து (ஈ)இனிய துணையோடு கூடிய அன்றிலென்று சொல்லப்படுமவை, தன் துணையானவனை நீங்கினவள் வருந்திஞளோ என்று கருதி இராக்காலத்தும் அழைத்தனவில்லை; ஆகையி ஞலே தோழீ! அவை நம்வருத்தத்தைப் பார்த்துத் தாமும்வருத்தமுற்றன போலே இருந்தன ; ஆதலால் நற்றோழீ! இரவெல்லாம் நம்வருத்தத்தைப் பார்த்துத் தாம்வருத்தமுற்றன என்றாள். எ - று.

(ரு)‡பாத்துற்றன பாடமாயின், பிரிவுற்றனவென்க.

கூக கரைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினந்
திரையுறப் பொன்றிய புலவுமீ னல்லதை
யிரையுயிர் செகுத்துண்ணுத் துறைவனை யாம்பாடு
மசைவர லூசற்சீ ரழித்தொன்று பாடித்தை

எ - து: அது கேட்ட தலைவி, கரையையிடித்துத் தனக்காக்கிக்கொள்ளுகின்ற கொடுங்கழியிடத்து நோக்கினர்கண்ணை 'வாங்கிக்கொள்ளும் அழகையுடைய பறவைத்திரள் இரைமோதுகையினாலே இறந்த || புலானாற்றத்தை

௧. "மென்றோட், பெய்கரும் பீர்க்கவும் வல்லன்" கலி. ௧௪௩: ௩௧ - ௩௨.
௨. "மென்றோ ணெகிழ்த்தானை" கலி. ௧௪௩: ௧௫.
௩. இந்நூற்பக்கம் ௩௮௨: ௫ - ஆம் குறிப்புப் பார்க்க.
௪. "அன்றிலம் பெடைகளையனுகி யன்னகே, ணன்றெனா வினையின்மே னடந்த நாயக, நின்றவர் நிலைவரின் கெம்பொருட்டினு, லொன்றநீ யிரங்கலென் றுரைக்கின் றார்சிலர்" (கந்த. திருநாட்டு. ௫௧.) என்பதும் இந்நூற்பக்கம் ௮௦௧: ௩-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.
௫. பாதீடென்பதற்கு, 'பகுத்துக்கொடுத்தல்' என்று பொருள் கூறுமிடத்து, 'ஈத்தலும் ஈதலும்போலப் பாத்தலும் பாதலுமொன்றாதலிற் பாதீடாயிற்று' என்று (தொல். புறத். சூ. ௩.) இவ்வுரையாசிரியர் எழுதியிருப்பதை நோக்குக.

(பிரதிபேதம்) * இரவெல்லாம், † கரும்பினணி, ‡ பாத்தன பாடமாயின், || புலானாற்றத்தை.

யுடைய மீனை இரையாகத் *தின்னுமதல்லது தாம் ஒன்றன் உயிரைப்போக்கி இரையாக அதனை உண்ணாத அருட்டுறைவனை நாம்பாடும் அசைந்துவருதலையுடைய ஊசற்பாட்டை, நீ இயற்பழித்ததனை அழித்து இயற்பட ஒன்று பாடுவாய் என்றாள். எ - று.

௯௫ அருளினவோ தோழி யருளினவோ தோழி
யிரவெலாந் தோழி யருளின வென்பவை
(௧)கணங்கொ ளிடுமணற் (௨)காவி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் †தளிக்கு
(௩)மணங்கம ழைம்பாலா ரூடலை யாங்கே
வணங்கி யுணர்ப்பான் ‡றுறை

எ - து: அது கேட்ட தோழி* அங்ஙனம் பாடாமையின் தலைவி, மணம் நாறுகின்ற கூந்தலையுடையாரிடத்து உண்டாகிய ஊடலை அதுகண்ட பொழுதே விளந்து தீர்க்குமவன் துறையிடத்து, கூட்டிக்கொண்ட (௪)இடு மணலாலே காவியென்று சொல்லப்படுமவை வருந்த, அவற்றைத் தம்மிற் பிணங்கி||வருகின்ற கருமை தங்கிய பெருமையையுடையனவாகிய திரைகள் வந்து அம்மணலைக் கரைத்து அருள்பண்ணுகிற்கும்; ஆகையினாலே அத்திரைகள் தோழீ! அருளினவோ? தோழீ! அருளினவோ? தோழீ! ×எங்ஙனம் அருளினவாயின், தோழீ! இரவெல்லாம் அருளினவாயிருக்குமென இயற்படமொழிந்தாள். எ - று.

+களவுகாலத்துத் தலைவி "தன்வயி னுரிமையு மவன்வயிற் பரத்தையும்" (௫) கூறுதற்கு உரியளென்றலின், அவன்வயிற்**பரத்தைமை கூறிய காலத்து அதனை வணங்கித் தீர்த்தமை கருதி ஊடலை வணங்கி உணர்ப்பானென்றாள்.

காற்றுத் தூற்றிய மணலிடத்து அரல்††வருத்தினகாவியைத் திரைவந்து அளித்தாற்போல அலர் தூற்றுதலால் வருந்திய வருத்தத்தை நீக்கி நம்மை அளித்து ‡‡வரைவனென உள்ளுறையுவமங்கொள்க.

௧. "கணங்கொள்......றுறை" என்பது, ஏமஞ்சான்ற உவகைக்கண் தலைவி தான் ஊடியவாறும் மகிழ்ந்தவாறுங் காட்டி அவன்வயிற் பரத்தைமை கூறியதற்கு மேற்கோளாக உள்ளது. தொல். கள. சூ. ௨௧. இளம்.

௨. "உரவுக்கதிர் தெறுமென வோங்குதிரை விரைபுதன், கரையம லடும்பளித் தாஅங்கு" கலி. ௧௨௭: ௨௦ - ௨௧.

௫. “மணநாறு கதுப்பினாய்” கலி. ௪௫: ௨௫.

௬. “இடுமணல் நெடுங்கோட்டைப், பயிலிறை நடுநன்றாட் பாய்ந்துழாஅந் துறைவ” கலி. ௧௩௫: ௪ - ௫.

௭. தொல். கள. சூ. ௨௦.

(பிரதிபேதம்) * நின்னுமல்லது. | அழிக்கும், ¦ வலை, || வருத்தற்கரியனவாகிய பெருமை. × அங்ஙனம், + களவுக்கால, ** பரத்தமை, †† வருந்தின ‡| வரையவென்ன.

௪௧ (௧)எனநாம்

பாட (௨)மறைநின்று கேட்டனை நீடிய
*வாணீர்க் கிடக்கை (௩)வயங்கு†நீர்ச் சேர்ப்பனை
யானென வுணர்ந்து நீநனி மருளத்
தேனிமிர் புன்னை பொருந்தித்
தானூக் கினனவ் வூசலை வந்தே

எ - து: ‡ என்று அங்ஙனம் இயற்பழித்தும் இயற்படமொழிந்தும் யானும் நீயும் பாட, சேர்ப்பன், புறட்டை மறையநின்று || கேட்டனாய் நீடிய(௪)வெண்மையையுடைத்தாகிய நீர்க்கிடக்கை விளங்குகின்ற நீர்மையை யுடைய சேர்ப்பனை யான் ஊசல் ஊக்கென்றேனென்றும் உணர்ந்து, பின்பு யானென நம்மில் நீ மிகவும் மருளும்படி அவன் தேனினம் ஒலிக்கும் புன்னையைப்பொருந்திநின்று, பின்பு வந்து அவ்வூசலைத் தான் ஊக்கினான்; [அற வருத்தம் அறிந்து வியவாநின்று] (அன்று வருத்தமறிந்துதவியவன் இன்றும்) நம்வருத்தம் அறிந்து வரைந்து கொள்வனென × ஆற்றுவித்தாள். எ - று.

கிடக்கை, கடல்; நீர், கழி(யெனினுமாம்.)

இதனால், தலைவற்கு ஆராய்ச்சி பிறந்தது.

இனி“உணர்ப்புவயின்வாரா ஊடற்கண்” தோழி களவுகாலத்து நிகழ்

தமை கூறித் தலைவியை ஊடறீர்த்ததென்று கிளவி கூறி அதற்கேற்ப உரைப்பாருமுளர்.

இஃது ஐஞ்சீரடி வந்த நெடுவெண்பாட்டாகிய தரவும் ஐஞ்சீரடுக்கிய †குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் கொச்சகமும் தனிச்சொல்லும் சுரிதகமும் வெண்பாவும் கொச்சகமும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் சுரிதகமும் வந்த கொச்சகம். (கச)

க. "என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்" கலி. சஉ: உஅ.

உ. (அ) "மறைநின்று கேட்டருளி" (ஆ) "மறைநின்று கேட்டனன்" கலி. சக: சக, சஉ: உஅ.

ங. "வயங்குநீர்த் தண்சேர்ப்ப" கலி. கஉச: ச, கஉஎ: ௯.

ச. வெண்மையை யுடைத்தாகிய சேர்ப்பென்க; சேர்ப்பு - கடற்கரை; "பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே" (புறம். சக: அ) என வருதல் காண்க.

(பிரதிபேதம்) * வாசீரிடைக்கை, † நீர்சேர்ப்பின, ‡ அன்று அம்னம். || கேட்டனருய்ச் சேர்ப்பின. × ஆற்றவித்தாள், நீடிய............சேர்ப்பின இடைக்கை, ✝ குறுவெண்பாட்டின் கொச்சகமும்.

ஐந்தாவது நெய்தல் கலி. அஉக

(கருஉ.) உரவுநீர்த் திரைபொர வோங்கிய வெக்கர்மேல்
விரவுப்பல் லுருவின வீழ்பெடை துணையாக
விரைதேர்ந்துண் டசாவிடூஉம் புள்ளின மிறைகொள
முரைசுமூன் றாள்பவர் முரணியோர் முரண்டப

நிரைகளி திடைபட நெறியாத்த விருக்கைபோற்
சிதைவின்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி வினைவாய்த்துத்
துறையகலம் வாய்சூழுந் துணிகடற் றண்சேர்ப்ப;
அ புன்னைய நறும்பொழிற் புணர்ந்தனை யிருந்தக்கா
னன்னுதா லஞ்சலோம் பென்றதன் பயனன்றோ
பாயின பசலையாற் பகற்கொண்ட சுடர்போன்றா
மாயின தளிர்போலு மாணல மிழந்ததை;
கஉ பன்மலர் நறும்பொழிற் பழியின்றிப் புணர்ந்தக்காற்
சின்மொழி தெளியெனத் தேற்றியசிறப்பன்றோ
வாடுபு வனப்போடி வயக்குறா மணிபோன்று
ணீடிறை நெடுமென்றோ ணிரைவளை நெகிழ்ந்ததை;
கங அடும்பிவ ரணியெக்க ராடினீ தணந்தக்காற்
கொடுங்குழாய் தெளியெனக் கொண்டதன் கொளையன்றோ
பொறையாற்றா நுசுப்பினாற் பூவீந்த கொடிபோன்றா
மறைபிற ரறியாமை மாணுநோ யுழப்பதை;

எனவாங்கு;

உக வழிபட்ட தெய்வந்தான் வலியெனச் சார்ந்தார்கட்
கழியுநோய் கைம்மிக வணங்காகி யதுபோலப்
பழிபரந் தலர்தூற்ற வென்றோழி
யழிபட ரலைப்ப வகறலோ கொடிதே.

இது வரைவு நீட்டித்துழிப் பகற்குறிவந்து நீங்குந் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி, அவனை நாணு நெஞ்சலைப்ப வரைவுகடாயது.

இதன் பொருள்.

(க)உரவுநீர்த் திரைபொர வோங்கிய வெக்கர்மேல்
விரவுப்பல் லுருவின வீழ்பெடை துணையாக

க. உரவுநீர். இந்நூற்பக்கம் எகக: ச-ஆம் குறிப்புப்பார்க்க.

விரைதேர்ந்துண் டசாவிடூஉம் புள்ளின மிறைகொள
*முரைசுமூன் றாள்பவர் முரணியோர் முரண்டப
நிரை(க)களி றிடைபட †நெறியாத்த விருக்கைபோற்
(உ)சிதைவின்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி வினைவாய்த்துத்
துறையகலம் வாய்சூழுந் (ங) துணிகடற் றஞ்சேர்ப்ப

‡ எ - து:(ச)முரைசு மூன்றை ஆள்கின்ற பாண்டியர் தம்மொடு மாறு பட்டோருடைய மாறுபாடு கெடும்படி நிரைத்த களிறுகள் எனைப்படைக்கு நடுவே நிற்கும்படி நெறியுண்டாகக் கம்பத்தோடே || கட்டின இருக்கை

க. (அ) "களிறும் கந்தும் போல நளிகடற், கூம்புங் கலனுந் தோன்றும்" யா - வி. ஒழி. சூ. உ. 'குன்றவெண்' மேற். (ஆ) "பண்ணார் களிறே போற் பாயோங் குயர்நாவாய்" சீவக. உஎகங. எனவும் (இ) "அம்பி காழோர், சிறையருங் களிற்றிற் பரதவ ரொய்யும்" நற். எச: ங - ச. எனவும் (ஈ) "நாவாய் போல..........உழிதருங் கடாஅ யானையும்" மது. நஎக - நஅங. (உ) "கொல்களிறு மிடைந்து..........வங்கந் திசைதிரிந் தாங்கு" பதிற். ருஉ: க - ச. (ஊ) "களிறே, முந்நீர்வழங்கு நாவாய் போலவும்" (எ) "கலம்போலக், களிறுசென்று" புறம். கங: நி, உக: உ - ங. (ஏ) "மயங்குகா லெடுத்த வங்கம் போல.......... கால வேகங் களிமயக் குற்றென" மணி. ச: ஙச - சச. (ஐ) "பொரு மால்களிறு போன்றோர். வங்கமொடு போகி.......... ...டுகளி றொப்ப

வினி தோடியதை" (ஓ) "மொய்களி, றடைதிரை மரக்கலம்" (ஔ) "மாக்கடற் பெருங்கலங் காவின் மாறுபட், டாக்கிய கயிறரிந் தோடி யெங்கணும், போக்கறப் பொருவன போன்று நீப்படத், தாக்கின வரசுவரத் தம்மு ளென்பவே" சீவக. ௪௯௩ - ௫௦௧, ௨௨௨௩, ௨௨௩௧. எனவும் வருபவை இங்கே ஒப்புநோக்கற்பாலன.

௨. (அ) "அஃதென்ப, பட்டினம் பெற்ற கலம்" நாலடி. ௨௫௦. (ஆ) "ஊனமொன்று மின்றியினி தோடுகவி தென்றான்" சீவக. ௫௦௦.

௩. "துணிகடற் சேர்ப்பன்" திணைமொழி. ௪௭.

௪. (அ) "இமிழ்குரன் முரச மூன்றுட னாளுந், தமிழ்கெழு கூடற் றண் கோல் வேந்தே" புறம். ௫௮: ௧௨-௧௩. என்பதூஉம் (ஆ) "அடையலரொடுங்க மோதும் படைமுர சதிரு மோதை, யிடையறு வறுமையோட விடுகொடை முரசி னோதை, கடைபடு வடிவேற் கண்ணார் கடிமண முரசி னோதை, முடியுடை யரசர் வீதி யெங்கணு முழங்கக் கண்டார்" சீற. காம்பொருத்து. ௨௭. என்பதூஉம் நோக்குக.

(பிரதிபேதம்) †முரசமூன்றாள்பவன், ‡ சிரீஇயாத்த, § ௭ - து: முரைச மூன்றுமன........ மூன்றென்றதுமாம். முரைசு மூன்றை. || கட்டின பாசறைபோலே என்ற... ......கொடுத்து நின்றது. இருக்கைபோலே

௨௰ பனிமழை யாடும் வரையகம் போலுங்
கொடிநறை சூழ்ந்த தொழூஉ ;
௨௨ தொழூவினுள், புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின வேறு ;
௨௪ ஏற்றின், அரிபரி பறுப்பன சுற்றி
யெரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்க

ணுருவ மாலை போலக்
குருதிக் கோட்டொடு குடர் வலந்தன ;

௨௮ கோட்டொடு சுற்றிக் குடர்வலந்த வேற்றின்முன்
ணாடிநின் றக்குடர் வாங்குவான் பீடுகாண்
செந்நூற் கழியொருவன் கைப்பற்ற வந்நூலை
முந்நூலாக் கொள்வானும் போன்ம் ;

௩௨ இகுளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
கோட்டினத் தாயர் மகனன்றே மீட்டொரான்
போர்புகலேற்றுப் பிணரெருத்திற் றத்துபு
தார்போற் றழீஇ யவன் ;

௩௬ இகுளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
கோவினத் தாயர் மகனன்றே யோவான்
மறையேற்றின் மேலிருந் தாடித் துறையம்பி
யூர்வான்போற் றோன்று மவன் ;

௪0 தொழீஇஇ, காற்றுப்போல் வந்த கதழ்விடைக்காரியை
யூற்றுக் களத்தே யடங்கக்கொண் டட்டதன்
மேற்றோன்றி நின்ற பொதுவன் றகைகண்டை
யேற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டுச்
சீற்றமோ டாருயிர் கொண்டஞான் றின்னன்கொல்
கூற்றெண வுட்கிற்றென் னெஞ்சு ;

௪௬ இகுளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
புல்லினத் தாயர் மகனன்றே புள்ளி

வெறுத்த வயவெள்ளேற் றம்புடைத் திங்கண்
மறுப்போற் பொருந்தி யவன் ;

ஐந்தாவது நெய்தல் கரு.

போலே விரவுதலையுடைய பலவடிவினையுடையவாய் இரையைத் தேடித் தின்று இளைப்பாறும்புள்ளினங்கள், தாம் விரும்பினபெடைகள் தமக்குத் துணையாக வலியினையுடைய * கடலினது திரை வந்துபொரும்படி உயர்ந்த இடுமணலின்மேலே தங்குதல்கொள்ள, தாம்சென்ற இடத்துத் தமக்கொரு கேடின்றித் தாம்போன காரியம் வாய்த்துவந்து தலைமைபெற்றுத் துறை பிடித்தனவாகிய மரக்கலங்கள் இடத்தைச் சூழ்ந்து நிற்கும் தெளிந்த கடலையுடைய † சேர்ப்பனே! எ - று.

முரசு மூன்றாவன :—வீரமுரசு தியாகமுரசு நியாயமுரசென்பன; தன்முரசும் சேரன்முரசும் சோழன்முரசுமென மூன்று என்றலுமாம்.

பாசறைபோலே என்ற வினையுவமம் மேல் வருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. பறவைகள் வினைப்படைக்கும் மரக்கலங்கள் இடைநின்ற யானைக்கும் உவமை.

கரைக்குச் சிறந்தனவாகிய, இரைகவர்ந்து துணைபுணர்ந்த பறவைகளும் வினைவாய்த்து நின்றமரக்கலங்களும் ‡பகைவர்க்கு வருத்தஞ் செய்யும்பாசறை போலத் தோன்றும் என்றதனால், இல்லறம் நிகழ்த்தித் துணையொடு புணர்ந்தவர்களும் வினைவாய்த்துச் செல்வச் செருக்குடையவர்களும் தமக்கு வருத்தத்தைத் தருகின்றாரென உள்ளுறைதந்தவாறு காண்க; அவரைப்போல யாமும் துணைபுணர்ந்து இல்லறநிகழ்த்திச் செல்வம் உண்டாயிருக்கப் பெற்றிலேமென்னும் வருத்தத்தை அவர்கொடுத்தலின்.

அ புன்னைய நறும்பொழிற் புணர்ந்தனை யிருந்தக்கா

னன்னுதா (க)லஞ்சலோம் பென்றதன் பயனன்றோ
பாயின பசலையாற் (உ)பகற்கொண்ட சுடர்போன்றாண்
மாவின தளிர்போலு மாணல மிழந்ததை

எ - து: பாந்த பசலைநிறத்தாலே பகற்பொழுது எடுத்த விளக்குப் போல்*ஒளிகெட்டவள் மாவின் கண்ணவாகிய தளிரை ஒக்கும் மாட்சிமையை யுடைய நலத்தைஇழந்தது, புன்னையையுடையவாகியநறியதாகியபொழிலிலே இவளைப் புணர்ந்திருக்க, நன்னுதால்! நீ யான் பிரிவேனென்று அஞ்சுதலைப் ||பாதுகாத்துக்கொள் என்று தெளிவித்ததனால் உள்ள பயனல்லவோ? எ - று.

கஉ. பன்மலர் நறும்பொழிற் பழியின்றிப் புணர்ந்தக்காற்
(ந)சின்மொழி தெளியெனத் தேற்றிய சிறப்பன்றோ

க. இந்நூற்பக்கம் கஉ0: உ, உசச: ரு - ஆம் குறிப்புக்கள் பார்க்க.

உ. (அ) "பகலெரி சுடரின் மேனி சாயவும்" நற். கஉஅ: க. (ஆ) "வெயி லிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்" கம்ப.காட்சி. ச.

ந. "சின்மொழி" (கலி. உக: கo) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) *கடவிற்றிரை. †சேர்ப்பனேபறவைகளேனே. ‡பகைவர்புக்கு. || நீபாதுகாத்து.

(க)வாடுபு வனப்போடி வயக்குறா மணிபோன்றாய்
ணீடிறை நெடுமென்றோ ணிரைவளை நெகிழ்ந்ததை

எ - து: அழகு வாடிக்கெட்டு நெடுங்காலம் விளக்குறுத்தாத மணியை ஒத்தவளுடைய(உ)திரண்ட நெடியமென்றோளின்நிரைத்த வளைகழன்றது, பல மலர்களையுடைய நறும்பொழிலிலே குற்றமின்றாக அவளைப் புணர்ந்திருக்க, சிலவான மொழியினையுடையாய்! நின்னை யான்பிரியேன் இதனைத்தெளி

வாயாக என்று தெளிவித்ததனால் உள்ள சிறப்பன்றோ ? எ - று.

கசு அடும்பிவ ரணிபெக்க ராடிநீ மணந்தக்காற்
கொடுங்குழாய் தெளியெனக் கொண்டதன் (ந)கோளையன்றோ
பொறையாற்ற நுசுப்பினாற் (ச)பூ (ரு)வீந்த கொடிபோன்றாண்
(சு)மறைபிற றறியாமை (எ)மாண்நோ ஃயுழந்ததை

எ - து: தன் மென்மையால் அணிகளைப் பொறுத்தலாற்றாத இடையாலே அணிகலங்கள் அணியாமற் பூமாறின கொடியையொத்தவள் பிறர் இக்களவொழுக்கத்தையறியாமல் மறைந்து மருந்தால் மாட்சிமைப்படாத காமநோயிலே அழுந்தியது, †அடும்பங்கொடிபரந்த இடுமணலிலே கூடவிளையாடி நீபுணர, கொடுங்குழாய்! நின்னையான்பிரியேன் இதனைத்தெளிவாயாக என்று கூற அதனை மெய்யென்று உட்கொண்டதனுடைய கோட்பாடன்றோ? எ - று.

எனவாங்கு; அசை.

உக வழிபட்ட தெய்வந்தான் வலியெனச் சார்ந்தார்கட்
கழியுநோய் கைம்மிக வணங்காகி யதுபோலப்
பழிபரந் தலர்தூற்ற வென்றோழி
யழிபட ரலைப்ப வகறலோ கொடிதே

க. "வாடுபு வனப்போடி" கலி. கசு: உ என்பதும் அதன்குறிப்பும் பார்க்க.

உ. இறையென்பதற்கு, இப்பொருள் வேறெங்கும் காணப்படவில்லை.

ந. "கோளை" கலி. க: ச.

ச. "பூவீ கொடியிற் புல்லெனப் போகி" அகம். கக: கசு.

ரு. "பீர்வீய" (கலி. நக: ச) என்பதற்கு எழுதியிருக்கும் உரைபார்க்க.

சு. மறையென்பது களவொழுக்கமென்னும் பொருளில்வருதலை, (அ) "மறையிற்றான் மருவுற" (ஆ) "மறையினின் மணந்தாங்கே" (கலி. சஙி: உஉ, ருக: அ) என்பவற்றாலும் அறிக.

எ. "மாணுநோய்" கலி. கஉங: எ.
(பிரதிபேதம்) * உழப்பதை. †அடம்பம்.

எ - து: தனக்கு வலியைத்தரும் என்று கருதித் தான் *வழிபட்டதெய்வம் தன்னைச் சேர்ந்தவர்கட்கு நெஞ்சழியும் நோய் கைமிகும்படி வருத்தமாகிய தன்மைபோல நின்னைத்தனக்கு வலியென்று †வழிபட்டஎன்றோழியை நீ செய்த பழி எங்கும்பரந்து அலர்தூற்றுகையினாலேஉண்டான மிக்க நினைவு வருத்த, நீங்குதல் கொடிதுசாலெனத் தோழி வரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவிக்கு அசைவுபிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (ச௯)

(கஙங.) மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினோன் மாமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்;
ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்

பொறையெனப் படுவது போற்றுரைப் பொறுத்தல்;
ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுதல் நலனுண்டு துறத்தல் கொண்க
நீம்பா லுண்பவர் கொள்கலம் வரைத
னின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ பூண்கனின் றேரே.

இது "வரை‡வுடம் பட்டோர்க் கடாவல்வேண்டினும்"(௧)என்பதனுல் தலைவன் தெருளாதவனைத் தெருட்டி வரைவுகடாயது.

---

௧. தொல். கள. சூ. ௨௩. இச்சூத்திரத்தின் இவருரையிலும் இச்செய்யுள் முற்காலத்து வரைவுகடாவுமாறுபோலன்றி வரைவு கடாயதற்கு மேற்கோள்.

(பிரதிபேதம்) * †வழிப்பட்ட, ‡ உடன்பட்டோர்க் கடாவவேண்.

இதன் பொருள்.

மாமலர் முண்டகந் (௧)தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு *சிறப்பினோன் மர†முதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
‡பூமலர்ந் தவைபோலப்(௨)புள்ளல்குந் துறைவகேள்

எ-து: (௩) ||கருமையையுடைத்தாகிய மலரையுடைய கழிமுள்ளி தில்லை யோடேசேரச்சூழ்ந்தகானலிடத்துத்திரையிட்டமணன்மேலே காற்றுலுயர்ந்த

௧. தில்லை, நெய்தனிலத்துக்கு உரித்தாகக் கூறப்படும் மரவகை. இது (அ) "நீர்நாய் கொழுமீன் மாந்தித், தில்லையம் பொதும்பிற் பள்ளி கொள்ளு,, மெல்லம் புலம்ப" (நற். ௧௯௫: ௨ - ௪.) (ஆ) "தில்லை வேலி யிவ்வூர்" (ஐங்குறு. ௧௩௧) என்பவற்றாலும் அறியப்படும். இதன் றளிர் புற்கென்ற நிறமுடையதென்பதும் பன்முறை அருவி நீராடும் தாபதர்சடையினிறத்திற்கு உவமை கூறப்படுவதென்பதும் (இ) "கறங்கு வெள் ளருவி யேற்றலி னிறம்பெயர்ந்து, தில்லையன்ன புல்லென் சடையோ, டள்ளிலைத் தாளி கொய்யு மோனே" (புறம். ௨௫௨: ௧-௩) என்பதனால் அறியப்படுகின்றன. (ஈ) "தில்லை பாலை" (குறிஞ்சி. ௭௭) என்பதன் உரையில் தில்லை-தில்லைப்பூ என்று எழுதியிருத்தலால் இது பூவுடையதென்றும் தெரிகிறது. (உ) இதன்பால் மிக்க கொடுந்தன்மையுடையதென்பர். (ஊ) சிதம்பரம், இம்மரம் அடர்ந்த காடாயிருந்தது பற்றி, 'தில்லை' என்று பெயர்பெற்றதென்பர்.

௨. "புள்ளிறை கொண்ட முள்ளுடை நெடுந்தோட்டுத், தாழை" அகம். ௧௩௦: ௧௧ - ௧௨.

௩. (அ) "முள்ளிக், கொடுங்கான் மாமலர்" பெரும்பாண். ௨௧௫ - ௨௧௬. (ஆ) "கூர்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்" குறுந். ௫௧. (இ) "கூர்முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற, மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்" அகம். ௨௬: ௧ - ௨. எனவும், (ஈ) "முண்டகங் கதிர்மணி கழாஅலவும்" சிறுபாண். ௧௪௮. (உ) "மணிப்பூ முண்டகத்து" மது. ௯௬. (ஊ) "மணிமருண் மலர முள்ளி" அகம். ௨௩௬: ௧. எனவும் வருவனவற்றால், கழிமுள்ளிப்பூக் கருநிறமுடையதென்பதும் மற்றும் சிலவும் விளங்கும். இப்பூவை நெய்தனிலமகளிர் அணிவதுண்டென்ப; அது (எ) "அணிமலர் முண்டகத் தாய்பூங் கோதை, மணிமரு ளைம்பால் வண்டுபடத் தைஇ" நற். ௨௪௫: ௨ - ௩. (ஏ) "முண்டகக் கோதை நனையத், தெண்டிரைப் பௌவம் பாய்ந்துநின்றோளே" ஐங். ௧௨௧.

(பிரதிபேதம்) * சிறப்பினுள், † முதலசைத்த, முதற்றலைத்த, முதற்றலைசேர்த்த, ‡ பூவலர்ந் தில்லை, || கருமையுடைத்தாகிய.

மணலிலே *உடனின்ற, புகழ்பெறுகின்ற தலைமையினையுடைய (க) தக்கணாமூர்த்திதேவர் தாமிருந்த (உ)ஆலமரத்தே தாமிருப்பதற்குமுன்னே தூக்கிவைத்த நீர்நிறைந்த (ங)குண்டிகை போலப் பழந்தூங்கும் முடத்தையுடைய (ச) †தாழைப்பூ அலர்ந்தவைபோலக் குருகினம் அத்தாழைமேலே தங்குந்துறைவனே! யான் கூறுகின்றதனைக்கேள். எ - று.

முள்ளுடைய முண்டகமும் கொடிய தில்லையுமே சூழ்ந்த கானலைக் கொடிதாக அலர்கூறுகின்ற மகளிர் சூழ்ந்திருக்கின்றதாகவும் உயிர்க்கொலை சூழுங்குருகுகள் நன்றாகிய தாழைமலர்போற் றோன்றுகின்றதனை எம்முயிர்க்கு வருத்தஞ்செய்கின்ற தலைவன் நன்மகனைப்போற் பிறர்க்குத் தோன்றுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க.

௯. ஆற்றுத லென்பதொன் ‡றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
(ரு)பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

(ஐ) "முண்டகக் கோதை யொண்டொடி மகளிர்" புறம். உச: கக. என்பவற்றால் அறியப்படுகிறது. இப்பூவின் காய்பிணடியிற் சிறிது தேனுண்டு. இதன் முதலாகிய செடி கத்தரிவகையுளொன்றாகிய முள்ளியின் வேறென்றறிதற்பொருட்டுப் பெரும்பாலும் கழிமுள்ளியென்றே வழங்கப்படும்; (ஒ) கடன்முள்ளியென்றும் அருகிவழங்கும். இது மற்றை நீர் நிலைகளிலுமிருக்கும்.

க. தக்ஷிணாமூர்த்தியென்பது தக்கணாமூர்த்தியெனச் சிதைந்து நின்றது.

௨. இந்நூற் பக்கம் சகூச: ௨ - ஆம் குறிப்பும் "ஆலமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன்" என, தக்கணாமூர்த்தியென்போன் (சிலப். ௨௩: ௧௧) கூறப்படுதலும் இங்கே அறிதற்பாலன.

௩. தாழம்பழம் பலாப்பழத்தைப்போல முட்புறத்தையுடையது; கலயத்தினளவான பருமனையும் சுடுமட் கலம்போன்ற செந்நிறத்தையுமுடையதாதலால் இதற்கு, கமண்டலம் மெய்யானும் உருவானும் உவமம். இப்பழம், பயன்படாதவையென்று இகழப்படுபவற்றுள் ஒன்று.

௪. இந்நூற் பக்கம் அகக: எ - ஆம் குறிப்புப் பார்க்க.

௫. (அ) "பண்புடைமை:—அஃதாவது பெருமைசான்றாண்மைகளிற் றம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளுமறிந்து ஒத்தொழுகுதல்; 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என்றார் பிறரும்' என

(பிரதிபேதம்) * உடனின்ற முடத்தாழைப்பூ.........கூறுகின்றதனைக் கேள், புகழ மிகுின்ற, † தாழை என்க, முன்னுடைமுண்டக, ‡ அலர்ந்தவர்க்கு.

யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது*மறாஅமை
(௩)நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
(௨)முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
(௫)பொறையெனப் படுவது போற்றாரைப் †பொறுத்தல்

இவ்வடியை மேற்கோள்காட்டுவர் பரி; குறள். ௯௦௦ - ஆம் அதி. அவ. (ஆ) "பாடறிந் தொழுகும் பண்பி னோரே" (புறம். ககஎ: க௪.) என்பது இதனோடு ஒப்புநோக்கற்பாலது.

௧. “நிறையழிதல்:--அஃதாவது தலைமகள், மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்” என்று கூறி, அதற்கு (குறள்.௧௨௬-ம் அதி. அவ)ப்பரிமேலழகரும் “நிறையாம்வரம்பு” என்புழி நிறை என்பதன்பொருளை விளக்குதற்கு, (தஞ்சை.௧௪.உரை) சொக்கப்ப நாவலரும் இவ்வடியை மேற்கோள்காட்டி யிருத்தலும், “நிறையிலன்”(குறள். அ௬௪) என்பதன் விசேடவுரையில்,‘நிறை-மறை பிறரறியாமை’ என்று பரிமேலழகரும் ‘நிறையென்பது மறைபிறரறி யாமை நெஞ்சினை நிறுத்தல்’ என்று (தொல். மெய்ப். சூ. உ௫. உரை) பேராசிரியரும் எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன. இந்நூற் பக்கம் ௪௧௯: ௬ - ஆம் குறிப்பும் பார்க்க.

௨. (அ) “நீமெய் கண்ட தீமை காணின், ஒப்ப நாடி யத்தக வொறுத்தி” புறம். ௧௦: ௩ - ௪. (ஆ) “எங்கண் ணினைய ரெனக்கருதி னேதமாற், றங்கண்ண ராலுந் தகவில கண்டக்கால், வன்கண்ண னாகி யொறுக்க வொறுக்கல்லா, மென்கண்ண னாளா னரசு” பழ. ௩௨௨.(இ)“ஓர்ந்து கண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந், தேர்ந்துசெய் வஃதே முறை” (ஈ) “கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட் டதனொடு நேர்” குறள். ௫௪௧, ௫௫௦. (உ) “எய்திய குற்றத்தோர்கள் யாவரா யினுங்கண்ணோடா, தைதென நாடி நீதி யறந்தலை பிழையாத் தண்டஞ், செய்தலே செங்கோலாகும்” விநாயக. அரசியற்கை. ௮௮. என்பனவைகளும் (ஊ) “கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு” (குறள்.௫௭௮) என்பதன் விசேடவுரையில், “தம்மொடுபயின்றார் பிறரை இடுக்கண்செய்துழி அவரைக் கண்ணோடியொறாதார்க்கு முறை சிதைதல், மேல் ‘ஓர்ந்துகண் ணோடாது’ என்ற முறையிலக்கணத் தாலும் பெற்றாம். முறை சிதையவரும்வழிக் கண்ணோடாமையும் வாராவழிக் கண்ணோடலும் ஒருவற்கியல்பாதலருமையிற் கண்ணோட வல்லார்க் கென்றும்..................கூறினார்” என்று எழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

௩. (அ) “மண்டிணிந்த நிலனும்...............போற்றாரைப் பொறுத்தலும்” புறம். ௨: ௧-௭. (ஆ) “வையா மாலையர் வசையுநர்க் கறுத்த, பகைவர்

(பிரதிபேதம்) * மற்றுமை,முறையெனப். † பொறுத்தல். நிறையெனப்.பொறுத்தல் ஆக்கதை.

எ-து: (க) இல்வாழ்க்கைநடந்துதல்என்று சொல்லுவது (உ) மிடித்தவர்க்கு யாதானும்ஒன்றை உதவுதலே; ஒன்றைப்(ங)பாதுகாத்தல் என்று சொல்லுவது கூடினரைப் பிரியாதிருத்தலே; மக்கட்பண்பு என்று சொல்லப்படுவது உலக வொழுக்கம் அறிந்தொழுகுதலே; (ச) அன்பு என்று சொல்லப்படுவது தன் சுற்றத்தைக் (ரு) கெடாதிருத்தலே; (சு) அறிவு என்று சொல்லப்படுவது

தேஎத் தாயினுஞ், சினவா யாகுக லிறம்பூதாற் பெரிதே" பதிற். ௩௨: கரு-௧எ. (இ) "அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத் தம்மை, யிகழ்வார்ப் பொறுத்த றலை" (ஈ) "ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப், பொறுத்தாற்றும் பண்பே தலை" குறள். கருக, ருஎகூ. (உ) "கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய்தாரைப், பொறுத்தாற்றிச் சேறல் புகழால்" பழ. கக.

௧. "தானந்தவம்" என்னுங் குறளின் விசேடவுரையில் 'பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின்மேலும் தவம் துறவறத்தின்மேலும் நின்றன' என்று (குறள். கக) பரிமேலழகர் எழுதியிருப்பதும் "வறியார்க் கொன் றீவதே யீகைமற்றெல்லாங், குறியெதிர்ப்பைநீ ருடைத்து" (குறள். உஉக.) என்பதும் ஈண்டறிதற்பாலன.

௨. அலத்தல் மிடியுறுதலென்னும்பொருளில்வருதலே, "அலத்தற் காலை" மணி. கரு: ௫௦, உஅ: ககக. என வருதலாலும் அறிக.

௩. "பொருள் போற்றி வழங்குநெறி" குறள். சஎஎ. என்புழி, போற்றி வழங்குதலென்பதற்கு, பேணிக்கொண்டொழுகுதலென்று உரையும், பேணிக்கொண் டொழுகுதலென்பதற்கு, (ஒருவரோடும் நட்பில்லாத அவனைத் தம்மோடு) நட்புண்டாக்கிக்கொண் டொழுகுதலென்று விசேடவுரையும் எழுதியிருப்பது இங்கே அறிதற்பாலது.

௪. (அ) "தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்" புறம். கடுள: க. (ஆ) "நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக், கண்கண்ட குற்ற முளவெனினுங் காய்த்தீயார், பண்கொண்ட தீஞ்சொற் பணைத் தோளா யாருலகே, தங்கன்று சாங்கறப் பார்" பழ. கசு.

இ. "அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார், மறத்திற்கு மஃதே துணை" (குறள். எசு.) என்பது இங்கே நோக்கற்பாலது.

௬. (அ) "தெரியா தவர்தந் திறனில்சொற் கேட்டாற், பரியாதார்போல விருக்க" (ஆ) "ஆய்ந்த வறிவின ரல்லாதார் புல்லுரைக்குக், காய்ந் தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்" பழ. கஙு, உசுஅ. (இ) "வன் மையுள், வன்மை மடவார்ப் பொறை" குறள். கடுங. (ஈ) "எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொ றன்னெஞ்சிற், கொள்ளிவைத் தாற் போற் கொடிதெனினு - மெள்ள, வறிவென்னு நீரா லவித்தொழுக லாற்றிற், பிறிதென்னும் வேண்டா தவம்" அறநெறி. கஒக.

ஆகு0 கலித்தொகை கஙங.

அறியாதார் தன்னைப் *பார்த்துச்சொல்லுஞ் சொல்லைப் பொறுத்தலை; (க)ஒருவரோடு ஒருவர்க்கு உறவுஎன்று கூறப்படுவது கூறியதொன்றைத் தாம் † மறாதிருத்தலை; நிறைஎன்று சொல்லப்படுவது மறைந்தது ஒரு காரியம் பிறர் அறியாமல் ஒழுகுதலை; முறை என்று சொல்லப்படுவது (உ)நமனென்று கண் ணோட்டஞ்செய்யாது அவர்செய்தகுறைக்கேற்ப அவர் உயிரைக்கொள்ளுதலை; (ங) பொறை என்று சொல்லப்படுவது பகைவரைக் காலம் வருமளவும் ‡ பொறுத்திருத்தலை. எ - று.

கடு || ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா ÷ லுண்பவர் கொள்கலம் × வரைத

னின்றலை வருந்திபா டியராஞ்
சென்றனை களைமோ (ழ)பூண்கநின் +தேரே

எ - து: அப்படியே அக்குணத்தை நீரே அறிந்தொழுகிலீராயின் அவ்வொழுக்கத்திற்கு ஏற்பது ஒன்று கூறுவேன்; கொள்க! என்றேழியது கன்னுதலின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல், இனியதாகிய பாலை

க. (அ) "தேறிய பாங்கியர் வெள்ளமுண் டாயினுந் தேமொழிநான், கீறிய கீற்றினை யுங்கட வாள்வண்டு கிண்டிமது, வூறிய கொன்றைய ராரூர்த் தியாக ருயர்சிலம்பிற், கூறிய வாறு மறுண்முடிப் பேனுன் குறையினையே" திருவாரூர்க்கோவை. கருந. (ஆ) "பெம்மான் புகலியிற் சம்பந்தர் பால்வைத்த பேரருள்போ, லெம்மான் விழியெம் முதல்வியென் பானல் லருள்பெரிய, னம்மானைச் சம்பந்தர் சொற்படி யாவு நடத்தினன்மற், றிம்மானென் சொற்படி யெல்லா நடத்து மியல்பினளே" சீகாழிக்கோவை. கறிந.

உ. "நமனெனக் கோல்கோடாது" புறம். ருரு: கக.

௩. (அ) "காலங் கருதி யிருப்பர் கலங்காது, ஞாலங் கருது பவர்" (ஆ) "பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த், துள்வேர்ப்ப ரொள்ளி யவர்" (இ) "செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை, காணிற் கிழக்காந் தலை" (ஈ) "எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே, செய்தற் கரிய செயல்" (உ) "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" குறள். சஅரு, சஅஎ, சஅஅ, சஅகூ, சகூ0. (ஊ) "ஆண்டுநே ரெல்லையாக வவன்றிறத் தழற்சியின்மை, வேண்டுவ லென்று சொன்னான் வில்வலா னதனை நேர்ந்தான்" சீவக. ௩௧௩.

ச. கலி. கஉசு: உ0 - உஉ - ஆம் அடிகளும் அவற்றின் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * பாராது. † மாறுதிருத்தலை. ‡ பொறுத்திறுத்தலை அப்படியே, || ஆங்கறிந்தொழுகிலை யாயினுமென், ÷ உண்பவர், உண்டோர். × வரைதலினின்றலை வருந்தினையோம். + தேரே என்பது இல்வாழ்க்கை.

யுண்ணுமவர்கள் பாலையுண்டு அதனைக்கொண்டிருக்குங் கலத்தைக் கவிழ்த்து விடுதல் போல்வதொன்று; ஆகையினாலே, நின்னிடத்து வருந்தினவள் துயரத்தை வரைந்து சென்றனையாய்க் களைவாய்; அங்ஙனங் களைதற்கு நின் தேர் புரவியைப் பூண்பதாகவெனத் தெருட்டி வரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

(க) இது தனிச்சொல்லின்றி ஆசிரியச் சுரிதகம் பெற்ற தாவிணைக் கொச்சகம். (கக)

(கஙச.) மல்லரை மறஞ்சாய்த்த மலர்த்தண்டா ரகலத்தோ
னொல்லாதா ருடன்றோட வுருத்துட னெறிதலிற்
கொல்யானை யணிநுதலழுத்திய வாழிபோற்
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலி
னிருங்கடலொளித்தாங்கே யிரவுக்காண் பதுபோலப்
பெருங்கடலோதநீர் வீங்குபு கரைசேரப்
போழ்ய வண்டினாற் புல்லென்ற துறையவாய்ப்
பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப
வொருநிலையே நடுக்குற்றிவ் வுலகெலா மச்சற
விருதிலர்ப் பெயர்ப்பன்ன வெவ்வங்கூர் மருண்மாலை;
கக தவலினோய் செய்தவர்க் காணாமை நினைத்தலி
னிகலிடும் பனிதின வெவ்வத்து ளாழ்ந்தாங்கே
கவலைகொ ணெஞ்சினேன் கலுழ்தாக் கடனோக்கி

யவலமெய்க் கொண்டது போலுமஃ தெவன்கொலோ

கரு நடுங்குநோய் செய்தவர் நல்காமை நினைத்தலிற்
கடும்பனி கைமிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே
நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணனோக்கி
யிடும்பைநோய்க் கிகுவன போலுமஃ தெவன்கொலோ;

க. (அ) இச்செய்யுள் இச்செய்திக்கே தொல். செய். கூ. கஙகூ. பேர். நச். உரைகளில் மேற்கோள். (ஆ) இளம்பூரணர்; 'தரவின்றாகி' என்னும் தொல். செய். கசஉ - ஆம் சூத்திரத்திலுரையில் இதனைக் கொச்சக வொருபோகு எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றி வருவதற்கு மேற் கோள் காட்டி முதற்பகுதியைத் தரவென்றும், இடைப்பகுதியை எண் ணென்றும், கடைப்பகுதியைச் சுரிதகமென்றும் விளக்கினர்.

கசு வையினர் நலனுண்டார் வாராமை நினைத்தலிற்
கையறு நெஞ்சினேன் கலக்கத்து ளாழ்ந்தாங்கே
மையல்கொ ணெஞ்சொடு மயக்கத்தான் மாணோக்கி
யெவ்வத்தா லியன்றபோ லிலைகூம்ப லெவன்கொலோ;
எனவாங்கு;
உச கரைகாணப் பௌவத்துக் கலஞ்சிதைந் தாழ்பவன்
றிரைதரப் புணைபெற்றுத் தீதின்றி யுய்ந்தாங்கு
விரைவனர் காதலர் புகுதர
நிரைதொடி துயர நீங்கின்றால் விரைந்தே.

இது பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்றாத தலைவி இவ்வகைப் பட்டனவும் நமதிடுக்கண்கண்டு எவ்வஙகோண்டன போன்ற; அவரும் நமக்கருளுவார்கொல்லோ, எனச்சொல்லிய நோத்துக்கண் தலைவன் புக, *அவ்வளவில் அவள் அவலம் நீங்கினமை கண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

இதன் பொருள்.

மல்லரை மறஞ்சாய்த்த மலர்த்தண்டா ரகலத்தோ
னெல்லாதா ருடன்றோட வுருத்தட னெறிதலிற்
கொல்(க)யானை யணிநுதலழுத்திய வாழிபோற்
(உ)கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலி
னிருங்கட லொலித்தாங்கே யிரவுக்காண் பதுபோலப்
பெருங்கட லோதநீர் வீங்குபு கரைசேரப்

க. (அ) "கன்னவில் கடகத் தோளான் கண்டுகை தொழுது கொண்டு, மின்னவிர் விளங்கு நேமி விடுத்தனன் விடுத்த லோடு, மன்னனை மார்புகீண்டு மணிமுடி யெறிந்து மற்றைப், பொன்னவி ரோடை யானைப் புகர்நுதற் புக்க தன்றே" (சூளா. அரசியல். ௩௩௧.) எனவும் (ஆ) "செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி, முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ, யெல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன், மல்லலோங் கெழில் யானை மருமம்பாய்ந் தொளித்ததே" (யா-கா. உறுப்பியல். ௧௧. மேற்கோள்.) எனவும் யானை நுதலில் ஆழிபுகுதல் கூறப்படுதல் காண்க.

உ. (அ) "படுசுடர் கல்சேர" (ஆ) "கனைசுடர் கல்சேர" (இ) "ஒண்சுடர் கல்சேர" (ஈ) "கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயின்" கலி. ௧௧௧: உ, ௧௨௦: ௩, ௧௨௧: ௧, ௧௪௨: ௩௭.

(பிரதிபேதம்) *அவ்வளவில் நீங்கினமை கண்டு.

ஓவா வேகமோ டுருத்துத்தன் மேற்சென்ற
சேஎச் செவிமுதற் கொண்டு பெயர்த்தொற்றுங்
காயாம் பூங்கண்ணிப் பொதுவன் றகைக்கண்டை
மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான் றின்னன்கொன்
மாயோனென் றுட்கிற்றென் னெஞ்சு ;
ஆங்கு, இரும்புலித் தொழுதியும் பெருங்களிற் றினமு
மாறுமா றுழக்கியாங் குழக்கிப் பொதுவரு
மேறுகொண் டொருங்குதொழூஉ விட்டனர் விட்டாங்கே
மயிலெருத் துறழணி மணிநிலத்துப் பிறழப்
பயிலிதழ் மலருண்கண்
மாதர் மகளிரு மைந்தரு மைந்துற்றுத்
தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ ;
கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே யாய மகள் ;
அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய வுயிர்துறந்து
நைவாரா வாயமக டோள் ;
வளியா வறியா வுயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சு நெஞ்சினார் தோய்தற்

கெளியவோ வாயமக டோள் ;

௭௧ விலைவேண்டா ரெம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின் ;

௭௪ ஆங்கு;
குரவை தழீஇயா மரபுளி பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுது
மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொன்னில
மாளுங் கிழமையொடு புணர்ந்த
வெங்கோ வாழியரிம் மலர்தலை யுலகே.

ஐந்தாவது நெய்தல் ௧௭. ௮௩௩

போழுய வண்டினாற் புல்லென்ற துறையவாய்ப்
(௯)பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப
வொருநிலையே நடுக்குற்றிவ் வுலகெலா மச்சுற
விருநிலம் (௨)பெயர்ப்பன்ன வெவ்வங்கூர் மருண்மாலை

எ-து: (௧)பகையாய் வந்த(௪)மல்லரைமறத்தைக்கெடுத்த *அலர்ந்ததண்ணிய தாரைஅணிந்த திருமார்பையுடைய மாயவன், தன் பகைவர்எல்லாருஞ் சேரவந்து உருத்துத் தன்னை எறிகையினாலே, †அவரை உடன்று அவர் ஓடும் படியாக அவர் எறின(௫) கொல்யானையினது அழகினையுடைய மத்தகத்திலே

௧. (அ) "கண்பாயல் பெற்றபோற் கணைக்கால மலர்கூம்ப" (ஆ) "இம்மாலை, இருங்கழி மாமலர் கூம்ப" (கலி. ௧௧௧:௫; ௧௩௦: ௧௧-௧௨) என்பவையும் அவற்றின் குறிப்பும் நோக்குக.

௨. (அ) "பல்லுருவம் பெயர்த்து" (ஆ) "பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போல்" (கலி. ௧: ௫; ௧௨௧: ௨.) என்பவற்றில், பெயர்த்தலென்பதற்கு எழுதியிருக்கும் உரையும் பார்க்க.

௩. பகையாய் வந்த மல்லரென்றது, கஞ்ச னேவலால் தன்னைக் கொல்ல வந்த சாணூரன் சலன் கவுசலன் முதலியவரை.

௪. மல்லரை மறத்தைக் கெடுத்தலென்னு முடிபை, தொல். வேற்-மயங். ௫ - ஆம் சூத்திரத்தின் இவருரை நோக்கித் தெளிக.

௫. கொல்யானை என்னு மொழியிலுள்ள முதனிலை செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவாய் நிற்கும். இந்நூலுள் முன்பு "கொல்யானை நீர்க்குவிட் டாங்கு" (கலி. ௫௬. ௩௨) எனச் செய்வினையிலும் "கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாம்" (கலி. ௪௨: ௭) எனச் செயப்பாட்டு வினையிலும் வந்திருக்கிறது. "புலிகொல் யானை" என்பதற்கு, 'புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை, புலியினிற் கொல்லப்பட்ட யானை' என்று மயிலைநாதரும், 'புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை'என்றுமற்றைய உரைகாரரும், (நன். பொது. சூ. ௨௨. உரை) புலி கருத்தாவாகியும் கருமமாகியும் யானை கருத்தாவாகியும் கருமமாகியும் நிற்குமென்று சுப்பிரமணிய தீக்ஷிதரும் (பிரயோக. ௭௫. உரை) எழுதியிருப்பவையும், "கொல் யானை என்பது அக்காலத்து அஃது உதிரக்கோட்டோடு வந்த தேல் இறப்பும், அதன்முழுலைக் கண்டுநின்றுழி நிகழ்வும், அது கொல்ல ஓடுவதனைக் கண்டுழி எதிர்வும் விரியும். இனிக் கொல்யானை என்பதன்கண் இரண்டு ஈறும் ஒருங்கு தொக்குநின்ற தென்றற்கு

(பிரதிபேதம்) * அலர்ந்த தாமரை, † அவன் அவரை.

அழுத்தின சக்கரம்போலே, ஞாயிறு தான் பரப்பிய கதிர்களைத் தன்னிடத்தே குவித்துக்கொண்டு அத்தகிரியைச் சேர்ந்து மறைகையினாலே பெரிதாகிய கடலில் ஓதம் ஏறுகின்ற நீர் மிக்குக் கரையைச் சேராநிற்க, கழியிடத்துப் பூக்களினின்றும் போன வண்டுகளாலே பொலிவழிந்த துறையிடத்தனவாய்த் துயில்கொள்வனபோலே, அக்கயத்தின் மலர்களெல்லாம் வாய்குவியாநிற்க, அக்காலத்தே இருங்கடல் ஒலித்து இவ்வுலகெல்லாம் ஒருபடிப்பட நடுக்க முற்று அச்சமுறும்படி (க) தான் தோற்றுவித்த இருநிலத்தைத் தான் மீண்டு தன்னிடத்தே ஒடுக்கிக்கொள்ளுந் தன்மையையொத்த இராக்காலத்தைத் தான்(உ)படைப்பதுபோல, அதற்கு முன்னே தோன்றுகின்ற, பிரிந்தோர்க்கு * வருத்தம் மிகுதற்குக் காரணமான, மருண்மாலைக் கண்ணே. எ - று.

இருங்கடல் ஒலித்தெழுந்து உலகைக் கோப்பதுபோன்ற இராக்காலத்தைத் தான்படைப்பதுபோற் றோன்றுகின்ற மாலை என்க. மறைதலின் ஆங்கே தோன்றுகின்ற மாலையென்க.

கக தவவினைச் செய்தவர்க் காணுமை நினைத்தவி
†னிகலிடும் பனிதின வெவ்வத்து ளாழ்ந்தாங்கே

விதி, 'செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின், மெய்யொருங் கியலுந் தொழிலொரு மொழியும்' என்றதாம். என்றதன்பொருள் செய்யுஞ் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களினுடைய காலங்காட்டும் உம்மும் அகரமும் ஒருசொற்கண்ணே சேர நடக்கும் புடை பெயர்ச்சி தொக்குநிற்குஞ் சொற்களென்றவாறு. இங்ஙனம் இரண்டு பெயரெச்ச வாசகமுஞ் சேரத் தொக்குநிற்றலான் ஆசிரியர் ஒரு சொல்லாக்கிப்

புணர்க்கலாகாதென்று'புணரியபனிலையுடையுணர்த்தோன்று'என்றார்" என்று நச்சினார்க்கினியர் (தொல். எச்ச. சூ. ௧௧. உரை) எழுதி யிருப்பதும் அறிதற்பாலன.

௧. (அ) "மாநிலமியலா முதன்முறை யமையத்து, நாம வெள்ளத்து நடுவட் டோன்றிய, வாய்மொழி மகனொடு" என்னும் (பரி. ௩: ௧௩ - ௧௩.) பகுதியும் அதனுரையும், (ஆ) "மாநில மியற்றுவான், விரிதிரை நீக்கு வான் வியன்குறிப் பொத்தனர்" (கலி. ௧௦௪: ௧௮ - ௧௧.) என்பதும் அதன் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருந்துவனவும் பார்க்க.

௨. காண்பது - செய்வதாதலின் படைப்பதென்று பொருள் கூறினார்; காணென்பது செய்யென்னும் பொருளில் வருதலை, "கம்மியர் காணு மரபின" (சிலப். ௩: ௧௦௪) என்புழி, 'காணு' என்பதற்கு, 'பண்ணப் படாதன' என்று அடியார்க்கு நல்லார் பொருளெழுதி யிருத்தலாலும் அறிக. இக்காலத்தும் உலகவழக்கில் காணுதலின் பொருட்டாகிய பார்த்தலென்பது செய்தலென்னும் பொருளில் வழங்குகின்றது.

(பிரதிபேதம்) * வருத்தத்திற்குக் காரணமான, † இகலிரும்பனி, இகலடும்பனி.

ஐந்தாவது நெய்தல் ௧எ. அம்மூ

கைவல்லிகொ ணெஞ்சினேன் கலுழ்தரக் (௧) கடனோக்கி
யவலமெய்க் கொண்டது போலுமஃ தெவன்கொலோ

எ - து: எனக்குக் கேடில்லாத காமநோயைச் செய்தவரைக் கண்ணுற் காணுமல் என்னெஞ்சு நினைக்கையினாலே, அது தனக்கிடமாகக் *கொண்டு மாறுபாடுகளைக் †கொடுக்கும்பனிக்காலம் அறிவைத்தின்றுவிட, ‡அப்பொழுதே வருத்தத்திலே அழுந்திப் (௨) பல நினைவுகொண்ட நெஞ்சினையுடைய யான் கலக்கத்தைத் தர, கடல் அதனை நோக்கி என்னுடைய இந்த அவலத்தைத்

தன்னுடைய மெய்யிலே கொண்டதுபோலே கூப்பிடாநின்றதற்குக் காரண மென்றேதான். எ - று

கஙு (ங)நடுங்குநோய் செய்தவர் நல்காமை || நினைந்தலிற்
கடும்பனி × கைம்மிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே
நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணந்நோக்கி
யிடும்பைநோய்க் (ச)கிருவன போனுமஃ தெவன்கொலோ.

எ - து: எனக்கு நடுங்குகின்ற காமநோயைச் செய்தவர் என்னை அருளாதபடியாலே என் நெஞ்சு அவரை நினைக்கையினாலே, அதுகண்டு கடிய பனிக்காலம் கைம்மிக்குவர, + அதுகண்டு அப்பொழுதேசெயலறவிலேயான் அழுந்த, (ஙு) மணற்குன்று அதனை நோக்கி நடுங்குகின்ற நோயிலே உழந்து என்னலத்தை இருந்திழந்தேனது (?) இடும்பையைத் தரும் நோய்க்குத் தான் கரைந்து ÷ தாழ்வனம்பால இராநின்றதற்குக் காரணமென்றேதான். எ-று.

திரையால், மணற்குன்று கரைந்து வீழ்கின்றதனைக் கண்டு கூறினாள். ஆழ்ந்து, அழுவென்க.

க. "பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடலூவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற, நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ" (கலி. கஉக: அ - ௯0) என்பதும்இந் நூற்பக்கம் ௮00: ௩-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. "பலநினைந் தினையும் பைதனெஞ்சி, னலமரா றேயு ளுழக்குமென் றேழி" கலி. கஉக: கக - உ0.

ங. "நடுங்கு நோய்" கலி கஉஎ: எ.

ச. இருதல் - தாழ்தல்; இற்றொழுகுதல், விழுதலென்னும் பொருளிலும் வரும்.

ரு. "குன்றுபோல் வாலெக்கர்" கலி. கஉஎ: அ.

(பிரதிபேதம்) * கொண்டுதன் மாறு, † கெடுக்கும் பனிக்காலம் தம்அறிவைத், ‡ அப்பொழுதே அவ்வருத்தத்திலே, || விடுத்தலிற், × கைமிகக்கையாற்றுதாழ்ந்து, + நடுங்குகின்றநோயிலேஉழந்து செயலறவிலே யான்அழுந்த மணற்குன்று அதனைநோக்கித் தன்நலத்தை இழந்திருந்தேனது + தாழ்வதுபோலே.

அநசு கலித்தொகை கநசு.

கக வையினர் நலனுண்டார் வாராமை நினைத்தலிற்
கையறு நெஞ்சினேன் கலக்கத்து ளாழ்ந்தாங்கே
மையல்கொ ணெஞ்சொடு மயக்கத்தான் மரனோக்கி
யெவ்வத்தா லியன்றபோ (ஆ)லிலைகூம்ப லெவன்கொலோ

எ-து: இறந்துபட்டு வருத்தந் தீராமல் என்னை (உ) வைத்து, என்னலத்தை உண்டவர் ஈண்டு வாராதபடியாலே என்னெஞ்சு அவரை நினைக்கையினாலே, அதுகண்டு பனிக்காலம் வருத்த, அது * கண்டு அப்பொழுதே மயக்கத்தாலே செயலற்ற நெஞ்சினேனாய்க் 'கலக்கத்திலே அழுந்த, மரம் அதனை நோக்கி வருத்தத்தாற் செய்தவைபோலே மயக்கங்கொண்ட (ங) நெஞ்சோடே இலைகள் குவிதற்குக் காரணம் என்னோதான். எ - று.

† எனவாங்கு

எ - து. என இவள் சொல்லாநிற்க. எ - று.

ஆங்கு, அசை.

உச (ச) கரைகாணாப் பௌவத்துக் கலஞ்சிதைந் தாழ்பவன்
றிரைதரப் புணைபெற்றுத் தீதின்றி யுய்ந்தாங்கு
விரைவனர் காதலர் புகுதர
நிரைதொடி துயர நீங்கின்றால் விரைந்தே

௧. "மாமெல்லா மிலைகூம்ப" கலி. ௧௨௦: ௬.

௨. "வையினர்" என்பதற்கு, 'வைத்து' என்றுஇங்கே பொருள்கொள்ளும் இவ்வுரைகாரர் இச்சொல்லுக்கு'வஞ்சித்து'என்றும்(தொல். பொருளி. சூ. ௯௦.) பொருள்கொண்டு (அ) வஞ்சித்தமை கூறுதலாகிய வைஇய மொழிக்கு,"வையினர்..... நினைத்தலின்"என்பதை மேற்கோள்காட்டி யிருக்கிறார். இச்சொற்கு அப்பொருளுமுண்மை,(ஆ)"வையாது"என்பதற்கு 'வஞ்சியாதே' என்று (பு - வெ. வெட்சி. ௧௮. கொளுவுரை.) பொருளெழுதியிருத்தலாலும் அறியப்படும்.

௩. (அ) "கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி" (கலி. ௩௪:௧௦) என்பதன் விசேடவுரையில், "'புல்லு மாலு மோரறி வினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே' இதனுட் பிற அறிவும் உள வென்று கூறினர்; அதனாற் பாவத்திற்கு அஞ்சி மரம் கவின்வாடிற் றென்றார்" என இவ்வுரையாசிரியர் எழுதியிருப்பது இங்கே அறிதற் பாலது. (ஆ)"கல்லோ மாலு மிரங்க" என்பது, சீவக. ௨௩௩௪.

௪. மணிமேகலையிலுள்ள சாதுவன் வரலாறும் சீவகசிந்தாமணியிலுள்ள வணிகனுகிய சீதத்தன் வரலாறும் ஈண்டு அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * கண்டபொழுதே, † எனவாங்கு ஆங்கு அசை.

ஐந்தாவது நெய்தல் ௧௮. அ௩ள்

*எ - து: கரைகாணுத நடுக்கடலிலே மரக்கலங் கெட்டு அழுந்துகின்றவன் கிரை கொண்டுவந்துதர ஒரு தெப்பத்தைப் பெற்றுப் பின்பு தீதில்லையாய்ப் பிழைத்தாற்போல இவள்காதலர் விரைந்து புகுத இடும்பையாவதும் விரைந்துபோயிற்று; அதனைக்காணீரென வாயில்கள் தம்முள்ளே கூறினர்.

எ - று.

எனப்புகுதரவென்க. ஆல், அசை.

இதனால், தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கள)

(கஅ.) துணைபுணர்ந் தெழுதருந் தூநிற வலம்புரி
யிணைதிரண் மருப்பாக வெறிவளி பாகனா
வயிறிணி நெடுங்கத வமைத்தடைத் தணிகொண்ட
வெயிலிடு களிறேபோ லிடுமண னெடுங்கோட்டைப்
பயிறிரை நடுநன்னாட் பாய்ந்துறூஉந் துறைவகேள்;
ரு கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
குடிமைக்கட் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ;

கo ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ;
கரு திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
யிகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ;
எனவாங்கு;
கசு சொல்லக் கேட்டனை யாயின் வல்லே
யணிகிளர் நெடுவரை யலைக்குநின் னகலத்து
மணிகிள ராரந் தாரொடு துயல்வர
வுயங்கின ளுயிர்க்குமென் றோழிக்
கியங்கொலி நெடுந்திண்டேர் கடவுமதி விரைந்தே.

இது வரையாது வந்தொழுகுந் தலைவனைத் தோழி நெருங்கி வரைவு

கடாயது.

(பிரதிபேதம்) * எ - து: எனவிவன் சொல்லாநிற்கக்கரை.

இதன் பொருள்.

துணைபுணர்ந் தெழுதருந் *தூநிற (க)வலம்புரி
யிணைதிரண் மருப்பாக வெறிவளி பாகனு

க. சங்கு, இடம்புரி வலம்புரி சலஞ்சலம் பாஞ்சசன்னியமென நால்வகைப் படுமென்றும் அவை முறையே ஆயிரம் இப்பி ஆயிரமிடம்புரி ஆயிரம் வலம்புரி ஆயிரஞ் சலஞ்சலம் இவற்றாற் சூழப்படுஞ் சிறப்பினவென்றும் நிகண்டுகள் கூறும். அவற்றுள் வலம்புரி (அ) "இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும், வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்" என்றும் (பெரும்பாண். ௩௪-௩௫) (ஆ) "வரிவளை சூழும் வலம்புரி" என்றும் (சீவக. ௨௧௦௩) சிறப்பித்துக்கூறப்படுகின்றது. (இ) இது பரதவர்களால் மூழ்கி எடுக்கப்படுவதென்பது "வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்" என்பதனாலும் (அகம். ௩௫௦: கக.) திரையிடத்தே வந்து மேய்ந்து மணலில் உழுதலும் உண்டென்பது. (ஈ) "துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்றம்" என்பதனாலும் (சிலப். எ: அ.) விளங்கும். இது பதினாறு மங்கலப்பொருள்களுள் ஒன்றாக (உ) "வலம்புரி வட்டமு மிலங்கொளிச் சங்கும்" என்று (பெருங். (உ) ௫: ௨அ) கூறப்படுகின்றது. (ஊ) இது கடவுளை அபிடேகித்தற்குச் சிறந்த கருவியாகக் கொள்ளப்படுகிறது. இதன் வடிவான ரேகை ஆடவர்கையிலிருப்பது உத்தமவிலக்கணமெனப்படும். அது (எ) "வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை, நீர்செல நிமிர்ந்த மாஅல்" எனவும் (முல்லை. ௨-௩) (ஏ) "வலம்புரி பொறித்த வண்கை மதவலி" (ஐ) "வலம்புரித் தடக்கையானே" எனவும் (சீவக. ௨௦௪, அ௨க.) (ஒ) "சங்க லேகையுஞ் சக்கர லேகையு, மங்கை யுள்ளன வையற் காதலாற், சங்க பாணியான் சக்க ராயுத, மங்கை யேந்துமென் றநாயல் வேண்டு..."

(சூளா. குமார. சுடு) (ஓ) "சங்க நல்வி ரேகையைத் தடக்கை காட்டு மாற், பங்கயவி ரேகையைப் பாதங் காட்டுமா, லிங்கிவ னேழுல கோம்பும்" எனவும் (பாக. (க) பூரு. கஎ.) வருவனவற்றால் உணரத் தக்கது. பரதநூலுள் வலம்புரிக்கையென இதன் வடிவமாகக் காட்டும் கையொன்று கூறப்படும்; அதனை (ஔ) "வலம்புரிக் கையே வாய்ந்த கனிட்ட, னலந்திகழ் பெருவிர னடுமுற நிமிர்ந்து, சுட்டுவிரன் முடங்கிச் சிறுவிர னடுவியல், விட்டுநிமிர்ந் திறைஞ்சும் விதியிற் றென்று, கூறவர் தொன்னூற் குறிப்புணர்ந்தோரே" என்னும் சிலப். மேற்கோளால் அறிக. பண்டைக்காலத்து இதன்வடிவமாக மகளிர் தலையணியொன்று இருந்ததென்பது (ஃ) "தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின் வைத்து" (முருகு. உங.) (அஅ) "தெய்வவுத்தியொடு செழுநீர் வலம்புரி... ....மையீரோதிக்கு மாண்புற வணிந்து" (சிலப்.சு:க0கூ-க0அ)என்பவற்றாலும், செப்புஒன்று இருந்ததென்பது

(பிரதிபேதம்) * தூய்நிற.

வயிறிணி நெடுங்கத வினைந்தடைத் தணிகொண்ட
(க)†வெயிலிடு களிறேபோ (உ)லிடுமணை னெடுங்கோட்டைப்
பயிறிரை நடுநன்னாட் பாய்ந்தூறூஉந் துறைவகேள்

எ - து: வேல் தைத்துச் செறிந்த நெடிய கதவாகச் சமைத்து ‡அதனால் அடைத்து அழகு கொண்ட எயிலைக்(ங)குத்துங் களிறுபோலே (ச)இடுமணலி னதுநெடிய||சிகரத்தைப்பயின்றதிரை,அலைக்கின்ற காற்றுப்பாகனுகத், துணையைக் கூடி எழுகின்ற(ரு)தூயநிறத்தையுடைய வலம்புரிகள் இணைந்த திரண்ட

கொம்புகளாக, நகொட்கண்ணே ஈருத்தி அவ்வியானைபோலே முழங்குந் துறைவனே! யான் கூறுகின்றதனைக் கேள். எ - று.

"அயிர்த்தவம்பாய்ந் துழக்கி" (கூ) என்றார் பிறரும். ÷ தன்னாற்பாதுகாக்கப் படுகின்ற மணற்குன்றைத் தானேகலைத்தாற்போல நின்னாற்பாதுகாக்கப்படுக்

(ஆ) "வலம்புரித் துவங்கு செப்பும்" (சீவக. உசஎரு) என்பதனாலும் அறியப்படுகின்றன.

க. (அ) "எயிறுபடை யாக வெயிற்கதவிடாஅக், கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற், பெருங்கை யானை" (புறம். ந:கூ-கக.) என்பதும் (ஆ) "கடியரணம் பாயாநின் கைபுனை வேழம்" (கலி. அக: எ) எனப் பொய்ம்மையானையைக் கூறியிருத்தலும் (இ) அதன் குறிப்பில் இவ்விடத்துக்கு ஒத்தனவும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

உ. "இவறுதிரை திளைக்கு மிடுமண னெடுங்கோடு" ஐங். களஎ.

ந. "இடுமருப் பியானை" (கலி. உச: கo) என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ச. இடுமணல் - (அலை கொண்டுவந்து) இட்டமணல்; எக்கரென வழங்கும்; இஃது "இடுமண லெக்க ரகன்கானற் சேர்ப்பன்" (ஐந் - எழு. ருகூ.) என எக்கருக்கு அடைமொழியாயும் வரும்.

ரு. தூய நிறம் - வெண்ணிறம்; தூய வலம்புரி என்றலுமாம்; தூய்மை - சுத்தம்; அது தூயதென்பது "வலம்புரி முத்தே" என்பதற்கு, 'மரபின் றூய்மை கூறுவான் வலம்புரி முத்தென்றான்' என்றும் (சிலப். உ: எந. அடியார்க்கு.) "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்" என்றும் (ஆத்திரையன்.) "சங்குடைந் தனைய வெண்டா மரைமலர்த் தடங்கள் போலு, நங்குடி" (சீவக. ருசஎ) என்பதற்கு, 'தடங்களிலே உடைந்த தன்மையவாகியமலரும் சங்கும்போலு நங்குடி; இது தூய்மைக்கு உவமை' என்றும் தூயதற்கு உவமை கூறப்படுதலானும் துணியப்படும்.

௯. "அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்ன, ரெயிர்கதவங் கோத்தெடுத்த கோட்டாற் - பனிக்கடலுட், பாய்தோய்ந்த நாவாய் போற் றோன்றுமே யெங்கோமான், காய்சினவேற் கிள்ளி களிறு" முதற்.

(பிரதிபேதம்) * அடைத்தமைத்து. † எயிலடு, ‡ அடைத்ததனால் அழகு. || சாகரத்தை, ÷ தான்பாது.

அசுO   கலித்தொகை கரு௫.

தலைவியை நீதானே வருத்தாநின்றாய் என உள்ளுறையுவமங்கொள்க. களிறே போல் என்ற வினையுவமம் கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

௧. கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்

தொடிநெகிழ்ந்த *தோளளாத் துறப்பாயான் மற்றுநின்

† குடிமைக்கட் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ

எ-து: மணத்தையுடைத்தாகிய மலரினையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனால் தன்னழகு தோற்றவளைத்(க)தொடியுட்படநெகிழ்கின்றதோள ளாம்படி கைவிடுவாயாயிராநின்றாய்; அங்ஙனம் கைவிடுகின்றது பின்னை நின் குடிமையிடத்துப் பெரியதொரு குற்றமாய்த் தங்காதோ. எ - று.

(உ)குடிமை - ஒழுக்கம்.

௨. (ரு)ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றாளை

நோய்மலி ‡ நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்

வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ

௧. (அ) "தொடிபழி மறைத்தலிற் றோளுய்ந் தனவே" (ஆ) "தோட்பழி மறைக்கு முதவிப், போக்கில் பொலச்தொடி" (நற். உ௩: ௧, ௧௩௬: அ-௯) என்பவைகளும், (இ) "தோமேச்க விப்பாற், பார்செலச் செல்லச் சிந்திப் பைந்தொடி சொரிந்த" (சீவக. ௪௯௯) என்பதன் விசேடவுரையில், 'முன் வளைகழல நின்றார்க்கு வருத்தமிகுதியால் தொடியுங் கழன்றன' என்று எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

௨. (அ) "பிறப்பே குடிமை" என்பதன் விசேடவுரையில் 'குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னையெனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கம் குடிமை எனப்படும்; குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமையென்றாரென்பது; அதனை ஊராண்மையெனவுஞ் சொல்லுப. ஆண்மை புருடர்க்காம். அஃது ஆள்வினையெனப்படும். இது தலைமகட் கொப்பதன்றாலெனின், குடியாண்மை யென்புழி ஆண்மையென்பது இருபாற்குமொக்குமாதலின் அமையுமென்பது' என்று (தொல். மெய்ப். சூ. உ௫) பேராசிரியரும் (ஆ) 'குடிமை:— அஃதாவது உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை' என்று (குறள். ௯௬-ஆம் அதி. அவ) பரிமேலழகரும் (இ) "குடிமையாவது குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம். அஃது 'ஒழுக்கமுடைமை குடிமை' என்றதனான் உணர்க. 'மடிமை குடிமைக்கட்டங்கின்' என உயர்திணையிருபாலையும் உணர்த்திற்று" என்று (தொல். கிளவி. சூ. ௫௭) இவ்வுரையாசிரியரும் எழுதியிருப்பவை இங்கே அறிதற்பாலன.

௩. "ஆய்மலர்ப் புன்னை யணிநிழற் கீழால்" மணி. உ௫: ௯௯.

(பிரதிபேதம்) * தோளானாய்த், † குடிமைக்கேட்பெரிய, ‡ நிலையாய்த்.

ஐந்தாவது நெய்தல் ௧௫. அ௯௯

எ - து: நன்றென்று ஆய்ந்த மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனால் தன் அழகையுடையநலந்தோற்றவளைக் காமநோய் மிகுகின்ற நிலைமையளாகக் * கைவிடுவாயாயினாய்; அங்ஙனம் கைவிடுகின்றது

பின்னை நின் மெய்கூறுதற்கட் பெரியதோர் பொய்யாய்த்தங்காதோ. எ-று.

மெய், (க)நின்னிற்பிரியேனெனத் தெளிவித்தது.

கஉ திகழ்மலர்ப் (உ)புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
†இகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயா னற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ

எ - து: விளங்குகின்ற மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்த தனால் திருவினலம்போன்ற நலத்தைத்தோற்றவளை(ங)முன்புதோற்றமலர்கள் தாம் இகழ்கின்ற கண்ணையுடையளாம்படி கைவிடுவாயா யிராநின்றாய்; அங்ஙனங் கைவிடுகின்றது ‡ பின்னை நின்னைப் புகழ்ந்து கூறுந் தன்மை யிடத்துப் பெரியதோர் குற்றமாய்த் தங்காதோ. எ - று.

எனவாங்கு, ஆங்கு அசை.

கங சொல்லக் கேட்டனை யாயின் வல்லே
யணிகிளர் நெடுவரை யலைக்குநின் னகலத்து
(ச) மணிகிள ராரந் தாரொடு துயல்வர
(ரு)வுயங்கின ளுயிர்க்குமென் (சு)றோழிக்
கியங்கொலி நெடுந்திண்டேர் கடவுமதி விரைந்தே

க. "நின்னிற் பிரியலே னஞ்சலோம் பென்னு, நன்னர் மொழியு நீமொழிந் தனையே" கலி. உக: எ - அ.

உ. புன்னையைப்பற்றிய செய்திகள் அடுத்த செய்யுளில் கரு-ஆம் அடிக் குறிப்பாகக் குறிக்கப்படும்.

ங. "நறுமலர் நாணின கண்" என்பதற்கு, 'நின் கண்கள் ஒளியிழந்து முன் தமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன' என்று எழுதியிருக்கும் உரை ஈண்டறிதற்பாலது; குறள். கஉஙக. பரி.

ச. "தெண்மணி யாரா மார்பன் றிருநுதன் மகளிர் நெஞ்சத், துண்ணிறை பருகும் வண்டா ருருவமை திருவின் மிக்கான்" (சீவக. சுகடு) என்ப தன் உரைபார்க்க.

௬. “உயங்க மாலை யுதவினன் வஞ்சிக்கே” தில்லைக் கலம்பகம் ௧௪.

௯. கலி. ௩௦: ௧௮ - ௧௧, ௧௨௪: ௧௯ - ௨௧, ௧௨௯: ௨௦ - ௨௨, ௧௩௩: ௧௮ - ௧௧, ௧௩௯: ௨௧ - ஆம் அடிகளும் அவற்றிலுள்ள குறிப்புக்களும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * கைவிடுமையாய். † தகழ்மலர்க், ‡ பின்னைப்புகழ்க்கு.

எ-து: என்று யான் வல்லே சொல்லக்*கேட்டாயாயின், அழகு விளங்குகின்ற நெடிய மலையை வருத்தும் நின்மார்பிடத்தே மாணிக்கம் †விளங்குகின்ற முத்துவடம் பூமாலையோடே அசைதலுண்டாக அணிந்து வருந்தினளாய் நெட்டுயிர்ப்புக்கொள்ளும் என்றோழிபொருட்டு ஓடுகின்ற ஒலியினையுடைய நெடிதாகிய தேரை விரைந்து செலுத்துவாயென வரைவுகடாயினாள். எ - று.

“களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக், காதன்மிகுதி யுளப்படப் பிறவு, நாடு மூரு மில்லுங் குடியும், பிறப்புஞ் சிறப்பு மிறப்ப நோக்கி, யவன் வயிற் றோன்றிய கிளவியொடு தொகைஇ, யனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்” (௧) என்பதனிற் சிறப்பு என்பதனால் ஒழுக்கமும் வாய்மையும் புகழும் [பிறப்புங்] கூறி வரைவுகடாயினள்.

இதனால், தலைவற்கு அசைவு தோன்றிற்று.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௧௮)

(௧௩௬.) இவர்திமி லெறிதிரை யீண்டிவந் தலைத்தக்கா
லுவறுநீ ருயரெக்க ரலவனா டளைவரித்
தவலிறண் கழகத்துத் தவிராது வட்டிப்பக்
கவறுற்ற வடுவேய்க்குங் காமர்பூங் கடற்சேர்ப்ப;

ரு முத்துறழ் மணலெக்க ரளித்தக்கான் முன்னுயம்
பத்துருவம் பெற்றவன் மனம்போல நந்தியா
ளத்திறத்து நீநீங்க வணிவாடி யவ்வாயம்
வித்தத்தாற் றோற்றான்போல் வெய்துய ருழப்பவோ;

சு முடத்தாழை முடுக்கரு ளளித்தக்கால் வித்தாய
மிடைத்தங்கக் கண்டவன் மனம்போல நந்தியாள்
கொடைத்தக்காய் நீயாயி னெறியல்லாக் கதியோடி
யுடைப்பொதி யிழந்தான்போ லுறுதுய ருழப்பவோ;

க. தொல். கள. சூ. உங. இச்சூத்திரப்பகுதியி னுரையில், "கடிமலர்ப் ....புகாரஇக் கிடவாதோ" என்னும்பகுதிகளை மேற்கோள்காட்டி, ஒழுக்கமும் வாய்மையும் புகழும் இறப்பக்கூறியனவென்று நச்சினார்க் கினியரும் குடிமையும்வாய்மையும் புகழுமாகிய சிறப்புப்பற்றி வந்தன வென்று இளம்பூரணரும் நாற்கவி. சூ. கசக். உரையில் இவற்றை மேற்கோள்காட்டி, மரபும் புகழும் வாய்மையுங் கூறியன வென்று நாற்கவிராசநம்பியும் எழுதியிருக்கிறார்கள்.

(பிரதிபேதம்) *கேட்டாயாயி னணி அழகு, † விளக்கும் முத்துவடம்.

*இஃது ஆயர் ஏறுதழுவிநின்றமையைத் †தோழி தலைவிக்குத் தனித் தனியே காட்டிப் பின்னர் அவர் ஏறுதழுவிவிட்டுக் குரவையாடுகின்றமை யுங் கூறி ஆண்டு யாமுஞ்சென்று நின்னை ஏறுதழுவிக் ‡கோடற்கு நிற்கின்ற தலைவன் கேட்டு ஏறுதழுவிக்கொள்ளுமாறு நமக்குச் சுற்றத்தார் கூறிக்

கிடக்கின்ற முறைமையைப் பாட்டிலே தோன்றப் பாடிக் குரவையாடி வழிதிவாழ்கவென்று தெய்வம்பராவுதும்; நீயும் அங்ஙனம் பாடுதற்குப் போதுவாயாகவெனக் கூறியது.

இதன் பொருள்.

(க)மெல்லிணர்க் (உ)கொன்றையு மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும்(௩)பிடவுந் தளவுங்
குல்லையுங் ‖குருந்தும் (௪)கோடலும் (௫)பாங்கருங்
கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்
௫ பல்லான் †பொதுவர் கதழ்விடை கோட்காண்மார்
(௬)முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லர் பெருமழைக் கண்ணர் மடஞ்சேர்ந்த

க. தரவு ஈற்றடி குறைந்து வருதலையு முடைத்தென்பதற்கு "மெல்லிணர்க்.........விடை" என்பது மேற். தொல். செய். சூ. கசகூ. நச்.

உ. "அவிழ்தளவி னகன்றோன்றி, நகுமுல்லை யுகுதேறுவீப், பொற்கொன்றை மணிக்காயா, நற்புறவி னடைமுனையின்" பொருந. கசக - உ0உ. என்பதனாலும் முல்லைநிலத்துவாழ்வார் பலமலர் சூடுமியல்பினர் என்பது அறியலாகும்.

௩. "பிடவுந் தளவும்" தொல். உயிர்மயக்கு. சூ. உஎ.

௪. இந்நூற் பக்கம் சுகக: சு-ஆம் குறிப்புப் பார்க்க.

௫. (அ) "பாங்கரு, முல்லையுந் தாய பாட்டங்கால்" (கலி. கசக: ௩ - ௪.) என்பதனால் பாங்கர், ஒரு பூங்கொடியென்று தோற்றுகிறது. (ஆ) "வண்டு பாடு பாங்கரோடு" சூளா. சீயவதைப். உசக. (இ) "குருந்து பொற் கூவிளம் குல்லை பாங்கரும்" காஞ்சிப். கழுவாய்ப். கஅ௩. (ஈ)"வகுள ஞெமையரை டாங்கர்" திருவானைக்காப். சம்புமுனி. க. (உ) "சூத காகம்வழை பாங்கர் குருந்து" விநாயக. கௌசனனர் திருவவ. ௯௬. என இது பயின் றுவருதலும்காண்க. பாங்கரென்பதை

தமையென்பாருமுளர். அஃது ஒரு மரமென்று தெரிகிறது.

க. (அ) "முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன, பல்லும்" கலி. கoஅ: கஞ-கக. (ஆ) "முருந்தொடு முல்லைசாய்த்த முகிழ்நகை யாயுர்மாதர்" பாக. (கo) வேய்க்குழல். கக. (இ) "முல்லையு முருந் து நிரைத்தன

(பிரதிபேதம்) * இதனுள், † தோழியொரு தலைவிக்கு, ‡ கொண்டற்கு, ‖ குருந்துகோடலும், + பொதுவாகதழ விடைக்கோட் காண்குவார்.

ஐந்தாவது நெய்தல் கரு. அசுரு

கங நறுவீ தாழ் புன்னைக்கீழ் நயந்துநீ யளித்தக்கால்
மறுவித்த மிட்டவன் மனம்போல நந்தியா
ளறிவித்து நீநீங்கக் கருதியாய்க் கப்பொருள்
சிறுவித்த மிட்டான்போற் செறிதுய ருழப்பவோ;

ஆங்கு;

கஅ தொண்டுபலர் தூற்றுங் கௌவை யஞ்சாய்
தீண்டற் கருளித் திறனறிந் தெழீஇப்
பாண்டியஞ் செய்வான் பொருளினு
மீண்டுக விவணல மேறுக தேரே.

இது வரைவிடை வைத்துப் பிரியக்கருதிய தலைவனைத் தோழி தலைவியாற்றமை கூறிச் செலவு விலக்கி வரைவுகடாயது.

இதன் பொருள்.

(க) இவர்திமி லெறிதிரை யீண்டிவந் தலைத்தக்கா
(உ) ளுவருநீ ருயரெக்க ரலவனொ டளைவரித்
தவளிறன் கழகத்துத் தவிராது வட்டிப்பக்

கவறுற்ற வடுவேய்க்குங் காமர்பூங் கடற்சேர்ப்ப

எ-று: பரக்கின்ற, மீன்பிடிக்குந் திமிலையுடைய, எறியுந்திரைகள் திரண்டு வந்து அலைக்க, ஊறுகின்ற நீரையுடைய உயர்ந்த இடமணலிடத்து அளையினின்றும் போந்து விளையாடித் திரியும் புள்ளிகளையுடைய அலவன் (௩) மன

௧. இவர்தலென்பது இவறுதலெனவும் அருகிவழங்கும்; "இவறுதிரை" என்பது ஐங். ௧௭௭; ஒளிர்தல், ஒளிறுதலென வழங்குவதும் நோக்குக.

௨. உவறுதல் - ஊறுதலென்னும் பொருட்டாய், (அ) "உவறுநீ ருழக்கி" என்று (சீவக. ௧௧௧.) செயப்படுபொருள் குன்றிய வினையாய் வருதலன்றியும், (ஆ) ஊறச் செய்தலென்னும் பொருட்டாய், "ஒண்செங் குருதி யுவறியுண்டு" என்று(அகம், ௩: ௮.) செயப்படுபொருள் குன்றா வினையாயும்வந்துள்ளது; உவறுதலென்பதே ஊறுதலென மருவிற்றுப் போலும்.

௩. (அ) "இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோல்" குறள். ௯௪௦. (ஆ) "காமரு சூதால்" (இ) "அண்டரும் விரும்பும் வன்சூ தாடுதும்" (ஈ) "பார்கொடுத்து மரசுஉர்ப தங்கொடுத்து மூரியதம், மூர்கொடுத்து மதனினுள்ள மொழிவுறும லோடவே" வில்லி. சூதுபோர்ச். ௨௧, ௨௮, ௧௭௮.

வேட்கை கெடுத்தலில்லாத, (௧) தண்ணிதென்று நீக்கின சூதுபொருகின்ற இடத்தே வடுவுற்ற(௨)கவற்றினை வேட்கை தவிராதே(௩)உருட்ட அக்கவற்றை ஒக்கும் விருப்பமருவின பொலிவினையுடைய கடற்சேர்ப்பனே! எ - று.

அளை - முழை; *வரி - புள்ளி. "புள்ளிக்களவன்" (௪)என்றார் பிறரும்.

௧. (அ)"அறத்தைவேர் கல்லு மருநாகிற் சேர்க்குந், திறத்தையே கொண்

டருளைத் தேய்க்கு - மறத்தையே, பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச் சூதை மிக்கோர்க, டீண்டுவரோ வென்றார் தெரிந்து" (ஆ) "உரு வழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத், திருவழிக்கு மானஞ் சிதைக்கு - மருவு, மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது, பொருவரோ தக்கோர் புரிந்து" நள. கலிதொடர். ௩௮, ௩௯. (இ) "அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையு மழகும்வென் றியுந்தந் தங், குடியு மானமுஞ் செல்வமும் பெருமையுங் குலமுமின் பமுந் தேசும், படியு மாமறை யொழுக்கமும் புகழுமுன் பயின்றகல் வியுஞ் சேர, மடியு மான்மதி யுணர்ந்தவர் சூதின்மேல் வைப்பரோ மனம் வையார்" (ஈ) "மேதகத்தெரி ஞானநூற்புலவரும் வேத்துநா லறிந் தோரும், பாதகத்திலொன் றென்னவே முன்னமே பலபடப் பழித் திட்டார், தீதகப்படு புன்றொழிலினைஞரிற் சிந்தனை சிறிதின்றித், தோ தகத்துட னென்னையோ சகுனிதன் சூதினுக் கெதிரென்றான்" (உ) "கொடியவெஞ், சூதெடுத்து விழைதலுற்ற சூள்பிழைத்த வின் னவே, தீதெடுத்த நூலின் முன்பு தீயவென்று செப்பினார்" வில்லி. சூது. ௬௫, ௬௭, ௧௬௨.

௨. கவறென்பது, சூதாட்டத்திற் குலுக்கிப் போகடப்படுங் கருவி; பண் டைக்காலத்து விபீதகக் கொட்டையையே இக்கருவியாகக்கொண்டு மூன்றைம்பது கொட்டைகளைக் குலுக்கிப்போகட்டு நிலத்திற் குழி குழித்து அக்குழிகளில் நாயென்னும் வல்லுக்களை யிட்டு ஆடினா ரென்றும் நளன் தருமன் முதலியவர் ஆடியகாலத்து, சோகி அல்லது சோழியென்றும் பறையலகு அல்லது பலகறையென்றும் கூறப்படும் கடல்விளைபொருளையேகவறாகக்கொண்டு ஆறுகவறுருட்டிஆடிவந்தன ரென்றும், பிற்காலத்து அவற்றாலறியக்கூடிய எண்களை இரண்டு பாச் சிகைகளால்அறியும்படி அமைத்துக்கொண்டுஅப்பாச்சிகைகளால் ஆடி வந்தனரென்றும் கூறுவர். இச்செய்யுளினுரையில் ஈரைந்து ஈரிரண்டு இருமூன்று என்றவழக்கேகாணப்படுகிறது. இந்நாட்டில் சொக்கட்டா னென்றும் தாயக்கட்டமென்றும் பத்துக்கட்டமென்றும் வழங்கும் பலவகை யாட்டமும் இதன் வழி வந்தனவென்பர்.

௩. சீவக. கஉஎ. விசேடவுரையில் 'உழக்கு - பிடித்துப்போகடாமற் கவ திட்டு உருட்டு முழக்கு' என்று எழுதியிருத்தலால், கவருடலில் கை யாற்பிடித்துப் போகடுதலும் உழக்கிலிட்டு உருட்டலுமென இருவகை முன்பிருந்தமை அறியப்படும்.

௪. கலி. அஅ: ௬௦.

(பிரதிபேதம்) * வரி புள்ளிக்களவனென்றூர்.

ஐந்தாவது நெய்தல் ககூ. அசரு

(க)தண்கழகம் ஈண்டுக் குளிர்ச்சியை உணர்த்தாது "தண்பொன்" என்றாற்போல இழிவை உணர்த்திநின்றது.

அத்துறைக்கு உரியவாய் இயல்பாகச் சிறப்பு நிகழும்படி ஆடித் திரியும் புள்ளியையுடைய அலவன்(உ)கண்களையுடைய(௩)உருண்ட கவற்றை உருட்ட அக்கவற்றை ஒக்கும் என்றதனால் உலகியல்வழக்காகிப் பின்பு இல்லறம் நிகழுங் களவொழுக்கம் இவ்வூரிலுள்ளார்க்கு இழிந்த தொழிலுமாய்த் தோன்றா நின்றதென உள்ளுறையுவமங்கொள்க. "பலகை செம்பொ னாகப் பளிங்கு காயாப் பாப்பி, *யலவ னூடு மனைபோ லரும்பொற்கவறங் குருளக், †குலவும் பவழ வுழக்கிற் கோதை புரளப் பாடி, யிலவம் போதேர் செவ்வா யிளையோர் பொருவார்க் காண்மின்" என்னுஞ் (௪)சிந்தாமணியாலும் இதுவே பொருளாதல் உணர்க.

(இ) முத்துறழ் மணலெக்க ரளித்தக்கா னுமன்(ரு)னைபம்
பத்துருவம் பெற்றவன் மனம்போல நந்தியா
ளத்திறந்து நீங்க வணிவாடி யவ்வாயம்
வித்தத்தாற் றோற்றான்போல் (௬)வெய்துய ருழப்பவோ

௧. இக்கழகம் நூல்களும் படைக்கலமும் பயிலிடம்போலச் சிறந்ததன்றாதலின், 'தண்கழகம்' என்றார்; தண்ணென்பது இழிவை யுணர்த்திவருமென்பது (அ) "கூழுடைக் கொழுமஞ்சிகைத், தாழுடைத் தண்பணியத்து" என்புழி, "தண்பணியத்து" என்பதற்கு, 'செல்லுப்போல எனைப்பண்டங்கள் சிறந்தன அன்மையின், தாழ்ந்த பண்டமென்றார்' என்று (பட். ௧௬௩ - ௧௬௪) எழுதியிருக்கும் விளக்கத்தாலும் (ஆ) "மாயிருந் தீவி மணிநிற மஞ்ஞைநின், சாயற் கிடைந்து தண்கா னடையவும்" என்புழி, "தண்கான்" என்பதற்கு, 'இழிந்த காடு' என்று (சிலப். ௨: ௫௩ - ௫௪. அடியார்க்கு) எழுதியிருக்கும் குறிப்பாலும் (இ) இழிந்த சமயத்தவன், "தண்ணிய சமயி" என்று கூறப்படுதலாலும் உணரப்படும்.

௨. கண்களால் இஃது அக்ஷமென்று பெயர்பெற்றதென்பர்.

௩. (அ) "உருளாயம்" குறள். ௯௩௩; சீவக. ௨௮௭௩. (ஆ) "உருளாயச் சூதாடி" பெரிய. மூர்க்க. ௮. (இ) "தப்பிலாத கவறுருண்ட தாயம்" வில்லி. சூது. ௧௬௪.

௪. சீவக. ௬௨௭.

௫. (அ) "ஆயங்கொளின்" குறள். ௯௩௯. (ஆ) "ஆயம் பிடித்தாரும்" நள. கலிதொடர். ௪௦.

௬. வெய்துதுயர், வெய்துயரென மருவிற்று; (அ) "தழங்குரன் முரசு", (ஆ) "குலையலங் காந்தள்" என்பனவைபோல. வெந்துயரெனற்பாலது (பிரதிபேதம்) * அலயுறுமெம்மனைபோல் என்பது அந்நூலிலுள்ள பாடம், † குலையுயவழ,

எ-து: (க) முத்தையொக்கும் எக்கராகிய மணலிலே நீகூட (உ)முற்பட இடுகின்ற தாயம் முன்னே மனைகட்டலாம்படி கவற்றாலே (ங) ஈரைந்தைப் பெற்றவனுடைய மனம்போல ஆக்கம் பெருகினவள், அங்ஙனம் அளிக்குங் கூற்றினின்று நீ நீங்குகையினாலே அப்பெருந் தாயமின்றி ஈரிரண்டு இரு மூன்று என்னுஞ் சிறுதாயம் இடுதலால் தோற்றவனைப் போலே அழகுகெட்டு வெய்தாகிய வருத்தத்திலே அழுந்தவோ? எ - று.

உருவம் என்றது கவற்றை.

கூ முடத்தாழை முடுக்கரு ளளித்தக்கால் வித்தாய
மிடைத்தங்கக் கண்டவன் மனம்போல நந்தியாள்
கொடைத்தக்காய் நீயாயி னெறியல்லாக் கதியோடி
யுடைப்பொதி யிழந்தான்போ லுறுதுய ருழப்பவோ

எ-து: முடத்தையுடைய(ச)தாழை முடுக்குக்குள்ளே நீ கூடப் போரிடையிலேசிறுதாயம்(ரு) இடவேண்டின அளவிலேசிறுதாயம் தங்கக்கண்டவனுடைய மனம்போலே ஆக்கம்பெருகினவள், சுற்றத்தார்க்குப் பொருளைக் கொடுத்து

வெய்துயமொன அருகி வந்ததெனினுமாம்; (இ) "செய்த செய்தவன்" (ஈ) "செய்த செய்தவம்" (உ) "செய்த செய்தவச் செல்வன்" என்ற கம்பர் ஆட்சிகள் இதுபோல்வன.

க. (அ) "முத்தவார்மணல்" பெரும்பாண். ருரு௫; புறம். ருங: க. (ஆ) "முத்து மணல் வீதி" (இ) "முத்துமணற் பரந்த நற்பெருங் கோயின், முற்றந் தோறும்" பெருங். (உ) எ: கசஉ, (ரு) கூ: சக - சஉ.

உ. சூதுபோரில் முற்பட ஒன்று விழுவதற்குத் தாயமென்ற பெயரென்றும் அது விழுந்தபின்பே காய் பெயர்த்து மனைகட்ட உரிமையுண்டென்றும் கூறுவர். இது, பின்பு இவ்வாட்டத்தில் வேண்டும் எண்களைக் குறிப்பதாகவும் வழங்குகிறதுபோலும்.

௩. வடநாட்டில் ஹாரே(தோற்பேன்)என்றும் ஜீதே (வெல்வேன்)என்றும் கூறி அவ்வாறே செய்பவர் எதிர்பொருவோர் வைத்த பந்தயப் பொருளைப்பெறுவரென்ப. இஃது அவ்வழக்கானல் இங்கே கூறியது, 'வெல்வேன்' 'வெல்வேன்' என்று முரணிய இருவர் செய்தியாம். ஒற்றை விழுதல் தோல்வியென்றும் இரட்டை விழுதல் வெற்றி யென்றும் கூறுவர்.

௪. தாழையின் இயல்பை இந்நூற்பக்கம் ௮௬௩: ௭ - ஆம் குறிப்பிற்காண்க.
௫. "மாய முற்ற கவறு மந்த மாமன் வல்ல பத்திலே, தாய முற்றிடங் கொடாது தரும னச்ச நித்ததே" "இன்ன தாயம் வேண்டு மென் றெறிந்த போது மற்றவன், சொன்ன தாய மேபுரண்டு சோர்விலாமல் வருதலின்" வில்லி. சூதுபோர். ௧௮௮ - ௧௮௯.

(பிரதிபேதம்) *அவிழ்த்தான்போல்.

ஐந்தாவது நெய்தல் ௧௧. ௮௩௭

வரைந்துகோடற்குத் தக்கவனே! நீ முன்பே பொருளைத் தேடாதே இப் பொழுது பொருள்வயிற் பிரிவை ஆராய்ந்து பார்ப்பாயாயிற் சிறுதாயஞ் சிறுக இடவேண்டுமளவில் இடாமற் பெருக இட்டு வெல்லும் நெறியல்லாத நெறியிலே சூதுபொருகையினாலே அதற்கென்று கட்டிவைத்த தன்னுடைய (௧) பொருளை இழந்தவனைப் போலே மிக்க துயரிலே அழுந்தவோ. ௭ - று.

௧௩. *நறவிதாழ் (௨)புன்னைக்கீழ் நயந்தநீ யளித்தக்கான்
மறவித்த மிட்டவன் மனம்போல நந்திய

௧. கவறுடிப் பொருளையிழந்தவன் துயருற்று அதனைப் பழித்த செய்தி இருக்கு வேதமுதலியவற்றிலும் கூறப்பட்டுள்ளதென்பர்.

௨. புன்னை, நெய்தனிலத்துக்கு உரித்தாகவும் கடற்கரையாகிய மணலில் கடற்றிவலையால் தழைத்து வளர்வதாகவும் கூறப்படுவதொரு மரம்.

இது பருத்ததும் வளைந்ததும் நீண்டதும் கரியதுமான அடியையும் கரியனவும் நெடியனவும் குறியனவுமான கொம்புகளையும் உடையதாகக் கூறப்படுகிறது. இதன் கொம்பு பசுநிறமுடையதென்றும் சொல்லப்படும். அக்கொம்பிற்கு இரும்பு உவமையாகச் சொல்லப்படுகிறது. இம்மரத்தில் பரதவர் அம்பி முதலியவற்றைக் கட்டி வைத்தலும் இம்மரத்தின்மேல் ஏறி நெடுந்தூரத்தே வரும் மரக்கலங்களைப் பார்ப்பதும் மீன் உண்ணவந்த பறவைகள் இதன்மேல் தங்கி இருப்பதும் இயல்பு. இது மகளிர் நறவு கொப்புளித்தலாற் பூப்பதென்றும் ஆடுதலாற் பூப்பதென்றும் சொல்லப்படுகிறது. இம்மரத்தொகுதி பொழிலென்று கூறப்படும். இதன் இலை நீலநிறமும் அகலமும் உடையது. இது கொத்துக்கொத்தாகப்பூக்கும் இயல்பினது. இதன் அரும்பு நீண்ட காம்பும் உருண்ட தலையும் மங்கலான வெண்ணிறமு முள்ளது. இந்நிறத்தாலும் உருட்சியாலும் இதற்கு மண்ணுறு முத்தும் பல்லி முட்டையும் சங்குமணியும் விண்மீனும் உவமையாகக் கூறப்படுகின்றன. இவ்வரும்பு வெண்ணிறத்தையும் தன்னுட் பொன்னிறமும் செந்நிறமுமுள்ள உறுப்புக்களையும் உடையதாயிருத்தலால் இது பொன்னையும் பவழத்தையும் உள்ளடக்கிய முத்தென்று புனைந்துரைக்கப்படுகிறது. இதன்பூவும் இவ்வாறேசொல்லப்படும். இப்பூவை மக்கள் அணிவதுண்டு. இப்பூ நறுமணமுடைமையால் இதில் வண்டு முரன்று தாதுண்டுகொண் டிருக்கும். இதன் போதவிழ் நிலைக்கு ஊர்க்குருவியின் உடைந்த முட்டை உவமையாக்கப்பட்டுள்ளது. இதன் தாது பொன்னிறமுடையது; முப்பத்திருவகை ஓமாலிகைப் பொருள்களுள் ஒன்றாகவுள்ளது. இதனிழல் புகர்நிழலென்று பலவிடத்தும் கொழுநிழலென்று சிலவிடத்தும் கூறப்படுகிறது. கொழுநிழலுள்ள இம்மரத்தினடியில் மன்றம் அமைப்பர் போலும். இவையும் இம்மரத்தைப்பற்றிய வேறு சிலவும் அடியிலுள்ளவற்றால் அறியலாகும்;

னறிவித்து நீங்கக் கருதியாய்க் கப்பொருள்
சிறுவித்த மிட்டான்போற் செறிதுய ருழப்பவோ

---

(1) "வெண்டிரை பொருத வேலை வாலுகத்துக், குண்டுநீ ரடைகரைக் குவையிரும்,புன்னை" (2)"முதுநீர்ப், புணரிதிளைக்கும் புள்ளிமிழ்கான, லிணரவிழ் புன்னை யெக்கர் நீழல்" (3) "உாவுத்திரை பொருத தணி மண லடைகரை, நனைந்த புன்னை .மாச்சினை" (4) "ஓங்கல் வெண் மணற் றாழ்ந்த புன்னைத், தாதுசேர் நிகர்மலர்" (5) "வான்கடற் பரப் பிற் றாவற் கெதிரிய, மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த, முடவு முதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப், புள்ளிறை கூரு மெல்லம் புலம்ப" (6)"பாாரைப் புன்னைச் சேரி" (7) "நுரைமிதிர்ப் படுதிரைப், பாாரைப் புன்னை வாங்குசினை" (8) "முடக்காற் புன்னையும்" (9) "கொடுங்காற் புன்னை" (10) "நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்ப வும்" (11) "எல்லி யன்ன விருணிறப் புன்னை, நல்லரா முழுமுத லவ்வாயிற் றொடுத்த, தூங்க லம்பி" (12) "கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில்"(13)"நெடுஞ்சினைப்'புன்னை" (14)"குறுஞ்சினைப் புன்னை நறுந்தாது" (15) "பைங்கோட்டு மலர்ப் 'புன்னை" (16) "இரும்பி னன்ன கருங்கோட்டுப்புன்னை, பொன்னினன்ன நுண்டாதிறைக்குஞ் சிறுகுடி" (17)"பெருங்காற் புன்னைக் கருங்கோட் டிணைத்த, நாவாய்" (18) "கடலே, காறந்த கலனெண் ணுவோர், கானற் புன்னைச் சினை நிலைக் குந்து"(19)"குவவுமண லடைகரை, நின்ற புன்னை நிலந்தோய் படுசினை, வம்பநாரை சேக்குங், தண்கடற் சேர்ப்ப" (20) "புன்னை, யலங்குசினை யிருந்த வஞ்சிறை நாரை" (21) "கன்னியம் புன்னைமே

லன்னங்காள்" (22) "பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை, கருங்கோட்டுப் புன்னைத் தங்குந் துறைவற்கு" (23) "வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை" (24) "இறுநுசுப்பி னலா ரேந்துவள்ளத் தேர்திய, நறவங்கொப்புளித்தலி னருகு புன்னை பூத்தன, சிறகர் வண்டு செவ்வழி பாடமாடத் துடெலா, மிறைகொள்வானின் மீனென" (25) "அலம்புமணி மேகலையு மரிக்குரற்கிண் கிணியுமணிச் சிலம்பு மார்ப்பக், கலம்படுபொற் குயமடவா ராடுதலு மாட்டமைதி கவினக் கண்டு, நலம்படுபொற் பரிசிலெதிர் வீசுவபோ லிளம்புன்னை நறிய வீயின், குலம்புதிது பூத்துகுப்ப விம்மிதராய்ச் சிலரிவர்ந்து குற்று நின்றார்" (26) "பொன்னென நன்மலர் நறுவீ தாஅம் புன்னை நறும் பொழில்" (27) "பொங்கிரும் புன்னைப் பூம்பொழில்" (28) "எழிற்பூம் புன்னைப் பொழில்" (29) "இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை, நீலத்தன்ன பாசிலையகத்தொறும், வெள்ளியன்னவிளங்கிணர்நாப்பட், பொன்னி னன்ன நறுந்தா துதிர" (30) "அகலிலைப் புன்னைப் புகரி னீழல்" (31) "புன்னை, வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளு, மல்குறு கானல்" (32) "மண்ணு முத்த மரும்பிய புன்னை" (33) "மண்ணுப்

ஐந்தாவது நெய்தல் ௩௧.   அ௯௧

எ-து: நறியதாகிய பூத்தங்கின புன்னைக்கீழே நீ விரும்பிக்கட இருகாற்
(௧) சிறுதாயம் இடவேண்டின அளவிலே ஒருகாலன்றியே இருகாலாவதும்

பசுமுத்தேய்ப்பக் குவியிணர்ப், புன்னை யரும்பிய புலவுநீர்ச் சேர்ப்ப"
(34)"பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை" (35)"பல்லி, ஞெரித்த
சினைபோலு நீனிரும் புன்னைப், பொரிப்பூ வீதழுறைக்கும் பொங்கு
நீர்ச் சேர்ப்ப" (36) "புன்னைய மலர்ப்பொழில்க ளக்கினொளி காட்ட"
(37)"வெண்முத்தரும்பிப் பசும்பொன் மலர்ந்து, கடைந்தசெம் பவளத்
தொத்துடன் காட்டு, மிரும்புகவைத் தன்ன கருங்கோட்டுப் புன்னை"
(38) "பவழமும் பொன்னுங் குவைஇய முத்திற், றிகழரும் பீன்றது
புன்னை" (39) "முத்தரும்பிப் பைம்பொன் மலர்ந்து முருகுயிர்த்துத்,
தொத்தலருங் கானற் றுறையேய்" (40)"படுமுத்தம் புன்னை யரும்பும்
புகாஅர்" (41) "புன்னைகண் முக்கென வரும்ப" (42) "புன்னையின்
முகைநிதி பொதியவிழ் பொழிலணி புறவமே" (43) "புன்னைவெண்
கிழியிற் பவளம் புரை பூந்தாரய்" (44) "ஒள்ளொளிப் பவளத் துள்
ளொளி யடக்கி, வெள்ளிப் பூந்தா தொள்ளுந் தோற்றத்துப், போது
பொறை யாற்றாப் புன்னையம் பொதும்பர்" (45) "புன்னை, பொன்
னிறம் விரியும் பூக்கெழு துறைவனை" (46) "தாமலர்ப் புன்னை"
(47)"தாவுற் கலித்ததேம்பாய் புன்னை, மெல்லிணர்க் கண்ணி மிலைந்த
மைந்தர்" (48)"கருங்கோட்டுப் புன்னை மலரிற் றாதருந்தி, யிருங்களிப்
பிரச மூத" (49) "கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசை

தொறுஞ், சுரும்பார்க்குங் குரவினோ டிருந்தும்பி யியைபூத" (50) "உள்ளூர்க்குரீஇக் கருவுடைத் தன்ன, பெரும்போதவிழ்ந்த கருந்தாட் புன்னை" (51) "புன்னை நுண்டா துறைத்தரு நெய்தல், பொன்படு மணி யிற் பொற்பத் தோன்று, மெல்லம் புலம்பன்" (52) "பொன்னேர் நுண்டாது புன்னை தாஉம்" (53) "பொன்னேர் தாதிற் புன்னையொடு" (54) "புன்னை பொன்றூ துதிர்மல்கு மந்தண் புகலிந் நகர்" (55) "புன்னைநன்மாமலர் பொன்னுதிர்க்கும்புனவாயிலே" (56) "பொன்னி னன்ன புன்னை நுண்டாது" (57) "புன்னை நறுமலரின் பூந்தா திடை யொதுங்கும், கன்னி யிளமேதிக் காற்குளம்பு - பொன்னுரைத்த, கல் லேய்க்கு நாடன்" (58) "புன்னை நறுந் தாது ....கதிர்நகையா யோமாலிகை" (59) "இன்னிணர்ப் புன்னையம் புகர் நிழல்" (60) "கடன்மீன் றந்து கானற் குவைஇ, யோங்கிரும் புன்னை வரிநிழ லிருந்து, தேங்கமழ் தேறல் கிளையொடு மாந்திப், பெரிய மகிழுந் துறைவன்" (61) "நீனிறப் புன்னைக் கொழுநிழ லசைஇ" (62) "மன்றப் புன்னை மாச்சினை நறுவீ" (63) "மன்றத்துப் புன்னை போல"

௬. வித்தம் - சிறுதாயமென்னும் பொருளில் இச்செய்யுளில் மூன்றும் வந்துள்ளது; இது கவறாடலின் வழி வந்த ஆட்டங்களில் 'வ்ருத்தம்'

சிறுதாயம் இட்டவன் மனம்போலே ஆக்கம்பெருமினவள், நீ பிரிந்து வந்து வரைவேனென்று எமக்கறிவித்துப் பிரியக் கருதின நின்பொருட்டு அக்கவறு இருகாற் சிறுதாயம் இட வேண்டின அளவிலே ஒருகாற் சிறுதாயம் இடப் பட்டவனைப்போலே செறிந்த துயரிலே அழுந்தவோ? எ - று.

இது †தகவாகாது காரணனைக் கூறிப் பின்னும்.

ஆங்கு, அசை.

௧அ (க)கொண்டு ‡பலர்தூற்றுங் கௌவை யஞ்சாய்
தீண்டாற் கருளித் திறனறிந் தெழீஇப்
பாண்டியஞ் செய்வான் பொருளினு
மீண்டுக விவணல மேறுக தேரே

எ-து: நீ பலரும் மேற்கொண்டு தூற்றும் அலருக்கு அஞ்சாய்; இதனைக் கைவிட்டு இவளை வரைந்துகொண்டு கூடுதற்கு அருள்பண்ணி, அதற்காந் திறத்தை அறிந்து எழுந்திருந்து தேரை ஏறுவாயாக; அங்ஙனம் வரைந்தால் ‖இவள்நலம் உழவாடியாகி யிருப்பானி[ருவரி]டத்துப் பெரும்பொருளினும் ஈண்டுவதாக என வரைவுகடாயினள். எ - று.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௧௧)

(௧௩௭.) அரிதே தோழிநா ணிறுப்பாமென் றுணர்தல்
பெரிதே காமமென் னுயிர்தவச் சிறிதே
பலவே யாமம் பையுளு முடைய
சிலவே நம்மோ டுசாவு மன்றி
லழலவிர் வயங்கிழை பொலிப்ப வுலமந்
தெழிலெஞ்சு மயிலி னடுங்கிச் சேக்கையி
னழலா கின்றவர் நக்கதன் பயனே;
அ மெல்லிய நெஞ்சு பையுள் கூரத்தஞ்
சொல்லினு னெய்தமை யல்ல தவர்நம்மை
வல்லவன் றைஇய வாக்கமை கடுவிசை

‘விருத்தம்’ என வழங்கும் சொல்லின் சிதைவுபோலும்; அன்றி வித்தென்பது அம்சாரியை பெற்றுவந்ததெனினும் இயையும்; வித்தாயமென இச்செய்யுளுள் வருதலும் நோக்குக.

க. எதனை நோக்கி 'நோவன்டு' எனக்கொள்ளின், நீட்டல் விகாரமாம்.

(பிரதிபேதம்) * பெருமினையளவிபிரிந்து, †தாவகதாது, தாவாகாது, ‡ பழிதூற்றம், || இவ ளல்லும் வாடியாவி யிருப்பாளிருவரிடத்தும்பெறும்பொருளினுமீண்டுவேறாக.

வில்லினு னெய்தலோ விலர்ம ணுயிழை
வில்லினுங் கடிதவர் சொல்லினுட் பிறந்தநோய்;

கரு நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி னலித லல்ல தவர்நம்மை
வகைமையி னெழுந்த தொன்முரண் முதலாகப்
பகைமையி னலிதலோ விலர்ம ணுயிழை
பகைமையிற் கடிதவர் தகைமையி னலியுநோய்;
கஅ நீயலே னென்றென்னை யன்பினாற் பிணித்துத்தஞ்
சாயலிற் சுடுத லல்ல தவர்நம்மைப்
பாயிரு ளறநீக்கு நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினாற் சுடுதலோ விலர்ம ணுயிழை
தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்;
ஆங்கு;
உச அன்னர் காதல ராக வவர்நமக்
கின்னுயிர் போத்தரு மருத்துவ ராயின்
யாங்கா வதுகொ றோழி யெனைய தூஉந்
தாங்குதல் வலித்தன் றாயி
னீங்கரி துற்றன்றவ ருறீஇய நோயே.

இது வரைவுநீட ஆற்றளாயின இடத்துத் தலைவி யாற்றுமையை

அவடன்றனே தலைவந்து அறிவிக்கலுற்ற தோழி, தலைவன் சிறைப்புறத் தானாகத் தலைவியை வற்புறுக்க, அவள் *வன்புறை எதிரழிந்து கூறியது.

இதன் பொருள்.

அரிதே தோழிநா ணிறுப்பாமென் றுணர்தல்
(க)பெரிதே காமமென் னுயிர்தவச் சிறிதே
(உ)பலவே யாமம் பையுளு முடைய
சிலவே †நம்மோ டுசாவு (ங)மன்றி

க. "இவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே" குறுந். கஅ.

உ. "ஊழி பலவோ ரிரவாயிற் றோவென்னும்" நள. சுயம். கூசஅ.

ங. அன்றிலின் இயல்பு இந்நூற்பக்கம் அ௦௯: ங-ஆம் குறிப்பால் அறியலாகும்.

(பிரதிபேதம்) * வன்பொறை. † எம்மோடு.

வழலவிர் வயங்கிழை யொலிப்ப ‡வுலமந்
தெழிலெஞ்சு மயிலி னடுங்கிச் †சேக்கையி
னழலா கின்‡றவர் நக்கதன் பயனே

எ–து: தோழீ! நம்முடைய(க)நாணை நம்மிடத்தே நிறுத்துதலைச் செய்வாமென்று உணர்ந்திருத்தல் அரிது; அதற்குக் காரணமென்னெனில் வேட்கை பெரிதாயிராநின்றது; அதனைத் தேய்ந்த உயிர் மிகச் சிறிதாயிராநின்றது; நமக்கு வருத்தத்தைத் தருதலையுடைய யாமங்களும் பலவாயிராநின்றன; அவ்வியாமங்களிற் றுயிலாதபடி துணையைப் பிரிந்து வருந்தி நம்மோடு உசாவும் அன்றில்களும் சில உளவாயிராநின்றன; ஆதலான் அவ்வுயிர் தாங்குதல் அரிது; முடிவில் அவர் நம்மோடு கூடியதனாற் பெற்றபயன் (உ)பீலி உதிர்ந்த

மயில்போலே பொலிவழிந்த நாணத்தால் நாம் நடுங்கச் சேக்கையிலேகிடந்து ||உடம்பு நெருப்பிலே ஓடவைத்த பொன்னாற்செய்த சிலம்புமுதலியன ஒலிக்கும்படி உலமர நமக்குக் காமத்தீ உண்டாகாநின்றதோன்றுமே. எ - று.

உலமர, நடுங்க எனத் ÷திரிக்க.

அ மெல்லிய நெஞ்சு பையுள் கூரத்தந்

சொல்லினெய்தமை +யல்ல தவர்நம்மை

(ங)வல்லவன் றைஇய வாக்கமை கடுவிசை

வில்லினெய்தலோ விலர்ம னாயிழை

வில்லினும் ×கடிதவர் சொல்லினுட் பிறந்தநோய்

எ-து: அவர் நெஞ்சுபோல் வலியுடைத்தன்றி நம்முடைய வலியில்லாத நெஞ்சு வருத்தம் மிகும்படி தாம் நின்னிற்பிரியேனென்று தெளிவித்த சொல்லால் வருத்தினமையல்லாது அவர் நம்மைப் பண்ணவல்லவனாலே பண்ணப்பட்ட(ச)வடிவமைந்த கடிய விசையையுடைய (ரு)வில்லினால் எய்தற்றொழிலைச் செய்தலோ உடையரல்லர்; ஆயினும் ஆயிழாய்! அவர் தெளிவித்த சொல்லாற் பிறந்தநோய் மிகவும் வில்லினுங் கடிதாயிராநின்றது. எ-று.

க. "எழுந்த நாணு மிச்சையுந் தினம்போராடி, யகழ்தர நாணந் தோற்றதாசையே வென்றதம்மா" திருக்குற்றலத். புராணவியல்பும். கரு.

உ. "காமர் பீலி யாய் மயில்" அகம். ருஅ: உ.

ங. "வல்லவன் றைஇய பாவைகொல்" கலி. ருசு: எ.

ச. வடிவு-வார்த்தல்; "வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே" புறம். ருகஉ: ங.

ரு. வில், ஆகுபெயராய் அம்பை உணர்த்திற்றெனினும் ஆம்; "வில்லின் மாரியின் வீரன் விலக்கினன்" கம்ப. தாடகைவதை. கஎ.

(பிரதிபேதம்) * உலம் வந்து, ✝ சேக்கையுள், ‡ அவணக்கதன், || உடம்பு சிலம்பு முதலியன, ÷திரிக்க, அழலவிர் வயங்கிழை - நெருப்பிலே யோடவைத்த பொன்றூற்செய்தவிழைமெல்லிய, +அல்லாதவர் நம்மை, ×கொடிதவர்.

சொல்லர் சுடருங் (க)கனங்குழைக் காதினர்
நல்லவர் கொண்டார் மிடை

எ - து: பலபசுவையுடைய பொதுவர் கல்லிடத்தனவுங் காட்டிடத்தனவுமாகிய மெல்லியகொத்தினையுடைய (உ)கொன்றைப்பூவாலும் மெல்லியமலரையுடைய காயாம்பூவாலும் புல்லியஇலையையுடைய வெட்சிப்பூவாலும் பிடவம்பூவாலும் முல்லைப்பூவாலும் (ங) கஞ்சங்குல்லைப் பூவாலும் குருந்தம்பூவாலும் கோடற்பூவாலும் *பாங்கர்ப்பூவாலுஞ்செய்த கமழுங்கண்ணியைச் சூடினராய் விரைந்தஎற்றைத்தழுவுதலைக்காணவேண்டி முல்லைமுகையும்(ச)பீலிமுருந்தும் நிரைத்தாலொத்த பல்லினையுடையாராய்ப் பெரிய குளிர்ச்சியையுடைத்தாகிய கண்ணினையுடையாராய் மடப்பம் பொருந்தின சொல்லினையுடையராய் விளங்கும் பொன்னாற்செய்த மகரக்குழையையணிந்த காதினராய் ஆயர்மகளிர் வந்து பரணைக் கைக்கொண்டார். எ - று.

மிடை - பரண்.

அவர்மிடைகொள,
(ரு)மணிவரை மருங்கி னருவி போல
வணிவரம் பறுத்த வெண்காற் காரியு
மீன்பூத் தவிர்வரு மந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையுங்

போன்று..............நகைக்குமென் னகையாள்" சீற. துபுவ்வத்துக்.
தசைக்கட்டியை. உரு.

க. இந்நூற்பக்கம் சoஉ: க-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ) "மன்றலங் கொன்றை மலர்மலைந்து ௸, என்று திரியு மிடை

மகனே" எனவும், (ஆ) "மணிநிரை யோம்பி நேரும் வல்விடை தழுவித் தோய்ந்த, வணிநிரை மகளிர் கூத்த லலங்கலங் கொன்றை சூட்டிப், பிணிதபு மாயர்செய்கை" எனவும், (இ) "வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக், கொன்றையம் பூங்குழ லாள்" எனவும் வருஞ் செய்யுட்களை நோக்குக.

௫. கஞ்சன் குல்லை - கஞ்சா; இச்சொல், கஞ்சம், குல்லையென இரண் டாகவும் கொள்ளப்படும்.

௬. பீலிமுருந்து - மயிலிறகின் அடி.

௭. (அ) "மணிவரை யிழிதரு மணிகிள ரருவி" தொல். செய். சூ. ௭௮. பேர். மேற்கோள். (ஆ) மணிவரை யென்பதற்கு, இங்கே எழுதியிருக் கும் பொருளோடு "மணிதிகழ் விறன்மலை" (கலி. ௨௦: ௭.) என்பதும் இந்நூற் பக்கம் ௨௪௬: ௬ - ஆம் குறிப்பில் பொருந்துவனவும் ஒப்பு நோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * பாங்கற்பூவாளும்.

கரு. நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி *னலித லல்ல தவர்நம்மை
†வகைமையி னெழுந்த தொன்முரண் ‡முதலாகப்
பகைமையி னலிதலோ விலர்ம னுயிழை
பகைமையிற் கடிதவர் ||தகைமையி னலியுநோய்

எ-து: (க) § நகையமறைத்தலென்னும் மெய்ப்பாடுகாரணமாக நாங்கொண்ட நட்பிலே ÷ தோன்றிய தமது தகுதிப்பாடுகளாலே வருத்துதலொழிய அவர் நம்மைப் பொருள்களின் கூறுபாட்டாலே தோன்றிய பழைதாகிய மாறுபாடு காரணமாக வந்த பகையாலே வருத்துதலோ உடையரல்லர்; ஆயினும் ஆயி

மூாய்! அவர் ✝தமது தகுதிப்பாடுகளாலே வருத்துதலொழிய அவர் நம்மை வருத்துநோய் பகைமையினும் கடிதாயிராநின்றது. எ - று.

(உ)முதல் - காரணம். பொருள்கள், ஈண்டு மனப்பொருள் முதலியன.

கஅ ×நீயலே னென்றென்னை **யன்பினாற் பிணித்துத்தஞ்
சாயலிற் சுடுத லல்லதவர்நம்மைப்
††பாயிரு ளறநீக்கு நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினாற் ‡‡சுடுதலோ விலர்ம ணயிழை
தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்

எ - து: நின்னிற் பிரியேனென்றுசொல்லி, என்னைத் தனக்குண்டாகிய அன்பினாலே வயக்கப்படுத்தித் தமது மென்மையாலே சுடுதலொழிய அவர் நம்மைப்பரந்த(ங)இருளை அவ்விடத்தினின்றும்போம்படி நீக்கும் செடியதாகிய கொழுந்தினையுடைய நெருப்பாற் சுடுதற்றொழிலோ உடையரல்லர்; ஆயினும்

க. தொல். மெய்ப். ரு. கங.

உ. "இருமுதலின்" (தொல். பாயிரம்) என்பதற்கு 'இரண்டு காரணத்தான்' என்று இளம்பூரணரும், 'பெரிய காரணத்தான்' என்று சிவஞான முனிவரும் "நோய் முதல்" (குறள். கூசஅ) என்பதற்கு, 'நோய் வருதற் 'காரணம்' என்று பரிமேலழகரும் எழுதியிருக்கும் உரை இங்கே அறிதற்பாலன.

ங. "பகையிருட் பிழம்பு சீக்கும் பல்சுட ருமிழும் வாளான்" நைடதம். சுயம். கசுச.

(பிரதிபேதம்) * நலியதல்லது, † வகைமையுள, ‡ முதலாப். ‖ தகையினளியு, ÷ தோன்றித் தமது, ✝ நமது தகுதிப்பாடுகளாலே நம்மை வருத்துநோய், × நீயலே மென் றெம்மை, நீயலனென்றென்னை, ** அன்பினிற் பிணித்துத்தஞ், †† பாயிருளிக்கு. ‡‡ சுடுவதோ.

ஆயிழாய்! அவர் ஆண்டுச் * செய்த காமநோய் கெடுதற்குக் காரணமான † மென்மையால்நின்று எரியுங்காமநோய் நீயினுங்கடிதாயிரா‡நின்றது.எ-று.

நோய்தபு சாயலென்க.

‖ஆங்கு, அசை.

உச அன்னர் காதல ராக வவர்நமக்

இன்னுயிர் போத்தரு மருத்துவ ராயின்

யாங்கா வதுகொ றோழி யெனைய தூஉந்

தாங்குதல் வலித்தன் றாயி

னீங்கரி துற்றன்றவ ருறீஇய நோயே

எ-து: தோழீ! நெஞ்சு அத்தன்மையவர் நம்மிடத்துக் காதலையுடையவராகக் கருதி முன்பு நம்மை நீங்குதலருமையுற்ற அவ்வியற்கைப் புணர்ச்சியினன்று அவர் நம்மையுறுத்தின நோயைத் தான் பொறுத்தலைத் துணிந்த துணிவை ஆராய்ந்துபார்க்கில் அத்துணிவு எப்படியும் நம் இனிய உயிரைப் போக்கும்; அவர் நமக்கு (க) உயிரைப் போகாமல்மீட்கும் மருத்துவராய் இருப்பாராயின், அந்நிலை ÷எக்காலத்து அவர்க்கு உண்டாவது கொல்லென +வன்புறை எதிரழிந்து கூறினள். எ – று.

(உ) வலித்தன்று என்பது வலித்ததன்றென்னும் மறைப்பொருள் தாராமை உணர்க.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது "இடைநிலைப்பாட்டு" (ந)என்றதனாற் × தாழம்பட்ட துசையின்றி ஐந்தடியான் இடைநிலைப்பாட்டேந்த ஒத்தாழிசைக்கலி. (உ௦)

க. இந்நூற்பக்கம் சுக: உ – ஆம் குறிப்புப் பார்க்க.

௨. வலித்தன்று=வலித்தது - துணிந்தது; இஃது இங்கே வினையாலணையும் பெயராய் நின்றது. "காண்டல் வலித்தன்று" என்பது பு - வெ. கைக்கிளை. பெண்பாற். கொளு. ௬. இவ்வகை ஆட்சியே அந்நூற் கொளுவில் மலிந்து கிடக்கின்றது. இதனை வினைத்திரிசொல்லென்று முற்காலத்தவரும், அகரச்சாரியை பெறாது அன்சாரியை பெற்று வந்த சொல்லென்று பகுபத முடிபு கூறும் இக்காலத்தவரும் வழங்குவர்.

௩. தொல். செய். சூ. ௧௩௪. இச்சூத்திரத்தின் உரையில் "நகைமுதலாக.............தகைமையி னலியுநோய்" என்னும் பகுதியைப் பேராசிரியரும், (தொல். செய். சூ. ௧௩௭) இச்செய்யுள் முழுவதையும் நச்சினார்க்கினியரும் இடைநிலைப்பாட்டு ஐந்தடியான் வந்ததற்கு மேற்கோள் காட்டியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * செய்தமென்மையால், † மென்மையாய். ‡ நின்றது நோய்தபுசாயல் - காமநோய் கெடுத்தற்குக் காரணமான சாயலென்க ஆங்கு. || ஆங்க அசை. + எக்கிலத்தே, ✝ வன்பொறை, × தாழ்ப்பட்ட.

(௧௩௮.) எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு
வறிதாகப் பிறரென்னை நகுபவு நகுபுடன்
மின்னவிர் நுடக்கமுங் கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்ச மென்னோடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா றெவன்கொலோ
மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
யணிப்பூளை யாவிரை யெருக்கொடு பிணித்தியாத்து

௧௦ மல்லலூர் மறுகின்க ணிவட்பாடு மிஃதொத்த
னெல்லீருங் கேட்டிமி னென்று;
௧௨ படரும் பனைஈன்ற மாவுஞ் சுடரிழை
நல்கியா னல்கி யவை;
௧௪ பொறையென் வரைத்தன்றிப் பூநுத லீத்த
நிறையழி காமநோய் நீந்தி யறையுற்ற
வுப்பியல் பாவை யுறையுற் றதுபோல
வுக்கு விடுமென் னுயிர்;
௧௮ பூளை பொலமல ராவிரை வேய்வென்ற
தோளா ளெமக்கீத்த பூ;
௨௦ உரிதென் வரைத்தன்றி யொள்ளிழை தந்த
பரிசழி பைதனோய் மூழ்கி யெரிபரந்த
நெய்யுண் மெழுகி னிலையாது பைபயத்
தேயு மளித்தென் னுயிர்;
௨௪ இளையாரு மேதி லவரு முளையயா
னுற்ற துசாவுந் துணை;
௨௬ என்றியான் பாடக் கேட்டு
அன்புறு கிளவியா ளருளிவந் தளித்தலிற்
றுன்பத்திற் றுணையாய மடலினி யிவட்பெற
வின்பத்து ளிடம்படலென் றிரங்கின ளன்புற்
றடங்கருந் தோற்றத் தருந்தவ முயன்றோர்தம்
முடம்பொழித் தயருல கினிதுபெற் றாங்கே.

இது (க)மடலூர்ந்து தலைவியையெய்திய தலைவன் தான் மடலூர்ந்த வாறும் அவளை எய்தியவாறும் தனக்குப் பாங்காயினோர்க்குக் கூறியது.

இதன் பொருள்.

(உ)எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு
வறிதாகப் பிறரென்னை நகுபவு நகுபுடன்

ரு (ந)மின்னவிர் நுடக்கமுங் கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்ச மென்னொடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா *றெவன்கொலோ
(ச)மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
யணிப்பூளை (ரு)யாவிரை பெருக்கொடு பிணித்தியாத்து

க. புணர்ந்தபின் நிகழ்வதாகிய பெருந்திணைக் குறிப்புள் தலைமகற்கே யுரித்தாகிய ஏறிய மடற்றிறத்துக்கு இச்செய்யுள்மேற்கோள்; தொல். அகத். சூ. ருச. இளம். சூ. கரு. நச்.

உ. "செய்துற்றிணையோடு பெருந்திணையும் மயங்கி வந்ததற்கு "எழின் மருப் பெழில்வேழம்..........கேட்டீமினென்று" என்னும் பகுதி மேற்கோள்; இ - வி. சூ. ருகரு.

ந. "துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி, யொளியோ டுரு வென்னைக் காட்டி யளியளென், னெஞ்சாறு கொண்டா ளதற்கொண் டுந் துஞ்சே, னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின், பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப, வோங்கிரும் பெண்ணை மடலூர்ந் தென் னெவ்வநோய், தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக, வீங் கிழை மாதர் திறத்தொன்று நீங்காது, பாடுவேன் பாய்மா நிறுத்து" கலி. கங.க: ரு - கங.

௪. (அ) "மணிநிற வுருவின தோகையும்" (ஆ) "மரகதக் கதிர்தழைத்த கலாப மஞ்ஞை"

௫. (அ) "குனிகா யெருக்கின் குவிமுகிழ்விண்டவொடு. பனிவா ராவிரைப் பன்மலர் சேர்த்தித், தாருங் கண்ணியுந் தைஇத் தன்னிட, மீரு மடலோன் வரவென் கொல்லென, 'நீர்த்துறைப் பெண்டிர் நெஞ்சழிந் திரங்கு..........றணிமடற் கலிமா மன்றத் தேறித்தன், னணிநலம் பாடினு மறியலன்" துணைநாற்பது.(ஆ) "மறவல் வாழிதோழி துறைவர், கடல்புரை பெருங்கிளை நாப்பண், மடல்புனை தேறிநிற் பாமே பொழுதே" தொல். கள. ௬.௨௩. மேற்.

(பிரதிபேதம்) * எவன்கொல்லோ.

ஐந்தாவது நெய்தல் ௨௧. அரின

௪0 மல்லலூர் மறுகின்கண் ணிவட்பாடு (௧)மிஃதொத்த
னெல்லீருங் கேட்டீமி *னென்று

எ-து: மின் விளங்குகின்ற நுடக்கமும் கனவினது தோற்றமும்போலே தன்வடிவைக் காட்டி என்னுடனே முற்படக் கூடிப் பின்னர்ப் பிறர் என்னை (௨)இகழ்ந்து சிரிப்பனவர்றையும் எனக்குக் காட்டி எனக்குரிய நெஞ்சம் என்னோடு கூடி நில்லாமல் அழகினையுடைய மருப்பினையும் அழகினையுமுடைய (௩.)வேழம் சொரிதலைச்செய்யுமதத்தாலே பாகனுக்குச் செய்யுந்தொழில்களைத் தவிர்ந்து தான் வேண்டியவாறொழுகாதபடி தன்னை விலக்குந் தோட்டியையுங் கைகடந்தாற்போலத் தன்மேற் சென்ற வேட்கையினாலே என்னேவலைச் செய்தலைத் தவிர்ந்து தான் வேண்டியவாறொழுகாதபடி (௪) தனக்குக் காவலாகிய அறிவும்நம்(௫)அறிவாலேஆராய்ந்த அடக்கமும் இயல்பாகத்தோன்றிய

(சு)ளானுடனே வறுவிதாக அவற்றைக் கைகடக்கும்படி †மிகவும் என்னெஞ்சைக் கைக்கொண்டு தன்னலத்தை யான் காணாமல் மறைத்தவளைக் கூடும்வழி எவ்வழிதானென்றுஆராய்ந்து இனி(எ)மடலேறுதலே கூடும்வழியென்று கருதி

௧. இந்நூற்பக்கம் ௩௮௬: ௩-ஆங் குறிப்புப் பார்க்க.

௨. "பல்லார்நக் தெள்ளப் படுமடன் மாவேறி" கலி. ௬௧. ௨௨.

௩. "பிறையெனு நுதலவள் பெண்மை யென்படு, நறைகம ழலங்கலா னயன கோசர, மறைதலு மனமெனு மத்த யானையி, னிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே" கம்ப. மிதிலைக்காட்சி. ௪௦.

௪. "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ, நன்றின்பா லுய்ப்ப தறிவு" குறள். ௪௨௨.

௫. (அ) "கற்றறிந்தார் கண்ட தடக்கம்" பழ. ௨௪௩. (ஆ) "கற்றறிவு குலமேன்மை கருணைபெரும் புகழ்செல்வங் கைம்மா றெண்ணு, துற்றுதவுங் கொடைசீர்மை யொழுக்கமருந் தவநியம முறவின் கேண்மை, மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகுந் தூய்மைகுணம் வனப்பி யாவும், பெற்றிடினு மடக்கமில்லாப் பெருமிதத்தின் லத்தனைக்கும் பிழையுண் டாமால்" பிரபோத. விவேகன்சேனை. ௩௩.

௬. "நோனா வுடம்பு முயிரு மடலேறு, நாணினை நீக்கி நிறுத்து" குறள். ௧௧௩௨.

௭. "மடலேறலாவது:—தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக்காற் குதிரையும் பனக்கருவி லுள்ளனவற்றால் வண்டில் முதலானவுஞ் செய்து அக்குதிரையின்மேலேறுவது; மடலேறுவான் திகம்பரனாய் உடலெங்கும் நீறுபூசிக் (1)மிழி லலியர்கைப்படாது தானேநீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவளை யுபயரை வரைந்து கைப்பிடித்து

(பிரதிபேதம்) * இன்று, † மிகவுமன்னெஞ்சை.

(க) மடன்மாவிலே சூட்டவேண்டி நூலாலே நீலமணிபோலும் நிறத்தையுடைய (உ) பீலியையும் மற்றை அழகையுடைய பூளைப்பூவையும் ஆவிரம்பூவையும் எருக்கம்பூவோடே தொடுத்து அம்மடன்மாவிலே கட்டி வளப்பத்தையுடைய ஊரின் மறுகின்கண்ணே இவளொருத்தன் (ங) இவளைப் பாடும்; பாட்டை எல்லீருங் கேட்பீராக என்று சொல்லிப் பாடத் *தொடங்கி. எ - று.

ஊர்ந்தவே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி அக்கிழிமேற் பார்வையுஞ் சிந்தையுமிருத்தி வேட்கையுடைத்தனாய் வேறுணர்வின்றி (2) ஆவூரினும் அழன்மேற்படினும் அறிதலின்றி மழை வெயில் காற்றால் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங் கூடிவந்து, (3) 'நீ மடலேறுதியோ, அவளைத்தருதும் சோதனை தருதியோ' என்றவழி, இயைந் தானாயின் அரசனுக்கு அறிவித்து அவனேவலால் அவன் இனைந்து கையத்தந்து 'மடலேறு' என்றவழி, ஏறு முறைமை:—பூளை எலும்பு எருக்கு இவைகளாற் கட்டிய மாலையணிந்துகொண்டு அம்மாவில் ஏற அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும் அவ்வுருளை உருண்டோடும் பொழுது, பனங்கருக்கு அறுத்தவிடமெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியந்தோன்றின் அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது. இரத்தங்கண்டுழி அவனைக் கொலைசெய்து விடுவது. இவை புலவரால் காட்டிய வழக்கென்றுணர்க" என்பது தஞ்சை. க0க. உரையில் உள்ளது. இது தூலோத்துங்க. கஉஅ. குறிப்பில் (1) தான் காமித்த தலைவியினுருவை ஒரு படத்தில் தன் கையாலெழுதி யென்றும் (2) ஆவுரிஞ்சினுமென்றும் (3) நீ மடலேறிச் சோதனை தந்தால் நீ இச்சித்த பெண்ணைக் கொடுக்கச் செய்வோமென்று கூற அதற்கு அவனிசைந்தானாயி னென்றும் விளக்கத்தோடும் சிறிது சொல் வேறுபாட்டோடும் உளது. ஆவிரம்பூவும் அணிவதுண்டு.

க. சிலப். எ0 - எக-ஆம் அடிகளும் அவற்றினுரையும் பார்க்க.

உ. "பூவல்ல பூளை யுழிஞையொடியாத்த, புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி, பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி" கலி. கச0: ச - கூ.

௩. (அ) "கழிகின்ற வென்னையு நின்றநின் கார்மயி றன்னையும்யான்,
இழியொன்ற நாடி யெழுதிக்கைக் கொண்டு" (கோவையார். எ௩.)
என்பதன்விசேடவுரையில், 'தனக்கு அவளயலென்னுங்கருத்தினனாய்,
நின் கார்மயிலென்றான். என்னையும் நின் கார்மயிரன்னையும் மட
லிடத்தெழுதவேனென்றதென்னை? கார்மயிலை யெழுதுவதன்றித் தன்
னையு மெழுதுமோவெனின், மடலெழுதிக் கையிற்கொண்டால் உரை
யாடுகையின்றி இவனும் ஓவியமாகலின்,' மடலின்றலையிலே தன்
னூரையுந்தன்பேரையும் அவளூரையு மவள்பேரையும் எழுதுகையால்
என்னையு மென்றான்' என்றுள்ள குறிப்பால் மடலூர்பவற்கு உரை
யாடாமை உண்டென்றறியப்படுமாயினும் (ஆ) "என்றியான் பாடக்
கேட்டு" (இ) "பாடுவேன் பாய்மா நிறுத்து" (ஈ) "பாடெனிற் பாடவும்

பிரதிபேதம்) * தொடக்கியென்க லவனவற்றையும்.

நகுவனவற்றையுங்காட்டி என்றான், மடலேறுதல் (க) வரைபாய்தலாகிய இரண்டினையுந் தான் பின்புகருதுதலின். இவனொருத்தன் எனத் தன்னைப் *பிறர்போற் கூறினான். அஃது உலகத்தார் பாடும் பாட்டன்மையுந் தோற்றுவித்துநின்றது.

இவளென்று சுட்டிற்று, கையில் (உ) எழுதிப்பிடித்த கிழியிலவளை.

௧உ (௩) படரும் பனையீன்ற மாவுஞ் சுடரிழை
(௪) நல்கியா ணல்கி யவை

எ-து: விளங்குகின்ற இழையினையுடைய, என்னாலே காமிக்கப்பட்டவள்

எனக்குங் காதலித்துத் தந்தவை, வருத்தமும் வருத்தத்தாலுண்டான பனி யீன்ற மடலாற் செய்த குதிரையும். எ - று.

வல்லேன் சிறிதாங்கே, யாமெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ"
(உ) "அணிநிலைப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி, யணிநலம் பாடி வரற்கு" (௩௭) "வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாட" (கலி. கஙஅ: உசு, கஙக: கங, கசO: கங - கஎ, கசக: கு - சு, உஉ) என இந் நூலுட் பலவிடத்தும் வருதலால், அவளைக் குறித்துப் பாடுதலாகிய உரையாடலுண்டென்பது தெளிவாம். இந்நூற்பக்கம் அகுசு: கு-ஆம் குறிப்பும் பார்க்க.

க. (அ) "விளையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளநிறைக், கரையூர் பொழுதிளங் காளையர் தாங்கிழி கைப்பிடித்துத், தரையூர் தொறும் பெண்ணை மாமட லூர்வர் தவிர்ந்துபின்னும், வரையூர்வர் தஞ்சையர் கோன் வாணன் மாறையில் வாணுதலே" தஞ்சை. கOஉ. (ஆ) "முன்னோன் றிருக்கொடி யேற்றத்தி னன்முயங் காதொழிந்தாற், பின்னோன் யழைக்குடை வீழ்க்தொழி வார்............வசுதேவன் பெற்ற விருவரிலே" (இ) "பரசன் சொரூப மெடுப்பது வோமலை பாய்ந்துகடன், முரசன் சொரூப மெடுப்பதுவோ...............அன்பர் பேரெண்ணமே" மாறன். கஉகு, கருச. (ஈ) "மடவார் காம வெள்ளத் தின் மோதலுற்றூர், கிழியொன்று கைப்பிடித் தேமட லேறுவர் கேண்மையற்றூர், பழியொன்று மெண்ணில ராய்ப் பறம் பேறியும் பாய்வர்களே" திருவாவடுதுறைக். ககக.

உ. இந்நூற்பக்கம் அகுஅ: ௫ - ஆம் குறிப்பில், முதலிலுள்ள செய்யுளாலும் "திடம்பெற்ற காசினி யோர்யானு மங்கையுஞ் சித்திரஞ்சேர், படம் பெற்றிருக்கிலன் றேதிரு மாலெனப்பாவிப்பரே" (மயூரகிரி. கசக.) என்பதனாலும் தலைவனுருவும் எழுதுவதுண்டென்று தெரிகிறது.

௩. "தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு, மாலை யுழக்குந் துயர்" குறள். ௧௧௩௫.

௪. (அ) "நல்கினு நல்கா ஞயினும்" புறம். ௮௦: ௫; (ஆ) "நல்வினை கேளாய்" மணி. ௧௭: ௫௬.(இ) "நமக்குநீர் நல்குநி ராயின்"

(பிரதிபேதம்) * பிறன்போற்.

௧௪ (௧)பொறையென் வரைத்தன்றிப் பூநுத லீத்த
(௨)நிறைஅழி காமநோய் நீந்தி யறையுற்ற
(௩)வுப்பியல்*பாவை யுறையுற் றதுபோல
வுக்கு விடுமென் னுயிர்

இ-ள்: என்னுடைய உயிர்தான் †பொறுத்தல் என் எல்லைத்தன்றாகப் பொலவும்பெற்ற நுதலினையுடையாள் தந்த, நிறைஎன்னுங் குணம் அழிதற்குக் காரணமான காமநோயை நீந்தி உப்புப் பாத்தியிலே கிடந்த உப்பால் இயன்ற பாவை மழைத்துளியை உற்ற தன்மைபோலக் கரைந்துவிடா நின்றது. எ - று.

௧௮ பூளை (௪)‡பொலமல ராவிரை (௫)வேய்வென்ற
தோளா ளெ[ம](ண)க்||கீத்த பூ

எ - து: வேயை வென்ற தோளையுடையாள் எனக்குத் தந்த பூக்கள் பூளைப்பூவும் பொன்போன்ற பூவையுடைய ஆவிரம்பூவும். எ - று.

எனவே, தான் +கொடுத்தன நல்லபூ என்றான். ÷பொலமல ரென்னும் முடிவு "தொடரியலான" (௬)என்னும் இலேசான் முடித்தாம்.

---

௧. "இந்நோய், பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயின்" (கலி. ௫௮: ௨௦-௨௧) என்பதும் அதன் குறிப்பும் "பொறுக்கல்லா நோய்செய்தாய்"

(கலி. கூச: கக) என்பதும் ஒப்புநோக்கற்பாலன.

உ. (அ) "நிறையு முண்டோ காமங் காழ்கொளின்" மணி. ௫: உ௦. (ஆ) "நிறையென்ப தில்லைக் காம நோர்நின் றிறக்கு மாயின்" சூளாமணி. கல்யாண. கடுஙு.

௩. (அ) "நெடுவெள் ளுப்பி னிரம்பாக் குப்பை, பெரும்பெயற் குருகி யாஅங்கு" (ஆ) "மிகுபெய, லுப்புச்சிறை நில்லா வெள்ளம் போல, நாணுவரை நில்லாக் காம நண்ணி, நல்கினள்" அகம். உ௦கூ: கச-கரு. உ௦அ: கஅ - உக. (இ) "உப்பின் பெருங்குப்பை நீர்படிய னில்லாகும்" நீ. அரு. (ஈ) "தடம்புன னெருங்க வுடைந்துநிலை யாற்று, வுப்புச் சிறைபோ லுண்ணெகிழ்ந் துருகி" பெருங். (௩) உ௦: கஉ௦ - கஉக.

ச. "பொன்னே ராவிரைப் புதுமலர்" குறுந். கஎரு.

௫. வென்றவென்பது மரபுபற்றி உவமச்சொல்லாய் வருதற்கு, "வேய் வென்ற தோள்" என்பது மேற்கோள்; தொல். உவம. ௬. கஎ. இளம்.

௬. தொல். புள்ளிமய. ௬.கூக.இச்சூத்திரத்தின் இளம். நச். உரைகளிலும் ஒன்றின முடித்தலால் மெண்கணம் வந்தவிடத்தும் பொன் என்பது

(பிரதிபேதம்) *பாஅதை, † பொறுத்ததென் னெல்லே, ‡ பொனமல ராவிரம். || அவித்தபூ. ¶ தொடுத்தன நல்ல, ✛ பொனமலரென் றுமுடிப்பு 'தொடரியல்' 'ஆவிரை' என்று பிலைான்முடித்தாம்.

ஐந்தாவது நெய்தல் உக. அகக்

உ௦ (க)உரிதென் வரைத்தன்றி யொள்ளிழை தந்த
*பரிசழி (உ)பைதனெய் மூழ்கி (௩)யெரிபரந்த
நெய்யுண் மெழுகி னிலையாது பைபயத்
(ச)தேயு மளித்தென் னுயிர்

எ - து: ஒள்ளிய இழையினையுடையாள் என்னாற் பொறுக்குமெல்லைத்

தன்றூக எனக்குரித்தாகத் தந்த, என்னியல்புகள் அழிதற்குக் காரணமான, வருத்தத்தையுடைய காமநோயிலே என்னுயிர் அழுந்தி, நெருப்புப் பரந்த செய்யுள்ளே கிடந்த மெழுகு மெத்தென உருகித் தேயுமாறுபோல †நிலையில்லாதே மெத்தென மெத்தெனத் தேயாநின்றது; இஃது எல்லாரானும் அளிக்குந் தன்மையுடைத்து. எ - று.

உச இளையாரு மேதி லவரு ‡முளையயா
னுற்ற துசாவுந் துணை

எ - து: யானுற்ற காமநோய்க்கு யான் உளையும்படி உசாவுந் துணை இளையபிள்ளைகளும் இக் காமநோய்க்கு அயலாருநமே; பிறரில்லை. எ - று.

உசு என்றியான் பாடக் கேட்டு

அன்புறு கிளவியா ளருளிவந் தளித்தலிற்
றுன்பத்திற் றுணையாய ||மடலினி யிவட்பெற
வின்பத்து ளிடம்படலென் றிரங்கின ளன்புற்

பொலமெனத் திரிந்து வருதலுண்டென்பதற்கு, "பொலமலராவிரை" என்பது மேற்கோள்.

க. உரிது. அகம். கO: எ; சூளா. மந்திர. ௩௪, அரசியல். ௩௫௭; கலி. எச: கஎ; அதன் குறிப்பும் பார்க்க.

உ. "பைதனெய்" கலி. ௩௨:கச, க௩O: கஅ.

௩. (அ) "அருநா ணளிய வழல்சேர் மெழுகொத் தழிகின் றதே" கோவையார். சச. (ஆ) "காதல ராயினுங் காதல் கையிகந், தேதில ராயின மடிகட் கின்றென; ஆதலை மெழுகினின் றுருகினர்" சூளா. முத்திச். ௩ச. (இ) "உண்ணுறை யழிய வுலையிடு மெழுகொத் தொருமொழி தோழியர்க் குரைத்தாள்" பிரமோத். பிரதோட. ௩எ. (ஈ) "அழல்படு மெழுகே யென்னக், கொம்மென வுருக வுள்ளங் குதுகலித்து" (உ) "தீசேர் மெழுகென வுள்ளம் விள்ள" கந்த. திருநகர். கஉஉமேரு. ச. (ஊ) "உலையின் மீது மெழுகொத் துருகினுள்" அரிச். மயாந. சச. (எ) "மெழுகா ரழலுற் றெனவிளகி" (ஏ) "மெழு கொள்ளெரிக்கதவியாங்குளநெகிழ்ந் துருகினள்" விநாயக. முக்கலர். இ; கிருச்சமதரு.உ.

௯. "துடியிடையீ, ரருளா தொழியி னொழியா தழியுமென் னுருயிரே"

கோவையார். ௭௫.

பிரதிபேதம்) * பரிவழி, † இக்கில்லாதே, ‡ உவ்வுயாதுற்றதகாறுக், || மடலின்வட்பெற.

சூ௧௨ கலித்தொகை ௧௩௯.

நடங்கருந் தோற்றத் தருந்(க)தவ *முயன்றோர் தம்
முடம்பொழித் துயருல கினிதுபெற் றாங்கே

எ - து: இப்படி இப்படி யான்பாட அன்புறுகிளவியாள் அதனைக்கேட்டு அருள்பண்ணி அதன் மேலே அன்புற்று வந்து என்னை அளிக்கையினாலே, மனவேட்கை அடங்கின அரிய விளக்கத்தையுடைய செய்தற்கரிய தவத்தை முயன்றோர் தம்முடம்பை இவ்வுலகிலேபோகட்டுச் சுவர்க்கத்தை †இனிதாகப் பெற்றாற்போல, துன்பத்திற்குத் துணையாய் நின்ற மடல் இனி ‡இவளைப் பெறும்படியாக இன்பத்துக்கு இடம்படக்கடவா (?) னென்று இரங்கினு ||ளென்றான். எ - று.

இது பூளையாவிரை எனத் தலைவிரவின, பாட்டிடைமிடைந்த, ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வாராது தரவும்போக்கும் வந்த, கலிவெண்பாட்டு. (௨௧)

(௧௩௯.) சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனானா லிவ்விருந்த
சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பேன் மான்ற
௫ துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளொன்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சேன்

னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்

பிணையலங் கண்ணி மிலைந்த மணியார்ப்ப

க. (அ) "உடம்பொழிய வேண்டி னுயர்தவ மாற்று" (ஆ) "தவத்தாற் சுவர்க்கமாய்" சிறுபஞ்ச. சு; ந.சு. (இ) "சுவர்க்கந் தவத்தால்" ஏலாதி. எஎ. (ஈ) "ஒழுக்கிய வருந்தவத் துடம்பு நீங்கின, ரழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே" சீவக. ந௨ரு. (உ) "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க மென்னுமீ தருமறைப் பொருளே" கம்ப. நகரப். ரு. என்பவையும் (ஊ) "தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅது, ததன்பய மெய்திய வளவை மான" பொருந. கக - க௨. (எ) "உடம்பொடு துறக்கக ருற்றவரை யொத்தார்" (ஏ) "உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார்" (ஐ) "துறந்த செல்வ னிளையத் துறக்கர்தான், பறந்து வந்து படிந்தது பல்சனர், பிறந்து வேறொருலகுபெற் றாரென, மறந்து வைகினர் முன்னைத்தம் வாழ்வெலாம்" (ஒ) "மெய்யினி னேடருந் துறக்கமுற் றாரென" கம்ப. கடிமணப். க. மந்திர. எரு. இளைகண்டு நீங்கு. எ. மீட்சி. கருச.என்பவையும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * மூயன்றேருடம், † இன்தாற்பெற்றுற், ‡ இவன் பெறும்படியாக, ‖ என்றுன்.

(க)கொலைவன் சூடிய (உ)குழவித் திங்கள்போல்
*வளையுபு பவிந்த கோடணி சேயும்
பொருமுரண் முன்பிற் (ந) புகலேறு பலபெய்
தரிமாவும் பரிமாவுங் களிறுங் காமும்
(ச)பெருமலை விடரகத் தொருங்குடன் குழீஇப்
(ரு)படு(சு)மழை யாடும் வரையகம் போலுங்

எ-து: அவர் தத்தம்மிடையைக் கைக்கொள்ள ஆயர் (ஏ) மணிகளையுடைய (அ)மலையிடத்தினின்றும் வீழ்கின்ற அருவிகள்போல அழகினது எல்லையைப்

க. "ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை, மாற்றருங் கணிச்சி மணி மிடற்றோனும்...... ......நால்வ ருள்ளுங், கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்" புறம். கசு: க- கக. என்புழி 'மணிமிடற்றோனைக் கூற்றமென்றது அழித்தற்றொழிலுடைமையான்' என்னும்விசேடவுரைப் பொருளாட்சியும், "கொலைவன் யார்கொலோ கொலைவன்மற்றிவன்" புறம்.

கருஉ: அ. "கொலைவனல்லையோ கொற்றவ னுயினை" மணி. உரு. கஎச. என்னும் சொல்லாட்சியும் ஈண்டு அறிதற் பாலன.

உ. குழவி யென்பது சூத்திரத்துக் கூறப்படாத பிறிதின்மேலும் வருமென்பதற்கு, "குழவித் திங்கள்" என்பது மேற்கோள்; தொல். மர. சூ. உச. பேர்; மயிலைநாதர் குழவியென்பது மதிக்கும் உரித்தாய்வரு மரபிற்றென்று எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலது; நன். பொது. சூ. கஎ.

ங. "போர்புக லேற்றுப் பிணரெருத்தில்" கலி. கoங: ஙச.

ச. (அ) "பெருமலை விடரகத்து" (ஆ) "பெருமலை விடரகத் தருமிசை" புறம். ஙஎ: ச; கக: அ.

ரு. படுதல் என்பது பெய்தல் என்னும் பொருளில் வருதல், (அ) "படுமழை யடுக்கத்த" (ஆ) "பாடுபெயல்" கலி. சஅ: ச; கo: சு. என்பவற்றாலும் 'பாட்டம்' என இருவகைவழக்கினும்வழங்கும் சொல்லாலும் அறியலாகும்.

சு. "ஊர்பெழு கிளர்புளர் புயர்மங்குலி னறைபொங்க" கலி. கoரு: உரு.

எ. மணிவரை என்பதற்கு நீலமணி போன்றமலை யெனப் பொருள் கொள்ளினும்பொருந்தும்.

அ. (அ) "அயமிழி யருவிய வணிமலை" (ஆ) "இலங்குதா ழருவியோ

டணிகொண்ட நின்மலே" (இ) "ஆமிழி யணிமலே" (ஈ) "அயனக்தி யணிபெற வருவியார்த் திழிதரும், பயமழை தலேஇய பாசொல் விறல் (பிரதிபேதம்) * யணிபுமலிர்த.

ஐந்தாவது நெய்தல் உஉ. ஆகுக.

க0 வோங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து;

கச யாமத்து மெல்லியு மெவ்வத் திரையலேப்ப
மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
றேமொழி மாத ருறாஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு;

கஅ உய்பா வருநோய்க் குயவாகு மையை
லுறீஇயா ளீத்தவிம் மா;

உ0 காணுந ரெள்ளக் கலங்கித் தலைவந்தெ
ணாணெழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு
மாணிழை மாதரா ளேஎரெனக் காமனா
தாணையால் வந்த படை;

உச காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா;

உக அகைபெரி யானுதென் னுருயி ரெஞ்சும்
வகையினு லுள்ளஞ் சுடுதரு மன்னோ

முலையே ரிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட நெஞ்சு;
அறன்மன்ற காமரு நோய் நீமன்ற
நேரிழை யீத்தவிம் மா;

ஆங்கதை;

அறிந்தனி ராயிற் சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ
ருயர்நிலை யுலக முறீஇ யாங்கென்
றுயர்நிலை தீர்த்த லுங்தலைக் கடனே.

இது மடலேறுகின்ற தலைவன் சான்றோர்க்குக் கூறியது.

இதன் பொருள்.

அஙச **கலித்தொகை ௧௩௯.**

(௧)சான்றவிர் வாழியோ சான்றவிரென்றும்
(௨)பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி (௩)யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனானா (௪)லிவ்விருந்த
சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பேன் மான்ற
துளியிடை (௫)மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து (௬)மணியார்ப்ப

வோங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன் று நீங்காது
(எ)பாடுவேன் பாய்மா நிறுத்து

எ - து: நற்குணங்கள் எல்லாம் அமைந்தீர்! நற்குணங்களெல்லாம் அமைந்தீர்! நீர் வாழ்வீராக! பிறருடைய நோயும் தம்முடைய நோய்போலே எந்நாளும் பேணி அதனாற் பெறும் அறனை அறிந்து போதுதல் உலகத்துள்ள சான்றவர்க்கெல்லாம் * முறைமையானால், நமக்கும் அது முறைமையென்று கருதி நமக்கொரு காரியத்தினைக் கூறுவேன்; அஃதியாதெனின், ஒருத்தி

க. "சான்றவிர் வாழியோ சான்றவிரென்னும்" என்பது கண்டோர் கேட்பாராகத் தலைமகன் கூற்று நிகழ்ந்ததற்கு மேற்கோள்; தொல். செய். சூ. கஙக. பேர்; நச்.

உ. "அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய், தந்நோய்போற் போற்றாக் கடை" குறள். ஙகரு.

ங. "தோன்றிமாய்ந் துலக மூன்றிற் றுயரெய்து முயிர்க டம்மை, யீன்ற தாய் போல வோம்பி யின்பத்து ளிருத்தி நாதன், மூன்றுலகிற்கு மாக்கி முடிவிலாத் தன்மை நல்கு, மாண்றநல் லறத்தைப்போலு மரிய தொன் றில்லை கண்டாய்"

ச. "அவ்வெதிர்" (கலி. க0: கங) என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு அறிதற்பாலன.

ரு. கலி. கஙஅ: ரு - கக - ஆம் அடிகள் ஒப்புநோக்குக.

சு. "பணைபடு கலிமாப், பூண்மணி கறங்க வேறி" குறுந். கஎங.

எ. இந்நூற்பக்கம் அ0அ: உ-ஆம் குறிப்பில் (ஆ) முதலியவை பார்க்க.

(பிரதிபேதம்) * முறைமையானும்.

மயங்கினமழைக்கு நடுவில் மின்போலே வந்துதோன்றித் தன்னொளியோடே தன்னுருவையும் என்னைக் காணப்பண்ணி என்னை அளிக்குந்தன்மையளாய் அளித்துப் *பின்னர் என்னெஞ்சைத் தான்வரும்வழியாகக்கொண்டுவிட்டாள்; அதனை முதலாகக்கொண்டு துயில்கொள்ளேனாய் அசைகின்ற அழகினை யுடைய (க)ஆவிரையினது பூவோடே எருக்கினது கட்டுதலையுடைய அழகினை யுடைய கண்ணியையுஞ் சூடி வளருங் கரிய பனைமடலாற் செய்த குதிரையை மணிகள் ஆரவாரிப்ப ஏறி அப்பாய்மாவை (உ)மனத்தே நிறுத்தி யான் நீங்காம னின்று வருத்தத்தைத் தருகின்ற என் காமநோயைத் தாங்கமாட்டாமையால் உண்டான †மனவருத்தத்திற்கு இளைப்பாறுதலாக இறுகின பூணினையுடைய மாதர் என்னை வருத்தின கூற்றிலே ஒருகூற்றினைப் (ங) பாடுவேன்; அதனை இவ்விடத்திருந்த சான்றீர்! கேளுமென்றான். எ - று.

பலராதலிற் சான்றீர் சான்றீரென்றான். ஈர் என்று விளியேலாது (௪) குறுகிநின்றது. ஓ, அசை. பின்பு சான்றீர் என்றது தான் பின்பு கூறுகின்ற தற்கு எதிர்முகமாக. ‡கொண்டும் என்னும் உம்மை இசைநிறை. ‖ "ஒருத்தி யொளியோடொரு ....துஞ்சேன்" என்றது(ரு)தன்கட்டோன்றிய அசைவு பற்றி அவலம் பிறந்தது.

கச (சு)யாமத்து மெல்லையு மெவ்வத் திரையலைப்ப
(எ) ÷ மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்

க. இந்நூற்பக்கம் அடுஎ: எ-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ) "மன்றத்து மடலேறி, நிறுக்குவென் போல்வல்யா னீடு பழியே" கலி. ருஅ: உ௨ - உங. (ஆ) "மடற் கலிமா மன்றத் தேறித்தன், னணி நலம் பாடிறு மறியாள்" துண. என்பவற்றை நோக்க, 'மனத்தே' என்பது 'மன்றத்தே'என்று இருக்கவேண்டிப்தென்று தோற்றுகிறது.

ந. இந்நூற்பக்கம் அ௫அ: ந - ஆம் குறிப்பில் (ஆ) முதலியவை பார்க்க.

ச. 'அர்' ஈராய் விளியேற்கும்; தொல். விளி. சூ. உக.

ரு. இச்செய்திக்கே "துளிபிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி... ......துஞ்சேன்" என்னும் அடிகள் மேற்கோள்; தொல். மெய்ப். சூ. ரு; நச்; இ - வி. சூ. ருஎஅ.

சு. "யாமத்து மெல்லையும்" என்னும் பகுதி (தொல். அகத். சூ. ருச. நச்) சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாப் பெருந்திணைக்கும் "காம மேதகர் வார் தம காதலால், யாம மும்பக லும்மறி யாமையால்" (சீவக. கநரு.) என்புழி யாமம் இரவென்னும் பொருளில் வருமென்பதற்கும் மேற்.

எ. "மாமேலேனென்று.........பட்டு" என வருதலின் இச்செய்யுள் ஏறியமடற்றிறமான பெருந்திணையென்பர் நச்சினார்க்கினியர்; தொல்.

(பிரதிபேதம்) * பின்னர் றெஞ்சை, † மனம் வருத்த, ‡ கொண்டும்: உம்மை, || ஒத்தி, ✝ மாமேவி னின்று.

றேமொழி மாத ருறூஉ துறீஇய

(க)காமக் கடலகப் பட்டு

எ - து: தேன்போலும் மொழியினையுடைய மாதர் *தான் காமுறாதே என்னைக்காமுறுத்தின காமமாகிய கடலிலே அகப்பட்டு (உ)உசாத்துணை இல்லாத நவியாமத்தும் உசாத்துணையுள்ள பகலிடத்தும் † மனவருத்த மாகிய திரைகள் வந்து அலைக்கையினாலே மாவின்மேல் இருக்கின்றேனிருக்கின்றேனென்று மனத்தாற்கருதியிருந்து அம்(ந)மடன்மாவொருதெப்பமாக அக்கடலை நீந்துவேன்; அஃது என்னிலை; என்றான். எ - று.

கஅ (சு)உய்யா வருநோய்க் ‡துயலாகு மைய

லுறீஇயா ளீத்தவிம் மா

எ - து: என்னை மயக்கமுறுத்தினவள் அதற்கு மருந்தாகத் தந்த இம் மடன்மா யான் பிழையாமைக்குக் காரணமான அரிய காமநோய்க்குப் பிழைக்கும்படிக்குச் செய்வதொன்றாய் இராநின்றதென்றான். எ - று.

உ௦ (ரு)காணுந ரெள்ளக் ‖கலங்கித் தலைவந்தெ

ஞஒளாழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு

அகத். சூ. கரு, சூ. ருக. இ - வி நூலாரும் இச்செய்யுளை அதற்கே மேற்கோள் காட்டினர்; இ - வி. சூ. ருகக.

க. (அ) "காமக் கடல்" (ஆ) "காமக் கடும்புனல்" குறள். ககசு௪. ககரு௭.

உ. (அ) "மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா, வென்னல்ல தில்லை துணை" குறள். ககசுஅ. என்பதும் (ஆ) "மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற" குறள். ககருசு. என்பதற்கு, 'எல்லாருந் துயிலும் இடையாமத்தும் யானிருந்து மடலூர்தலையே கருதா நிற்பேன்' என்று பரிமேலழகர் எழுதியிருக்கும்உரையும் ஈண்டு அறிதற்பாலன.

௩. (அ) "துறைசையன்னார், கணையார் விழிதந்த காமக் கடலைக் கடக்க நெஞ்சே, புணையாகக் கோடன் மடலன்றி வேறு பொருளில்லையே" திருவாவடுதுறைக். ககஅ. (ஆ) "அடலான வேல்விழி யார்தை கொடாவிடி லாசைநெடுங், கடலானசோகச் சுழிபூடகப்பட்ட காமுகர்தா, மடலான தோணிகொண் டேநீந்திச் சேர்வர் மணக்கரைக்கே" மாறன். க௨௫.

௪. (அ) "என்னு ளிடும்பை தணிக்கு மருந்தாக, நன்னுத லீத்த விம்மா" கலி. ௧௪௦: க௫ - கசு. (ஆ) "உயலாற்று, வுய்விஞெய்" குறள். க௧௭௪.

௫. (அ) "பிற ரெள்ளத் தோன்றி, யொருநாண் மருங்கிற், பெருநா

ணீக்கித், தெருவி னியலவுந் தருவது கொல்லோ" குறுந். கஅஉ.
(ஆ) "பல்லார்கக் கெள்ளப் பமேடன் மாவேறி" கலி. சுக: உஉ.

(பிரதிபேதம்) * தாங் காமுருதே, † மனம் வருத்த ‡ உயவாரும், || கலங்கத்.

ஐந்தாவது நெய்தல் உஉ. அகஎ

மாணிழை மாதரா ளேஎரெனக் காமன
*தாணையால் வந்த படை

எ - து: மாட்சிமைப்பட்ட இழையினையுடைய மாதரான் ஏரால் வந்த வருத்தமென்று யான் கூறும்படியாகக்(க)காமனுடைய ஏவலாலே வந்த காம நோயாகிய படை என்னைக் கண்டார் இகழும்படி யான்கலங்க என்னிடத்தே வந்து என்னுடைய(உ)ஆண்டன்மையின் அழகாகிய மதிலைச் சூழவிட்டிருந்து புறத்தையெல்லாமுடைத்துப் பின்னர் உள்வாயை அழியா †நிற்குமென்றான். எ - று.

கலங்கி, கலங்க என்க.

உச (ங)காமக் கடும்பகையிற் ‡றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா

எ - து: காமமாகிய கடியபகை ஆண்மையை உள்ளும்புறம்பும் அழித்தலாலே இங்ஙனம் வடிவுகொண்டு தோன்றினஎனக்கு அழகையுடைத்தாகிய நுதலினையுடையாள் தந்த இம்மடன்மா, பரிகாரமாயிற்றென்றான். எ - று.

உரு அகையெரி யானுதென் னு(ச)ருயி ரெஞ்சும்
||வகையினு லுள்ளஞ் சுடுதரு மன்னோ
முகையேரிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட ÷நெஞ்சு

எ - து: முல்லைமுகையை ஒக்கும் இலங்குகின்ற எயிற்றையும் இனிய தாகிய மகிழ்ச்சியையுமுடைய மாதருடைய அழகாலே அவளிடத்தைப்பற்றிக்

---

௧. (அ) "பீழைமை பலவுஞ் செய்து பிணிப்படை பரப்பி வந்து, வாழுயிர்ப் பொழித்து வவ்வி வலிந்துயிர் வாங்கி யுண்ணுங், கூழைமை பயின்ற கூற்ற வரசனை" (சூளா. துறவு. ௧அ) என்பதும் (ஆ) "காலனைச் சூழ்ந்த நோய்போ னபுலமா விபுலர் சூழ" (சீவக. ௧௧௪௪) என்பதற்கு, 'காலன் ஏவினவிடத்தே சேறற்கு அவனைச் சூழ்ந்த நோய் போல மாவின்மேலே நபுல விபுலர் சூழ்ந்தவா' என்றெழுதியிருக்கும் உரையும் இதன் நிழலாக இருக்கின்றன.

௨. (அ) "நாணொடுநல்லாண்மைபண்டுடையே னின்றுடையேன், காமுற்றா ரேறு மடல்" (ஆ) "காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு, நல்லாண்மை யென்னும் புணை" குறள். ௧௧௩௩. ௧௧௩௪.

௩. "காம முழந்து வருந்தினார்க் கேம, மடலல்ல தில்லை வலி" குறள். ௧௧௩௧.

௪. "உயிரெஞ்சு துயர்செய்தல்" கலி. ௯௦: ௯.

(பிரதிபேதம்) * ஆனையான். † நிற்குமேயென்றான். ‡ தோன்றினோர்க்கு, || வகையினான், ÷ நோய்.

கொண்ட என்னுடைய நெஞ்சிடத்து உள்ளீதைச் சுடப்பட்டு எரிகின்ற காமத்தீ என் அரிய உயிர்போங் கூற்றாலே அமையாதே நின்று (௧)சுடுதலைச் செய்யும்; ஐயோ! யான் எங்ஙனம் ஆற்றுவேனென்றான். எ - று.

(௨)உறுப்புடையதுபோலே நெஞ்சுக்கு உள்ளமுண்டென்றான்.

அழன்மன்ற காம வருநோய் நிழன்மன்ற

நேரிழை யீத்தவிம் மா

எ - து: காமமாகிய பொறுத்தற்கரியநோய் அறுதியாக நெருப்பு; ஒத்த இழையினையுடையாள் அதற்குப் பரிகாரமாகத்தந்த இம்மடன்மா அறுதியாக அதற்கொரு நிழலாய்இருந்ததென்றான். எ - று.

ஆங்கதை

௩௧. அறிந்தனி ராயிற் சான்றவிர் (௩)*தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ

---

௧. "ஊர்தலைக்கொண்டு............காமத்தீ, நீருட் புகினுஞ் சுடும்" (கலி. ௧௪௪: ௩௧ - ௩௨) என்பதும் அதன் குறிப்புள் இவ்விடத்துக்குப் பொருத்துவனவும் ஒப்புநோக்கற்பாலன.

௨. தொல். பொருளி. சூ. ௨.

௩. இந்திரன், விண்ணுலகில் தன்பால் வந்த யயாதியரசனை நோக்கிப் பலவும்வினவுங்கால், 'தவத்தில் நீ யாருக்கு ஒப்பாயினை' என்றதற்கு அவன், 'தவத்தில் எனக்கு ஒப்பானொருவனையும் நான் காணவில்லை' என, இந்திரன், 'பிறரை அவர் பெருமையை அறியாமலே அவமதித்த இத்தவற்றால் நீ மேலுலக வாழ்வொழியக் கீழே விழுவாய்' என, 'அவ்வாறாயின் நல்லோரிடையே விழவேண்டுகிறேன்' என்று அவ் விந்திரன்பால் அவ்வரம்பெற்று விழுமரசன் சிலர் வேள்விசெய்யு மிடத்துக்கு நேரே இறங்குகையில் அங்கிருந்த அஷ்டகன் மிகப் பல செய்திவினவ, அவற்றுக்குவிடைகள்கூறிக் கீழேவீழ விரைந்தபோது, அவனும் பிரதர்த்தனனும் வஸுமனஸும் சிபியும் தமக்கு மேலுலக முண்டென்று கேட்டறிந்து அவ்வுலகங்களை யயாதிக்குக் கொடுப்ப, அவன் கொள்ளேனெனமறுத்துப் பின்பு அங்குவந்த தவமகளை அவன் கூற்றால் தன்மகள் மாதவியென்றும் அவர்களை அவள்பெற்ற பிள்ளைக ளென்றும் தெளிந்து அவள் கூறிய நியாயத்தால் அவளும் அக்காலவர்

களும் அளித்த தவப்பயனை மாற்றவொண்ணாதென்று, மேலுலகினின்று அங்குவந்த ஐந்து பொற்றேர்களில் தனித்தனியே அந்நால்வர்களுடன் ஏறி மேலுலகடைந்தனனென்று ஸ்ரீமஹாபாரதம். ஆதிபர்வம். பிரதிபேதம்) * தான்றவ மொழிஇ.

ஐந்தாவது நெய்தல் ௨௬. அ௩௬

(க)ருயர்நிலை யுலக முறீஇ யாங்கென்
றுயர்நிலை *தீர்த்த லுந்தலைக் கடனே

எ - து: என்று கூறி என்னிடத்துச் செல்கின்ற வருத்தத்தை நீர் அறிந்தீராயிற் சான்றீராயுள்ளீர்! அமைந்த சான்றோர் இவன் தவஞ்செய்தற்கு உரியனென்று தவத்துள்ளே †கூட்டிக்கொள்ளப்பட்ட அரசனை, அவன் தான் தவஞ்செய்தலினீங்கித் துறக்கத்திற் சேறலை வழுவுகையினாலே, அவ்வழுவுதலை அவர் மீட்டுத், தவஞ் செய்வித்து, உயர்ந்த நிலைமையையுடைய சுவர்க்கத்தே போகவிட்டுத் துயர் ‡தீர்த்தாற்போல, (உ)என் துயரினது தன்மையைப் போக்குதலும் நும்மிடத்து முறைமை; எனச் சான்றோரைநோக்கிக் கூறினன், எ - று.

இது தன்கட் டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

இது(ங)தரவும் போக்கும் ||பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு. (உஉ)

(க௪0.) கண்டவி ரெல்லாங் கதுமென வந்தாங்கே
பண்டறியா தீர்போல நோக்குவீர் கொண்டது
மாவென் றுணர்மின் மடலன்று மற்றிவை
பூவல்ல பூளை யுழிஞையோ டியாத்த
புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
யடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி

நெடியோன் மகனயந்து தந்தாங் கனைய
வடிய வடிந்த வனப்பினென் னெஞ்ச
கO மிடிய விடைக்கொள்ளுஞ் சாய லொருத்திக்
கடியுறை காட்டிய செல்வேன் மடியன்மி
னன்னே னொருவனேன் யான்;

அO - அஎ-ஆம் அத்தியாயத்துள்ள செய்தி இம்மூலத்துக்கு ஒருவாறு பொருந்துமென்று தோற்றுகிறது.

க. (அ) "உயர்நிலை யுலகம்" மது. ககஎ. (ஆ) "உயர்நிலை யுலகத்து" புறம். ருO: கரு.

உ. "சான்றோ ரிருந்த வவையத் துற்றோ, னாசாகென்னும் பூசல்போல, வல்லே களைமதி யத்தை" புறம். உகக: அ - கO.

ந. தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச் சுரிதகத்தான் வந்ததற்கு இச்செய்யுள் மேற்கோள்; தொல். செய். சூ. கருச. பேர்; நச்.

(பிரதிபேதம்) *தீர்த்தலுந்தலை, †கூடிக்கொள், ‡ தீர்ந்தாப்போல. ||பாட்டேமிடைமிடைந்த.

கரு என்னும், பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ
வென்னு ளிடும்பை தணிக்கு மருந்தாக
நன்னுத லீத்தவிம் மா;
கஎ திங்க ளரவுறிற் றீர்க்கலா ராயினுந்
தங்காதல் காட்டுவர் சான்றவ ரின்சாய

லொண்டொடி நோய்நோக்கிற் பட்டவென் னெஞ்சநோய்
கண்டுங்கண் ணோடாதிவ் வூர்;

தாங்காச் சினத்தொடு காட்டி யுயிர்செகுக்கும்
பாம்பு மவைப்படி னுய்யுமாம் பூங்கண்
வணர்ந்தொலி யைம்பாலாள் செய்தவிக் காம
முணர்ந்து முணராதிவ் வூர்;
வெஞ்சுழிப் பட்ட மகற்குக் கரைநின்றா
ரஞ்சலென் றாலு முயிர்ப்புண்டா மஞ்சீர்ச்
செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காம
மறிந்து மறியாதிவ் வூர்;
ஆங்க;
என்க ணிடும்பை யறீஇயினெ னுங்கட்
டெருளுற நோக்கித் தெரியுங்கா லின்ன
மருளுறு நோயொடு மம்ம ரகல
விருளுறு கூந்தலா ளென்னை
யருளுறச் செயினுமக் கறனுமா ரதுவே.

(க)இது மடலேறுவேனென்ற தலைவன் கண்டார்க்குக் கூறியது.

இதன் பொருள்.

(௨)*கண்டவி ரெல்லாங் †கதுமென வந்தாங்கே
பண்டறியா தீர்போல ‡நோக்குவீர் கொண்டது

க. இச்செய்யுளையும் ஏறிய மடற்றிறமான பெருந்திணையென்று (தொல். அகத். சூ. ௧௩. உரையில்) இவர் கூறியிருக்கிறார்.

௨. "கண்டவிரெல்லாம்............நோக்குவீர்" என்பது எல்லாமென்னுஞ்

சொல் சிறுபான்மை முன்னிலைப் பன்மைக்கண் வருமென்பதற்கு மேற்கோள்; தொல். பெயரி. சூ. ஙங. இ - வி. சூ. ககக.

(பிரதிபேதம்) * கண்டனிர், † கதமெனவாங்கே, ‡ நோக்குநிர்

ஐந்தாவது நெய்தல் உங　　　　அஎக

(க)மாவென் றுணர்மின், மடலன்று மற்றிவை
பூவல்ல (உ)பூளை யுழிஞையோ டியாத்த
புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
யடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி
(ங)நெடியோன் மக*னயந்து தந்தாங் கனைய
வடிய வடிந்த வனப்பினென் னெஞ்ச
மிடிய †விடைக்கொள்ளுஞ் சாய லொருத்திக்
(ச)‡கடியுறை காட்டிய செல்வேன் மடியன்மி
னன்னே னொருவனேன் யான்

எ - து: என்னைக்கண்ட நீங்களெல்லாம் (ரு) கடிதுவந்து அவ்வூரிடத்து என்னைப் பண்டு அறியாதீர்போலப் பாராநின்றீர்; காப்பெய்தமணியைக்கழுத்திலே கட்டிக் கையாற் பிடித்தலமைந்த வாய்க்கயிற்றோடே யான் கையிற் கொண்டது மடன்மாவன்று, ஏறுவார் ஏறப்படுங் குதிரையென்றும் பின்னைத் தலையினும் மார்பினுங் கிடக்கின்ற இவை தகடாகிய பொன்னினது விளக்கத்தைஒக்கும் ஆவிரம்பூவாற்செய்த கண்ணியும்(சா) உழிஞைப் பூவோடே

க. (அ) "மாவென மடலூ மூர்ப" குறுந். கள. (ஆ) "மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்" வளையாபதி.

உ. இந்நூற்பக்கம் அகுஉ: எ - ஆம் குறிப்புப் பார்க்க.

ந. (அ) "மதனற்குமெழுத வொண்ணாச், சிதையைத் தருதலாலே" (ஆ) "இத்தத் தோன்றலை,யெழுதலாங்கொலிம் மன்மதனுலென்றாள்" கம்ப. மிதிலைக்காட்சி. கு. உலாவியல். உகு. என்பவற்றால் காமன், ஓவியத்துறை கைபோயவனெனப்படுதலும் இங்கே நோக்கற்பாலது.

ச. "அடியுறை" கலி. கச: ச. அதன் குறிப்பும் பார்க்க.

கு. (அ) "கதுமெனக் கண்டவர்க்கு" (ஆ) "கதுமென நோக்கன்மின்" கலி. கூ0: கு, கசஎ: கஎ. (இ) "கதுமெனத் தாணேக்கி" குறள். ககஎஙு. (ஈ) இந்நூற்பக்கம் சஉஉ: எ-ஆம் குறிப்பும்பார்க்க.

சு. (அ) 'உழிஞை - கொற்றான்; அது குடநாட்டார் வழக்கு' என்பது புறம். கூ0. விசேடவுரை. (ஆ) இது கொடியை யுடையதென்று "நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு" (புறம். எசு: கு, எஎ: ங) என்பதனால் தெரிகிறது. (இ) இதன் பூ மதில்வளைப்பவருக் குரித்தென்று சிலரும் (ஈ) அவருக்கும் மதில் காப்பவருக்கு முரித்தென்று சிலரும் கூறுவர்; (உ) இது பூளையின்வகையு ளொன்றென்றும் கூறப்படும்.

(பிரதிபேதம்) * கயந் தூகந்தாங்கு, † இடைகொள்ளும்.

பூளைப்பூவும் புனத்தையுடைய மலையிலே மயிலுதிர்த்த பீலியும் விளங்குகின்ற [தனமல்ல,] (தாமல்ல) என் மனத்தாலே நன்றென்று கருதி யான் கட்டின பூந்தாரென்றும் உணர்வீராக; திருமால் மகனாகிய காமன் என் தலைமையை அழித்தலை விரும்பிக்கொடுக்கப்பட்டுத் தன்மெய்யிடத்தே அத்தன்மையவாகிய நன்மைகளெல்லாந் தோன்றிய வனப்பாலும் சாயலாலும் வலிகெகிறின்றன் மையையுடைய கண்களாலும் என்னெஞ்சாகிய அரண் இடிந்துபோம்படி நடுவேவந்து என்னைக் கைக்கொள்ளும் ஒப்பிலாதவளுக்கு யான் வழிபட்டு

உறைதலை உலகத்தார்க்குக் காட்டவேண்டிச் செல்லா நின்றேன்; இதனைக் கண்டு நீர் மனத்தே வெறுத்துக் குவிந்திராதேகொள்ளும்; யான் அத்தன்மை யையுடையேன் ஒருவனென்றான். எ – று.

அன்னேனென்றது தான் இவ்வாறுதற்கு முன்செய்த தீவினையை. நூல் ஆகுபெயர். தந்தென்பது "செலவினும் வரவினும்" என்னும் (க)சூத்திரப் பொதுவிதியான் ஈண்டுக் கொடுத்தலை உணர்த்திற்று. அனைய என்றது நெஞ்சறி சுட்டாய் நின்றது. வடிய என்றது வடுவகிரின் தன்மையையுடைய கண்களை உணர்த்திற்று. அடியிலே யுறைதல் வழிபாடென்னும் பொருடந்து நிற்றலின், அதனோடே ஒருத்திக்கு என்னும் நான்கனுருபு முடிந்தது.

கரு. என்னுளும், (உ)பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே
பாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ
(ங)வென்னு ளிடும்பை தணிக்கு மருந்தாக
நன்னுத லீத்தவிம் மா

எ–து: நீ ஒன்றுபாடென்று கூறுவீராயில் எப்படியால் எப்படியாயினுஞ் சிறிது பாடவும் வல்லேன்; அம்மடன்மா மேலே இருந்து அஃது (ச)இடவாய் வலவாய் பெயரும்படி நின்மெய்யை(ந்) அசைப்பாயென்பீராயின் அத்தொழிலை யான் ஆளுதலையும் வல்லேன்; இப்பொழுது என்னெஞ்சிடத்துக் காமநோயை யான் ஆற்றும் மருந்தாக நன்னுதல் தந்த இக்குதிரையினைப் பாடுவேனோ என்றான். எ – று.

அவர் பாடென்னுமையின், மேல் தன்னை வருத்தினமையைக் கூறு கின்றான்.

க. தோல். களவி. சூ. உஅ.

உ. இந்நூர்பக்கம் அகூஅ: ங–ஆம் குறிப்புப் பார்க்க.

ங. "உய்யா வருநோய்க் குயலாகு மைய, லுறீஇயா ளீத்த . விம்மா" கலி. கஙக: கஅ – கக.

ச. 'இடவாய் வலவாயாகிய இடத்தை' புறம். ச: எ. உரை.

௫. "சங்கா ஞவ ரெருக்கலன்ற் தாடித் தனித்து நின்றே" என்று மடலேற வார்க்கு ஆடுதலும் கூறப்படுதல் காண்க.

(பிரதிபேதம்) *பாடலும் வல்லேன், † ஆறும்.

நான்காவது முல்லை ௩. கூசுக

*போக்கின வெள்ளிய கால்களையுடைய காரியாகிய ஏற்றினையும் மீன் பொலிவு பெற்று விளங்குதல்வரும் அந்திக்காலத்து மேகத்தையுடைய சிவந்த ஆகாயம்போலே அழகிய ஒளிபரந்த புள்ளிகள் வெள்ளையாயிருக்கின்ற சிவந்த ஏற்றையும் கொலைத் தொழிலையுடைய இறைவன் சூடிய இளையதாகிய திங்களைப்போல வளைந்து நிறைந்த கொம்பை அணிந்த சிவந்த ஏற்றையும் பொருகின்ற†மாறுபாட்டினையும் வலியினையுமுடைய கொண்டாகின்ற பிற ஏறுகள் பலவற்றையும் தொழுவினுள்ளே விடுகையினாலே ஒழுங்குபட்ட புகைசூழ்ந்த அத்தொழு, சிங்கமாகிய மாவும் குதிரையாகிய மாவும் களிறுகளும் (க)முதலையிலொருசாதியாகிய காரமும் பெரிய மலையின் முழையிடத்திலே சேரத் திரளப்பட்டுப் பெய்கின்ற மழை ஒருங்குகிரியும் மலையிடத்தை யொக்கும். எ - று.

௨௨ தொழுவினுள், (௨)புரிபு புரிபு புக்க பொதுவரைத்
(௩)தெரிபு தெரிபு குத்தின வேறு

எ - து: அத்தொழுவினுள்ளே அவ்வேறுகளைத் தழுவுதற்கு விரும்பி விரும்பிக் குதித்த பொதுவரைத் தெரிந்து தெரிந்து அவ்வேறுகள் குத்தின. எ - று.

௨௪ ஏற்றின், (௪)அரிபரி பறுப்பன சுற்றி
யெரிதிகழ் கணிச்சிபோன் சூடிய பிறைக்க

வெற்ப" (கலி. ௪௬: ௯. ௨௫; ௪௮: ௧; ௫௩: ௬ - ௭.) என்பவற்றால்

மலையை அருவி அழகுறுத்துவதாகக் கூறுதல் அறியப்படும்.

க. (அ) "ஒடுங்கிருங் குட்டக் கருஞ்சுழி வழங்கும், கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும்" (குறிஞ்சி. உருசு - உருஎ.) என்பதனால், கராம் முதலைச்சாதி விசேடமென்பது அறியலாகும்.

உ. "எழுசீ ரடியே முடுகிய நடக்கும்" என்பதன் பின்னுள்ள 'முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும்' என்னும் (தொல். செய். கக) சூத்திரத்தி னுரையில் முதலீரடிக்குமென்ற வும்மை எச்சவும்மை யாதலால், நாற் சீரடியும் இத்துணைப் பயிலாது முடுகுமென்று கூறி, "புரிபு புரிபு புக்க பொதுவரைத், தெரிபு தெரிபு குத்தின வேறு" என்பதை மேற்கோள் காட்டுவர். பேர்.

ங. 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் தன் வினைமுதல் வினை கொண்டு முடிந்ததற்கு, "தெரிபுதெரிபு குத்தினவேறு" என்பது மேற் கோள்; நன். வினை. சூ. உரு. மயிலை. விருத்தி: இரா. இ-வி. சூ. உசக.

ச. கலிப்பாவுறுப்பில் முதலடி முடுகியலாயும் முதலடியும் மூன்றுமடியும் முச்சீராயும் வந்ததற்கு, "அரிபரிபு..........சுடர்வலந்தன" என்பது மேற்கோள்; தொல். செய். சூ.'எ௦. நச்.

(பிரதிபேதம்) * போக்கினவொள்ளிய. † மாறுபட்டினையுமுடைய.

ஐந்தாவது நெய்தல் உங.

கஎ (க) திங்க ளரவுறிற் றீர்க்கலா ராயினுந்
தங்காதல் காட்டுவர் சான்றவ ரின்சாய
லொண்டொடி *நோய்நோக்கிற் பட்டவென் னெஞ்சநோய்
கண்டுங்கண் ணோடாதிவ் வூர்

எ - து: சான்றோர் திங்களைப் பாம்புசென்று மறைக்குங்கால் அதனை வருத்தத்தைத் தீர்க்கமாட்டாராயினும் அதன்மேல் தமக்குள்ள காதலைக் காட்டித் துன்புறுவர்; அதுபோல இனிய மென்மையினையுடைய ஒண்டொடியது (௨)நோய்செய்யும் நோக்கிலே அகப்பட்ட என்னுடைய நெஞ்சிடத்துக் காமநோயைக் கண்ணுற் கண்டுவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்க்க மாட்டாராயினும் (௩)கண்ணோட்டமாயினுஞ் செய்தலிலர். எ - று.

௨௯ தாங்காச் சினத்தொடு காட்டி (௪)யுயிர்செகுக்கும்
(௫)பாம்பு மவைப்படி னுய்யுமாம் பூங்கண்
(௬)வணர்ந்தொலி யைம்பாலாள் செய்தவிக் காம
முணர்ந்து முணராதிவ் வூர்

---

௧. (அ) "அங்கண்மதிய மரவின்வாய்ப் பட்டெனப், பூசல்வாயாப் புலம்பு மனைக் கலங்கி, யேதின்மாக்களு நோவர் தோழி, யொன்று நோவாரில்லைத், தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே" (தொல். அகத். சூ. ௩. நச். மேற்கோள்.) என்பதும் (ஆ)"அழலுடைக் கடவுளை யரவு சேர்ந்தென, விழவுடை முதுநகர் விலாவிக் கின்றதே" (சீவக. ௧0௬௨.) என்பதும் ஒப்புநோக்கற்பாலன.

௨. "ஒருநோக்கு நோய்நோக்கு" குறள். ௧0௯௧.

௩. (அ) குறள். ௫௭௧ - ௫௭௭ - ஆம் செய்யுட்களும் (ஆ) "கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்" திரிகடுகம். ௫௨. (இ) "தெற்றப் பகைவ ரிடர்ப்பாடு கண்டக்கால், மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்" பழ. ௩௧௩. (ஈ) "கண்வனப்புக் கண்ணோட்டம்" சிறுபஞ்ச. ௧. (உ) "ஒன்று நரம்பென்கோ வொன்றுத வென்பென்கோ, வின்றசை தா னென்கோ யாதென்கோ - மென்றோடையாழ்ப், பண்ணோட்டு மின்சொற் பணைத்தோளாய் சேர்ந்தவர்பாற், கண்ணோட்டமில்லாத கண்" (ஊ)"யாவர் வரினு மெதிரேற்குந் தெய்வமடப், பாவை யகத்திருந்தும் பாடின்றே-மேவினர்பாற்........கண்ணோட்டமில்லாதகண்" பாரதம். (எ) "கண்ணுக்குப் பூணமணிப்பூண் கண்ணோட்ட மென்பதெலாங் கருணையன்றோ" வில்லி. அருச்சுனன்றவ. ௬௩. என்பவைகளும் இங்கே அறிதற்பாலன.

௬. "பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடும்" நாலடி. ௨௨௦.
௭. "சான்றோ, ரவைப்படிற் சாவாதாம் பாம்பு" பழ. ௩௧௩.

(பிரதிபேதம்) * ஓர்நோக்கின்.

எ - து: பிறராற் றுங்கவொண்ணாத சினத்தோடே தன்வடிவைக்காட்டி அவருயிரைப்போக்கும் பாம்பும் பலரிடைப் பட்டாற் சாவாதென்னும்(௧)உலக வழக்கிற்கேற்பச் சான்றோர் அவைப்படிற் பிழைக்கவுங்கூடும்; அத்தன்மையே னல்லாத எனக்குப் பூப்போலுங் கண்ணையும் (௨)கடைகுழன்று தழைக்கின்ற ஐம்பாலினையுமுடையாள் செய்த இக்காமநோயின் வருத்தத்தை அறிந்துவைத்தும் இவ்வூரிலுள்ளார் தீர்ப்பதோர் உபாயம் அறிகின்றிலர். எ - று.

௨௭ வெஞ்சுழிப் பட்ட மகற்குக் கரைநின்றா
ரஞ்சலென் றலு முயிர்ப்புண்டா *மஞ்சீர்ச்
செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காம
மறிந்து மறியாதிவ் வூர்

எ - து: கடிய (௩)நீர்ச்சுழியிலே அகப்பட்டானொருமகனுக்குக் கரையில் நின்றோர் † சென்றெடாமல் அஞ்சாதேகொள்ளென்று கரையிலே நின்று கூறினும் அவனுக்கு(௪)வருத்தந் தீருதலுளதாம்; அதுபோல, அழகிய சீரையுடைய செறிந்தழகினையுடைத்தாகிய முறுவலையுடையாள் செய்த இக் காமநோயை அறிந்துவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்த்தலாற்றாராயினும் ஒரு தண்ணளி செய்தலையும் அறிகின்றிலர். எ - று.

ஆங்க; அசை.

௬0 என்க (ரு)ணிபெம்பை ‡யறீஇயினெ னுங்கட்
டெருளுற நோக்கித் தெரியுங்கா ||வின்ன
மருளுறு நோயொடு மம்ம ரகல

க. "பலரிடை விழுந்த பொல்லாப் பாம்புமா ருயிர்மா யாதென், றுலகவ ருரைக்கும் வார்த்தை யுண்மையே போலும்"

உ. (அ) "வணரொலி யைம்பாலார்" இன்னா. கடு; (ஆ) "வணரைம்பால்" (கலி. ருஅ: க) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௩. "கயஞ்சான் மறுசுழி யழுந்தினளாக, முயங்கின னெடுத்த வண்ணலை" தமிழ்நெறி. மேற்கோள்.

௪. (அ) "உயிர்ப்பிடம் பெறூஅது" (பொரு௩.கககஃ) என்பதற்கு, 'இளைப்பாற இடம் பெறாதே' என்றும் (ஆ) "உயிர்ப்பாக" (கலி. க௩௩: கக) என்பதற்கு, 'இளைப்பாறுதலாக' என்றும் எழுதியிருக்குமுரைகள் நோக்கற்பாலன.

ரு. "ஆருயிர் யாதொன் றிடர்உறு மாங்கதற், கோருயிர் போல வுருகியுயக் கொள்ள, நேரி னதுமுடி யாதெனி னெஞ்சகத், தீரமுடைமை யருளி னியல்பே" தணி. துறவு. கஎ0.

(பிரதிபேதம்) * மெய்சேர், இன்சேர். † சென்றடாமல், ‡ உறீஇயினேன், உரைஇயினேன், இன்னும்,

ஐந்காவது நெய்தல் உ௪.   அசநி

(க) * விருளுறு கூந்தலா ளென்னை
யருளுறச் செயினுமக் (உ)கறனுமா ரதுவே

எ-து: என்னிடத்து நிகழ்கின்றவருத்தத்தை யான் அறிவித்தேன்; இனி இதனை நும்மிடத்தே தெளிதலுறப் பார்த்து ஆராயுங்காலத்து இத்தன்மைத் தாகிய மயக்கமுறுங் காமநோயாலுண்டாகிய என்மயக்கம்நீங்கும்படி இருட்சி யுறுகின்ற கூந்தலையுடையாள் என்னை அருளுதலுறும்படி பண்ணுவீராயின், அது நுமக்கு அறனும் புகழுமாமென்றான். எ - று.

இது தன்கட் டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

(௩)இது பாடெனில் ஆடெனில் என எதுகையியைந்த அடி என்னும் என வேறு†நின்ற சீரோடுங் கூடி ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (௨௩)

(௱௪௧) அரிதினிற் றோன்றிய யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்தாங்குக் காட்டிமற் றாங்கே
யறம்பொரு ளின்பமென் றம்மூன்றி னொன்றன்
றிறஞ்சேரார் செய்யுந் தொழில்க ளறைந்தன்
றணிநிலைப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி
யணிநலம் பாடி வரற்கு;

௭ ஒரொருகா லுள்வழிய ளாகி நிறைமதி
நீரு ணிழற்போற் கொளற்கரியள் போரு

---

௧. "இருளுற ழிருப்பைக்கூந்த லிவண்மாட்டு" கலி. ௪௪: ௧௮. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௨. "அறனுமாதுவே" ஐங். ௪௪.

௩. தொல். செய். சூ. ௧௫௪. உரையில் இவர் இச்செய்யுளை மேற்கோள் காட்டி, "இது, 'பாடெனில்' என்றும், 'ஆடெனில்' என்றும் எதுகை யியைந்த அளவடி, 'என்னும்' என வேறுநின்ற சீரோடுங்கூடி ஐஞ்சீ ரடுக்கிற்று. இதனுள், 'ஆங்க' எனத் தனிச்சொல் வந்தது" என்று எழுதியிருப்பதும், பேராசிரியர் அதனுரையில் இதனைமேற்கோள்காட்டி,

"இச்செய்யுள் தரவும்போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச் சுரிதகத்தாலிற்றதாகலின், இதனுள், 'என்ஞனும்பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே' என்னும் அடி ஐஞ்சீரடுக்கினுள் வந்தது; என்னை? 'பாடெனிற்...........பாடுகோ' என்னும் அளவடி யிரண்டும் எதுகையா யமைந்தவழி, 'என்ஞனும்' என வேறுநின்ற சீரொடுங் கூடி ஐஞ்சீரடுக்கினமையின். இதனுள், 'ஆங்க' எனத் தனிச்சொல்வந்தது" என்றளெழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) *இருளுமழ்கூந்தலாள், †நின்று.

அள்கூ கலித்தொகை கசக.

ளடன்மாமே லாற்றுவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள்; வாழி சான்றீர்;
கக பொய்தீ ருலக மெடுத்த கொடிமிசை
மையறு மண்டிலம் வேட்டனள் வையம்
புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னு விடும்பைசெய் தாள்; அம்ம சான்றீர்;
கரு காமந் தாங்கே யின்னுநோய் செய்யுமற் றிஃதோ
படர்ந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு;

கஎ இடியுமிழ் வானத் திரவிருள் போழுங்
கொடிமின்னுக் கொள்வேனென் றன்னள் வடிநாவின்
வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்; வாழி சான்றீர்;
உக என்றாங்கே;

வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்.

*இஃது இரந்துபின்னின்ற தலைவன் (க) மடலேறியவழி அவன் தமர் அஞ்சித் தலைவியைக் கொண்டுவந்து கொடுத்தலைக் கண்டோர் கூறியது.

இதன் பொருள்.

அரிதினிற் றோன்றிய யாக்கை (உ)புரிபுதாம்
வேட்டவை செய்†தாங்குக் காட்டிமற் றாங்கே
யறம்பொரு ளின்பமென் றம்மூன்றி ‡னொன்றன்
திறஞ்சேரார் செய்யுந் தொழில்க ளறைந்தன்

க. ஏறிய மடற்றிறமான பெருந்திணைக்கே (தொல். அகத். சூ. கங. நச். உரையிலும்) இச்செய்யுள் மேற்கோள்.

உ. புரிதலென்னுஞ்சொல், மனம் வேறுபடுதலென்னும் பொருளிலும் வருமென்பது (அ) "புரிந்து" கலி. ௩௩: உஎ. என்பதனுரையாலும் துணியப்படும். (ஆ) "செறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை" பிரதிபேதம்) * இது இரத்தல். †ஆங்கேகாட்டிமற்றுங்கவறம், ‡ஒன்றின்றிறம்.

றணிநிலைப் (க)பெண்ணை மடலூர்ந் தொருத்தி
யணிநலம் (உ)பாடி வரற்கு

எ-து: (ங) பெறுதற்கரிதாகத் தோன்றிய மக்கள் † யாக்கை முற்பிறப்பில் தாம் மனம் வேறுபட்டு விரும்பின தீவினைகளைச்செய்து அறம்பொருளின்பம் என்றுசொல்லப்பட்ட அம்மூன்றில் அறமாகிய ஒன்றன் கூற்றைச் சாராதவர்கள் இப்பிறப்பிற்செய்து திரியுந்தொழில்களில் ஒன்றாகிய அழகினையுடைத்தாகிய நிலைமையினையுடைய பனைமடலையேறி அவ்வூரிடத்தே எல்லார்க்குங்காட்டி ஒருத்தியுடைய அழகினையுடைய நலத்தைப் பாடி ‡வருவதற்கு நூல்[கள்] சாற்றிற்று; ஆதலால், யானும் அதுவேதுணிந்து மடலேறிப்பாடுவேனென்றான். எ - று.

யாக்கை மடலூர்ந்து காட்டிப் பாடி || வருவதற்குச் (நூல்) சாற்றிற்றென்க. மற்று, அசை. ஆங்கு என்றது, முற்பிறப்பை.

எ ஓரொருகா லுள் ÷ வழிய ளாகி நிறைமதி

நீரு ணிழற்போற் கொளற்கரியள் (ச)போரு
ளடன்மாமே லாற்றுவே னென்னை (ரு)மடன்மாமேல்

மன்றம் படர்வித் தவள் வாழி சான்றீர்

எ - து: சான்றீர்! வாழ்வீராக; போரிடத்து வெற்றியினையுடைய குதிரையின்மேலே யிருந்து போர்த்தொழிலை நடத்துவேனாகிய என்னை அம்மா வல்லாத மடன்மாவின்மேலே ஏறி ✝அக்களத்தேயன்றி மன்றின்கண்ணே தன்னை உள்ளுவித்தவள், ஒருகால் என் மனத்துள்ளே உள்ளாயிருந்து பின்னை நீருட் டோன்றிய நிறைமதியினுடைய நிழல் வாங்கிக்கோடற்கு அரியவாறுபோல வாங்கிக்கோடற்கு அரியளாயிராநின்றாளென்றான். எ - று.

(கலி. ருக: சசு.) என்புழி, 'புரி திரிபு' என்பதற்கு, 'வேறுபட்டுத் தப்புதல்' என்று பொருளெழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலது.

க. இந்நூற்பக்கம் அருஎ: எ - ஆம் குறிப்புப்பார்க்க.

உ. இந்நூற்பக்கம் அருஅ: உ-ஆம் குறிப்பில் (ஆ) முதலியவை பார்க்க.

ரு. பெறுதற்கருமையில், "பாவைவெண் டிரை வடகடற் படுநுகத்துளை புட், டிரைசெய் தென்கட லிட்டதோர் கோன்கழி சிவணி, யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற், பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே" சீவக. உஎசக. என்பது முதலியன நோக்குக.

ச. "ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு, ணண்ணாரு முட்குமென் பீடு" குறள். க0அஅ.

ருெ. "நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன், காமுற்றா ரேறு மடல்" குறள். ககநரு.

(பிரதிபேதம்) * அணிகலப்பெண்ணை. † யாக்கைகளு முற்பிறப்பில்லாத மனம், ‡ || வருதற்கு. + வழியானாகி. ✛ அக்களத்தன்றி.

அஎஅ கலித்தொகை கசஙு.

ஆற்றுவேனென்னை ....படர்வித்தவளென்றது, (க) தறுகண்மை யென்னும் மெய்ப்பாடு. வாழிசான்றீரென்றது, ஒருமைப் பன்மைமயக்கம்.

கக (உ)பொய்தீ ருலக மெடுத்த கொடிமிசை
மையறு *மண்டிலம் வேட்டனள் (ந)வையம்
புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னா விடும்பைசெய் தாள் (ச)அம்ம சான்றீர்

எ - து: கேளீர் சான்றீர்! உலகத்தையெல்லாம் பாதுகாத்தலை முயலும் உள்ளத்தையுடையேனாகிய என்னை ஒருவர்பால் ஒன்றை(ரு)இரத்தலைமுயலும் இன்னாதாகிய வருத்தத்தைச் செய்தவள் கீழைத் திசையிடத்துத் தோன்றின, பொய்யற்ற நன்மக்கள் உயர்த்துப் புகழ்ந்த, மாசற்ற ஞாயிற்றின் மண்டிலத்தை யான் வாங்கிக் கோடற்கு †விரும்பின அத்தன்மையளாய் இராநின்றாள்; என்றான். எ - று.

என்றது (சு)கொடையென்னும் மெய்ப்பாடு.

கறு கரந்தாங்கே யின்னுநோய் செய்யுமற் ‡றிஃதோ

பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்டு

எ - து: பரந்த சுணக்கினையுடைய, பணைபோலுந்தோளினை ||யுடையாள் தான் மறைந்தபொழுதே பொறுத்தற்கரிய நோயைச் செய்யாநிற்கும்; அவள் குணம் எக்காலமும் இத்தன்மைத்தோ கூறின் என்றான். எ - று.

க. இம்மெய்ப்பாட்டுக்கே (தோல். மெய்ப். சூ. கூ.பேர். இ-வி. சூ. ருஎஅ. உரைகளிலும்) "அடன்மாமேல்... ....படர்வித்தவள்" என்னும் பகுதி மேற்கோள்.

உ. "கொடிநிலை" என்பதற்கு, 'கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத்தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம்' என்று பொருளும் ஆகுபெயரென்று இலக்கணமுங்கூறி, "பொய்தீ ருலக.......... ..செய்தாள்" என்பதனை மேற்கோள் காட்டினர், நச்சினார்க்கினியர்; தோல். புறத். சூ. நந. உலகவழக்கினும், 'கொடி' என்பது கீழ்த்திசைக்குப் பெயராய் வழங்குகின்றது.

ந. "இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முலகம், புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்" கலி. சஎ: க - உ.

ச. "அம்ம கேட்பிக்கும்" தோல். இடைச். சூ. உஅ.

ரு. (அ) "இரவினை, யுள்ளுங்கா லுள்ள முருகுமால்" நாலடி. நOரு. (ஆ) "இரத்தலி னின்னாது" (இ) "இரவுள்ள வுள்ள முருகும்" குறள். உஉக, கOகக.

சு. இம்மெய்ப்பாட்டுக்கே (தோல். மெய்ப். சூ. கூ. பேர். இ-வி. சூ. ருஎஅ. உரைகளில்) "வையம், புரவூக்கு......செய்தாள்" என்பது மேற்கோள்.

(பிரதிபேதம்) மண்டலம், †விரும்பினவளத்தன்மை. ‡ஈதே. ||உடையாளதாளதான்மறைந்த.

கஎ (க)இடியுமிழ் வானத் திரவிருள் போழுங்

கொடிமின்னுக் கொள்வேனென் றன்னள் (உ) வடிநாவின்
(ரு) * வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள் வாழி சான்றீர்

எ - து: பின்னும் வாழ்வீராக; சான்றீர்! வழுவின சொற்கள் சொல்லாதபடி தெள்ளிய நாவினாலே வார்த்தைசொல்ல வல்லார்முன்னே சொல்லுதல் வல்லேனாகிய என்னைப் பிறர்முன்னே ஒன்றையுங் கல்லாத தன்மையனாகக் காட்டியவள், இராக்காலத்து இடியை உமிழ்கின்ற மேகத்திலிருக்கும் போழும் ஒழுங்கினையுடைய மின்னை வாங்கிக்கொள்வேனென்று ஒருவன் கருதிய தன்மையளாய் இராநின்றாளென்றான். எ - று.

வல்லார்முற்சொல்...... .....காட்டியவளென்றது (ச) கல்விபற்றிய பெருமிதம்; என்னையும் கல்லாமை காட்டினாள் என்றவின். வாழி சான்றீரென்று அதனை முடிப்பாராகக் கருதி வாழ்த்தினேன்.

உ.க என்றாங்கே

வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் †போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்

எ - து: என்றுசொல்லி அவ்வூரிடத்து மறுகின்கண்ணே கண்டார் வருந்த மடன்மாவை ஏறிப்பாட, திருந்தின இழையினையுடையாளைத் தான் பெறுதற்குப் பொருந்தின வார்த்தைகளைத் தான் கூறக்கேட்டு, பகைவர் போர்த்தொழிலைவல்லபாண்டியனுக்கு அஞ்சி அரியதிறைகொடுக்குமாறுபோல,

க. (அ) "இடியுமிழ் பிரங்கிப விரவுப்பெயல்" கலி. சக. இ. என்பதும் அதன் குறிப்பும் (ஆ) "இடியுமிழ் வானம்" அகம். எஎ: இ. (இ) "இடியுமிழ் வானத் திடை" (தொல்.செய்.சூ.கருஉ. பேர், நச். உரை.மேற். 'செஞ்சுடர்') என்பவையும் ஒப்புநோக்கற்பாலன.

உ. "வடியா காவின் வல்லாங்குப் பாடி" புறம். சஎ: ங.

ங. "தலைப்படு சால்பினுக் குர்தன ரேன்சித்தம் பித்தனென்று, மலைத்தறி வாரில்லை யாரையுந் தேற்றுவ னெத்துணையுங், கலைச்சிறு திங்கண் மிலைத்தசித் றம்பல வன்கயிலை, மலைச்சிறு மான்விழி யாலழி வுற்று மயங்கினனே" கோவையார். உடு.

ச. இச்செய்திக்கே (தொல். மெய்ப். சூ. க; பேர்; இ - வி. சூ. கஎஅ. உரைகளிலும்) "வல்லார்முற்... .....காட்டியவள்" என்பதுமேற்கோள்.

(பிரதிபேதம்) * வல்லாருட் சொல், † போர்வேல்.

தமர் குடிப்பழுதாமென்று அஞ்சி அவளை அவ்விடத்தே கொடுத்தார்; ஈதோர் மகட்கொடை இருந்தவாறென்னெனக் கண்டார் வியந்துகூறினர். எ - று.

இது கண்டார்க்குக் கொடைபற்றிய பெருமிதம் பிறந்தது.

இது "தரவும்போக்கும்"(க)என்பதனுட்பாட்டினைப்போக்கின்பின்வைத்த தனாற் போக்குப்பெற்ற, பண்பு என *நாற்சீரான் இயன்ற பாட்டு வந்தது.

(உ)வாழிசான்றீர் அம்மசான்றீர் என ஈற்றுக்கண் வந்த சீர்களை †முதலடிக்கு ஆண்டபொருண்முடிவுன் மாறுகூட்டி அடுக்க அறுசீராய் ஆறுமெய் பெற்றமையிற் கலிவெண்பா. (உச)

(கசஉ.) புரிவுண்ட புணர்ச்சியுட் (ங)புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவனை யகற்றலிற் றெரிவார்கட்

(௪)செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயநின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
இ பயனின்று மன்றம்ம காம மிவண்மன்னு

க. தொல். செய். சூ.கருச. இதனுரையில், "தரவும்போக்கும் பாட்டிடை மிடைந்தும்" என, "பாட்டினைப் போக்கின்பின் வைத்ததனுற் போக்குப் போல நாற்சீரானிறுவனவும் அப்பாட்டுள் அமையுமென்பது; அது 'காந்தாங்கே... ....பண்பு' என்றாற்போல வரும்" என்று பேராசியரும் இதனையே தழுவி நச்சினார்க்கினியரும் எழுதியிருக்கிறார்கள்.

உ. இச்செய்யுளுள், 'வாழிசான்றீர், அம்மசான்றீர், என ஐஞ்சீரடுக்கியாங்கு அடுக்கிச் சொல்ல அறுசீராயின. இதற்கும் ஐஞ்சீர் அடுக்கியு மென்றதுபோல அறுசீரடுக்கியுமென்று அடுக்குதற்குத் தொழில் கொள்ளப்படும். ஈண்டு இரண்டளவடி தொடைப்படச் செய்தமையி னென்க. இதனுள் என்றாங்கே என்பது தனிச்சொல்' என்று பேராசிரியரும், இதனுள் 'வாழி சான்றீர், அம்ம சான்றீர், என ஏற்றக்கண் வந்த சீர்களை முதலடிக்கட் பொருண்முடியுமாறு கூட்டி ஐஞ்சீரடுக்கியாங் கடுக்க அறுசீரானவ்வாறு வந்ததாம். இதற்கும் அறுசீரடுக்கியும் எனக் கூட்டிப் பொருளுரைக்க. என்றாங்கு தனிச்சொல்' என்று நச்சினார்க்கினியரும் எழுதியிருப்பவை இங்கே அறிதற்பாலன; தொல். செய். சூ. கருச.

ங. "புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய வென்றோழி" கலி. சகு: கo.

ச. "செயநின்ற..............மன்றம்ம காமம்" என்பதை (நன். இடை. சூ. கக. உரையில்) மேற்கோள்காட்டி அம்ம, உரையசையென்று மயிலைநாதரும் இப்பகுதியையே (இ - வி. சூ. உஎச உரையில்) மேற்கோள்காட்டி அம்ம, அசைநிலையென்று இ - வி. நூலாரும் கூறுவர்.

(பிரதிபேதம்) * நாற்சோனின்றபாட்டு, †முதலாடிக்காண்ட,

மொண்ணுத லாயத்தா (க)*ரோராங்குத் திளைப்பினு
(உ)முன்னுனை †தோன்றாமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு நகுபவள் பெண்ணின்றி
யாவருந் தண்குரல் கேட்ப நிரைவெண்பன்
கo மீயுயர் தோன்ற நகாஅ நக்காங்கே
(ங)பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்க
ணாயிதழ் மல்க வழும்;

கங ஓஒ! அழிதகப் பாராதே ‡யல்லல் குறுகினங்
காண்பாங் கனங்குழை ‖பண்பு;
கரு என்று, (ச)எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் ×மற்கொலோ யானுற்ற
வல்ல லுறீஇயான் மாய மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின்;
க௯ எல்லாநீ, உற்ற தெவனோமற் +றென்றீரே லெற்சிதை
செய்தா னிவனென வுற்ற திதுவென
வெய்த வுரைக்கு **முரணகத் தண்டாயிற்
(ரு)டைதல வாகிப் பசக்குவ மன்னோவென்
னெய்தன் மலரன்ன கண்;

க. ஓராங்கு, ஒருதன்மைப் படவென்னும் பொருள்படுவதோர் இடைச்சொல்; பதிற். ௬௧: கசு. கலி. கஉ: கஅ, கஅ: எ, கஉ: ௩க. புறம்.

கசு: கக. இச்சொல், "ஒராங்கு" என்றும் வரும்; பதிற். ௩௪: ௨. கலி. ௯0: எ. புறம். ௨௩அ: ௧௫, ௩0௪: ௫, ௩௨௬: ௧௧, ௩௭0: ௨.

௨. "நகைமொக்கு ளுள்ளது" குறள். ௧௨௭௪.

௩. (அ) "போதெழி லுண்கண் புகழ்நல னிழப்ப" (ஆ) "பூக்கவின் கொண்ட புகழ்சா லெழிலுண்கண்" கலி. ௧௨௨: ௨, ௧௩௪: ௪.

௪. அறிவர் (?) கேட்பத் தலைமகள் கூற்றுவர்த்தற்கு, "எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ" என்பது மேற்; தோல். செய். சூ. ௧௯௯. பேர்; நச்.

௫. (அ) "பசந்தகண் பைதல பனிமல்க" கலி. ௧௬: ௧. (ஆ) "தெரிந் துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப், பைதலுழப்பதெவன்" (இ) "படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக், காமநோய் செய்தவென் கண்" குறள். ௧௧௭௨; ௧௧௭௫.

(பிரதிபேதம்) * ஓராங்கு, † தோன்றுமல், ‡ அல்ல குறுகினும்; || டண்பு எல்லீரு மென்செய்திர், × மற்கொல்லோ, + என்றிரேல். ** முணகத்து.

௨௪ (க) கோடுவாய் கூடாப் பிறையைப் * பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
யாடையான் (௨) † மூஉ யகப்படுப்பேன் சூடிய
காணான் றிரிதருங் கொல்லோ மணிமிடற்று
‡ மாண்மலர்க் (௩) கொன்றை யவன்;

௨௫ தெள்ளியே மென்றுரைத்துத் தேரா தொருநிலையே
வள்ளியை யாகென நெஞ்சை வலியுறீஇ
யுள்ளி வருகுவர் || கொல்லோ வுளைந்தியா
னெள்ளி யிருக்குவேன் மற்கொலோ ÷ நள்ளிருண்

மாந்தர் கடிகொண்ட கங்குற் (ச)கனவிற்
றோன்றின னாகத் (ரு)தொடுத்தேன்மன் × யான்றன்னைப்
(சு)பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய

கையுளே மாய்ந்தான் கரந்து;

க. (அ) "கோடுவாய் கூடாப்......கொன்றை யவன்" என்னும் பகுதியைப் பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளுட் கலக்கமென்பது மனங்கலங்கி நிற்கு நிலையென்று கூறி அதற்கு மேற்கோள்காட்டினர்,இளம்; தொல். மெய்ப். சூ. உஉ. (ஆ) "கோடு கூடு மதியம்" பதிற். ருக: கஉ. (இ) "கோடுகொ ளொண்மதியை" கஎ. உஉ. (ஈ) "திங்கட் செல்வன், பைங்கதிர்க் கோடு கூடும் பக்கத்தில்" உத்தரகோச. கஎ. ரு௫.

உ. "எங்கு, மூயிலங்கி யிறையவனூர் முடிமிசைமல் கியகோயில்" திரு வானைக்கா. தெசாரணிய. உசு.

ரு. (அ) "கொன்றை யலங்கலந் தெரியலான்" கலி. கஙo: க. (ஆ) "கொன்றை வேய்ந்த செல்வன்" (இ) "பிரணவத்திற் குரியபொருள் பிறரென்று பேசுவோர், மூரணவித்தற் காகமங்கள் முதலாய வேண் டுபவோ, காரணவிகற் பங்கடந்தோய் காவதமெண் ணிலகமழுந், திரண்மிகுத்த செழுங்கொன்றை மாலிகைசேர் தாக்கண்டும்"

ச. (அ) "கனவின் வாரா நயனி லாளனைக், கனவிற்கண்டியான் செய்த்து கேளினி.............தொடுப்பேன் போலவும்" (கலி. கஉஅ: அ - கக) என்பதும் (ஆ) "தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற............அற னில்லவா்" (கலி. கசச: ரு௫ - ருஅ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ரு. "தொடுத்தல்" இந்நூற்பக்கம் எகச: உ-ஆம் குறிப்பில் (இ)(ஈ)பார்க்க.

சு. கலக்கமென்னு மெய்ப்பாட்டிற்கு, "பையெனக் காண்கு .....கரந்து" என்னும் அடிகள் மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உஉ. நச்.

(பிரதிபேதம்) * பிறிதென்று, † மூடியகப், ‡ மாண்மாலைக்கொன்றை, || கொல்லோ வினீர்நியான், ÷ கல்லிருள், × யான்றன்னைப்.

னுருவ மாலை போலக்
குருதிக் கோட்டொடு குடர் வலந்தன

எ-து: அவை குத்தினபொழுது, எரி சுற்றிவிளங்குகின்ற (க) கணிச்சிப் படையையுடைய இறைவன்சூடிய (உ) பிறையிடத்துக்கிடந்த (௩) சிவந்த நிறத்தையுடைய *மாலைபோலப் பகையான ஏறுகளை விரும்பிப் போக்குவன வாகிய† ஏற்றினங்களின் குருதிதோய்ந்த கொம்புகளுடனே குடர்கள் சுற்றிப் பிணித்தன. எ - று.

உ௮ ‡கோட்டொடு சுற்றிக் குடர்வலந்த வேற்றின்முன்
ஆடிநின் (௪)றக்குடர் வாங்குவான் பீடுகாண்
(௫)செந்நூற் கழியொருவன் கைப்பற்ற (௬)வந்நூலை
||முந்நூலாக் கொள்வானும் போன்ம்

எ - து: அங்ஙனம் கொம்புகளோடே சுற்றிக் குடர்கள் பிணித்த ஏற்றின் முன்னே நின்று ஆடி அக்குடரை இரண்டுகையாலும் வாங்கி வயிற்றிலே

க, கணிச்சியென்பது மழுவின் வேறாயதொரு படைக்கலத்துக்கும் பெயராயினும் 'எரிதிகழ்' என்னும் அடைமொழியை நோக்க இங்கே மழுவென்னும் பொருளில் வந்ததென்றே தோற்றுகிறது.

உ. இச்செய்யுள் கரு - கக. அடிகளிலும் ஏற்றின் கொம்புக்குப் பிறை உவமையாய் வந்திருத்தல் காண்க.

௩. "கணவிர மாலை கைக்கொண்டென்ன, நிணநீடு பெருங்குடர் கையகத் தேந்தி" மணி: ௫: ௪௮-௪௯.

௪. "மாயா தவர்தலை வாவரங் காவட மாமதுரை, மாயா தவண்டர் வர்

தடைந் தான்மழு வாளிபிர, மாயா தவர்செய்வர் முந்நூல்சேர் நூல் கொண்ட வண்ணமொப்ப, மாயா தவரத் தனைக்குடல் கோத்ததுன் வாணகமே" திருவரங்கத். அஎ.

ஞ. லகரந்திரிந்த ணகரத்தின்முன் மகரம் தன்மாத்திரையிற் குறைந்து வருமென்பதற்கு, "செந்நூற்கழி..........போன்ம்" என்பது மேற். கோள்; இ - வி. சூ. உ௨.

ச. செய்யுட்கண் போலுமென்னுஞ் சொல்லின் இறுதியில் னகாரம் மகாரம் வந்து ஈரொற்றுட னிலையாய் நிற்குமென்பதற்கு, "அந்நூலை முந்நூலாக் கொள்வானும் போன்ம்" என்பது மேற்கோள்; தொல். மொழி. சூ. கஅ. கச.

(பிரதிபேதம்) * மாலையாறபகையான, † எற்றினக்களிறுடைய குருசி, ‡ கோடொடு, ‖ முன்நூலாற் கொள்வானும்.

ஐந்தாவது நெய்தல் உரு. அஅரு

கூஎ (க)கதிர்பகா ஞாயிறேமலை*சேர்தி யாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்திரியா மாட்டிய தீ;

௪க மையில் சுடரே மலை†சேர்தி நீயாயிற்
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு ‡மாத்திரை
கை(உ)விளக் காகக் கதிர்சில தாராயென்
றொய்யில் சிதைத்தானைத் ‖தேர்கு;

௪ரு ÷சிதைத்தானைச் செய்வ தெவன்கொலோ வெம்மை

நயந்து நலஞ்சிதைத் தான்;

சஎ (ங)மன்றப் ×பனைமேன் மலை(ச)மாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ
(ரு)+மென்றோண் ஞெகிழ்த்தான் றகையல்லால் யான்காணே
னன்றுதீ தென்று பிற;

ருக நோயெரி யாகச் சுடினுஞ் **சுழற்றிபென்
னுயித முள்ளே ††கரப்பன் கரந்தாங்கே

க. "கதிர்பகா ஞாயிறே............மாட்டிய தீ" என்னும் பகுதி, ஞாயிற்றைக் கேட்குநபோலக் கூறியதற்கு மேற்கோள்; தோல். செய்; சூ. ௨0க. பேர். சூ. ௨00. நச்.

௨. "விட்டி லங்கொளி வெய்யவன் றனதுமெல் விரலாற், சுட்டி யெங்கணுங் காட்டல்போற் சுடர்வன சுடர்கள்" நைடதம். மாலைப். க௨.

ங. ஞாயிறுமுதல் புள்ளீறுகச் சொல்லப்பட்டவைகளைச் சொல்லுவனவுங் கேட்பனவும் போலக் கூறுதலல்லாமலும் பிறவற்றையும் அவ்வாறு கூறுதலுண்டென்பதற்கு, "மன்றப் பனைமேன் மலைமாந் தளிரே" என்பது மேற்கோள்; தோல். செய். சூ. கக0 இளம். 'ஞாயிறு'

ச. "மாஅந் தளிர்கொண்ட போழ்தினுன்" கலி. கசங: ௨எ.

ரு. "மென்றோண் ஞெகிழ்த்தான்..............தீதென்று பிற" என்பது, உறுபெயர்கேட்டலென்னும் மெய்ப்பாட்டிக்கு மேற்கோள்; தோல். மெய்ப். சூ. ௨௨.

(பிரதிபேதம்) * சேர்தி நீயாயிற். † சேர்தி யாயிற், ‡மாத்திரைக்கை. || தொகுசு. ÷னைத் தானைச், ×பனைமேல், + என்றே ஞெகிழ்த்தான் திறமல்லாலியான். ** சுற்றியென். ††கரப்பென்.

நோயுறு (௧)வெந்நீர் தெளிப்பிற் றலைக்கொண்டு
வேவ தணித்திவ் வுலகு;
மெலியப் பொறுத்தேன் *களைந்தீமின் சான்றீர்
நலிதரும் (௨)காமமுங் கௌவையு மென்றிவ்
†வலிதி (௩)னுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழும மிரண்டு;
எனப்பாடி;
(௪)‡இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தன ||வென்றெண்ணி (௫)யெல்லிரா
+நல்கிய கேள்வ னிவன்மன்ற ×மெல்ல
மணியுட் பரந்தநீர் போலத் +துணிவாங்
கலஞ்சிதை (௬)யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றா
ளல்லெழின் மார்பனைச் **சார்ந்து.

---

௧. ஸௌதாஸனென்னும் அரசன் தன் குலகுருவாகிய வசிட்டமுனியைச் சபித்தற்கு நீரைக் கைக்கொண்டபோது தன் மனைவியாகிய மதயந்தி கூற்றால் தடையுண்டு அந்நீரை மேலே வீசின் மழைவளமும் கீழே வீழ்த்தின் நிலவளமும் அறுமென்று தன்காலிற்பெய்து கன்மாடபாதனாயினனென்னும் வரலாறு இங்கே அறிதற்பாலது.

௨. "நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற், காம நுதுப்பே மெனல்" குறள். ௧௧௪௮.

௩. (அ) "காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென், னோனா வுடம்பி னகத்து" (ஆ) "ஒருதலையா னின்னாது காமங்காப் போல, விருதலை யானு மினிது" குறள். ௧௧௬௩; ௧௧௯௬.

௪. (அ) "இனைந்துநொந் தழுதனள்............சார்ந்து" என்னும் பகுதி, பெருந்திணைக்கட் கண்டோர் கூறியதற்கு மேற்; தொல். அகத். ௫. ௪௯. (ஆ) "இனைபேங்கி யழுதனை" கலி. ௧௨௨: ௯.

௫. "எல்லிரா............மெல்ல" என வெள்ளைச்சுரிதகத்துள் ஐஞ்சீரடியும் வந்தது" என்பது தொல். செய். ௫. ௧௯௪. பேர்.

௬. (அ) "தேறுபடு சின்னீர் போலத் தெளிந்து, மாறுகொண் டோரா மனத்தின னாகி" மணி. ௨௩: ௧௪௨-௧௪௩. (ஆ) "இல்லின், படுகாழ்ப்

(பிரதிபேதம்) * கனைந்தபின், † கலிதிறுயிர். ‡ இனைந்துலைந்து. || என்றெண்ணி நல்லிப், + ஒல்லிய, × மெல்லியலமணியிற், + துணியாம். ** சார்ந்து. ஓஓ, இரக்கக்குறிப்பு. ஈதுநிரோ......ஓகாரம், எதிர்மறை கேட்பீராக இயடன்றுடனே.

ஐந்தாவது நெய்தல் ௨௫. ௮௮௫

இது "பொழுது தலைவைத்த கையறு காலை, யிறந்த போலக் கிளக்குங் கிளவி, மடனே வருத்த மருட்கை மிகுதியொ, டவைநாற் பொருட்க ணிகழு மென்ப"(௧)இச்சூத்திரம் பின்னர் நான்கும் "பெருந்திணை பெறுமே"(௨)என்ற சிறப்புடைப்பெருந்திணையன்றிப்பெருந்திணைக்*குறிப் பாகக் கந்தருவத்துட்பட்டு வழிவரும் 'ஏறியமடற்றிறம்'(௩)முதலிய நான்க னுள் ஒன்றாய் †முன்னர் நிகழ்ந்த கந்தருவம் பின்னர் வழிவந்த 'தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்' (௪) ஆகிய பெருந்திணை வழுவமைக்கின்றது.

படுத்துத் தேய்வை யுரீஇக், கலுழி நீக்குங் கம்மியர் போல, மகப் வினையின் மனமாசு கழீஇ" பெருங். (௧) ௩௫: ௨௧௫ - ௨௧௮. (இ) "நின்று னுள்ளந் தேறுமைக்க நீத்தந் தெளிவு தெனத்தெளிந்து" பிரமோத்தா. வஞ்சுளை முத்தி. ௧௬.

க. தொல். பொருளி. சூ. சஉ. இச்சூத்திரத்திலுரையிலும் இது, 'பின் னர் நான்கும...........கூறத்தகாதன கூறலும் பிறவுமாம்' என்று இவ்வாறே பொருள்எழுதி இசசெய்யுளைமேற்கோள்காட்டி, அகூஉ-ஆம் பக்கத்திலுள்ள 'இதனுள் அந்திக்காலத்தே ....மிகுதியிறந்த வாறுங் காண்க' 'எல்லிரா நல்கிய... ....வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க' என்ற குறிப்புக்களையுமெழுதி, 'இதற்குப் பொருளுரைக்குங் கால் கேட்டீராக இவள் நக்கு, நக்க அப்பொழுதே அழும். இங்ஙனம் அழுமாறு காமத்தை *ஊழானது (*உயிரானது என்றும் பிரதிபேதம்) அகற்றலின், அஃதறுதியாக நம்பினும் பயனின்றாயிருந்தது. ஒஒ இதனையுற்ற இவள் †அல்லற்பண்பைப் பாராதே அழிதக யாங்குறுகி னேம், குறுகிய யாம் இதனை முடிவுபோகக் காண்பேமென்று வந்து எல்லீரும் என்செய்தீர்? என்னை இகழ்கின்றீரோ? இவ்வருத்தத்தை எனக்குறுத்தினவனது மாயஞ்செய்த மலர்ந்த மார்பை யான் முயங்கிக் கூடினும் இழச்சியன்றாய்; என்றற் றொடக்கமாய் வரும்' என்று இவ் வுரையாசிரியர் வரைந்திருப்பது இங்கே அறிதற்பாலது.

உ. தொல். களவு. சூ. கசு.

ங. தொல். அகத். சூ. டுக.

ச. தொல். அகத். சூ. டுச. (அ) இச்சூத்திரப் பகுதியினுரையில் தேறுத லொழிந்தகாமத்துமிகுதிறமென்பது பெரும்பாலும் தலைமகட்கேயுரித் தென்று கூறி, அதற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டினர் இளம் பூரணர்; (ஆ) தொல். அகத். சூ. கங. உரையில், 'புரிவுண்ட புணர்ச்சி யென்றது முதலிய ஆறுபாட்டுமே தேறுதலொழிந்த காமத்து மிகுதிற மாகிய பெருந்திணை. இவற்றை செய்தலுட் கோத்தார் சாக்காடு குறித்த இரங்கற் பொருட்டாகலின்' என்றும் (இ) தொல். அகத். சூ. டுக. உரையில், 'புரிவுண்ட புணர்ச்சியென்னும் செய்தற்பாட்டுக்

(பிரதிபேதம்) * குறிப்பாயக கந்திருவத்துட். † முன்னா வழுவியந்த.

ஓதலுந் தூதும் ஒழிந்த பகைவயிற்பிரிவாகிய வாளாணைதிரும் பிரிவும் முடியுடை *வேந்தர்க்கும் அவர் ஏவலிற் பிரியும் அரசர்க்கும் இன்றியமையாமையின் அப்பிரிவிற் பிரிகின்றன் 'வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்'(க) என்பதனுற் கற்புப்போல நீ இவ்வாறேழுகி யான் வருந்துணையும் †ஆற்றியிருவேண ஆற்றுவித்துப் பிரிதல்' இலக்கண‡மன்மையின், வாளாபிரியுமன்றே? அங்ஙனம் பிரிந்துழி அவன் கூறிய ||கூற்றினேயேகொண்டு ஆற்றுவிக்குந் தோழிக்கும் ஆற்றுவித்தலரிதாகலின், அவட்கு அன்பின்றி நீங்கினுனென்று ஆற்றமை மிக்கு ஆண்டுப் பெருந்திணைப்பகுதி நிகழுமென்று உணர்க. (இ-ள்) பொழுது - அந்திக்காலத்தே, கையறுகாலை - 'புறஞ்செயச் ×சிதைதல்'என்னும் (உ)சூத்திரத்தில் அதனிறுங்கின்று' எனக்கூறியகையறவுரைத்தலென்னும் மெய்ப்பாடு எய்திய காலத்தே, தலைவைத்த - ÷அந்த ஆறுமறுதியின் இகந்தனவாக முடிவிலே வைக்கப்பட்ட மெய்ப்பாடுகள், மிகுதியோடு மடனே வருத்தம் மருட்கை நாற்பொருட்கண்நிகழும்-+தன் வனப்பு மிகுதியுடனே மடப்பமும் ஆற்றமையும் வியப்புமாகிய நான்கு பொருட்கண்ணே நடக்கும்; அவை இறந்தபோலக் கிளக்குங் கிளவி என்ப- அங்ஙனம் அவை**நடக்கின்ற நான்குபொருளும் கூற்றுநிகழுங்கால்தன்னைக் கைகடந்தனபோலக் கூறுங் கூற்றய் நிகழுமென்று கூறுவர் புலவர். எ-று. தலைவைத்த மெய்ப்பாடாவன: –††'ஆறும்அறுதியிலும் ஒப்பத்தோன்றுதற்குரிய மெய்ப்பாடுகளாய் ‡‡மன்றத்திருந்த சான்றோரறியத் தன் துணைவன் பெயரும் பெற்றியும் அவனெடு புணர்ந்தமையும் தோன்றக் ||| கூறியும் அழுதும் அரற்றியும் பொழுதோடு ÷÷புலம்பியும் ஞாயிறு முதலியவற்றேடு கூறத்தகாதன கூறுதலும் பிறவுமாம்' ××என்னும் விதிபற்றி வாவிடைப் பிரிந்து நீட்டித்துழித் தலைவி பிரிவாற்றகில்லாது நாணு வரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்துழி அவன்வந்து சாரத் தெளிந்தமை கண்டார் ++கூறிற்றென்று கூறியது.

காமத்து மிகுதிறம்; இதனைப் பொருளியலுட் காட்டுதும்; ஆண்டோதும் இலக்கணங்களுந் தோன்ற இதனுட் டெளிந்து கூறவனவும் ஆண்டுக் காண்க' என்றும் இவ்வுரையாசிரியர் கூறியுள்ளார். (௯) இலக்கண விளக்க நூலாசிரியரும் ஏறிய மடற்றிறத்துக்கே இச்செய்யுளை மேற்கோள் காட்டினர்; இ - வி. சூ. ௫௧௧.

௧. தொல். கற். சூ. ௪௪.

௨. தொல். மெய்ப். சூ. ௧௮.

(பிரதிபேதம்) * வேந்தர்க்கு மனைசர்க்கும், † ஆற்றுகவென் றாற்றுவித்து, ‡ இன்மையின், || கூற்றை; × சிதைத்தல்என் னுஞ் சூத்திரத்து இதனிறுாக்கின்று, ÷ அந்த ஆற்றாமையின், + என் வனப்பு. ** நடக்கின்றவை நான்கு. †† ஆறுமயறிவிலும் பரந்து தோன்று, ‡‡ மன்றத்துச் சான்றோர். |||| கூறியமூது மரற்றியும், ÷ ÷ புகம்பிய, × × இவ்விதி, இதுவிதி. + + கூறித்தென்றுகொளிக் கூறியவாறுணர்க.

ஐந்தாவது நெய்தல் ௨௫. ௮௮௭

இதன் பொருள்.

கேட்பீராக; இவள் தன்னுடனே பொருந்தி விளையாடும் ஒள்ளிய நுதலினையுடைய ஆயத்தார் எல்லாரும் * ஓராங்குக்கூடி விளையாடும் அளவிலும் முட்போலக் கூரிய தன் பல்லினுனி தோன்றாமல் முறுவலித்தலைக் கொண்டு, அதனை உள்ளடக்கி, அந்நகுதற்குறிப்புப் பிறரறியாமல் தன்கண்ணாலும் முகத்தாலும் நகுபவள்; இப்பொழுது பெண்டன்மையின்றிப் பிறர்

கேளாமல்†மொழியும் (க)மெல்லியமொழியினை எல்லாருங்கேட்கும்படி கூறி, நிரைத்த வெள்ளிய பல்லின் மேலெயிறு தோன்றப் பெருகச் சிரித்து, சிரித்த அப்பொழுதே பூ(உ)வெடித்த தன்மையை ஒத்த புகழ்ச்சி அமைந்த அழகினையுடைய கண்கள் அழகினையுடையஇமை நீர்மல்கும்படி அழாநிற்கும்; இவள் இங்ஙனம் அழுமாறு காமவின்பத்தை ஊழானது ஒருவர் மனம் ஒருவரிடத்தே புரிதலுண்ட கூட்டத்திற் புல்லுதனிறையாத அளவிலே இருவரில் ஒருவரை ‡அரியாரம்படி பண்ணி நீக்குகையினாலே இந்நிலையாமையை ஆராய்ந்து பார்ப்பாரிடத்து அஃதறுகியாக நரம்பை வீக்குதலைச் செய்ய அதனிடத்தே நின்ற பண்ணினுட் டோன்றிய இனிமையைக் கேட்போர் செவிகொண்டு இன்புறுவதற்கு முன்னே விருப்பம் நின்ற இனிமையாகியபொருள் கெடமுறுக்குஅறும் (ங)நரம்பிலுங்காட்டித் ‖ பயனின்றாயிருந்தது; ஓ! இக் ÷ கனங்குழையது அல்லலையுடைய குணத்தை நம்மை வருத்தும் என்று பாராதே நம் நெஞ்சழியும்படியாக வந்து குறுகினேம்; குறுகிய யாம் இதனை முடிவுபோகக் காண்பேம் என்று கருகிவந்து எல்லீரும் என்ன காரியஞ் செய்தீர்? இங்ஙனம் வந்த நீர்தாம் என்னை + இகழ்கின்றீரோ? இகழ்கின்றீராயின், யானுற்ற வருத்தத்தினை எனக்குறுத்தினவனுடைய மாயத்தைச் செய்த மலர்ந்த மார்பை யான்முயங்கி அவனைக் கூடப்பெறினும் அஃது × நிகழ்ச்சியன்றாம்; இங்ஙனம் என்னைச் சிதைத்தலைச் செய்தான் இவனென்று யான் முற்கூறியதனைக் ** கேட்ட நீர் பின்னை அவனுலுற்றதுதான் எத்தன்மைத்தோ

க. தண்மை, மென்மை யென்னும் பொருளில் வருதல், "தண் குரவை" புறம். உச: ௬. என்பதனுரையாலும் வலியுறும்.

உ. (அ) "அந்திவெடி முல்லை யரும்பெடுத்தானவந்தேன்" தனிப்பாடல்.
(ஆ) "சூடா ததுமணம் வீசா ததுசுரும் பும்விரும்பி, மூடா ததுவெடி யாதது பின்முகி ழாததுதான், வாடாத தோரலர் வந்தாலெவ் வாறுய்வன் மன்னுயிரே" மாறன். உசக.

ங. "வீழுநர்க் கிசைத்தியாய் விரல்கவர் பிசைக்குங்கோ, லேழுந்தம் பயன் கெட விடைநின்ற நரம்பறூஉம், யாழினுக் கிலையில்லாப் பொருளையு நச்சுபவோ" கலி. அ: ௬ - கக.

(பிரதிபேதம்) * ஒருக்குகூடி. † மொழியுமென் மொழியினை, ‡ அரியாராம்படி. || பயனிலையாயிருந்தது, ÷ கனங்குழைகல்லலை, + இகழ்கின்றீரோ இகழ்கின்றீரோ இகழ்கின்றீராயின். × இகழ்ச்சியென்றேயிக்கனம், ** கேட்டோர் நீ பின்னை.

என்று கேட்பீராயின், யானுற்றதிதுவென (௧) *எழுவகையாகிய அறத்தொடு நிலைகளின் ஒன்றை நும்மனத்திற்குப் பொருந்தக் †கூறும் என்னறிவு என் உள்ளத்துண்டாயின் யான் இன்னணம் வருந்துவனோ? வருந்தேன்; அவ்வறிவு கெட்டமையால் யானுற்ற வருத்தம் இத்துணைய வருத்தமென யான் உமக்குக் கூறுவன், அதனைக் கூறக்கேண்மின்; சான்றீர்! என்று சான்றோரை நோக்கிக் கூறுகின்றாள்; என்னுடைய ‡ சிற்றிலுள்ளே (௨)கூடலிழைத்து

---

௧. எழுவகை அறத்தொடு நிலை இவையென்பதை, தொல். பொருளி. ௧௬-ஆம் சூத்திரத்தால் உணர்க.

௨. கூடலிழைத்து அவனைக் கூடுவேனோ என்று ஆராய்தல்:—பெரிதாக ஒரு வட்டங்கீறி அதற்குள்ளே சிறு சுழிகளைக் கணக்கிடாது சுற்றுஞ் சுழித்து அவற்றை இவ்விரண்டு சுழியாகக் கூட்டி இறுதியில் ஒன்று எஞ்சாது கூடுகின்றனவா என்று பார்த்தல். அச்சுழிகளுள் ஒன்று எஞ்சாது கூடுமாயின் தலைவன் விரைவில் வந்து கூடுவனென்றும், ஒன்று எஞ்சிக் கூடாதாயின் அவன் விரைவில் வந்து கூடானென்றும் கோடல் மரபு; தலைவன் வரவை அறிதற்கு அவனைப் பிரிந்த தலைவி இதனைச் செய்வதாகக் கூறல் பண்டைவழக்கென்பர். (அ)நாய்ச்சியார்திருமொழியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்து அரும்

பதத்தில், 'கூடலாவது - வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டால் கூடுகை, ஒற்றைப்பட்டால் கூடாமை என்று சங்கேதம்' என்றுள்ள செய்தி இங்கே அறியத்தக்கது. (ஆ) இவ்வா றன்றிக் கண்ணை மூடிக்கொண்டு நிலத்தில் வட்டமாக ஒரு கோட் டைக் கீறிப் பின்பு கண்திறந்து பார்த்து அக்கோடு தொடங்கிய இடத்தில் தவறாமல் வந்து சேர்ந்திருப்பின் தலைவனும் தவறாமல் வந்து சேருவானென்றும் அது வந்து சேராமல் விலகி யிருப்பின் தலைவனும் வந்து சேராது விலகியிருப்பானென்றும் கொள்ளுதல் மரபென்பாரும் உளர். இக்கூடலிழைத்தலைப்பற்றிய செய்திகளாகச் செய்யுட்களில் (இ) "தாழ்கடற் றண்சேர்ப்பன் றாரகல நல்குமேல், வாழியாற் காணுமோ யாம்" ஐந் - ஐம். சங. (ஈ) "பாட லாக்கிடும் பண்ணொடு பெண்ணணிவள், கூடலாக்கிடுங் குன்றி மணற்கொடு, கோடல் பூத்தலர் கோழம்பத் துண்மகிழ்ந், தாடுங் கூத்தனுக் கன்பு பட்டாளன்றே" (உ) "மாட நீண்மருகற் பெருமான்வரிற், கூடுநீயென்று கூடலிழைக்குமே" தேவாரம். திருநா. கோழம்பம். ச, மருகல். அ; (ஊ) "இழைப்பன் றிருக்கூடல் கூட" நாலா. நான்முகன். நுக. (எ) "சிதைக்கின்ற தாழியென் றாழி திருத்தித்தன் சீறடியா, லுதைக்

(பிரதிபேதம்) * எழுவகையவாகிய, † கூறுமறிவு என்னுள்ளத், ‡ சிற்றிலுள்ளே.

ஐந்தாவது நெய்தல் உரு.

அவளைக்கூடுவேனோஎன்று ஆராய்கின்ற யான் அக்(க)கூடலில் ஒருபாகத்தை இழைத்த அளவிலே * அவ்வாராய்ச்சிக்குப் பிறிதொன்றாகிய விளைவு தன்

கின்ற நாயகர் தன்னொடு" நாலா. திருவிருத்தம். நுச. (ஏ) "சென்றார் வரைய கருமஞ் செருவேலான், பொன்றாங் கணியகலம் புல்லப் பொருந்துமேற், குன்றாது கூடுகெனக் கூறிமுத்த வார்மணன்மேல்,

லன்றூங் கணியிழையா ளாழி யிழைத்தாளே" சீவக. ௧௦௩௭. (ஐ) "மெய்யி லணைத்துருகிப் பைய வகன்றவர்தா, மீள்வ - ரெனக்கருதிக் கூடல் வளைத்தறவே, கையி லணைத்தமணற் கண்பனி சோர்புனலிற், கரைய விருந்தழுவீர் கடைதிற மின்திறமின்" கலிங்க. ௰௧. (ஒ) "குழைத்தபூங் கொம்பனை யொருத்தி கூடலை, யிழைத்தன ளவ்வவை யிட்ட போதெலாம். பிழைத்தலு மனங்கவேள் பிழைப்பி லம்பொடு, முழைத்தன ளுயிர்த்தன ளுயிருண் டென்னவே" (ஓ) "மின்னரு மணி விரற் றேய வீழ்கணீர், துன்னரும்பெருஞ்சுழி யழிப்பச் சோர்வினோ, டின்னகை நுளைச்சிய ரிழைக்கு மாழிசால், புன்னையம் பொதும்பரும் புக்கு நோக்கினான்" கம்ப. உண்டாட்டுப். ௫௫. விபீடண. ௨௮. (ஔ) "வளைத்துக் கிடந்த வரிமணற் கூடலும்" அம்பிகா. ௫௨௨. (ஃ) "நிலமே சுழித்தனை" தலோத். ௨௯௮. (அஅ) "சுழித்த கூடல் கூடுறாது நீர்சொரிந்து நாடொறு, மழித்த கண்கள்" நைடத. கைக். ௯. (ஆஆ) "சுழிக்குஞ் சுழிக்குத் தொகைவேறு வேறுறச் சோர்வளைபோ, லழிக்குங்கண் ணீர்பல காலுமங் கேதாவா மாமனைத்துஞ், செழிக்குந் தமிழ்க்குரு கூர்ச்சட கோபன் சிலம்பினிலென், விழிக்குங் கரத்துக்கு நானென்ன வோவெவ் வினைசெய்ததே" மாறன். ௨௮௬. (இஇ) "ஆய் சுவைத்தேன், மொழிக்குங் குமமுலை யாள்விரல் கன்றவெண் முத்த மணற், சுழிக்குங் கழிக்கு மொழிக்குங்கண் ணீரென்ற துன்புறுமே" சீகாழிக். ௫௦௮. என்று வருபவையும் (ஈஈ) நாலா. நாச்சியார். ௪-வது 'தெள்ளியார் பலர்' என்னும் தலைப்பையுடைய கூடற் குறிப்பின் ௧௦ பாசுரங்களில் இச்செய்தியாக வருபவையும் (உஉ) "செய்குறி யாழி வைகலு றெண்ணி, யெழுது சுவர் நினைத்த வழுதுவார் மழைக் கண்" அகம். ௫௯௧: ௧௦-௧௧. என்பது இச்செய்தியைக் குறிப்பதாயின்

அதுவும் இங்கே அறிதற்பாலன. (௩௩) "ஆழி திருத்தும் புலியூ ருடையா னருளினளித், தாழி திருத்து மணற்குன்றி னீத்தகன் றூர் வருகென், றூழிதிருத்திச் சுழிக்கணக் கோதினை யாமலைய, வாழி திருத்தித்தரக்கிற்றி யோவுள்ளம் வள்ளலையே" (கோவையார். ௧௮௬) என்னுஞ்செய்யுளாலும் அதற்கு முன் பின்னுள்ள குறிப்புரைகளாலும் இதற்குக் கூடற்றெய்வத்தை வழிபடலுண்டென்பது விளங்கும். அடுத்த குறிப்பும் பார்க்க. இது தமிழ்நூல் வழக்கு.

௧. (அ) "பாகவரை வாங்கிப் பழுதாகிற் பாவியேற், கேகுமா லாவியென நினைப்ப" சீவக. ௧௦௩௮. (ஆ) "கூடற்பெருமானைக்கூடலார்கோமானைக்,

(பிரதிபேதம்) * அவரா ராய்ச்சிக்கு.

112

னிடத்தின் முழுதுங் கூடாத இளம்பிறையைக் கண்டேன்; கண்டு அஃது அவ்விசும்பிடத்தே பின்பு நிறைமதியாய் வருத்துமெனக் கருதி யானுடுத்த துகிற்றலையாலே மூடி அகப்படுத்திக்கொள்கின்ற யான் அதனை அகப்படுத்தினால் நீலமணிபோலுந் திருமிடற்றையுடைய மாட்சிமையுடைத்தாகிய மலரையுடைய கொன்றைமாலையையுடையவன் அதனைச் சூடுதற்குக் காணுறைத் தேடித் திரியுமோவென்று கொண்டு, * நெஞ்சே! இது பின் வருத்துதலைத் தோரசே இதனை அவற்குக் கொடுத்து ஒருபடிப்பட உபகாரியாவாய்; யாம் தெள்ளியேங்காணென்றுகூறி நெஞ்சை வலியுறுத்தி அதனைக் கைவிட்டு, பின்னரும் அவர் வருவாரோ? வந்தால் யான் உடம்படாது அவரை மிகவும் இகழ்ந்திருப்பேனோ? என்று உள்ளி விளங்கிருந்த நள்ளிருளையுடைய(௧)ஊர் காவலர் காத்தலைக் கொண்ட நங்குவிடத்துக் கனவிலே யான் உள்ளியவாறே வந்து † தோன்றினனை யான் அவனை வளைத்து பிடித்துக்கொண்டேன்; அதனைப் பெற்றதென்? அங்ஙனம் பிடித்துக் காண்பேனாகப் பையென விழிக்க, யான் பிடித்த கையுள்ளே மறைந்து தோன்றானாயினன்; இனி யான் ஞாயிற்றைக் கொண்டே அவனைக் காண்பேனென்றுகருதி இருந்து

மற்றைநாள் அந்தியிலே ஞாயிற்றை நோக்கிக் கிரணங்களைப் பிறர்க்குப் பகுத்துக் கொடாத ஞாயிறே! அக்கதிர்களோடே நீ அத்தகிரியை அடைகின்றாயாயின் அவரை நினைத்துத் தேடிப் பிடித்துக்கொண்டு என்முன்னே நிறுத்தி என்கையிலே உன்கையை நீட்டித் தப்பாமற் றருவையாயின் உயிர் திரியாக என்னெஞ்சாகிய அகலிலே கொளுத்திய காமத்தீ அவியும் என்றேன்; அதற்கு மறுமொழி தாராது அத்தகிரியைப்போகலின் அதனை நோக்கி, மறுவில்லாத [1]சுடரே! அத்தகிரியைச் சேர்கின்றாயாயின் நீ கடலினீரிடத்தே மீண்டு வந்து தோன்றிப் பகற்பொழுதை உண்டாக்குமளவும்(உ) தானெழுதுந் தொய்யிலை எழுதாமற் கெடுத்தவனை யான் தேடுவேன்; யான் தேடும்படி

கூடப் பெறுவேனேற் கூடென்ற - கூட, விழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும், பிழைப்பிற் பிழைபாக் கறிந்து" மூத்தோள்.

க. (அ) "காவலர் கடுகினும்" குறிஞ்சி. உசo. (ஆ) "துஞ்சாக் கணணர் காவலர் கடுகுவர்" அகம். கஉஉ: ௬. (இ) யாமங் கொள்பவர் சுடர் நிழற் கதூஉங், கடுமூரண் முதலைய நெடுநீரி லஞ்சி" புறம். ௩எ: ௯-கo. என்பவற்றாலும் பண்டைக்காலத்தே இராப்பொழுதில் ஊர்காவலர் துயிலாது விளக்கொடு விரைந்து சென்று ஊர்காத்தனரென்பது அறியலாகும்.

உ. (அ) "கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி" என்பதன் விசேடவுரையில், 'கரும்பையும் வல்லியையும் தோளிலே எழுதியெனவே தொய்யிலென்னையும் முலேமே லெழுதியென்பதாயிற்று' என்று (சிலப். உ: உ௬. அடியார்க்கு) இருப்பதனால் தொய்யிலென்பது வல்லி (பிரதிபேதம்) [*] நெஞ்சம் இது பின் வருத்த, † தோணிருகை.

எனக்குக்(க)கைவிளக்காகச் சில கிரணங்களைப் பகுத்துத் தாராய் என்று கூறினேன்; அச்சுடரும் யாம் அதனைக் கொடுத்தால் அவனைக் கண்டு தனித்து வருந்துவேனென்று உட்கொண்டு அதனைத்தாராது போயவாறுணர்ந்து அவன் எம்மை முன்னர் விரும்பிப் பின்னர் நலத்தைச் * சிதைத்தானாயினான்; இங்ஙனஞ்சிதைத்தவனை எதிர்ப்பட்டால் யான்கூடாமல் வேறுசெய்வது எவன்கொலென்றுகருதி அத்தகிரியிலேவீழ்கின்ற காலத்து(உ)மன்றத்தின் †பனைமேலே தோன்றும் மலையிடத்து டார்தளிர்போலும் நிறத்தையுடைய வெயிலே! என்

யின் வேறென்பது அறியலாகும். (ஆ) "தொய்யில் முதலிய பத்திக் கீற்று" என (சீலப்.ரு:உஉக. அடியார்க்கு) வருதலும்காண்க; தொய்யிலென்பது ஒரு நீர்க்கொடி; இது (இ) "நெய்தலுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர" என்பதனால், விளங்கும். இவற்றால் தொய்யிலென்பது முதலில், தொய்யிற்கொடிபோன்ற கோலத்துக்கே சிறப்புப்பெயராயிருந்துபிறகுகோலப்பொதுவுக்கு பெயராயிற்றென்று தோற்றுகிறது. (ஈ) "கொழுது தேனிமிர் தொடையலங் கோனவனழகு, முழுதுங் காணிய தம்மெதிர் முன்னவெங் களிற்றுக், கெழுது தொய்யிலைக் கரும்பிதோவென்றுகாட்டினர்போத், பழுதிலாமணிக்கச் சுகநிற்பர்கள் பல்லார்" காஞ்சி. நகரேற்ற. உகக, என்பதும்நோக்குக. (உ) "ஐய விரும்பிநீ, யென்றோ ளெழுதிய தொய்யிலும்" (ஊ) "வரி தேற்றாய் நீயென வணங்கிறை யவன்பற்றித், தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய் தனைத்தற்கோ" (எ)கெழுமென்றோட், பெய்கரும் பீர்க்கவும் வல்ல ளிளமுலைமேற், றொய்யி லெழுதவும் வல்லன்" (ஏ) "உதுக்காணங், தொய்யில் பொறித்தவழி" கலி. கஅ: உ - ந. எகூ: கச - கரு, கசங: நக - நங, கசச: நச. (ஐ) "சண்பக மாலைவேய்ந்து சந்தனம் பனிதங் கீற்றி, விண்புக நாறு சாந்தின் விழுமுலைக் காம வல்லி, கொண்டெழூங் குருவு காட்டி முகத்திடைக் குளித்துந் தோண்மேல், வண்டளி ரீன்றுசுட்டி வாணுதல் பூப்ப வைத்தான்" சீவக. க0அக. என்பவற்றால் தலைவன் தொய்யிலெழுதலுண்டென்பது அறியப்படும். இது சந்தனம் தேவதாரம், அகில் குங்கும முதலியவற்றின் குழம்பால் எழுதப்படுமென்பர்.

க. (அ) "இருளை நீங்கக் கைவிளக் கேந்தி யாங்கு" (ஆ) "காய்பொற் கடிகைக் கதிர்க்கைவிளக் கேந்தி" (இ) "இருளை நீங்கக், காட்டினார் தேவ ராவர் கைவிளக் கதனை" சீவக. கருசஉ, உகூ௦, உஎஉக. (ஈ) "இருளே யுலகத் தியற்கை யிருளகற்றுங், கைவிளக்கே கற்ற வறி வுடைமை" அறநெறி. கசக.

உ. (அ) "மன்றப் பெண்ணை" நற். கூ௦கூ: ச. (ஆ) "மன்றிரும் பெண்ணை" குறுந். கஎஎ.

பிரதிபேதம்) * செய்தாருமி யில்லைஞ். † பணிமேலே.

மென்றோளை மெலிவித்தானது வடிவழகின் நன்மை யான் விரும்பிக் காண்ப தல்லது அவன் *செய்த நன்று தீதென்று கூறுகின்ற பிறவற்றைக் காணேன்; என்னையொழியப் பழைதாக இவ்வுலகத்து மகளிரும் தத்தங்கணவரைக் கண்டாற் கூடுவதன்றித் துனித்திருந்தாரென்று கேட்டும் அறிவையோ என்று †கூறினேன்; அங்ஙனங் கூறி, காமநோய் என் மனத்தைச் சுழலப் பண்ணி நெருப்பாக நின்று சுட்டதாயினும் தோன்றாமல் மனத்துள்ளே மறைப்பேன்; அதனை, மறைத்தாற்போலே அழகிய இதழ்போலுங் கண் தன்னிடத்தே கொண்டுநின்ற காமநோயை உறுகின்ற வெவ்வியநீரையும் மறைப்பேன்; அதற்குக் காரணம் அந்நீரைத் தெளிப்பின் அளிக்கத்தக்க இவ்வுலகு வேவ தொன்றாய் இருத்தலின் என்று யான் ஆற்றிய அருமையுங் கூறினேன்; இதுகாறும் யானுற்ற ‡வருத்தம் இதுதானென்று நின்றசான்றோரை நோக்கிக் கூறி, பின்னரும் சான்றீர்! கலியும் காமமுங் கௌவையுமென்று சொல்லப் படும் இரண்டு விழுமம் உயிர் (க) ||காவாக இரண்டுபுறத்துந் தூங்கி என்னை நலியும்; இதனை இங்ஙனம் உயிர்மெலியுமளவும் வலிதிற் பொறுத்தேன்; இனி இறந்துபடுவதற்குமுன்னே இதனைக் களைவீராக என்று கூறினாள்; என்று சொல்லி, பகலும் இரவும் கூட்டமின்றிக் கழிந்தன என்று எண்ணி வருந்தி அழுதனள்; அழுது நீடுநினைந்து நொந்துஉயிர்த்தனள்; அதன்பின்னர்

விளக்கத்தையுடைய இராக்காலத்தே வந்து வரைந்துகொண்ட கேள்வன் இவன் (?)நல்ல அழகினையுடைய மார்பனைப் புணர்ந்து, தேய்க்கும் காலத்தே சிதைக்கின்ற(௨) தேற்றாவினுடைய விதையைக்கொண்டு கலத்தே மெல்லத் தேற்றக் கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறுபோலத் தன் சிதைவு தெளிந்து பழைய நலத்தைப் பெற்றாள்; ஆதலான், யாமும் இவர்களை அறுதியாக மணியும் அதனிற் பிறந்த ÷நீரும் போலே வேறல்லரென்று துணியக் கடவா மென்று கண்டார்கூறிற்றாகப் +பொருளுரைக்க. எ - று.

ஓஒ இரக்கக் குறிப்பு. நகுதிரோ என்னும் ஓகாரம் ஐயம். நல்ல நகாவி ரென்றது மிகவும் நல்ல சிரிப்பினையுடையீராவீர், நல்லீர்கொல்லோ? அது நல்ல சிரிப்பாகாதே என நின்றது. 'எற்சிதை செய்தான் ×இவனென' என்றது, முன் 'யானுற்ற அல்லலுறீஇயான்' என்றதனையேயாகக்கொள்க. உரன் - அறிவு, "உரவோ ரெண்ணினும்" (௩) என்றார் பிறரும். என்னுடைய

---

௧. கா - இரண்டு பக்கங்களிலும் பண்டங்களைக் கட்டித் தோளிற் சுமக்கப் படும் மரம்; காவடித் தண்டு என்று கூறப்படும்.

௨. இம்மரம் நூல்களில், 'தேறு' என்றும் வழங்கும்.

௩. பதிற். ௭௩: ௧.

(பிரதிபேதம்) * செய்த தீதென்று. †கூறினெங்ஙனம், ‡வருத்தமென்றுநின்ற, ||காவலாக வவ்விரண்டு புறத்துந்தூக்கி, ÷நீர்மையைப்போல, +பொருளுரைக்க "சொல் லொடேம். × இயனென நின்றது,

இடுகின்றவன், சிவந்த நூற்கழியை ஒருவன் இரண்டுகையிலும் கோத்துப் பிடித்திருக்க அந்நூலை மூன்று நூலாகக் கொள்கின்றவனையும் ஒக்கும்; இவனுடைய பெருமையைப் பாராயென்று தோழிதலைவிக்குக் காட்டினாள். எ-று.

௬௨. (௧) இகுளை யிஃதொன்று கண்டை (௨)யிஃதொத்தன்
கோட்டினத் *தாயர் மகனன்றே மீட்டொரான்
போர்புக லேற்றுப் பிணரெருத்திற் றத்துபு
தார்போற் றழீஇ யவன்

எ - து: போரைக்கொண்டாடுகின்ற ஏற்றினது †சர்ச்சரையையுடைய கழுத்திலே பாய்ந்து அதற்கு இட்ட மாலைபோலே அதனைத் தழுவினவன் எருமைத்திரளையுடைய ஆயர்மகனல்லவோ? ஆதலான் இனி அதன்வலியை மீளப்பண்ணி அதனை நீக்கான்; இளையோளே! இஃதொரு வலியைப் பாராய்; இவனொருத்தன்காணென்று காட்டினாள். எ - று.

இவனொருத்தனென்றது, ‡வியந்தது.

௬௩. (௩) இகுளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
கோவினத் தாயர் மகனன்றே யோவான்
மறையேற்றின் மேலிருந்தாடித் துறை(௪)யம்பி
யூர்வான்போற் றோன்று மவன்

எ-து: (௫)மறுவினையுடைய ஏற்றின்மேலேயிருந்து ஆடிவிட்டுப் பின்னர் நீர்த்துறையிடத்துத் தெப்பத்தின்மேற் கிடந்து அதனைத் தள்ளுகின்றவனைப்

௧. "தையலோ டின்னன பெண்பாற் பெயரே" என்புழி, இன்னன வென்பதனாலே இகுளை யென்பது உயர்திணைப் பெண்பாற் சொல்லென்று நன். பெயரி. சூ. ௨௦. மயிலை. விருத்தி, இரா. இ - வி. சூ. ௧௭அ. உரைகளிலும், தோழியை இகுளை என்பது மலாடார் சொல்லென்று (நன். பெயரி. சூ. ௧௯) மயிலை.உரையிலும்.சேநாட்டார்சொல்

லென்று விருத்தி. இ௱. உரைகளிலும் காணப்படுபவை இங்கே அறிதற் பாலன.

௨. இந்நூற்பக்கம் ௩அ௬: ௩-ஆம் குறிப்புப்பார்க்க.

௩. இச்செய்யுளில் ௩௨, ௪௬-ஆம்அடிகளும் இப்படியே அமைந்துள்ளன.

௪. "தங்கார் பொதுவர் கடலுட் பரதவ, ரம்பியூர்த் தாங்கூர்ந்தா ரேறு" கலி. ௧0௪: ௨௨ - ௨௩.

௫. மறையென்பது மறுவென்னும் பொருளில் வருதல், "செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளை" (கலி. ௧0௪: ௨எ) என்புழி 'மறை' என்பதற்கு எழுதியிருக்கும் உரையாலும அறியலாகும்

(பிரதிபேதம்) * ஆய மகனென்றே விட்டோரான். † சாச்சரையுடைய, ‡ வியந்து இருமீ.

ஐந்தாவது நெய்தல் உ௫. அ௬௩

(௧) நெய்தன் மலரன்னகண்கள் இங்ஙனம் * வருத்தத்தையுடையனவாகி மிகப் பசப்பனவோ பசவாவோ என ஓகாரம் எதிர்மறை.

"சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்" (உ)என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவுதோன்ற ஆசிரியர் †நல்லந்துவனர் செய்யுட்செய்தார்.

‡எல்லிர நல்கியவென்றும் பாடம். மென்றோ ணெகிழ்த்தான் றிறமல் லாவென்பதும் பாடம்.

இதனுள் அந்திக்காலத்தே கையறவெய்திப் பின்னர்ச் சான்றோரை நோக்கிக் கூறுகின்றவள் புல்லாராமாத்திரை என்று அவனொடு புணர்ச்சி நிகழ்ந்தமையுங் கூறி யாவருங் கேட்ப நக்கழுது அல்லலுறீஇயானெனப் பெயரும் பெற்றியுங் கூறிப் புல்லிப் புணரப்பெறின் இகழ்ச்சியன்றாமெனக் கூறத்தகாதன கூறலின் மடந்தன்னை இறந்தவாறும் தெள்ளியேமென்றதனானும் எள்ளியிருக்குவே னென்றதனானும் வருத்தமிறந்தவாறும் "கோடுவாய் கூடா ......கொன்றையவன்" என்றதனால், தான்செய்ததனை வியவாமையின் மருட்கைபிறந்தவாறும் நெய்தன்மலரன்ன கண்ணெனத் தன்வனப்பு மிகுதி கூறலின் மிகுதி ||பிறந்தவாறும் காண்க.

இதனுறுப்புக்களுட் தலைவிக்கு (௩) — கலக்கமென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

எல்லிடை நல்கிய கேள்வ னிவனெனவே ∴ கந்தருவத்தின் வழுவிப் பெருந்திணை நிகழ்ந்தவாறும் பின்னர் வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க. அது புல்லாராமாத்திரை என்றதனானுமுணர்க.

(௨)இது புரிவுண்டபுணர்ச்சிஎனக் ✝கலித்தலைவந்தும் 'புல்லாராமாத்திரை யருகுவித் ‡தொருவரை யகற்றலின்' எனவும், ¹'இனைந்துநொந் தழுதனை

௧. (அ) "கண்ணே ரொப்பின் கமழ்நறு நெய்தல்" நற். ௨௮௩: ௨. (ஆ) "நெய்தற், கூம்புவிடு நிகர்மல ரன்ன, வேந்தெழின் மழைக்கணெங் காதலி" அகம். ௮௩: ௧௨ - ௧௪. (இ) "நெய்தற் போதனைய வுண்கணேரிழை" திருவிளை. மாபாதகந். ௩௬.

௨. தொல். செய். சூ. ௨௦௪.

௩. இந்நூற்பக்கம் ௮௮௨: ௧, ௪ - ஆம் குறிப்புக்கள் பார்க்க.

௪. (அ) "புரிவுண்ட ....செவிசுவை கொள்ளாது என்பதனுள்,
'இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தனள்' என இயற்சீர்
நிரையொன்றியும் பாவேறுபடாமையின் அது கலிவெண்பாட்டாயிற்

(பிரதிபேதம்) *. வருந்த மிகப். † கல்லந்துவனார், ‡ எல்லீரு கல்வியவென்றே பாடம்.
|| இறந்தவாறு கூறியவாறுங் காண்க, ÷ கலக்க மெய்ப்பாடு எல்லீர கல்விய,
∴ கந்திருவத்தின், ┼ கலித்தளையும் வந்து புல்லாரா.

ணினைந்துநீ டுயிர்த்தனள், எனவும் இயற்சீர் நிரை ஒன்றியும் * பாவேறுபட்டு 'எல்லையுமிரவுங் கழிந்தனவென்றெண்ணி †.யெல்லிரா' என ஐஞ்சீரடிவந்த வெள்ளைச் ‡ சுரிதகம்பெற்ற கலிவெண்பாட்டு. (௨௫)

(கசரு.) அகலாங்க ணிருணீங்கி யணிநிலாத் திகழ்ந்தபிற்
பகலாங்கட் பையென்ற மதியம்போ னகலின்று
நன்னுத னீத்த திலகத்தண் மின்னி
மணிபொரு பசும்பொன்கொன் மாவீன்ற தளிரின்மேற்
கணிகாரங் கொட்குங்கொ லென்றுங் கணிசெல
மேனி மறைத்த பசலைய ளானாது
நெஞ்சம் வெறியா நினையா நிலனோக்கா
வஞ்சா வழாஅ வரற்றா விஃதொத்தி
யென்செய்தாள்கொல்லென்பீர் கேட்டீமின் பொன்செய்தேன்;

மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா
தறைகொன்று மற்றத னாருயி ரெஞ்சப்
பறையறைந் தாங்கொருவ னீத்தா னவனை
யறைநவ நாட்டினீர் கொண்டுதரின் யானு

நிறையுடையே னருவேன் மன்ற மறையினென்
மென்றோ ணெகிழ்த்தானை மேஎ யவனுங்கட்
சென்றுசேட் பட்டதென் னெஞ்சு;
ஒன்றி முயங்குமென் றென்பின் வருதிர்மற் றீங்கே
யுயங்கினா ளென்றுங் குசாதிர்மற் றந்தோ
மயங்கினா ளென்று மருடிர் கலங்கன்மி

றென்பது கொள்க" என்று பேராசிரியருரையிலும் (ஆ) "புரிவுண்ட என்னும் நெய்தற்கலி[யுள்,] 'புரிவுண்ட புணர்ச்சியுள்' எனக் கலித்தளையும்வந்து 'புல்லாரா மாத்திரை, யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கண்' எனவும், 'இனைந் தொக்தழுதனணினைந்து நீடுயிர்த் தனள்' எனவும் இயற்சீர் நிரையாயன்றியும் பாவேறுபட்டு, 'எல்லையு மிரவுங் கழிந்தனவென் றெண்ணி யெல்லிரா, நல்கிய கேள்வனிவன்மன்ற மெல்ல' என ஐஞ்சீரடிவந்த வெள்ளைச்சுரிதகமும் பெற்ற கலிவெண்பாட்டு" என்று நச்சினார்க்கினியருரையிலும் உள்ள குறிப்புக்கள் இங்கே ஆராய்தற்பாலன; தொல். செய். சூ. கருசு. நச்.

(பிரதிபேதம்) * பா வேறுபடாவையின் எல்லையு. † எல்லிராவென, ‡ சுரிதகமும் பெற்ற.

னின்னுயி ரன்னாற் கெனைத்தொன்றுந் தீதின்மை
யென்னுயிர் காட்டாதோ மற்று;
பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் வந்தேனென் னெஞ்ச

மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று;

௨௭ அழிதக, மாஅந் தளிர்கொண்ட போழ்தினு ளிவ்வூரார்
தாஅந் தளிர்சூடித் தந்நலம் பாடுப
வாஅந் தளிர்க்கு மிடைச்சென்றார் மீட்டரின்
யாஅந் தளிர்க்குவே மன்;

௩௧ செய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல னிளமுலைமேற்
றொய்யி லெழுதவும் வல்லன் றன் கையிற்
சிலைவல்லான் போலுஞ் செறிவினு னல்ல
பலவல்லன் றோளா ளவன்;

௩௯ நினையுமென் னுள்ளம்போ னெடுங்கழி மலர்கூம்ப
வினையுமென்னெஞ்சம்போ லினங்காப்பார் குழறோன்றச்
சாயவென் கிளவிபோற் செவ்வழியா ழிசைநிற்பப்
போயவென் னொளியேபோ லொருநிலையே பகன்மாயக்
காலன்போல் வந்த கலக்கத்தோ டென்றலை
மாலையும் வந்தன் றினி;

௪௨ இருளொடியா னீங்குழப்ப வென்னின்றிப் பட்டா
யருளிலை வாழி சுடர்;

௪௪ ஈண்டுநீர் ஞாலத்து ளெங்கேள்வ ரில்லாயின்
மாண்ட மனம்பெற்றார் மாசி றுறக்கத்து
வேண்டிய வேண்டியாங் கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை;

சஅ வளரலர் தூற்றும்வ வுயயா வீழுமத்துப்
பீரலர் போலப் பெரிய பசந்தன

அகூகூ கலித்தொகை கசாகூ.

நீரலர் நீல மெனவவர்க் கஞ்ஞான்றய
போஒர் செய்தவென் கண்;
ருஉ தன்னுயிர் போலத் தழீஇ யுலகத்து
மன்னுயிர் காக்குமிம் மன்னனு மென்கொலோ
வின்னுயி ரன்னானைக் காட்டி யெனைத்தொன்று
மென்னுயிர் காவா தது;
எனவாங்கு;
ருஎ மன்னிய நோயொடு மருள்கொண்ட மனத்தவள்
பன்மலை யிறந்தவன் பணிந்தவங் கடிசேரத்
தென்னவற் றெளித்த தேஎம்போல
வின்னகை யெய்தின ளிழந்ததன் னலனே.

(க) இதுவுமது. இதற்கும் (உ)முற்கூறிய உரைகளைக் கூறிக்கொண்டு பொருளுரைக்க.

இதன் பொருள்.

(கூ)அகலாங்க ணிருணீங்கி யணிநிலாத் திகழ்ந்தபிற்
பகலாங்கட் டைபென்ற மதியம்போ னகலின்று
நன்னுத னீத்த திலகத்தண் மின்னி
மணிபொரு பசும்பொன்கொன் (ச)மாவீன்ற தளிரின்மேற்
ரு கணிகாரங் கொட்குங்கொ லென்றாங் கணிசெல

(ரு)மேனி மறைத்த பசலைய ளானாது
நெஞ்சம் வெறியா நினையா நிலனோக்கா
வஞ்சா வழாஅ வரற்று †விஃதொத்தி
யென்செய்தாள் கொல்லென்பீர் கேட்டீமின் பொன்செய்தேன்

---

௧. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந்திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. ௧௩. நச்.

௨. இந்நூற்பக்கம் ௮௮௫ - ௮௮௬. பார்க்க.

௩. அ) "முழவிமிழ் மகலாங்கண்" மது. ௩௨௭. (ஆ) "அகலு ளாங்கண்" குறிஞ்சி. ௪.

௪. "மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலைபோ, லாயிதழ்ப் பன்மல ரைய கொங்குறைத்தர" கலி. ௨௧: ௭ - ௮. என்பதும் இந்நூற்பக்கம் ௧௫௮: ௩ - ஆம் குறிப்பும் பார்க்க.

௫. "பசந்த மேனியள் படர்நோயுற்று" சிலப். ௧௩: ௬௮.

(பிரதிபேதம்) * கல்லான்று. † இஃதொத்தி.

ஐந்தாவது நெய்தல் ௨௬. ௮௬௭

எ - து: அகன்ற வூரிடத்தேயிருந்து களவின்கண் அவனோடு கூடி இன்புற்ற காலத்து (க)இராக்காலத்து இருணீங்க விளங்கின அணிநிலாவை யுடைய மதியம்போலே விளக்கம் அமைந்து அவன்நீங்கினபின்பு பகற்பொழு

கிடந்து ஒளி பாம்பட்ட மதிபோலே ஒளிகெட்டு நன்றாகிய நுதலினின்றும் போன *திலகத்தையுடையளாய்(உ)நீலமணியைத் தானொளிவிட்டு மாறுபடும் பசிய பொன்னொளிகொல்லோ! மாவீன்ற பசிய †கொழுந்தின்மேலே கோங்கம் பூவிற்றூதுபரந்த ஒளிகொல்லோ! என்று பிறர்கூறுந் தன்னணி தன்னிடத்தினின்றும்போம்படி தன்மேனியைமறைத்த பசலையளாய் அமையாமை தன்னெஞ்சம் இன்பத்தைத் தரும் பொருள்களோடே ‡வெருவி அவ்வின்பங் கழிந்தபடியைநினைத்து (ங.)நாணாற் பிறரெதிர்முகநோக்காது நிலத்தைநோக்கி அந்நாண் மேற்போகின்றதற்கு அஞ்சி அழுது அழாதே பலவுஞ் சொல்லித் தன்குறை கூறி இவளொருத்தி என்ன வருத்தமுற்றாள் கொல்லோ என்று கூறுகின்றவர்களே! யான் பொன்செய்தேன்; யானுற்றதனைக் கேட்பீராக என்று கூறினாள். எ - று.

மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா
தறைகொன்று மற்றத னாருயி ரொஞ்சப்

---

௧. (அ) "நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு" கலி. ௧௨௧: ௧௮. (ஆ) "மாலை மணந்து காலைப் பிரியுங், காதல ருடைமையோ கறைநீங்கு மதிய, மிரவே யாயி னல்லை பகலே, மெல்லியற் கொடிச்சி நுதலினும், புல்லென் றனையா ளோகோ யானே" தமிழ்நெறி. மேற். (இ)"பார்குலாமுழுவெண்டிங்கள் பகல்வந்தபடிவம்போலு, மேர்குலா முகத்தி னாளை" கம்ப. கிட்கிந்தைப். ௫௪. (ஈ) "விரிகதிர்ப் பரிதி முன்னர் வெண்மதி மழுங்கும்" நைடத. போர்புரி. ௨.

௨. "திறந்திகழ் பாசிழையென்றது தன்னின் அழுத்திய மணியினும் தன்னிறந்திகழும் பசும்பொன்னிழை யென்றவாறு. இச்சிறப்பானே, இதற்கு, 'திறந்திகழ் பாசிழை' என்று பெயராயிற்று" என்பது, பதிற். ௭௩. உரை.

௩. (அ) "நீயுந் தாயை யிவற்கென யான்றற், கரையவந்து விரைவனென் கவைஇக், களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா, நாணி நின்றோ ணிலைகண்டு" அகம். ௧௬: ௧௩ - ௧௬. (ஆ) "காணும் பொழுதி

னோக்கல் செல்லாது, நாணி யிறைஞ்சும்" கலி. சுக: அ - கூ. (இ) "அன்மை கண்டு நாணிச், சோலை நோக்கி நடக்கும்" சீவக. கூகக. (ஈ) "மாதிர மெவையு நோக்கான் வளநகர் நோக்கான் வந்த, காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான், றூதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்கத் தானப், பூசல மென்னு மங்கை தன்னையே நோக்கிப் புக்கான்" கம்ப. கும்ப. ந.

(பிரதிபேதம்) * நிலதத்தை, † கொம்பின்மேலே, ‡ வெருவியவின்பம்.

பறையறைந் தாங்கொருவ னீத்தா(க)னவனை
*யறைநவ நாட்டினீர் கொண்டுதரின் யானு
நிறையுடையே னாகுவேன் மன்ற மறையினென்
மென்றோ †ணெகிழ்த்தானை மேஎ யவனுங்கட்
சென்றுசேட் பட்டதென் னெஞ்சு

எ - து: அங்ஙனங் கூறுகின்றவள் வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக் கேட்ட (உ) அசுணமாவை இவ்வின்பமுற்றதென்று அருள் ‡பண்ணுதே முன்பு செய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதன் அரிய உயிர்போம்படி பறையைத் தட்டினாற் போலே ஒருவன் முன்னர் வஞ்சித்து

க. "அவனை .... மன்ற" என்னும் பகுதிக்கு உரை பின்பு உள்ளது.

உ. அசுணமென்பது விலங்குகளுள் ஒன்றென்று பலவிடத்தும் பறவைகளுள் ஒன்றென்று சிலவிடத்தும் வழங்கப்படுகிறது. இதற்கு யாழொலி (குழலொலி வண்டொலி பாட்டொலி) முதலிய மெல்லிசையால் இன்புறுதல் முதலியவையும் பறையொலி (முரசொலி வெடியொலி)

முதலிய வல்லிசையால் துன்புறுதல் முதலியவையும் இயல்பு. இதனைக் குறிஞ்சி நிலத்துக் குரியதென்றும், புகைபோன்ற மேனியுடையதென்றும் அச்சப்பொருள்களுள் ஒன்றென்றும் சுவையொளியூறோசை நாற்றமென்ற ஐந்தனுள் இசையிலீடுபட்டு உயிரையுமிழப்பதென்றும் கூறுவர். இவற்றுள் ஒவ்வொரு செய்தியே தனித்தும் பல செய்திகள் சேர்ந்தும் செய்யுட்களிற் பயின்று வருதலும் பிறவும் (அ) "மாதர் வண்டி னயம்வருந் தீங்குரல், மணநாறு சிலம்பி னசுண மோர்க்கு, முயர்வரை நாடன்" (ஆ) "அசுணங் கொல்பவர் கைபோ னன்று, மின்பமுந் துன்பமுமுடைத்தே" நற். உ௪௪: ௯-௫; ௯௦௪: அ-௧. (இ) "இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத், திருங்கல் விடரளை யசுண மோர்க்குங், காம்பம லிறும்பின்" அகம். அ௮: ௧௧ - ௧௩. (ஈ) "பறைபட வாழா வசுணமா" நான்மணி. ௪. (உ) "இன்ன ளிக் குரல் கேட்ட வசுணமா, வன்னளாய்" சீவக. ௬௪௦௨. (ஊ) "கோவலர் கொன்றைத் தீங்குழ, லுலவுநீ ளசுணமா வுறங்குமென்பவே" சூளா நாட்டுச். உ௮. (எ) "இசைகொள் சீறியா ழின்னிசை கேட்ட, வசுண நன்மா வந்திலேக் கண்ணே, பறையொலி கேட்டுத்தன் படிமறந் ததுபோல்" பெருங். (௧) ௪எ. உ௪௧ - உ௪௩. (ஏ) "அச்சப்பொருளாவன, 'வள்ளெயிற் றரிமா......... .....குன் றுறை யசுணம்' என்று சொல்லப்பட்டன போல்வன" தொல். மெய்ப். சூ. ௧. நச். உரை. (ஐ) "இசை கேட்ட வசுணமாத் தாழ்ச்சிபோல்" மேரு. வைசயந்த. ௪௪. (ஒ) "துறையடுத்த விருத்தத் தொகைக்கவிக், குறையடுத்த செவிகளுக் கோதில்

(பிரதிபேதம்) * யிறைகல காட்டினீர், † ஞெகிழ்த்தானே. ‡ பண்ணுதென்றருள்பண்ணுதே

ஐந்தாவது நெய்தல் உ௰. அ௲௲

இன்பத்தை உண்டாக்கிப் பின்னர் அவ்வின்பம் போம்படி என்னைக் கைவிட்டான்; அக்களவொழுக்கத்தாலே என் மெல்லிய தோளை *மெலிவித்தவனை

(என்) நெஞ்சு பொருந்தி அவனுறைகின்ற இடத்தே சென்று வருதற்கு நெடுங்காலத்த[வ](த)ாயிற்று என்று கூறினாள்.

கஎ ஒன்றி, †முயங்குமென் றென்பின் வருதிர்மற் றூங்கே
‡யுயங்கினு ளொன்றுங் குசாதிர்மற் (க)றந்தோ

யாழ், நறையடுத்த வசுணநன் மார்செவிப், பறையடுத்தது போலுமென் பாவரோ" (ஓ) "குனிந்த வூசலிற் கொடிச்சிய ரெடுத்தவின் குறிஞ்சி, கனிந்து பாடல்கேட் டசுணமா வருவன காணாய்" (ஔ) "வாம மேகலை வானா மங்கையர், காமப் பூசற் களிப்பிசைக் கள்ளினாற், றாம மேனி யசுணந் துயில்வுறு, மேம கூட மெனுமலை யெய்துவீர்" கம்ப. பாயி. அ; சித்திரகூடப். உச; நாடவிட்ட.கச.(ஃ) "வண்டியா, ழென்று வசுண மிறைகொள்ளு நாடர்" தஞ்சை. உகு. (அஅ) "திவவியா ழரமகளிர் தடவந்த வொலிக்களாசு, செம்மாந்துள்ள, நவையின் மணிக் குடுமிதொறு மசுணமுறை புட்பகமா ளிவான் குன்றும்" இலிங்க. நவவருட. சஅ. (ஆஆ) "முரசொலி கேட்ட வசுணமென் புள்ளின் மூச்சவிர் தொருவழி தேறி" கூர்ம. இராமன்வனம். ௬. (இஇ) "வளை படு மன்னவன் வாய்மை யாலறை, விசிமுழ வொலிசெவி வெதும்பக் கேட்டலு, மிசைபடு மன்னவற் கிரங்கி யேறுறலா, மசுணமென் புள்ளென வலம்பந் தேங்கினார்" நைடத. நகர்நீங்கு. கச. (ஈஈ) "தாமரைப்புறக் கழைகளின் றுளைதொறுங் கால்பரந் திசைக்கின்ற, வேயிசைக்குள முருகிமெய் புளகெழ விறைகொளு மசுணங்க, டாழுழற்கூடர் சுடர்சுட வெடித்தெழு சடுலவோ சையின்மாய்ந்த" (உஉ) "பண் ணுறுக் குருகிப் பறையாலகப் பட்ட யான்போல்" வில்லி.காண்ட. ௯௦. வெளிப்பாட்டு. கூச. (ஊஊ) "எற்றும்தா ரிசையினுலே யிறக்குமாலசுணம்" பாகவதம். (கக) உத்தவர். சு. (எஎ) "மறக்கும்ப தந்தியுஞ் சேனு மசுணமும் வண்டினமும், பறக்கும் பதங்கமும் போலவ ராற் கெடும் பாதகர்" திருவேங்கடத். உஅ. (ஏஏ) "குழலிசைகேட் டருகணையு மசுணமென" காஞ்சிப். அந்தக்கச. அ. (ஐஐ) "பேரிகை முழக்கிய பிறங்கு மோசையா, லாரிட ருழந்துவீ ழசுண மாமென"

விநாயக. பகோற்கடர். ௨௩௨. என்ற தமிழ்நூற் பகுதிகளாலும்(ஓஓ)
“[illegible]॥”
சுக்கிரநீதி. ௪: ௧௦௨. என்ற வடநூற் பகுதியாலும் அறியலாகும்.

௩. அஃதோவென்பது, ‘இரக்கத்தின்கட்குறிப்பு’ கோவையார்.௭௨.உரை. ‘இரக்கக்குறிப்பு’ சீவக. ௧௦௩௯. உரை. ‘இரக்கக்குறித்து வருவதோ ரிடைச்சொல்’ நன். இடை. ௫. உ. மயிலை. சங்கர. விருத்தி. இரா.

(பிரதிபேதம்) * மெலிவித்தவனை நெஞ்ச, †மயக்குவெமென்று, ‡டீயக்கிரு சென்றுக்கு

மயங்கினை யென்று ※மருடிர் கலங்கன்மி
(௧)னின்னுயி ரன்னாற் கெனைத்தொன்றுந் தீதின்மை
யென்னுயிர் காட்டாதோ மற்று
(௨)பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் †வந்தேனென் னெஞ்ச
மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று
அழிதக, (௩)மாஅந் தளிர்கொண்ட ‡போழ்தினா னிவ்வூரார்
தாஅந் தளிர்சூடித் தங்கலம் பாடுப
வாஅம் ‖ தளிர்க்கு மிடைச்சென்றார் மீட்டின்
மாஅம் ÷ தளிர்க்குமே மன்
செய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்(௪)றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல × னிள(௫)முலைமேற்
றொய்யி லெழுதவும் வல்லன்றன் கையிற்

க. "மதிமுகத் தலர்ந்தகோதை மாற்றமைந் தற்குரைப்பாள், கொதிமுகக் குருதி வைவேற் குரிசிலோ நம்மை யுள்ளான், விதிமுக மணங்க ளெய்தி வீற்றிருந் தின்ப முய்ப்ப, மதிமுக மறியு நாமே வாடுவ தென்னை யென்றாள்" சீவக. கஎ0அ.

உ. (அ) ஆங்கு நெஞ்சழிதல் என்னும் மெய்ப்பாட்டுக்கு, "பழிதபு ஞாயிறே ....விடா தீமோ வென்றா" என்னும் பகுதி மேற்கோள்; தொல். மெய்ப்பாட். சூ. உஉ; இ - வி. சூ. ருஅ0. (ஆ) ஞாயிறு முதலிய சில பொருள்கள் சொல்லுவனபோலவும் கேட்குநபோலவும் சொல்லப்படு மென்று கூறி, "பழிதபுஞாயிறே பாடமியாதார்கண்" என்னும் அடியை ஞாயிறு அவ்வாறே சொல்லப்படுவதற்கு மேற்கோள்காட்டினர், இளம் பூரணர்; தொல். செய். சூ. கக0. 'ஞாயிறு'

ங. "மலைமாத் தளிரே" கலி. கசஉ: சஎ.

ச. (அ) "நட்டோ ளிழைத்த கரும்புக்கு" (ஆ) "தானீர்த்த கரும்பணி வாட வென், மென்றோ ணெகிழ்த்தான்" கலி. கூச: கக, கஙக: உக - ங0.

ரு. இந்நூற்பக்கம் அகூ: உ-ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * மருடிர் கயக்கன்மின், † வந்தனனென்னெஞ் சழிய, ‡ பொழுதினன், || தனிக்குமிடை, ÷ தனிர்க்குமெயன். × இனமுமிமேல்.

ஐந்தாவது நெய்தல் உரு.

(க) சிலைவல்லான் போலுஞ் செறிவின னல்ல
பலவல்லன் றோளாள் பவன்

ஙசு நினையு(உ)மென் னுள்ளம்போ னெடுங்கழி மலர்கூம்ப
வினையுமென்(ங)னெஞ்சம்போ லினங்காப்பார் குழறோன்றச்

சாயவென் (௪)கிளவிபோற் செவ்வழியா ழிசைநிற்பப்
போயவென் னொளிபோ லொருநிலையே பகன்மாயக்

(௫)காலன்போல் வந்த கலக்கத்தோ டென்றலை
மாலையும் வந்தன் றினி

௪௨. இருளொடியா னீங்குழப்ப வென்னின்றிப் பட்டா
யருளிலை வாழி சுடர்

---

௧. (அ) "அரிவையை யரம்பை நாண வணிந்தன னனங்க னன்னான்" (சீவக. ௬௭௪) என்புழி, 'அனங்க னன்னான்' என்பதற்கு, 'இவளைத் தீண்டவும் வேட்கை நிகழாமையின் அனங்க னன்னான் என்றார்' என்று விசேடவுரை கூறி, "சிலைவல்லான் போலுஞ் செறிவினான்" என்பதனைமேற்கோள்காட்டினர் இவ்வுரையாசிரியர். (ஆ) "வில்லாண்மையினால் வெண்கருப்பு வில்லோன்றனக்கே நிகரென்ன" வில்லி. திரௌபதிமாலையிட்ட. ௪௬. (இ) "வேயெனத் தகைய தோளி யிராகவன் மேனி நோக்கித், தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டா; ளாயெனத் தகுதுயன்றே காமனு நாமு மெல்லாம்" கம்ப. கும்ப. ௯0. (ஈ) "திருமலி கருப்புவென்றிச் சிலையினா னுலகமெல்லாம், பொருதுசெங் கோன டாத்திப் புகழ்விளை யேக வீரன்" எனவும் (உ) "காமனும் விழையுங் காமர் காரிகைக், கலையுணர் மகளிர்" பெருங். (௧) ௪0: ௧௮௩ - ௧௮௪. (ஊ) "காமனும்......... ..காமுறு மொப்பில் வனப்பினாள்" திருவிளை. மாபாதகந். ௩. எனவும் வருவன நோக்குக.

௨. "இம்மாலை, இருங்கழி மாமலர் கூம்ப வரோவென், னரும்படர்நெஞ்ச மழிவொடு கூம்பும்" கலி. ௧௩0: ௧௧ - ௧௩.

௩. "இம்மாலை, கோவலர் தீங்குழ லினைய வரோவென், பூவெழி லுண்கண் புலம்புகொண் டினையும்" கலி. ௧௩0: ௧௪ - ௧௬.

௪ (அ) "செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார்" கலி. கக௮: ௧௫; (ஆ) "செவ்வழி நல்யா, ழிசையோர்த் தன்ன வின்றீங் கிளவி, யணங்குசா லரிவையை" அகம். ௨௧௨: ௬ - ௮.

௫. "பிறைநுதி யெயிறுக, நாற்றிசையு நடுக்குறூஉ மடங்கற் காலைக், கூற்றூக் கதுபோலு முட்குவரு கமொலை" (கலி. க௨0: ௭ - ௯) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௬௦௨ கலித்தொகை ௧௪௩.

௪௪ (க)ஈண்டுநீர் ஞாலத்து ளெங்கேள்வ ரில்லாயின்
மாண்ட மனம்பெற்றார் மாசி றுறக்கத்து
வேண்டிய வேண்டியாங் கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை

௪௮ ஊரலர் தூற்றுமில் வுய்யா விழுமத்துப்
(உ)பீரலர் போலப் பெரிய பசந்தன

(௩)கீரலர் (௪)நீல மெனவவர்க் கஞ்ஞான்று
பேரஞர் செய்தவென் கண்

௫௨ (௫)தன்னுயிர் போலத் தழீஇ *யுலகத்து
மன்னுயிர் காக்குமிம் மன்னன் †மென்கோலை
யின்னுயிரன்னானைக் காட்டி யெனைத்தொன்று
மென்னுயிர் காவா தது
எனவாங்கு

௧. "ஈண்டுநீர் மிசை" கலி. ௧௦௦: ௧.

௨. இந்நூற்பக்கம் ௨௱௪: ௫, ௩௨௨: ௩ - ஆம் குறிப்புக்கள் இங்கே அறிதற்பாலன.

௩. "நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை, கோடை யொற்றினும் வாடா தாகும்" குறுந். ௩௮௮.

௪. (அ) "நீலத் தலர்வென்ற வமருண்கண், ...வேலிற், பேர்ந்து நீ யினையையா லொத்ததோ சின்மொழி ....கணையினு நோய் செய்தல் கடப்பன்றோ கனங்குழாய்" கலி. ௫௭: ௯-௧௫. (ஆ) "பூவொத் தலமருந் தகைய வேவொத் தெல்லாரு மறிய நோயசெய் தனவே" குறுந். ௭௨.

௫. (அ) "அறனிழ வெனக்கொண்டா யாய்குடை யக்குடைப், புறநிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா, பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளே" கலி. ௧௧: ௮ - ௧௦. என்பதும் (ஆ) அதன் குறிப்பும் (இ) "நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தபா, னென்றுணைக்குலமங்கையொ ரேர்திழை, தன்றுயர்க்குந் தகவிலெ னாயினே, னன்று நன்றென் வலியென நாணுமால்" கம்ப. அயோமுகி. ௧௬. (ஈ) "தன்னுயிர்போல மன்னுயிர்க் கிரக்குந் தயவிலேன்" மச்ச. பிரயாகையிற் பலசொரூப கதன. ௧௨.

(பிரதிபேதம்) * யுலத்த, † என்கொலெம்முன்னுயிரென்.

போலே தோன்றுகின்றவன் பசுத்திரளையுடைய ஆயர்மகனல்லவோ? ஆதலால், இவன் இங்ஙனம் செலுத்துந் தொழிலை ஒழியான்; இளையோளே! இஃதொரு வலியைப் பாராய்; இவனொருத்தன் காணென்று காட்டினள். எ - று.

எ - து: காண்டற் றொழிலை யுடையவளே. எ-மு.

இஃது "அளபெடை மிகூஉ மிகரவிறுபெயர்". (க);

(உ)காற்றுப்போல் வந்த †கதழ்விடைக் காரியை
யூற்றுக் களத்தே யடங்கக்கொண் டட்டதன்
மேற்சென்றி நின்ற பொதுவன் றகைகண்டை
(ரு)யேற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டுச்

க. தொல். விளி. சூ. அ. இச்சூத்திர வுரையில் 'இவ்வளபெடைப் பெயர் விளியேற்கும்போது தன்னியல்பு மாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரைபெற்று நிற்கும்; என்றது ழகர வீகாரத்தின் பின் இரண்டு இகரவுயிரும் மூன்று இகரவுயிரு மெழுதப்படவேண்டுமென் பதை' என்றுகூறுவர், சே. கல். நச். இசசொல்லுக்குத் தொழில் செய் கின்றவனேயெனப் பொருளும் எழுதுவர் நச்சினார்க்கினியரும் இ-வி. உரையாசிரியரும். இ - வி சூ. உ௦எ. இச்சூத்திரத்தினுரையும் மேற் கோளும் எழுதுவோராலும் அவற்றை ஊன்றிப்பாராது அச்சிடுவோரா லும் எளிதின் உண்மையறிய இயலாதவாறிருக்கின்றன. இச்சூத்திர வுரையில் "தொழீஇ என்பது பெயர்; விளிப்பு மஃதே யெனக்கொள்க. இஃதியல்பு. இயற்கைய வென்று பண்பை கூறிய வதனான், இவ்வள பெடை மூன்று மாத்திரையின் மிமிர்ந்து நிற்கு மென்பது கொள்ளப் படும். செயற்கையவென்றதனான் இவ்வளபெடைப்பெயர் எழுதும்வழி ஐந்தெழுத்திட்டும் எழுதுப" என்பர் கல்லாடர். எனைய உரைகள் அச்சிடப் பட்டுள்ளன. "தொழீஇ" கலி. க௦௬: கஅ. "தொழீஇ யுடனுண்ணார்" சிறுபஞ்ச. ருஅ. என இச்சொல் பிறவிடத்து வருதலும் காண்க.

உ. "எற்று மருப்பு மிலங்கிழையாகத் திபமருப்புங், கூற்று மருப்பெழுங் கோலத் தாட்கொரு கோடிசரும், பாற்று மருப்பொலி தாரண்ண லார்முன் னணிந்து விட்டார், காற்று நெருப்புங் கலந்த தென் னுவ ருங் சாரிகைத்தே" அம்பிகா. உ௫ள.

௫. (அ) எருமைச்சாதியின் ஆண் ஏறெனப்படுமென்பதற்கு "எற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டு" என்பதுமேற்கோள்; தொல். மரபு. சூ ௫௧. பேர். சூ. ௫அ. நச். (ஆ) இந்நூற்பக்கம் ௯௨௫: ௪-ஆங் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * தொழில்இது, (என்பது முன்பதிப்பு), † மேலிடை.

திள் மன்னிய நோயொடு மருள்கொண்ட மனத்தவள்
பண்மலை பிறந்தவன் பணிந்துவந் தடிசேரத்
*தென்னவற் றெளித்த தேஎம்போல
வின்னகை பெய்தின ளிழந்ததன் னலனே

எ - து: அங்ஙனங் †கூறியவள் அது கொண்டுவருதலுங் கூடும்; அதனோடே நீருங் கூடி (௧) நவகண்டமெனக் கூறுபடுத்தின ‡உலகத்தின் கண்ணே அவனை ஆராய்ந்து நீர் பிடித்துக்கொண்டு எனக்குத் தரப்பெறில் யானும் ||பிறமகளிரைப் போல அறநிபாத(௨)'நிறையென்னுங்குணமுடையே னாவேன் – என்றுங் கூறினாள்; அதுகேட்டவர்கள் அதற்கு மறுமொழி கொடாமற் பின்னே வருகையின், இவள் ஒருகாலிலேயாயினும் அவனைப் பொருந்தி +முயங்குமென்று கருதி, என்பின்னே வாராநின்றீர்; பின்னை இவள் அப்பொழுதே முன்புபோலன்றி மிகவும் வருந்தினாள் என்று கருதி அவ்விடத்தே நின்று அவனுக்கு ஓர் தீங்கு நிகழ்ந்ததோவென்று உசாவா நின்றீர்; அவ்வருத்தமேயன்றி ஐயோ இவள் கையறவு எய்தினளென்று மருளாநின்றீர்; இங்ஙனம் உண்மையுணராமற் கலங்காதேகொள்ளும்; பின்னை என் இனிய உயிரை ஒப்பானும் யாதொன்றுந் தீதின்றி அவனுள னாயிருக்கின்றமையை (௫) அவனுயிரோடு ஒன்றாகிய என்னுயிர் கண்டுக் காட்டாதொழியுமோ? அதுதான் இறந்துபடாது அவனிருந்தமை காட்டிற் றில்லையோ என்றாள்; அதுகேட்டவர்கள் தனக்கு ஏதமின்றி நின்று

நின்னை இம்மனம் வருந்தினவனை நடுவாக நோக்கி நின்ற ஞாயிறு தான் வருந்துங்காண் என்றார்; அது கேட்டு நடுவுநிலைசெய்யாமல் உண்டாம்பழி நீங்கும் ஞாயிறே! உலகியல் அறியாதாரிடத்துக் கழியச்சிறுத்தற்கு விரைந்து × செவ்வையென்று இவர்கள் கூறக்கேட்டு நின்னை வழிபட்டு நீ அவரை மிகச் சிறுத்தபடி இரந்துகொள்வேனாக வந்தேன்; நீ என்னெஞ்சங் கெடும்படி என்னைக்கைவிட்டவனைக் ∴ கண்டுசிறுமிடத்து என்னை நீக்கவிடாதே கொள்;

. . . .

க. (அ) "வடபால்விதேகந் தென்பால்விதேகம், கீழ்பால்விதேக மேல்பால் விதேகம், வடபாலிரேவதந் தென்பாலிரேவதம், வடபாற்பரதந் தென் பாற்பரத, மத்திமகண்டமென் றித்திற மென்ப, நாவலந் தீவி னவ கண்டப்பெயரே" சேந்தன்றிவாகா. (ஆ) "நவத்தாரணி யாதிகட்கு" திருவானைக்காப். திருநீற்றுத்திருமதிற். அ.

உ. இந்நூற்பக்கம் ௬கக: கூ-ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. "காவிபோற் கண்ணிக்குங் கண்ணியத்தோட் காளைக்கு, மாவிபோ லாடையுமொன் றானதே" நள கலிதொடர். அ௬.

(பாடபேதம்) * தென்னவர்த தெனித்த. † கூறியவர் கொண்டு, ‡ உலத்தின்கண்ணே. || பிறர்மகளிரை, ÷ என்று கூறினன். ✝ முயங்குகவேமென்று. × செவ்வை யன்றியவாகள; செவ்வையென்றவர்கள், ∴ கண்டு நீ சிறுமிடத்து.

*அஃது என்னெனில் நீ அக்காலத்து அவனை †மிகச்சிறிதில் யான் இறக்கும்படி நேரும் ‡ என்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே ஞாயிறு படுகின்றமையைக் கண்டு பிரிந்தார்க்கு வருத்தந்தரும்படியாக மாந்தளிர்போலும் நிறத்தைக்கொண்ட மாலைக்குமுன்னாகிய இக்காலத்தே இவ்வூரின் மகளிர் தாம் (௧)தளிர்விரவின மாலைகளைச் சூடி ஆடவர்மேல் தாம் வைத்த நலத்தைப் பாடி இன்புறுவர்கள்; அவர்களைப்போல ஆச்சாமரந்தளிர்க்குங் காட்டிடைச்சென்றவர் || மீண்டுவரின் யாம் மனமகிழுவோம்; அதனாற்பெற்றதென்? அவர்வரக் கண்டிலேம் என்றுங் கூறினாள்; கூறி, யாம் தளிர்க்குமாறு எங்ஙனே என்பீராயின், என்றோளைத் தொழில் கொள்கின்ற அவன் செய்தற் பூவைப் புறவிதழொடித்து மாலை கட்டிச் சூடவும் வல்லன்; |கொடிதாகிய மென்றோளிலே காமன்சிலையாகிய எழுதுகரும்பையெழுதவும்வல்லன்; இளமுலைமேல் தொய்யிற் குழம்பாற் கொடி எழுதவும்வல்லன்; இவையொழிந்து நீங்கியிருந்து மனம் வேட்கையடக்கியிருக்குமிடத்துத் தன்கையில் வில்லைத் தொழில்கொள்ள வல்ல காமனை ஒக்கும்; அதுவன்றி, வேட்கை நிகழ்ந்து கூடுங்காலத்து ஆண்டு நிகழ்த்தும் நல்ல தொழில்கள் பலவற்றையும் வல்லன்; இவ்வாற்றான் என் மனந் தளிர்க்குமென்றுகூறினள்; அங்ஙனங் கூறின அளவிலே மாலைக் காலம் வருகின்றதனைக் கண்டு அவனை நினையும் என்னுள்ளங் குவியுமாறு போல நெடிய கழியின் மலர்கள் குவிய, இரங்கும் என்னெஞ்சுபோலே கோவலர் குழலோசைதோன்ற, அலைவுபெற்றஎன் மொழிகள்போல(௨)வண்டுகளின்(௩)செவ்வழிப்பாட்டு அடங்க, கெட்டுப்போன என் அழகுபோலப் பகற்

---

௧. (அ) "தாமரைக் கொழுமுறித் தாதுபடு செழு மலர்க், காமரு குவளைக் கழுநீர்மாமலர்ப், பைந்தளிர்ப்படலை" சிலப் ௪:௩௬-௪௧. (ஆ) "முறி மிடை படலை மாலை" சீவக. ௪௮௩, ௧௮௮௧. (இ) "பைந்தளிர்ப்படலை" பெருங்.(௩) ௨௭: ௧௪. (ஈ) "கொய்தளிர்த் தண்படலை"

(௨) இது படலை மாலை எனவும் இலை மாலை எனவும் வழங்கும்.

௨. (அ) "செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந், தடந்தாழ் வயலொடு" சிலப். ௧௧: ௮௮-௮௯. (ஆ) "பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே,............துறந்தார்நாட் டுளதாங்கொன், மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை" சிலப். ௭: ௪௨.

௩. (அ) "இருள்வரச், சீறியாழ் செவ்வழி பண்ணி" (ஆ) "மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தனர்" (புறம். ௧௪௯: ௧-௨., ௧௪௧: ௨-௪) என்பவற்றால், செவ்வழிப் பண் மாலைக்குரித்தென்று கூறப்படுதலால் செவ்வழியா ழிசைநிற்ப வென்பதற்கு, யாழிற் செவ்வழிப்பண்ணை வாசிப்பவென்றலுமாம். இஃது இரங்கற்பண்ணாதலின், சாயகிளவிக்கு உவமையாகக் கூறப்பட்டது;

(பிரதிபேதம்) * அதுவென்னெனில், † மிகச் சிறுமல் யானிறக்கும்படி, ‡ என்று கூறினள், || மீண்டேரின் மணமகிழுவோம். அதனால்.

காலத்தின் ஒளி மழுங்க, கலக்கத்தோடேவந்த காலனைப்போலே என்மேலே மாலைக் காலமும் வந்தது; இனி எங்ஙனம் ஆற்றுவேனென்று கூறினள்; கூறி, அம்மாலையை வரவிட்ட ஞாயிற்றை நோக்கி, சுடரே! யாதொன்பதொரு தன்மையின்றி யான் இவ்விடத்தே இராக் காலத்தாலே வருந்தும்படி நீ போனாய்; அருளுடையையல்லையாயிருந்தாய்; * இத்தன்மையால் நீவாழ்வாயாக என்று கூறினள்; கூறி, இவ்விரவால் இறந்துபட்டேனாயினும் நீங்கின்றுயிருந்ததென்று கருதி, மிகுகின்ற நீரையுடைய உலகத்தின் உறைகின்ற கேள்வருளரல்லாராயின், (௧) தங்கணவர்மேலுள்ள வேட்கையோடே இறந்துபடும் மாட்சிமைப்பட்ட மனத்தைப்பெற்றவர்கள் குற்றமில்லாத சுவர்க்கத்தே சென்று அவர்கள் நுகர விரும்பியவற்றைத் தாம் விரும்பியபடியே பெறுதல் மெய்யென்று நூல்கள் கூறியவென்னின் யானும் அங்ஙனம் அவன்மேல் விருப்பத்தோடே உயிர்போய் அவனைப் பெற்று எவ்விடத்தும் புகழுடையே

ருவேன்; இனி † வருத்தமின்று; என்றுங்கூறினாள்; கூறி (உ) "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் கண்டு விடும்" என்றுகூறிய பழமொழி உளதாகலின், அவ்வாறே நீரில் அலர்ந்த நீலமென்று அவர் புகழ அவர்க்கு அந்நாளிற் பெரியவருத்தத்தைச்செய்த *என்கண்கள் இப்பொழுது பீரலர் போலப் பெரியவாகப் பசந்தன; ‡ அதனையும் என் வருத்தத்தையுங் கண்டும் அருளின்மையின் அவனை எனக்குக் காட்டாமல் இவ்வூர் நின்று அலர் தூற்றுகிற்கும்; இனி இவ்(ங)வுய்யா விடும்பையிடத்து உயிர்களைக் காத்தற்கு யான்

இஃது இரங்கற்பண்ணென்பது (இ) "பையு ணல்லியாழ் செவ்வழி பிறப்ப" அகம். ௩௧௪: ௧௨ என்பதனாலும் (ஈ) இக்குறிப்பில் முதலாவதற்கு,'மாலைக்காலம் வந்தவளவிலே சிறிய யாழை இரங்கற்பண்ணாகிய செவ்வழியென்னும் பண்ணிலே வாசிக்கும் பரிசபண்ணி' என்று எழுதியிருக்கும் உரையாலும் அறியலாகும்.

௧. 'அதுவன்றிப் புகழ்வேண்டியும் கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரைகேட்டு அதுவேட்கையானும் சாம்; அப்பரிசன்றி அன்பினானும் சாம்' என்பது இறை. சூ. ௧. உரை.

௨. (அ) "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா, பிற்பகற் றாமே வரும்" குறள். ௩௧௯. (ஆ) "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்" சிலப். ௨௧: ௩-௪. (இ) "முற்பகற்செய்யிற் பிற்பகல் விளையும்"கொன்றைவேந்தன். (ஈ) "முற்பகற் செய்வினை பிற்பக லுறுநரின்" பெருங். (௧) ௩௪: ௨௫௧. (உ) "முற்பக லோர்பழி முடிக்கின் மற்றது, பிற்பக றமக்குறும் பெற்றி யென்னவே" கந்த. இரண்டாநாட்சூர. ௩௧௫.

௩. உய்யா இடும்பை - பிழையாமைக்குக் காரணமான துன்பம்; கலி. ௧௩௩: ௧௮. கடக்க முடியாத துன்பம்; குறள். ௩௧௩. பரி. ஒழியாத துன்பம்; பு-வெ. உழிஞை. ௨௫. போக்க முடியாத துன்பம்; சிலப். ௭: ௮.

(பிரதிபேதம்) * இத்தன்மையான நீ, † வருத்தமென்றென்றுங். ‡ இதனையும் வருத்தத்தையும்.

*அஃது என்னெனில் நீ அக்காலத்து அவனை †மிகச்சீறில் யான் இறக்கும்படி நேரும் ‡ என்றக் கூறினள்; அங்ஙனங் கூறின அளவிலே ஞாயிறு படுகின்றமையைக் கண்டு பிரிந்தார்க்கு வருத்தந்தரும்படியாக மாந்தளிர்போலும் நிறத்தைக்கொண்ட மாலைக்குமுன்னாகிய இக்காலத்தே இவ்வூரின் மகளிர் தாம் (க)தளிர்விரவின மாலைகளைச் சூடி ஆடவர்மேல் தாம் வைத்த நலத்தைப் பாடி இன்புறவர்கள்; அவர்களைப்போல ஆச்சாமரத்தளிர்க்குங் காட்டிடைச்சென்றவர் ‖ மீண்டுவரின் யாம் மனமகிழுவோம்; அதனாற்பெற்றதென்? அவர்வரக் கண்டிலேம் என்றுங் கூறினள்; கூறி, யாம் தளிர்க்குமாறு எங்ஙனே என்பீராயின், என்றோளைத் தொழில் கொள்கின்ற அவன் செய்தற் பூவைப் புறவிதழொடித்து மாலை கட்டிச் சூடவும் வல்லன்; நொடிதாகிய மென்றோளிலே காமன்சிலையாகிய எழுதகரும்பையெழுதவும்வல்லன்; இளமுலைமேல் தொய்யிற் குழம்பாற் கொடி எழுதவும்வல்லன்; இவையொழித்து நீங்கியிருந்து மனம் வேட்கையடக்கியிருக்குமிடத்துத் தன்கையில் வில்லைத் தொழில்கொள்ள வல்ல காமனை ஒக்கும்; அதுவன்றி, வேட்கை நிகழ்ந்து கூடுங்காலத்து ஆண்டு நிகழ்த்தும் நல்ல தொழில்கள் பலவற்றையும் வல்லன்; இவ்வாற்றான் என் மனந் தளிர்க்குமென்றுகூறினள்; அங்ஙனங் கூறின அளவிலே மாலைக் காலம் வருகின்றதனைக் கண்டு அவனை நினைபும் என்னுள்ளங் குவியுமாறு போல நெடிய கழியின் மலர்கள் குவிய, இரங்கும் என்னெஞ்சுபோலே கோவலர் குழலோசைதோன்ற, அலைவுபெற்றஎன் மொழிகள்போல(உ)வண்டுகளின்(ங)செவ்வழிப்பாட்டு அடங்க, கெட்டுப்போன என் அழகுபோலப் பகற்

க. (அ) "தாமரைக் கொழுமுறித் தாதுபடு செழு மலர்க், காமரு குவளைக் கழுநீர்மாமலர்ப், பைந்தளிர்ப்படலை" சிலப் ௪:௩௧-௪௧.(ஆ) "முறி மிடை படலை மாலை" சீவக. ௪௮௩, ௧௮௮௧. (இ) "பைந்தளிர்ப்படலை" பெருங்.(௩.) ௨௭: ௧௪. (ஈ)"கொப்தளிர்த் தண்படலை"

(உ) இது படலை மாலை எனவும் இலை மாலை எனவும் வழங்கும்.

உ. (அ) "செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந், தடந்தாழ் வயலொடு" சிலப். கக:அஅ-அகூ. (ஆ) "பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே,............துறந்தார்நாட் டுளதாங்கொன், மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை" சிலப். எ: சஉ.

ந. (அ) "இருள்வரச், சீறியாழ் செவ்வழி பண்ணி" (ஆ) "மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தனர்" (புறம். கசச:க-உ., கசக: உ-ச) என்பவற்றால், செவ்வழிப் பண் மாலைக்குரித்தென்று கூறப்படுதலால் செவ்வழியா ழிசைநிற்ப வென்பதற்கு, யாழிற் செவ்வழிப்பண்ணை வாசிப்பவென்றலுமாம். இஃது இரங்கற்பண்ணாகலின், சாயகிளவிக்கு உவமையாகக் கூறப்பட்டது; (பிரதிபேதம்) * அதுவென்னெனில், † மிகச் சிறுமல் யானிறக்கும்படி, ‡என்று கூறினன், || மீண்வேரின் மனமகிழுவோம். அதனல்.

காலத்தின் ஒளி மழுங்க, கலக்கத்தோடேவந்த காலனைப்போலே என்மேலே மாலைக் காலமும் வந்தது; இனி எங்ஙனம் ஆற்றுவேனென்று கூறினுள்; கூறி, அம்மாலையை வரவிட்ட ஞாயிற்றை நோக்கி, சுடரே! யானென்பதொரு தன்மையின்றி யான் இவ்விடத்தே இராக் காலத்தாலே வருந்தும்படி நீ போனாய்; அருளுடையையல்லையாயிருந்தாய்; * இத்தன்மையால் நீவாழ்வாயாக என்று கூறினள்; கூறி, இவ்விரவால் இறந்துபட்டேனாயினும் நின்னின்னுயிருந்ததென்று கருதி, மிகுகின்ற நீரையுடைய உலகத்தன் உறைகின்ற கேள்வருளரல்லாராயின், (க) தங்கணவர்மேலுள்ள வேட்கையோடே இறந்து படும் மாட்சிமைப்பட்ட மனத்தைப்பெற்றவர்கள் குற்றமில்லாத சுவர்க்கத்தே சென்று அவர்கள் நுகர விரும்பியவற்றைத் தாம் விரும்பியபடியே பெறுதல் மெய்யென்று நூல்கள் கூறியவென்னின் யானும் அங்ஙனம் அவன்மேல் விருப்பத்தோடே உயிர்போய் அவனைப் பெற்று எவ்விடத்தும் புகழுடையே

ஞவேன்; இனி † வருத்தமின்று; என் றங்கூறினள்; கூறி (உ) "முற்பகற் செய் தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் கண்டு விடும்" என்றகூறிய பழமொழி உளதாகலின், அவ்வாறே நீரில் அலர்ந்த நீலமென்று அவர் புகழ அவர்க்கு அந்நாளிற் பெரியவருத்தத்தைச்செய்த 'என்கண்கள் இப்பொழுது பீலர் போலப் பெரியவாகப் பசந்தன; ‡ அதனையும் என் வருத்தத்தையுங் கண்டும் அருளின்மையின் அவனை எனக்குக் காட்டாமல் இவ்வூர் நின்று அலர் தூற்று கிற்கும்; இனி இவ்(ரு)வுய்யா விடும்பையிடத்து உயிர்களைக் காத்தற்கு யான்

இஃது இரங்கற்பண்ணென்பது (இ) "பையு ணல்லியாழ் செவ்வழி பிறப்ப" அகம். ருகஅ: கஉ என்பதனாலும் (ஈ) இக்குறிப்பில் முதலாவ தற்கு,'மாலைக்காலம் வந்தவளவிலே சிறிய யாழை இரங்கற்பண்ணாகிய செவ்வழியென்னும் பண்ணிலே வாசிக்கும் பரிசுபண்ணி' என்று எழுதியிருக்கும் உரையாலும் அறியலாகும்.

க. 'அதுவன்றிப் புகழ்வேண்டியும் கணவனோடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரைகேட்டு அதுவேட்கையானும் சாம்; அப்பரி சன்றி அன்பினானும் சாம்' என்பது இறை. சூ. க. உரை.

உ. (அ) "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா, பிற்பகற் றாமே வரும்" குறள். ருகக. (ஆ) "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன் கேடு, பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்" சிலப். உக: ரு-அ. (இ) "முற்பகற்செய்யிற் பிற்பகல் விளையும்"கொன்றைவேந்தன். (ஈ) "முற்பகற் செய்வினை பிற்பக லுறுநரின்" பெருங். (க) இக: உகுக. (உ) "முற்பக லோர்பழி முடிக்கின் மற்றது, பிற்பக றமக்குறும் பெற்றி யென்னவே" கந்த. இரண்டாநாட்சூர. ருகரு.

ரு. உய்யா இடும்பை - பிழையாமைக்குக் காரணமான துன்பம்; கலி. கருக:கஅ. கடக்க முடியாததுன்பம்; குறள். ருகரு. பரி. ஒழியாததுன் பம்; பு-வெ. உழிஞை. உகு. பேரக்க முடியாத துன்பம்; சிலப். எ: அ.

(பிரதிபேதம்) * இத்தன்மையான நீ, † வருத்தமென்றென்றல். ‡ இதனையும் வருத்தத்தையும்.

அரசனே என்று கருதித் தன்னுயிரைப் பாதுகாக்குமாறு போல உலகத்துப் (க)பெரிய உயிர்களெல்லாம் தழீஇப்பாதுகாக்கும் இம்மன்னனும் எனக்கினிய உயிரை ஒப்பானைக் காட்டி என்னுயிரைச் சிறிதொன்றும் காவாதிருக்கின்ற தன்மை என்னபயனைக் கருதியோ*வென்றுங் கூறிறுளென்று கூறும்படியாக நிலைபெற்றகாமநோயாலே† அங்ஙனம் மயக்கங்கொண்ட மனத்தையுடையவள் பலமலைகளைக் கடந்துபோனவன் வரைவொடுவந்து பணிந்து தன்னடியைச் சேர்கையினுலே பாண்டியனை உறவாக அவன் மனத்தைத் தெளிவித்த தேயத்திலுள்ளவர் இன்பமுற்று வாழுமாறுபோல அவனால் இழந்த நலத்தை ‡இனிய அகமகிழ்ச்சியோடு எய்தினள்; இஃதென்னவியப்பொனக் கண்டார் கொண்டு கூறிற்றாக உரைக்க. எ - று.

'சென்றசேட்பட்ட தென்னெஞ்சு' என்னுந் துணையும் கூறத்தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'நெடுமென்றோள்' 'நீரலர் நீலம்' 'இளமுலை' என்பனவற்றான் மிகுதியிறந்தவாறும் 'வழிபட் டிரக்குவேன் வந்தேன்' என் (பதனுல்)வருத்தமிறந்தவாறும் 'யாண்டுமுடையே னிசை' என்பதனுல் வியவாமையின் மருட்கையிறந்தவாறும் உணர்க.

இது கண்டார்க்கு ||அவளாக்கங்கண்டு மருட்கை பிறந்தது.

செய்தனெறித்தல் முதலியன (உ)திருவினுற் காமக்குறிப்புப்பிறந்த ஒப்பு; இவை குடிப்பிறப்பினை அறிவித்துக் காமக் குறிப்பினை நிகழ்த்தலின்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (உக)

(கசச.) *ன்னுதால் காண்டை நினையா நெடிதுயிரா
வென்னுற்றாள் கொல்லோ விஃதொத்தி புன்மா
ணருதருந் தன்னுணுக் கைவிட் டிருதருங்
கண்ணீர் துடையாக் கவிழ்ந்து நிலனோக்கி
(ரூ). யன்ன விடும்பை பலசெய்து தன்னை

வின்வுவார்க் கேதில சொல்லிக் கனவுபோற்
றெருளு மருளு மயங்கி வருபவள்
கூறுப கேளாமோ சென்று;

க. "பெரியத ஞவி பெரிது" பழமொழி. க.

உ. "செப்தனெறிக்கவும்... ....ரேனாள் பவ னென்பது திருவி ளுற் காமக்குறிப்புப் பிறர்தவாறு; என்னை? இனையன வல்லனுதல் செல்வக்குடிப்பிறந்தாரை அறிவிக்குமாகலின்; அது காமக்குறிப்பினை நிகழ்த்துமென்பது. இது தலைமகட்கும் ஒக்கும்" என்பது தொல். மெய்ப். சூ. உஉ. பேராசிரிய ருரையிலும் காணப் படுகின்றது.

(பிரதிபேதம்) * என்று கூறினன், † இக்கனம், ‡ இனியமகிட்சி, || அயராக்கம் பிறந்தது மருட்கை,

கூ எல்லாநீ, என்னணங் குற்றனை யார்நின் னிதுசெய்தார்
நின்னுற்ற வல்ல லுரையென வென்னை
வினவுவீர் தெற்றெனக் கேண்மி னொருவன்
குரற்கூந்தா லென்னுற்ற வெவ்வ நினக்கியா
னுரைப்பனைத் தங்கிற்றெ னின்னுயி ரென்று
மருவூட்டி மாறி யதற்கொண் டெனக்கு
மருவுழிப் பட்டதென் னெஞ்சு;

கசு எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி;

கஎ பொங்கிரு முந்நீ ரகமெல்லா நோக்கினை

திங்களுட் டோன்றி யிருந்த குறுமுயா
லெங்கே யிதனகத் துள்வழிக் காட்டீமோ
காட்டீயா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னாட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
வென்னல்ல றீரா யெனின்;
௨௪ என்றாங்கே, உண்ணின்ற வெவ்வ முரைப்ப மதியொடு
வெண்மழை யோடிப் புகுதி சிறிதென்னைக்
கண்ணோடி னாய்போறி நீ;
௨௭ நீடிலைத் தாழைத் துவர்மணற் கானலு
ளோடுவே னோடி யொளிப்பேன் பொழிறொறு
நாடுவேன் கள்வன் கரந்திருக்கற் பாலன்கொ
லாய்பூ வடும்பி னலர்கொண் டுதுக்காணெங்
கோதை புனைந்த வழி;

௩௨ உதுக்காண், சாஅய் மலர்காட்டிச் சால்பிலான் யாமாடும்
பாவைகொண் டோடி யுழி;
௩௪ உதுக்கா[ணங்](ண்) தொய்யில் பொறித்த வழி;

௩௫ உதுக்காண், தையா றேறெனத் தேற்றி யறனில்லான்
பைய முயங்கி யுழி;
௩௭ அளியவென் னுள்ளத் துயவுத்தே ரூர்ந்து
விளியாநோய் செய்திறந்த வன்பி லவனைத்

தெளிய விசும்பினு ஞாலத் தகத்தும்
வளியே யெதிர்போம் பலகதிர் ஞாயிற்
றொளியுள் வழியெல்லாஞ் சென்று முனிபெம்மை
யுண்மை நலனுண் டொளித்தானைக் காட்டிமோ
காட்டாயேன், மண்ணக மெல்லா மொருங்கு சுடுவேனென்
கண்ணீ ரழலாற் றெளித்து;

௪௫ பேணான், துறந்தானை நாடு மிடம்விடா யாயிற்
பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்
புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
னறம்புணை யாகலு முண்டு;

௪௯ துறந்தானை, நாடித் தருகிற்பா யாயி னிளக்கொன்று
பாடுவே னென்னோ யுரைத்து;

௫௧ புல்லிய கேளிர் புணரும் பொழுதுணரே
னெல்லியா கெல்லையென் றாங்கே பகன்முனிவ
னெல்லிய காலை யிராமுனிவன் யானுற்ற
வல்லல் களைவா ரிலேன்;

௫௫ ஓஒகடலே, தெற்றெனக்கண் ணுள்ளேதோன் றவிமையெடுத்துப்
பற்றுவே னென்றியான் விழிக்குங்கான் மற்றுமென்
னெஞ்சத்து ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்

செய்யு மறனில் லவன்;

௫௬ ஓஒகடலே, ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயு
ணீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ
வீரமில் கேள்வ னுறீஇய காமத்தீ
நீருட் புகினுஞ் சுடும்;

௫௭ ஓஒகடலே, எற்றமி லாட்டியென் னேமுற்றா ளென்றிந்நோ
யுற்றறியா தாரோ நகுக நயந்தாங்கே
யிற்றா வறியின் முயங்கலேன் மற்றென்னை
யற்றத்திட் டாற்றறுத்தான் மார்பு;

ஆங்கு;

ஐந்தாவது நெய்தல் உசா. ௯௦௯

௫௮ கடலொடு புலம்புவோள் கலங்களர் தீரக்
கெடலருங் காதலர் துணைதரப் பிணிநீங்கி
யறனறிந் தொழுகு மங்கை ளாளைத்
திறனிலா ரெடுத்த தீமொழி யெல்லா
நல்லவை யுட்படக் கெட்டாங்
கில்லா கின்றவ ளாய்நுதற் பசப்பே.

(க)இதுவுமது. இதற்கும் (உ)அவ்வுரை கூறிக்கொள்க.

இதன் பொருள்.

நன்னுதால் காண்டை நினையா நெடிதுயிரா
வென்னுற்றாள் கொல்லோ (ங)விலைத்தொத்தி (ச)பன்மா

ணகுதருந் தன்னாணுக் கைவிட் டிருதருங்
கண்ணீர் துடையாக் கவிழ்ந்து நிலனோக்கி
யன்ன விடும்பை பலசெய்து தன்னை
வினவுவார்க் கேதில சொல்லிக் கனவுபோற்
றெருளு மருளு மயங்கி வருபவள்
கூறுப கேளாமோ வென்றா

எ - து: நன்றாகிய நுதலினையுடையாய்! இவளொருத்தி (௫)தனக்குரிய நாணினைக் கைவிட்டும் * தன் மனத்தே ஒன்றை நினைத்து நெட்டுயிர்ப்புக் கொண்டு வீழ்கின்ற கண்ணீரைத் துடைத்துப் பிறரை நோக்காது நிலத்தைக் கவிழ்ந்து நோக்கித் தன்னை நீ உற்றது என்னென்பார்க்குக் கனவின்கண் வாய்வெருவிக் கூறுவாரைப்போலே உத்தரமல்லாதன சில சொல்லிப் பல காலும் நகுதலைச் செய்யும்; இங்ஙனந் தெளிவும் மயக்கமுமாய் மயங்கி வேறும் அத்தன்மையவாகிய இடும்பைகள் பலவற்றையுந் தன்னிடத்தே உண்டாகக் கொண்டு வருகின்றவள் என்ன துன்பமுற்றாளோதான்? இவளைக் காண்பா

௧. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந்திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. ௧௩. நச்.

௨. இந்நூற் பக்கம் ௮௮௫-௮௮௬. பார்க்க.

௩. "இஃதொத்தி" கலி. ௧௪௩: ௮; "இஃதொத்தன்" (கலி. ௧௪௪: ௮) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௪. இந்நூற்பக்கம் ௨௮௮: ௩-ஆம் குறிப்புப் பார்க்க.

௫. "சிறந்ததன் ஞாணும்" (கலி. ௧௪௫: ௧௦.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * தான் மனத்தே.

யாக; யாஞ் சென்று இவள்கூறும் வார்த்தைகளைக் கேட்டலைச் *செய்யாமோ என்றுரென்று கூறினள். எ - று.

௬ எல்லாநீ, என்னணங் குற்றனை யார்நின் னிதுசெய்தார்
நின்னுற்ற வல்ல லுரையென வென்னை
வினவுவீர் தெற்றெனக் கேண்மி னொருவன்
(க)†குரற்கூந்தா லென்னுற்ற வெவ்வ நினக்கியா
னுரைப்பனைத் தங்கிற்றெ னின்னுயி ரென்று
மருவூட்டி மாறி யதற்கொண் டெனக்கு
மருவழிப் பட்டதென் ‡னெஞ்சு
க௬ எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி

எ - து. அங்ஙனம் ||கூறியவள், கேட்கக் கடவேமென்று நும்மிலே கூறி வந்து, எடீ! நீ என்ன வருத்தமுற்றாய்? யார்தான் நினக்கு இவ்வருத்தஞ் செய்தார்? நினக்கு உற்ற வருத்தத்தை எங்கட்கு உரையென்று சொல்லி என்னைக் கேட்கின்றவர்களே! அது வந்தவாற்றை என்பக்கலிலே தெளியக் கேண்மின்; ஒருவன் கொத்தான கூந்தலையுடையாய்! எனக்கு உற்ற வருத்தத்தை யான் நினக்கு வந்துஉரைக்குமளவும் என் இன்னுயிர் போகாமற் றங்கிற்றுக்காண் என்று இங்ஙனம் தன்னோடு யான் மருவுதலை உறுத்தி அம்மருவுதலைஅவன்மாறிப் போன அக்காலந்தொடங்கி என்னெஞ்சு ÷எனக்கு அவன் மருவின இடத்தே அகப்பட்டு நின்றுவிட்டது; இனி அவனுள்ள இடமெங்குந் தேடித் தெரிந்து என்னெஞ்சினைக் கூட்டிக்கொள்வேன் என்று கூறினள். எ - று.

உரைப்பனை, திசைச்சொல்.

௧௭ (உ)பொங்கிரு முந்நீ ரகமெல்லா ×நோக்கினை

க. "குரற் கூந்தல்" கலி. ௭௨: ௨௦, ௯௩: ௨௨; என இந்நூலுள் வருதல் காண்க; குரலென்பது கூந்தற்கு அடையாய் வருதலன்றியும் மயிர் (கூந்தல்) என்னும் பொருட்டாயும், "குரலூற்றுத் தூற்ற, முடியுதிர் பூக்தாது" (கலி. அஅ: க - ௨.) என்புழி வருதல் காண்க.

௨. (அ) கலக்கம்-மனங்கலங்குதல்; மேலே கலங்கி மொழிதலென்பது ஒரு காற் சொல்லின்கண் வந்து பெயர்வது; இது மனங்கலங்கி நிற்கு நிலையென்றுகூறி, "பொங்கிரு முந்நீர் ...... தீராயெனின்" என்னும் பகுதியைப் பெருந்திணைக்குரிய கலக்கமென்னு மெய்ப்பாட்டுக்கு (தொல். மெய்ப். சூ. ௨௨. 'இன்பத்தை') மேற்கோள்காட்டினர் இளம் பூரணர் (ஆ) நச்சினார்க்கினியர் "பொங்கிரு முந்நீர்.........காட்டுமோ"

(பிரதிபேதம்) * செய்யாமோவென்று கூறினை, † குரற் கூந்தல், ‡ நெஞ்சு தெரிந்தது || கூறியவர், ÷ எனக்குத்தான் மருவின × கோக்குபு.

நான்காவது முல்லை ந. ௬௪௫

சீற்றமோ டாருயிர் கொண்டஞான் றின்னன்கொல்
கூற்றென வுட்கிற்றென் னெஞ்சு

எ - து: எருகிய எருமையையேறுகின்ற கூற்றுவனுடைய நெஞ்சை (க) வடிம்பாலே பிளந்துபோகட்டுச் சினத்தோடே அரிய உயிரை வாங்கின அஞ்ஞான்றை, இறைவன் இத்தன்மையையுடையவன்கொலென்று கூறும் படியாகக் காற்றின் விசைபோல ஓடிவந்த விரைந்த எருகிய காரியதனைப் பலரும்வந்து சேர்தலையுடைய களத்தே வலியடங்கத் தழுவி வருத்தி அதன்மேலே தோன்றிநின்ற பொதுவனது அழகைப் பாராய்; அதனைக் கண்டு என் நெஞ்சு உட்கிற்றுக்காணென்றாள் எ - று.

௪௬ இகுளை ÷யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
(௨) புல்லினத் தாயர் மகனன்றே புள்ளி

வெறுத்த வயவெள்ளேற் றம்புடைத் திங்கண்
மறுப்போற் பொருந்தி யவன்

எ - து: மற்றைப் புள்ளிகள் செறிந்த †வலியையுடைய வெள்ளேற்றினது அழகையுடைய பக்கத்தே திங்களிற் கிடக்கின்ற மறுப்போலே பொருந்திக் கிடந்தவன் ஆட்டினத்தையுடைய ஆயர்மகனல்லவோ? ஆதலால் இவ னொருத்தன்காண்; இளையோளே! ‡ இஃதொரு வலியைப் பாராயெனக் காட்டினாள். எ - று.

ஓவா வேகமோ டுருத்துத்தன் மேற்சென்ற
||சேஎச் செவிமுதற் கொண்டு பெயர்த்தொற்றுங்
(௩)காயாம்பூங் கண்ணிப் பொதுவன் றகைகண்டை
மேவார் விடுத்தந்த(௪)கூந்தற் குதிரையை

௧. வடிம்பு - கால் விளிம்பு; (அ) "மா வுடற்றிய வடிம்பு," (ஆ) கமோ கடைஇய விடுபரி வடிம்பின்" (இ) "ஆழி வடிம்பலம்ப நின்றானும்" (ஈ) "வேலைவடிம்பலம்ப நின்றான்" (உ) "கடல்வடிம்பலம்ப நின்ற கைதவன்" என வருவனநோக்குக.

௨. (அ) "புல்லினத் தார்க்கும்" (ஆ) "புல்லினத் தாயர் மகளிரோடு" (இ) "புல்லினத் தாயர் மகனேன்" (ஈ) "புல்லினத் தாயனை" கலி. ௧௦௭: ௨; ௧௧௧: ௫; ௧௧௩: ௭, ௮.

௩. "காயாம்பூங் கண்ணிக் கருந்துவ ராடையை" கலி. ௧௦௮: ௧௦.

௪. "கூந்த லென்னும் பெயரொடு கூந்த, லெரிசினங் கொன்றோய்" (பரி. ௩: ௩௧-௩௨.) என்பதும் 'கூந்தன்மா என்றகண்டார்சொல்லும் வடிவொடு வந்த கேசியது கனல்கின்ற சினத்தை யழித்தோய்;

(பிரதிபேதம்) *இருதொன்று, †வலியையுடையவேற்றினதழகை, ‡இஃதொரு. ||சேஎசெவி,

(க)திங்களுட் *டோன்றி யிருந்த குறுமுயா
லெங்கே ளிதனகத் †துள்வழிக் காட்டீமோ
காட்டியா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னாட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
வென்னல்ல றீரா யெனின்

௨௪ என்றாங்கே, உண்ணின்ற வெவ்வ முரைப்ப மதியொடு
வெண்மழை யோடிப் புகுதி சிறிதென்னைக்
கண்ணோடி னாய்போறி நீ

எ - து: அங்ஙனங் கூறி, அந்திக்காலத்தே கையறவெய்தி உரைத்தவள் இனி ‡இக்காலத்துத் தன்னாற்றேடுதல் அரிதென்று கருதி, திங்களைக் கண்டு இதனோடு செறிந்த முயல் தேடித் தருமெனக் கருதி, மிக்கு எழுகின்ற கரிதாகிய கடல்சூழ்ந்த உலகமெல்லாம் பார்த்துத் திங்களினுள்ளே விளங்கி இருந்த குறிய முயலே! அறிவு வேறுபட்ட என்னுடைய நெஞ்சை யான் தேடிக் கூட்டிக்கொள்ளக் கருதின வருத்தத்தை நீ அதனைக் கூட்டித் தீராயாயின் யான் வாங்கிக் கொள்ளும்படி இவ்வுலகத்தில் எங்கேள்வன் இருக்கின்ற இடத்தைக் காட்டுவாய்; அவனிருக்கின்ற இடத்தைக் காட்டாயாயின், நினக்குப் பகையாகிய கோபத்தையுடைய நாயை நின்னிடத்தே கொளுத்துவேன்; அதுவன்றி வேட்டுவருள்ள இடத்தேசென்று ஒருமுயல் உண்டென்று கூறுவேன்; அதுவேயன்றி நீ ஆறாக உறைகின்ற திங்களோடே நின்னை அலைத்து விழுங்கும்படி மதிக்குப் பகையாகிய பாம்பைச்செலுத்துவேனென்று அவ்வந்திக்காலஞ் செல்கின்ற காலத்தே தன்னெஞ்சினின்ற வருத்தத்தைச்

என்னும் அடிகளை ஞாயிறுமுதல் செஞ்சீருக் கூறியவையேயன்றி, பிறவும் கூறுவனபோலவுங் கேட்பனபோலவும் கூறுமா றமையுமென் பதற்கு மேற்கோள் காட்டினர்; தொல். செய். சூ. ௨௦௦.

௧. (அ) முயல் என்பது முயால் என விளியேற்றதற்கு, "திங்களுட் டோன்றி யிருந்த குறமுயால்" என்பது மேற்கோள்; தொல். விளி மரபு. சூ. ௩௪. நச். இ-வி. சூ. ௨௧௪. (ஆ) இந்திரன் புத்தன்மேலுள்ள அன்பினாற் சந்திரமண்டிலத்து முயல்பொறித்தானென்பதுபவுத்தநூற் றுணிபு. (இ) "குடைப்பறந் துஞ்சு மிகல - னிடைப்பொலிந்த, திங்களிற் றோன்றும் குறமுயல்போற் செம்பியன், செங்கண் சிவந்த களத்து" கள. (ஈ) "குறமுய லொளிக்கு மரணனை, யிரவிரு ளகற்று நிலவினை" சிலப். ௯: ௩௭. உரை மேற்கோள். (உ) "நிலவு பொழியு முயற்கூடு" உத்தரகோச. பாயிரம். ௨௫.

(பிரதிபேதம்) * தோன்றவிருந்த, † உள்வழி காட்டீமோ, காட்டிலையாயின், இக் காலத்தென்றூற்.

சொல்ல, அது வெண்மேகத்தே மறைந்ததனைக்கண்டு, நீ மதியோடே வெண் மேகத்தே ஓடிச் சென்று புகாநின்றாய்; ஆகையினாலே சிறிதென்னைக் கண் ணோட்டஞ் செய்து நீ என்னைத் தேடிப்போகின்றாய்போலே இராநின்றா யென்று கூறினாள். எ - று.

௨௭ நீடிலைத் தாழைத் (க)துவர்மணற் கானலு
ளோடுவே னோடி யொளிப்பேன் பொழிற்றூறு
நாடுவேன் கள்வன் கரந்திருக்கப் பாலன்கொ

லாய்பூ (உ)*வடும்பி னலர்கொண் டுதக்காணங்
கோதை புனைந்த வழி

க. "துவர்மணல்" என்ற தொடர் (கலி. ௩௨. ௨) வந்துள்ளது.

௨. அடும்பென்பது அடம்பென்றும் சிலவிடத்து வழங்கப்படுகிறது; இது நெய்தனிலத்துக்கு உரியதொரு வார்கொடி; இக்கொடியிற் செந்நிற முடையதும் கருநிறமுடையது முள; இதன் இலை கவடுடைமையால் அதற்கு மானடி உவமையாகக் கூறப்படுகிறது. இதன் பூ வெண்ணிற முடையதென்று செய்யுளால் அறியப்படுகிறது. அப்பூவுக்குத் தார் மணியும் கொட்டகமும் உவமையாக்கப்பட்டுள்ளன. இதனை மகளிர் கொழுதி விளையாடுவதும் வேறு மலரொடு விரவக்கட்டிச் சூடுவது முண்டு. இதன்கொடியைத்தலைவன் தேருருளை துணிப்பதாகக்கூறுவது பெருவழக்கு; இவையும் பிறவும் (அ) "கருங்கொடி யடம்பு" கலி. ௧௧: ௧௪. (ஆ) "ஓங்குதிரை விரைபுதன், கரையம லடும்பளித் தாஅங்கு" (இ) "அடும்பிவ ரணியெக்கர்" கலி. ௧௨௭, ௨௦-௨௧, ௧௩௨: ௧௬. (ஈ) "அடும்பார் ணி கானற் சேர்ப்ப" (உ) "எக்க, ரடும்பலருஞ் சேர்ப்ப" பழ. ௧௧௪, ௨௦௨. (ஊ) "முதுநீ ரடைகரை, யொண்பன் மலர கவட்டிலை யடும்பின், செங்கேழ் மென்கொடி யாழிய றுப்ப, வினமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ" அகம். ௮௦: ௭-௧௦. (எ) "எர்கொடிப் பா சடும்பு" ஐங். ௧௦௧. (ஏ) "ஆய்கொடிப் பாசடும்பு" அகம். ௩௩௦: ௧௪. (ஐ) "கான லடம்பின் கவட்டிலைகண் - மானின், குளம்பேய்க்கு நன் னாடன்" நள. கலிதொடர். ௮௮. (ஒ) "மானடியன்ன கவட்டிலை யடும் பின், தார்மணி யன்ன வெண்பூக் கொழுதி, யொண்டொடி மகளிர் வண்ட லயரும்" குறுந். ௨௪௩. (ஓ) "கொட்டக மலர்ந்த கொழுங் கொடி யடும்பி, னற்றுறை யணிநீர்ச் சேர்ப்ப" தொல். அகத். சூ. ௨௪. இளம். மேற். (ஔ) "இருங்கழி பொருதவீர வெண்மணன், மாக் கொடி யடும்பின் மாயித ழலரி, கூர்தன் மகளிர் கோதைக் கூட்டுங், காமர் கொண்கன்" நற். ௧௪௫: ௧-௪. (ஃ) "அடும்பி னாய்மலர் விரைஇ

(பிரதிபேதம்) * அடம்பின்.

ஐந்தாவது நெய்தல் உள.

ரு.உ உதுக்காண், சாஅய் மலர்காட்டிச் சால்பிலான் யாமர்டும்
(க)பாவைகொண் டோடி யுழி

ரு.ச உதுக்கா[ணங்](ண்),தொய்யில் பொறித்த வழி

ரு.ரு உதுக்காண், தையா றேறெனத் தேற்றி யறனில்லான்
பைய முயங்கி யுழி

ரு.எ அளியவென் னுள்ளத் துயவுத்தே ரூர்ந்து
விளியாநோய் செய்திறந்த வன்பி லவனைத்
தெளிய விசும்பினு ஞாலத் தகத்தும்
வளியே யெதிர்போம் பலகதிர் ஞாயிற்
றொளியுள் வழியெல்லாஞ் சென்று முணிபெம்மை
யுண்மை நலனுண் டொளித்தானைக் காட்டிமோ
காட்டாயேன், மண்ணக மெல்லா மொருங்கு சுடுவேனென்
கண்ணீ ரழலாற் றெளித்து

சரு பேணான், துறந்தானை நாடு மிடம்விடா யாயிற்
(உ)பிறங்கிரு முந்நீர் வெறுமணலாகப்

நெய்த, னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்த, லோரை மகளிர்" குறுந். ௪0௧. (அஅ) "அடும்புகொடி துமிய வாழி போழ்ந்தவர், நெடுந் தே ரின்னொலி யிரவுந் தோன்றும்" நற். ௩௩௮: ௨ - ௩. (ஆஆ) "படிவ மகளிர் கொடிகொய் தழித்த, பொம்ம லடும்பின்" நற். ௨௭௨: ௨ - ௩. என்பவற்றால் அறியலாகும். குந்தாணியென்று வழங்கும் கொடிக்கு இங்கே கூறிய இயல்புகளெல்லாம் இருத்தலால் இஃது அக்கொடி போலும்; அதிற் செம்பூவும் காணப்படுகிறது. (இஇ) "சுள்ளி சுனை நீலஞ் சோபா லிகைசெயலை, யள்ளி யளகத்தின் மேலாய்ந்து" (திணைமாலை. ௨) என்புழி, சோபாலிகை யென்பதற்கு, அடும்பலர் என்று கையெழுத்துப் பிரதிகளிற் பொருள் காணப்படுதலால், சோபாலிகையென்பதும் இதன் பெயரேயாம். இதற்கு அடும்பென்று கரணப்படும் பொருள் தவறென்று தோற்றுகிறது.

௧. (அ) "வரிப்பந்து கொண்டொளித்தாய்" பு - வெ. பாடாண். ௩0. (ஆ) "முற்றிலைப் பந்தைக் கழங்கைக்கொண் டோடினை" திருவேங் கடத்தந்தாதி. ௬௭. என வருபவை இதுபோல்வன.

௨. கலக்கமென்பது சொல்லத்தகாதன சொல்லுதலென்று கூறி அதற்கு, "பிறங்கிரு முந்நீர்.........யாகலுமுண்டு" என்பதனை (தொல். மெய்ப். சூ. ௨௨) மேற்கோள்காட்டினர் பேராசிரியரும்; (இ - வி. சூ. ௫௮0)

புறங்காலிற் போக விறைப்பேன் *முயலி
(௧)னறம்புணை யாகலு முண்டு
௪௩ துறந்தானை, நாடித் தருகிற்பா யாயி னினக்கொன் று
பாடுவே †னென்னோ யுரைத்து

௯௪ (உ)புல்லிய கேளிர் புணரும் பொழுதுணரே
‡னெல்லியா தெல்லையென் றுங்கே பகன்‖முனிவ
னெல்லிய காலை யிரா ÷ முனிவன் யானுற்ற
வல்லல் களைவா ரிலேன் [துப்

௯௫ ஓஒகடலே, தெற்றெனக்(௩)கண்ணுள்ளே தோன்றவிமையெடுத்
பற்றுவே னென்றியான் விழிக்குங்கால் மற்றுமென்
னெஞ்சத்து ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யு (ச)மறனில் லவன்

௯௬ ஓஒகடலே, (௫)ஊர்தலைக் கொண்டு கனலுங் கதிர்தீயு
ணீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ

இ - வி. நூலாரும் அவ்வாறே கூறினர். தலைவியின் கலக்கங் கூறு தற்கு, “பிறக்கிரு முந்நீர்..........விறைப்பேன்” என்பதனை (சீவக. ககஅ உரையில்) மேற்கோள்காட்டினர் இவ்வுரையாசிரியரும்.

௧. (அ) அறநெறியே வெற்றிக்கு முதலென்றும் (ஆ) அறம் பொருந்தாத முயற்சி பயன்படாது தொலையுமென்றும் (இ) அறந்தலை நின்றார்க்கழி வில்லை யென்றும் (ஈ) அறம் வெல்லும் பாவந்தோற்கு மென்றும் (உ) அறத்தினாலன்றி வெல்லலரி தென்றும் பெரியோர் கூறுவன இங்கே அறிதற்பாலன.

௨. அழிவில் கூட்டத்திற்குரிய பொருள்களுள் பொழுது மறப்பாதலென் பதற்கு, “புல்லிய கேளிர் ....களைவா ரிலேன்” என்னும் பகுதி மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உச. ‘தெய்வமஞ்சல்’ இளம்.

௩. (அ) “கனவினாற், றோன்றின னாகத் தொடுத்தேன்மன் யான்றன் னைப், பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய, கையுளே மாய்ந்தான் கரந்து” கலி. ௪௨: ௩௩ - ௩௬. (ஆ) “துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா, னெஞ்சத்த ராவர் விரைந்து” குறள். ௧௨௧௮.

௪. (அ)“அறனிலி”(ஆ)“அறனில்லா வன்பிலி” கலி. ௪௨:௪, ௮௬:௩௩-௩௪.

ஓ. (அ) "ஊரு ளொழுந்த வருகெழு செந்தீக்கு, நீருட் குளித்து முயலாகு- நீருட் குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி, யொளிப்பினுங் காமஞ்

(பிரதிபேதம்) * முயலில், † என்றேவுரைத்து. ‡ அல்லியாகெல்லே. || ÷ முளியேன்.

வீரமில் கேள்வ னுறீஇய காமத்தீ
நீருட் புகினுஞ் சுடும்

கூரு ஓலிகடலே, (க)எற்றமி லாட்டியென் னேமுற்று ளொன்றிந்நோ
யுற்றறியா தாரோ நருக நயந்தாங்கே
யிற்று வறியின் முயங்கலேன் மற்றென்னை
யற்றத்திட் (உ)டாற்றறுத்தான் *மார்பு

எ - து: அங்ஙனங் கூறி, அது கரிய மேகத்தே மறைந்து விடுதலின் அதனை நோக்கித் தேடுமாறு அதற்குக் கூறக் கருதி, அக்கள்வனவன் மறைந்திருக்கக்கடவனோ என்று †காட்டும்படி, யான் நீண்ட இலையினையுடைய தாழை நிற்கின்ற சிவந்த மணலையுடைய கானலிற் பொழில்கடோறும் ஓடிச்

சுடும்" நாலடி. கூ௦. (ஆ)"அளிக்கு மெய்யுயிர் கான்றழ லஞ்சினள், குளிக்கு நீருங் கொதித்தெழக் கூசுமால், விளிக்கும் வேலையை வெங்க ணனங்கனை, யொளிக்க லாமிடம் யாதெனவுன்னுமால்" கம்ப.சூர்ப்ப. எக. (இ)"உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற், கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத், தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினாற், கள்ளினுங் கொடியது காமத் தீயதே" கந்த. மாயைநீங்கு. கக. (ஈ) "கடலின் மூழ்கினுங் குன்றிடை யொளிப்பினுங் காம, முடல் விராயுயி சுடுவதே போலும்" விநாயக. இந்திரன் சாபம். கூ௪.

க. (அ) ஏற்றமென்னு முரிச்சொல் துணிவாகிய குறிப்புணர்த்தற்கு, "ஏற்றமி லாட்டியென் னேமுற்றாள்" என்பது மேற்கோள்; தொல். உரிச். சூ. ௬௬.௬௭. ௬ன். உரி. சூ. கஅ. இரா. மேற்கூறிய இடங்களி லெல்லாம் இச்சொல், எற்றமென்று பதிப்பிக்கப்பெற் றிருத்தல் பிழையே. அது பிழையென்பதும் ஏற்றமென்றலே திருத்தமென்ப தும் தொல்காப்பியச் சூத்திரத்தை உய்த்துணர்வார்க்குப் புலனும். இதனை இங்கே காட்டப்படும் சான்றோர்கள் ஆட்சியும் வலியுறுத்தும். (ஆ) "ஏற்றுவரைந்தானை" கலி. கசசு: கக. (இ) "ஏற்ற முடைமை யெதிர்கோளி னறிப" முதுமொழி. கரு. (ஈ) "ஏற்றமி லாள ராகி" திரு வானைக்காப். லைமிசப். உக.

உ. (அ) "அரும்பிடி நம்மை யாற்றறுத் தன்றால்" (பெருங். (௪) ௬௩: எ) என்பதும் (ஆ) "ஆற்றறுப்பார்" (குறள். எகஅ) என்பதன் விசேடவுரை யில், 'ஆற்றென்பது முதனிலைத் தொழிற்பெயர்; முன்னெல்லாம் வலியராவார் போன்று ஒழிதலின் வலியறுப்பாரென்றார்' என்று பரிமேலழகர் எழுதியிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * மார்பு. ஆங்கு கடலொடு............பசப்பே. எ-து: அங்ஙனம் கூறி அது கரிய, † காட்டக்கருதி யான்.

சென்று பார்ப்பேன்; அங்ஙனஞ் சென்று பார்த்துக் காணாமையின், ஓடிச் சென்று அவனை ஒளித்திருந்து காணக் கடவேனென்று கருதி ஒளித்திருப் பேன்; நீயும் இங்ஙனம் ஒளித்திருந்தே தேடென்று கூறினள்; அங்ஙனங் கூறிப் பின்பு அவனிருக்கும் இடங்களுங் கூறக்கருதி, பூவினையுடைய

* அடும்பின்மலரைக்கொண்டு எமக்குத்தரும் கோதையைக் கட்டின இடத்தை உவ்விடத்தே பாராய்; அமைதியில்லாதான் யாங் கொண்டு விளையாடுஞ் (க) சாய்ப்பாவையையும் மலர்களையுங் கொண்டுவந்து நமக்குக் காட்டி யான் தன்பின்னே செல்லும்படி அவற்றைக்†கொண்டோடிய இடத்தை உவ்விடத்தே பாராய்; எமக்குத் தானெழுதுந் தொய்யிலை எழுதிய அவ்விடத்தை உவ்விடத்தே பாராய்; மனத்தில் அறனில்லாதவன், ஐயால்! நின்னைப் பிரியேன்; நீ தெளியென்று தெளிவித்துப் பின்னர் மெல்ல முயங்கிய அவ்விடத்தை உவ்விடத்தே பாராயென்று கூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே அம்முபல் ‡கருமேகத்து மறைந்தேபோதலின் அதனைக் கைவிட்டு இடையே தன்மேல் வந்துற்ற வளியை நோக்கி, வளியாகிய தெய்வமே! [நீ] திங்களின் ஒளி போலன்றி விசும்பிடத்தும் ஞாலத்திடத்தும் பரக்கும் பல கதிர்களையுடைய ஞாயிற்றின் ஒளியுள்ள இடமெல்லாஞ்சென்று நாடுதற்குரிய நீ ‖உயவுத்தேரை ஊர்ந்துவந்து தன்னால் அளிக்கத்தக்க என்னுள்ளத்திடத்தே கெடாத காம நோயைச்செய்து என்னைக் கைவிட்டுப்போன அன்பிலாதவனை அந்நோய் நீங்கி என்மனந் தெளியும்படியாக எதிர்ப்படுவாய்; அங்ஙனம் எதிர்ப்பட்டு வேட்கை மிகுதியான் எம்முடைய இயற்கை நலத்தை நுகர்ந்து பின்பு எம்மை ஒரு காரணமின்றி வெறுத்து அவ்வியற்கை நலத்தைக்கொண்டு இம்மண்ணகத்தே ஒளித்தவனைக் கொண்டுவந்து காட்டுவாய்; காட்டாயாகில் என்கண்ணீரைத் தெளித்து அதன்கண் எழுகின்ற அழலாலே நின் மேனியெல்லாஞ் சேரச் சுடுவேனென்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறி அதனைப் பின்னர்க் காணாமையின், தான் அவனைத் தேடக்கருதி, கடலை நோக்கி, மிக்கு வருகின்ற கரிய கடற்றெய்வமே! என்னைப் பாதுகாவாதுத் துறந்தவனை யான் தேடிக் காணுமிடத்தை நீ விட்டுப் போகாமல் ஏறுவாயாயின் நின்னிடமெல்லாம் வெறுமணலாம்படி என் காற்புறத்தாலே நின்னுடைய நீரெல்லாம் போம்படி இறைப்பேன்; அது முடியுமோவெனின், அங்ஙனம் ÷முயலின் அதற்கு அறக்கடவுள் உதவியாதலு முண்டாயிருக்குமென்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறி, ஓதம் வடிந்ததனைக் கண்டு என்னைக் கைவிட்டுப்போனவனை நீ தேடிக் கொண்டு வந்து தருவையாயின் அதற்குக் கைம்மாறாக என்னையச்சொல்லி

௧. சாய்ப்பாவை - தண்டான் கோரையைக் கிழித்துச்செய்த பொம்மை; (அ) "சாய்க்கொழுதிப் பாவைதந் தினைத்தற்கோ" (கலி. எசு: எ) என்பதும் அதனுரையும் (ஆ) "பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே" (ஐங். கருஉ) என்பதும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * அடம்பின், † கொண்டாடிப்பயவிற்றை உவ்விடத்தே, ‡ கருத்தமேகத்து, || உரவுத்தேரை, ÷ மூயறுவேன் அதற்குக் கடவுள்.

நினக்கு ஒரு பாட்டினைப் பாடுவேனென்றுங் கூறினள்; அங்ஙனங் கூறிப் பாடுகின்றவள் என்னைக் கூடின கேளிர் வந்து கூடுங் காலம் இரவோ பகலோ என்றறியேன்; ஆதலால் என்னை வருத்தும் பகற்பொழுதுபோய் இராப் பொழுதாவதாக என்று கருதிப் பகற் பொழுதை வெறுப்பேன்; அதுபோய் இராவான காலத்திடத்து அவ்விராக்காலத்தை * அப்பொழுதேவெறுப்பேன்; அப்படியே ஒவ! யான் உற்ற வருத்தத்தைக் கடலே! நின்னை ஒழியப் போக்குவாரை வேறுடையேனல்லேனென்றுங் † கூறினள்; அங்ஙனங் கூறிப் பின்னும், கடலே! அறனில்லாதவன் தெளிய என் கண்ணுள்ளேவந்து தோன்றுகையினாலே கூடின இமையை விழித்துப் பிடித்துக் கொள்வேனென்று கருதி யான்விழிக்கப் பின்னையும் ஓடிப்போய் என்னெஞ்சத்துள்ளே மறைந்துநின்று அப்பொழுதே யான் துயிலாத காமநோயைத் தாராநிற்கும்; கடலே! ஊரையெல்லாந் தனக்குள்ளாக்கிக்கொண்டு காந்துங் கடியநெருப்புத் தன்னை அவிக்குநீரைச் சொரியச் (க) ‡சினமாறும்; அதுபோலன்றி அருளில்லாத என்கேள்வன் என்னை உறுத்திய இந்தக் காமமாகிய நெருப்புத் தனக்குப் பகையாகிய நீருள்ளே புகினுமோ வேமாறு சுடாநிற்கும்; கடலே! தன் மனத்து ஒரு துணிவில்லாதாள் என்ன பித்தேறினளென்று கூறி, இக்காமநோயுற்றறியாதவர்களோ என்னை இகழ்ந்து சிரிக்க; இக்காமநோய்க்குத்துணை

யாவதோர் ஆளறுதியிலே பின்னை என்னை யிட்டுவைத்து என்வலியை அறுத்தவன் ||மார்பினை யான் விரும்பின அக்காலத்தே பின்பு இத்தன்மைத்தாக வருத்துமென்று அறியின் முயங்கேன்; அக்காலத்து அறிகலேன்காணென்றுங் ÷ கூறினள். எ - று.

ஒஓ, வருத்தக்குறிப்பு. ஒகாரம், பிரிநிலை. ஆற்றல், ஆற்றெனை விகாரமாயிற்று.

ஆங்கு, அசை.

சுஅ கடலொடு புலம்புவோள் கலங்கஞர் தீரக்
கெடலருங் காதலர் துனைதரப் பிணிநீங்கி
யறனறிந் தொழுகு மங்க ளுளனைத்
(உ)திறனிலா ரெடுத்த தீமொழி யெல்லா
நல்லவை யுட்படக் கெட்டாங்
கில்லா கின்றவ ளாய்நுதற் பசப்பே

க. சினம் - வெம்மை. இந்நூற்பக்கம் கoஉ: ங - ஆம் குறிப்புப் பார்க்க.

உ. "ஐயற் காங்கிளங் கோளரி யறிவிலா னுரைத்த, பொய்யிற் போம்படி போக்கினன் கடிதினிற் புக்கான்" கம்ப. பிரமாத்திர. எO.

(பிரதிபேதம்) * அப்பொழுதென்றுவெறுப்பேன். † கூறினள்.ஒஒ, வருத்தக்குறிப்பு. அங்ஙனங் கூறி, ‡ னைமாறுவதுபோலன்றி, || மார்பினையனை யான், ÷ கூறினள். ஓகாரம் பிரிநிலை, ஆற்றல் விகாரம் 'ஆங்கசை, அங்ஙனம் கடலோடே,

எ - து: அங்ஙனங் கடலோடே வருந்திக் கூறினவளுடைய மனங்கலங்கும் வருத்தந்தீரும்படி அவள் காதலர் விரைந்து வரக் கெடுதலரிய காமநோய்

நீங்கி, இவளுடைய அழகிய நுதலிற் பசப்பு, அறநெறியறிந்து நடக்கும் கண்ணோட்டமுடையவனை அத்திறமில்லாதார் உண்டாக்கிச்சொன்ன * தீயமொழிகளெல்லாம் நன்மக்கள் இருக்கின்ற அவைக்குள்ளே ஆராய்ச்சிப்பட அவை கெட்டாற் போல, இல்லையாகாநின்றது; என்னவியப்போவெனக் கண்டார் கொண்டு கூறிற்றாக உரைக்க. எ - று.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

† 'மருவழிப் பட்டதென் னெஞ்சு' என்னுந் துணையுங் கூறத்தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'அறம்புணை யாகலு முண்டு' எனத் தன்னுடம்பும் உயிரும் வருந்திய நிலைதோன்றக் கூறுதலாற் கலக்கமெய்தியவாறுங் காண்க.

இஃது 'எங்குத் தெரிந்தது கொள்வே னவனுள் வழி' என ஐஞ்சீரான் ஒன்றும் ‡ 'உதுக்காண், தொய்யில் பொறித்த வழி' என ஈரடியான் ஒன்றும் வருதலிற் கலிவெண்பாவின் வேறுபட்ட பாநிலைவகைக் கொச்சகம். (உஎ)

(கசரு.) துணையுநர் விழைதக்க சிறப்புப்போற் கண்டார்க்கு
நனவினு ளுதவாது நள்ளிருள் வேறாகுங்
கனவி னிலையின்றாற் காம மொருத்தி
யுயிர்க்கு முசாஅ முலம்வரு நோவாள்
கயல்புரை யுண்க ணரிப்ப வரிவரப்
பெயல்சேர் மதிபோல வாண்முகந் தோன்றப்
பலவொலி கூந்தலாள் பண்பெல்லாந் துய்த்துத்
துறந்தானை யுள்ளி யழூஉ மவனை
மறந்தான்போ லாலி நகூஉ மருளுஞ்
சிறந்ததன் ஞாணு நலனு நினையாது
காம முனைஇயா ளலந்தாளென் றெனைக்காண
நகான்மின் கூறுவேன் மாக்காள் மிகாஅது

மகளிர், தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலு
நீள்சுரம் போகியார் வல்லைவந் தளித்தலு
௧௫ ஊழ்செய் திரவும் பகலும்போல் வேறாகி
வீழ்வார்கட் டோன்றுந் தடுமாற்ற ஞாலத்துள்
வாழ்வார்கட் கெல்லாம் வரும்;
௧௮ தாழ்பு, துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கான
மிறந்தெரி நையாமற் பாஅய் முழங்கி

(பிரதிபேதம்) * நீமொழிகள். † அருவழிப், ‡ உதக்காணந் தொய்யில்.

வறந்தென்னை செய்தியோ வானஞ் சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து;
௨௫ நுமக்கெவன் போலுமோ வூரீ ரெமக்குமோ
கண்பாயல் கொண்டுள்ளாக் காத லவன்செய்த
பண்பு தரவந்த வென்றொடர் நோய்வேது
கொள்வது போலுங் கடும்பகன் ஞாயிறே
யெல்லாக் கதிரும் பரப்பிப் பகலொடு
செல்லாது நின்றீயல் வேண்டுவ னீசெல்லிற்
புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போத லரிதா லதனொடியான்
செல்லாது நிற்ற லிலேன்;
௩௨ ஒல்லைவெங், காதலர்க் கொண்டு கடலூர்ந்து காலைநாட

போதரிற் காண்குவேன் மன்னே பனியொடு
மாலைப் பகைதாங்கி யான்;
௩௫ இனியவனென், றோம்படுப்பன் ஞாயி றினி;
௩௬ ஒள்வளை யோடத் துறந்து துயர்செய்த
கள்வன்பாற் பட்டன் றொளித்தென்னை யுள்ளிப்
பெருங்கடல் புல்லெனக் கானல் புலம்ப
விருங்கழி நெய்த லிதழ்பொதிந்து தோன்ற
விரிந்திலங்கு வெண்ணிலா வீசும் பொழுதினான்
யான்வேண் டொருவனென் னல்ல லுறீஇயான்
முன்வேண்டு பவரோடு துஞ்சுங்கொ றுஞ்சாது
வானு நிலனுந் திசையுந் துழாவுமென்
னைப் படர்மிக்கீ நெஞ்சு;

௪௫ ஊரவர்க் கெல்லாம் பெருநகை யாகியென்
னுருயி ரெஞ்சும ளங்குநீ சென்றி
நிலவுமிழ் வான்றிங்கா ளாய்தொடி கொட்ப
வளிபுற மாறி யருளான் றுறந்தவக்
காதலன் செய்த கலக்குறுநோய்க் கேதிலா
ரெல்லாருந் தேற்றார் மருந்து;

௫௧ வினைக்கொண்டென காமநோய் நீக்கிய லூரீ
ரெனைத்தானு மெள்ளினு மெள்ளலன் கேள்வ

னினைப்பினுங் கண்ணுள்ளே தோன்று மனைத்தற்கே
யேமரா தேமரா வாறு;

௫௰ கனையிருள் வானங் கடன்முகந் தென்மே
லுறையொடு நின்றீயல் வேண்டு மொருங்கே
நிறைவளை கொட்பித்தான் செய்த துயரா
லிறையிறை பொத்திற்றுத் தீ;

௫௧ எனப்பாடி;
நோயுடை நெஞ்சத் தெறியா வினைபேங்கி
யாவரு மெங்கேள்வற் காணீரோ வென்பவட்
கார்வுற்ற பூசற் கறம்போல வெய்தர்தார்
பாயல்கொண் டுள்ளா தவரை வரக்கண்டு
மாயவன் மார்பிற் றிருப்போல் பவள்சோ
ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென்
னாயிழை யுற்ற துயர்.

(க)இதுவுமது. இதற்கும் (உ) முன்னர்க் கூறிய உரையைக் கூறிக் கொள்க.

இதன் பொருள்.

துனையுநர் விழைதக்க சிறப்புப்போற் கண்டார்க்கு
*நனவினு ளுதவாது கனவிருள் வேறுகுங்
(௩)கனவி னிலையின்றாற் காம மொருத்தி
யுயிர்க்கு †முசாஅ முலம்வரு மோவாள்
௫ கயல்புரை யுண்க ணரிப்ப வரிவாரப்
பெயல்சேர் மதிபோல வாண்முகந் தோன்றிப்

க. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருக்

இணைக்கு மேற்கோள்; தொல். அகத். ரு. ௧௩. நச்.

௨. இந்நூற்பக்கம் ௮௮௫-௮௮௯. பார்க்க.

௩. "கனவினு ளெய்திய செல்வத்தனையதே" (கலி. ௯௮: ௨௪) என்பதும் அதன்குறிப்பும் "கண்படைகொண் டமர்வாழ்வும் பொய்யாகிக்கனவு கண்ட கதையாயிற்றே" கந்த. காமதகன. ௧௦௯. என்பதும் நோக்குக.

(பிரதிபேதம்) * ன்னிறுதவாது. † உயாஅம்.

௯௪௯ கலித்தொகை ௧௦௩.

வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான் *றின்னன்கொல்
மாயோனென் றுட்கிற்றென் னெஞ்சு

எ – து: கஞ்சன்முதலியோர் வரவிட்ட கழுத்தின்மயிரினையுடைய குதிரையை வாயைப் பிளந்துபோகட்டுக் கையால் † அடித்த அஞ்ஞான்றைக் கண்ணன் இத்தன்மையன்கொல்லென்று கூறும்படியாக ஒழியாத கோபத்தோடே வெவ்விதாய்த் தன்மேலே சென்ற சிவந்த ஏற்றைச் செவியடியிற் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு அதன்வலியை மீட்டுத் தழுவும், காயாம்பூவாற் செய்த கண்ணியையுடைய பொதுவன் அழகைப்பாராய்; ‡ அவனைக் கண்டு என்னெஞ்சு உட்கிற்றுக்காணென்றாள். எ – று.

௫௬ ஆங்கு, (௧)இரும்புலித் தொழுதியும் (௨)பெருங்களிற் றினமு

மாறுமா றுழக்கியாங் குழக்கிப் பொதுவரு
மேறுகொண் டொருங்குதொழூஉ விட்டனர் விட்டாங்கே
மயிலெருத் துறழணி மணிநிலத்துப் பிறழப்
பயிலிதழ் மலருண்கண்

மாதர் மகளிரு மைந்தரு மைந்துற்றுத்
(௩)தாதெரு மன்றத் தயர்வர் (௪)தழூஉ
௬௩ (௫)கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ||பாய மகள்

கூந்தலையுடைய மாவைக் கூந்தலென்றும் பெயரினையுடையவடிவைப் பெயரென்றக்கூறினார்; ஆகுபெயரான். கேசி-குதிரையாய்வந்தபொருதானோரசுரன், இப்பெயர் கேசமென்னும் வடமொழி முதனிலையாக முடிந்தமையின் அதன்பொருண்மைபற்றிக் கூந்தலென்றார்' என்னும் அதனுரையும்; "கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்" (முத்தொள்.) "கூந்தல்வாய் கீண்டானை" (நாலாயிர. இயற்பா. உ-ஆம் திருவந்தாதி. ௬௩.) என்பவைகளும் ஈண்டு அறிதற் பாலன.

௧. சிறுத்தைப்புலியும்உண்மையின்வேங்கைப்புலியைஇரும்புலியென்றார்.
௨. பன்றியும் களிறெனப்படுமாதலின் யானையைப் பெருங்களிறென்றார்.
௩. "தாதெருமன்றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே" சிலப். ௧௭. 'மாயவன்றன்'
௪. "தழூஉப் பிணையூஉ, மன்றுதொறு நின்ற குரவை" மது. ௬௧௪-௬௧௫. என்பவாதலால், குரவைக்குத் தழூஉவென்று ஒரு பெயரிட்டார்.
௫. "கொல்லேற்று ....ஆயமகள்", "வளியா வறியா......... ஆயமகடோள்" என்னும்-பகுதிகள் ஏறுதழுவினார்கு உரியவிவளெனவந்த கைக்கிளைகட்கு மேற்கோள்; தொல். அகத். ௫. ௧௩. நச்.

(பிரதிபேதம்) * இன்னகொள், † அடித்தயன்றைருான்றை. ‡ அதின், || ஆயர்மகள்.

ஐந்தாவது நெய்தல் ௨அ. ௬௨௧

பலவொலி கூந்தலாள் பீண்பெல்லாந் துப்பத்துத்

துறந்தானை யுள்ளி யழூஉ மவனை
மறந்தாள்போ லாலி நகூஉ (௧)மருளுஞ்
(௨)சிறந்ததன் ஞாணு நலனு நினையாது
காம முனைஇயா * ளலந்தாளென் (௩)றெனைக்காண
நகான்மின் கூறுவேன் மாக்காண் † மிகாஅது
மகளிர், தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர (௪)நீத்தலு
நீள்சுரம் போகியார் ‡ வல்லைவந் தளித்தலு
மூழ்செய் (௫)திரவும் பகலும்போல் வேறாகி
வீழ்வார்கட் டோன்றுந் தடுமாற்ற ஞாலத்துள்
வாழ்வார்கட் கெல்லாம் || வரும்

எ - து: மக்கள் விரைந்தனராய் விரும்புதல் தக்கதொரு தலைமைபோலே இருக்கின்ற காமமானது நள்ளிருட்கண்ணே கண்டவர்களுக்கு கனவின்கண் உதவாதே வேறுபட்டுப் போங் கனவினும் நிலைபெறுதல் இன்றாயிருந்தது; எவ்வாறெனிற் பலவாய்த் + தழைகின்ற கூந்தலையுடையாளாகிய ஒருத்தி தன் குணங்களை யெல்லாம் நுகர்ந்து தன்னைக் கைவிட்டவனை நினைத்து கெட்

௧. மருளுமென்பதற்கு உரை காணப்படவில்லை.

௨. (அ) "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" தொல். களவு. சூ. ௨௨. (ஆ) "உயிரினுஞ் சிறந்ததன், ஞாண்யாது மிலளாகி" கலி. ௧௪௭: ௮ - ௧. (இ) "நாணுக் குறைவில ளங்கைமற் றெஃமரும்" பரி. ௧௦: ௪௧. (ஈ) "நாண்முதற் பாசந் தட்ப" (உ) "நாண்சுமக் கலாத நங்கை" சீவக. ௪௭௦, ௨௪௪௩. (ஊ) "எண்பாலோவா நாண்........தம், பூண்பாலரைக் காண்பவர் நல்லார்" கம்ப. கைகேயி. ௩௧.

௩. "யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார், யாம்பட்ட தாம்படா வாறு" குறள். ௧௧௪௦.

௪. (அ) "புணர்வும் பிரிவு, நன்பக லமையமு மிரவும் போல, வேறுவே

றியல வாகி மாறெதிர்ந், துளவென வுணர்ந்தனை யாயின்" என்பது ஒப்புநோக்கற்பாலது; அகம். ௩௨௭: ௧-௪.

௫. "உவக்காணெங் காதலர்" என்பதன் உரையில் (குறள் ௧௧௮௫) 'அவர் செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின் செலவும்வரவும்போல்வ தறிந்து வைத்து அறியாதாய் போல நீ சொல்லுகின்ற தென்னை யென்பதாம்'என்று பரிமேலழகர்எழுதியிருப்பது ஈண்டறிதற்பாலது.

(பிரதிபேதம்) * அல்லாந்தாள், † மிகா அது தோன்;சேர்ந்தமர்ந்தார்த்துயர், ‡ வல்லுந்தளித்தலும், || வரும் தாழபு எ - து: மக்கள், + தழைக்கின்ற.

பெயர்ப்புக் கொள்ளும்; அவனோடு கூடுமாற்றினைச் சிலசோரடிசாவும்; நெஞ்சு * சுழலும்; பெய்கின்ற மழையைச் சேர்ந்த மதிபோலே தன்முகந் தோன்றும் படியாகக் கயலையொக்குந் தன்கண்களினின்றும் † அரித்துவிழுகின்ற நீர் முகத்தே வடியும்படி ஒழியாளாய் அழாநிற்கும்; அவனை மறந்தானைப்போலே ஆரவாரித்து இடையே நகுவதுஞ் செய்யும்; ஆகையினாலே தனக்குச் சிறந்த நன்(௧) நாணையும் ‡ மற்றுமுள்ளநன்மைக்குணங்களையும் நிலைபெறநினையாதே காமமொன்றையுமே(௨)நினைத்தவன் அலமந்தாளென்று இங்ஙனம் இகழ்ந்துகூறி, எல்லாருங்காணஎன்னைச்சிரியாதேகொள்ளும்;(௩)ஐயறிவினையுடையவர்களே! சுருக்க யான் அதன்றன்மை கூறுவேன்; கேண்மினென்று கூறுகின்றவன், மகளிர் தோளைச்சேர்ந்தஆடவர் அவர்கள்வருத்தம்மிகும்படி பிரிதலும் பின்னர் நீண்ட சுரத்தைப்போனவர்கள் விரையவந்து அருள்செய்தலுமாகிய இரண்டும் இரவும் பகலும் போலே முறைமைசெய்து வேறாய் ஒருவரை ஒருவர் விரும்பு வாரிடத்துத் தோன்றும்; இன்பம் நிலையில்லாமையான தடுமாற்றமாயிருக்குமது தனக்கேயன்றி உலகத்துக்கூடியிருந்து வாழ்வார்களுக்கெல்லாம் வருவதுஞ் செய்யுமென்று || அகன்றன்மை கூறினாள். எ - று.

---

௧. "நாணுவரை நில்லாக் காமம்" அகம். ௨௦௮: ௨௦.

உ. மூனைதலென்பதற்கு நினைதலென்னும் பொருள் வேறெங்கும் காணப் படவில்லை.

ங. (அ) "மாவு மாக்களு மையறி வினவே" (ஆ) "மக்க டாமே யாறறி வுயிரே" தொல் மரபு. சூ. ஙஉ, ஙங. (இ) "அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு, மிகைமக்க ளான்மதிக்கற் பால- நயமுணரார், கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும், வையார் வடித்தநூ லார்" நாலடி. கசுங. (ஈ) "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" (குறள் சுஉ0) என்பவைகளும் (உ) "தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ, ததன்பய மெய்திய வளவை மான" (பொருந. ககக. கஉ) என்புழி, மாக்களென்பதற்கு, 'மக்களென்னாது மாக்களென்றார்; வீடு பேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்' என்றும் (ஊ) "பொழு தளந் தறியும் பொய்யா மாக்கள்" (முல்லை.ருரு) என்புழி, மாக்களென் பதற்கு, 'அறிவில்லாதோர்' என்றும் (எ) "மூவுறு பாடை மாக்களால்" (சீவக. கங.) என்புழி, மாக்க ளென்பதற்கு, 'மிலேச்சராதலின் ஐயறி விற் குரிய மாக்களென்னும் பெயராற் கூறினர்' என்றும் (ஏ) "மைய லங் கோயின் மாக்கள்" (சீவக. கஉஎஅ) என்புழி, மாக்களென்பதற்கு, 'மக்கட்குரிய மனனின்றி அறிவு கெட்டமையின், ஐயறிவுடையா ரென்று மாக்களென்றார்' என்றும் இவ்வுரையாசிரியர் எழுதியிருக்கும் விளக்கங்களும் (ஐ) "நடவாமடிசி" என்னுஞ் சூத்திரத்தின் விசேட வுரையில் 'கையறியா மாக்கட்கன்றி நூலியற்றும் அறிவினையுடைய

(பிரதிபேதம்) * படிதலும், † மறித்த; ‡ மற்றுள்ள, || அதனது தன்மை கூறினர். தறந்து.

ஐந்தாவது நெய்தல் உஅ். [illegible]

கஅ தாழ்பு; துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கான
(க)மிறந்(உ)தெரி நையாமற் பாஅய் முழங்கி
வறந்தென்னை செய்தியோ வானஞ் சிறந்தவென்

கண்ணீர்க் கடலாற் (௩)கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து

எ - து: அங்ஙனங் கூறி அவர் நக்கதனால் யாம் இங்ஙனமாயினே மென்று கருதி அழுகின்றவள் ஆண்டெழுந்த வெண்மேகத்தைநோக்கி, வானமே! நீ பெய்யாதே வறந்து என்னைகாரியஞ் செய்கின்றாய்? நின் இனத்தோடே கூடி என் கண்ணீரால் நிறைந்த கடலிலே முகந்து பரந்து முழங்கி முன்னர் என்னிடத்தே தாழ்ந்து பின்னர் என்னைத் துறந்து * செருக்குந் (௪)தொடியை உட்பட நெகிழ்த்தவன் போகிய கானத்தினை நெருப்பு மிக்குச் சுடாமற் செறிந்த துளியை வீசாயோ? வீசென்று மழையை நோக்கிக் கூறினாள். எ - று.

௨௩ நமக்கெவன் போலுமோ வூரீ ரெமக்குமெங்
(௫)கண்பாயல் கொண்டுள்ளாக் † காத லவன்செய்த

மக்கட்குப் பலகலைக்குரிசில் பவணந்தியென்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான் உலகமலையாமை யுள்ளிட்ட பத்தழ் கோடும் பிறங்கு நின்றது இச் சூத்திரமென்று உணர்க' என்று (நன். பத. சூ ௧௦. சங்கர. விருத்தி) காணப்படுவதும் (ஏ)"தக்கவின்ன தகாதன வின்னவென், றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள, மக்களும் விலங்கே" (கம்ப. வாலி. ௧௧௨) என்பதும் இங்கே அறிதற்பாலன.

௧. (அ) "வியப்பிறந் தன்றே" புறம். ௨௧௭: ௯. (ஆ) "இறப்பச் சிறிதென்னாது" (இ) "இறப்ப நினையுங்கால்" (ஈ) "இறப்பவே தீய செயினும்" நாலடி. ௯௯; ௧௭௪; ௨௨௩. (உ) "இன்ப மிறந்ததே" சீவக. ௯௭௦. (ஊ) "இறப்பப் புகழ்ந்தன்று" பு - வெ. கைக். ஆண். ௭. என்பவற்றிலும் இறத்தலென்பது மிகுதலென்ற பொருளில் வருதல் காண்க.

௨. (அ) "கோடெரிநைப்பவும்" பொருந. ௨௩௪. (ஆ) "எரிகானலைப்ப" நற். ௧௭௭: ௧. (இ) "ஒள்ளெரி நைப்ப" புறம். ௨௪௦: ௧௦.

௩. (அ) "கனைதுளி" (ஆ) "கனைபெயற் றண்டுளி" கலி. கச; எ; சுo: உஉ.

௪. இந்நூற்பக்கம் அ௬o: க-ஆம் குறிப்பும் இச்செய்யுள் சஎ-ஆம் அடியும் இங்கே அறிதற்பாலன.

௫. (அ) "கண்பாயல் கொண்டு" (ஆ) "கண் பாயல் கொள" (இ) "கண் பாயல் பெற்றபோல்" கலி. எo: அ; அஎ: கஅ; ககக: ௫.

(பிரதிபேதம்) * நெருக்குந் தொடிபை, † காதலவன் செய் பண்பு.

கலித்தொகை கசறு.

பண்பு தரவந்த வென்றொடர் நோய்(க)வேது
கொள்வது போலுங் (உ) கடும்பகன் ஞாயிறே
யெல்லாக் கதிருப் பரப்பிப் பகலொடு
செல்லாது *நின்றீயல் வேண்டுவ னீசெல்லிற்
(௩) புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போத லரிதா லதனொடியான்
செல்லாது நிற்ற லிலேன்

௩௨ தொல்லையெங், காதலர்க் கொண்டு கடலூர்ந்து காலைநாட்
போதரிற் (௪) காண்குவேன் மன்னோ பனியொடு
மாலைப் பகைதாங்கி †யான்
இனியனென், றோம்படுப்பன் ஞாயி றினி

எ-து: அங்ஙனங் கூறி, மீண்டும் அவ்வூரிலுள்ளாரை நோக்கி, ஊரிலுள்ளீர்! இக்கடும்பகல் எமக்கு எங்கண் (௫) ணுறக்கத்தைக் கைக்கொண்டு எம்மை நினையாத காதலையுடையவன் என்னிடத்துச் செய்த குணங்கள் தருகையினாலே வந்த என்னுடைய இடையறாத நோயான் வருங் குளிரை ‡ வேது கொள்வதுபோலே இராநின்றது; இது நமக்கு என்போலே இருக்கின்றது ||கூறுமினென்றாள்; அங்ஙனங் கூறி, இங்ஙனம் வேதுகொண்டு என்னைக்

காக்கும் + கடும்பகல் ஞாயிறே! நீ எல்லாக் கதிர்களையும் பரப்பி இப்பகற் பொழுதோடே போகாது நிற்றலை விரும்பாநின்றேன்; அதற்குக் காரணம் என்னெனில், நீ போகிற் புற்கென்ற மயக்கத்தைத் தரும் மாலைக்காலம் இன்று வந்து என்னைக்கொல்லாமற்போத லரிது; அதனோடே யான் உயிர் பேர்காநிற்குந் தன்மையையுடையேனல்லேன்; ஆதலாற் × காணென்றாள்; என்று பின்னும் ஞாயிறே! நீ எங்காதலரை விரையக் கொண்டு கடன்மேலே வந்து நாட்காலையிலே இவ்வுலகிலே போதுவாயாயின், யான் என்னோயின் மயக்கத்தோடே மாலையாகிய பகையையும் பொறுத்து, நின்னிடத்து அவன்

௧. "வேறுகொண் டொற்றியே" கலிங்க. கடை. ௧௫.

௨. கடியென்னு முரிச்சொல் விளக்கமென்னுங் குறிப்புணர்த்தி வருதற்கு, "கடும்பகன் ஞாயிறு" என்பது நச். உரையிலும் "கடும்பகல்" என்பது சேனா. உரையிலும் மேற்கோள்; தொல். உரிச். சூ. ௮௭.

௩. "புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல், வன்கண்ண தோநின் றுணை" குறள். ௧௨௨௨.

௪. 'காண்குவேன் கொல்லோ' என்று உரையிலுள்ளது.

௫. இந்நூற்பக்கம் ௧௫௬: ௩-ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * நின்றீதல் வேண்டுவேனி செல்லிற், † யான். எ - து. அங்ஙனங் கூறி, ‡ வேறுகோளது போலே, || கூறுமினென்றான். உம்மை மிசை நிறை. அங்ஙனங்கூறி, + கடும்பகலையுடைய ஞாயிறே, × காணேனென்றான்.

இனியன்; அவனை நீ துனித்திராதேகொள்ளென நெஞ்சினைப்பாதுகாப்பதுஞ் செய்வேன்; அங்ஙனம் பாதுகாத்துப் பின்னர் அவனைக் காண்பேன்கொல் லோ; என்று*கூறினாள். எ - று.

உம்மை, இசைநிறை. நின்றீயல், தொழிற்பெயர்த்திரி†சொல்.

௩௬ ஒள்வளை யோடத் துறந்து துயர்செய்த

கள்வன்பாற் பட்டன் றெளித்தென்னை யுள்ளிப்
பெருங்கடல் புல்லெனக் கானல் புலம்ப
விருங்கழி (க)நெய்த லிதழ்பொதிந்து தோன்ற
விரிந்திலங்கு வெண்ணிலா வீசும் பொழுதினான்

க. நெய்தலென்பது ஒரு நீர்ப்பூங்கொடி; இதனானே கடல் சார்ந்த நிலம் நெய்தனிலமெனப்பட்டதென்பார் ஒருசாரார். (தொல் அகத். சூ. ரு. இள. நச். நாற்கவி. அகத். சூ. சு. உரைபார்க்க.) இக்கொடி திரண்ட தாளையும் பசிய இலையையும் நறுமணமுள்ள பூவையுமுடையது; இதன் இலை யானைக்கன்றின் காதிற்கும், இதன்முகிழ் மாணாக்கர்குடுமிக்கும், இதன் பூவிதழ் வேலுக்கும் உவமையாய் வந்துள்ளன. இதற்கு விடியற்காலத்தில் மலர்தலும் மாலைக்காலத்திற் குவிதலும் இயல்பாம். இம்மலரால் நெய்தனிலமகளிர் தழையும் மாலைமுதலியனவும் செய்தணிதலும் சிற்றில் முதலியவற்றுக்குப் புனைதலும் உண்டென்று பண்டைநூல்கள் கூறும். இம்மலரிற் கருநிறமுடைய சாதி கருநெய்தலென்றும் வெண்ணிறமுடையசாதிவெண்ணெய்தலென்றும் வழங்கப்பெறும். இவற்றுட் கருநெய்தற் பூவுக்கு நீலமணியும் அதனிதழுக்கு மகளிர் கண்ணும் உவமையாக வருகின்றன. மகளிர் கண்ணுக்கு இவ்விதழும் உவமையாம். (இந் நூற்பக்கம் அகரு : க ஆம் குறிப்புப் பார்க்க.) இவையும் பிறவும் (அ) "கணைக்கா னெய்தல்" பெரும்பா. உகரு; நற். கருஅ : சு; குறுந். கூ; அகம். ருகூ0 : ச. (ஆ) "சிறுபாசடைய நெய்தல்" நற். உஎ : கக. (இ) "கமழ்நறு நெய்தல்" நற்

உ-அங: உ. (ஊ) "நெய்தல், கட்கமழ்ந் தாணுத் துறைவற்கு" ஐங். கடுக. (உ) "இரும்பிடி............நெய்தலம் பாசடை புரையு மஞ்செவிப், பைதலங் குழவி தழீஇ" நற். சஎ : க - ச. (ஊ) "நெய்தன் முகிழ்த் துணைய வாங்கும்" சிறுபஞ்ச. ௩௦. (ஏ) "நெய்த லிடையிடை வாளை பிறழ்வனபோ, லிலங் கொலி வாளிவா டாயினவே" களவழி. ௩௩. (ஏ) "வைகறைக், கட்கமழ் நெய்த லூதி யெற்படக், கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர், அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங், குன்று" முருகு. எங-எஎ. (ஐ) "வைகறை மலரு நெய்தல் போலத், தகைபெரி துடைய காதலி கண்ணே" ஐங்குறு. கஅஅ.

(பிரதிபேதம்) * கூறினுள் கின்றியல், † சொல். இனியனென்றேம்படுட்டன் ருயிறின் யொள்வனே.

கஉச கலித்தொகை கசஙு.

யான்வேண் டொருவனென் னல்லலுறீஇயான்
முன்வேண்டு பவரோடு துஞ்சுங்கொ றுஞ்சாது
வானு நிலனுந் திசையுந் *துழாவுமென்
னுனைப் படர்மிக்க நெஞ்சு

(ஒ) "வள்ளிதழ் நெய்தல் கூம்ப...........புலம்பொடு வந்த புன்கண் மாலை" (ஓ) "நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுக" நற். கஎ : ௩-எ ; கஅஎ : க. (ஔ) "தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற், கடும்பகல் வருதி கையறு மாலை, கொடுங்கழி நெய்தலுங் கூம்பக், காலை வரினுங் களைஞரோ விலரே" ஐங். கஅ௩. (ஃ) "நெய்த, லுண்டா துண்டு வண்டினந் துறப்ப,.........வந்தமாலை" அகம். ௩௪௦ : ச - க. (அஅ) "புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணே போற், றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா, லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள், வன்கணர் கானல் வரக்கண் டறிதியோ"

சிலப். எ: ௩௩. (ஆஆ) "நெடுங்கா னெய்த, லம்பகை நெறித்தழை யணி பெறத்தை இ" நற். கூக : எ—அ. (இஇ) நெய்தற், பூவுட னெறிதரூஉத் தொடலை தைஇ" நற் க௩அ : சு-எ, (ஈஈ) "நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையா, ருடலகங் கொள்வோ ரின்மையிற, றொடலைக் குற்ற சிலபூ வினரே" ஐங். கஅஎ. (உஉ) "நெய்த, னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்" குறுந். சுஒக. (ஊஊ) ''ஒண்ணுதன் மகளிர்......... நெய்த, லகல்வரிச் சிறுமனை யணியுந் துறைவ'' நற். உஅ௩ : க - ௩. (எஎ) "மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தற், பாசடைப் பனிக்கழி" பதிற். ௩0: உ-௩. (ஏஏ)"மணி நிற நெய்தல்"ஐந்திணை யெழு. சுo.(ஐஐ) "கண்ணே ரொப்பின் கமழ்நறு நெய்தல்" நற் உஅ௩: உ. என்ப வற்றால் அறியலாகும். பிங்கல முதலிய நிகண்டுகளையும் உரைகளையும் நோக்க, கருநெய்தலும் நீலமும் ஒன்றே யென்ற ஐயமுறுமாயினும், (ஒஒ) "கட்கமழு நறுநெய்தல், வள்ளித ழவிழ்நீலம்" மது. உ௫o-உ௫க. (ஓஓ) "பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்குந், தண்டுறை யூரன்" ஐங். உ. என்பவற்றால் இவை வேறுவேறென்பது விளக்கமாகும். இங்கே கூறிய ஐங்குறுநூற்றுச் செய்யுளின் விசேடவுரையில், (ஔஔ) 'சிறப் புடைய கருங் குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கும் ஊர னென்றது, குலமகளிருடனே பொதுமகளிர் இகலுமூரன்' என்று எழுதியிருப்பதும் உற்றுநோக்கற் பாலது. (ஃஃ) "சிறுமா ணெய்தல்" புறம். சுக : உ. எனவருவதும் நோக்குக. (அஅஅ) "நீணறு நெய்தல்" குறிஞ்சி. எக. (ஆஆஆ) "தண்ணறு நெய்தற் றளையவிழ் வான்பூ" ஐங். தகo. என வெண்ணெய்தலும் சிலவிடத்துக் கூறப்படுகிறது. வெண் ணெய்தலும் ஆம்பலும்ஒன்றாயின் அதுவும்பயின்ற வருவதென்னலாம்.

(பிரதிபேதம்) நமுவு மென்.

எ - து: அங்ஙனம் ஞாயிற்றை நோக்கிக் கூறின அளவிலே மாலைக்காலமுந் திங்களும் * வந்தன; அவற்றான் வருத்தம்மிக்கு, என்னுடைய அமையாத வருத்தமிக்க நெஞ்சு முன்பே ஒள்ளிய வளை கழலும்படி என்னைக் கைவிட்டுப் பின்பு வருத்தஞ்செய்த கள்வனை உள்ளி என்னை ஒளித்துப்போய் அவன்பாற் பட்டது; அது தான் மீண்டுவந்து பெருங்கடல் தன்னிறந் தோன்றாமற் புற்கெனக் கானல் பறவைகள் முதலியனவின்றித் தனிப்பக் கழியின்நெய்தல் இதழ்குவிந்துதோன்ற வந்த † மாலைப் பின்னர் விளங்குகின்ற வெண்ணிலாப் பரக்கும்பொழுதின் கண்ணே விசும்பையும் நிலத்தையுந் திசைகளையும் அவனைத் தேடித் (க) துழாவாநிற்கும்; இங்ஙனம் என்னை அல்லலுறீஇயினவன், தான் விரும்பாமல் யான் விரும்பப்பட்டான் ஒருவன்; அவன் தன்னை விரும்புகின்ற என்னோடே துயிலாது தனியே துயில்கொள்ளுமோ கொள்ளானோ என்று கூறினாள். எ - று.

வேண்டுபவர் என்றாள், தன்னைப் பிறர்போல.

சரு (உ) ஊரவர்க் கெல்லாம் பெருநகை யாகியென்
(ங) னாருயி ரெஞ்சும னங்குநீ சென்றீ
நிலவுமிழ் வான்‡திங்கா ளாய்தொடி கொட்ப
வளிபுற மாறி யருளான் றுறந்தவக்
காதலன் செய்த கலக்குறுநோய்க் கேதிலா
ரெல்லாருந் தேற்றார் மருந்து

எ - து. அங்ஙனங் கூறி, எழுந்த திங்களை நோக்கி, நிலவைக் கான்ற திங்களே! தோள்மெலிந்தகாலத்துச் செருகலாமென்று ஆராய்ந்த தொடி உட்படச்சுழலும்படி அளித்தலை என்னிடத்து மாறி, பின்னர் என்னை || அருள் செய்யாதே கைவிட்ட அக்காதலன் செய்த, மனக்கலக்கம் உறுகின்ற காம

நோய்க்கு நின்னை ஒழிய அயலிலுள்ளார் எல்லாரும் [அதற்கு] ஒருமருந்தைத் தெளிவித்துக் கூறார்; ஆதலால் ஊ‌:வர்க்கெல்லாம் பெரியதோ ÷ ரிகழ்ச்சி யுண்டாம்படி என் அரிய உயிர் போகாநிற்கும்; இதனை நோக்கித் திங்களாய

க. "கவிழ்ந்து, நிழ்றுழாம் யானை" தஞ்டி. கு. உச: மேற்கோள்; "சிறு குரங்கின் கையாற் றுழா" பழ. ௯க.

உ. "ஊர்க் கெல்லாஞ் சாலும், பெருநகை யல்க னிகழ்ந்தது" கலி. சுஙி.

௪ - உ.

ங. (அ) "ஆருயி ரெஞ்சும், வகையிஞல்" (ஆ) "ஆருயி ரெஞ்ச" கலி: கஙகூ: உகூ-உஎ; கசங: கக.

(பிரதிபேதம்) * வந்தென அவற்றுன். † மாலையின்னர். ‡ திங்களாய்தொடி. || அருளே செய்யாதே, ÷ இகட்சி.

புத்தேளே! நீ (க) அவன்பாற் * சென்று என் குறை முடிப்பாயாக என்று கூறினாள். எ - று.

ஆகி, ஆக.

ருக விளைக்கொண்டென் காமநோய் நீக்கிய வூரீ
ரெனைத்தானு †மெள்ளினு மெள்ளலன் கேள்வ
னினைப்பினுங் கண்ணுள்ளே தோன்று மனைத்தற்கே
யேமரா தேமரா வாறு

எ - து; அன்னைங் கூறிய திங்கள் போகா நிற்றலின் அதனைக் கைவிட்டு

இன்னும் நம் வருத்தமுணர்ந்து வினவிய ‡ ஊரிலுள்ளாரே நம் வருத்தந் தீர்த்தற்குரியரென்று கருதி, ஊரீர்! நீர் என்னை இகழ்ந்திருக்கினும் என்கேள்வன் சிறிதும்என்னை இகழ்ந்திரான்; அதற்குக் காரணமென்னெனில், மெய்யுற்றுப்புணர்ந்து யான் பரிகாரப்படாததொரு நெறியிலே நின்று நெஞ்சால் நினைப்பிடத்துத்தோன்றுதலினுங் காட்டிற் ||கண்ணினிடத்தேதோன்றும்; அவ்வளவு அருள்செய்தற்கு என்னெஞ்சு தான் பரிகாரப்படுகின்றதில்லை; இதனை நும்முடையதோர் தொழிலாக ஏறட்டுக்கொண்டு எனது காம நோயை நீக்குதற்கு நல்ல ×காலமென்று கூறினாள். எ - று.

கனையிருள் (௨)வானங் கடன்முகந் தென்மே
லுறையொடு நின்றீயல் வேண்டு மொருங்கே
நிறைவளை கொட்பித்தான் செய்த துயரா
லிறையிறை (௩)பொத்திற்றுத் தீ

எ - து: அங்ஙனங் கூறி;' அவனைத் தந்து + இவர் இந்நோயை நீக்குமளவும் செறிந்த இருளையுடைய மேகமே! நிறைந்த வளை சுழலப் பண்ணினவன் செய்த வருத்தத்தாலே எனக்குச் சந்துதொறுஞ் சந்துதொறும் காமத்தீ மூண்டது; இதன் வெம்மை ஆறும்படி கடலிலே முகந்து என்மேலே சேர இடைவிடாமற்பெய்யுந் துளியோடே நிற்றலைச் செய்தல் ∴ வேண்டும்; என்று கூறினாள். எ - று.

---

௧. 'ஈங்கு முதலியன தன்மைக்கண்ணும் ஆங்கு முதலியன படர்க்கைக் கண்ணும் அடக்கப்பட்டன' (தொல். கிளவி. சூ. ௨௮. நச்) என்பது இங்கே அறிதற்பாலது.

௨. "கார்தலைக் கொண்டு பொழியினுந் தீர்வது, போலாதென் மெய்க் கனலு நோய்' கலி ௧௪௪: ௪௪-௪௫.

௩. "எரிபொத்தி" (கலி. ௩௪ . ௧௧) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * சென்றேதறை, † என்னிறுமென்னிலன், ‡ ஊரிலுள்ளாரே அவனே நம் வருத்தந் தீர்த்தற்குரியானென்று கருதினீர்? நீரென்னை, || கண்ணிடத்தே, × காரணமென்று + அவன் இந்நோயை, ∴ வேணுமென்று.

௫௩ எனப்பாடி

நோயுடை நெஞ்சத் தெறியா வினைபேங்கி
யாவிரு மெங்கேள்வற் காணீரோ வென்பவட்
கார்வுற்ற பூசற் கறம்போல வெய்தந்தார்
பாயல்கொண் டுள்ளா தவரை வரக்கண்டு
மாயவன் மார்பிற் ※ றிருப் போல் பவள்சேர
(௩)ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென்
ஞுயிழை யுற்ற துயர்

எ - து: †என்று அங்கு அங்ஙனஞ்சொல்லிக் காமநோயையுடைய நெஞ்சிலே அடித்துக்கொண்டு வருந்தி அழுது, நீங்கள் எல்லீருந் தேடிச் 'சென்றும் எங்கணவரைக் காணப் பெற்றிலீரோ என்று கூறுகின்றவட்கு உற்ற வருத்தமானது, தன் துயிலைவாங்கிக்கொண்டு தன்னைநினையாதவரைத் தன்னிடத்தே வரக்கண்டு அவர் மார்பிடத்தே மாயவன் மார்பில் திருச்சேர்ந்தாற்போலே அவள்சேர ஞாயிற்றின்முன் இருள் கெடுமாறு போலக் கெட்டது; ஆதலால், இவ்வாயிழை பசப்புற்ற வருத்தத்திற்(கு அறக்)கடவுள் உதவித் தீர்த்தாற்போல அவரும் உதவித் தீர்த்தாரென்று கண்டார் வியந்து தம்மிற் கொண்டுகூறிற்றாக உரைக்க. எ - று.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'நோய்வேது கொள்வதுபோலுங் கடும்பகல்' என்னுந்துணையும் கூறத் தகாதன கூறலின் ‡ மடனிறந்தவாறும் 'பனிபொடு மாலைப்பகை தாங்கியான்'

எனத் தன் வருத்தந் தோன்றாமற் கூறலின் வருத்தமிறந்தவாறும் 'கண்ணீர்க் கடலால்' என்றதனையும் 'வானு நிலனுந் திசையுந் துழாவுமென்... ..னெஞ்சு' என்றதனையுந் தான் வியவாமையின் ||மருட்கையிறந்தவாறும் 'எங்கண்பாயல் கொண்டு' என்றும் 'ஒள்வளையோட' என்றும் வனப்பு மிகுதி கூறலின் மிகுதி யிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடிவந்த தரவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் ஓரடியா னென்றும் பெற்றுக் கலிவெண்பாவின் வேறுபட்ட பாநிலைவகைக் கொச்சகம்.

(௧௪௮) உரைசெல வுயர்ந்தோங்கிச் சேர்ந்தாரை யொருநிலையே
வரைநில்லா விழுமமுறீஇ நடுக்குரைத்துத் தெறன்மாலை
யரைசினு மன்பின்றாங் காமம் புரைதீர

---

௧. "ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென், னாயிழை மேனிப் பசப்பு" (கலி. ௪௨: ௫௧-௫௨) என்பதும் அதன் குறிப்பும் ஒப்பு நோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * இருட்போலவள்சேர † என்றதனை ‡ மதனிறந்தவாறும் || மருட்கை பிறந்தவாறும்.

வண்ணமென் சேக்கையு ளாரா தளித்தவன்
றுன்னி யகலத் துறந்த வணியளாய்
நாணு நிறையு முணர்கல்லா டோண்ஞெகிழ்பு
பேரம ருண்க ணிறைமல்க வந்நீர்தன்
கூரெயி றுடிக் குவிமுலைமேல் வார்தாத்
தேர்வழி நின்று தெருமரு மாயிழை
கூறுப கேளாமோ சென்று;

கக எல்லிழாய், எற்றி வரைந்தானை நாணு மறந்தாளென்
றற்றனிர் போல வினவுதிர் மற்றிது
கேட்டீமி னெல்லீரும் வந்து;

கச வறந்தெற மாற்றிய வானமும் போலு
நிறைந்தென்னை மாய்ப்பதோர் வெள்ளமும் போலுஞ்
சிறந்தவன் றாவற நீப்பப் பிறங்கிவந்
தென்மே னிலையிய நோய்;

கஅ நக்கு நலனு மிழந்தா ளிவளென்னுந்
தக்கவிர் போலு மிழந்திலேன் மன்னோ
மிக்கவென் னாணு நலனுமென் னுள்ளமு
மக்கா லவனுழை யாங்கே யொழிந்தன
வுக்கா ணிஃதோ வுடம்புயிர்க் கூற்றாகச்
செக்கரம் புள்ளித் திகிரி யலவனொடியா
னக்கது பன்மா ணினைந்து;

உ௦ கரைகாணா நோயு ளழுந்தா தவனைப்
புரைதவக் கூறிக் கொடுமை நுவல்வீர்
வரைபவ னென்னி னகலா னவனைத்
திரைதரு முந்நீர் வளாஅக மெல்லா
நிரைகதிர் ஞாயிற்றை நாடென்றேன் யானு
முரைகேட் புழியெல்லாஞ் செல்வேன் புரைதீர்ந்தான்
யாண்டொளிப் பான்கொல்லோ மற்று;

உஉ மருள்கூர் பிணைபோன் மயங்கவெந் நோய்செய்யு
மாலையும் வந்து மயங்கி யெரிநுதி

யாமங் தலைவர்தன் ருயி னதற்கென்னேய்
பாடுவேன் பல்லாருட் சென்று;

௬௫ அஞ்சார் கொலையேறு கொளபவ ரலலதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய வுயிர்துறந்து
நைவாரா வாயமக டோள்

௬௮ வலியா வறியா வுயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சு நெஞ்சினர் தோய்தற்
கெளியவோ வாயமக டோள்

௭௧ விலை*வேண்டா ரெம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத்,தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்

௭௪ ஆங்கு
(க)குரவை தழீஇயா மரபுளி பாடித்
†தேயா(உ)விழுப்புகழ்த் தெய்வம் பரவுது
மாசில்வான் முந்நீர் பரந்த தொன்னில
மாளுங் கிழமையொடு புணர்ந்த
வெங்கோ வாழியரிம் மலர்தலை யுலகே.

எ - து: அவ்விடத்தே அப்படிக்காட்டி (௩.)மயிலினதுகழுத்தை மாறுபடு கின்ற அணியப்பட்ட காயாம்பூவாற் செய்த கண்ணிகள் பவளம்போலும் நிறத்தையுடைய சிவந்தநிலத்தே மாறுபட்டுக்கிடக்கும் பொதுவரும் பெரிய புலித்திரளும் பெரிய களிற்றுத்திரளும் தம்முண் மாறுமாறாய்ப் பொருதாற்

க. "முல்லை நிலத்துக் கோவலர், பல்லா பயன்றருதற்கு மாயோன் ஆகுதிபயக்கும் ஆபல காக்கவெனக் குரவை தழீஇ மடைபல கொடுத் தலின் ஆண்டு அவன் வெளிப்படுமென்றார்" (தொல். அகத். ரு. ரு. நச்.) என்பது ஈண்டு அறிதற் பாலது.

உ. (அ) "புகழொத் தீயே யிகழுந ரடுநனை" (ஆ) "புகழ்ந்த வுற்றோர்க்கு மாயோ னன்ன, வுரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற" புறம். இசு: கங, ருஎ:உ-ங;(இ)"உரைசால் சிறப்பி னெடியோன்" சிலப். உஉ:௪௦,

ங. (அ) "கருநனைக் காயா கணமயி லவிழவும்" சிறுபாண். கசுரு. (ஆ) "புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை, மென்மயி லெருத்திற் றோன்றும்" குறுந். கஅங. (இ) "கலவ மாமயி லெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா" சீவக. கசுருஅ. எனவும், (ஈ) "பூவை மலர்புரை யெருத்து மஞ்ஞை" காஞ்சிப். கமுவாய்ப். கஅரு.(உ) "பறவாப்பூவை

(பிரதிபேதம்) * வேண்டாசரெம்மினதாயர், † தொய்யாவிழுப்புகழ்.

ஙசு யானுற்ற வெவ்வ முரைப்பிற் பலர்த்துயிற்றும்
யாமநீ துஞ்சலை மன்;

ஙஅ கதிர்கொள்ளு ஞாலந் துயிலாரா தாங்கண்
முதிர்பென்மேன் முற்றிய வெந்நோ யுரைப்பிற்
கதிர்கண் மழுங்கி மதியு மதிர்வதுபோ
லோடிச் சுழல்வது மன்;

சஉ பேரூர் மறுகிற் பெருந்துயிற் சான்றீரே
நீரைச் செறுத்து நிறைவுற வோம்புமின்
கார்தலைக் கொண்டு பொழியினுந் தீர்வது
போலாதென் மெய்க்கனலு நோய்;

சசு இருப்பினு நெஞ்சங் கனலுஞ் செலினே
வருத்துறும் யாக்கை வருந்துத லாற்றே
னருப்ப முடைத்தென்னு ளெவ்வம் பொருத்திப்
பொறிசெய் புனைபாவை போல வறிதுயங்கிச்
செல்வேன் விழுமமுழந்து;

ருக எனவாங்குப் பாட வருளுற்று;
வறங்கூர் வானத்து வள்ளுறைக் கலமாம்
புள்ளிற் கதுபொழிந் தாங்கு மற்றுந்தன்
னல்லெழின் மார்பன் முயங்கலி
னல்ல றீர்ந்தன் ளாயிழை பண்பே.

(க) இதுவுமது. இதற்கும் (உ) முன்னங் கூறிய உரையைக் கூறிக்கோள்க.

இதன் பொருள்.

உரைசெல வுயர்ந்தோங்கிச் சேர்ந்தாரை யொருநிலையே
வரைநில்லா விழுமமுறீஇ நடுக்குரைத்துத் தெறன்மாலை
யரைசினு மன்பின்றாங் காமம் புரைதீர
(ரு)வன்னமென் சேக்கையு ளாரா தளித்தவன்

க. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந் திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. கரு. நச்.

உ. இந்நூற்பக்கம் அஅகு-அஅக. பார்க்க.

ரு. (அ)"தூவி யன்னமென் சேக்கையுள்" (கலி. கரு: கஙு) என்பதும் (ஆ)

"இணைபட.........துணைபுண ரன்னத்தின் றூவிமெல் லணை" (கலி. எஉ· க-உ) என்பதும் (இ) அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

கலித்தொகை கசங.

துன்னி யகலத் துறந்த வணியளாய்
நாணு நிறையு முணர்கல்லா டோண்ணெகிழ்பு
(க)பேரம ருண்க ணிறைமல்க வந்நீர்தன்
கூரெயி(உ)றுடிக் குவிமுலைமேல் *வார்தரத்
தேர்வழி நின்று தெருமரு மாயிழை
கூறுப கேளாமோ† சென்று
எல்லிழாய்,(ரு)எற்றி வரைந்தானை நாணு மறந்தாளென்
‡றுற்றனிர் போல வினவுதிர் மற்றிது
கேட்டீமி னெல்லீரும் வந்து
வறந்தெற மாற்றிய வானமும் போலு
நிறைந்தென்னை மாய்ப்பதோர் வெள்ளமும் போலுஞ்
சிறந்தவன்(ச)றூவற நீப்பப் பிறங்கிவந்
தென்மே னிலைஇய நோய்

எ-து: ‖அரசன் தனக்குப் புகழ் உயர்ந்து நடக்கும்படியாகத் தம்மறிவான் மிக்குச் சேர்ந்த (ரு) அமைச்சரை முன்னர் நடுக்கமான மொழிகளைக் கூறிப் பின்னர் ஒரு படியிலே எல்லையில்லாத இடும்பைகளை உறுவித்துக் கொல்லுதலை இயல்பாகவுடைய கொடுங்கோலரசனிலுங்காட்டில், × கணவர்க்கு மகளிர்க் குண்டாகிய காமத்தாலும் அவர்மேல் நிகழும் அன்பு இல்லையாமாயிருந்தது; எங்ஙனேயென்னில் அவ்வாயிழை தன்றலைவன் அன்னத் தூவியாற் செய்த மெல்லிதாகிய சேக்கையிலே அளித்து இராக்காலத்தேவந்து துன்னிக்

கூரிய எயிற்றினீரை நகர்ந்து குற்றந் தீரத் தலையளிசெய்து நீங்குகையினுலே அத் தலையளியால் ஆராமல் தன்னை நீங்கின அணிகளை யுடையளாய்த் தனக்கியல்பாகிய நாணையும் நிறையென்னுங் குணத்தையும் தாங்குதல் ✚ வேண்டுமென்று அறியாளாய்த் தன் தோள் மெலிந்து பெரிய அமர்த்த

க. "பேரம ருண்கணின் ரேழு" கலி. கூ: கக.

உ. ஆடுதலென்பதற்கு நகர்தலென்னும் பொருள், "நெய்தற்று தமர்ந் தாடி" (கலி. எச: உ) என்றவிடத்தும் கூறப்பட்டிருக்கிறது.

ந. இந்நூற் பக்கம் ககரு: க-ஆம் குறிப்புப் பார்க்க.

ச. இந்நூற் பக்கம் எசஎ: ரு-ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. "புரைதவப் பயனேக்கார் தம்மாக்க முயல்வாரை, வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணேடா துயிர்வௌவு, மரைஇனுந் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ" (கலி. அ: கரு-கஎ.) என்பதும் இந்நூற் பக்கம் ருச: க-ஆம் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * வாராகத்தேர்வழி, † சென்று எற்றி, ‡ உற்றநீர்போல, || அரைசன்' × மகளிர்க்குண்டாகிய காமத்தாலும் கணவர்க்கவர்மே லிகழுமன்பு' ✚ வேணுமென்று.

ஐந்தாவது நெய்தல் உகூ. கூகூக

உண்கண் நீர்நிறைகையினுலே அந்நீர் தன் குவிந்த முலைமேலே வடியாநிற்க அவனைத் தேடுவேதோர்கூற்றிலே நின்று மனம் சுழலாநிற்கும்; இனி யாம் இவளிடத்தே சென்று இவள் கூறுவனவற்றைக் கேளாது * இருப்பேமோ? கேட்கக்கடவேமென்று நம்மிலே கூறி என்னிடத்தே வந்து எல்லிழாயென்று என்னை விளித்து, பிரியேன் என்று பிரிதலை வரைந்தவனைப் பிரியானெனத் துணிந்து அவன் பிரிதலின் நாணையும் மறந்தாள் என்று கூறி எனக்கு அன்புற்றீர்போல நீ என்னுற்றனை என்று வினவுகின்றவர்களே! பின்னை இவ் வருத்தத்தை எல்லீருங் கேட்பீராக என்று கூறுகின்றவள், (க) எனக்குச் சிறந்

தவன் என்வலியறும்படி என்னைக் கைவிடுகையினாலே பெருகிவந்து என்மேல் நிலைபெற்ற இக் காமநோய். கோடை(௨)உலகத்தைச் சுடும்படியாகப் (௩)பெய்யாமற்போன மேகம் வருத்துமாற்றையும்போலும் ; பெருகி என்னுயிரைப் (௪) போக்குவநோர் நீர் வெள்ளம் வருத்துமாற்றையும் போலும் ; என்றுகூறினாள். எ - று.

௧௮ நக்கு நலனு மிழந்தா ளிவளென்னுந்
தக்கவிர் போலு மிழந்திலேன் மன்னோ
† மிக்கவென் னாணு நலனுமென் னுள்ளமு
மக்கா லவனுழை யாங்கே யொழிந்தன
(௫)வுக்கா ணிலைநோ வுடம்புயிர்க் கூற்றாகச்
(௬)செக்கரம் புள்ளித் திகிரி யலவனொடியா
னக்கது ‡பன்மா ணினைந்து

---

௧. "சிறந்தானை வழிபடீஇ" (கலி. ௯: ௨௩.) என்பதும் அதன் உரையும் அதன் குறிப்பும் பார்க்க.

௨. (அ) "வானக், துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின், னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே" (கலி. ௨௫: ௨௭-௨௯) என்பதும், (ஆ) அதன் குறிப்பும் (இ) "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத், துண்ணின் றுடற்றும் பசி" (குறள். ௧௩.) என்பதும் நோக்குக.

௩. (அ) "கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்...........எல்லா வுயிர்க்கு மில்லரல் வாழ்க்கை" புறம். ௨௦௩: ௧-௩; (ஆ) "பெயற்பான் மழைபெய்யாக் கண்ணும்........என்னையுலகுய்யுமாறு" நாலடி. ௯௭.

௪. (அ) "நீர்மிகிற் சிறையு மில்லை" புறம். ௫௧: ௧; (ஆ) "நீர்மிகி னில்லை சிறை" பழ. ௧௯௦; (இ) "சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழீஇ" மணி. ௫: ௧௧; (ஈ) "சிறையென்ப தில்லை செவ்வே செம்புனல் பெருகு மாயின்" ஆனா. கல்யாண. ௧௫௫.

௫. இந் நூற் பக்கம் ௫௩௮: ௫-ஆம் குறிப்பும் "இவ்விருந்த சான்றீர்" கலி. ௧௩௩: ௩-௪ என்பதும் இங்கே அறிதற்பாலன.

௬. "செக்கர் ஞெண்டின்" அகம். ௨0: ௪.

பிரதிபேதம்) * இருப்போமோ, † மிக்கவே காணும், ‡ பன்மாணின்க்கு.

௬௩௪ கலித்தொகை ௧௪௪.

எ - து: அங்ஙனங்கூறி, அவன் அன்பிலனாதலை அறியாதே அவனோடே புணர்ந்து தன் அழகினையும் நாணினையும் உள்ளத்தினையும் இவள் இழந்தாள் என்னுந் தகுதிப்பாட்டினை யுடையீர்போலே இருந்தீர்; அவன் அன்பில னல்லன்; அஃதென்னையெனில், அவன் இந்த * உடம்பினின்று போகின்ற உயிர்க்கு உறுதியாம்படி, சிவந்தநிறத்தினையும் புள்ளிகளையுமுடைய தேருருள் போன்ற ஆண்பால் அலவன் பெண்பால் அலவனோடே நிகழ்த்துகின்ற பல மாட்சிமைகளையும் யான் நின்னிடத்தே நிகழ்த்தும்படி நின்னெஞ்சாலே நினைந்து அவை நிகழ்த்துகின்றவற்றையும் அவ்விடத்தே பாராய் என்றான்; அதனால், அவனன்புடைமை யறிந்தே யான் அவனோடு(கூ)†டினக்க து; அக்காலத்தே என்னாணும் என்னலமும் என்னுள்ளமும் புணர்ச்சியான் மிகுதியைப் பெற்றன; அவை அவன் நீங்கிய அப்பொழுதே அவனிடத்தே நின்று விட்டன; ‡ ஆதலாற்றான் நோயும் மிகவுறும்; அவற்றை இகந்த தன்மை யுடையேனல்லேனென்று கூறினாள். எ - று.

௨௫ கரைகாணு நோயு ளழுந்தா தவனைப்
புரைதவக் கூறிக் கொடுமை நுவல்வீர்
வரைப்வ ||னென்னி னகலா (௨)னவனைத்
திரைதரு × முந்நீர் (௩)வளா அக மெல்லா
நிரைகதிர் ஞாயிற்றை நாடென்றேன் யானு
முரைகேட் புழியெல்லாஞ் செல்வேன் புரைநீர்ந்தான்

யாண்டொளிப் பான்கொல்லோ மற்று

எ-து : அங்ஙனங் கூறி என்னைப்போல ஓர் எல்லைகாணாத காமநோயிலே மூழ்காதவனை உயர்ச்சி கெடும்படி அவன் பிரிந்து நாண்முதலியவற்றைத் தாராத கொடுமையை நாடி அவன் வந்த ✝காலத்தன்றே நீ இவை பெறுவது என்று கூறுகின்றவர்களே! யான் நிரைத்த கதிர்களையுடைய ஞாயிற்றை நோக்கித் திரையைத் தருகின்ற கடல்சூழ்ந்த உலகமெல்லாந் தேடி அவனைக் கொண்டு வா என்றுஞ் சொல்லிவிட்டேன்; அதுவேயன்றி யானும் அவன்

க. நக்கது - புணர்ந்தது; இச்சொல் இப்பொருளில் வருதல் (அ) "அவர் நக்கதன் பயனே" "நக்கு நலனுமிழந்தாள்"(கலி. கரு௭: எ; க௪௬: கஅ) என்பவற்றினுரையாலும் துணியலாகும்.

உ. "ஆங்கெதிர் நோக்குவன் ஞாயிறே யெங்கேள்வன், யாங்குள னாயினுங் காட்டீமோ" கலி. க௪எ: உஎ-உஅ.

௩. (அ) "தெண்கடல் வளாகம்" புறம். கஅக. க; (ஆ) "கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து" சிலப். அ: உக; (இ) "காமநீர் வரைப்பி னுனில வளாகமும்" சிதம்பர மும்மணிக். க: உ.

(பிரதிபேதம்) *, உடம்பினின்றும் போகின்ற, † நக்கயக்காலத்தே, ‡ ஆதலாலதன்றேவும் || என்னிலகலான், × முன்னீர்வளாகமெல்லா, ✝ காலத்ததன்றே.

இவ்விடத்தான் என்னும் வார்த்தை கேட்கலாம் இடமெல்லாஞ் சென்று தேடுவேன்; இங்ஙனந் தேடுமளவின் உயர்ச்சிதீர்ந்தவன் பின்னை எவ்விடத்தே ஒளித்திருப்பான்? அவனை அகப்படுத்திக் கொண்டு அந்நாண் முதலியன வாங்கியே விடுவேன்; என்னை நெஞ்சாலே வளைத்திருக்கின்றவன் என்னிடத்தினின்று நீங்கான்; என்றுங் கூறினள். எ - று.

கொல்லும் ஓவும், அசை.

௬௨ மருள்கூர் பிணைபோன் மயங்கவெங் நோய்செய்யு
மாலையும் வந்து மயங்கி யெரிநுதி
யாமந் தலைவந்தன் றாயி னதற்கென்னேய்
பாடுவேன் பல்லாருட் சென்று

௬௩ யானுற்ற *வெவ்வ முரைப்பிற் (க)பலர்த்துயிற்றும்
யாமநீ துஞ்சலை மன்

எ - து: அன்னனம் † கூறிய அளவிலே மாலையும் இரவும் வருகின்றதனை உணர்ந்து, மயக்கமிக்க மான்பிணைபோல யான் மயங்கும்படி வெவ்விய காம நோயை உண்டாக்கும் மாலைக் காலமும் ‡ வந்து அதனோடே மயங்கி எரியின் கொழுந்துபோற் கொடிய இராக்காலமும் ‖ அவ்விடத்தே வந்ததாயின், அத னிடத்தே யான் பட்ட வருத்தத்தை என்னைப்போல வருந்தும் பலமகளிருக் குள்ளே சென்றுகூறவேன்; நினக்கு முறைப்பட்டுக்கூறிற் பலரையுந் துயிலப் பண்ணும் இராக்காலமே! நீ தானும் மிகவும் வருந்தித் × துயில்கொள்ளாய்; ஆதலால் என்னேயை நினக்குச் சொல்லேனென்றேனென்றும் கொடுமை நுவல்கின்றவர்களை நோக்கிக் கூறினள். எ - று.

௬௮ எதிர்கொள்ளு ஞாலந் ÷ துயிலாரா தாங்கண்
முதிர்பென்மேன் முற்றிய வெங்நோ யுரைப்பிற்
கதிர்கண் மழுங்கி மதியு மதிர்வதுபோ
லோடிச் சுழல்வது மன்

எ - து: அன்னனங் கூறியபின்னர்த் திங்கள் வருத்துமென் றுணர்ந்து ஞாலத்தி + லுள்ளாரால் அவ்விசும்பிடத்தே (உ) பிறையானபருவத்தே எதிர்

க. "மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்குல்" (கலி. ௬௯: ௩) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "தொழுதுகாண் பிறையிற் றோன்றி" (ஆ) "பலர் தொழச், செவ்வாய் வானத் தையெனத் தோன்றி, யின்னம் பிறந்தன்று பிறையே" குறுந். கஎஅ; ந.0எ. (இ) "அப்பிறை, பதினெண் கணனு

(பிரதிபேதம்) * எவ்வமுறைப்பின். † கூறினவளவிலே. ‡ வந்தது; அதனோடே. || இவ்விடத்தே வந்ததால் யான் தன்னிடத்தே பட்ட, × துயில்கொள்ளாயென்று என்னேயைச் சொல்லுயேனென்றும், ÷ துயிலாதார் தாம், ✝ உள்ளார் அவ்.

கொள்ளப்பட்டுப் பின்பு முதிர்ந்து யான் துயிலாராமல் என்மேல் வந்து வளைத்த மதியும் யானுற்ற வெவ்வியநோயை முறைப்பட்டுக்கூறின் தன்கதிர்கள் ஒளி மழுங்கி நடுங்குவதுபோலே ஓடி மிகவுஞ் சுழன்று திரியும்; ஆதலான் நுமக் கன்றி அதற்கும் என்னேயைக் கூறேனென்றும் கூறினுள். எ - று.

சஉ. பேரூர் மறுகிற் பெருந்துயிற் சான்றீரே
நீரைச் (க்)செறுத்து நிறைவுற வோம்புமின்
(உ)கார்தலைக் கொண்டு பொழியினுந் தீர்வது
போலாதென் மெய்க்கனலு நோய்

எ - து: அங்ஙனங் கூறி, பெரிய ஊரில் தெருவிலே யான் உறுகின்ற வருத்தத்திற்குப் பரிகாரஞ் செய்யாமற் பெரிய உறக்கத்தைக் கொள்ளக் கருதிய சான்றீரே! என்மெய்க்கண் நின்று எரியுங் காமநோய் மழையெல்லாம் என்னிடத்தே நின்று பெய்யினும் ஆறுவது * போல இருக்கின்றதில்லை; இது தணியும்படி உலகத்துள்ள நீரை என்னிடத்தே நிறையும்படி அடைத்து வைத்து என்னுயிரைப் பாதுகாப்பீராக என்றும் கூறினுள். எ - று.

சங. இருப்பினு நெஞ்சங் கனலுஞ் செலினே
வருத்துறும் யாக்கை வருந்துத லாற்றே

(௩)னருப்ப முடைத்தென்னு ளெவ்வம் பொருந்திப்
பொறிசெய் புனைபாவை போல வறிதுயங்கிச்
செல்வேன் விழும முழந்து

மேத்தவும் படுமே" புறம். ௧: ௯-௧௦. (ஈ) "ஒள்ளிழை மகளி ருயர்பிறை தொழூஉம், புல்லென் மாலை" அகம். ௨௩௯: ௯-௧௦.

௧. "செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்" நாலடி. ௨௨௨.

௨. "கனையிருள் வானங் கடன்முகந் தென்மே, லுறையொடு நின்றீயல் வேண்டு மொருங்கே, நிறைவளை கொட்பித்தான் செய்த துயரா, விறையிறை பொத்திற்றுத் தீ" கலி. ௧௪௫: ௫௫-௫௮.

௩. அருப்பம் - அருமை; இது பண்பாகு பெயராய் அரிய அரணை உணர்த்திற்று; இது (அ) "வேட்டுப் புழை யருப்ப மாட்டி" முல்லை. ௨௬. (ஆ) "அம்புமி ழயிலருப்பம்" மது. ௬௭. (இ) "அரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய" மலை. ௩௭௮. (ஈ) "வீங்கு சிறை வியலருப்பம்" (உ) "அருப்பம் பேணா தமர்கடந்ததூஉம்" புறம். ௧௭: ௨௮; ௨௨௪: ௧. என்புழியும் இப்பொருளில் வருதல் காண்க. இச்சொல்லை, இட்டம், ஒட்டம், நுட்பம், செப்பம், வெப்பம், தறுகட்பம் என்பவற்றொடு ஒப்பு நோக்குக. அருப்பம், திண்மை யென்பாருமுளர்.

(பிரதிபேதம்) *போலே.

எ-து: அங்ஙனங் கூறிப் பின்னர்த் தன்னோயின் செய்தி கூறுகின்றவள், அவன் என்னெஞ்சிடத்தே விடாமலிருப்பினும் அதனால் அமையாது தான் காந்தாநிற்கும்; அவன் ஒருகாற்போயின் தான் அதற்கு வருத்தமுறாநிற்கும்; * அங்ஙனம் என்னெஞ்சு †வருந்துதலை ஆற்றேனாய்ப் (௧) பலவுறுப்புக்களையுங் கூட்டி இயங்குவதோர் பொறியாகச் செய்த புனைந்த பாவைபோல, இம்மையிலே அழுந்தி மயங்கிய யாக்கையோடே ‡ சிறிதுசெல்வேன்; அதனால் தணியாத என்னிடத்து உண்டாகிய எவ்வமானது பிறரால் அழித்தற்கு அரிய அரணின் றன்மையையுடைத்து; இவ்வரணை அழிக்கலாவதோர் உபாயம் நாடுவீராக; என்றும் கூறினாள். எ - று.

௫௧ எனவாங்குப் பாட வருளுற்று

வறங்கூர் வானத்து(௨)வள்ளுறைக் ‖ கலமரும்

---

௧. "பல்கிழி யும்பயி னுந்துகி லாலொடு, நல்லரக் கும்மெழு குந்நலஞ் சான்றன, வல்லன வும்மமைத் தாங்கெழு நாளிடைச், செல்வதோர் மாமயில் செய்தன னன்றே." என்பது நோக்குக; சீவக. ௨௩௫.

௨. வானம்பாடியின் இயல்பை (அ) "துளிநசை வேட்கையான் மிசை பாடும் புள்ளிற்றன், னளிநசைஇ யார்வுற்ற வன்பினேன் யானாக" (கலி. ௪௬ : ௨௦-௨௧) என்பதனாலும் (ஆ) அதன் குறிப்பாலும் (இ) "வானம் பாடி வறங்களைந் தானாது, அழிதுளி தலைஇய புறவில்" ஐங். ௪௧௮. (ஈ) "பொறிவரி, வானம் வாழ்த்தி பாடவு மருளாது, துறை துறந் தெழிலி நீங்கலின்" அகம். ௬௭: ௧-௩. (உ) "நீரிடும்பை, புள்ளி னுளோங்க லறியும்" நான்மணி. ௬௬. (ஊ) "துளியுண் பறவைபோற் செவ்வனோர்ப் பாரும்" பழ. ௨௮௭; (எ) "தற்பாடு பறவை பசிப்பப் பசையற, நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச், சிறை வெண் டலைச் சிறுபுன் பொண்மூ, மழைகா லூன்று..........கொடுங்கோல்

வேந்தன் காக்கு நாடே" ஆசிரியமாலை. (எ) "சாதக முரல் குரல் வாய்மடை திறப்ப.........எழுந்தனர்" கல். கஅ: கஎ-ஙo. (ஐ) "வானத்தின் றுள்ளி யல்லால் வருந்தினும் விரும்பல் செல்லா, மானத்தை யுடைய புள்ளின்" மேரு. கஉக. (ஒ) "கொண்டல்பே ரொலியினுற், றூவிலா மகிழ் வுறுஞ் சாதகத் தன்மையாய்" (ஓ) "கொண்டல் கண்டிடு சாதகம் போலுளங் குளிர்ந்தார்" கந்த. திருவவ தார. ஙo; அக்கினிமுகா. உஉச. (ஔ) "துன்னிய சாத கம்போற் சூழ்ந்துநோக் குநர்கட் கெல்லாங், கன்னியந் துழாய்மி லைந்த கரு முகில் கடைக்க ணோக்கான், மன்னிய கருணை வெள்ள மழைநனி வழங்கு மென்பார்" பாகவதம். (க) கண்ணபிரான் றுவரை. ஙo. (ஃ) "மழையை நோக்கிய, சாதக மெனத்தகை யாளு மன்னவன், போதன தடிமலர் புந்தி நாடு, காதலிற் பூசையுங் கண்டு வந்தனன்"

(பிரதிபேதம்) * இங்ஙனம், † வருந்துதலே, ‡ சிறிதே நிற்பேன், || அலம்வரும்.

புள்ளிற் கதுபொழிந் தாஅங்கு மற்றுத்தன்
னல்லெழின் மார்பன் முயங்கலி
னல்ல றீர்ந்தன் றாயிழை பண்பே

எ - து: என்று அவ்விடத்தே சொல்லாநிற்க, கோடைக்கால மிக்க வானத்திடத்தே மேகத்தினது வளவிய துளியைப் பெறுதற்குச் சுழன்று திரியும் வானம்பாடிக்கு அம்மேகம் பெய்தாற்போலத் தன்னுடைய நல்ல அழகையுடைய மார்பன் அருளுதலுற்று வந்து முயங்குகையினாலே ஆயிழையுடைய அல்லலாகியகுணம் போயிற்று; என்று கண்டார் வியந்து தம்மிற் கொண்டுகூறிற்றாக உரைக்க.

இது, கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'என்மே னிலேஇய நோய்' என்னுந் துணையும் கூறத் தகாதன கூறலின் மடனிறந்தவாறும், * 'இழந்திலேன்மன்னோ' என வருத்தந் தோன்றாமற் கூறலின் வருத்தமிறந்தவாறும் 'ஞாயிற்றை நாடென்றேன்' என்றதனைத் தான் வியவாமையின் மருட்கையிறந்தவாறும் 'என்னானு நலனும்' என்றும் மான் பிணைபோன்ற யான் இப்பொழுது 'மருள்கூர் பிணைபோன் மயங்க' என்றும் வனப்புமிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடிவந்ததரவும் ஐஞ்சீரடுக்கிய இடைநிலைப்பாட்டும் 'எனவாங்குப்பாடவருளூற்று' என முச்சீரான் வந்த சொற்சீரடியும் வந்து ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற கலிவெண்பாட்டு. (௨௯)

(௧௪௭.) ஆறல்ல மொழிதோற்றி யறவினை கலக்கிய
தேறுகண் ணறவுண்டார் மயக்கம்போற் காமம்
வேறொருபாற் றூனது கொல்லோ சிறடிச்
சிலம்பார்ப்ப வியலியா ளிவண்மன்னோ வினிமன்னும்
புலம்பூரப் புல்லென்ற வனப்பினாள் விலங்காக
வேனுதி யுறநோக்கி வெயிலுற வுருகுந்தன்
றேனல முண்டானைக் கெடுத்தாள்போற் றெருவிற்பட்
டேன்யாது மிலளாகி யுயிரினுஞ் சிறந்ததன்
னாண்யாது மிலளாகி நகுதலு நகூஉ மாங்கே
பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉந் தோழியோ
ரொண்ணுத லுற்ற துழைச்சென்று கேளாமோ;

விநாயக. மகோற் கடர். ௭௧௧. (அஅ) "மழைமுகி லடுப்பச் சாதகக் குருகு வாஞ்சையிற் றளிமடுத் தாங்கு" திருவாவினன்குடிப். தீர்த்த. ௩௦. என்பவற்றாலும் அறிக.

(பிரதிபேதம்) * இழிந்திலேன்.

௧௨. இவர்யாவ ரேமுற்றூர் கண்டீரே யோஒ
வமையுந் தவறிலீர் மற்கொலோ நகையின்
மிக்கதன் காமமு மொன்றென்ப வம்மா

புதுநலம் பூவாடி யற்றுத்தாம் வீழ்வார்
மதிமருள நீத்தக் கடை;
௧௭ என்னையே மூசிக் கதுமென நோக்கன்மின் வந்து;
௧௮ கலைஇய கண்புருவந் தோளுசுப் பேனர்
சிலமழைபோ ரூழ்ந்திருண்ட கூந்த லவற்றை
விலைவன மாற வறியா தொருவன்
வலைபகப் பட்டதென் னெஞ்சு;
௨௨ வாழிய கேளிர்;
௨௩ பலவுஞ்சூ டேற்றித் தெளித்தவ னென்னை
முலையிடை வாங்கி முயங்கின னீத்த
கொலைவனைக் காணேன்கொல் யான்;
௨௬ காணினு மென்னை யறிதிர் கதிர்பற்றி
யாங்கெதிர் நோக்குவன் ஞாயிறே யெங்கேள்வன்
யாங்குள னாயினுங் காட்டீமோ காட்டாயேல்
வானத் தெவன்செய்தி நீ;
௩௦ ஆரிரு ணீக்கும் விசும்பின் மதிபோல
நீருள்ளுந் தோன்றுதி ஞாயிறே யவ்வழித்
தேரை தினப்பட லோம்பு;
௩௩ நல்கா வொருவனை நாடியான் கொள்வனைப்
பல்கதிர் சாம்பிப் பகலொழியப் பட்டீமோ
செல்கதிர் ஞாயிறே நீ;

அரூஉ வின்றிமுன் கைக் கொட்கும்
பரூஉப் பருந்தின்கட் பற்றிப் புணர்ந்தான்
கரூஉ வெருமைய காடிறந் தான்கொல்லோ
வுரூஉத் தகைசெய்திவ் வூருள்ளான் கொல்லோ
செரூஉ துளகுயிற் கொள்வே னவனைப்
பெரூஉதியா னேவே னவனையெற் காட்டிச்
சுரூஉக் கொடியான் கொடுமையை நீயு
முரூஉ வரைசநின் னேலைக்கட் கொண்டீ

௯௦ கலித்தொகை ௧௪௧

மரூஉ வரைசநின் மாலையும் வந்தன்
றரூஉ தணிக்கிந் நோய்;
தன்னெஞ் சொருவற் கிணைவித்தல் யாவர்க்கு
மன்னவோ காமநின் னம்பு;
கையாறு செய்தானைக் காணிற் கலுழ்கண்ணாற்
பையென நோக்குவென் றாழ்தானை பற்றுவே
னையக்கொண் டென்னை யறியான் விடுவானே
லொய்யெனப் பூச லிடுவேன்மன் யானவனை
மெய்யாகக் கள்வனோ வென்று;
வினவன்மி னூரவி ரென்னையெஞ் ஞான்று
மடாஅ நறவுண்டார் போல மருள
விடாஅ துயிரொடு கூடிற்றென் னுண்கண்
படாஅமை செய்தான் றொடர்பு;

டுள கனவினுற் காணிய கண்படா வாயி
னனவினான் ஞாயிறே காட்டாய்நீ யாயிற்
பனியீன்ற மாலூர்ந் தவன்வரக் காமன்
கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு;
எனவாங்கு;

கூ உ கண்ணினைபு கலுழ்பேங்கின
டோண்ஞெகிழ்பு வளைநெகிழ்ந்தன
ளன்னையோ வெல்லீருங் காண்மின் மடவரன்
மென்னடைப் பேடை துணைதரத் தற்சேர்ந்த
வன்னவான் சேவற் புணர்ச்சிபோ லொண்ணுதல்
காதலன் மன்ற லவனை வரக்கண்டாங்
காழ்துயர மெல்லா மறந்தனள் பேதை
நகையொழிந்து நாணுமெய் நிற்ப விறைஞ்சித்
தகையாகத் தையலாள் சேர்ந்தா ணகையாக
நல்லெழின் மார்ப னகத்து.

(க) இதுவுமது. இதற்கும் (உ) முன்னங் கூறிய உரையைக் கூறிக்கொள்க.

க. இச்செய்யுளும் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாகிய பெருந்திணைக்கு மேற்கோள்; தொல். அகத். சூ. கங. நச்.

உ. இந்நூற்பக்கம் அஅடு-அஅசு. பார்க்க.

போலப் பொருது ஏற்றைத் தழுவிக்கொண்டு சேரத் தொழுவை விட்டுப் போனார்; அவர் போன அப்பொழுதே நெருங்கிய இதழ்களையுடைய மலர்போலும் உண்கண்ணினையுடைய காதலையுடைய மகளிரும் அவர்

கணவரும் வலியுற்றுத் தாதாகிய எருவையுடைய மன்றத்திலே குரவைக் கூத்தை ஆடுவார்கள்; ஆண்டு யாமுஞ் சென்று அக்குரவைக்,கூத்தின் கண்ணே கூடிக் கொல்லுகின்ற ஏற்றினுடைய கோட்டிற்கு அஞ்சும் பொது வனை மறுபிறப்பினும் ஆயர்மகள் தழுவாளென்றும், ஆயர்மகள் தோள், அஞ் சாராய் உயிரைத் துறந்து கொலைத்தொழிலையுடைய ஏற்றைக்கொள்பவர் *செறியுமவையல்லது வருந்துகல்வர்து தழுவுதற்கு நெஞ்சில்லாதவர்கள் செறிதற்கரியவென்றும், உயிராவது ஒரு காற்றாக உணராதே அதனைக் காவல்கொண்டு †அதனுடனே ஒரு செறிவாயேற்றின் மருப்பினை அஞ்சும் நெஞ்சினையுடையார் செறிதற்கு ஆயர்மகளிருடைய தோள் எளியவாயிருக்கு மோவென்றும், கொலைத் தொழிலையுடைய ஏற்றினது கொம்பினிடை யிலே தாம்விரும்பும் மகளிருடைய மார்பின் முலையிடையிலே விழுமாறு போல வீழில், எம்முடைய இனத்தில் ஆயர் தத்தம் மகளிர்க்கு ‡முலைவிலை வேண்டாரென்றும், யாம் சுற்றத்தார்கூறும் முறைமையைப் பாடிக் குரவைக் ||கூத்தாடி அவ்விடத்துக் குற்றமில்லாத அழகையுடைய கடவிடத்தே பரந்து கிடக்கின்ற பழைய நிலத்தையாளும் உரிமையோடே பொருந்தின எம் முடைய பாண்டியன் இந்த அகன்ற இடத்தையுடைய உலகின்கண்ணே வாழ்வானாகவென்று அவ்விடத்துக் ÷கெடாத சீரிய புகழையுடைய தெய்வத் தைப் பரவுவோம்; நீயும் அங்ஙனம் பாடுதற்குப் போதுவாயாகவென்றாள். எ-று.

"மரபுநிலைதிரியா" என்னும் (க)சூத்திரத்து "விரவும்பொருளும் விரவும்" என்றதனால், குரவையாடல் ஏறுகோடற்கைக்கிளையுள் விராய்வருமென்றும் தெய்வத்தையன்றி அரசரை வாழ்த்திய வாழ்த்தும் விராய்வருமென்றுங் ╋கூறலின் இங்ஙனங்கூறினர். இவ்விதி இவ்வாறே மேல் × வருவனவற்றிற்குங் கொள்க.

இதனால, தலைவிக்கு ** நினைதல் பிறந்தது.

இது "குட்ட மெருத்தடி††யுடைத்து மாகும்"(உ) என்பதனாற்கூட்டம்பட்ட தாவும் 'புரிபுரிபு ....வேறு' என இரண்டடி முடுகியலும், 'அரிபரி

மலர்த்தனைய பசியகழுத்து மயில்" உத்தரகோச. தீர்த்தச்சிறப்பு. ௬௧ என்வும் வருவன இங்கே நோக்கற்பாலன.

க. தொல். அகத். சூ. ௬௫. இச்சூத்திரத்தின் இவ்வுரையில் இக்குறிப்பி லுள்ள செய்திகளோடு 'விரவும் பொருள் விரவும்' எனவே ஆய்ச்சியர் குரவைக்கூத் தல்லது வேட்டுவரிக்குரிய வெறியாட்டு விரவாதென் றுணர்க' என்னுஞ் செய்தியும் காணப்படுகின்றது.

உ. தொல். செய். சூ, ககசு.

(பிரதிபேதம்)* செய்யுமதல்லது, † அத்துடனே. ‡மூலையிலே வேண்டார், || கூத்தையாடி யவ்விடத்து, ÷ கொடாத சிறிய, × கூறவிக்கனைக் கூறினர், ✝ வருவ வற்றிற்கும், ** கினைத்தல். †† உடைத்துமென்றதனால், குட்டம் தாவும்.

இதன் பொருள்.

ஆறல்ல மொழிதோற்றி யறவினை கலக்கிய
தேறுக ணறவுண்டார் மயக்கம்போற் காமம்
வேறொரு† பாற் றொனது கொல்லோ சீறடிச்
சிலம்பார்ப்ப வியலியா ளிவண்மன்னே யினிமன்னும்
புலம்பூரப் புல்லென்ற வனப்பினாள் விலங்காக
வேனுதி யுறநோக்கி வெயிலுற வுருகுந்தன்
(க)றேணல முண்டானைக் கெடுத்தாள்போற் ‡ றெருவிற்பட்
டேண்யாது மிலளாகி (உ)யுயிரினுஞ் சிறந்ததன்
னாண்யாது மிலளாகி (௩.) நறுநுத னகூஉ மாங்கே
பெண்மையு மிலளாகி யழுதனு மழூஉந் தோழிபோ
ரொண்ணுத லூற்ற துறைச்சென்று மீகளாமோ
இவர்யாவ ரேமுற்றார் கண்டீரே யோஒ
வமையுந் தவறிலீர் மற்கொலோ நகையின்
மிக்கதன் காமமு மொன்றென்ப வம்மா

புதுநலம் பூவாடி யற்றுத்தாம் வீழ்வார்

மதிமருள நீத்தக் கடை

கஎ என்னையே மூசிக் (ச) கதுமெனை நோக்கன்மின் வந்து

எ-து: தோழ்! அறநெறியல்லாத தீமொழிகளைத் தம்மிடத்தே தோற்றுவித்து அறமாகிய தொழில்களைத் தம்மிடத்துத் தோன்றுமற் கலக்கவேண்டித் தெளியுங்(ந)கள்ளையும் ஈரவையும் உண்டவர்களுடைய உலகியல் கெட்ட மயக்கம் போல (ரு) நன்மக்கள் ஆற்றுகின்ற காமம் உலகியல் தப்பி வேறோர்

க. "தோளைவ மூண்டு துறக்கப் பட்டோர்" (கலி. உ௩: அ.) என்பதும் அதன் குறிப்பும் ஒப்பு நோக்குக.

உ. (அ) "சிறந்ததன் ஞணும்"(கலி. கஈகு: க0)என்பதும்(ஆ)அதன்குறிப்பும் (இ) "உயிரினுஞ் சிறந்த நாணு நனிமறந்து" நற். கஎ: அ. என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலன.

௩. "உண்ணலு முண்ணேன்" (கலி. உ௩: எ.) என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ச. இந்நூற் பக்கம் சஉஉ: எ-ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. "கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து, மெய்யறி யாமை கொளல்" குறள். கூ௨ரு.

சு. "காமமீ ராழி, யடக்குமா றுள்ளத் தவன்" நள. சுயம். ௬அ.

(பிரதிபேதம்) * தேற்றி யறவினைக்கலக்கிய. † பாலாற்றுனது, ‡ தெருவுள்பட்டு.

கூசஉ கலித்தொகைக் குறிப்பு.

பசுதியாய் விட்டதோ? அதற்குக் காரணமென்னெனில் இப்பொழுது மிகவும் தன் கணவனில்லாத தனிமைபரக்கையினாலே பொலிவழிந்தஅழகினையுடைய ளாகிய இவள் வேனுதி செய்யுங் கொடுமையையுறும்படி எதிரேநோக்காதே விலங்குதலுண்டாக நோக்குகையினாலே நெஞ்சுருகுங் கணவனைக் கெடுத்தாள் போலே தெருவிலே புறப்பட்டு வெயில் தன்மேலே உறும்படி தன் சிறிய அடியிற் சிலம்பு ஒலிப்ப எங்குந் திரிதரும் நிலைமையளாயினாள்; அதுவேயன்றி ஊண்சிறிதுமிலளாய் மேனி மெலிந்து உயிரினுஞ் சிறந்த நாணும் சிறிதுமில ளாய் நகுதலையுஞ் செய்யாநிற்கும்; அப்பொழுதே பெண்டன்மையுமிலளாய் அழுதலையுஞ் செய்யாநிற்கும்; இதனை நெஞ்சாலே தூர்ந்துபார்; அங்ஙனம் ஓர்ந்து பார்த்து இவளுற்ற வருத்தத்தை யாம் இவ்விடத்தே சென்று கேளா மோ? கேட்போம் என்று கூறி மொய்த்துக் கடுகவந்து என்னைப் (க) பாராதே கொள்ளுங்கோள்; நுமக்கு முன்னே வந்து என்னைச் சூழ்ந்துநின்ற இவரைக் கண்டீரே; ஒஒ! இவரே சூழ்ந்துநிற்க அமையும்; நீர்தாம் இதற்கு முன்பு *மிகவும் யானுற்ற தவறுடையீரல்லீர்போலேயிருந்தது, நுமக்கும் ஒருகாலத்தே உண்டாம்; இனி யான் கூறுவதனைக் கேட்பீராக; தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமும் ஒருகாமம் என்று (உ) நூல்களிலே கூறுவர்கள்; ஆதலால் அதனை யுற்றுநின்ற என்னை இகழாதே கொள்ளுங்கோள்; ஈண்டு எழுதற்றுரியார் யாரீதேமுற்றதென்று தாம் விரும்பப்பட்ட ஆடவர் தம்மதி மயங்கும்படி கைவிட்டவிடத்து அவர்பெற்ற நலங் கெடுகின்ற தன்மை (ந) பூ வண்டு நுகர்ந்து தன் புதிய நலம் சிறிது கெட்ட நிலைமைத்து; காணுங்கோளென்று கூறினாள். எ - று.

(ஈ) நறவு, தேனாற் †சமைத்தமைத்தது. ஆற்றுதல் - நடத்துதல்.

நோக்கி என்ற எச்சம், காரண காரியப்பொருட்டு. தோள் நலத்தைப் ‡ புணர்ந்தவன், ஒருபெயர் மாத்திரையாய் நின்றது. இவரை என்னும் இரண் டாவது || "ஒழியாது வருதலும்" (ஈ) என்பதனான் ஒழிந்தும் நின்றது; ஓஒ, இரக்கக் குறிப்பு.

க. "புறப்பற்றுத், தள்ளுங்கோ ளூரவித் ரூமேர் தான்பன்னி, கொள்ளுங் கோ ளூர்மருவுங் கோல்" நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி. ருஅ.

உ. "தேறுத லொழிந்த காமத்து மிகுதிற, மிக்க காமத்து மிடலொடு தொகைஇச், செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே" தொல். அகத். சூ. ருக.

ந. இந்நூற்பக்கம், உகூச: ச-ஆம் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருந்துபவை ஒப்பு நோக்கற்பாலன.

ச. நறவென்பது கள்ளின் பொதுப் பெயராயும் வரும்.

ரு. தொல். தொகைமரபு. சூ. கரு.

பிரதிபேதம்) *மிகவுமயரிறுற்ற, †சமைத்தது, ‡தகர்ந்தவன்ஒரு, || ஒழியாதென்பதனுல்.

ஐந்தாவது நெய்தல் ரு.0

கூசரு

கஅ கலிஇய கண்புருவந் தோனுசுப் பேஎர்
சிலமழைபோ ரூழ்ந்திருண்ட கூந்த லவற்றை
விலைவள மாற வறியா தொருவன்
வலையகப் பட்ட தென் னெஞ்சு
உஉ வாழிய கேளிர்
உரு பலவுஞ்சூ டேற்றித் தெளித்தவ னென்னை
முலையிடை வாங்கி முயங்கின னீத்த
(க) கொலைவனைக் காணேன்கொல் யான்
உசு காணினு மென்னை யறிதிர் கதிர்பற்றி
யாங்கெதிர் நோக்குவன் (உ) ஞாயிறே யெங்கேள்வன்

யாங்குள னுயினுங் காட்டிடமோ காட்டாயேல்
வானத் தெவன்செய்தி நீ

௩௦ ஆரிரு ணீக்கும் விசும்பின் மதிபோல
நீருர்னுந் தோன்றுதி ஞாயிறே யவ்வழித்
தேரை தினப்பட லோம்பு

௩௩ நல்கா வொருவனை நாடியான் (௩) கொள்வனைப்
பல்கதிர் சாம்பிப் பகலொழியப் பட்டிடமோ
செல்கதிர் ஞாயிறே நீ

எ-து: அங்ஙனங் கூறி, அவனோடே கலந்த கண் புருவம் தோள் நுசுப்புச் சிலமழைபோலே நீண்டிருண்ட கூந்தல் என்கின்றவற்றின் அழகைப்பெறும் விலையின் வளப்பத்தை அறிந்து கொடுத்தவனிடத்து உள்ளவற்றைக் கொள்ளுதல் அறியாதே ஒருவன் கூறிய (௪) பொய்யாகிய வலையிலே என் நெஞ்சு அகப்பட்டுவிட்டது ; என்றுகூறி, பின்னும் (௫) கேளிர்! வாழ்வீராக ; என

க. "கொலைவன் சூடிய" (கலி. ௧௦௩: ௧௫.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. "அவனைத், திரைதரு முந்நீர் வளாஅக மெல்லா, நிரைகதிர் ஞாயிற்றை நாடென்றேன்" கலி. ௧௪௪ : உஎ - உ௯.

௩. 'உரைப்பனை' என்பதற்கு, 'உரைக்கும் அளவும்' என்று பொருளும், 'உரைப்பனே, திசைச்சொல்' என்று விசேடக் குறிப்பும் எழுதி யிருப்பதை நோக்குக; கலி. ௧௪௪: ௧௩.

௪. "பொய்வலைப் படூஉம் பெண்டு" ஐங்குறு. உ௮௩.

௫. 'இர்' ஈறு ஈராய் விளியேற்கு மென்பது, தொல். விளி. சூ. ௧௨. நச். உரையால் அறியலாகும்.

கலித்தொகை கசஎ.

அவர்க்கு முகமன்கூறி அவன் இயற்கைப் புணர்ச்சியிலும் பல சூளுறவாலும் என்மனத்தைத் தேற்றிப் * பின்னுந் தெளிவித்தவன் என்னை அணைத்து முலையிடத்தே முயங்கினான்; அங்ஙனம்(க)முயங்கிப் பின்னர்த் தெளிவு பொய்யாம்படி கைவிட்ட கொலைத்தொழிலை வல்லவனை யான் தேடிக் காணேனோ? அவன் என்னைக் கண்டானாயினும் அவனால் யான் பெறும் பொலிவை அறியமாட்டீர்; என அவரை நோக்கிக் கூறி, அவர் மறுமொழி கொடாமையின், ஞாயிற்றை நோக்கி, ஞாயிறே! போக்கற்கு அரிய இருளைப்போக்கும் விசும்பிடத்து † மதி தோன்றுமாறுபோல நீயும் நீருள்ளேயுந் தோன்றுவை; அங்ஙனந் தோன்றின் விடத்து ஆண்டு வாழுந் தேரை இரை என்று தின்னப்படுதலைப் பரிகரித்துக் கொள்; என அதற்கு முகமன்கூறி, ஞாயிற்றை வானிடத்தே இருந்து எவ்விடமுங் காண்கின்ற நீ எனக்கு என்ன காரியஞ் செய்வை? ஒன்றுஞ் செய்யாயாயினும் இப்பொழுது எக்கேள்வன் யாதோரிடத்தே இருந்தானாயினும் எனக்குக் ‡ கொண்டுவந்து காட்டுவாய்; நீ காட்டாயாயின், யான் நின் கதிர்களைப் பிடித்துக்கொண்டு அவ்விசும்பிலே எறி அவனைப் பார்ப்பேன்; அதற்கு நீ செய்யுங்காரியம் எனக்கு அருளாத ஒப்பிலாதானை நாடி யான் பிடித்துக் கொள்ளுமளவும் ஞாயிறே! நீ குவிந்துசெல்லும் பலகதிர் பகற்காலத்தோடே இவ்விடத்தே நிற்கச் சிலகதிரோடே படுவாயாக; என்றுகூறினாள். எ - று.

அறிதிரென்றது, அறியமாட்டீர் என்ற இகழ்ச்சிக்குறிப்பு.

௩௬ அருஅ வின் (உ) றரி (ங) முன்கைக் கொட்கும்
பருஅப் பருந்தின்கட் பற்றிப் புணர்ந்தான்
கருஅ வெருமைய காடிறந்தான் கொல்லோ
|| வுருஅத் தகைசெய்திவ் வூருள்ளான் கொல்லோ
செருஅ துாணுமிற் கொள்லேவ னவனைப்
பெருஅதிபா ணேவே னவனையெற் காட்டிச்
சுருஅக் + கொடியான் கொடுமையை நீயு

க. (அ) "கொலையொக்கும் கொண்டுகண் மாறல்" நான்மணி. அ; (ஆ) "கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது" முதுமொழிக். ரு எ.

உ. 'அரிமுன்கை' என்பதற்கு இவ்வுரையாசிரியர் (அ) 'அழகினையுடைய முன்கை' என்றும் (ஆ) 'மெல்லிய முன்கை' என்றும் முன்பு (கலி. ருச: ரு., ருக: ச.) பொருள் கூறியிருக்கிறார்; ஈண்டு அத்தொடரில் அரியென்பதைப் பண்பாகு பெயராகக் கொண்டு 'ஐதாகிய மயிர்' என்று பொருள் கூறுகிறார் போலும். (இ) "அரிமயிர் முன்கை" (பொருந. ருஉ.) (ஈ) "அரிமயிர்த் திரள் முன்கை" (புறம் கக: க) என வருதல் இப்பொருளோடு ஒப்பு நோக்கற்பாலன.

ரு. "வளைமுன்கை பற்றி நலிய" கலி. ருக: கO.

(பிரதிபேதம்) * பின்னும் என்னைத் தெளிவித்தவன் என்னை, † நின்கணிருட்டோன்றுமாறு போல, ‡ கொடியர்கு, ‖ அருத்தகை, + கொடியாய் கொடுமையை. × அரசாரின்.

ஐந்தாவது நெய்தல் ரு0. கூசரு

மறூஉ * வளைசரின் மாலையும் வந்தன்
றுறூஉ தணிகவிந் நோய்
சசு தன்னெஞ் சொருவற் கினைவித்தல் யாவர்க்கு
மன்னவோ காம நின் †னம்பு

எ - து: உலகத்தார் வேண்டிக்கொண்ட காரியங்களை மறுத ஞாயிறே! என் கையினின்று நீங்குதலின்றாய் ஐதாகிய மயிரினையுடைய என் முன்கையிலேகிடந்து சுழலும் வளையிடத்தைப் பிடித்துத் தெளிவித்துக் கூடினவன், பாற்பயன் கோடற்குச் சிலகாட்டிக் கறக்கப்படாத காட்டெருமைகளையுடையவாகிய காட்டைக் கடந்துபோயினனோ? அன்றியே என்னோடு அன்புறாததோர் தகைமையை எனக்குச் செய்து இவ்வூரிடத்தே இருந்தானோ? இரண்டும் அறிகின்றிலேன்; ‡ அவனைக் கூடப்பெறாதே நோவா நின்றேன்;

அதற்குமேலே நீ உண்டாக்கும் மாலைக்காலமும் வந்தது; இனி இந்நோய் என்னிடத்தினின்று நீங்காது; அவன் இவ்விடத்துளனாயின் அவனை எனக்குக் காட்டுவாய்; காட்டினால் அவனைக் கோபியாதே மனத்தாலே கைக்கொள்வேன் என்றாள்; அது காட்டாமற்படுதலின் அதனைக்கைவிட்டு (க)சுவேதிலைமை செய்தலன்றி ஒருபாலுளுந கூற்றமே! சுறாக்கொடியையுடைய இக்காமன் செய்கின்ற கொடுமைகளை நீயும் நின் ‡ஓலையிடத்தே ‖ எழுதிவைத்துக்கொண்டு தண்டிப்பை; அவன் + எமக்கு(உ)வழிபடுதெய்வமாதலின் அவனைத் தண்டியாமற் றணிவாயாக என்று கூறினாள்; அங்ஙனங் கூறி, காமனை எதிர்பெய்து கொண்டு, காமா! நின்னுடைய அம்புகள் தனக்கு உரியதாகிய நெஞ்சினைத் தன்மேல் அன்பிலாதானொருவன் பொருட்டு வருத்துவித்தல் சிலர்க்கே யன்றி எல்லார்க்கு × மார்† தன்மையையுடையவோ அல்லவோ? என்றுங் கூறினாள். எ - று.

க. இந்நூற் பக்கம் கூகச: உ-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ) நாலாயிர. நாச்சியார் திருமொழி. க-ஆவது 'தையொரு திங்கள்' என்பதிலுள்ள கO பாசுரங்களும் (ஆ) "காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு, தாமின் புறுவர்" சிலப். க: கO-கக; (இ) "தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையினாயோர், காமனின் குடையேன் காளை சீவக னகலஞ் சேர்த்தின், மாமணி மகர மம்பு வண் சிலைக் கரும்பு மான்றேர், பூமலி மார்ப வீவ லூரொடும் பொலிய வென்றாள்" சீவக. உOகஎ; (ஈ) "பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள், கன்னி யாயந் தன்னுடன் சூழ, மதிற்புறங் கவைஇய புதுப்பூங் காவின், மகர வெல்கொடி மகிழ்களைக் காமற்கு, நகரங் கொண்ட நாளணி விழவினு, ளொழுகா டோறுங் கழுமிய காதலொடு, வழிபா டாற்றிய போதரும்" பெருங். (ங) ௫: உஎ-ஙங என்பவைகளும் ஈண்டு அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * அரைசாரின், † மார்பு, ‡ யான் அவனைக், ‖ எழுதிக்கொண்டு வைத்துத் தண்டிப்பை, + நமக்கு வழி. × அத்தன்மையை.

ஓகாரம், எதிர்மறை. பருப்பருந்து, ஈண்டுத்(௧)குருகென்பதனை உணர்த்தி நின்றது. மருவரைசன், *வரோதயனென்னும் பொருட்டு. (?)

௪௮ கையாறு செய்தானைக் காணிற் †கலுழ்கண்ணாற்
(௨) பையென நோக்குவென் றாழ்(௩)தானை பற்றுவே
னையங்கொண் டென்னை யறியான் ‡விடுவனே
(௪) லொய்யெனப் பூச விடுவேன்மன் ||யானவனை
மெய்யாகக் கள்வனோ வென்று

எ - து: அன்னனக் கூறி, இனி வருகின்ற இராக்காலத்து நின் அம்புகள் இறந்துபடுவியாமல் யான் உயிர்கொண்டிருக்கும்படி அருளுமாயின், அவசத்தாற் சிறிது துயிலேற்றுக் கலங்கின கண்ணாலே எனக்குக் கையாற்றைச் செய்தவனைக் கனவிலே கண்டேனாயின், அக்கண்ணைக் கடுக விழித்துப் பாராதே மெத்தெனப் பார்ப்பேன்; +பார்த்தபின் தப்பிப்போகாதபடி தாழ்ந்து கிடந்த துகிலைப் பிடித்துக்கொள்வேன்; பிடித்துக்கொண்டு என் (௫) மேனி வேறுபாட்டினைக் கண்டு இவள் நந்தலைவியோ × அல்லளோ வென்று ஐயத்தை நெஞ் சிடத்தே கொண்டு என்னை அறியாதே கைவிடுவனாயின் என் (௬) நாண் முதலிய குணங்களையும் மேனிநலத்தினையும் மெய்யாகக்கைக்கொண்டு ∴போன கள்வனென்று எல்லாருங் கேட்கும்படி § விரைபக் கூப்பிடுவேன் என்று காமனை நோக்கிக் கூறினாள். எ - று.

ஓ, அசை.

---

௧. குருகு - வளையல்.

உ. "பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய. கையுளே மாய்ந்தான் கரந்து" கலி. கசஉ: ரு௫-ரு௬.

ரு. "அரிவே யுண்க ணவன்பெண்டிர் காணத், தாருந் தாரேயும் பற்றி" அகம். உளசு: அ-௯.

௬. ஒய்யென வென்பது விரைய வென்னும் பொருளில் வருவதோர் இடைச்சொல்; கலி. ருஎ: கஅ, கஉக: கு; சீவக. அ00, அகசக, கஇஉ, கஅருரு, கஅருஅ. இவற்றில், 'ஒய்யென' என்பதன் உரை நோக்குக.

௭. "நெஞ்சம்............தொன்னல னிழந்தவென் பொன்னிற நோக்கி, யேதி லாட்டி யிவளெனப், போயின் று கொல்லோ" நற். ௯௯: ௭-௧0.

௮. "உள்ளங் கொண்டா ரிவரென் றுணர்த்திடப், புள்ள வாங்கணே வே ளிடைப் போதல்போ, வள்ளி லைச்செழுஞ் சோலையி வன்பரைக், கள்ளுண் கோதையர் கைப்பிடித் தேகினர்" நைடத. போதுகொய். உ.

(பிரதிபேதம்). * வரோதையன், † களிழ்கண், ‡ விலோனேல், || யான்றன்னே, ✢ அப் பார்த்தவன்.தப்பி, × அல்லவோ, ∴ போனவென கள்வன், § விரைவாய்க்.

ஐந்தாவது நெய்தல் ௩0. ஆசான்

௫௩. வினவன்மி *னூரவி ரென்னேயென் னுன்று
மடாஅ (க) நறவுண்டார் போல மருள
விடாஅ துயிரொடு கூடிற்றென் னுண்கண்
படாஅமை செய்தான் றொடர்பு

எ - து: அங்ஙனங் கூறி, ஊரிலுள்ளீர்! எங்களைநோக்கிக் கூறுகின்ற நீர்

ஞாயிற்றையுங் காமனையும் நோக்கிக் கூறியதற்கு அவை என்செய்யுமென்று என்னைக் கேளன்மின்; எந்நாளும் என்கண் துயிலாமையைச் செய்தவன் தந்த நட்பின் உண்டான நோய் மடாநறவை யுண்டாரைப்போல மயங்கும்படி விடாதே உயிரைப்பொருந்துந் தன்மையோடே கூடிவிட்டது; இனி இவ் வுயிரைக் † காக்கும்வழி உண்டாயிற் காப்பீராக என்றுங் கூறினாள். எ - று.

௫௭ (௨) கனவினாற் காணிய ‡கண்படா வாயி
னனவினான் ஞாயிறே காட்டாய்நீ யாயிற்
(௩) பனையீன்ற மாவூர்ந் தவன்வரக் காமன்
கணையிரப் பேன்கால்புல்லிக் கொண்டு

எ - து: அதற்கு அவர் மறுமொழி கொடாதுநிற்றலின், முற்கூறிய ஞாயிற்றையுங் காமனையுமே பின்னும் நினைந்து, வருகின்ற இராக்காலத்துக் கனவின்கண்ணே அவனைக் கண்டு ஆற்றுதற்குக் காமன்கணை செய்கின்ற கொடுமையாலே கண் துயிலாவாயின், || ஞாயிறே! (௪) எப்பொருளையுங் காட்டுகின்ற நீ நனவின்கண் வந்தாகிலும் அவனைக் காட்டாயாயில், இவ்வாறே வருத்தமுற்றுப் பனையீன்ற குதிரையையேறி (௫) அவன் என்பால் தானே வரும்படியாக அக்காமன்காலைக் கட்டிக்கொண்டு நின் அம்புகளை எனக்குத் தர + வேண்டுமென்று காமனை இன்னும் இரந்துகொள்வேன்; என்றும் × கூறினாள். எ - று.

---

௧. "நறவுண்டார் மயக்கம் போல்" கலி. ௧௭௭: ௨.

௨. (அ) "கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க், குயலுண்மை சாற்றுவேன் மன்" (ஆ) "நனவினா னல்கா தவரைக் கனவினாற், காண்டலி னுண்டென் னுயிர்" (இ) "நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற், காதலர் நீங்கலர் மன்" குறள். ௧௨௧௨, ௧௨௧௩, ௧௨௧௪.

௩. "பனையீன்ற மாவும்" கலி. ௧௩௮ : ௧௨.

௪. "கண்பயங் கெடப் பெயர" (கலி. ௧௪௮: ௩) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௫. "சொற், றூற்று வந்தென் சிலம்படி கைதொழ, நோற்பன்" சீவக.

அக்க.

(பிரதிபேதம்) * வெரீஇயென்னை, † காக்கலாம் வழி, ‡ கண்படாயாயின், || ஞாயிறே! நீ வந் தாலும் எப்பொருளையும் காட்டுகின்ற நீ னவின்கண் அவனைக், + வேறு மென்று, × கூறினன் ஆக்கமை.

எனவாங்கு

எ - து: எனச்சொல்லி. எ - று.

ஆங்கு, அசை.

சஉ. கண்ணிணைபு * கலுழ்பேங்கின
டோண்ஞெகிழ்பு வளைநெகிழ்ந்தன
என்னையோ வெல்லிருங் காண்மின் மடவான்
மென்னடைப் (க)பேடை † துணைதரத் தற்சேர்ந்த
வன்னவான் சேவற் புணர்ச்சிபோ லொண்ணுதல்
காதலன் மன்ற வவனை வரக்கண்டாங்
காழ்துயர மெல்லா மறந்தனள் பேதை
நகையொழிந்து நாணுமெய் நிற்ப விறைஞ்சித்
தகையாகத் தையலாள் சேர்ந்தா ணகையாக
நல்லெழின் மார்ப னகத்து.

‡ எ - து: இவ்வொண்ணுதல் (உ) அன்னையோ || என்று இனைந்து கண் கலங்கி அழுதாள்; தோண்மெலிந்து வளைநெகிழ்ந்தாள்; இப்பேதை, மடப்பம்

வருதலினையும் மெல்லிய நடையினையுமுடைய அன்னப்பெடை விரைந்து செல்ல, அதனைச்சேர்ந்த அன்னச்சேவலின் கூட்டம்போலே, பின் தன் காதலன்வர ||அங்கே அவனைக்கண்டு தான் அழுந்தின துயரமெல்லாம் அறுதியாக +மறந்தாள்;மறந்து,இத்தையலாள் பின்னர்[illegible]ரிலுள்ளார் நகைத்தநகையையும்

க. (அ) "அன்னத் தன்ன மென்னடை யன்னத்துப், புணர்வி னன்ன தண்டாக் காதல" பெருங். (ச) கக: அ௦-அக. (ஆ) "ஆதாம் பெருகு கின்ற வன்பினு வன்ன மொத்தும்" சீவக. கஅக. (இ) "தாவிவான் பெடைதுணை துறந்த கொல்லென, வாவிவா யிளவன மயங்கு மென்ப வே" சூளா. நகர. கக. (ஈ) "தாலுயி ருறத்தனி தழுவும் பேடையை, யூனுயிர் பிரிந்தெனப் பிரிந்த வோதிமம்' கம்ப. பம்பை. கரு. (உ) "அஞ்சியோடின ரன்னமுஞ் சேவலு மென்ன," பிரமோத்தா. உருத்திராக்க. சூ.

உ. 'அன்னையோ' என்பது ஈண்டு வருத்தத்தைக் காட்டி வந்ததோர் இடைச்சொல்; (அ) "அம்மனை யோவென் றஞ்சிப், பனிக்குநண் ணுசுப்பிற் பாவை" (ஆ) "அம்மனை யோவெனுத், துண்ணெ னெஞ்சின ளாய்" சீவக. எசரு, எச௦. என்புழி, 'அம்மனையோ' என வருதலுங் காண்க; இஃது அச்சங் காட்டி வந்ததென்றலுமாம்.

(பிரதிபேதம்) *களிப்பு, † தினைதரத், ‡ எ - து : எனச்சொல்லி இவ்வொன்[illegible]தல், || அங்கே. + முன்னா மறந்தாள்.

போக்கி, போன (க) நாணமும்தன் மெய்யிடத்தே வந்து நிற்கையாலே தலையிறைஞ்சி, தன்மெய்யிடத்தே அழகுண்டாக மனத்திடத்தே நகையுண்டாக அந்நல்லெழின் மார்பனிடத்தே சேர்ந்தாள்; இம்மகிழ்ச்சியையும் எல்லீருங் காண்பீராகவெனக் கண்டோர்வியந்து தம்மிற்கொண்டு கூறிற்றாக உரைக்க.எ-று.

இது, கண்டார்க்கு * அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'கொலைவனைக் காணேன்கொல் யான்' என்னுந் துணையும் கூறத் தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'செரூஅ துளனுயிற் கொள்வேன்' என்றதனால், தன் வருத்தந் தோன்றாமற் கூறலின் வருத்தமிறந்தவாறும் 'காமன்கணை யிரப்பேன்' †என்றதனால் அவனை வருத்துவேன் என்ற ‡அவனைவியவாமையின் மருட்கையிறந்தவாறும் 'கலைஇய.........புருவம்' || என்று உறுப்பான் வனப்பு மிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடி வந்த தரவும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரான் வந்த ஈரடியானொன்றும் நெடுவெண்பாட்டும் இருசீரானொன்றும் குறுவெண்பாட்டும் × நெடுவெண்பாட்டும் இரண்டு குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் மூன்று நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் வஞ்சியடி யிரண்டுமுன்னர்விரவி யாப்பின் வேறுபட்ட கொச்சகவெண்பாவும் பெற்ற கொச்சகக்கலி. (௯௦)

(௧௪௮.) தொல்லியன் ஞாலத்துத் தொழிலாற்றி ஞாயிறு
வல்லவன் கூறிய வினைதலை வைத்தான்போற்
கல்லடைபு கதிரூன்றிக் கண்பயங் கெடப்பெயர
வல்லது கெடுப்பவ னருள்கொண்ட முகம்போல
மல்லனீர்த் திரையூர்பு மாவிருண் மதிசீப்ப
வில்லவ ரொழுக்கம்போ லிருங்கழி மலர்கூம்பச்
செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை;
அ மாலை நீ;
இன்புற்றார்க் கிறைச்சியா யியைவதே செய்தாய்ம
னன்புற்றா ரழநீத்த வல்லலுட் கலங்கிய
துன்புற்றார்த் துயர்செய்த றக்கதோ நினக்கு;

௬. (அ) “வதுவை யயர்தல் வேண்டுவல்......இவள், வதுவைநாண்மணக் கமழுங் காண்குவல் யானே” (கலி. ௫௨: ௨௩-௨௫) என்பதும் (ஆ) அதன் குறிப்பும் (இ) “வதுவைநாட் கலிங்கத்து ளொடுங்கிய.......... மடந்தை” (கலி. ௬௧: ௩-௪) என்பதும் (ஈ) அதன் குறிப்பும் (உ) இந் நூற்பக்கம் ௮௧௭: ௩-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * அவர்களாக்கம், † என்றதனே. என்றுனவனே. ‡ அதனவிய. || என்று முறுப்பாக. × நெடுவெண்பாட்டுமொன்மேம் இரண்டுறுறு.

௧௨ மாலை நீ;

கலந்தவர் காமத்தைக் கனற்றலோ செய்தாய்ம
னலங்கொண்டு நல்காதார் நனிநீத்த புலம்பின்க
ணலந்தவர்க் கணங்காத றக்கதோ நினக்கு ;

௧௩ மாலை நீ;

எங்கேள்வற் றருதலுந் தருகல்லாய் துணையல்லை
பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப் புணையாகித்
திருந்தாத செயினல்லா லில்லையோ நினக்கு ;

எனவாங்கு;

௨௧ ஆயிழை மடவர லவல மகலப்
பாயிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோலப்
போயவர் மண்வெளவி வந்தனர்
சேயுறை காதலர் செய்வினை முடித்தே.

இது “வெளிப்படை தானே கற்பினொ டொப்பினும், ஞாங்கர்க்

கிளந்த மூன்றுபொரு ளாக, வரையாது பிரிதல் * கிழவோற் கில்லை " (க) என்பதனுள் அரசன் மல்கோடற்கு ஏவுதலின் வாளாணைதிரும் பிரிவின் கண், தலைவன் வரைவிடைவைத்து வேந்தற்குற்றுழிப் பிரிந்துழி அவள் வருத்தமிகுதி கண்டார் கூறியது.

இதன்பொருள்.

தொல்லியன் ஞாலத்துத் தொழிலாற்றி ஞாயிறு
வல்லவன் கூறிய வினைதலை வைத்தான்போற்
கல்லடைபு கதிர்ஒன்றிக் (உ) கண்பயங் கெடப்பெயர
(ங) வல்லது கெடுப்பவ னருள்கொண்ட முகம்போல
மல்லனீர்த் திரையூர்பு மாலிருண் மதிசீப்ப

க. தொல். களவு. சூ. ௰.

உ. (அ)"மலர்தலை யுலகத் திருளெறி விளக்கு, மன்னுயிர் விழிக்கக் கண்ணிய கண்ணும்.........பரிதிவா னவ்வே" கல். ௩௩:௨௩-௩௪; (ஆ) "இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி பொழுந்தா லன்றிக், கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரிதாம்" திருக்குற்றலப். நூற்பயன். க.

ங. "குட்டுவன், குடிபுறந் தருங்காற் றிருமுகம் போல, வுலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்" சிலப். உ௮: ௩௭-௩௪.

(பிரதிபேதம்)*கிழவற்கில்லை.

பறுப்பனசுற்றி' எனவும் 'உருவமாலைபோல' எனவும் மூச்சீரான்வந்த சொற்சீரடிபெற்ற கொச்சகமும், ஓரடியான்வந்த அம்போதரங்கங்களும் *'பயிலிதழ் மலருண்கண்' எனச் சொற்சீரடிபெற்ற கொச்சகமும் வந்த கலிவெண்பா

வுறுப்பின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. "மூச்சீர் முரற்கையு ணிறை யவு நிற்கும்" (௧)என்பதனான் மூச்சீரடியும் வந்தன. (௩.)

(௧௦௪.) மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
றொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாய ரொருங்குதொக் கெல்லாரும்
வானுற வோங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப்
பானிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளையும்
பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித்
திருமறு மார்பன்போற் றிறல்சான்ற காரியு
மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதன்
முக்கண்ணா னுருவேபோன் முரண்மிகு குராலு
மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வல்லா னிறனேபோல் வெருவந்த சேயு மாங்கப்
பொருவரும் பண்பி னவ்வையும் பிறவு
முருவப்பல் கொண்மூக் குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர் தொழூஉ;

அவ்வழி, முள்ளெயிற் றேஎ ரிவளைப் பெறுமிதோர்
வெள்ளேற் றெருத்தடங்கு வான்;

௨௦ ஒள்ளிழை, வாருறு கூந்தற் றுயில்பெறும் வைமருப்பிற்
காரி கதனஞ்சான் கொள்பவ னீரரி
வெரூஉப்பிணை மானோக்கி னல்லாட் பெறாஉமிக்
குரூஉக்கட் கொலையேறு கொள்வான் வரிக்குழை

க. தொல். செய். சூ. ஏ௦.

(பிரதிபேதம்) * பயில்தழமருண்கண்.

ஐந்தாவது நெய்தல் ௩௧.   கூ௱க

வில்லவ ரொழுக்கம்போல(க) விருங்கழி மலர்கூம்பச்

(௨) செல்லுமென் னுயிர்ப்புறத் * திறுத்தந்த மருண்மாலை

எ - து: ஞாயிறு தன்கதிர்களாலே ஞாலத்திடத்துப் பழைய இயல்பினையுடைத்தாய்த் தான்செய்துபோதும் பொருள்களை விளக்குந் தொழிலிலே ஊன்றி நடத்தி, பின்னர்க் காமன் றனக்கு யான் பிரிந்திருந்தாரை வருத்துதற்கு நீ போவாயாக என்று கூறியகாரியத்தினைத் தன்றலையிலே ஏறட்டுக் கொண்டுபோவான்போலே அத்தகிரியைச் சேர்ந்து, பல்லுயிருந்தங்கண்களாற் கொள்ளும் பயன்கெடும்படி போக, தீவினையைப் போக்குகின்றவனுடைய அருளைக்கொண்ட முகம்போலத் திங்கள் வளப்பத்தையுடைய கடலிற் றிரைமேலே தோன்றி அம்மயக்கத்தையுடைய இருளைப் போக்க, பொருளில்லார் நிகழ்த்தும் இல்லறம்போலக் கரிய கழியின் மலர்கள் ஒழுகக் குவிய, தேய்கின்ற என்னுயிரின் புறத்தே வந்துவிட்ட மாலாய்! நீ அறிவு மயங்குதலையுடைய மாலையாய் இருந்தாய்; என்றுங் கூறினாள். எ - று.

(ரு.) இன்புற்றார்க் கிறைச்சியா யிவைவதே செய்தாய்பா
னன்புற்று ரழநீத்த வல்லலுட் கலங்கிய
† துன்புற்றார்த் துயர்செய்த றக்கதோ நினக்கு

எ - து: அன்னனங் கூறியவள், அதற்குக் காரணமென்னெனின், கூடி இன்பமுற்றவர்களுக்கு நேயமாய் அவர்கள் தம்மிற் கூடும் நிலைமையையோ மிகவும் முன்பு செய்துபோந்தாய்; இப்பொழுது ஆடவர் தம்மேல் அன்புற்ற மகளிர் அழும்படி தம்மைக் கைவிட்டதனால் உண்டான அல்லலிடத்தே நின்று கலங்கிய துன்பமுற்ற மகளிரை வருத்தஞ் செய்தல் நினக்குத் தக்கதன்றே; என்றாள். எ - று.

மேல் வருகின்றவற்றிற்கும் இன்னனங் கூட்டி உரைக்க.

க. "இம்மாலை, இருங்கழி மாமலர் கூம்ப" கலி. கங௦: கக-கஉ.

உ. புறம் இடப்பொருளைக் காட்டிவரும் உருபாய் வருதற்கு, இவ்வடி மேற்கோள்; நன். பெயரி. சூ. ௬௫. மயிலை. சங்கர. வி. இரா.

ங. "மாலைநீ, தூவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த, போதுபோற் குவிந்தவென் னெழினல மெள்ளுவா, யாய்சிறை வண்டார்ப்பச் சினைப் பூப்போற் றளைவிட்ட, காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்" கலி. ககஅ: க-கஉ.

(பிரதிபேதம்) * இறத்தமருள், † துன்புற்றார் துயர்ச்செய்தல்.

கஃ. மாலை

கலந்தவர் காமத்தைக் * கனற்றலோ செய்தாய்ம
லலங்கொண்டு நல்காதார் நனிநீத்த புலம்பின்க
ணலந்தவர்க் கணங்காத றக்கதோ வினக்கு

எ - து: மகளிரைக் கூடிய கணவருடைய மனவேட்கையை அம்மக ளிர்க்குத் துணையாய் நின்று அவர் மனத்தினின்று நீங்காது † கனன்றெரியுந் தன்மையையோ முன்பு ‡மிகவுஞ் செய்தாய்; இப்பொழுது அம்மகளிர் ‖ நலத் தைக் கைக்கொண்டு பின்பு அவர்க்குக் கொடாத ஆடவராலே தங்கலம் போன தனிமையிடத்தே நின்று அலந்த மகளிர்க்குத் துணையாகாதே வருத்தமாகல் நினக்குத் தக்கதன்றே; என்றாள். எ - று.

கரு. மாலை

எங்கேள்வற் (க) றருதலுந் தருகல்லாய் துணையல்லை
பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப் புணையாகித்
திருந்தாத செயினல்லா லில்லையோ நினக்கு

எ - து: எம்முடைய கேள்வரை × முன்புபோல மனத்தைக் கனலப் பண்ணி ஈண்டுத் தருதலுஞ் செய்திலை; ஆதலால் நீ எமக்குத் துணையல்லை; தான் பிரிந்திருந்த மகளிர்க்கு அப்பிரிவாற்றோன்றிய நோயின்வடிவு நீதானே யாய்க் கூடியவர்களுக்கு அவர் பெறும் இன்பத்திற்கோர் தெப்பமாய், இங்ஙனம் நன்மையாகாத காரியங்களைச் செய்தொழுகுமதல்லது நினக்கு நன்மை யாகச் செய்யுங் காரியங்கள் இல்லையோ; என்றாள். எ - று.

இது, கலக்கம் என்னும் மெய்ப்பாடு.

+ எனவாங்கு

எ - து: என்று சொல்லி. எ - று.

ஆங்கு, அசை.

பா(உ)யிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோலப்
போயவர் (ந) மண்வெளவி வந்தனர்
சேயுறை காதலர் செய்வினை முடித்தே.

க. "உண்ணலு முண்ணேன்" (கலி. உந: எ) என்பதும் அதன் குறிப்பும் நோக்குக.

உ. "ஞாயிற்று முன்ன ரிருள்போல் மாய்ந்தது" (கலி. சஉ: நக) என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ந. "மண் வெளவி வருபவர்" கலி. நக: க.

(பிரதிபேதம்) *கனறலோ, ‡ நின்றெரியும், ‡ மிகச் செய்தாய், || நலத்தைக் கொண்டு, × முன்பு போன் மனத்தை, + எனவாங்கு ஆங்கவை.

ஐ[illegible]வது நெய்தல் நஉ. [illegible]

* ள் - து: திருந்தின இழையினையுடைய மடப்பம் வருத[illegible]யுடையவள் வருந்தியவிடத்தே தூரிய நிலத்தே உறைகின்ற காதலர் பகைவரிடத்துச் செய்யும் போர்த்தொழில்களைப் போய் முடித்து அவர்மண்ணைக் கைக்கொண்டு பரந்த இருட்பரப்பினை ஞாயிறு போக்கினாற்போல அவள் வருத்தம் நீங்கவந்தார்; இஃது என்னவியப்போ எனக் கண்டார்கூறியதாக உரைக்க. எ - று.

இது, கண்டார்க்கு † அவர் ஆக்கங்கண்டு மருட்கை பிறந்தது.

"தானே சேறலுந் தன்னொடு சிவணிய, வேனோர் சேறலும் வேந்தன் மேற்றே" (க) என்பதனால், முடியுடைவேந்தன் தன் பகைமேற் சென்று

மண்கோடல் உரித்து என்றதனானும், வாளாவெணதிரும் பிரிவு முடியுடை வேந்தர்க்குச் சிறுபான்மையென்றும் அவர் ஏவப்பிரியும் அரசர்க்குப் பெரும் பான்மையென்றுங் கூறலானும், "வெளிப்படை தானே கற்பினொடொப்பினு, ஞாங்கர்க் ‡கிளந்த மூன்றுபொருளாக, வரையாது பிரிதல், || கிழவோற்கில்லை" (உ)என்றதனான்வரைவிடைவைத்து மண்கோடற்குப்பிரிதலில்லையென்ற அதனை விலக்கினமையானும் கண்டார் களவிற்கூறுதலின்மையானும், இப்பாட்டும் × அவள் மிகவும் வருத்தம் எய்தின நிலைமையைக்கண்டு வருந்தினோர் அவன் வந்து கூட வருத்தம் நீங்கினமை கண்டு வியந்து கூறிய பெருந்திணையாம்.

இதுவும் இடையிடை சொற்சீரடிவந்து எண்ணிடையிட்டுச் சின்னம் குன்றிய கொச்சகம். (கஅ)

(கசகூ) நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாகக்
கரைசேர் புள்ளினத் தஞ்சிறை படையாக
வரைசுகால் கிளர்ந்தன்ன வுரவுநீர்ச் சேர்ப்பகேள் ;
ச கற்பித்தா னெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கட்
டப்பித்தான் பொருளேபோற் றமியவே தேயுமா
லொற்கத்து ளுதவியார்க் குதவாதான் மற்றவ
னெச்சத்து ளாயினுமஃ தெறியாது விடாதேகாண் ;
அ கேளிர்க ணெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்க
டாளிலான் குடியேபோற் றமியவே தேயுமாற்
சூள்வாய்த்த மனத்தவன் விளைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினுமஃ தெறியாது விடாதேகாண் ;
ஆங்கு ;

க. தொல். அகத். சூ. உஎ.

உ. தொல். களவியல். சூ. ௫௦.

(பிரதிபேதம்) * எ - து : என்று சொல்லித் திருந்தின, † அவளாக்கம், ‡ லொர்ந்த, || கிழ வற்கில்லை, × இவள் மிகவும்.

௲. அணைத்தினிப் பெரும வதனின் நிலைத்துக்காண்
சினை இய வேந்த னெயிற்புறத் திறுத்த
வினைவரு பருவரல் போலத்
துனைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே.

இது வரைவு நீட்டித்துழித் தலைவியது ஆற்றாமை கூறித் தலைவனை வரைவு கடாயது.

இதன் பொருள்.

நிரை (க) திமில் களிறாகத் (உ) திரையொலி பறையாகக்
கரைசேர் (ங) புள்ளினத் தஞ்சிறை படையாக
வரைசுகால் கிளர்ந்தன்ன (ச) வுரவுநீர்ச் சேர்ப்பகேள்

எ - து: நிரைத்த திமில்கள் களிறாகத் திரையொலிக்கின்ற ஓசை பறையாக இனத்தினையும் அழகிய சிறகினையுமுடைய கரையைச் சேர்ந்த புட்கள் காலாட்படையாகப் பாண்டியன் (ரு) பகைவர்மேற் படையெழுச்சியாய்ச் சென்றுவொத்த செலவினையுடைத்தாகிய வலியினையுடைய கடலைச் சேர்ந்த நிலத்தை யுடையவனே! யான் கூறுகின்றதனைக் கேள். எ - று.

(சு) தான் பாதுகாக்கின்ற கரையை அரசனைப் போலே சென்று அழிக்கின்ற கடற்சேர்ப்பனென்றதனால், தான் பாதுகாக்கப் படுகின்ற நம்மை

க. இந்நூற்பக்கம் அ௨௨: க.ஆம் குறிப்பு நோக்கற்பாலது.

உ. "குணில்பொரக் குளிறின முரசம்.........முணையினுற் கடலக முழக்க மொத்தவே" சீவக. ௨௨௨௨.

ங. "கம்புட் கோழியுங் கனைகுர லுரையுஞ், செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங், கானக் கோழியு நீர்நிறக் காக்கையு, முள்ளு மூரலும் புள்ளும் புதாவும், வெல்போர் வேந்தர் முனையிடம் போலப், பல்வேறு

குழூஉக்குரல் பரந்த வோதையும்” சிலப். கO: ககச-ககக.

ச. “உரவுநீர்ச்சேர்ப்ப” (கலி. கஉஎ: உஉ) என்பதும் அதன்குறிப்பும் பார்க்க.

ஓ. “முடிமன ரெழுதரு பருதி மொய்களி, றுடைதிரை மாக்கல மொளிறு வாட்படை, யடுதிற லெறிசுறு வாகக் காய்ந்தன், கடலிரண் டெதிர்ந்த தோர் கால மொத்ததே. “ சீவக. உஉஉரு.

க. (அ) கலி. கஉகு. தாவின்விசேடவுரையில், ‘தன்னுற் பாதுகாக்கப் படுகின்ற மணற்குன்றைத் தானே கரைத்தாற்போல நின்னுற் பாது காக்கப்படுந் தலைவியை நீதானே வருத்தாநின்ருய் என உள்ளுறையுவ மங்கொள்க’ என்றும் (ஆ) சீவக. உஅO-ஆம் செய்யுளின் முன்குறிப் பில், ‘தனக்குவேலியாகிய கரையைக் கடல் தானே கொல்லுகின்றுற் போலத் “தமக்குக்காவலாகிய அரசனைப் படை தாமே கொல்லுகின்ற தென்ருர்’ என்றும் இவர் எழுதியிருப்பனவை ஈண்டு அறிதற் பாலன.

வளைர்த்துகொண்டு பாதுகாவாமல் * அழிக்கின்றுனென உள்ளுறையுவமர் தந்தவாறுணர்க. இனிப் பகையின்றி இருக்கின்ற கடல் பகைபோற் ருேன்றி ஞற்போல, அயலார் பகைபோல அலர்கூறி வருத்துகின்ருரென்றலுமொன்று.

ச (க) † கற்பித்தரீனெஞ்சமுங்கப் பகர்ந்துண்ணுன் ‡விச்சைக்கட்

டப்பித்தான் பொருளேபோற் றமியவே தேயுமா

(உ). லொற்கத்து ‖ ஞதவியார்க் குதவாதான் மற்றவ

னெச்சத்து ளாயினு × மஃ தெறியாது விடாதேகாண்

எ - து: தனக்கோர் வருத்தமுற்றவிடத்து உதவினவர்கட்கு ஓர் வருத்தம் வந்தால் உதவாதவன், தன்னை நூன்முதலிய கற்பித்த ஆசிரியன் தன்பால் ஒன்றுபெறாமல் மனம்வருந்த, தன்கைப்பொருளை அக்கல்விப்பொருட்குக் கைம்மாறாகக் கொடுத்துஉண்ணுனாய், தான்கற்ற விச்சையிடத்தே தப்புப் பண்ணிக்கொண்டவனுடைய கல்விப்பொருள் நாடோறுந் தேயுமாறுபோல, தானே தானாகத் தேயாநிற்பன்; அதுவேயன்றிப் பின்பு (௩) அச்செய்நன்றிக் கேடாகிய அது தன்னுடம்பினை ஒழித்து உயிர்போனவிடத்தே யாயினும் நுகர்வியாமற் போகாதுகாண். எ - று.

---

௧. "குரவர் தக்கிணை காத லோடு வழங்கிலார், தீப்ப வங்களும்" சேது. சங்கதீர்த்த. ௨௦.

௨. (அ) "செல்வத்துட்சேர்ந்தவர் வளனுண்டுமேற்றவ, ரொல்கத்து நல்கிலா வுணர்விலார்" (ஆ) "முன்னொன்றுதமக்காற்றி முயன்றவரிறுதிக்கட், பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடிலாளர்" (கலி. ௨௫: ௧௯ - ௨௦, ௩௪: ௪-௫) என்பவையும் அவற்றின்குறிப்புக்களும்இங்குஅறிதற்பாலன.

௩. (அ) "நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென, வறம்பா டிற்றே" புறம். ௩௪: ௫-௭. (ஆ) "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது நன்று" (இ) "எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" குறள். ௧௦௮, ௧௧௦. (ஈ) "நன்றி, செய்குநர்ப் பிழைத்தோர்க் குய்வில வென்னுங், குன்றா வாய்மை நின்றுநிலை காட்டி" கல். ௪: ௧௧-௧௩. (உ) "ஒன்றொரு பயன்றனை யுதவி னோர்மனங், கன்றிட வொருவினை கருதிச் செய்வரேற், புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே,கொன்றிடு மல்லது கூற்றும்வேண்டுமோ" கந்த. இரணியன் யுத்த. ௧௰. (ஊ) "உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ" கம்ப. கிட்கிந்தை. ௯௨. (எ) "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வதில்லை யிருமை யான, செய்ந்நன்றி கொன்ற மகற் கென்றுரைக்கு நூல்" சேது. சேதுபலச். ௮௩.

(பிரதிபேதம்) * அழிக்கின்றுமென, † கற்பித்தார்நெஞ்சு ‡ விச்சைகூடப்பிழித்தான், || உதவி யூரற் குதவாத மற்றவன், × அஃதுதெரியாது,

கேளிர்க நெஞ்சழுங்கக் கெழீஇயுற்ற செல்வங்க
(க) * டாளிலான் குடியேபோற் றமியவே தேயுமாற்
† சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினுமஃ தெறியாது விடாதேகாண்

எ - து: தான் சூளுறுகின்ற சூளுறவினைக் காண்கின்றவர் மனங்கொள்ளும்படி சூளுற்ற மனத்தையுடையவன் தான் சூளுற்ற காரியத்தினை முடிவுபோக்காது பொய்த்துவிடுவனாயின், தன்னைச் சேர்ந்து வாழுஞ் (உ) சுற்றத்தாருடையநெஞ்சு தான் ஒன்றை அறியாமையால் வருந்தும்படி தன்னோடே கெழுமுதலுற்ற செல்வத்திடத்தே தானின்று அச்செல்வத்தை மேலே மேலே வளர்க்கும் முயற்சிதானும் இல்லாதவனுடைய குடி நாடோறுந் தேயுமாறு போலத் தானே தானாகத் தேயாநிற்பன்; அதுவேயன்றிப் ‡பின்னர் அச்சூளுறவினைப் பொய்த்த (௩) தீவினை மறுமையில் விரவின் அது வாளின் வாய்கூரிதாய்ச் சுவர்க்கம் பெற்றானாயினும் நுகர்வியாமற் போகாதுகாண். எ - று.

இது வரைந்துகொள்வல் எனச் சூளுற்றதனைப் பொய்த்தாயென்றாள்.

ஆங்கு, அசை.

கரு ‖ அனைத்தினிப் பெரும வதனிலை நினைத்துக்காண்
சினைஇய வேந்த னெயிற்புறத் திறுத்த
வினைவரு பருவரல் போலத்
துனைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே.

எ - து: பெரும! செய்ந்நன்றிக்கேடு பொய்ச்சூளுறவாகிய தீவினையின் தன்மை யாம்முற்கூறிய அத்தன்மைத்து; இனி நீதான் ✝ அத்தன்மைத்தாதலை

௧. (அ) "குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னு, மாசூர மாய்ந்து கெடும்" (ஆ) "மடியை மடியா வொழுகல் குடியைக், குடியாக வேண்டு பவர்" (இ) "மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த குடிமடியுந் தன்னினு முந்து" (ஈ) "குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து, மாண்ட வுஞற்றி லவர்க்கு" குறள். ௬0௧, ௬0௨, ௬0௩, ௬0௪.

௨. (அ) "சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி" (ஆ) "இளை யழிய வாழ்பவ னாக்கம்போற் புல்லென்று" (கலி. ௧0: ௨, ௩௪: ௧௮.) என்பவையும் அவற்றின் குறிப்புக்களும் இங்கே அறிதற்பாலன.

௩. (அ) "எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை, வீயாது பின்சென் றடும்" குறள். ௨0௭. (ஆ) "ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்ப தூஉம்" சிலப். பதி. ௫௫. (இ) "ஒளிப்பினு மூழ்வினை யூட்டாது கழி யாது" இறை. சூ. ௨. மேற்கோள். (ஈ) "உயிர்புகுஞ் சட்டக வழி தொறு முழிதொறும், பழவினை புகுந்த பாடகம் போவ" கல். ௧௧: ௧-௨.

(பிரதிபேதம்) * அளிலான் † முன்பொயத்த மனத்துயன் வினைவர்ப்பின், ‡ பின்னச்சூழ் வினை, || அனைத்துமி, × அத்தன்[illegible]னித்துதலை.

ஐந்தாவது நெய்தல்[illegible]. ௬௫

நின் மனத்தால் நினைந்துபார்; இவள் தான் தன்[illegible]கைவளோடு * சினந்த அர சன் அவன் எயிற்புறத்தே சென்றுவிட்டவினையால் (௧) உழிஞையானுக்[illegible] வருத்தம்போலே வரைவு கடிதின்முடிதற்கு விரைதல் வரும் நெஞ்சத்தாலே பெரிதும் வருந்தினள்; இனி அவ்வருத்தம் நீங்கும்படி கடிதின் வரைவாயாக என வரைவுகடாயினள். எ – று.

இதனால், தலைவற்கு அசைவுபிறந்தது.

(௨) இது சிறுமைக்கு எல்லைகூறிய நான்கடியாயின்றி மூன்றடியான்வந்தாவும் நான்கடித்தாழிசை இரண்டும் † ஆசிரியச்சுரிதகமும் வந்தமையால் யாப்பின் வேறுபட்ட † பாநிலைவகைக் கொச்சகம். (௬௨)

(௧௯௦) அயந்திகழ் நறுங்கொன்றை யலங்கலந் தெரியலா
னியங்கெயி லெயப்பிறந்த வெரிபோல வெவ்வாயுங்
கனைகதிர் தெறுதலிற் கடுத்தெழுந்த காம்புத்தீ
மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கழன்
மயங்கதர் மறுகலின் மலைதலைக் கொண்டென
விசும்புற நிவந்தழலும் விலங்கரு வெஞ்சுரம்;
௭ இறந்துதா மெண்ணிய வினைதல் வேட்கையா
லறந்துறந் தாயிழா யாக்கத்திற் பிரிந்தவர்
பிறங்குநீர் சடைக்கரந்தா னணியன்ன நின்னிறம்
பசந்துநீ யினையையாய் நீத்தலு நீப்பரோ;
௧௧. கரிகாய்ந்த கவலைத்தாய்க் கல்காய்ந்த கானகம்
வெருவந்த வாறென்னாய் விழுப்பொருட் ககன்றவ
ருருவவேற் றூதியா னொள்ளணிக் கண்ணனின்
னுருவிழந் தினையையா யுள்ளலு முள்ளுபவோ;
௧௫ கொதித்துராப் பொன்றிவந்து கொடுக்கொண்ட கோடையா
லொதுக்கரிய நெறியென்னா தொண்பொருட் ககன்றவர்

௧. இந்நூற்பக்கம் ௩௧௧: ௬-ஆம் குறிப்புப்பார்க்க

௨. இச்செய்யுளை இளம்பூரணர் மயின்றுகித தாழிசைபெற்றுவரும் கொச்சகவொருபோ கென்றுகூறி, 'நிரைதிமில் .. ..சோப்பகேள்' இது நான்கடியாகி வாராமையிற் றாழிசையாயிற்று. 'கற்பித்தான் ....

விடாதேகாண்' 'கேளிர்கள் .. ..விடாதே காண' இவையிரண்டும்
தாழிசை. 'ஆகவு, ...பெர்தே' இது சுரிதகம்''என்று விளக்குவார்;
தொல். செய். சூ.கசுஉ. 'தரவின் றாகித'

(பிரதிபேதம்) * நினைத்தஅரசன், † [illegible]சுரிதகமும், ‡பாலைக் கலிக்கொச்சகம்.

கஙஅ

கலித்தொகை கருO.

புதுத்திங்கட் கண்ணியான் பொற்பூண்ஞான் றன்னநின்
கதுப்புலறுங் கவினையாய்க் காண்டலுங் காண்பவோ;
ஆங்கு;

௨0 அரும்பெற லாதிரையா னணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல வொருங்கவர்
பொய்யா ராகுத றெளிந்தனை
மையீ ரோதி மடமொழி யோயே.

இது பொருள்வயிற் பிரிந்த தலைவனை நினைந்து ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

இதன்பொருள்.

* அயந்திகழ் நறுங் (க) கொன்றை யலங்கலந் தெரியலா .
† னியங்கெயி லெயப்பிறந்த வெரிபோல வெவ்வாயுங்
(உ) கனைகதிர் தெறுதலிற் கடுத்தெழுந்த காம்புத்தீ
மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கழன்
மயங்கதர் மறுகலின் மலைதலைக் கொண்டென
விசும்புற நிவந்தழலும் விலங்கரு வெஞ்சுரம்

எ - து: நீர்நிலைக்கருகே விளங்குகின்ற அலங்கலையுடைய கொன்றை மாலையையுடைய(௩) இறைவன் திரிபுரத்தையெய்கை ஒலேதோன்றின முழங்கும்

௧. (அ) "கண்ணி கார்நறுங் கொன்றை" புறம். க: க;(ஆ)"கொன்றைத் தார் சுவற்புரள" கலி. க: கக. என்பவற்றால், கொன்றைப்பூ இறைவனுக்குக் கண்ணியும் தாருமாதல் அறியப்படும்; அஃதன்றி மாலையுமாதல் "கொன்றை யவன்" (கலி கசஉ: உஅ)என்பதன் குறிப் பால் அறியலாகும்; (இ) "கார்விரி கொன்றைப் பொன் னேர் புதுமலர்த், தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்" (அகம். கடவுள்.) என மூன்றுமாகக் கூறப்படுதல்காண்க.

௨. "கனைகதிர் தெறுதலால்" (கலி. கந : கச) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௩. "மட்டவிழ் மூதூர் மலை மதாறு பரீஇய, கட்டளை கூந்தற் கன்ன மங் கைய, ட்டிறு மறையும் விட்டெரி கொளுவலி, னெட்டெனக் கிழிய திசை திசை தொடரா, மைந்தலை யுக்கி யபவுகா ளுகை, மந்தர வில்லி னந்தணன் விட்ட, தீவா யம்பு திரிகரு நகரி, ஞேவா தெழு மடங் குட்டு வாத் தோன்றி" பெருங். (க) சங: கசகு-கஉக.

(பிரதிபேதம்) * ...கதழ, † ...கெயில்.

ஐந்தாவது நெய்தல் ௩௩. கூ௰க

வெம்மையையுடைய நெருப்பு விசும்புற நிவந்து அழலுமாறு போல, செறிந்த கிரணங்களையுடைய ஞாயிறு எவ்வாயுஞ் சுடுகைனாலே மூளித்த (க) மூங்கில் தம்மிலே இழைதலைக் கொண்டதாக அதனிடத்தே கடுத்தெழுந்த முழங்கிய காட்டுத்தீ அவ்விடத்தைக் கைக்கொண்டு விசும்பிலே உறவோங்கி வெம்மையைச் * செய்யும், (உ) விலங்குகள் பலகாலுந் திரிகையினாலே மயங்கின அதரை யுடைய, மலைகள் பரந்துகுறுக்கிட்டுக் கிடக்கும் போதற்கரியசுரத்தை.எ - று.

செய்யுஞ்சுரம். அதரையுடையசுரம், போதற்கரியசுரம்; என்க.

விலங்கு, வருவிக்க. அலங்கலையுடைய கொன்றை என்றார், (௩)தாராகப் பூத்தலின். அலங்கல், அசைவுமாம்.

எ இறந்துதா மெண்ணிய வெய்துதல் வேட்கையா
லறந்துறந் தாயிழா யாக்கத்திற் பிரிந்தவர்

க. (அ) "ஞெலிக்ழை முழங்கழல் வயமா வெரூஉங், குன்றடை யருஞ்சுரம்" (ஆ) "முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூவெரிச், சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கு, மின்னு வருஞ்சுரம்" ஐங்குறு. ௩௦௭, ௩௯௬. (இ) "கைப்பொருத வோசையாற் கண்ணுமிழ்ந்த செந்தீயான், மெய்ப்பொருது மீதெழுந்த வெம்புகையா-னைப்ப, வெதிர்வேய் கடுங்கானம் போன்றதே வெம்போ, ரெதிர்வேர்தர் செய்த விடம்" பாரதம். (ஈ) "வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கினுயர் வரைக்கா டென்னச், செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு திறத்தேமுஞ் சென்று மாள்வோம்" வில்லி. கிருட்டினன். ௬.

உ. (அ) "மாநிரை, மாஅல் யானை யொடு மறவர் மயங்கித், தூறதர் பட்ட வாறுமயங் கருஞ்சுரம்" கலி. ௫: ௧-௩, (ஆ) "மாமறுகலின் மயக்குற்றன வழி"...........(இ) "மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி" நாற். கு. ௧௧௧. மேற்கோள்.

௩. (அ) "எதில பெய்ம்மழை காரென மயங்கிய, பேதையங் கொன்றைக் கோதைநிலை நோக்கி" (ஆ) "குறும்பல் கோதை கொன்றை மலர" ஐங்குறு. ௪௬௨. ௪௬௭. (இ) "நாண்மலர்க் கொன்றையும் பொலந்தார் போன்றன" பரி. ௧௪: ௧௦. (ஈ) "பொன்போனூர் கொன்றை புரிந்தன" திணைமாலை. ௧௦௬. (உ) "தாரி னூர்விரி கொன்றையாய்" (ஊ) "தொடைநவில் கொன்றையந் தாரினனும்" (எ) "தொடைமலி விதழியும்" (ஏ) "தொடைய லார்நறுங் கொன்றையான்" (ஐ) "தொடைநவில் கொன்றை யொடு" (ஒ) "தாரணி கொன்றையும்" (ஓ) "தாருறு கொன்றை தம்முடி வைத்த சைவனூர்" (ஔ) "கணிவளர்தார்ப் பொன்னிதழிக் கமழ்தார்|கொண்டார்" தேவாரம்

(௷) "கொள்ளைகண்மேற், றூங்குபொன் மாலைகளோடு" நாலாயிர.நாச்சியார். க . க.

(பிரதிபேதம்) * செய்யுஞ் சாதனையென்க முல்லைகள்பரந்து........போற்றற்கரியவரம் [illegible]கள்......வகளையுடைய [illegible].

[illegible] கலித்தொகை கரு.

(க) "பிறங்குநீர் சடைக்கரந்தா னணியன்ன நின்னிறம்
பசந்துநீ யிணையையாய் * நீத்தலு நீப்பவோ

எ - து: ஆயிழாய்! தாம் எண்ணிய காரியங்களைப் பெறுதலானுள்ள விருப்பத்தாலே அறத்தினைக் கைவிட்டு வெஞ்சுரத்தைக்கடந்து பிறங்குகின்ற நீரைச் சடையிலே மறைத்தவனைஒத்த பொருளாக்கத்திலே பிரிந்தவர் அழகினையுடைய நின்னிறம் பசந்து நீ இத்தன்மையையாக நின்னைக் கைவிடுதலுஞ் செய்வரோ? அங்ஙனஞ் செய்யார்காண். எ - று.

(உ) இறைவனை ஒத்தபொருள் என்றார், பொருள் நின்றுழிநில்லாது பலரிடத்துஞ் சென்றதேனும் ஒன்றானும் தனக்குக் கேடின்றி யிருத்தலின்.

அணி-அழகு.

கக கரிகாய்ந்த கவலைத்தாய்க் (ங) கல்காய்ந்த காட்டகம்
வெருவந்த வாறென்னார் விழுப்பொருட் ககன்றவ
ருருவவேற் றார்தியா † னொள்ளணிநக் கன்னநின்
‡ னுருவிழந் திணையையா யுள்ளலு முள்ளுபவோ

எ - து: வெந்த கரியினையுடைய பல வழியினையுடைத்தாய்க் கற்கள் காய்ந்த காட்டகத்தை வெருவுதல் வந்த வழியென்று கருதாராய் வடிவையுடைய எறிகிய கூர்மையையுடையானை ஒத்த விழுப்பொருட்கு அகன்றவர் ‖ நக்கஒள்ளிதாகிய அணியினையுடைய நின்னுருவை இழந்து நீ + இத்தன்மையையாக அப்பொருளையேநினைத்தலையுஞ் செய்வாரோ? அங்ஙனஞ்செய்யார்

காண். எ - று.

∴ நக்கு என்னும் எச்சம் ஒள்ளிதாகிய என்னும் வினை கொண்டது.

க. "தேறுநீர் சடைக்கரந்து" கலி. க: உ.

உ. "அருவிதாழ்ந்த" (புறம். ககூஅ: க) என்னும் செய்யுளில் 'ஆலமர் கடவுளன்ன நின்' என்றதற்கு ஆலின்கீழமர்ந்த முக்கட் செல்வனாகிய கடவுளையொப்ப என்னும் நிலைபெற் றிருப்பேனென் றிருக்கின்ற நின் னென்று ரைப்பினுமமையும்' என்று எழுதியிருக்கும் பின்னுரையும் "வீதலறியா விழுப்பொருள்" (கலி. அகூ: உக) என்பதற்கு எழுதியிருக்கும் உரையும் ஈண்டு அறிதற் பாலன.

ங. (அ) "மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்" (கலி. அ: க) என்பதும் (ஆ) "மலைவெம்ப" (கலி கங: ௫) என்பதும் (இ) அதன்குறிப்பும் ஒப்பு நோக்கற் பாலன.

(பிரதிபேதம்) * நீக்கறு[illegible]லோ. † ஒண்ணக்க வளையனின், ‡ வெருவிழுந்த, || நமக்கு [illegible]டைய, + இதன்மையாக, ∴ [illegible]என்னும்.

அ௫0 கலித்தொகை க0ச

வேயுறழ் மென்றோட் டுயில்பெறும் வெந்துப்பிற்
உ௫ சேஎய் சினனஞ்சான் சார்பவ னென்றாங்
கறைவனர் நல்லாரை யாயர் முறையினா
னுண்மீன்வாய் சூழ்ந்த மதிபோன் மிடைமிசைப்
பேணி நிறுத்தா ரணி ;
உ௯ அவ்வழிப், பறையெழுந் திசைப்பப் பல்லவ ரார்ப்பக்
குறையா மைந்தக் கோ ளெதிரெடுத்த

ஙறைவலஞ் செய்யிடா யிறுத்தன வேறு;

௩௨ அவ்வேற்றின்,

மேனிலை மிகலிகலின் மிடைகழி பிழிபு மேற்சென்று
வேனுதி புரைவிறற் றிறனுதி மருப்பின் மாறஞ்சான்
பானிற வெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானை

நோனுது குத்து மிளங்காரித் தோற்றங்காண்
பான்மதி சேர்ந்த வரவினைக் கேள்விடுக்கு
நீனிற வண்ணனும் போன்ம்;

௩௩ இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோட்டழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடில் வெருளி யெழிலேறு கண்டை யிஃதொன்று
வெருவரு தூம மெடுப்ப வெகுண்டு
திரிதருங் கொல்களிறும் போன்ம்;

௩௪ தாளெழு துணிபிணி யிசைதவிர் பின்றித் தலைச்சென்று
தோள்வலி துணிபிணி துறந்திறந் தெய்தி மெய்சாய்ந்து
கோள்வழுக்கித் தன்முன்னர் வீழ்ந்தான்மேற் செல்லாது
மீளும் புகரேற்றுத் தோற்றங்காண் மண்டமருள்
வாளகப் பட்டானை யொவ்வா னெனப்பெயரு
மீளி மறவனும் போன்ம்;

௩௫ ஆங்க, செறுத்தறுத் துழக்கி யேற்றெதிர் நிற்ப
மறுத்து மறுத்து மைந்தர் சாரத்
தடிகுறை யிறுபிறுபு தாயின கிடப்ப
விடியுற ழிசையி னியமெழுந் தார்ப்ப

கொதிக்துராய்க் குன்றிவர்ந்து (௧) கொடிக்கொண்ட கோடையா
லொதுக்கரிய நெறியென்னு ரொண்பொருட் ககன்றவர்
(௨) புதுத்திங்கட் கண்ணியான் பொற்பூண்ஞான் றன்னநின்
* கதுப்புலறுங் கவினையாய்க் காண்டலுங் காண்பவோ

எ - து: ஞாயிறு கீழ்த்திசையிடத்து உதயகிரியிலே வந்து தோன்றிப் பின்பு கொதித்துப் பரந்து தான்கொண்ட கோடைக் காலத்தாலே போதற்கு அரிய வழியென்று கருதாராய்ப் புதிய திங்களாகிய கண்ணியையுடையானை யொத்த ஒள்ளியபொருட்கு அகன்றவர் பொன்னாற்செய்த தலைக்கோலங்கள் தாழ்ந்து விளங்கின நின்மயிர் அவ்வாறன்றிக் காய்கின்றஅழகை நீ யுடையையாக அப்பொருள் வேட்கையை மனத்தாற் காணுதலையுஞ் செய்வரோ? அங்ஙனஞ் செய்யார்காண். எ - று.

ஆங்கு, அசை.

௨௦ அரும்பெற (௩)லாதிரையா னணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல வொருங்கவர்
பொய்யா ராகுத றெளிந்தன
மையீ ரோதி மடமொழி யோயே

எ - து: கருமையினையும் நெய்ப்பினையுமுடைய † ஒதியினையும் மடப்பத்தையுடைய மொழியினையுமுடையாய்! பெறுதற்கு அரிய ஆதிரையானையுடைய(௪) இறைவன் திருமேனி அழகைப்பெறும்படி மலர்ந்த பெரியகுளிர்ந்த இச்சண்பகம் பருவம்பொய்யாதவாறுபோல அவர் தாம் கூறிய பருவத்தைப் பொய்யாராய்வருதலை அவர்கூறியகூற்றால்யேம்யாவும் ஒருங்கு தெளிந்தேம்;

௧. "கொடிமிசை மையறு மண்டிலம்" கலி. ௧௪௯: ௧௧-௧௨.

௨. (அ) " திங்கட் புதுமுகிழ் சூடினரே " தேவாரம். (ஆ) " குளிர் மதிக் கண்ணியார்க்கு" சீவக. ௨0அ. (இ) "அங்கொடு வேணியிற் கண்ணியெனை விருந்து, தாற்றுமற வொழிந்த வேற்றத் தானும் " கல். ௨௩: ௩௨-௩௩; (ஈ) " திங்கட் கண்ணி முழுமுதலை " கூர்ம. தக்கனைச். ௧௯. (உ) " மாசறு மிளமதிக் கண்ணி வார்சடை, யீசன்மேல் " காசீ. காசியின் சிறப்பு. ௨எ. (ஊ) "திங்களங் கண்ணி யானை" சேது. சீதை குண்டச். ௪௩. (எ) " ஆருடிய வேணியின் மிமிசைமிக் கமிழ்தாடிய வெண்மதிக் கண்ணியனே" (ஏ) " நாண்மதிக் கண்ணி யார்தாம் " திருவானைக்காப். பராசரன். ௪௧, கவுதமப். ௯௩. (ஐ) " வனையு மா மதிக் கண்ணியான் " விநாயக. கணபதி. ௧௪. (ஒ) "உருவவெண் டிங்கட் கண்ணி யொண் சுடர்க்கு" உத்தரகோச. ஐந்தெழுத்து. ௪௯.

௩. "பின்னரு, மாதிரையா ளிதிரையா னென்றொன் றயர்வுறமா, லூர் திரைநீர் வேலி யுலகு" முத்தோள். கடவுள் வாழ்த்து.

௪. "செண்பக மலரெனச் சிவந்த மேனியாள்"

(பிரதிபேதம்) * கதைப்புலகும் சீவிகை, † ஒதியினையுடைய மடப்பத்தை.

அன்னைக் தெளிக்த பருவம் கழிவதற்கு முன்னே வருவர்; அவர் மொழியைத் தெளிவாயாக என ஆற்றுவித்தாள். எ - று.

இது வைகம்மிதலென்னும் மெய்ப்பாடு எய்திநின்ற தலைவிக்குப் பின்னர்ச் சூழ்ச்சி பிறந்தது.

(க) இஃது இளவேனிற் பருவங்குறித்து வற்புறுத்திப் பிரிய ஆற்றி யிருந்து அப்பருவம் வந்தபின்னர் ஆற்றாளாய் இரங்குகின்ற தலைவியைத் தோழி ஆற்றுவித்தலான் இரக்கமாகிய உரிப்பொருள் சிறத்தலின், அவ் வுரிப்பொருள் முதலிலுங் கருவிலுஞ் சிறந்ததென்று இரக்கத்திற்கு உரிய

நெய்தலிற் கோத்தார்; "முதல்கரு வுரிப்பொரு ளென்ற * மூன்றி, னுவலுங் காலை முறைசிறந் தனவே, பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (௨) என்றாராகலின். இது பாலைக்கு உரிய முதலுங் கருவும் † வந்து அதற்கு உரிய உரிப்பொருள் சிறவாமல் நெய்தற்கு உரிய உரிப்பொருள் சிறந்ததாயிற்று.

இது தரவியல் ஒவ்வாது ‡ அதனகப்பட்டுவர்த சுரிதகத்தானிற்ற ஒத்தாழிசைக்கலி. (௩௩)

"முல்லை || குறிஞ்சி மருத நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (௩)என்புழி, சொல்லாதமுறையாற் சொல்லவும் படுமென்றலின் இத்தொகையைப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலென இம்முறையே × கோத்தார் ✛ நல்லந்துவனார்.

நெய்தற்கலி முற்றும்.

கலித்தொகை முற்றும்.

நெய்தற்கு ஆசிரியன் பாரத்துவாசி

நச்சினார்க்கினியன் செய்த

உரை முற்றும்.

---

௧. "திணைமயக் குறுதலும்" என்னுஞ் சூத்திரவுரையில் 'மயக்குறுதலும்' என்றதனான் அவ்வவ நிலங்கட்கு உரிய முதலுங்கருவும் வந்து உரிப்பொருள் வேறுதவன்றி அவ்வந் நிலங்கட்கு உரித்தல்லாத முதலுங் கருவும் வந்து உரிபொருண் மயக்குவனவுங் கொள்க வென்றும், 'தெய்வமுணவே' என்னுஞ்சூத்திரத்தினுரையில் 'எந்நில மருங்கின். என்பதனால் பூவும் புள்ளும் வரைவின்றி மயங்கு மெனவே ஒழிந்த கருவும் மயங்கு மென்பது 'சூத்திரத்துப் பொருளன்றியும்' என்பதனான் உரையிற் கொள்க வென்றும் கூறி இச்செய்யுளை மேற் கோள் காட்டினர் நச்சினார்க்கினியர்; தொல். அகத். சூ. ௧௨; ௧௮.

௨. தொல். அகத். சூ. ௩.

௩. தொல். அகத். சூ. ௫.

(பிரதிபேதம்) * மூன்றென, †வந்துபாலைக்குரிய, ‡ அதன்சணகப்பட்டு, || குறிஞ்சி, × கோத்தார கலித்தொகைக்கு ஆசிரியன்பாரத்துவாசி நச்சினார்க்கினி யான் செய்த உரைமுற்றும், ✛நல்லந்துவனார்.

உரைச்சிறப்புப்பாயிரம்.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொரு ளுண்ணிறைந் துணர்ந்து
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னூற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
† தேக்கிய சிந்தைய னாகிப் பாற்பட
வெழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்று
மிழுக்கற வாய்ந்த ‡ வழுக்கின்றேல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறையு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியு
முறையிடை யிட்ட காண்டிகை யுரைந்நூல்
ஆன்றோர் || புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபது பாட்டு × முணர்பவர்க் கெல்லா
முரையற + முழுதும் புரைபட வுரைத்தும்

ஒலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி

(பிரதிபேதம்) * உரைததுப், † தேர்ததமைச்சேர்தைய, ‡ வழுத்து தொல்,
|| புகழ்"வறிவினிற், × உரையபவர்கசெல்லாம், + முழுதும்
படைவுரு விதநும்.

[illegible] கலித்தொகை

முறைப்பட வினையை முடித்துக் *காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற * விளம்பியும்,
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்

வந்தா தரிப்ப † வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தரு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து ‡ பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும்,
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்,
தண்டமிழ் ‖ தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாச
ஞன்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
னவின்ற வாய்மை நச்சினார்க் கினிய
× னிருவினை கடியு மருவியம் பொதியின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை யானே.

(பிரதிபேதம்) * அமைத்தும், † வரைபெரு மஞ்சிப், ‡ பொருட்டொடர் படுத்து, ‖ தெரிந்தவண் புகழ், × அருவினைகடியும்.

உரைச்சிறப்புப்பாயிரம்

ஆசிரியம்

தொல்காப் பியத்திற் றொகுத்த பொருளனைத்தும்
* மெல்லார்க்கு மொப்ப வினிதுரைத்தான்—சொல்லார்
†மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு.

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் காற்ற
வெச்சி றைந் திசையு மூண்று ‡ மமிழ்தென வெழுநா வெச்சின்
மெய்சுவா ளுமினும் விண்ணோர் ‖ மிசைகுவர் வேத போத
× னச்சினார்க் கினிய னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.

+கலித்தொகைக்கு

ஆசிரியன் பாரத்துவாசி நச்சினார்க்கினியன் செய்த
உரை முற்றும்.

(பிரதிபேதம்) * எல்லார்க்கு மேற்பவினிது, † மதுரா புரியினியான் மாமறையோ னின்பக், கதிரார் சுடர். ‡ அமிர்தென ‖ நுகர்குவர், × நச்சினார்க் கினியா னுவி னல்லுரை கவில்வர் நல்லோர். + கலித்தொகைக்கு நச்சினார்க்கினியர்

நான்காவதுமுல்லை ச.

கூடுக

ருடு பாடேற்றுக் கொள்பவீர் பாய்ந்துமே லூர்பவர்

கோடிடை நுழைபவர் கோட்சாற்றுபவரொடு
புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வி லைவ ரட்ட
பொருகளம் போலுந் தொழூஉ
௬0 தொழுவினுள், கொண்டவே றெல்லாம் புலம்புகத் தண்டாச்சீர்
வாங்கெழி னல்லாரு மைந்தரு மல்லலூ
ராங்க ணயர்வர் தழூஉ ;

௬௩ பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்
கோடு குறிசெய்த மார்பு;
௬௫ நெற்றிச் சிவலை நிறையழித்தா னீண்மார்பிற்
செற்றார்கண் சாயயான் சாரா தமைகல்லேன்
பெற்றத்தார் கவ்வை யெடுப்ப வதுபெறி
னற்றீயா ராயர் மகள் ;
௬௯ தொழீஇ; ஒருக்குநா மாடுங் குரவையு ளம்மை
யருக்கினான் போனோக்கி யல்லனோய் செய்தல்
குரூஉக்கட் கொலையேறு கொண்டேன்யா னென்னுந்
தருக்கன்றோ வாயர் மகன் ;

௭௩ நேரிழாய், கோளரி தாக்கிறுத்த கொலையேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
யார்வுற் றெமர்கொடை நேர்ந்தா ரலரெடுத்த
வூரரை யுச்சி மிதித்து ;
௭௭ ஆங்கு;
தொல்கதிர்த் திகிரியாற் பரவுது மொல்கா

வருமுறழ் முரசிற் றென்னவற்
கொருமொழி கொள்கவிவ் வுலகுட னெனவே.

இது "நாடகவழக்கினும்" என்னும் (க)சூத்திரத்துப் "பாடலுளமை யாத" என்றதனுல் ஏறுதழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக்

க. தோல். அகத். சூ. ருஎ. இச்சூத்திரத்தின் இவருரையினும் இச்செய்யுள் மேற்கோளாக இக்குறிப்பு, சிறிதுவேறுபாட்டோடவிளக்கமாக உளது.

கூறி, இக்குரவையுள் அவனைப் பாடுகம் வாவென்றுட்கு, அவள் உடம்பாட்டினுள், தான் அலரச்சம் நீங்கினமையும் அவன் தன்னை வருத்தினமையுங் கூறிப் பாடி, பின்னர்த் தோழி நமர் அவற்கு நின்னைக்கொடைநேர்ந்தாரெனக்கூறியது.

இதன் பொருள்.

(க)மலிதிரை யூர்ந்துதன் (உ)மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
(ஙூ) *புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினுன் வணக்கிய (ச)வாடாச்சீர்த் (ரு)தென்னவன்
(இ) றொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாய ரொருங்குதொக் கெல்லாரும்
(சு)வானுற வோங்கிய வயங்கொளிர் (எ)பனைக்கொடிப்
பானிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளையும்

க. தரவுசுற்றடிகுறைந்துவருமென்பதற்கு "மலிதிரை.........தொழூஉ" என்னும் பகுதி மேற்கோள். தொல். செய். சூ. ககசு. நச்.

௨. "அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி, வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு, தென்றிசை யாண்ட தென்னவன்" சிலப். கக: கள - ௨௨. என்பதும் 'அங்ஙனமாகிய நிலக்குறைக்கு சோழநாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக்குண்டேர்க் கூற்றமுமென்னுமிவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்டதென்னவன்' என்றெழுதிய உரையிலுள்ள செய்தியும் ஈண்டு அறிதற்பாலன.

௩. அரசர் பிறவரசரிடம் வலியாற்கொண்ட நாட்டைத் தமதென அறிவித்தற்காக அங்கே தம் கொடியைப் பலருமறியப் பொறித்தல் மரபு; இதனை, "கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி, நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த, குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே" (புறம். ௫௮: ௩௦ - ௩௨) என்பதனாலும் அறிக.

௪. "வாட்டருஞ்சீர்" சிலப். க: ௪௧.

௫. "வீவில் குடிப்பி னிருங்குடி யாயரும்" கலி. க௦௫ எ.

௬. "தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை, வானுறவோங்கி" வெற்றி.

எ. பனைமுன் கொடிவரின் ஐகாரங் கெடாதுநிற்றற்கு, "பனைக்கொடி" என்பது மேற்கோள்; தொல். உயிர். ௬. அ௩. இளம். நச்.

(பிரதிபேதம்) * புலியொடு.

பொருமுரண் மேம்பட்ட *பொலப்புனை புகழ்நேமித்
(௧)திருமறு மார்பன்போற் றிறல்சான்ற காரியு
(௨)மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதன்

முக்கண்ணு னுருவேபோன் முரண்மிகு குராலு
மா(ங)கடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வல்லா னிறனேபோல் வெருவந்த †சேயு மாங்கப்
பொருவரும் பண்பி னவ்வையும் பிறவு
முருவப்பல் கொண்மூக் குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர் தொழூஉ

க. "திருமறு மார்பநீ யருளல் வேண்டும்" பரி. க: ௬௪. திருமறு—ஸ்ரீவத்ஸம்.

உ. "உமையொடு புணர்ந்த விமையா நாட்டத்துக், கண்ணணங்கு கவி ரொளிக் கடவுள்" பெருங். (க) ௫௩: ௧௫ - ௧௬.

௩. (அ) "பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச், சூர்முத றடிந்த சுட ரிலை நெடுவேல்" திருமுரு. ௪௫ - ௪௬. (ஆ) "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச், சேயுயர்பிணிமுக மூர்ந்தம ருழக்கித், தீயழ லவைப்பத் திரியவிட் டெறிந்து, நோயுடை நுடங்குசூர் மாமுத றடிந்து, வென்றியின் மக்களு ளொருமையொடு பெயரிய, கொன்றுண லஞ்சாக் கொடுவினைக் கொஃறகை, மாய வவுணர் மருங்கறத் தபுத்தவேல்" பரி. ௫: ௧-௭. (இ) "கட்டுடைச் சூருடல் காமங்கொண்டு பற்றிப் புக்குந்து பசுங்கடல் கண்டு, மாவொடுங் கொன்ற மணிநெடுந் திருவேற், சேவலங் கொடியோன்" (ஈ) "விண்ணுடைத் தண்ணும் கண்ணிலா வொருத்தன், மறிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த, களவுடல் பிளந்த வொளிகெழு திருவேற், பணிப்பகை யூர்தி" (உ) "மேல்கடற் கவிழ்முகப் பொரியுடன் மாவு, நெடுங்கடற் பரப்பு மடுந்தொழி லரக்கரு, மென்னுளத் திருளு மிடைபுகுந் துடைத்த, மந்திரத் திருவேன் மறங்கெழு மயிலோன்" (ஊ) "கடுவினை யங்குரங் காட்டியுள் ளழுக்கா, றெண்டிசைச் சாகைகொண் டிருண்மனம் பொதுளிக், கொடுங்கொலை வகுத்துக் கடும்பழிச் சடையலர், திரண் டைஞ்ஞூறு திரண்டவக்காவதஞ், சுற்றுடல்பெற்றுத் துணைப்பதிரையிர, மற்றதி னீண்டு மணியுடற் போகி, யைம்பது நூறுட னகன்றுசுற் றொழுக்கிப், பெருங்கவி ழிணர்தத் தலைகீழ்க் குலவிய, வடன்மாக் கொன்ற நெடுவேற் குளவன்" கல். ௧௧: ௪ - ௭; ௬௧: ௨௭ - ௩௦; ௭௩: ௨ - ௯; ௮௬: ௧ - ௬. என்பவைகளும் (எ) "நளியிரும் பரப்பின் மாக்

(பிரதிபேதம்) * புலம்புனை, † சேவுமாங்க.

எ - து: தன் நாட்டைக் கடலினுடைய மிக்க திரையேறிக் கைக்

கொண்டுவிடுகையினாலே தனக்கு நாடு இடமுண்டாம்படியாக மனத்தின் இளைப்பின்றாய்ப் பகைவரைத் தன் வலியினாலே தாழ்க்கவேண்டி அவர்மேலே சென்று அவருடைய புலிப்பொறியையும் விற்பொறியையும் அவர் நாட்டினின்றும் போக்கி விளங்குகின்ற கயலை அவ்விடத்தே பொறித்த புகழையுடைய கெடாத தலைமையினையுடைய பாண்டியனுடைய பழைய புகழை நிலைபெறுத்தின குடியோடு ஒக்கத் தோன்றின பசுவினத்தில் ஆயரெல்லாரும் சேரத் திரண்டு விளங்குகின்ற வானிலேயுறும்படி *ஓங்கிய ஒளிபெருகுகின்ற (க)பனைக்கொடியினையுடைய (உ)பாலின துநிறத்தையுடைத்தாகிய நிறத்தினை

கடன் மூன்னி, யானங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்; சூருடை முழுமுத றடிந்த பேரிசைக், கடுஞ்சின விறல்வேள்" (பதிற். கக: ரு-சு) என்பதும் அதில் சூருடை முழுமுதலென்பதற்கு, "சூரவன்மா, தனக்கு அரணாகவுடைய மாவின் முதலென்றவாறு; இனி, சூரவன்மா, தான் ஒருமாவாய் நின்றானென்று புராணமுண்டாயிற் சூரனாதற் றன்மையையுடைய மாவின் முதலென்றவாறும்' என்று எழுதியிருக்கும் உரைப்பகுதியும் (ஏ) "போரெதிர்ந் தேற்றார் மதுகை மதந்தபக், கானெதிர்ந் தேற்ற கமஞ்சூ லெழிலிபோ, னீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச், சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்" (பரி. கஅ: க-ச) என்பதும் அதன் உரையும், (ஐ) "கவிழிணர், மாமுத றடிந்த மறவில் கொற்றத், தெய்யா நல்லிசைச செவ்வேற் சேஎய்" திருமுரு. ருக - சுக. என்புழி, "மாமுத றடிந்த" என்பதற்கு 'அவுணரெல்லாரும் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாவை வெட்டினான்' என்று எழுதியிருக்கும் விசேடவுரையும் ஈண்டு அறிதற்பாலன.

க. (அ) "அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்" புறம். ருசு: ச. (ஆ) "பொற்பனை வெள்ளையைப் போற்றுதொழுகின்று" இன்னா. க. (இ) "மடற்பனை யுயர்த்த மதிநிறப் பெருமனுக்கு" (ஈ) "கார், வெண் டோட்டினம் பனைமீமிசை யுயர்த்தோனென விளர்த்த" (உ) "வானுற்ற தண்பனை யுயர்த்தவன்" (ஊ) "கள்ளவிழும் வெண்டோட்டுக் கரும் பனைமீ மிசையுயர்த்த, வெள்ளிவரை யனையானும்" (எ) "போந்தை மீதுயர்த்த வென்றிப் புரவலன்" பாகவத. (ஏ) சையாதி, உச. (ஐ) வேய்ங்குழல். கக. உருக்குமிணி மணம். க. பிரத்தியும்னன் மணம். கச. சுபத்திரை மணம். கஅ.

உ. (அ) "பானிற வண்ணனோக்கிற் பழியுடைத்து" சீவக. உ0க. (ஆ) "பான்மேனியான்" பழ. கங.

(பிரதிபேதம்) * ஓங்கிய பனைக்கொடி.

புடையவனைப்போலே பழித்தலீற்ற வெள்ளையேற்றையும் பொருகின்ற மாறு பாட்டினாலே எனையவற்றின்மேலான பொன்னாற்பனைத்தபுகழையுடைத்தாகிய சக்கரப்படையையுடைய திருவாகிய மறுவையுடைத்தாகிய மார்பனைப் போலே அமைந்த கரிய ஏற்றையும் மிக்குவிளங்குகின்ற தாழ்ந்த (க) சடையினையும் ஒரு*பாகத்திலே மேவுதல்வரும்பிறைபோன்றநுதலினையுடையாளையுமுடைய மூன்றுகண்ணினையுடையானுடைய நிறம்போலே மாறுபாடு மிக்க குரலேற்றையும் பெருமையையுடைய கடல் கலக்கமுறும்படி உள்ளேசென்று மாமரத்தைவெட்டின மீளாத †போரையுடைய வேலை ஏந்திய (உ) முருகனது நிறம்போல அச்சமுண்டாக சிவந்த ஏற்றையும் அவ்வாப்புவருந் குணத்தினையுடைய ஏற்றையும் ஒப்பில்லாத பிறவேற்றையும் தடித்தலையுடையவாகியபல மேகங்கள் இரண்டனைபோல முழங்குகற்பா விரும்பி விரும்பித் தொழுவிலே

புகுதவிட்டார். எ - று.

கஅ அவ்வழி, (௩)முள்ளெயிற் றேஎர் (௪)இவளைப் பெறுமிதோர்
வெள்ளேற் றெருத்தடங்கு வான்

எ - து: ‡அவ்விடத்து இந்த ஒப்பில்லாத வெள்ளிய ஏற்றின் கழுத்திலே கிடக்குமவன் கூரிய எயிற்றினையும் அழகினையுமுடைய இவளைக்கூடும். எ-று.

---

௧. (அ)"பிறைநுதல் வண்ணமாகின்று" (ஆ) "கறைமிடற்றண்ணல் காமர் சென்னிப், பிறைநுதல் விளங்கு மொருகண்போல" (இ) "பால்புரை பிறைநுதற் பொலிந்தசென்னி. நீல மணிமிடற்றொருவன்" புறம். ௧:௫. ௫௫: ௪ - ௫ ௯௧: ௫ - ௬ (ஈ) "பிறைநெற்றியோடுற்ற முக்கண்ணினார்" (உ) "பிறைதாங்கு நெற்றியர்" (ஊ) "பிறைசேர் நுதலிடைக் கண்ணமர்ந் தவனே" (எ)"திங்க டிலகம் பதித்த நுதலர்" தேவாரம். என வருதலால், பிறைநுதலென்பதற்கு, பிறையணிந்த நுதலென்று பொருள்கொண்டு 'சடைமேவரும்'என்பதற்கு அதற்கேற்பப்பொருள் கொள்ளினும் அமையும்.

௨. முருகவேள் செந்நிறமுடையவரென்பதை, 'செவ்வேள்' 'சேய்' என வழங்கும் பெயர்களும் வலியுறுத்தும். "உருவு முருவத்தீ யொத்தி" என்பது பரி. ௧௧: ௧௧.

௩. (அ) எருதழுவினானுக்குரியளிவளெனவந்த கைக்கிளைக்கு, "முள்ளெயிற்றேஎர்...... .....கொள்பவன்" என்னும் பகுதி மேற்கோள் தொல். அகத். சூ. ௫௩. ௩௪. (ஆ) முள்ளெயிறு இந்நூற்பக்கம் ௩௩: ௧-ஆம் குறிப்புப் பார்க்க.

௪. "இவளைப் பெறுமிதோர்... ....சார்பவன்" இவ்வடிகளோடு "காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ், வேரி மலர்க்கோதையாள் ..

(பிரதிபேதம்) * பாகத்தேமேவுதல். † போரையுடைய முருகனது. ‡ அவ்விடத்து நல்லாய ரிந்த வொப்பில்லாத.

௨௦ ஒள்ளிழை, வாருறு(க)கூந்தற் றுயில்பெறும் வைமருப்பிற்
(உ)காரி கதனஞ்சான் கொள்பவன்

எ - து: கூரிய கொம்பையுடைய கரிய ஏற்றினது கோபத்தை அஞ்சாது அதனைத் தழுவுமவன் இந்த ஒள்ளிய இழையினையுடையாளுடைய வாருதலுற்ற கூந்தலிலே துயிலுதலைப் பெறும். எ - று.

௨௧ சுரரி

*வெருஉப்பிணை (௩)மானோக்கி னல்லாட் பெறூஉமிக்
(௪)குரூஉக்கட் கொலையேறு கொள்வான்

எ - து: குரால் †நிறத்தவாகிய கண்ணினையுடைய கொலைத்தொழிலையுடைய ஏற்றைத் தழுவுமவன், வெருவுதலையுடைய பிணையாகிய மானோக்குப் போலும் நோக்கினையுடைய இரண்டாகியகண்களையுடைய இந்த ‡நல்லாளைக் கூடும். எ - று.

(௫)அரி, ஆகுபெயர்.

௨௫ வரிக்குழை,

வேயுறழ் (௬)மென்றோட் டுயில்பெறும் வெந்துப்பிற்
||சேஎய் சினனஞ்சான் சார்பவன்

.........பூவைப் புதுமல ராள்" (சிலப்.கா: கொளு, க - எ.) என்னும் பகுதிகள் ஒப்புநோக்கற் பாலன.

க. (அ) "மகளிர், விரிமென் கூந்தன் மெல்லணை வதிந்து" பதிற். ௫௦: ௧௮ - ௧௯. (ஆ) "இருளைங் கூந்த லின்றுயில்" (இ) "கூந்தன் மெல்

லணைத் துஞ்சி" அகம். ௨௫௫: ௧௯, ௫௦௮: ௧௫. (ஈ) "இருண்மென் கூந்த லேமுறை துயிலே"

௨. "காரி கதனஞ்சான்" கலி. ௧௦௪: ௭௪.

௩. "மாசர்பிணை யன்ன மகிழ்மட நோக்கே"

௪. "குருஉக்கட் கொலையேறு" கலி. ௧௦௪: ௭௧.

௫. அரி, செவ்வரி கருவரி; இச்சொல் இங்கே அவற்றையுடைய கண்ணை உணர்த்தி நிற்றலான் ஆகுபெயரென்றார்.

௬. ஆடவர் தம்மனைவியர்தோளிற் றுயில்வதாகக் கூறல் மரபு:(அ)"அரிவை தோளிணைத் துஞ்சிக், கழிந்த நாளிவண் வாழு நாளே" குறுந். ௯௨௩. (ஆ)"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ, றாமரைக் கண்ணா னுலகு" குறள். ௧௧௦௩.

(பிரதிபேதம்) * வெருப்பிணை, † நிறத்தையுடையனவாகிய, ‡ கல்லேனை கூடும்வரிக்குழை. || சேனனைஞ்சான்.

நான்காவது முல்லை ச. ௬௱௭

எ - து: வெய்ய வலியினையுடைய சிவந்த ஏற்றினது சினத்தை அஞ்சானாய் அதனைத் தழுவுமவன், வரியினையுடைத்தாகிய குழையினையுடையாளுடையமுன்கையொக்கும் மெல்லியதோளிலே* துயிலுதலைப் பெறும். எ-று.

வரி - (க) அருப்புத்தொழில்.

௨௱ என்றாங்

கறைவளர் நல்லாரை யாயர் முறையினு
ணண்மீன்வாய் சூழ்ந்த மதிபோன் மிடைமிசைப்
பேணி நிறத்தா ரணி

எ - து: †என்று நல்லாயர் தமக்குரிய முறைமையாலே‡சுற்றுவனவாகிய நாளாகிய மீன்கள் தன்னிடத்தைச் சூழப்பட்டமதிபோலே அவ்விடத்திலிட்ட பரண்களின்மேலே தத்தம் மகளிரைத் திரளாக ஒப்பித்து நிறுத்தினர். எ - று.

(உ)மீனும் மதியும், ஆயத்திற்கும் மகளிர்க்கும் ||உவமை.

உகூ அவ்வழிப், பறையெழுந் திசைப்பப் பல்லவ ரார்ப்பக்
குறையா மைந்தர் கோளொதி ரெடுத்த
நறைவலஞ் செயவிடா விறுத்தன வேறு

எ - து: அவ்விடத்துப் புகை வலம்வர விடப்பட்டு நிறுத்தப்பட்டன வாகிய ஏறுகள், பறை மிக்கொலிக்கையினாலும் பலரும் ஆரவாரிக்கையினாலும் வலிகுறையாத ஆயர்கோடற்றொழிற்கு எதிரே என்றன. எ - று.

௩௨ அவ்வேற்றின்
(௩)மேனிலை மிகலிகலின் மிடைகழி பெழிபு மேற்சென்று
வேனுதி புரைவிறற் றிறனுதி மருப்பின் மாறஞ்சான்

க. அருப்புத்தொழில் என்றது ஆபரணங்களில் நுண்ணிதாகச் செய்யும் சிறிய அரும்புபோன்ற வேலைகளை. "தாள் களங்கொலக் கழல்பறைந் தன" (புறம். ௪: ௩) என்புழி 'கழல்பறைந்தன' என்பதற்கு, 'வீரக்கழ அருப்புத்தொழில் பறைந்தவை' என்று எழுதியிருக்கும் உரை ஈண்டு அறிதற்பாலது.

உ. "தாரகையோடு ஆயத்தார்க்கு ஒத்த பண்பு, பன்மையும் ஒன்றற்குச் சுற்றமாய் அதனிற் சூழ்ந்து நிற்றலும்.........மதியோடு தலைமகட்கு ஒத்த பண்பு, கட்கினிமையும் சுற்றத்திடை அதனின் மிக்குப் பொலிதலும்" என்று (கோவையார். ௧௨௪) பேராசிரியர் எழுதியிருக்கும் விசேடவுரை இங்கே அறிதற்பாலது.

௩. "ஐஞ்சீரடி முடுகியலோடொன்றாய் வந்த வெண்பா,கலிக்கு உறுப்பாய் வருதற்கு, "மேனிலை மிகலிகலின்..........வண்ணனும் போன்ம்" என்னும் பகுதி மேற்கோள்; தொல். செய். சூ. ௧௭, ௧௪.

(பிரதிபேதம்) * துயிலைப்பெறும் என்னும் கறையன நல்லாரை, † என்று தமக்குரிய, ‡ சுற்றுவன ராகிய, || உவமைஅரியாகுபெயர். வரி அருப்புத்தொழில். அவ்வழி.

௬௫அ கலித்தொகை ௧0௪.

பானிற வெள்ளை யெருத்தத்துப் *பாய்ந்தானை
நோனாது குத்து மிளங்காரித் தோற்றங்காண்
பான்(௧)மதி சேர்ந்த வரவினைக் கோள்விடுக்கு
நீனிற வண்ணனும் போன்ம்

எ - து: அந்த ஏறுகளின்மேலே நிலைபெறும் மிகுதலையுடைத்தாகிய மாறுபாட்டினாலே மிடைமிசையினின்றும் இழிந்து அதனைவிட்டுச்சென்று வேலினது முனையையொக்கும் †முனையையுடைய கொம்பினது விறலாகிய திறத்தினையுடைய மாறுபாட்டிற்கு அஞ்சானாகிப் பானிறம்போலும் வெள்ளிய ஏற்றினது கழுத்திலே ‡பாய்ந்தானைப்பொறாதே மேற்சென்று குத்தும் இளைய காரிய ஏற்றினது தோற்றரவு, பால்போலும் மதியைச் சேர்ந்து மறைத்த பாம்பினை அது மறைத்ததன்மையை விடுவிக்கும் நீலநிறம்போலும் || நிறத்தை யுடையவனையும் ஒக்கும்; அதனைப் பாராயென்றாள். எ - று.

வண்ணன், மாயோன்.

௬௬ (௨)இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர் சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
(௩)÷வாடில் வெகுளி யெழிலேறு கண்டை +யிஃதொன்று

க. (அ) "மாமதிகோண், முன்னம் விடுத்த முகில்வண்ணன்" பெரிய திரு மடல். கக. (ஆ) "தேம்பலிளந்திங்கட் சிறைவிடுத் தைவாய்ப், பாம்பி னணைப் பள்ளிகொண்டாய்" பெரியதிருமொழி. (கக) அ: எ. (இ) "கோள் வாய் மதிய நெடியான்விடுத் தாங்கு" சீவக. சஙச. (ஈ) "பான்மதி விடுத்தனே" யா - வி. மேற்.

உ. நாற்சீரடியும் ஐஞ்சீரடியும் முடுகியலடியாக வந்ததற்கு (அ) "இரி பெழு..........தலைச்சென்று" என்னும் அடிகள் தோல். செய். சூ. கடுக. பேர். உரையிலும் (ஆ) "இரிபெழு...... ....கண்டை யிஃ தொன்று என்னும் அடிகள் தோல். செய். சூ கக. பேர். உரையிலும் முடுகுவண்ணத்திற்கு (இ) "இரிபெழுபதிர்பதிர் பிசுந்து" என்பது தோல். செய். சூ. உஙங. நச். உரையிலும் மேற்கோள்.

ங. வாடுதல் குறைதலென்னும் பொருளில் வருதலை "வாடற்க வையை நினக்கு" (பரி. க: ௬௦க) என்பதன் உரையாலும் அறிக.

(பிரதிபேதம்) * பாய்ந்தானைக் கோளுறு குத்து, † முனையுடைய கொம்பினது விறலாற் றுதலையுடைய, ‡ பாய்ந்தவனைப், || நிறத்தையுடையவனையும், ÷ வாடா வெகுளி, ✝ இஃதுதொன்று, அஃதொன்று.

நான்காவது முல்லை ௬.

சுருக

வெருவரு (க)தூமமெடுப்ப வெகுண்டு
திரிதருங் கொல்களிறும் போன்ம்

எ - து: பலரும் எழுந்திருந்து சென்று அதிர்ந்து அதிர்ந்து கெட்டு அவ்விடத்தைக் கடந்து சேர நீங்கும்படியாக *எலும்பு முறிந்து குடர்களற்றுக் கவிழும்படி குத்திவிட்ட பின்பு தன் கொம்பின் †வலியழியத் தழுவினவனை

அலைத்துக்கொண்டு திரிந்து துகைக்குங் குறையாத கோபத்தினையுடைய அழகினையுடைய ஏறு, வெருவுதல் வருதற்குக் காரணமான மருந்தினைப் புகைக்க அதற்கு வெருண்டு திரிதருங் கொல்கின்ற களிற்றையும் ஒக்கும்; இஃதொன்றைப் பாராயென்றாள். எ – று.

சாறு தாளொடு துணிபிணி மிசைத்தவிர் பின்றித் தலைச்சென்று
தோள்வலி துணிபிணி துறந்திறந் தெய்தி மெய்சாய்ந்து
கோள்வழுக்கித் தன்முன்னர் வீழ்ந்தான்மேற் செல்லாது
மீளுநர் புகமேற்றுத் தோற்றங்காண் மண்டமருள்
(உ)வாளகப் பட்டானை யொவ்வா னெனப்பெயரு
மீளி மறவனும் போன்ம்

க. தூமமெடுத்தலால் களிறு வெருளுமென்பது உதயணன் சரித்திரத்து, யூகி பிரச்சோதனன் நகரைக் கலக்குதற்கு யானைக்குத் தூமமூட்டிய செய்தியைக்கூறும் "ஆனைதன் னிலைகண் டெய்தி யகிலிடும் புகையுமூட்டிச், சேனைமன் னகர முற்றுச் சிறைவீடன் கடனே யென்று, மானநல் யூகி யானைச் செவியின்மந் திரத்தைச் செப்ப, யானைதன் மதக்கம் பத்தி லருந்தளை யுதறிற்றன்றே" என்னும் (உதயணகுமார (க) உஞ்சைக்காண்டம். அரு - ஆம்) செய்யுளாலும் அறியலாகும்.

உ. (அ) "வலொழ் மார்பி, னம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது, தும்பை சூடாது மலைந்த மாட்சி யன்னோர் பெரும" (ஆ) "ஒன்னார் மெலிவிடத்தும்............செல்லாமை தான்றலையே" (இ) "மங்கை மஞ்ஞ வுறையேனேல் வாளமருட், பங்கப்பட் டார்மேற் படை நினைந்தே னெகென்றான்" (ஈ) "கைப்படை யொன்று மின்றிக் கைகொட்டிக் குமா ளார்ப்ப, மெய்ப்படை வீழ்த்த நாணி வேழமு மெறிதல் செல்

லான், மைப்படை நெடுங்கண்மாலை மகளிர்தம் வனப்பிற்சூழ்ந்து, கைப்படு பொருளிலாதான் காமம்போற் காளைமீண்டான்" (௨) "கைத் துயிர் குடிப்ப னென்னு வெற்றினு ளிடதுகையான், மெய்த்தலைச் சூலமோர்சான் வெறுங்கையா னென்று வெள்கி" (௩) "சென்றவன் றன்னைநோக்கிச் சிரித்துநீ சிறியை புன்னை, வென்றவை மும்மை யெல்லாம் விளிப்பெனோ" (௭) "எனக் காற்ற லார்மேன், மாகால் வரிவெஞ்சிலையோடும் வளைத்த போது, சேகாகும்" என்பவை, ஈண்டு அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * எறும்பு மெறும்பு முறிந்து, † வலிகெடத் தழுவினவனை ‡ தவிர்வினறி.

எ - து: தோள்வலியாலே துணிந்த ஏறுதழுவுதல் எக்காலமும் மனத்தைச் செலுத்துதலின் அம்மனம் பிணித்த முயற்சியாலே எழுந்து துணிந்த இசை தவிர்தலன்றி அதனிடத்தே சென்று மற்றுள்ளார் தழுவுமாற்றைக் கடந்து சேர்ந்து மெய்யைத்தழுவித் தான்கொள்ளும் நிலையைத்தப்பித் தன் முன்னே வீழ்ந்தவன்மேலே செல்லாமல் *மீளுகின்ற புகர் நிறத்தையுடைய ஏற்றினது தோற்றாவு, மிக்குச்செல்லும் போருள் தன்கையில் வாளோடே அகப்பட்டவனை எனக்கு ஒவ்வானென்று வெட்டாமல் மீளும், கூற்றுவனை யொத்த மறவனையும் ஒக்கும்; இதனைப் பாராயென்றாள். எ - று.

௫௧ ஆங்க, செறுத்தறுத் துழக்கி †யேறெதிர் நிற்ப
மறுத்து மறுத்து மைந்தர் சாரத்
தடிகுறை யிறுபிறுபு தாயின கிடப்ப
விடியுற ழிசையி னியமெழுந் தார்ப்பப்
௫௫ பாடேற்றுக் கொள்பவர் பாய்ந்துமே லூர்பவர்
‡கோடிடை நுழைபவர் கோட்சாற்று பவரொடு

புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க
(க)வரிபுனை (௨)வல்வி லைவ ரட்ட
பொருகளம் போலுந் தொழூஉ.

எ - து. அங்ஙனம் கொம்பு மார்பிற்படுதலை மார்புகொடுத்து ஏற்றுக் கொள்பவரோடும் மேலே பாய்ந்து ||ஏறுபவரோடும்கோட்டிடையிலே சென்று புகுவாரோடும் ஏறுகொள்ள வல்லேனென்று சாற்றுவாரோடும் ஏறுகள் பொருது பின்பு பொருவாரை அறுத்துச் செறுத்து எதிரேற்க அதனைப் பொறாமல் மைந்தர் விலக்குமவரை †மறுத்துமறுத்துச் சென்று தழுவுகையாலே என்புகள் முறிந்து முறிந்து தசைகளற்றுப் பரந்தனவாய்க் கிடக்க (௩) இடியோடே மாறுபடுகின்ற ஏற்றினது முழக்கோடே வாச்சியங்கள் மிக்கு ஆரவாரிக்க அத்தொழூஉ, போரைவிரும்பி மேலேசென்ற துரியோதனாதிகள் படும்படி வரிந்து புனைந்த வலிய வில்லையுடைய தருமன் முதலியோர் கொன்ற பொருகின்ற களத்தையொக்கும். எ - று.

க. "வரிப்புனை பந்தொடு" முருகு. ௬௮.

௨. (அ) "வல்வி லோரி கொல்லிக் குடவரை" குறுந். ௧௦௦. (ஆ) "கொல்லி யாண்ட வல்வி லோரியும்" புறம். ௧௫௮. ௫. (இ) "வல்வி லிராமன்" நாலா. பெரியதிருமொழி. (௫) ௧. ௪.

௩. "உருமி னிருக் குரல்போற் பொருமுரணல்லேறு" (கலி. ௧௧௩: ௨௬ - ௨௭.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * மீளுகின்ற நிறத்தை, † எற்றெதிர், ‡ கோட்டிடை, || ஏறுமவரோடு, மறுத்துச் சென்று.

சு0 தொழுவினுள், கொண்டவே றெல்லாம் புலம்புகத் தண்டாச்சீர்
வாங்கெழி னல்லாரு மைந்தரு மல்லலூ
ராங்க ணயர்வர் தழூஉ

எ - து: அத்தொழுவிடத்துத் தழுவிக்கொண்ட ஏறுகளெல்லாம் மேயும் நிலத்தேபோக அமையாத சீரினையும் நோக்கினர் கண்ணை வாங்கிக்கொள்ளும் *அழகினையுமுடைய ஆய்ச்சியரும் ஆயரும் வளப்பத்தையுடைய ஊரிடத்தே குரவையாடுவரெனத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறினள். எ - று.

சுரு பாடுகம் வம்மின் பொதுவன் கொலைமேற்றாக்
கோடு குறிசெய்த மார்பு

எ-து: கூறி, பொதுவனுடைய கொலைத்தொழிலையுடைய எற்றினுடைய கொம்புகள் குறியிட்டுவிட்ட மார்பைப் பாடுவேமாக வாருங்கோளெனத் தலைவியையும் ஆயத்தையும் நோக்கிக் கூறினள். எ - று.

சுறு நெற்றிச் சிவலை †நிறையழித்தா னீண்மார்பிற்
செற்றார்கண் சாயயான் சாரா தமைகல்லேன்
பெற்றத்தார் கவ்வை யெடுப்ப வதுபெறி
துற்றீயா வாயர் மகள்

எ - து: அதுகேட்ட தலைவி, நெற்றியிலே சிவந்த சுட்டியினையுடைய எற்றைவிரவி நிறைதலைக்கெடுத்தவனுடைய நீண்ட மார்பிலே பகைத்து அலர் கூறுகின்ற மகளிர் நம்மை இகழ்ந்து பார்க்கும் கண்கள் இகழ்ந்து பாரா திருக்கும்படியாக யான் சாராமல் அமைந்திரேன்; இனி, பசுவையுடைய ஆய்ச்சியர் அலர்கூறுவதற்குப் பெரிதும் வருத்தமுறேன் யானென்றாள். எ - று.

ஆயர்மகளென்று தன்னைப் பிறர்போறக் கூறினள்.

சுசு (க)தொழீஇஇ

எ - து: தொழில்செய்கின்றவளே. எ - று.

(உ)ஒருக்குநா மாடுங் குரவையு ளாய்பை

(௩)யருக்கினன் போனேக்கி யல்லனேப் செய்தல்

---

௧. இந்நூற்பக்கம் ௯௪௪: ௧-ஆம் குறிப்புப் பார்க்க.

௨. புகுமுகம்புரிதல் கைக்கிளைக்கண் வந்ததற்கு, "ஒருக்குநாம்.......... மகன்" என்னும் பகுதி மேற்கோள்; தோல். மெய்ப். சூ. ௧௧. பேர். இ - வி. சூ. ௫௮௦.

௩. "அருக்கு மங்கையர் மலரடி" திருப்புகழ்.

(பிரதிபேதம்) * அழகினையுடைய, † நிறையழித்த கேண்மார்பிற் சென்றூர்.

௯௬௨ கலித்தொகை ௧௦௪.

(௧)குரூஉக்கட் கொலேறு கொண்டேன்யா னென்னுந்
தருக்கன்றோ வாயர் மகன்

எ - து: ஆயர்மகன் ஆயத்தோடே நாம் ஆடுங் குரவைக்கூத்திலே நம்மை அருமைசெய்தான்போலே நோக்கி நமக்கு வருத்தத்தைத் தரும் நோயைச் செய்தல் *நிறத்தையுடைய கண்ணையுடைய கொலையேற்றையான்கொண்டே னென்னும் மனச்செருக்கன்றோ? அது வேறொன்றல்லவே என்றாள். எ - று.

௭௩ நேரிழாய், †கோளரி தாக நிறுத்த கொலையேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
யார்வுற் றெமர்கொடை நேர்ந்தா ரலரெடுத்த
வூராரை (௨)யுச்சி மிதித்து

எ - து: அதுகேட்ட தோழி, ஒத்த இழையினையுடையாய்! கொள்ளுத லரிதாக நஞ்சுற்றத்தார் நிறுத்தின கொலைத்தொழிலையுடைய எருதிற் காரியி னது கோபத்திற்கு அஞ்சானாய்த் தழுவின பொதுவனுக்கே எம்முடைய

சுற்றத்தார் ‡மகிழ்ச்சிசிறைதலுநீறு அலரை மிகக் கூறிய ஊரிலுள்ளாரைத் தலையிலே மிதித்துக் கொடுத்தலைப்பொருந்தினர்; இனி வருந்தாதே கொள் ளென்றாள். எ – று.

||எமரென்றாள்;"தாயத்தினடையா" என்னும்(௩)சூத்திரவிதியால் அவர் அலர் கூறிய அவர்க்கே கொடுத்தலின். அவர் உச்சியிலே மிதித்த தன்மைந் தென்றாள்.

எஎ ஆங்கு

தொல்கதிர்த் திகிரியாற் பரவுதுமொல்கா

வருமுறழ் (௪)முரசிற் றென்னவற்

(௫)கொருமொழி கொள்களிவ் வுலநட÷னெனவே

க. "குரூஉக்கட் கொலையேறு" கலி. ௧0௪: ௨௩.

௨. உச்சியிலே மிதித்தலென்றது இழிவுபடுத்துதலை: "மதித்திறப் பாரு மிறக்க மதியா, மிதித்திறப்பாரு மிறக்க" என்பது; நாலடி. ௬௪.

௩. தொல். பொருளி. ௬. ௨௭.

௪. பாண்டியற்கு முரசாற் சிறப்புக் கூறுதலை. "முரசுமுன் றுள்பவர்" (கலி. ௧௩௨: ௪) என்பனலும் அதன் குறிப்பாலும் அறிக.

௫. "குமரியொடு வடவி மயத், தொருமொழிவைத் துலகாண்ட சேரலா தற்கு" சிலப். ௨௯.

(பிரதிபேதம்) * சிறத்தைபுடைத்தாகிய, † கோளரியாக, ‡ மகிட்சி. || எமரென்றான் தாய் தாயத்தி, ÷என்னவே.

எ - து: கெடாத (க)உருமேற்றை மாறுபடுகின்ற முரசினையுடைய அவ்விடத்திற் பாண்டியனுக்கு இவ்வுலகுநேர அவனுடையஒருமொழியைக்கேட்பதாகவென்றுகூறிப் பழைதாகிய கதிரையுடைய சக்கரப்படையையுடையானை *வாழ்த்துதும்; அதற்கு நீயும் வருகவென்றாள். எ - று.

ஒருமொழி, ஆணை. தென்னவற்கென்னும் நான்காவது இவ்வுலகம் நடப்பதாகவென்று போந்த பொருளோடு முடியும்.

இதனால், தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

"ஆயர் வேட்டுவர்" என்னும்(உ)சூத்திரத்தில்†ஆயரிலுங்கிழவருங்கிழத்தியரும் உளரென்று‡ராதலான், இவர்க்கும் களவொழுக்கம் நிகழு||மென்பதாம். "நாடகவழக்கினும்" என்னும் (ரு)சூத்திரத்திற் பாடலுள் அமையாதனவாய்க் களவொழுக்கம் நிகழ்ந்து ஏறு÷தழுவி வரைவுடன் பட்டாராகக் கூறினர். மேலும் இங்ஙனம் களவு நிகழ்ந்து ஏறுதழுவி வரைகின்றதாகக் கூறும் +பாட்டுக்களுக்கெல்லாம் இதுவே விதியாகக் கொள்க.

இது தரவும் ஐஞ்சீரடிப்பெற்ற குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற கொச்சகமும் ×வழியசைபுணர்ந்த சொற்சீரடியும் முடுகியலோடு தொடர்ந்த கொச்சக வெண்பாவும் நாற்சீரடி முடுகியலோடு தொடர்ந்து ஐஞ்சீரடியும் வந்த கொச்சகவெண்பாவிரண்டும் ஐஞ்சீரடியும் ஆசிரியத்தளையும் விரவி ஈறு வேறோர் சீரான் இற்ற கொச்சக வெண்பாவும் **ஐஞ்சீரடுக்கியவற்றிற் குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டிரண்டும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த கலிவெண்பாவின்வேறுபட்ட (சு)கொச்சகம். "வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு,

க. (அ) "உருமிடி முரசமொடு" (ஆ) "இடிமுரசியம்ப" (இ) "இடியுமிழ் முரசம்" (ஈ) இடியென முழங்கு முரசின்" (உ) "உருமின் முரசெழுந் தியம்ப" (ஊ) உருமுரற் றன்ன வுட்குவரு முரசமொடு" (எ) "உருமி னிரங்கு முரசின்" (ஏ) "முரசம்.........உருமி னாறப்புசிலைப்ப" (ஐ) "உருமிசை முரசம்" (ஒ) "முர சிடியுமிழ் தழங்கென முழங்க" (ஓ) "உருமி னிடிமுர சார்ப்ப" என முரசினொலிக்கு உருமொலி உவமையாய் வருதல் காண்க.

உ. தொல். அகத். சூ. உக.

ங. தொல். அகத். சூ. ருங.

ச. (அ) "மலிதிரை யூர்ந்து" என்னு முல்லைப்பாட்டின், "இரிபெழு பதிர் பதிர் பிகர்துடன் பலர் நீங்க" 'தாளெழு துணிபிணி யிசைதவிர்பின்றி' எனவு முடுகுதலித்கொச்சகமாயிற்று; இதனுட் சொற்சீரடியும் வந்தது என்பர் நச்; தொல். செய். சூ. கருரு. (ஆ) இச்செய்யுள்

(பிரதிபேதம்) * வாழ்த்துமதற்கு, † ஆயரினுள் மெழத்தியரும், ‡ ஆதலின். || மெண்டதாட காடக, ÷ தழுவ வரைவு, + பாட்டுக்களுக்கு மிதுவே, × வழியனைப் புணர்த்த, ** ஐஞ்சீரடித்தியு வெண்பாட்டிடைவந் தனிச்சொல்லும்.

ஐஞ்சீ ரடியு முளவென மொழிப" (ரு) என்பதனுன் மூவகைப் பாவிற்கும் ஐஞ்சீர்டிவருதல் பெற்றும். (ச)

(க0ரு.) அரைசுபடக் கடந்தட் டாற்றிற் றந்த
முரைசுகெழு முதுகுடி முரண்மிகு செல்வற்குச்
சீர்மிகு சிறப்பினோன் றொல்குடிக் குரித்தெனப்
பார்வளர் முத்தமொடு படுகடல் பயந்த
வார்கலி யுவகையா ரொருங்குடன் கூடித்
தீதின்று பொலிகெனத் தெய்வக் கடியயர்மார்

வீவில் குடிப்பி னிருங்குடி யாயருந்
தாவி லுள்ளமொடு துவன்றி யாய்புடன்
வள்ளுரு ணேமியான் வாய்வைத்த வளைபோலத்
தெள்ளிதின் விளங்குஞ் சுரிநெற்றிக் காரியு
மொருகுழை யவன்மார்பி லொண்டார்போ லொளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்
பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
விரும்பின ரெருத்தி னேந்திமிற் குரானு
மணங்குடை வச்சிரக்கோ னாயிரங் கண்ணேய்க்குங்
கணங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
வேல்வலா னுடைத்தாழ்ந்த விளங்குவெண் டுகிலேய்ப்ப
வாலிது விளர்ந்த வெண்காற் சேயுங்
கால முன்பிற் பிறவுஞ் சால
மடங்கலுங் கணிச்சியுங் காலனுங் கூற்றுந்
தொடர்ந்துசெல் லமையத்துத் துவன்றுயி ருணீஇய
வுடங்குகொட் பனபோற் புகுத்தனர் தொழூஉ;

அவ்வழி,
காரெதிர் கலியொலி கடியிடி யுருமி னியங்கறங்க
வூர்பெழு விளர்புளர் புயர்மங்குலி னறைபொங்க
நேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதைய ரணிநிற்பச்
சீர்கெழு சிலைசிலைச் செயிரிகன் மிகுதியிற் சினப்பொதுவர்

புணர்தற்பொருண்மைத்தாயினும் முல்லைக்குரிய கருப்பொருளான் வருதலின் முல்லையாயிற்றென்பர் இளம்; தொல். அகத். சூ. ௨௩.

௧. தொல். செய். சூ. ௧௩:

தூர்பெழு துதைபுதைதீ துகள்விசும் புறவெய்த்
வார்புடன் பாய்ந்தா ரகத்து;
௩௦ மருப்பிற் கொண்டு மார்புறத் தழீஇயு
மெருத்திடை யடங்கியு மிமிலிறப் புல்லியுந்
தோளிடைப் புகுதந்துந் துதைந்துபா யேற்று
நிரைபுமேற் சென்றாரை நீண்மருப் புறச்சாடிக்
கொளவிடங் கொளவிடா நிறுத்தன வேறு;
௩௫ கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்ளார்ப் பெறாஅக் குரூஉச்செகில் காணிகா
செயிரிற் குறைநாளாற் பின்சென்று சாடி
யுயிருண்ணுங் கூற்றமும் போன்ம்;
௩௯ பாடேற் றவரைப் படக்குத்திச் செங்காரிக்
கோடெழுந் தாடுங் கணமணி காணிகா
நகைசா லவிழ்பத நோக்கி நறவின்
முகைசூழுந் தும்பியும் போன்ம்;
௪௩ இடைப்பாய்ந் தெருத்தத்துக் கொண்டானோ டெய்தி
யிடைப்பாயும் வெள்ளேறு கண்டைகா
வாள்பொரு வானத் தரவின்வாய்க் கோட்பட்டுப்
போதரும் பான்மதியும் போன்ம்;
௪௭ ஆங்க, ஏறும் பொதுவரு மாறுற்று மாறா
விருபெரு வேந்தரு மிகலிக்கண் ணுற்ற

பொருகளம் போலுந் தொழூஉ;
௫0 வெல்புக ழுயர்நிலைத் தொல்லியற் றுதைபுதை துளங்கிமி
னல்லேறு கொண்ட பொதுவன் முகனோக்கிப்
பாடில வாயமகள் கண்;
௫௧ நறுநுதா லென்கொலைங் கூந்த லுளரச்
சிறுமுல்லை நாறிய தற்குக் குறுமறுகி
யொல்லா துடன்றமர் செய்தா ரவன்கொண்ட
கொல்லேறு போலுங் கதம்;
௫௨ நெட்டிருங் கூந்தலாய் கண்டை யிஃதோர்சொல்;
௬4

௧௮ கோட்டினத் தாயர் மகனொடியாம் பாட்டதற்
கெங்க ணைமரோ பொறுப்பர் பொருதார்
தங்கண் பொடிவ தெவன்;
௧௧ ஒண்ணுதால்;
இன்ன வுவகை பிறிதியாதி யாயென்னைக்
கண்ணுடைக் கோல ளலைத்ததற் கென்னை
மலரணி கண்ணிப் பொதுவனோ டெண்ணி
யலர்செய்து விட்டதிவ் வூர்;
௧௯ ஒன்றிப் புகரினத் தாயமகற் கொள்ளிழா
யின்றெவ னென்னை யெமர்கொடுப்ப தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென் னெஞ்சு;

என,

௭௧ பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய
வாடுகொ ணேமியாற் பரவுது நாடுகொண்
டின்னிசை முரசிற் பொருப்பன் மன்னி
யமைவர லருவி யார்க்கு
மிமையத் தும்பரும் விளங்குக வெனவே.

*இஃது ஏறுதழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறி, அவன் ஏறுதழுவிய தலைவனை விருப்போடு நோக்கியவற்றைத் தன்னுள்ளே கூறி, முன்னர்க் களவின்கண் தமர்கோபித்ததனையும்அயலார்பொறுதிருந்த தன்மையினையும் தலைவிக்குக் கூற, அவளும் அவர் அலர்கூறியது நன்றென்று கூறி, †அன்றே என்னெஞ்சு கலந்துவிட்டது; இனிஅவர்கொடுப்பதாகக் கூறிய நாளிற் செய்வதென்னென மகிழ்ந்து ‡கூற, அதுகேட்ட தோழி யாம் அங்ஙனங்கூடி இனிதிருக்குமாறு காக்கின்ற பாண்டியன் நீடு வாழுமாறு தெய்வத்தைப் பரவுகம் வாவெனக் கூறியது.

இதன் பொருள்.

(௧)அரைசுபடக் கடந்தட் டாற்றிற் றந்த
முரைசுகெழு முதுகுடி முரண்மிகு செல்வற்குச்

---

௧. (அ) அரைசு என்பது உயர்திணை யாண்பாலை யுணர்த்தி வருதற்கு 'அரைசுபடக் கடந்தட்டு' என்பது மேற்கோள்; தொல். கிளவி. ௫.

(பிரதிபேதம்) * இது ஏறுதழுவியவற்றைத் தோழி. † இன்றே, ‡கூறுவதுகேட்ட.

நான்காவது முல்லை ௫. கூகள்

சீர்மிகு சிறப்பினோன் (௧)றொல்குடிக் குரித்தெனப
பார்வளர் முத்தமொடு படுகடல் பயந்த

வார்கலி *யுவகைய ரொருங்குடன் கூடித்
தீதின்று பொலிகெனத் தெய்வக் கடியயர்மார்
(௨)வீவில் குடிப்பி னிருங்குடி யாயருந்
(௩)தாவி லுள்ளமொடு துவன்றி யாய்புடன்
வள்ளுரு நேமியான் வாய்வைத்த வளைபோலத்
தெள்ளிதின் விளங்குஞ் (௪)சுரிநெற்றிக் காரியு
(௫)†மொருகுழை யவன்மார்பி லொண்டார்போ லொளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்

---

௭. நச். (ஆ)"அரசுபடக் கடந்த வாளைச் சீற்றத்தவன்" பரி. ௨௨: ௩.
(இ) "அரைசுபடக் கடக்கு முரைசா றோன்றல்" புறம். ௨௧௧: ௪.

௧. "நெல்லு நீரு மெல்லார்க்கு மெளியவென, வரைய சாந்தமுந் திரைய முத்தமு, மிமிழ்குரன் முரச மூன்றுட னாளுந், தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே" புறம். ௫௮: ௧௦ - ௧௩.

௨. "தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய, நல்லினத் தாயர்" கலி. ௧௦௪: ௫-௬.

௩. இப்பகுதி 'தூவி லுள்ளமொடு' என்றும் படிக்கும்படி ஒரு பிரதியி லுள்ளது; தாவென்னுஞ் சொற்போலவே தூவென்னுஞ் சொல்லும் வருத்தமென்னும் பொருளை யுடையதாயின் மோனை நயமுற, "தூவி லுள்ளமொடு" என்றும் கொள்ளலாம்.

௪. "சுரிநெற்றிக் காரி" கலி. ௧௦௧: ௨௧.

௫. (அ) பலராமன் யமுனையால் அளிக்கப்பட்டதும் மிகச் சிறந்ததுமான ஒரு குண்டலத்தை அணிந்தனனென்பது புராணகதை; (ஆ) அவனிலையைக் கூறுவதாகிய "கண்களியா" என்னு முதலையுடைய வெண்பாவி லுள்ள 'ஒண்குழையொன் றொல்கி யெருத்தலைப்ப' என்பதை இனைத் தெனவறிந்தபொருள்வினைப்படுதொகுதியின் உம்மைபெற்றுவருமென்

பதற்கு மேற்கோள்காட்டி, (தொல். கிளவி. சூ. ௩௩) சேனாவரையரும் (நேமி. சொல். ௬) நேமிநாதவுரைகாரரும் (நன். பொது. சூ. ௪௮) மயிலைநாதரும் 'ஒன்றும்' எனற்பாலது, 'ஒன்று' என உம்மையின்றி வந்தது செய்யுள் விகாரமென்றும் (தொல். கிளவி. சூ. ௩௩) நச்சினார்க்கினியர் (குழை) ஒன்றேனும் இணைத்தென அறிந்தபின் உம்மை வேண்டும்; அது விகாரத்தாற் றொக்கதென்றும் எழுதியிருப்பவையும் இவன் ஒரே குழையினனென்பதை வலியுறுத்தும். (இ) (பிரதிபேதம்) * உடலைபார். † ஒருகுழை யொருவன் மார்பிறெண்டார்.

கலித்தொகை க0ரு.

பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
விரும்பிணர் ெருத்தி னேந்திமிற் குராலு
மணங்குடை வச்சிரத்தோ னாயிரங் கண்ணேய்க்குங்
கணங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
*வேல்வலா னுடைத்தாழ்ந்த விளங்குவெண் டுகிலேய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்காற் சேயுங்
(க)கால முன்பிற் பிறவுஞ் சால
மடங்கலுங் கணிச்சியும் (உ)†காலனுங் கூற்றுந்
தொடர்ந்துசெல் லமையத் துவன்றயி ருணீஇய
வுடங்குகொட் பனபோற் புகுத்தனர் தொழூஉ

எ - அ: ‡அரசுகள் படும்படியாக வென்று கொன்று நெறியாலே கொண்டுவந்த தலைமைமிகுகின்ற ||சிறப்புக்களையுடையோனுடைய பழைதாகிய குடிக்குரித்தென்றுகூறிய, பாண்டிமண்டலம் பயந்த விளைவுகளும் ஒலிக்கும் ÷கடலில் வளர்ந்த முத்தத்தோடே மற்றும் பயந்த பொருள்களும் (௩)மூன்று ×முரசமுங் கெழுமும் முதிய குடியிற்பிறந்த மாறுபாடு மிகுகின்ற

"ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்" கலி. உ௬: க. (௯) "தாதொரு குழையோ னிளவலை" வில்லி. இராசசூய. க௪க. (உ) "எரிமணிக் குன்றிரண் டென்ன வேந்துதோ, ளொருகுழை யொருவனும்" (௯) "கங்கையிற் றிருவ மாநகர், வரவொரு குழையி னன் வாங்க" (எ)செக்கர்மாமணி, யொருகுழை யுலாவரு வலம்கொ டோனிஞன்" (ஏ) "திருநகர்.................கங்கையில் வீழ்தல் போன்றமற், ளொருகுழை யவன்வலியுணர்த்து இன்றதால்" பா௧. (க0) அக்குரூரன் வந்த. உஉ. சாம்பன்மணம்புரி. ௫0, ௫௩, ௫௪. என வருபவையும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "காலமுன்ப" புறம்: உ௩: கஎ. (ஆ) "ஆற்றல் காலனோ டொக்கும் ....கேள்வியன்" பெருங். (க) ௩௬: க00 - க0உ. (இ) "வெந் திறற் காலனை" கந்த. மார்க்கண்டேய. உக௬.

உ. (தென் புலத்திறைவன்) "நெற்றியிற் காலன் செல்ல நீள்பெருங் கால பாச, மற்றைவெங் கால தண்டம் வந்திரு மருங்குஞ் செல்ல, வுற்றபே ரூழிக் காலத் துருத்திர மூர்த்தி யொப்பச், சுற்றிய சேனை யோடுந் தோன்றின னுலகத் தூட்க" இராமா. திக்குவிசயப். ௬௯.

௩. "முரைசுமூன் றாள்பவர்" கலி. க௩உ: ௪. என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * வேல்வல்லான். † காலமுங்கூற்றும். ‡ அரைசுகளம்படும்படியாக, || சிறப்புக்களையுடைய பழைதாகிய, ÷ கடல்விளைந்தமுத்தத். × முரசங்கெழுமும்.

அச்செல்வனுக்குத் தீதின்றிப்பொலிவனவாகவென்று உட்கொண்டு, தெய்வத்திற்குச் சிறப்புக்களைச் செய்தற்கு அவனுடைய கேடில்லாத குடியின்பின்பு தோன்றிய பெரியகுடியிற் பிறந்த ஆயரும், ஒருங்குநிறைந்த செருக்கினையுடைய உவகையராய்ச் சேரக்கூடி, ஏறுதழுவுங்காற் பிறர்க்குத் துன்பம் நிகழுமென்னும் வருத்தமில்லாத உள்ளத்தோடே நிறைந்து ஏறுகளை ஆராய்ந்து, வள்ளிய உருண்ட நேமிப்படையவன் ஊதிய சங்குபோலத் தெள்ளிதாக விளங்குஞ் சுட்டியையுடைத்தாகிய நெற்றியையுடைய காரி ஏற்றையும், (௧) நம்பிமூத்தபிரானுடைய திருமார்பில் ஒள்ளிய சிவந்த (௨) மாலை போல ஒளிமிகும்படியாக ஒப்புமிகநீண்டு பொருந்திய சிவந்தமறுவினையுடைய வெள்ளியஏற்றையும், பெரிய *பெயரையுடையதணிச்சிப்படையினையுடையவனுடைய நீலமணிபோலுந் திருமிடற்றில் அழகுபோலக் கரிய சர்ச்சரையையுடைய கழுத்தினையும் எக்கினைகுட்டேற்றினையுமுடைய (௩) குரால் நிறத்தினையுடைய ஏற்றையும், வருத்தமுடைய வச்சிரப்படையையுடையோனுடைய ஆயிரங் கண்களையொக்குந் திட்டிகொண்ட பலவாகிய புள்ளிகளையுங் கடிய † சினத்தையுமுடைய நிறத்தையுடைய ஏற்றையும், முருகனுடைய நடையாய்த் தாழ்ந்த விளங்குகின்ற வெள்ளியதுகிலையொப்ப நன்றாய் உயர்ந்த வெள்ளிய கால்களையுடைய சிவந்த ஏற்றையும், ‡ காலனது வலிபோலும் வலியையுடைய பிற ஏறுகளையும், சால நிறைகின்ற பல்லுயிர்களை உண்ண வேண்டி உழுத்தியும் கணிச்சியும் காலனும் கூற்றுவனும் அவ்வுயிர்களை விடாமற்செல்கின்ற ஊழிமுடிவாகிய காலத்தே அலைசேரச் சுழன்று திரியுமாறுபோலச் சுழன்று திரியும்படி தொழுவிடத்தே சேரப் || புகுதவிட்டார்.

பார்பயந்தன கடல்பயந்தனவென இரண்டிற்கும் பயந்தன என்றாந் தொழிற்பெயரைக் கூட்டுக. இனிப் பார் (வளர்முத்தம்)-(சு) நிலத்தில் வளர்ந்த

---

௧. இந்நூற்பக்கம் ௧௪௪. ௨-ஆம் குறிப்புப் பார்க்க.

௨. 'கொடுமிடல் ஞாஞ்சிலான் ஞார்போன் மராஅத்து, நெடுமிசைச் சூடு மயிலாலுஞ் சீர" கலி. ௩௬: ௧ - ௨.

௩. குரால்நிறம் - கபிலநிறம்; "குராலான் படுதுயர் இராவிற் கண்ட, வுயர் திணை யூமன் போலத், துயர்பொறுக் கல்லேன்" குறுந். ௨௨௪.

௪. முன்பொருகாலத்துப் பாண்டியனவையிற் பொருளீட்டுதற்குச்சிறந்த வழியாதென்ற கேள்வி வந்தது. அப்போது ஒரு வணிகன் வாணிகஞ் செய்தலென்றும். ஒரு வேளாளன் பயிர்செய்தலென்றும் கூறினர். அரசன் அவ்விருவருக்கும் சிறிது பொருளுதவி இதனைக்கொண்டு நீங்கள் கூறியவழியால் பெரும்பொருளாக்குகவென்று விடுத்துச் சில யாண்டு கழித்துத் தன் முதலை நோக்கி அவர் நிலையை வினவினன்.

(பிரதிபேதம்) * பெயரையுமுடைய, † வினைத்தையுமுடைய வேற்றையும், ‡ காலதுவவி, || புகுதவிட்டார். எ-று: பயந்தனகடல்பயந்தன.

முத்தென்றுமாம். உடன் *புகுத்தனரென்க. (கீ) முருகன் தனக்கு உரித்தல்லாத வெண்டுகில் உடுத்தாற்போலக் கால் வெளுத்த எருது. முன் இறைவன் கையதாய் ஊழிமுடிவின்கண் அவன் ஏவலால் உயிர்த்திரமேற் றிரியுங் கணிச்சி. (௨) காலன், †கூற்றுவனேவலாளன்.

அத்தூர் வணிகன் வாணிகத்தாற் பெருஞ்செல்வம் ஈட்டியுள்ளானென்றும் வேளாளன் செழிப்பாக ஒரு கரும்பந்தோட்டம் பயிர்செய்திருக்கிறானென்றும் சொன்னார்கள். அரசன் அதனைக்கேட்டு அவர் நிலையை நேரே அறியக் கருதியதனால் அவ்விருவரும் உறையும் ஊரிலுள்ள கொற்றவையின் திருவிழாவிற்குச் சென்றிருந்தபொழுது முதலில் வணிகனையழைப்பித்து வினவ அவன் தனக்குக் கொடுத்த பொருளைப் பதின்மடங்கு பெருக்கியிருப்பதாகச் சொன்னான். பின்பு அரசன் வேளாளனை யழைப்பித்து வினவ, அவன் அங்கிருந்தே தன் கரும்பந்தோட்டத்தைக் காட்டி இது என் பொருளீட்டம் என்றனன். அரசன் இது செழித்த தோட்டமேயாயினும் வணிகனீட்டிய பொருளிற் பத்திலொரு பங்கிற்கேனும் இணையாமோவென வேளாளன் அவன் பொருள் இதன் விலையிற் பத்திலொரு பங்கிற்கும் இணையாகாதென்றான். அரசன் அதனைக்கேட்டு வேளாளனை இகழ்ந்துரைக்க, அவன் தன் தோட்டத்திலிருந்து ஒரு கரும்பைக் கொணர்ந்து அரசன் முன்னிலையில் அடித்து முறித்தனன். அதிலிருந்து முத்துக்கள் தெறித்தன. அரசன் அம்முத்துக்களை நோக்கி ஒவ்வொன்றும் மிக்க விலைபெறுமென்பதையறிந்து மகிழ்ந்து அவ்வேளாளனுக்கு முத்து என்றும் அக்கரும்படித்தவிடத்திற்கு முத்தடித்த களமென்றும், அங்குள்ள அம்பிகைக்கு முத்துராச்சியம்மனென்றும் அந்நாட்டுக்கு முத்துநாடென்றும் பெயர் புனைந்தனன் என்ப. இச்செவி வழிநிலைச் செய்தி இங்கே கருதத்தக்கது.

௧. "உடையு மொலியலுஞ் செய்யை" என்பதனால், (பரி. ௧௧: ௧௭) முருகனுக்கு வெண்டுகில் உரித்தன்றென்றார்.

உ. (அ) "ஆலமென்ன வனலென்ன வந்தகன், ஞாலமெல்லா நடுங்கக் கொதித்திடும், வேலை வெய்சன லென்ன வெகுண்டெழும், காலனன் னவற் கின்ன கழறினன்" (ஆ) "என்னை யேவுதி யென்னி லிராவ ணன், றன்னை நானுயி ருண்பன்" இராமா. திக்குவிசய. எஉ - எங. (இ) "அந்தக னந்துணை யமைச்ச னாகிய, வெந்திறற் காலனை விளித்துக் காசினி, வந்தண னொருமக னவன தாவியைத், தந்திடு கென்றலுந் தரணி யெய்தினன்" (ஈ) "போன காலனு மறலியை வணங்கியே புகுந்த, பான்மையாவையு முரைத்தலும்" கந்த. மார்க்கண்டேய. உகச, உஉச. (உ) "கடையுகத் திடியிற்பாய கடற்படை வடக்குவாயிற்,

(பிரதிபேதம்) * புகுந்தனரென்க. †, கூற்றுவனேவலான். அவ்வழி,

உரு அவ்வழி

எ - து: அவ்வனம் அவர் புகுத விட்ட இடத்து. எ - று.

(க)காரெதிர் கலியொலி கடியிடி (உ)யுருமி னியங்கறங்க
(ங)லூர்பெழு கிளர்புளர் புயன்மங்குலி னறைபொங்க
நேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதைய ரணிநிற்பச்
சீர்கெழு சிலைநிலைச் செயிரிகன் மிகுதியிற் சினப்பொதுவர்
தூர்பெழு துகைபுதை துகள்விசும் புறவெய்த
வார்புடன் பாய்ந்தா ரகத்து.

எ - து: கார்காலத்துத் தம்மில் எதிர்ந்த கலிப்பினையுடைய உருமினது கடிய இடியொலிபோல வாச்சியங்கள் ஒலியாநிற்கப் பரந்து உயர்ந்து எழுகின்ற அசைதலையுடையமேகம்போலத் திசைகளிலே புகைமூச்செழாநிற்கப் புறவிதழ் ஒடிந்த மணத்தையுடைய ஒத்தவிதழாற் கட்டின மாலையையுடைய

மகளிர் நிரைநிரையாக அணியாநிற்கக் குற்றத்தைச் செய்த மாறுபாட்டின் மிகுதியாலே தலைமைபொருந்தினசிலைக்கின்றநிலைமையினையுடைய சினத்தை யுடைய பொதுவர் எழுகின்ற நெருங்கின கண்கள்மறைத்தற்குக் காரணமான தூளாலே விசும்பு † தூர்ந்துமிகும்படி அத்தூள் சென்று சேரும்படியாக ஆர்த்து அத்தொழுவினுள்ளே சேரப் பாய்ந்தார்* எ - று.

மருப்பிற் கொண்டு மார்புறத் தழீஇயு
மெருத்திடை யடங்கியு ‡மிமிலிறப் புல்லியுந்
தோளிடைப் ||புகுதந்துந் துதைந்துபா டேற்று
நிரைபுமேற் சென்றூரை நீண்மருப் புறச்சாடிக்
கொளவிடங் கொளவிடா நிறுத்தன வேறு

புடைவிரித் தார்க்கு மோதைப் பொருமுழக் கியமன் கேளா, விடை தெரித்துரைமினென்ன விலங்கெயிற்றுலங்கொ டிண்டோண், மிடை வலி மிருத்துக்காலிருவரை விடேப்பச் செல்வார்" வேதாரணிய. சோரச். கஎ.

க. கலிப்பாவில் ஐஞ்சீரடி முடுகி வந்ததற்கு, "காரெதிர்.............ரணி நிற்ப" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. சுசு. பேர்.

உ. "இடியார் பணை துவைப்ப" பு - வெ. உழிஞை. உஎ.

௩. "பமைழை யாடும் வரையகம் போலுங், கொடிநறைசூழ்ந்த தொழூஉ" கலி. ௧0௩: உ0 - உக.

(பிரதிபேதம்) * பாய்ந்தனரகத்து. † தூர்ந்துபோம்படியத்துகள், ‡ இமிலிற்புல்லியும், || புகுந்துதைந்து,

கொள்வாரைக் கொள்வாரைக் (௬) ஃகோட்டுவாய்ச் சாத்தந்திக்

கொள்வார்ப் பெறூஉக் குரூஉச்சேகில் காணிகா
(க)செயிரிற் குறைநாளாற் பின்சென்று சாடி
யுயிருண்ணுங் கூற்றமும் போன்ம்

எ - து: அங்ஙனம் பாய்ந்து கொம்பிடத்தே பிடித்துக்கொண்டும் மார்பிலே உறும்படி தழுவிக்கொண்டும் †கழுத்திடத்திலே அடங்கிக்கிடந்தும் குட்டேறு முறியும்படி தழுவியும் தோளுக்குநடுவே கழுத்தைப் புகுதவிட்டுப் பிடித்தும் நெருங்கிக் கொம்புகள் தம்மேலேபடுதலை ஏற்றுக்கொண்டும் நிரைத்துத் தம்மேலே சென்ற ஆயரைப் பின்னர்க் கீழேவீழ்த்து நீண்ட மருப்புத் தைக்கும்படி குத்தி அவர்கள் தழுவுகின்ற கழுத்திடத்தைத் தழுவக்கொடாதே ஏறுகள் அவரை நீக்கி நிறுத்தின; அங்ஙனம் நிறுத்தினபின்பும் சென்று தழுவுவாரைத் தழுவுவாரைக் கோட்டிடத்தே சாம்படி குத்திப் பின்பு சென்று

க. "சாப்புல்லற் பாற்று" என்பதற்கு, 'சாம் வண்ணம் பொருந்தற் பான்மை யுடைத்து' என்று பொருள்கூறி, 'சாவவென்பதனிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது' என இலக்கணமெழுதி, 'கோட்டின்வாய்ச் சாக்குத்தி' என்புழிப்போல வென இதனை மேற்கோளுங் காட்டினர் பரிமேல்; குறள். அ௨௬. இந்நூற்பக்கம் ௬௨௩: ௨-ஆம் குறிப்புப்பார்க்க.

௨. (அ) "காலனுங் காலம் பார்க்கும்" புறம். ௪௧: க. (ஆ) "எண்ணி யுயிர் கொள்வான் வேண்டித் திரியினு, முன்னுக் துணைக்காக்குங் கூற்று"

பழ. அக. (இ) "ஞாலத் தின்னுயிர் வாழ்வோர் காப்பட், காலம் பார்க்குங் காலன் போல" பெருங். (௧) கஎ: உ0௪-உ0௫. (ஈ) "சாற்று நாளற்ற தெண்ணித் தருமம்பார்க், தேற்றும் விண்ணென்ப தன்றி யிவளைப்போ, ஞற்றங் கேட்டலுங் தின்ன நயப்பதோர், கூற்றுண் டோ" கம்ப. தாடகை. கூச. (உ) "நோற்றநோன் புடைய வாழ்நாள் வரமிவை நுணித்த வெல்லாங், கூற்றினுக் கன்றே வீரன் சரத் திற்குக் குறித்ததுண்டோ" கம்ப. நிந்தனைப். சங. (ஊ) "அதெ லோம்பிய செய்கைய னென்பதா லவனைக், கொடிய னெர்பரா லறிவிலார் செய்வினை குறித்து, முடிவி லாருயி ரெவற்றிற்கு முறை புரிந் திடலா, னடுவ னென்கின்ற தவன்பெய ருலகெலா நவிலும்" (எ) "கொல்வன் னெனக் காலத்தெரி கூற்றுமென நின்றேன்" கந்த. மார்க்கண்டேய. 'உஉஉ. இரண்டாநாட் சூரபன்மன். உகங. (ஏ) "நாள் வரைக்கு நமனொத்த வாளியார்" கழுக்குன்ற. பசுவாக. அ. (ஐ) "மாயு நாளுற நடுவ னோர்க்கே,யாட்படுந் தூதர் நீர்போ யாங்கவற் கொணர்மி னென்ன" வேதாரணிய. சோரச். கங. (ஒ) "நாள்வரை யறையே கோக்கு நடுவனூர் தூத ரேய்ப்ப" திருவானைக்கா. திருநாட்டுச். அங.

(பிரதிபேதம்) *கோட்டின்வாய்ச். † கழுத்திலே.

தழுவுவாரைப் பெருமல் நின்ற நிறத்தையுடைய சிவந்த ஏறு உயிர்குறை நின்றநாளிடத்தே அவர்பின்னேசென்று குற்றத்தைச்செய்து துகைத்து உயிரையுண்ணுங் கூற்றுவனையும்போலும்; இதனைப்பாரரயென்றாள். எ - று.

கூகூ பாடேற் றவரைப் படக்குத்திச் செங்காரிக்
கோடெழுந் தாடுங் கணமணி காணிகா
*நகைசா லவிழ்பத நோக்கி நறவின்
முகைசூழுந் தும்பியும் போன்ம்

எ - து: சிவந்த கரிய ஏற்றினுடைய கொம்புகள் †படுதலை மார்பிலே ஏற்றவர்களைக் கொம்புகளாலே பலபடி குத்தி மேனோக்குதலாலே வீழ்ந்த குருதியால் நனைந்து அசையும் பலவாகத் திரண்ட திரட்சியையுடைய சிறிய மணிகள் ஒளியமைந்த நறும்பூவினது முகையவிழ்ந் செவ்வியைநோக்கி அதனைச் சூழ்ந்து திரியும் தும்பியையும்போலும்; அதனைப்பாரென்றான். எ - று.

"நறுவிதழ் கண்டன்ன ‡செவ்விரற் கேழ்ப" (க) என உவமைகூறலின் நறும்பூவை ஈண்டுமணிக்கு (உ) உவமைகூறவே சிறியமணிகள்கோத்துக்கட்டினமையும் கோடெழுந்தென்றதனால் அக்கோடு எழுந்தகாலத்து வீழ்ந்த குருதியால் அவை சிவந்தமையும் பெற்றாம்.

சரு இடைப்பாய்ந் தெருத்தத்துக் கொண்டானோ டெய்தி
யிடைப்பாயும் வெள்ளேறு கண்டைகா
(ங)வாள்பொரு வானத் தரவின்வாய்க் கோட்பட்டுப்
போதரும் பான்மதியும் போன்ம்

க. கலி. அச: உஉ.

உ. நறும்பூவை ஏற்றின் கொம்புக்கும் தும்பியை அக்கொம்பிற் கட்டிய மணிக்கும் உவமையாகக் கொள்வது பொருத்தமென்று தோற்றுகிறது. "அவ்வளை வெரிநி னரக்கீர்த் தன்ன. செவ்வரி யிதழ சேணாறு நறவி, னறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப், பொன்னுரை கல்வி னன்னிறம் பெறூஉம், வளமலை" (நற். உரு) என்பதனால் நறும்பூ, செவ்வரியையும் தும்பிமொய்த்தலையுமுடைய தென்பது விளங்கும்; "களிர் கொடியன நறவினையக நறுமலரன நறவம்" (சூளா. தூது.

௪.) என வருதலால் இதன் முதல் ஒருகொடி யென்று தெரிகிறது. மயிலைநாதரும் ஒருகொடியென்றே கூறினர். இதனை ஓடையென்பது போல ஒரு மரத்துக்கும் ஒருகொடிக்கும் பெயரென்பாரு முளர்.

௫. "வான்போழ் வானத்து வயங்குகதிர் சிதறி" நாற். சூ. ௧௪௭. மேற்.

(பிரதிபேதம்) * தகைசால், † படுத்தலை மார்பிலே, ‡ மெல்விரற்கேற்ப,

எ-து: கடுவே பாய்ந்தெய்திக் கழுத்திடத்தே தழுவிக்கொண்டு கிடந்தவனோடே பரணின்மேலே தாவிப்பாயும் வெள்ளிய ஏறு பாம்பின்வாயாற் சிறிதிடம் விழுங்கப்பட்டு அப்பாம்புடனே ஒளியைத்தருகின்ற விசும்பிலே போதலைச்செய்கின்ற, பால்போலும் மதியையும்போலும்; இதனைக்காணு யென்றாள். எ - று.

(௧)*இகா முன்னிலையசை. அது காவெனத் திரிந்தது.

௪௭ ஆங்க, ஏறும் பொதுவரு மாறுற்று †மாறா
விருபெரு வேந்தரு மிகலிக்கண் ணுற்ற
பொருகளம் போலுந் தொழூஉ.

எ - து: அங்ஙனே ஏறுகளும் இடையரும் தம்மின் மாறுபடுகையினாலே அத்தொழு இருவராகிய பெரியவேந்தர் மாறுபட்டு எதிர்ப்பட்ட போர்மாறாத பொருகளத்தையொக்கும் என்றாள். எ - று.

இத்துணையும், தோழி தலைவிக்குக்காட்டிக் ‡கூறியது.

௫0 வெல்புக ழுயர்நிலைத் தொல்லியற் றுதைபுதை தூங்கிமி
னல்லேறு கொண்ட பொதுவன் முகநோக்கிப்
பாடில வாயமகள் கண்

எ - து: நெருங்கின கழுத்தையெல்லாம் மறைத்தலையுடைய அசைகின்ற குட்டேற்றினையுடைய ‖ நல்ல ஏற்றைத்தழுவின, வெல்கின்ற புகழ் உயர்கின்ற நிலைமையையுடைய, பழைதாகிய குலத்தியல்பினையுடைய, பொதுவன் முகத்தை நோக்கி ஆய்ச்சாதியிற்பிறந்த மகளுடைய கண் இமைத்தலை ×யிலவாயிருந்தன. எ - று.

இது, தோழி தன் னெஞ்சொடே அவள் விரும்பக் கூறியது.

---

௧. “நில்லிகா வென்பாள்போ னெப்பதற் றொடுத்தாளே, மல்லிகா மாலை வளாய்” என்புழி, நில்லிகா வென்பாள் போல் என்பதற்கு நில்லென்பாள் போல் என்று பொருள் கூறி, ‘இகவென்னும் அசை இகாவென வீறு திரிந்தது’ என்று (பரிபாடல். ௧௧: ௧௦௪-௧௦௫.) பரிமேலழகரும் காண்கா வென்பதற்குக் காண்பாயாக வென்று பொருள்கூறி, ‘இக வென்னும் முன்னிலையசை இகாவென ஈறு திரிந்தது’ என்று (சிலப். ௧௮: ௬௬) அரும்பதவுரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் எழுதியிருப்பதை நோக்க இங்கும் ‘இக, முன்னிலையசை; அது இகாவெனத் திரிந்தது’ என்று இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

(பிரதிபேதம்) * இதுமுன்னிலையசை. † மாறுவிருபெரு, ‡ கூறினுள வெல்புகழ். ‖ வல்லேற்றை, × இல்லயாயிருந்தனவெனத் தோழி தன்னுளளேயவன்விரும்பக்கூறினள், கறுத்தலாய்.

நான்காவது முல்லை ரு. ௩௭௫

௫௬ *நறுநுதா லென்கொ(௧)லிங் கூந்த லுளரச்
சிறுமுல்லை நாறிய தற்குக் †குறுமறுகி
யொல்லா தடன்றெமர் செய்தா ரவன்கொண்ட
கொல்லேறு போலுங் கதம்

எ-து: சிறிய நுதலினையுடையாய்! ஐவகைப்பட்ட கூந்தலை ஆற்ற அது (௨)வெண்ணெயின் நாற்றம் நீங்கிச் சிறிய முல்லைப்பூவின் நாற்றம் மேவி மிக நாறியதற்கு ‡எம்முடைய சுற்றத்தார் பொருந்தாதே ||அண்ணிதாக மனஞ் சுழன்று மாறுபட்டு அவன் தழுவின கொல்லுகின்ற ஏறுபோலுங் கோபத்தினைச்செய்தார்; அன்று அவர் இங்ஙனங் ÷கோபித்தது என்னபயனையுடைத்தாயிற்றென்றாள். எ - று.

இது தலைவியைநோக்கிக் கூறியது.

௫௭ (௩)நெட்டிருங் கூந்தலாய் கண்டை +யிஃதோர்சொல் ;
கோட்டினத் தாயர் மகனொடியாம் ×பாட்டதற்
கெங்க ணமரோ பொறுப்பர் பொறாதார்
தங்கண் பொடிவ தெவன்

எ - து: நெடிய கரிய கூந்தலையுடையாய்! இன்னும் யான்கூறுகின்ற ஈதொரு சொல்லையும் நெஞ்சால் ஆராய்ந்துபாராய்; கொம்பையுடையவாகிய எருமையினத்தை யுடைய ஆயர்மகனோடே யாங் **கூடியதற்கு எம்முடைய சுற்றத்தாரோ இன்னும் பொறுப்பர்; அதுபொறாத அயலார் ††தம்முடைய கண்கள் எங்கண்களை நோக்கித் தீய்ந்துபோவது என்னபயனை ‡‡யுடைத்தென்றாள். எ - று.

௬௧ ஒண்ணுதால்
இன்ன வுவகை பிறிதியாதி (௪)யாயென்னைக்
(௫)கண்ணுடைக் கோலலைத்தற் கென்னை

௧. இந்நூற்பக்கம் ௫அ௬: ௧-ஆம் குறிப்புப் பார்க்க.

௨. பாலையும் வெண்ணெயையும் நெய்யையும் தந்தலையில் தடவிக் கொள்ளுதல் ஆய்ச்சாதியாருக்கு இயல்பு.

௩. "நெட்டிருங் கூந்தற் கடவுளர்" கலி. ௯௩: ௩௫.

௪. "அன்னா யலையு மலைபோயிற்று" ஐந்திணையெழு. ௩.

௫. (அ) "நண்ணிய மென்பா லைக்குங்கோல் காணுங்கால், கண்ணல்ல தில்லைபிற" என்பதும், 'நண்ணிய மென்றிருக்கு மமைச்சரை அரசர்

(பிரதிபேதம்) * நறுநுதலா யென்கொலோ கூந்தலுளாயச். † குறுமறுகுபொல்லாது, ‡ கம் முடைய, || அண்ணிதாக அண்ணிதாக மனம், ÷ கோபித்தென்ன பயனே. ╋ இஃதுதோர், × பட்டதற்கென்கண். ** கூடியவதற்கு, †† தம்முடைய தங்கண்கள், ‡‡ உடைத்தென்னத் தலைவியைநோக்கிக்கூறினள், ஒன்றுதால்.

௩௭௬ கலித்தொகை ௧0௫.

மலரணி கண்ணிப் பொருவனோ டெண்ணி

பலர்செய்து விட்டதிவ் வூர்

எ-து: அதுகேட்ட தலைவி, ஒள்ளிய நுதலினையுடையாய்! (க)யாய் தன் கண்களுடையவாகிய கோலை *யுடையளாய் என்னைவருத்தியதற்கு இவ்வூர் என்னை மலரணிந்த கண்ணியை யுடைய பொருவனோடே கூட்டமென் றெண்ணி (உ)அலரையுண்டாக்கிவிட்டது; இத்தன்மைத்தாகியஉவகை நமக்கு வேறியாதுதானென மகிழ்ந்து கூறினாள். எ - று.

அலைக்குங்கோலின் காரியத்தைக் கண்கள் செய்தமைபற்றிக் கண்க ளுடையவாகிய கோலென்றாள்.

௬௬ ஒன்றிப் புகரினத் † தாயமகற் கொள்விழா

யின்றெவ னென்னை யொருர்கொடுப்ப தன்றவன்

மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்

புக்கக்காற் புக்கதென் னெஞ்சு

எ - து: அங்ஙனம் கூறியபின்னரும் ஒள்ளிய இழையினையுடையாய்! தன்மேல் மிக்குச்சென்ற சிவந்த கரிய ஏற்றினுடைய கோட்டிடையிலே இற்றைநாள் ‡அவன்செல்ல என்னெஞ்சும் உடன்சென்றது; இனிநஞ்சுற்றத்தாரெல்லாரும் பொருந்திப் புகழையுடைய பாத்திரங்களையுடைய ஆய்ச்சாதியிற் பிறந்த மகனுக்கு என்னைக்கொடுப்பதாக அறுதியிட்ட அற்றைநாளிற் கொடுக்கின்றது என்ன பயனையுடைத்தென்று தலைவி மகிழ்ந்து கூறினாள். எ - று.

என (ரு)

அலைக்குங்கோலாவது கண்ணெனவுணர்ந்துத் தன்வெகுளிநோக்கால் அவர் வெகுடற் குறிப்புறிக வென்பது கருத்தாக்கு வாருமுளர்' எனப் பரிமேலழகர் பிறர்கோட் கூறி யிருத்தலும் (குறள். எகo) (ஆ)"தொத் தார் மலர்க்குழல் வல்லிநம் மன்னை குரிசில்வந்த, செந்தா மரையடி கண்டனள் போலுமித் திண்சிலம்பில், வந்தா ரெவரென, வந்தார் சிலரிலர் மற்றிங் கென்றே, னெந்தா ளெடிதுயிர்த் தாள்கொடி தாயென்னை நோக்கினளே" (அம்பிகாபதிகோவை. உகக) என்பதும் ஈண்டு அறிதற்பாலன.

க. யாய் - என் தாய். "யாயு ஞாயும் யாரா கியரோ" குறுந். ௪o.

உ. "களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம், வெளிப்படுந் தோறு மினிது" குறள். ககச௫.

ரு. எனவென்பது. இங்கே அசைநிலை.

(பிரதிபேதம்) * உடையாய் † ஆயர்மகற்கு. ‡ இவன்செல்ல.

நான்காவது முல்லை சூ. கூள்ள்

எக (க)பாடிமிழ் பரப்பகத்*தரவணை யசைஇய
வரடுகொ ணேமியாற் பரவுது நாடுகொண்
டின்னிசை முரசிற் (உ)பொருப்பன் ※மன்னி
யமைவர லருவி யார்க்கு

மிமையத் தும்பரும் †விளங்குக வெனவே.

எ-து: அதுகேட்ட தோழி,யாம்(ங)இல்லறம்நிகழ்த்தி இனிதிருக்குமாறு காத்தற்குப் பிறநாடுகளைக்கொண்டு இனிய ஓசையையுடைத்தாகிய முரசினையுடைய பாண்டியன் அமைந்து வருதலையுடைய அருவி ஆரவாரிக்கும் இமயத்திற்கு வட ‡திசையிலேயும் மன்னி விளங்குகவென்று உட்கொண்டு முறிதலையுடைத்தாகிய முழங்குகின்ற கடலிடத்துப் பாம்பணையிலே பள்ளிகொண்ட வெற்றி கொண்ட சக்கரத்தினை யுடையோனை வாழ்த்துவே மென்றாள். எ - று.

இதனால், தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது தாவும் தனிச்சொல்லும் ஐஞ்சீரடி பலவும் விராய் மூடுகுவண்ணம் அடியிறந்தோடிய கொச்சகவெண்பாவும் கொச்சகமும் இரண்டு நெடுவெண்பாட்டும் "வெண்பாட்டீற்றடி முச்சீர்த்தாகும்" (ம)என்றதனான் இடையீற்று முச்சீரடிவந்த நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடி பெற்ற குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடி மூடுகியலோடு தொடர்ந்த கொச்சகவெண்பாவும் நெடுவெண்பாட்டும் ஈரடியாறென்றும் குறுவெண்பாட்டும் தனிச்சொல்லும் இரண்டு நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகம். (இ)

(௧0ரு.) கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்

ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி
யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர்
வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை

பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தார்;

௧. முல்லை நிலத்துக்குத் திருமால் தெய்வ மென்பதற்கு "பாடிமிழ் பரப்பகத் தரவணை............பரவுதும்" என்பது மேற்கோள்; தொல். அகத். சூ. ௫. நச்.

௨ இந்நூற் பக்கம் ௧௧௫: ௧-ஆம் குறிப்புப் பார்க்க.

௩. "காவற்பொருட்டு அரசன் வாழ்க..........,என யாய் இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்" என்னும் (ஐங்குறுநூறு. ௧.) உரைப்பகுதி இங்கே நோக்கற்பாலது.

௪. தொல். செய். சூ. ௭௨.

(பிரதிபேதம் * முன்னி, † விளக்குகெனவே, ‡ திசையிலே மின்னி.

௬ அவ்வழி,
நீறெடுப்பவை நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய் பவையாய்த்
துளங்கிமி லல்லேற் றினம்பல களம்புகு
மள்ளர் வனப்பொத் தன;
௧௧ தாக்குபு தம்முட் பெயர்த்தொற்றி யெவ்வாயும்
வைவாய் மருப்பினான் மாறுஅது குத்தலின்
மெய்வார் குருதிய வேறெல்லாம் பெய்காலைக்
கொண்ட னிரையொத் தன;
அவ்வேற்றை;
௧௩ பிரிவுகொண் டிடைப்போக்கி யினத்தோடு புனத்தேற்றி

யிருதிறனு நீக்கும் பொதுவ
ருருகெழு மாநில மியற்றுவான்
விரிதிரை நீக்குவான் வியன்குறிப் பொத்தனர்;

௨௰ அவரைக், கழல வுழக்கி யெதிர்சென்று சாடி
யழல்வாய் மருப்பினாற் குத்தி யுழலை
மரத்தைப்போற் றொட்டன வேறு;

௨௩ தொட்டதம், புண்வார் குருதியாற் கைபிசைந்து மெய்திமிரித்
தங்கார் பொதுவர் கடலுட் பரதவ
ரம்பியூர்ந் தாங்கூர்ந்தா ரேறு;

௨௬ ஏறுதம், கோலஞ்செய் மருப்பினாற் றோண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண் டெழூஉம் பருந்தின் வாய்வழீஇ
யாலுங் கடம்பு மணிமார் விலங்கிட்ட
மாலைபோற் றூங்குஞ் சினை;
ஆங்கு;

௩௧ தம்புல வேறு பரத்தர வுய்த்தத
மன்புறு காதலர் கைபிணைந் தாய்ச்சிய
ரின்புற் றயர்வர் தழூஉ;

௩௪ முயங்கிப் பொதிவே முயங்கிப் பொதிவே
முலைவேதி னொற்றி முயங்கிப் பொதிவேங்
கொலையேறு சாடிய புண்ணையெங் கேளே;

௩௭ பல்லூழ் தயிர்கடையத் *தாஅய புள்ளிமேற்
கொல்லேறு கொண்டான் குருந்தி மயக்குறப்
புல்லலெக் தோளிற் கணியோவெங் கேளே;

௪௰ ஆங்கு, போரேற் றருந்தலை யஞ்சலு மாய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலு மிவ்விரண்டு
மோராங்குச் சேற விலவோவெங் கேளோ;

௪௩ கொல்லேறு கொண்டா னிவள்கேள்வ னென்றார்
சொல்லுஞ்சொற் கேளா வளைமாறி யாம்வருஞ்
செல்வமெங் கேள்வன் றருமோவெங் கேளோ;

ஆங்க;

௪௭ அருந்தலை யேற்றொடு காதலர்ப் பேணிச்
சுரும்பிமிர் கானநாம் பாடினம பரவுது
மேற்றவர் புலங்கெடத் திறைகொண்டு
மாற்றாரைக் கடக்கவெம் மறங்கெழு கோவே.

இது தத்தம் இனம் தத்தம்புலத்துப் பிரிப்பான்புக்கவர் ஏறுகொண்ட வாறுகண்டு *ஆய்ச்சியர் தங்காதன்மிகுதியால் †தங்காதலரைக் கைபிணைந்து தரவையடித் ‡தென்னன்வாழ்கெனக் கானம்பாடியது.

இதன் பொருள்.

(௩)கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்
ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி

௧. "கொன்றையங் தீங்குழல்..........கேளாமோ தோழீ" (சிலப். ௧௭. 'கன்றுகுணிலா') என்னுந்தாழிசைகளின்விசேடவுரையில், "கொன்றை ஆம்பல் முல்லை என்பன சிலகருவி. இனி அவற்றைப் பண்ணென்று கூறபவெனின். அங்ஙனம் கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண் ணுதற்குப் பொருந்தக் கூறினல்லது கொன்றை என ஒருபண் இல்லை

யாதலா(... ... ...)னும் கலியுள் முல்லைந் திணையின்கண் ஆரும்பாட்டி னுள், இப்பாட்டில் 'கழுவொடு ....வியன் புலத்தர்' எனக்கருவி கூறினமையானும் 'அன்றைப் பகர்கழிந் தாளின் றிராப்பகற், கன் றின் குரலுங் கறவை மணிகறங்கக், கொன்றைப் பழக்குழற் கோவல ராம்பலு. மொன்றல் சுரும்பு நரம்பென வார்ப்பவும்' என வளையா பதியுள்ளும் கருவி கூறிப் பண்கூறுதலாலும் இவை ஒரு பொருண் மேல் மூன்றடுக்கிவந்த ,வொத்தாழிசையாகலானும் இரண்டு பண்ணும்

(பிரதிபேதம்) * ஆச்சியர், † தன்னினைகாதலரை, ‡ தென்னவன்வாழ்கென.

ஙூ அ0 கலித்தொகை க0ஙூ.

யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர்
*வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்†புலத்தார்

எ - து: பால் பற்றறச் சீவுதலைச்செய்த(க)கறவைக்கலங்கள் வைத்த உறி யோடே தோற்பையிடத்தே கழுவோடேசூட்டுக்கோல்களையும்இட்டுச்சுருக்கிய பைகளையுந் தூக்கி நீளவளர்ந்த கொன்றைக்காயைத் திறந்து சமைத்த இனிய குழலில் உண்டான ஓசையராய் வழுவின சொல்லையுடைய ‡கோவலர் தம் முடைய தம்முடைய இனமாகிய பசுக்கள் கார்காலத்தோடே தோன்றின அப்பொழுது வரும் மழையாலே நனைந்த அகற்சியையுடைய நிலத்திடத்தா ராயினர். எ - று.

பழிசை ||பாடமாயின், பழித்தலையுடையதென்க. பழித்தலையுடையது பழிசை. முரற்சியர் என்னும் எச்சம் உடையவென்னும் வினைக்குறிப்போடு +முடிந்தது. (உ) கழுவாவது கறத்தற்கரிய பசுக்களைக் கறத்தற்கு இரண்டு தலையுஞ் சீவி மாலையாகக்கட்டிக் கழுத்தில் இடுவது.

(௩)நீறெடுப்பவை நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய் பவையாய்த்

ஒன்று கருவியுமாகக் கூறின் செய்யுட்கும் பொருட்கும் வழூஉச் சேறலானும் அங்ஙனங்கூறாத லமையாதென்க" என்று அடியார்க்கு நல்லார் எழுதியிருப்பது ஈண்டு அறிதற்பாலது.

௧. "திண்கா ழறியன் பாணைய னகலன்" அகநா. உ௭௪: ௬.

௨. (அ)"நாகுகு னீங்கிய சேதாத் தொகுத்துக், குளம்புக் கோடும் விளங்கு பொன் னுறீஇத், தளையுத் தாம்பு மிளைகடை மத்துங், கழுவுங் கலனும் வழுவில பிறவும், பைம்பொனி னியன்றவை பாற்பட வகுத்துக், குன்றாக் கோடி கொடுத்துவப் போரும்" பெருங். (௧) ௩௧: ௬௪-௬௬. (ஆ) "கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத், தொழுவிடை யாயந் தொகுமின்" (தொல். புறத். சூ. ௩. ௩௪. மேற்.) என்பவற்றில் இச்சொல் வருதல் காண்க.

௩. (அ) "அடியிட்டு நிலங் கிளைத்தண்டமெண் டிக்கும் போர்ப்பப், பொடி யிட்டெயிர்த்துப் பொருகோட்டினிற் குத்திக் கோத்திட், டிடியிட் டதிர்கா ரெதிரேற்றெழுந் தாங்கு நோக்கிச், செடியிட்டிருகண் ணழல் சிந்த நடந்த தன்றே" திருவிளை. மாயப்பசுவை. ௧௭. (ஆ) "கானிலங்

(ஏடுபேதம்) * வழுச்சொல், † புலத்தர் எ-து: கழுவாவது............கழுத்திலிடுவது பால் பற்றறச், ‡ கோவர் தம்முடைய, || பாடமாயின் பழித்தலையுடையது பழிசை யாம்.மூரற்றியா ரென்னும், + முடிந்தது அவ்வழி.

துளங்கிமி னல்லேற் றினம்பல களம்புகு
மள்ளர் வனப்பொத் தன

எ - து: அவ்விடத்துத் துளங்குகின்ற குட்டேற்றினையுடைய நல்ல ஏற்றினங்கள் பலவும் முன்பு காலாலே வெட்டி நீற்றை எழுப்புமவை இப்பொழுது (க)மழைபெய்தமையிற் (உ) கோட்டுமண் கொள்ளுமவை ஒன்றோடொன்று மாறுபடுதலை மேற்கொண்டு முழங்குமவை மிக்குப்பாயுமவையாய்ப் போர்க்களத்தே *செல்லும் வீரர் அழகையொத்தன. எ - று.

கக தாக்குபு தம்முட் பெயர்த்தொற்றி யெவ்வாயும்
வைவாய் மருப்பினான் மாறாது குத்தலின்
மெய்வார் குருதிய வேறெல்லாம் பெய்காலைக்
கொண்ட னிரையொத் தன

எ - து: ஒன்றோடொன்று தாக்கி மீண்டு அடிப்பறித்துச்சேர்த்து கூரிய இடத்தையுடைய கொம்பாலே மாறாமல் எவ்விடத்துங் குத்துகையினாலே மெய்யினின்றும் வடிகின்ற குருதியையுடைய †ஏறுகளெல்லாம் காட்காலைப் பெய்யும் ‡மேகநிரையையொத்தன. எ - று.

காட்காலைமேகம் சிவந்திருத்தலின், உவமையாயிற்று. பெய்யு மேகம் அதற்கு அடைகூறிற்று.

கடு அவ்வேற்றை
பிரிவுகொண் டிடைப்போக்கி யினத்தோடு புனர்த்தேற்றி
யிருதிறனா நீக்கும் பொதுவ

கிறி வான்மிசை யுயர்த்துக் கதிர்மணி மருப்பிடை நோக்கி, யானின வேறு யடுசமர்க் கெழுந்தா னசனியே றென்னவோ ரவுணன்" பாக. (சo) ஸ்ரீ நாரதர். ௯.

க. "பெயல, கடுநீர் வாரித்த செந்நில மருங்கின், விடுநெறி யீர்மணல் வாரணஞ் சிதறப், பாம்புறை புற்றத் தீர்ம்புறங் குத்தி, மண்ணுடைக்

கோட்ட வணண னல்லேஎ, றுடனிலே வேட்கையின் மடாகு தழீஇ,
யூர்வயிற் பெயரும் பொழுதில்" அகம். ௬௪: எ - ௧௩.

உ. (அ) "கோட்டுமண் கொண்ட மார்பம்" சீவக. உ௨௬௪. (ஆ) "கோட்டு மண் கொள்ளா முலே" முத் .... (இ) "கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள்" நள. சுயம். ௧0௨. (ஈ) "கோட்டுமண் கொண்டு" கூர்ம. ஆதவர்சிறப்பு. அ. (உ) கோட்டுமண் கொள்ளும் வேழம்" தணிகை. வீரட்ட. ௬உ.

(பிரதிபேதம்) * கொல்லும் வீர, † ஏறெல்லாம், ‡ மேகநிரையொத்தன.

ருருகெழு (௧)மாநில மியற்றுவான்
*விரிதிரை நீக்குவான் வியன்குறிப் பொத்தனர்

எ - து: † அவ்வேறுகள் போர்செய்யாமற் பிரிதலைத் தாம் உட்கொண்டு அவை இரண்டு கூறாக நீங்கும்படி நடுவே சிலஏறுகளைச்செலுத்தி விலக்கிப் பின்னர்ப் பசுத்திரளோடே மேயும்புலத்திலே ஏற்றித் தத்தம் இனங்களைப் பிரிக்கும் இடையர் பழையவடிவுகளெல்லாங்கெழுமும்படி பெரியநிலத்தைப் ‡படைத்தற்கு அகற்சியையுடைய கருத்தினையுடைய,(உ) அந்நிலத்தை மறைத்துக்கிடந்த கடலைப் போக்கும் நான்முகனையொத்தார். எ - று.

ஏற்றையென்றது ஏற்றிற்கு ஐகாரவீற்றதோர்பெயர்; "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா, மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப" (௩.) என்றலின்.

௨0 அவரைக், (௬)கழல வுழக்கி யெதிர்சென்று சாடி.
யழல்வாய் மருப்பினாற் குத்தி (ரு)யுழலை

மரத்தைப்போற் றொட்டன வேறு

எ - து: அங்ஙனம் நீக்குகின்றவர்களை அவ்வேறுகள் ஓம்படி மிகுத்து ஓடாமல் நின்றவர்களை எதிர் சென்று அழலுகின்ற இடத்தையுடைய கொம்பாலே குத்திச் சாடி உழலைகோத்த மரத்தைப்போலத் துளைத்தன. எ - று.

க. (அ) "மாறி யுலகம் வருத்தநாள் வரம்பு கடந்து மண்முழுது, மேறி யொடுங்கு மெறிகடல்போ லெயின்மா நகர மெய்தினர்" (ஆ) "தேர் செலும் வேகத்து வேலைநீ, ரோங்கு நாளி னொருங்கு முலகுபோர், முங்க லாற்றவில் லார்தடு மாறித்தா, நீங்கினர்"

உ. "உரைசெய் நான்முக னுறங்குழிப் புவிகொள வொருங்கே, திரை செய் வான்கடல் சென்றெனச் சென்றது சேனை" கந்த. திக்கு. ௪0.

ங. தொல். மரபி. சூ. ௬௪.

௪. "கோவலர், கழலக் காடுபோய்" சீவக. ௬௨௨.

ரு. உழலைமரம், தொழுவமுதலியவற்றுள் மாடுகளைப் புகாமல் தடுப்பதற்கு அவற்றின் வழியில் இருபக்கத்தும் உழலையை (கழிகளை) இழுத்துப் போடும்படி துளைத்துநிறுத்தியிருக்கும் மரம்; இது கடப்புக்காலெனை வழங்கும். "கன்று தாம்பரிச், துழலை பாய்ந்துலா முன்றில்" என்பது சீவக. ௬௨௨.

(பிரதிபேதம்) * விரைநிரை, † எற்றையென்றது..............என்றலின் அவ்வேறுகள், ‡ படைத்தற்கு இந்நிலத்தை மறைத்துக்கிடந்த அகற்சியையுடைய கடலைப் போக்கும் கருத்தினையுடைய நான்முகனையொத்தார், அவ்வரைக்.

நான்காவது முல்லை ரு. ௬௮௩

௨௩ தொட்டதம், புன்வார் குருதியாற் கைபிசைந்து மெய்திமிரித்

தங்கார் பொதுவர் கடலுட் பரதவ
(க)ரம்பியூர்ந் தாங்கூர்ந்தா ரேறு

எ - து: பொதுவர் அங்ஙனந் துளைத்த தம்முடைய புண்களினின்றுஞ் சோருகின்ற குருதி வழுக்குதலாலே மணலை அள்ளிக் கையைப் பிசைந்து *உடம்பையும் (உ)திமிர்ந்து தாழ்க்க நில்லாராய்க் கடலுக்குள்ளே பரதவர் (ங)சிறிய தெப்பத்தை ஏறினாற்போல ஏற்றைத் தழுவினர். எ - று.

உசு ஏறுதங் கோலஞ்செய் மருப்பிற் கோண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண் டெழூஉம் பருந்தின் †வாய்வழீஇ
யாலுங் கடம்பு மணிமார் விலங்கிட்ட
மாலைபோற் றூங்குஞ் சினை

எ - து: அவ்வேறுகள் தம்முடைய அழகுசெய்கின்ற கொம்பாலே கோண்டிய வரிகளையுடைய குடர்கள் ஞான்று விழும்படி எடுத்துக்கொண்டு உயர்ந்துபோம் பருந்தின் வாயினின்றுந் தப்பி ஆலமரத்தையும் ‡கடப்பமரத்தையும் (ச)ஆண்டு உறையுந்தெய்வங்கட்கு ‖மகிழ்ச்சியுண்டாகவேண்டி அணிதலைச்செய்தற்கு விலங்க இட்டுவைத்த மாலைகள்போலே கொம்புகடோறுந் + தூங்காநிற்கும். எ - று.

௩0 ஆங்கு
தப்புல வேறு பரத்தர வுய்த்தத
மன்புறு (ரு)காதலர் கைபிணைந் × தாய்ச்சிய
ரின்புற் றயர்வர் தழூஉ

க. "மறை யேற்றின் மேலிருந் தாடித் துறையம்பி, யூர்வான்போற் றோன்று மவன்" கலி. கOங: ங௮-ஙக.

உ. திமிர்தல் - பூசுதல்; "திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதனமே" என

வருதல் காண்க. திமிருறச் செய்தலென்பாருமுளர்.

௩. அம்பியென்பது தெப்பத்துக்கும் நீரிற் செலுத்தும் எல்லாக் கருவிகளுக்கும் பெயரென்பவாயினும் ஏற்றுக்கு உவமையாய் வருதலிற் சிறியதெப்பமென்று பொருள்கூறினர். "தண்புன லாடுந் தடக்கோட்டெருமை, திண்பிணி யம்பியிற் றோன்றுமூர" என்பது ஐங்குறு. ௯௮.

௪. இந்நூற்பக்கம் ௬௨௧: ௬, ௬௨௨: ௧-ஆம் குறிப்புக்கள் பார்க்க.

௫. குரவை யென்பது: (அ) "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலு, மெய்த வுரைக்கு மியல்பிற் றென்ப" (ஆ) "குரவை யென்ப தெழுவர் மங்கையர், செந்நிலை மண்டலக்

(பிரதிபேதம்) * உடம்புந்திமிர்ந்து, † வாய்வழியாலும், ‡ கடம்பமரத். || மகிட்சியுண்டாக வேண்டியதனிதலைச்செய்தற்கு, ┼ தாங்காமிற்கும். தம்புல். × ஆச்சியர்,

எ - து: அப்பொழுது ஆய்ச்சியர் தாம் மேயும் புலத்திலே ஏறு பரத்தலைச் செய்யும்படி செலுத்தின தம்முடைய அன்புமிக்க காதலருடைய கையைக் கோத்து இன்பமுற்றுக் குரவையாடுவர். எ - று.

௩௪ முயங்கிப் பொதிவே முயங்கிப் பொதிவே
(௧)முலைவேதி னொற்றி முயங்கிப் பொதிவேங்
கொலையேறு சாடிய புண்ணையெங் கேளே

எ - து: எம்முடைய தோழீ! கொலைத்தொழிலையுடைய ஏறுகள் சாடின புண்களைத் தழுவிக்கொண்டு பொதிந்துவிடக் கடவேம்; எங்ஙனந் தழுவுவதென்று கேட்பாயாயின் முலையின் வெம்மையாலே ஆறும்படி ஒற்றித்தழுவிக் கொண்டு பொதிந்துவிடக் கடவேம். எ - று.

கடகக் கைகோத், தந்நிலைக் கொட்பின் ருட லாகும்" என்னும்

(சிலப். பதி. எ. உரைமேற்.) சூத்திரங்களால் தலைவனது காமமும் வென்றியும் தோன்றக்கூறி எழுமங்கையர் கைகோத்துச் சுழன்று ஆடுவதென்றே அறியப்படுமாயினும், (சிலப். ரு: கஉ.) "இருவகைக் கூத்தின்" என்பதன் விளக்க வுரையால், குரவையென்பது: காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது என்று அறியப் படுகின்றது. இவையும் (இ) "மாயவனுடன் றம்முனாடிய, வாலசரிதை நாடகங்களில், வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குரவை யாடுதும்"

(ஈ) "மாயவன்றன் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடுங், கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர, வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத், தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே" சிலப். கஎ. என வருபவைகளும் (உ) "இடவல" என்பதற்கு, 'ஆய்ச்சியரோடு குரவைகோத்தலால் அவர்க்கு இடமும் வலமும் ஆயினேப்' பரி. ரு: அரு. என்று எழுதியிருக்கும் உரையும் (ஊ) "களிதவென்பதற்கு தன்னைச் சேவிக்கு மகளிரொடு குரவையாடிச் செறிதல்" (பதிற். ருஉ: கசு) என்று எழுதியிருக்கும் உரையும் (எ) "பரதவர், வெப்புடைய மட்டுண்டு, தண்குரவைச் சீர் தூங்குந்து" (ஏ) "குரவர் மாக்கள், வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து, வேங்கை முன்றிற் குரவை யயரும்" புறம். உசூ: ச - சு, கஉகு: க - ரு, என வருபவைகளும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "புண்களைத் தடமுலை வேதுகொண் டொற்றியும்" கலிங்க. கடை. கரு. (ஆ) "புண்வருத்தந் தன்னைநோக்கிக், கொங்கையையொற் றிடங்கொடுத்து" தனிப்பாடல். என்பவையும் (இ) "கொம்மை வரி முலை வெம்மை வேதுறீஇ" சிலப். உஅ: கசு. (ஈ) "கொம்மை வரு முலை வெம்மையிற் றடைஇ" நெடுநல். சுகூ. என்பவையும் இங்கே அறிதற்பாலன.

௩௭ பல்லூழ் (க)தயிர்கடையத் தாஅய *புள்ளிமேற்
கொல்லேறு கொண்டான் குருதி மயக்குறப்
புல்லலெந் தோளிற் கணிமையோவெங் கேளே

எ - து: எம்முடைய தோழீ! பலமுறையாகத் தயிரைக் கடைகையி னாலே பாய்ந்த புள்ளிகளின்மேலே கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினவ னுடைய குருதி மயக்கமுறும்படி தழுவுதல் எம்முடைய தோளிற்கு அழகு மாத்திரையோ? அதிலுஞ்சிறந்ததொன் றன்றோ. எ - று.

௪௰ ஆங்கு, போரேற் றருந்தலை யஞ்சலு மாய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலு மிவ்விரண்டு
மோராங்குச் சேற லிலையோவெங் கேளே

எ - து: எம்முடைய தோழீ! ஆயர் பொருகின்ற ஏற்றினது சேருதற் கரிய†தலையை அஞ்சுதலும் ஆய்ச்சியர் ஏறுதழுவாதவருடைய காரிகைத்தோளை விரும்புதலுமாகிய இவ்விரண்டு நிலையும் இக்குடிப்பிறந்தவர்களுக்கு ஒன்றாகச ‡செல்லுதல் ஈண்டு இல்லையோ. எ - று.

காரிகைத்தோளென்றது, இகழ்ச்சி; வடுப்படாததோளாதலின்.

௪௧ கொல்லேறு கொண்டா னிவள்கேள்வ னென்றூரார்
சொல்லுஞ்சொற் கேளா வளைபெறி யார்வருந்
செல்வமெங் கேள்வன் றருமோவெங் கேளே

எ - து: எம்முடைய தோழீ! இவளுடைய கணவன் கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினனென்று ||ஊரார் புகழ்ந்து சொல்லுகின்ற அச்சொல்லைக் கேட்டு மோரைவிற்று யாம் வருஞ் செல்வத்தை எங்கணவன் தருமோ. எ-று.

ஓகாரம், தெரிநிலை. என்றது, அவன் புறத்துப் + போய் இப்புகழ்கேட்க

என்னைவிடானென அவன் தன்மேலுள்ள விருப்பங் கூறிற்று. இவை குரவைப்பாட்டு.

சூசு ஆங்க

(உ) அருந்தலை யேற்றெருடி காதலர்ப் பேணிச்
சுரும்பிமிர் கானநாம் பாடினம் பரவுது
மேற்றவர் புலங்கெடத் திறைகொண்டு
மாற்றாரைக் கடக்கவெம் மறங்கெழு கோவே

க. "தயிர்ப்புளி, மொய்த்த தோரணலார்" சீவக. சஉரு.
உ. அருந்தலை யென்பதற்கு இக்கும் இச்செய்யுள் ௪0-ஆம் அடியிற்குறித்த பொருளே கொள்க.

(பிரதிபேதம்) * புன்னியின்மேற், † தலையஞ்சதறும், ‡ சொல்லுதலினடுவீல்லையோ, || வோர் புகழ்ந்து, × போயப்புகழ்.

௬௮௬ கலித்தொகை கoஎ.

எ - து: எற்றையும் நங்காதலரையும் பாதுகாத்துச் சுரும்பினம் ஒலிக்கின்ற கானத்தை நாம் பாடினமாய்த் திருமாலைப் பரவுவோம்; அப்பயனாலே எம்முடைய மறம்பொருந்திய பாண்டியன் பகைவர்நிலமென்னும் பெயர் கெட்டுத் தன்னிலமென்னும் பெயர்பெறும்படி அவர்நாட்டைத் திறைகொண்டு பகைவரை வெல்வானாக என்றார். எ - று.

இந்நிலப்பண்பிருந்தவா*றென்னென்று கண்டோர் கூறிற்றாகக்கொள்க.

இது, கண்டார்க்குப் புதுமையாகிய மருட்கை பிறந்தது.

இது முன் ஒருகொச்சகமும் தனிச்சொல்லும் முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாகிய சொற்சீரடிபெற்ற கொச்சகவெண்பாவும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் சொற்சீரடிவந்த கொச்சகமும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்

பாட்டிரண்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் குறுவெண்பாட்டும் நான்கு தாழிசையும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்ற கொச்சகம்.

(கOஎ.) எல்லா விஃதொன்று கூறு குறும்பிவர்
புல்லினத் தார்க்குங் குடஞ்சுட் டவர்க்குமெங்
கொல்லேறு கோடல் குறையெனக் கோவினத்தார்
பல்லேறு பெய்தார் தொழூஉ;

ரு தொழுவத்து;

சில்லைச்; செவிமறைக் கொண்டவன் சென்னிக் குவிமுல்லைக்
கோட்டங்காழ் கோட்டி னெடுத்துக்கொண் டாட்டிய
வேழை யிரும்புகர் பொங்கவப் பூவந்தென்
கூழையுள் வீழ்ந்தன்று மன்;

கO அதனைக், கெடுத்தது பெற்றார்போற் கொண்டியான் முடித்தது
கேட்டன னென்பவோ யாய்;

கஉ கேட்டா லெவன்செய்ய வேண்டுமோ மற்றிகா
வவன்கண்ணி யன்றோ வது;

கச பெய்போ தறியாத்தன் கூழையு ளேதிலான்
கைபுனை கண்ணி முடித்தாளென் றியாய்கேட்பிற்
செய்வதி லாகுமோ மற்று;
எல்லாத் தவறு மறும்;
ஓஒ அஃதறு மாறு;

(பிரதிபேதம்) * என்றுகண்டோர்கூற்றாகக்கொள்க.

க௯ ஆயர் மகனாயி னாயமக ணீயாயி
னின்வெய்ய னாயி னவன்வெய்யை நீயாயி
னின்னைநோ தக்கதோ வில்லைம னின்னெஞ்ச
மன்னைநெஞ் சாகப் பெறின்;
அன்னையோ;
உச ஆயர் மகனையுங் காதலை கைம்மிக
ஞாயையு மஞ்சுதி யாயி னரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து;
உஎ மருந்தின்றியா னுற்ற துயராயி னெல்லா
வருந்துவே னல்லனோ யான்;
உ௯ வருந்தாதி;
மண்ணிமா சற்றநின் கூழையு ளேறவன்
கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னையப்
பொய்யில் பொதுவற் கடைசூழ்ந்தார் தந்தையோ
டையன்மா ரெல்லா மொருங்கு.

இது தலைவி தோழிக்குஅறத்தோடுநிற்பத் தமர் *வரைவுடன்பட்டமை அவட்கு அவள் சொல்லியது.

இதன் பொருள்.

எல்லா விஃதொன்று †கூறு குறும்பிவர்
(க)புல்லினத் தார்க்குங் (உ)குடஞ்சுட் டவர்க்குமெங்
(௩)கொல்லேறு கோடல் (ச)குறையெனக் கோவினத்தார்

க. (அ) "புல்லினத்தாயனேநீ யாயிற் குடஞ் சுட்டு, நல்லினத் தாயரெமர்" கலி. கக௩: அ - கூ. (ஆ) "புல்லினத்தாய மகன்" கலி. கக௫: ௬.

உ. (அ) "நீரார் நிழல குடஞ்சுட் டினத்துள்ளும்" கலி. க0க: ௩. (ஆ) "கடுஞ் சுரையா னுன்கு, குடஞ்சுட் டினத்தாற் கொடு" பு - வெ. வெட்சிப். க அ.

௩. "கொல்லேறு கொண்டான்" கலி. க0௪: ௬௩.

௪. குறை யென்பதற்கு இன்றியமையாததென்று சேனாவரையரும் பரிமே லழகரும் முடிக்கப்படும் பொருளென்று புறநானூற்றுரையாசிரியரும் பொருள் கூறுவர்.

(பிரதிபேதம்) * வரைவுடம்பட்டமை.† கூறுக்குறும்பு.

௩அஅ கலித்தொகை க0எ.

எ - து: ஏடீ! குறும்பிடத்தே பரந்திருக்கின்ற ஆட்டிடையர்க்கும் இப்பசு இன்னதனைக் குடம்பால் போதுமென்று சுட்டுதலையுடைய பசு விடையர்க்கு மாகக் கோவினத்தையுடைய நஞ்சுற்றத்தார் எம்முடைய கொல்லுகின்ற ஏற்றைத் தழுவுதலே காரியமென்று தொழுவிலே ஏறுகளைப்புகுதவிட்டார். எ - று.

௫ தொழுவத்துச்

சில்லைச், (க)செவிமறைக் கொண்டவன் சென்னிக் குவிமுல்லைக்

(உ)கோட்டங்காழ் கோட்டி னெடுத்துக்கொண் டாட்டிய

வேழை யிரும்புகர் பொங்கவப் பூவக்தென்

கூழையுள் வீழ்ந்தன்று மன்

எ - து: அத்தொழுவிடத்துச் சிலுவைக்குணத்தையுடைய செவிமறை யாயிருக்கின்ற ஏற்றைத் தழுவினவனுடைய சென்னியிற் கிடந்த குவிந்த (ங) முல்லைப் பூவாற் கட்டின விளவினை யுடைய கண்ணியைக் கொம்பிலே எடுத்துக்கொண்டு அலைத்த ஏழையாகிய பெரிய புகரேறு துள்ளுகையினலே அப்பூ வந்து என்மயிருக்குள்ளே மிகவும் வீழ்ந்தது. எ - று.

ஏழையென்றாள் களவொழுக்கம் *வெளிப்படுதல் இறவாமற் கோட்டால் அலைத்தமைபற்றி.

கo அதனைக்,(ச)கெடுத்ததுபெற்றார்போற் கொண்டியான்முடித்தது கேட்டன ளென்பவோ யாய்

எ - து: அக்கண்ணியை, கெடுத்ததொன்று மீண்டு பெற்றாரைப்போல எடுத்துக்கொண்டு யான்முடித்ததன்மையை யாய் கேட்டாளென்று சொல்லுவர்களோ? ஈதொரு வார்த்தையை எனக்கு விளங்கக் கூறுவாயென்றாள். எ - று.

†இஃதொன்று கூறு என்னுஞ்சொல்லை என்பவோ என்பதன் பின்னே கூட்டிப் பொருள்கூறுக.

க. "செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளை" கலி. கoங: உஎ.

உ. (அ) "கோட்டங் கண்ணியுங் கொடுந் திரையாடையும்" புறம். உஎ௫:
(ஆ) "கோட்டுப்பூச் சூடினும்" குறள். கங.கங.

ங. "தேன்சொரி முல்லைக்கண்ணிச் செந்துவராடையாயர்" சீவக. சஅ௫.

ச. (அ)கெடுத்துப்படு நன்கல மெடுத்துக் கொண்டாங்கு" நற். கஅஉ: ௯.
(ஆ) "பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்" கம்ப- உருக் காட்டு: சு௯. (இ) "இழந்தனம் பெற்றவர்போ லிராக்கதர்க ளிரைத் தீண்டி யிழந்தங்கள், பழம்பதியிற் குடிபுகுந்து" இராமா. வரை யெடுத்த. ௯௯.

(பிரதிபேதம்) * வெளிப்படுத்தல், † இதவொன்று.

கஉ கேட்டா லெவன்செய்ய வேண்டுமோ மற்(க)றிகா
வவன்கண்ணி யன்றோ வது

எ - து: மேல் தோழி, அக்கண்ணி வரைந்துகோடல் தாழாத அவ னுடைய கண்ணியன்றோ? அதனைப் பின்னை யாய் கேட்டால் என்ன பரிகாரம் யாஞ்செய்யவேண்டும்? அதற்கு ஒன்றும்வேண்டாவென்றாள். எ - று. ஓ; அசை.

கச (உ)பெய்போ தறியாத்தன் கூழையு ளேதிலான்
கைபுனை கண்ணி முடித்தாளென் றியாய்கேட்பிற்
செய்வதி லாகுமோ மற்று

எ - து: அதுகேட்ட தலைவி, (ங)முடிக்கும் பூ †இதுவென்றறியாத தன்னுடைய மயிரில் ஏதிலான் கையாலே புனைந்தகண்ணியை முடித்தாளென்று தாய்கேட்கில் அதற்குப் பின்னை அவள் வெகுளாமற்செய்வதொரு பரிகாரம் இல்லையாயிருக்குமோ என்றாள். எ - று.

மயிருக்கு (ச)மணந்தரும் பூ முடித்தல் வேண்டுமென்று அறியாதவள்.

கஎ எல்லாத் தவறு மறும்

எ - து: அதுகேட்ட தோழி, இனி எல்லாத் தவறுகளும் நீங்குங்காணென்றாள். எ - று.

அவன் வரைவுணர்த்தமையின்.

கஅ ஓஓ அஃதறு மாறு

எ - து: அதுகேட்ட தலைவி, ஓஓ எனவியந்து அத்தவறு அறுமாறென்னையென வினவினாள். எ - று.

க. இருத்தல் - தாழ்த்தல்.

உ. "புல்லினத் தாய மகன் சூடி வந்ததோர், முல்லை யொருகாழுங்

கண்ணியு மெல்லியால்; கூந்தலுட் பெய்து முடித்தேன்" கலி. ௧௧௫. ௪ - ௯.

௩. முடிக்கும் பூ - சூடும்பூ; சூடாப்பூ, எருக்கு முருக்கு முதலியவை.

௪. மணத்தின் பொருட்டே பூக்களை மக்கள் அணிவரென்பது, "ஆண்க் கனக மணர்தரிற் பூமண மார்கொள்ளுவர்" என்பதனாலும் எருக்கு முதலியன மணமில்லாதன வென்பது, "தன்னியலூ ரினும் விரை சார்ந், தறியாத புல்லெருக்கும்" (வாட்போக்கி. ௧௧.) என்பது முதலியவற்றாலும் அறியலாகும்.

(பிரதிபேதம்) * செய்யவேணுமதற்கொன்றுவேண்டா, †சதென்றறியாதன்மையிரில்.

௧௧. ஆயர் மகனுயி னுயமக ணீயாயி
(௧) நின்வெய்ய னுயி னவன்வெய்யை நீயாயி
னன்னைநோ தக்கதோ வில்லைம ÷ னின்னெஞ்ச
மன்னைநெஞ் சாகப் பெறின்

எ - து: அதுகேட்ட தோழி, அவன் ஆயருடையமகனுயிருப்பானுயின், நீ ஆய்ச்சாதியிற் பிறந்த மகளாயிருப்பையாயின்; (௨)† அவன் உன்னைவிரும்பி யிருப்பானுயின், நீ அவனை விரும்பியிருப்பையாயின், தாய் மிகவும்!நோவத் ‡தக்கதொருகாரிய மில்லைகாணென்றாள்; அதுகேட்டதலைவி, அன்னையுடைய நெஞ்சு நின்னுடைய நெஞ்சாகப் பெறின் அவள் ‖ நோவத்தக்கதோ இல்லை யென்றாள். எ - று.

௨௩. அன்னையோ

எ - து: அதுகேட்ட தோழி, இன்னும் ÷ அத்தன்மையையோவென்றாள். எ - று.

என்றது, யான் இத்துணையெல்லாம் கூறவும் கொள்ளாத தன்மையை யோ? எ - று.

உச (ங)ஆயர் மகனையுங் காதலை + கைம்மிக
(ச)ஞாயையு மஞ்சுதி யாயி னரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து

க. "தண்ணிய சிறிய வெய்ய தழற்சொலாற் சாற்று கின்றான்" (சீவக. எசஎ:) என்புழி 'வெய்ய' என்பதற்கு, விரும்பப்படுதலின் வெய்ய வென்றாரென்று விசேடவுரையெழுதி, 'நின்வெய்யனாயின்'என்பதை மேற்கோள்காட்டினர். நச்.

உ. "தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே, காமத்துக் காழில் கனி" குறள். ககஉக.

ங. 'ஆயர் வேட்டுவர்' என்னும் (தொல். அகத். உக.) சூத்திரவுரையில், 'ஆயர் வேட்டுவரென்னும் இரண்டுபெயரே எடுத்தோதினாரேனும் ஒன்றென முடித்தலான் அந்நிலங்கட்குரிய எனைப் பெயர்களான் வருவனவுங் கொள்க' என்று கூறி, "ஆயர்மகனையுங்.........நோய்க்கு மருந்து" என்பதை மேற்கோள்காட்டுவர். நச்.

ஞாய் - நின்றாய்; (அ) "யாயு ஞாயும் யாரா கியரோ" (குறுந். சo.) என்பதனால் யாயென்பது தன்மைப் பெயரடியாகவும் ஞாயென்பது முன்னிலைப் பெயரடியாகவும் பிறந்த முறைப் பெயரென்று துணிய

(பிரதிபேதம்) * நின்னெஞ்சமென்னைநெஞ்சாகப், † இவன், ‡ தக்கதோர், || நோகத்தக்க தோ. + அத்தன்மையோயென்றாள், + கைமிக.

நான்காவது முல்லை எ. ௩௮௧

எ - து: *கைம்மிக ஆயர்மகனையுங் காதலித்தலையுடையையாய்க் *கைம் மிகயாயையும் அஞ்சியிரா†நின்றாயாயின், இனி நீயுற்ற காமநோய்க்கும்மருந்து

அரிதென்றாள். எ - று.

அரோ, அசை.

உஎ மருந்தின்றியா னுற்ற துயராயி னெல்லா

வருந்துவே னல்லனோ யான்

எ - து: அதுகேட்ட தலைவி, எடீ! யானுற்ற வருத்தத்திற்கு மருந்தில்லை யாயின், இனி வருந்தியே விடுவேனல்லனோ என்றாள். எ - று.

உகூ வருந்தாதி

(க)மண்ணியா சற்ற(உ)நின் கூழையு ளோறவன்

கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்

தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னையப்

பொய்யில் ‡பொதுவற் கடைசூழ்ந்தார் தந்தையோ

டையன்மா ரெல்லா மொருங்கு

எ - து: அதுகேட்ட தோழி, இனி வருந்தாதேகொள்; கழுவி அழுக் கற்ற நின்னுடைய மயிரிடத்தே எதற அவன் கண்ணியைத் தந்ததென்று பிறர் சொல்லக் கேட்டு, தந்தையோடே தமையன்மாரெல்லாரும் சேரக் கூடி யிருந்து, தெய்வமாகிய மால் இவளுக்கு இவனைத் || திண்ணிதாகக்கொண்டு வந்து காட்டிற்றென மகிழ்ந்து, நின்னை அந்தக் களவொழுக்கத்தைப் பிறர் அறியாமல் ஒழுகவல்ல பொதுவனுக்கு அடுத்தலைச்சூழ்ந்தார் காணென்றாள். எ - று.

லாகும். பதிப்பில் ஞகரம் யகரமாக மாறியதனால் ஞயமாறிக்கிடந்த இப்பகுதியைத் திருத்தி யின்புறுத்தியது தமிழ்நெறி விளக்கமே. யாவென்பது தன்மையொடடுத்த முறைப்பெயரென்பதுமட்டும் தொல்காப்பிய வுரைகளிற் குறிக்கப்பட்டுள்ளது; ஞா வென்பது முன்னிலையொடடுத்த முறைப்பெயராதலை (ஆ) "ஞாயர் பயிற்ற" (இ) "ஞாயர்பா லுண்டி" (ஈ) "ஞாயர்மாட்டைப்பால்" கலி. அக: கஉ;

அடு: உஅ, ருகூ. என இந்நூலிற் பலவிடத்தும் வருதலும் வலியுறுத்தும். இவைஇவ்வரம்புகடந்ததாயென்னும்பொருளிலும்வருதலுண்டு.

க. "மாசற மண்ணுற்ற மணிமேயசு மிருங் கூந்தல்" கலி. எஎ: கசு. என்பதும் அதன் குறிப்புக்களும் பார்க்க.

உ. "அவன்கண்ணனி நீபுனைந்தா யாயி னமரு, மவன்க ணடைசூழ்ந்தார் நின்னை" கலி. ககூ: கஎ - கஅ.

(பிறதிபேதம்) * கைபிக, † நின்முய் இனிசு, ‡ பொதுவர்க்குடை. || நின்னியதாக.

இதனால், தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது கொச்சகவெண்பாவும் தனிச்சொல்லும் ஐஞ்சீரடுக்கிய கொச்சக *வெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் ஈரடியாஞென்றும் கொச்சகவெண்பாவும் †முச்சீரடியாஞென்றும் இருசீரடியாஞென்றும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் குறுவெண்பாட்டும் கொச்சகவெண்பாவும் தனிச்சொல்லும் சுரிதகமும்பெற்ற கொச்சகக்கலி. (எ)

(கoஅ) (கூ)இகல்வேந்தன் சேனை யிறுத்தவாய் போல
வகலல்குறோள் கண்ணென மூவழிப் பெருகி
நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகிக்
கவலையாற் காமனும் படைவிடு வனப்பினோ
டகலாங்க ணளைமாறி யலமந்து பெயருங்கா
ணைகைவல்லேன் யானென்றென் னுயிரோடு படைதொட்ட
விகலாட்டி நின்னை யெவன்பிழைத்தே னெல்லாயான்;
அல்கீதவல மன்று மன;
கூ ஆய ரெமராகு லாய்த்தியேம் யாமிகக்
காயாம்பூங் கண்ணிக் கருந்துவ ராடையை

மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோ
ராயனை யல்லை பிறவோ வமரருண்
ஞாயிற்றுப் புத்தேண் மகன்;
கச அதனான் வாய்வாளேன்;

முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கண்ணு
நல்லேன்யா னென்று நலத்தகை நம்பிய
சொல்லாட்டி நின்னொடு சொல்லாற்று கிற்பார்யார்;
கசு சொல்லாதி;
நின்னைத் தகைத்தனே னல்லல்காண் மன்;

உக மண்டாத கூறி மழகுழக் காகின்றே
கண்ட பொழுதே கடவரைப் போலநீ

க. புணர்த லென்னு முரிப்பொருள் வந்த முல்லைப்பாட்டுக்கு இச் செய்யுள் மேற்கோள்; நாற்கவி. கு. உ௯௪.

(பிரதிபேதம்) * வெண்பாட்டு மீரடியாலென்றுங்கொச்சகவெண்பாவுமைஞ்சீரடியாலென் றும்வெண்டுவெண், † ஐஞ்சீரடியாலென்றும் இரு.

நான்காவது முல்லை அ. அகூங

பண்டம் வினாய படிற்றாற் றொடீஇயிற்
கொண்ட தெவனெல்லா யான்;
கொண்டது;

உசு அளைமாறிப் பெயர்தருவா யறிதியோ வஞ்ஞான்று
தளவமலர் ததைந்ததோர் கானச்சிற் றாற்றய
விளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினு லென்னெஞ்சங்
களமாக்கொண் டாண்டாயோர் கள்வியை யல்லையோ; [கும்;
நின்னெஞ்சங், களமாக்கொண் டியாமாள லெமக்கெவ னெளிதா
நூக புனத்துளா னெந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
வினத்துளா னென்னைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ;
அனைத்தாக;
நூடு வெண்ணெய்த் தெழிகேட்கு மண்மையாற் சேய்த்தன்றி
யண்ணணித் தூராயி னன்பகற் போழ்தாயிற்
கண்ணேக் கொழிக்குங் கவின்பெறு பெண்ணீர்மை
மயிலெருத்து வண்ணத்து மாயோய்மற் றின்னா
வெயிலொ டெவன்விரைந்து சேறி யுதுக்காண்
பிடிதுஞ்சு வன்ன வறைமேல நுங்கின்
றடிகண் புரையுங் குறுஞ்சுனை யாடிப்
பனிப்பூந் தளவொடு முல்லை பறித்துந்
தனிக்காயாந் தண்பொழி லெம்மொடு வைகிப்
பனிப்படச் செல்வாய்நு மூர்க்கு;
இனிச்செல்வேம்யாம்;
சசு மாமருண் டன்ன மழைக்கட்சிற் றாய்த்தியர்
நீமருட்டுஞ் சொற்கண் மருள்வார்க் குரையவை
யாமுனியா வேறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை

நீயெவன் செய்தி பிறர்க்கு;
யாமெவன் செய்து நினக்கு;
௫உ கொலையுண்கட் கூரெயிற்றுக் கொய்தளிர் மேனி
யினைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்
நிலவுலகத் தின்மை தெளிநீ வருதி

௯க்௯ கலித்தொகை ௧0அ.

மலையொடு மார்பமைந்த செல்வ னடிமைத்
தலையினுற் றொட்டுற்றேன் சூள் ;
இஎ ஆங்குணரார் நேர்ப வதுபொய்ப்பாய் நீயாயிற்
றேங்கொள் பொருப்பன் சிறுகுடி யெம்மாயர்
வேந்தூட் டரவத்து நின்பெண்டிர் காணுமற்
காஞ்சித்தா துக்கன்ன தாதெரு மன்றத்துத்
தூங்குங் குரவையு ணின்பெண்டிர் கேளாமை
யாம்பற் குழலாற் பயிர்பயி ரெம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங் குறி.

இஃது "அடியோர் பாங்கினும் *வினைவலர் பாங்கினும், கடிவரை யில புறத் தென்மனார் புலவர்"(க)என்பதனுற் பிறர் ஏவிய தொழிலைச்செய்தல் †வல்ல அகப்புறத் தலைவனும் தலைவியும் முன்னேநகாழ் கூடிப் பின்னர் அவனெதிர்ப்பட்டுழி அவன்வயிற் பரத்தைமையால் ஊடிக் குறிநேர்ந்தது.

இதன் பொருள்.

இகல்வேந்தன் (உ) சேனை பிறுத்தவாய் போல

(௩)வகலல்குறோள் கண்ணென மூவழிப் பெருகி
நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகிக்
கவலையாற்(௪) காமனும் ‡படைவிடு வனப்பினோ
டகலாங்க ணளைமாறி ||யலமந்து பெயருங்கா
னகைவல்லேன் யானென்றென் னுயிரோடு படைதொட்ட
விகலாட்டி நின்னை யெவன்பிழைத்தே னெல்லாயான்

---

௧. தொல். அகத். சூ. ௨௩.

௨. 'சேனை யிறுத்தவாய்போல' என்பது இறுத்தலென்பது வந்து விடுத லென்னும் பொருளில் வருதற்கு மேற்கோள்; சிலப். ௪: ௧௨. அடியார்க்கு நல்.

௩. "பெருந்தோண் மடந்தை" (சிலப். ௩: ௬.) என்பதற்கு, மகளிர்க்குத் தோள்பெருக்கலை இலக்கணமென்று விசேடவுரை எழுதி 'அகலல்கு றோள் கண்ணென மூவழிப் பெருகி' என்பதை மேற்கோள்காட்டுவர் உரைகாரரிருவரும்,

௪. (அ) "உருவி லாள னொருபெருஞ் சிலையொடு விரைமலர் வாளி வெறுநிலத் தெறிய" சிலப். ௩௦: ௨௫ - ௨௬. (ஆ) "படையிட்டு நடுங் குங் காமன்" மணி. ௩:௨௩.எனவருபவையும் இங்கேநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * வினைவர் பாங்கினும், † வல்லாதவகப், ‡ படையிடுவனப். || அலம்வந்து.

எ-து: அகன்றவல்குல் தோள் கண் என்று சொன்ன மூன்றிடமும் பெருத்து நுதல் அடி இடை என்று சொன்ன மூன்றிடமுஞ் சிறுத்துக் காமனும் பிறர்க்கு மனக்கவலை செய்தலோடே தன் அம்பை *விடுதற்குக்

காரணமான அழகோடே(க) வரிடத்தே† அலமந்து மோரைவிற்று நீ மீளுங் காலத்தே யான்சுகுதலைவல்லேனென்று நக்கு, பின்னர் இகலிடத்தே சென்றுவிட்ட பாண்டியன்சேனை உயிரோடு போம்படி படைதொடு மாறுபோல என்னுயிரோடு போம்படி படையைத்தொட்ட மாறுபாட்டையுடையவனே! எடீ! யான் நின்னை எப்படித் தப்பினேன் கூறென்றான். எ - று.

இகல்வாரிறுத்த வேந்தன்சேனைபோல என மாறுக.

அ ‡அலைந்தலை மன்றுமன

எ - து: அதுகேட்ட தலைவி, அலைமாறித் திரிகின்றது மிகவும் எங்குலத்திற்குத் தீதன்று. எ - று.

கூ (உ)ஆயரெமாகலாய்ந் திலேம் யாமிகக்
காயாம்பூங் கண்ணிக் (ங)கருந்துவ ராடையை
(ச)மேயு நிரைமுன்னர்க் (ரு)கோலூன்றி நின்றாயோ
ராயனை ||யல்லை பிறவோ வமரருண்
ஞாயிற்றுப் புத்தேள் மகன்

எ - து: ×எஞ்சுற்றத்தார் ஆயராதல், யாங்கள் மிகவும் ஆய்ந்திலேம்; அதுகிடக்க, நீதான் காயாம்பூவாற்செய்த கண்ணியையும் துவரூட்டின கரிய ஆடையையுமுடையாய்; மேய்கின்ற நிரைகளுக்குமுன்னே ஒருகோலை

க. அகலாங்கண் - அகன்ற வரிடத்தே. மது. ஙஉஎ.

உ. பார்ப்பார் அரசர் இடையர் குறவர்முதலியவர்பால்ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்குஞ் சாதியியல்பாகிய தன்மை யென்னு மெய்ப்பாட்டுள் இடையர் தன்மைக்கு, "ஆயரெமாதல்........புத்தேள் மகன்" (ஒரு பிரதியில் '"காயாம்பூங்....... .....ஆயனையல்லை") என்பது மேற்கோள்; தொல். மெய்ப்பாட்டியல். சூ. கஉ. இளம்.

ங. "அந்துவ ராடைப் பொதுவனோடு" (கலி. கoஉ: ஙஎ.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௪. (அ) "மேயுநிரை... ...மகன்" என்பது தலைவன் வினைவல பாங்கி னன் என்பதற்கும் தொல். அகத். சூ. உ௩. நச்; (ஆ) பிறவென்பது அசைநிலையாய்வருதற்கும், நன். இடை. சூ. உஉ. மயிலை. விருத்தி. இரா. மேற்கோள்.

௫. "தண்கோ லூன்றிய தனிநிலை யிடையன்" அகம். உ௭௪: அ.

(பாடபேதம்) * விடுத்தற்கு. † அலம்வந்து, ‡ அஃகுதவல, || அல்லபிறவோ. × கஞ்சைறைத் தார், ÷ உடையையாய், உடையராய்.

ஊன்றி அந்நிரை மேய்த்து நின்றநீ இடையரோர் தன்மையை உடையையல்லை; வேறாகத் தேவர்களுள் ஞாயிறாகிய தெய்வத்தின் மகனோ? கூறென்றாள்.

எ - று.

மகன், கன்னன்; *இஃது இகழ்ச்சி. ஆய்த்தியேம் யாமாயின் என்றும் பாடம்.

௧௪ அதனுன் வாய்வாளேன்

(௯)முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கண்ணு
நல்லேன்யா னென்று நலத்தகை நம்பிய
சொல்லாட்டி நின்னொடு †சொல்லாற்று கிற்பார்யார்

எ - து: அதுகேட்டவன் நீ இங்ஙனம் ‡ இகழ்ந்துகூறுதலால் நின் னோடு ஒன்றுங் ||கூறேன்; முல்லையினது முகையையும் (௨)மயிலிறகின் முருந்தையும் நிரைத்தாலொத்த பல்லும் (௩)பணைபோலுந் தோளும் பெரிய அமர்செய்யும் உண்கண்ணும் ÷யான் நல்லேனென்ற, நின்னுடைய தகுதியைப் பிறர் நச்சுத லன்றி நீதானே நச்சியிருக்கின்ற ×சொல்லையுடையவளே! நின்னோடு மறு

மாற்றஞ் சொல்லுதலை யார் நிகழ்த்துவாரென்றான். எ - று.

[முல்லை](பல்லு)முதலியன, சினைவினை முதலொடு முடிந்தது. ✢ஆற்றுவிற்பார். வினைத்திரிசொல்.

௧௯ சொல்லாதி

எ - து: அதுகேட்டவள், அங்ஙனமாயின் ஒன்றுஞ் சொல்லாதே கொள்ளென்றாள்; எ - று.

௨0 நின்னைத் தகைத்தனென்

எ - து: அதுகேட்டவன், **நின்னைப் போகாமல் விலக்கினேனென்றான். எ - று.

அல்லல் காண்மன்

எ - து: அதுகேட்டவள், இவன் நம்மிடத்து நிகழ்த்துகின்றதோர் வருத்தத்தைப் பாராயென நெஞ்சொடு கூறினாள். எ - று.

---

௧. (அ)உருவென்னு மெய்ப்பாட்டிற்கு, "முல்லை முகையு............யார்" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. ௨௫ பேர். (ஆ) "முல்லை முகையு முருந்துநிரைத்தன்ன, பல்லர்" (கலி. ௧0௩: ௬-௭) என்பதும் அதன்குறிப்பும் இங்கே ஒப்புநோக்கற்பாலன.

௨. பீலி - மயிலிறகு. ௩. பணை - மூங்கில்.

(பிரதிபேதம்) *இதுகேட்டு, †சொல்லாற்றவிற்பார், ‡ மகிழ்ந்து. || கூறேனென்றான். என்ற முல்லை, ÷ யானல்லனென்று, × சொல்லுமுடையயனே, ✢ 'ஆற்றவிற்பார், **போகாமல் நின்னைவிலக்கி னேனென்றான்.

௨௧ (௧)மண்டாத கூறி மழகுழக் (௨)காகின்றே
கண்ட பொழுதே கடவரைப் போலநீ

பண்டம் வினைய படிற்றூற் றொடீஇயநிற்
கொண்ட தெவனெல்லா யான்

எ - து: கூறி, பின்னும் மனம் மயங்குகலையுடைய குழவிப்பருவத்துக்கு † ஆகின்று; என்மனம் மிக்கு விரும்பிச் ‡ செல்லாத சொற்களைச் சொல்லி என்னைக் கண்டபொழுதே (௩)தனிசு கடவாரிடத்துக் கொடுத்தவர்கள் ‖ அவ வர்களுக்குள்ள பண்டங்களை உசாவுமாறுபோல நீயும் என்னிடத்துள்ள பண்டங்களை இவை யாவை என்று வினவின வஞ்சனையாலே எனது வட்டி யைப் பிடித்தற்கு எடா! நின்னிடத்து யாம் வாங்கிக்கொண்ட பொருள் எப்பொருள் என்றாள்? எ - று.

(௪)குழக்கு, "தாங்கக்கு × வணங்கற்கு" (௫)என்றாற்போல் நின்றது.

உ௫ கொண்டது

எ - து: அதுகேட்ட(வன்) நீ என்னிடத்து வாங்கிக்கொண்ட பொருள் கூறக்கேள். எ - று.

உ௯ அளைமாறிப் பெயர்தருவா யறிதியோ வஞ்ஞான்று
+ தளவமலர் ததைந்ததோர் கானச்சிற் றாற்றய
விளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினா லென்னெஞ்சங்
களமாக்கொண் டாண்டாயோர் கள்வியை யல்லையோ [கும்
நின்னெஞ்சங், களமாக்கொண் டியாமாள வெமக்கெவ னெளிதா

௧. "மண்டாத சொல்லி" கலி. ௯௦: ௨.

௨. கிடைத்த கையெழுத்துப்பிரதிகளுள் ஒன்றிலேனும் 'ஆகின்றேன்' என னகரவீறான பாடம் இல்லை. முன்பதிப்பில் 'ஆகின்றேன்' என்று மூலமும் 'ஆகா நின்றேன்' என்று உரையும் உள்ளன. அவ்வாறு படிக் கும்படி ஓரேட்டிலிருப்பினும் அவற்றை "ஆகின்றென்" எனவும் 'ஆகா நின்று என்' எனவும் கொள்ளலாமென்று தோற்றுகிறது.

௩. தனிசு - கடன். பழ. ௯௮.

௪. குழவென்பது இளமைப் பொருட்டென்பதை அறிஞர் பலரும் அறிவர். இங்கே குழக்கென்பதற்கு எடுத்துக்காட்டியிருக்கும் மேற்கோளை நோக்க, அச்சொல் குழமென மகர வீறாகவும் இருக்குமோவென்று ஐயமுண்டாகிறது.

௫. "தாங்கக்கும் வண்ணகக்கும்" என்பது: யா-கா. ஒழி. எ.

(பிரதிபேதம்) * ஆக்கின்றகண்ட, † ஆகாவின்றெண்மனம், ‡ சொல்லாதசொற், || அவர்களுக்குள்ள. × வண்ணக்குளன்றுற், ✛ தளமலர்,

௩௧ (௧)புனத்துளா னெந்தைக்குப் (௨)புகாவுய்த்துக் கொடுப்பதோ
இனத்துளா *னெந்தைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் †யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ

எ - து: அந்நாளிலே மோர்விற்று மீள்கின்ற நீ செம்முல்லை நெருங்கினதோர் கானத்திடத்துச் ‡சிறிய யாற்றினயலிடத்தே (௩)||இளையமாவடுவைப் பிளந்தாலொத்த கண்ணாலே எனக்குஉரித்தாகிய என்னெஞ்சை நினக்கு இருப்பிடமாக வாங்கிக்கொண்டு அடிமைத் தொழில்கொண்டாய்; ஒரு கள்வியையல்லையோ? அது நீயறியாயோ என்றான்; அது கேட்டவள், நின்னெஞ்சை எனக்குஇருப்பிடமாக ÷வாங்கிக்கொண்டியாம்அடிமைத்தொழில்கொள்ளுதல் எமக்கு எங்ஙனம் எளிதாயிருக்கும்? நின்னெஞ்சு புனத்திடத்தானாகிய(௪)நான் தமையனுக்கு உணவைக்கொண்டுசென்று கொடுக்குமதொன்றோ? பசுத்திரளிடத்தானாகியஎன் தந்தைக்குக்கரவைக்கலங்கொண்டு × செல்லுமதொன்றோ? தினை அரிந்த ✛தாளிடத்தே, யாய் மேயவிட்ட கன்று மேய்க்குமதொன்றோ? அன்றே! ஆதலால் அரிதேகாணென்றாள். எ - று.

௩௪ அனைத்தாக .

எ - து: அதுகேட்டவன், இனி நீ எவின தொழில்களை என்னெஞ்சு செய்வதொன்றாக என்றான். எ - று.

க. தலைவி. வினைவல பாங்கின ளென்பதற்கு "புனத்துளா.........மேய்க்கிற்பதோ" என்பதை, (தொல். அகத். சூ. உ௩.) மேற்கோள் காட்டி, இஃது 'எமரேவலான் யாம் செய்வதன்றி யாங்களேவ நின் னெஞ்சம் இத்தொழில்கள் செய்கின்றனவில்லை யென்றலின், வினை வல பாங்கினளாய தலைவி கூற்றாயிற்று' என விளக்கினர். நச்.

உ. புகா-உணவு; தொல். கள. சூ. கக: சு. அற. கக௯, கஉஉ.

௩. (அ) "வடுவிடை போழ்ந்தகன்ற கண்ணாய்" கார். ௬. (ஆ) "வடுப் போழ்ந் தன்ன வாளரிநெடுங்கண்" (இ) "வடிப்போழ்ந் தன்ன வா ளரித் தடங்கண்" பெருங். (க) ௪௬: உஉ௩; (உ) ௪: கஉ. என்பவையும் கலி. ௬௪:, உக-ஆம் அடியும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

௪. என்னை யென்பதற்கு என் தமையனென்ற பொருளும் எந்தை யென்பதற்கு என் தகப்பனென்ற பொருளுமே காணப்படுவதனால், இங்கே ஏதோ ஒரு முறைபற்றி அச்சொற்களை மாற்றி இயைத்தா ரென்று தோற்றுகிறது. அன்றி எந்தையென்பதற்கு என் தமைய னென்ற பொருளு முண்டெனின் பிரதிபேதத்தால் ஆற்றொழுக் காகவே பொருள் அமையும்.

(பிரதிபேதம்) *எந்தைக்கு. † யாம்விட்ட. ‡ சிற்றூற்றய, சிற்றியாற்றய. ‖ இனமாவுமேவை. ÷ வாங்கிக்கொண்டு அடிமைத், × செல்லுயதொன்றே, + தாளிடத்தேயா யா மேயவிட்ட.

நான்காவது முல்லை அ. ௬௪௯

வெண்ணெய்த் *தெழிகேட்கு மண்மையாற் சேய்த்தன்றி
(௧)மண்ணணித் தூராயி னன்பகற் † போழ்தாயிற்
(௨)கண்ணேக் கொழிக்குங் கவின்பெறு பெண்ணீர்மை

மயிலெருத்து வண்ணத்து மாயோய்மற் றின்ன
வெயிலொ டெவன்விரைந்து சேறி (௩)யுதுக்காண்
(௪) ‡பிடிதுஞ்சு வன்ன வறைமேல நுங்கின்
றடிகண் புரையுங் (௫)குறுஞ்சுனை யாடிப்
(௭)பனிப்பூந் (௮)தளவொடு முல்லை பறித்துத்
தனிக்காயாந் தண்பொழி லெம்மொடு வைகிப்
பனிப்படச் செல்வாய்நு மூர்க்கு

---

௧. "இப்புனத்தின் மருங்கண் ணணையதுண் டோவந்த நீங்கொரு வான் கலையே" (கோவையார். ௫௩.) என்பதன் உரையில், 'மருங்கென்பது மருங்கென ஈறுதிரிந்துநின்றது. அணித்தாகவென்னும் பொருட்டாய அணி, அண்ணணைக் குறைந்து நின்றதெனினு மமையும்' எனப் பேராசிரியர் எழுதியிருப்பதும் தொல்காப்பியவுரையில் அண்ணணி யென்பது அடையடுத்ததென்று நச்சினார்க்கினியரெழுதியிருத்தலும் இங்கே அறியத்தக்கன.

௨. (அ) "கண்கவர் காரிகை"... .....(ஆ) "கண்டவர் மனமுங் கண்ணும் கவர்ந்திட வனப்பு வாய்ந்த, வொண்டொடி" நைடத. போர்புரி. ௫. என்பவையும் (இ) "வாங்கெழி னல்லாரும்" (கலி. ௧௦௪: ௪௧.) என்பதற்கு, 'நோக்கினார் கண்ணை வாங்கிக்கொள்ளும் அழகினையுடைய ஆய்ச்சியரும்' என்றெழுதியிருக்கு முரையும் இங்கே நோக்கற்பாலன.

௩. "உதுக்காண்" என்பது சுட்டு முதல் உகர ஈறாகிய சொல்லின்முன் வல்லெழுத்து மிக்கு வந்ததற்கு மேற்கோள்; தொல். உயிர். சூ. ௪௧. நச். குறுந். ௧௧௧; ஐங்குறு. ௧௦௧, ௪௫௩; புறம். ௩௦௭: ௩.

௪. "சுரும்புணக் களித்த புகர்முக வேழ, மிரும்பிணர்த் துறுகற் பிடி செத்துத் தழூஉ நின், குன்று" ஐங்குறுநூறு. உ௩௧.

௫. "குறுஞ்சுனைப் புறவம்" காஞ்சி. திருநாட்டுப். ௬௪.

௬. "பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை"

எ. (அ) "தண்டுளிக் கேற்ற பைங்கொடி முல்லை, முகைதலை திறந்த நாற்றம் புதன்மிசைப், பூமலர் தளவமொடு தேங்கமழ்பு கஞல" (ஆ) "முல்லை, போதவிழ் தளவமொடு" (இ) "நெடுங்கொடி முல்லையொடு தளவமல ருதிர" (ஈ) "கல்லேர் புறவிற் கவினிப் புதன்மிசை, முல்லை தளவொடு போதவிழ" (உ)"வெருகு வேட்பச் சிரிப்பனபோன்

(பிரதிபேதம்) * தொழில்கேட்கு, † பொழுதாயின், ‡ பிடித்தஞ்சு யன்னவறைமேறுங்கின்'

ஏ - து: என்று, பின்னர்க் கடைந்தமோரைக் கையால் *அலைக்கும் தொசைகேட்கும் அணுமையிலேலே தூரம் அன்றாய் ஊர் மிகவும் அணித்தாயின், பொழுது உச்சியம் பொழுதாயின், கண் வேறொரு வடிவை நோக்குதலைத் தவிர்க்கும் அழகைப்பெறுகின்ற பெண்டன்மையினையும் மயிலினுடைய கழுத்தினுடைய நிறத்தையுமுடையமாயோளே ! இப்படி வெய்தாகிய பொழுதோடே விரைந்து செல்லாநின்றாய்; இதனால் மற்றுப் பெறும்பயனென் ? காயாம்பூவையுடைய குளிர்ந்த பொழிலை அவ்விடத்தே பாராய்; அவ்விடத்திற் பிடி அஞ்சுவனவற்றையொத்த †பாறையிடத்தனவாகிய (௧) நுங்கினது வெட்டின கண்ணையொக்கும் (உ) நீர்நிறைந்த அணியசுனைகளிலே ஆடிக் ‡குளிர்ச்சியையுடைத்தாயபூக்களையுடைய(௩)செம்முல்லைமலரோடேமுல்லை மலரையும் பறித்துத் தனியே அப்பொழிலிடத்தே எம்முடனே தங்கிப் பொழுது குளிர்ச்சியுண்டாக நம்மூர்க்குச் செல்வாயென்றான். எ - று.

௪௫ இனிச் ‖செல்வேம்யாம்

எ - து: அதுகேட்டவள், நீ போகவேண்டா என்கின்றாயாதலின் யாம் போவேமென ஊடல்தோன்றக் கூறினள். எ - று.

சசு (ச) மாமருண் டன்ன மழைக்கட் சிற் றுப்பந்தியர்
நீமருட்டுஞ் சொற்கண் மருள்வார்க் குரையவை
யாமுனியா வேறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாபோர் கட்குத்திக் கள்வனை

முகைத்த முல்லை..........குருதிக் கூலிப்பயிறு கூந்தியர்கட் கொண்ட கொடித் தளவமே" என்பவற்றால் தளவமும் முல்லையும் வேறுவேறு ஆதலை அறிக.

க. "நுங்கின் தடிகண்ணுள்ள நீர் சுனையின் நீருக்கும் அதன் நீர்நிறைவு சுனையின் நீர் நிறைவுக்கும் உவமை.

உ. "அகளத்தன்ன நிறைசுனைப் புறவின்" மலை. கoச.

ந. *தளவம் செம்முல்லைக்குப் பெயராய்வருதலை (அ) "சிரல்வா யுற்ற தளவின்" (ஆ) "புதன்மிசைத் தளவி னிதன்முட் செந்நனை" (இ) "சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப, வீர்ந்தண்டளவந் தகைத்தன" என்பவற்றாலும் இந்நூற்பக்கம் சுககை: கூ; சுககை: எ (ா.) குறிப்புக்களாலும் அறிக. இது முல்லையென்னும் பொருளிலும் வரும்.

ச. தலைவி குறிப்பானன்றிக் கூற்றால் வழ்பாடு மறுத்தற்கு, "மாமருண் டன்ன......ளிக்கு" என்பது மேற்கோள்; தொல். களவி. சூ. உo. இளம்.

(பிரதிபேதம்) *அலைக்கும் ஓசைஓசைகேட்டும். † பாறைப்படுத்துக்கனவாவிய. ‡ குனிச்சி, செல்வேம், எ-து: அது.

நீயெவன் செய்தி பிறர்க்கு
யாமெவன் செய்தும் நினக்கு

எ - து: கூறி, பின்னும் *மான் மருண்டு நோக்கினையொத்த குளிர்ச்சியையுடைய கண்ணையுடைய சிறியஆய்த்தியராய் மயக்கிக்கூறுஞ் சொல்லிடத்தே மயங்குவார்க்கு அம்மொழிகளைக் கூறு; யான் அதற்கு மருளேன்; நீதான் பல பசுக்களையும் தெவிட்டாமற் கூடும் எருதுபோல நாடோறும் பதின்மரை ஒருவனைப்போலே விருப்பமுற்று அவர்மேற் செல்வாய்; ஒரு கட்குத்தியாகிய கள்வன்; ஆதலால் நீ பிறர்க்கு என்ன நன்மை செய்வாய்? இத்தன்மையையுடைய நினக்கு யாம் என்ன நன்மை செய்வேமென்றாள். எ - று.

கட்குத்திக்கள்வன் என்றது,(த)†"விழித்திருக்கப் பிண்டையைக்கொள்வான்" என்னும் பழமொழி. ஏ, அசை. நீ அம்மகளிரையும் அவர் கருத்து முற்ற நுகராது அவர்வருந்தநீங்குவையென்பதுதோன்ற 'நீயெவன்செய்தி' என்றாள். 'யாமெவன் செய்தும்' என்றது எம்மிடத்து நீங்காத அன்புடையையல்லை என்பது தோன்ற நின்றது.

௰உ கொலையுண்கண் கூரெயிற்றுக் கொய்தளிர் மேனி
இனைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்
நிலவுலகத் தின்மை தெளிநீ வருதி
மலையொடு மார்பமைந்த செல்வனடியைத்
(உ)தலையினாற் றொட்டுற்றேன் சூள்

எ - து: அதுகேட்டவன், கொலைத்தொழிலையுடைய கண்ணினையும் கூரிய எயிற்றினையும் கொய்யப்படுந் தளிர்போலும் நிறத்தினையும் கண்டார் வருந்தும் அழகினையுமுடைய மாயோளே! யான் விரும்புதற்கு உரியாராய் நின்னிற்காட்டிற் சிறந்தமகளிர் மண்ணுலகத்தில் இல்லாமையை நீதானே தெளிவாய்; இனி நீ நினைத்த தவறாகவின்றென்று யான் தெளிவித்தற்கு நீ அணுக வருவாய்; மார்பு மலையோடு ஒப்பமைந்த திருமாலடியைத் தலையி

றலே வணங்கிக் கையினுற் றொட்டுச் சூளுற்றேனென்றான். எ - று.

நின ‡ஆங்குணரார் நேர்பவதுபொய்ப்பாய் நீயாயிற்
(௩)றேங்கொள் பொருப்பன் சிறுகுடி யெம்மாயர்

௧. 'விழித்திருக்கச்[சே](செய்தே) விழியைக் கொண்டுபோய் விடுவான் என ஒருவன் திறமை மிகுதியைச் சிறப்பித்தற்கு வழங்கும் வாக்கியம் இப்பழமொழியின் பொருளோடொன்றத் தோற்றுகிறது.

௨. "தலைதொட்டேன் றண்பரங் குன்று" பரி. ௬: ௬௫.

௩. தலைவி மறுத்தெதிர்கோடலுக்கு, "தேங்கொள் ....குறி" என்பது மேற்கோள்; தொல். களவி. சூ. ௨௦. இளம்.

பேதம்) * மாமணமருண்டு. † விழித்திருக்க. ‡ ஆங்குணர்வார்நேர்பவது.

வேய்த்தோட் டரவத்து நின்பெண்டிர் காணாமைற்
(௧)காஞ்சித்தா தக்கன்ன (௨)தாதெரு மன்றத்துத்
தூங்குங் குரவையு ணின்பெண்டிர் கேளாமை
(௩)யாம்பற் குழலாற் பயிர்பயி ரெம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங் குறி

எ - து: அதுகேட்டவள், அப்படியை மெய்யென்று உணரும் அறியா
* மகளிர் கூட்டத்திற்கு உடன்படுவோர்; அச்சூளுறவு பொய்க்குமவன் நீ; நின்

வருத்தத்தை ஆராய்ந்து பார்க்கில் அதற்கு உடன்படுதலே வேண்டுதலின் எம்முடைய புழைக்கடையிற் காஞ்சிமரத்தின் கீழே குறியிடஞ்செய்தேம்; ஆண்டு வருங்கால் தேனைத் தன்னிடத்தே கொண்ட (ஈ) பொதியின்மலையையுடையவனுடைய சிறுகுடியில்வாழும் எம் ஆயர் அவ்வேந்தன் இனிதிருந்து வாழ்வதற்கு அந்நிலத்திற் றெய்வத்திற்கு மடைகொடுக்கும் ஆரவாரத்தாலே வந்த நின்னுடைய பெண்டிர் நின்னைக் காணாமல், காஞ்சிப்பூவின் தாது உதிர்ந்தாற்போன்ற தாதாகிய எருவையுடைய மன்றத்திடத்து ஆடுங் குரவைக் கூத்திடத்து வந்த நின்னுடைய பெண்டிர் கேளாமல், நீசெய்யுங்(ஞு)குறியை

க: (அ) "புன்காஞ்சித் தாதுதன் புறம்புதையக் கிளியெனக்கண், டன்புகொண் மடப்பெடை யலமந்தாங் ககல்வதனை, யென்புருகு குழைஇ யிருஞ்சிறகர் குலைத்துகுத்துத், தன்பெடையைக் குயிறழுவத் தலைவந்த திளவேனில்" (சீவக. சுசஅ.) என்பதனால் காஞ்சித் தாது பச்சைநிறமுடையதென்பது அறியலாகும். (ஆ) "குயிற்கு ழாங்குடை காஞ்சியின் கோமளத் தாது, வெயிற்கு ழாமறைத் திருவிசும் பிருள் செய" என்பது காஞ்சிப்புராணம்.

உ. (அ) "தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ" கலி. க0ங: சுஉ. (ஆ) "தா தெரு மன்றந் தானுடன் கழிந்து" (இ) "தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே" (ஈ) "தாதெரு மன்றத்து மாதரியெழுந்து" (சிலப். கக: க0உ, கஎ: 'மாயவன்றன்', உஎ: எச எனத் தாதெருக் கூறப்பட்டிருக்கும் இடங்களையும் அதற்கு இங்கே காஞ்சித்தாதை உவமை கூறியிருப்பதையும் நோக்க, தாதெருவென்றது சாணகத்தையென்று தோற்றுகிறது. இது யானை குதிரைகளின் இலத்தி முதலியவற்றிற்கும் வரும்.

ங. ஆம்பற் குழலென்பது வெண்கலத்தால் ஆம்பற்பூவடிவாக அணைசு பண்ணிச்செறித்த குழலென்று விளக்குவர் அடியார்க்குநல்லார்.

ச. இந்நூற் பக்கம் ககூ: க-ஆம் குறிப்புப் பார்க்க.

௫. "நின்னூ ரகம்புகுந் தார்குறி காட்டு நெடுந்தகையே" தஞ்சை. ௧௮௮.
(பிரதிபேதம்) *மகளிர்க்கூட்டத்திற்கு.

(௧) ஆம்பலென்னும் பண்ணையுடைய குழலாலே குறிசெய்து வருவாயாக என்றான். எ - று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகைபிறந்தது.

இதனுள், தலைவன் வினைவலபாங்கினனாயவாறு காண்க. இது கைக்கிளை.

இது தரவும் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் சொற்சீரடியும் கொச்சகமும் தனிச்சொல்லும் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் தனிச்சொல்லும் ஒருதாழிசையும் ஐஞ்சீரடியானொன்றும் கொச்சகமும் தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டும் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் மூச்சீரானொன்றும் நெடுவெண்பாட்டும் வெள்ளைச்சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (௮)

(௧0௯.) காராரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
பேராது சென்று பெரும்பதவப் புன்மாந்தி
நீரார் நிழல குடஞ்சுட் டினத்துள்ளும்
போரார்ரா வேற்றின் பொருநர் இளம்பாண்டி
தேரூரச் செம்மாந் ததுபோல் மதைஇனள்
பேரூருஞ் சிற்றூருங் கௌவை யெடுப்பவள்போல்

மோரோடு வந்தா ளதைகண்டை யாரோடுஞ்
சொல்லியா ளன்றே வனப்பு;

பண்ணித் தமர்தந் தொருபுறந் தைஇய
கண்ணி யெடுக்கல்லாக் கோடேந் தகலல்குல்

புண்ணில்லார் புண்ணாக நோக்கு முழுமெய்யுங்
கண்ணளோ வாய மகள்;

கசு இவடான், திருத்தாச் சுமட்டினை யேணைத்தோள் வீசி
வரிக்கூழ வட்டி தழீஇ யரிக்குழை
யாடற் றகையள் கழுத்தினும் வாலிது
நுண்ணிதாத் தோன்று நுசுப்பு;

கஎ இடைதெரியா வேஎ ரிருவருந் தத்த
முடைவனப் பெல்லா மிவட்கீத்தார் கொல்லோ
படையிடுவான் மற்கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின்;

க. (அ) "இயவர், தீங்குழ லாம்பலி னினிய விமிரும்" ஐங். உசுடு. (ஆ) "ஆய ரினம்பெயர்த் தாம்ப லடைதர" திணைமொழியைம். உஎ.

உக இவடான், வருந்தநோய் செய்திறப்பி னல்லான் மருந்தல்லள்
யார்க்கு மணங்காதல் சான்றோளன் றார்ப்பெண்டிர்
மாங்காய் நறுங்காடி கூட்டுவேம் யாந்த
மெழுநின் கிளையொடு போகென்று தத்தங்
கொழுநரைப் போகாமற் காத்து முழுநாளும்
வாயி லடைப்ப வரும்.

இது வினைவலபாங்கிற் றலைவியைக்கண்ட வினைவலபாங்கிற் றலைவன் "காமஞ் சாலா விளமை யோள்வயி னேமஞ்சாலா விடும்பை யெய்தி"(க) கூறியது.

இதன் பொருள்.

காராரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
போரது சென்ற பெரும்பதவப் புன்மாந்தி
நீரார் நிழல (உ)குடஞ்சுட் டினத்துள்ளும்
(ங)போராரா வேற்றின் பொருநா (ச)கிளம்(ரு)பாண்டி
நேருரச் (சா)செம்மாந் ததுபோன் *மதைஇனள்
பேருருஞ் சிற்றூருங் கௌவை யெடுப்பவள்போன்
(எ) †மோரோடு வந்தா ளதைகண்டை யாரோடுஞ்
சொல்லியா ளன்றே வணப்பு

க. தொல். அகத். சூ. ரு௦. இச்சூத்திரத்தின் இவ்வுரையிலும் இச்செய்யுள் இச்செய்திக்கே மேற்கோள்.

உ. கலி. க௦எ: உ-ஆம் அடியையும் அதன் குறிப்பையும் பார்க்க.

ங. மத வென்னு முரிச்சொல் மிகுதிப்பொருளில் வருமென்பதற்கு "போராரா வேற்றின்...... .....மதைஇனள்" என்பது (தொல். உரிச். சூ. அ௦. நச்.) உரையிலும். "காகிளம் பாண்டில்.........மதைஇனள்" என்பது (தொல். உரிச். சூ. சுச. "மிகுதியும்" தெய்.) உரையிலும் மேற்கோள்.

ச. "செல்லூ மழவிடைபோற் செம்மாந்து" நள. சுயம். கருசு.

ரு. (அ)பாண்டில், தேர்பூணு மெருதென்பர், பதிற்றுப்பத்துரைகாரர்; பதிற். சுச: க௦. (ஆ) எருத்தைப் பாண்டி லென்பது தெலுங்குச் சொல்லென்பர்; இ - வி. சூ. கஎச. நன். பெயரி. சூ. கசு. இரா;

சா. செம்மாத்தல். பழ. ஙகரு, ஙகூங.

எ. 'கண்டை' என்பது அசைநிலையாய் வந்ததற்கு, "மோரோடு..........வணப்பு" என்பது மேற்கோள்; தொல். எச்ச. சூ. ங௦. 'கேட்டை யென்று' தெய்.

(பிரதிபேதம்) * மழைஇயினன், † மோருடன் வந்தா.

எ-து: மழைநிறையப்பெய்த விளக்கங்கொண்ட அகற்சியையுடையநிலத்தே *சென்றுநின்று அவ்விடத்தேநின்ற(௧)பெரியஅறுகாகியபுல்லை நிறையத்தின்று நீர் நிறைந்த நிழலிடத்தனவாய (௨)இன்னதனைக் குடம்பால் போதுமென்று கருதப்படும் பசுத்திரளில் †வைத்துக்கொண்டும் எனையவற்றிற்கு (௩) ஒப்புச் சொல்லப்படும் நாகு (௪) போர்த்தொழில்அமையாத ஏற்றினுக்கீன்ற இளைய எருது(௫)கொல்லர்வண்டியையேறாநிற்க இளமையால்இறுமாக்குமாறுபோலத் தலையில் மோர்ப்பானையுடனே அழகாலும் இளமையாலும் மிகுதியையுடையளாய்ப் பெரிய ஊர்களையுஞ் சிறிய ஊர்களையும் ஆரவாரத்தை உண்டாக்குவாள்போலே மோரோடே வந்தவளழகை நெஞ்சே காண்பாயாக; இவள்தான் மிக்க வனப்புடைய மகளிரெல்லாரொடும் தன் அழகு ஒவ்வாமை சொல்லப்பட்டாள். எ - று.

இது சினைவினை முதலொடு முடிந்தது.

௯ (௯)‡பண்ணித் தமர்தந் தொருபுறங் கைஇய
கண்ணி ||வெடிக்கலாக் கோடேந் தகலல்குற்

---

௧. பெரிய அறுகு - யானை யறுகு.

௨. இன்னதனைக் குடம்பால் போதும் - இத்தனை குடம் பால் கறக்கும்.

௩. "பொருந" என்பதற்கு, உவமிக்கப்படுவா யென்று பொருள் கூறி, 'பொருவப் படுமவன் பொருந னென நின்றது' என்றும் (முருகு. ௨௭௯.) ஒப்பற்றவனேயென்று பொருள் கூறி, 'பொருநனென்றது தான் பிறர்க்கு உவமிக்கப்படுவானென்னும் பொருட்டு' என்றும் (மது. ௪௨.) இவரால் எழுதப்பெற்றிருக்கும் விசேடவுரை வாக்கியங்களும் இங்கே அறிதற்பாலன.

௪. "கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும், வையம்பூண் கல்லா சிறுகுண்டை" நாலடி. ௩௫0.

௫. 'கள்ளிக் கோட்டை முதலிய இடங்களில் மாடுகட்டிய கூட்டு வண்டி கொல்லர் வண்டி யென வழங்கப்படுகின்றதென்பர்' என்பது சீவக. ௩-ஆம் பதிப்பு அரும்பத. பக். ௧௧௫. இது கொல்லா வண்டியெனவும் கொல்லரப்பண்டியெனவும் சிலப். உரையிற் காணப்படுகின்றது.

௬. "சிறந்துழியையஞ்சிறந்ததென்ப" என்னும் (தொல்.களவி. ௩.) சூத்திரத்தின் விசேடவுரையில் 'உலகத்துத் தலைமகனும் தலைமகளுமாக நம்மால்வேண்டப்பட்டார் அந்தணர்முதலாகிய நான்குவருணத்திலும் ஆயர் வேட்டுவர் குறவர் பரதவ ரென்னும் தொடக்கத்திலும் அக் குலத்தா ராகிய குறு நில மன்னர் மாட்டும் உளராவ ரன்றே. அவ

(பிரதிபேதம்) * கன்று நின்றவ்விடத்தே நின்றுபெரிய, † வைத்துக்கொண்டே வினைய. ‡ மண்ணித் தமதந்தொரு. || எடுக்கல்லா.

புண்ணில்லார் புண்ணாக நோக்குந (க)முழுமெய்யுங்
*வாய மகள்

எ - து: சுற்றத்தார் கட்டிக்கொண்டு †வந்து, மயிர்முடியில் ஒருபுறத்தே செருகிவைத்த கண்ணியைச்சுமக்கமாட்டாத பக்கம் எத்தின அகன்றவல்குலையுடைய இவ்வாயர் மகள், மனத்திற் (௨)காமவேட்கையில்லாத ‡இருடிகளும் புண்பட்டு நெஞ்சு வருந்தும்படி பார்க்கும்; அதுவேயன்றி மெய்முழுதுங் கண்ணையுடையவளோ? எ - று.

||என்பது,(௩)கண்கள்செய்கின்றவருத்தம்போல மெய்ம்முழுதும்வருத்துதலின், மெய்முழுதுங் கண்ணளோ'என்றதாயிற்று.

கூ. (ச)இவடான் ÷ திருத்தாச் சுமட்டின ளேணைத்தோள் வீசி
வரிக்× கூழ வட்டி தழீஇ யரிக்குழை
யாடற் றகையள் கழுத்தினும்+வாலிது
நுண்ணிதாய்த் தோன்று நுசுப்பு

எ - து: இவள் தான் பல நிறத்தையுடைய செல்லையுடையவாகிய (ரு)வட்டியை ஒருகையால் அணைத்து மற்றைத்தோளை இளமைச் செருக்குத்

றெல்லாரினும் செல்வத்தானும் குலத்தானும் வடிவானு முயர்ந்த தலைமகனுந் தலைமகளு மாயினார் மாட்டே ஐயம் நிகழ்வது. அல்லாதார் மாட்டு அவ்வழி மரபினையே சுட்டியுணர நிற்கும்" என்று எழுதி "பண்ணித் ....மகள்" என்னும் பகுதியை ஐயமின்றிச் சுட்டி யுணர்ந்தமைக்கு மேற்கோள்காட்டினர் இளம்.

க. "முழுமெயும்" சீவக. ஙசO. உகருச; 'முழுமெயும் - மெய்முழுதுமென மாறுக' என்பர் அடியார்க்கு நல்லார்; சிலப். ச: கூ.

உ. (அ)"காமமொடு, கடுஞ்சினங் கடிந்த காட்சியர்........முனிவர்" முருகு. கஙச - கஙஎ. (ஆ) "பெண்டிரு முண்டியு மின்பமென் றுலகிற், கொண்டோ ருறூஉங் கொள்ளாத் துன்பங், கண்டன ராகிக் கடவுளர் வரைந்த, காமம்" சிலப். கச: ஙகூ - சஉ.

ங. (அ) "கண்ணுற் கலைஇய நோய்செய்யு, நடாஅக் கரும்பமன்ற தோளாரை" கலி. ககஉ: ரு-சு. (ஆ) "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கு" குறள். க0கக.

ச. ஐஞ்சீரடுக்கி வந்ததற்கு "இவடான், றிருந்தாச்............நுசுப்பு" என்னும்" பகுதி மேற்கோள்; தொல். செய். சூ. கருச. நச்.

ரு. வட்டி - கடகப்பெட்டி, இஃது உட்புறம் பனங்குருத்தாலும் வெளிப்புறம் பனையகணியாலும் தெற்றி மிடையப்படுவது.

(பிரதிபேதம்) * ஆயர்மகள், † வந்த.........சொருகிவைத்த, ‡ இருடிகளுக்குமுட்படநெஞ்சு || என்றது. ÷ திருந்தாச், × கூழைவட்டி, + வாலிதி நுண்ணிதாத்தோன்று.

தோன்ற வீசித் தன் அழகிற்குத் திருந்தியதாக (க) சுமையினையுடையளாய் மெய்க்கட் பூண்டனவன்றிக் கழுத்திடத்திலும் அழகையுடைய மகரக்குழை யாடுதலுண்டான அழகையுடையவள்; அதுவேயன்றி அல்குலுந் தோளுஞ் சுமந்து இளைத்த நுசுப்புக் கண்ணெடுக்கலா மென்மைக்கேற்ப நுண்ணிதாய் *நன்றாய்த் தோன்றாநிற்கும். எ - று.

கஎ இடைதெரியா வேளை யிருவருந் தந்த
†முடைவனப் பெல்லா மிவட்கீந்தார் கொல்லோ
‡படையிடுவான் மற்கண்டாய் காமன் (உ) படையடும்
பாலொடு கோட்டம் புகின்

எ - து: தம்மில்வேறு ||பெயர்விளங்கி அழகையுடையராகிய (ங) உருப்பசியும் திலோத்தமையும் தம்முடைய நம்முடைய அழகையெல்லாம் இவட்குக் கொடுத்தார் கொல்லோ? அது தெரிந்ததில்லை; + இவள் தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலோடே காமன் கோயிலிலே செல்லில் (ச) அக்காமனும் நெஞ்சழிந்து தன் கையிற் படையை மிகவும் × போகவேன். எ - று.

. . . .

க. "தந்நை யிலைச்சுமடன்" என்புழி, சுமடென்பது சுமையென்னும் பொருட்டுப்போலும்; "குழிசி பூஞ்சுமட்டிரீஇ" என்புழி இது சும்மா டென்னும் பொருளில் வருகிறது.

உ. "பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோ, ளாயர் முதுமகள்" (சிலப். கரு: கஎ - ககஅ.) என்பதனாலும் ஆய்ச்சியர் தெய்வத் தருள்பெறப் பலியாக அட்டபாலளித்தல் அறியலாகும்.

௩. உருப்பசியும் திலோத்தமையும் அழகிய மகளிர்க்கு உவமை கூறும்படி மிகச் சிறந்த அழகுடையராய் விளங்கும் தேவதாசியர்; இவர்களுள் உருப்பசியாவாள் திருமாலின் கூறாகிய நாராயணமுனிவர் வதரிகாரணியத்துத் தவஞ் செய்வதை அழித்தற் பொருட்டுத் தேவேந்திரனால் விடுக்கப்பட்ட தேவதாசியர்கள் வெட்கியோடும்படி அம்முனிவரால் தமது தொடையில் உண்டாகப்பெற்றவளென்றும் ஊரு (தொடை) வில் தோன்றினமையால் அவளுக்கு ஊர்வசி யென்று பெயர்வந்ததென்றும் சொல்லுவர். அப்பெயர் உருப்பசி யெனத்திரிந்து நின்றது. திலோத்தமையாவாள் பிரமதேவரால் அழகுடையபொருளொவ்வொன்றினுமுள்ள சிறந்த அழகை எள்ளளவு எள்ளளவாக எடுத்துச்சேர்த்துப் படைக்கப் பெற்றவளென்ப. இப்பெயரே இப்பொருளை அறிவிக்கும்.

௪. "சிலை வல்லான் போலுஞ் செறிவினன்" கலி. (௧௪௩: ௩௪.) என்று சிறப்பிக்கப் படுதல் கருதி, காமனும் என உம்மை கொடுத்தார்.

(பிரதிபேதம்) * ன்றுயதொன்றுநிற்கும், † உடையவனப்பெல்லாமீவட்கீய்த்தார், ‡ படைவிடுவோன், || போர்விளக்கி, + அவள். × போயேன்.

காமன் மாயோன்மகனாதலின் அவனும் அந்நிலத்திற்குத் தெய்வமாதல் "அவ்வகைபிறவும்" (க) என்றவழி வகை என்றதனாற் கொள்ளப்பட்டது. தெரியாஎன்பது *செய்தெனெச்சம். இருவர், திருமகளும் † பூமகளுமெனினுமாம். (௨)கண்டீர் வினைவொடு சிவணி நின்ற அசை.

௨௧ (௩)இவட்டான்
இவட்டான் ‡என்று நெஞ்சொடு வினவினன்.

வருந்தநோய் செய்திறப்பி னல்லான் மருந்தல்லள்

யார்க்கு மணங்காதல் சான்றென் றூர்ப்பெண்டிர்
மாங்காய் ||நறுங்காடி கூட்டுவேம் யாங்கு
மெழுநின் (௪)÷கிளையொடு போகென்று தத்தங்
கொழுநரைப் போகாமற் காத்து முழுநாளும்
வாயி லடைப்ப வரும்

எ - து: அதுவேயுமன்றித் தன்னை நோக்கினுமெல்லார்க்கும் வருத்த மாதல் அமைந்தவளென்று கருதிஇவ்வூர்களிற் பெண்டிரெல்லாரும் மோருக்கு மாறாக மாங்காயை நறிய × ஊறுகாயாகக் கூட்டி நுகரக்கடவேம்; நீ எவ்விடத் தும் + போய் மோர்முதலியன விற்றுத்திரியும் நின் சுற்றத்தாருடனே போவாயாக என்று கூறித் தம்முடைய கணவரைப் புறத்துப் போகாமற் காத்துக்கொண்டு இவள்வருங்காலமேயன்றி ஒருநாள்முழுதும் வாயிலை இடை

---

௧. தொல்' அகத். சூ. ௧௮. இவ்வுரைகாரர் தொல். அகத். ௫ - ஆம் சூத்திரவுரையில் "படையிடுவோன்... .....புகின்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டி இக்குறிப்பையும் எழுதியுள்ளார்.

௨. "படையிடுவோன் ....புகின்" என்னும் பகுதி கண்டீரென்பது அசைநிலையாய்வருதற்கு மேற்; தொல். எச்ச. சூ. ௨௧. 'கண்டீர்' செய்.

௩. ஐஞ்சிறுகிய சரிதகத்தான்வந்ததற்கு "இவடான், வருந்தநோய்...... ..... வரும்" என்னும் பகுதி மேற்கோள் தொல்.செய்.சூ. ௧௫௪. நச்.

௪. "கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே" குறுந். ௮0. என்னுந் தொடர் இங்கே நோக்கற்பாலது.

௫. காடியென்பது ஊறுகாயென்னும் பொருளில் வருதலை, "காடி வைத்த கலனுடை மூக்கின்" என்புழி, 'புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்ததனைக் காடியென்றார்' என்று இவர் எழுதியிருக்கும் விளக்கத்தால் அறிக.

(பிரதிபேதம்) * செய்ததெனெச்சம், † பூமகளுமாம் கண்டீர், ‡ என்றது தெஞ்சொடு || நறுங்கடி 'கூட்டு,' ÷ இளையொடும் போவென்று, × ஊறுகதியாகக், +,போயம்மோர்.

யிட்டுக்கொண்டு நிற்கும்படியாக வாராநிற்கும் ; இவள் தான் மனம்வருந்தும் படி நோயைச்செய்து போவதன்றி அந் நோய்தீர்க்கும் *மருந்தல்லளெனச் சொல்லெதிர் பெறுஅன் சொல்லி யின்புற்றான். எ - று.

சுற்றத்தொடு போவென்றார், அவரோடு இவள் போங்காலத்து, தம் கணவர்க்குப்பின் †சேறல் இயையா[ன]தென்பது பற்றி,

இதனால், இவனுக்கு அசைவு பிறந்தது.

இது காமஞ்சாலாவிளமையோளென்னும்(க)சூத்திரத்து வினைவலபாங்கி னோரும் இங்ஙனங் கூறலா மென்றமைத்தாம்.

மருந்தல்லளென்றது, காமஞ்சாலா.விளமையோளென்றது.

ஃபோர்விற்கின்றமை கூற வினைவலபாங்கினளாயிற்று.

இஃது இவடானென ஐஞ்சீர் அடுக்கிய சரிதகத்தான் இற்ற கலிவெண் பாட்டு. (கூ)

(ககO.) கடிகொ ளிருங்காப்பிற் புல்லினத் தாயர்
குடிதொறு நல்லாரை வேண்டுதி யெல்லா
விடுதேண் மருந்தோநின் வேட்கை தொடுதரத்
துன்னித்தந் தாங்கே நகைகுறித் தெம்மைத்
திளைத்தற் கெளியமாக் கண்டை யளைக்கெளியாள்
வெண்ணெய்க்கு மன்ன ளெனக்கொண்டா யொண்ணுதா
லாங்குநீ கூறி னனைத்தாக நீங்குக;

அச்சந்தான் மாறி யசைவினாற் போத்தந்து
நிச்சந் தடுமாறு மெல்லிய லாய்மகன்
மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு;
விடிந்த பொழுதினு மில்வயிற் போகாது
கொடுந்தொழுவி னுட்பட்ட கன்றிற்குச் சூழுங்
கடுஞ்சூலா நாகுபோ னிற்கண்டு நாளு
நடுங்கஞ ருற்றதென் னெஞ்சு;
எவ்வ மிகுதர வெந்திறத் தெஞ்ஞான்று
நெய்கடை பாலிற் பயன்யாது மின்றாகிக்

க. தொல். அகத். சூ. ௩௦.

(பிரதிபேதம்) * மருந்தல்லன். எ - று. மருந்தல்லனென்றது காமஞ்...........மென்றது மோரை விற்கின்றமைகூற.........னாயிற்று. இது இடையனென கூறிய ...பாட்டு. † சேறலியையாமையாள் என்பது.

கைதோயன் மாத்திரை யல்லது செய்தி
யறியா தளித்தென் னுயிர்;
அன்னையோ, மன்றத்துக் கண்டாங்கே சான்றோர் மகளிரை
யின்றி யமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ யெமர்காண்பர் நாளையுங்
கன்றொடு சேறும் புலத்து.

இது வினைவலபாங்கினல் *வெண்ணெய் (க) நொடைக்குச் சென்ற தலைவியைக்கண்டு வினைவலபாங்கிற்றலைவன் மெய்தீண்டித் தனது ஆற்ற

மையை அறிவித்துழி, அவள் ஈண்டுப் பிறரறிவர், நாளைக்கன்றேடு †சேறுமென இடங்கூறியது.

இதன் பொருள்.

கடிகொ ளிருங்(உ)காப்பிற்(ஙூ)புல்லினத் தாயர்
குடிதொறு நல்லாரை வேண்டுதி யெல்லா
விடுதேண் மருந்தோநின் ‡வேட்கை தொடுதரத்
துன்னித்தந் தாங்கே நகைகுறித் தெம்மைத்
திளைத்தற் கெளியமாக் கண்டை யளைக்கெளியாள்
‖வெண்ணெய்க்கு மன்ன ளெனக்கொண்டா ÷யொண்ணுதா
லாங்குநீ கூறி னனைத்தாக நீங்குக

எ - து: ஏடா! வரைவுகொண்ட பெரிய குறும்பிடத்தே இருக்கின்ற ஆட்டிடையருடைய குடிதோறுமுள்ள மகளிரை விரும்புகின்றாய்; =நினது காம வேட்கை எறிந்த தேளுக்குக் கடுப்பற +அப்பொழுதே இட்டுத் தீர்க்கும் மருந்துபோல வேட்கைதோன்றியபொழுதே கூடத்தீர்க்க வேண்டுவதொன்றோ? அல்லவே! நின்னோடு ஓர்நகைசெய்தலைக் குறித்து நீ என் மெய்யைத் தீண்டுதற்கு யாம் நின்னை அணைந்து மெய்யைத் தந்த +அப்பொழுதே, எம்மைப் புணர்ச்சிக்கும் ×எளிமையமாக நீ மனத்தாலேகண்டாய்; அங்ஙனக் கண்டது, மோரை வேண்டினோர்க்குச் சிறிது மோரைவார்த்து எளியளானவளொருத்தி வெண்ணெயை வேண்டினோர்க்கு**வெண்ணெயையிட்டு எளியளா

க. கொடைக்கு - விற்பதற்கு. இது கொடுவென்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற் பெயர்.

உ. காப்பினென்றும் படிக்கலாம்.

ஙூ. "புல்லினத்தாயர்" (கலி. க0ங: சஎ.) என்பது மதன்குறிப்பும்பார்க்க.

(பிரதிபேதம்) * வெண்ணை, † சென்றமென, ‡ வாழ்க்கைதொடிதர, || வெண்ணைக்கும்
÷ ஒண்ணுதலாங்கு, = நின்காமவாட்டை, + இப்பொழுதே, × எளியேமாதனி.
** வெண்ணையை.

யிருப்பள் என்று நெஞ்சாலே * கருதினாற்போலே இருந்ததென்றாள்; அது கேட்ட தலைவன் ஒள்ளிய நுதலினையுடையாய்! அங்ஙனம் நீ கூட்டத்தை மறுத்துக் கூறுவையாயின், அக்கூட்டம் இல்லையாவதாக இனி நின்னை விட்டு நீங்குக என்றான். எ - று.

௮ அச்சத்தான் மாறி யசைவினாற் போத்தந்து
நிச்சந் தடுமாறு மெல்லிய லாய்மகள்
(௧)மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு

எ - து: மெல்லிய இயல்பினையுடைய ஆயச்சாதியிற் பிறந்த மகள்! மத்தைச் † சுற்றிய கயிறுபோல ‡ நின்னுடைய நலத்தைச் சூழ்ந்துகொண்டு சுழன்றுதிரிகின்ற என்னுடைய நெஞ்சு நீ கூறிய கூற்றினால் தனக்கு உண்டாகிய அச்சத்தினாலே நின்னிடத்துநின்று மீண்டு தான் நிலைபெறமாட்டாது பின்னரும் அசைகின்ற அசைவாலே என்னிடத்தினின்றும் புறப்பட்டு நாடோறும் மீளத் தடுமாறுநிற்கும் என்றான். எ - று.

௯ விடிந்த பொழுதினு மில்வயிற் போகாது
(௨)கொடுந்தொழுவி னுட்பட்ட கன்றிற் சுழலும்
(௩)கடுஞ்சூலா நாகுபோ னிற்கண்டு நாளு
||நடுங்கஞ ருற்றதென் னெஞ்சு

௪. (அ) "மத்தகம் புல்லிய காரிற்றின் மற்றவ, ரத்த லைவிடி னித்த லைவி டார்" சீவக. ௪௨௩. (ஆ) "போயொருகான் மீளும் புகுந்தொருகான் மீண்டேகு. மாயர் கொணர்ந்த வடிவாலின்—றேயல். கடைவார்தங் கைபோலு மாயிற்றே காலன், வடிவாய வேலான் மனம்" நள. கலி தொடர். ௧0௩.

௫. "நோக்கிநின் றூன்சிறைப் பட்டதன், காவற்கன் றிற்புனிற் றுவன காற்மயிற் சாயலே" சீவக. ௧௧௫௩. (ஆ) "கன்று தடையுண் டெதி ரழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றுப்போல்" பெரிய. கழறிற். ௧௩௫. (இ) 'கன்று பிடியுறத் தீர்குறு. தாயைப்போல" கம்ப. பிணிவீட்டு. ௩௬. (ஈ) "கன்றொழி புனிற்று வென்னக் கதறினர்" கந்த. பானு. ௨0௫. (உ)"அனித்தாயீன்ற,கன்றெஞ்ச விளைக்கினைந்து மறகாநின்ற கபிலையைப்போலென் பட்டாள்" வில்லி. பதினேழாம்போர். ௨௬௭. என்பவையும் (ஊ) இந்நூற்பக்கம் ௬௮௫: ௨-வது குறிப்பில் இவ்விடத்திற்குப் பொருந்துவனவும் ஈண்டு அறிதற்பாலன.

௬. கடுஞ்சூல் என்பது (அ) "கடுஞ்சூன் மந்தி" பெரும். ௩௩௫. (ஆ) "பிடிக்குற்ற, கடுஞ்சூல் வயாவிற்கு" கலி. ௪0: ௨௬-௨௭. (இ) "கடுஞ்

(பிரதிபேதம்) * கருநிறைப்போலே, †கழற்றிய. ‡ நின்னலஞ்சூழ்ந்து. ||கடுக்குரிட்டதென்.

எ - து: என்று, பின்னும் முதற்சூல்கொண்ட பசு, இல்லிடத்திளின்று *தாரிப் இடத்தில் இடப்படாத வளைந்த தொழுவினுள்ளே கட்டிவைத்த தன் கன்றிற்குப் பொழுது விடிந்த காலத்திலும் மேயப்போகாது சூழ்ந்து திரியும்; அந்நாகு போலே நின்னைக் கண்டு என்னெஞ்சு நாடோறும் (௧) நடுக்குகின்ற வருத்தத்தை உற்றதுகாணென்றான். எ - று.

(௨)நாகு, ஈண்டு இளமை.

கசு எவ்வ மிகுதர வெந்திறத் தெஞ்ஞான்று

(௫)செய்கடை பாலிற் பயன்யாது மின்றாகிக்

கைதோயன் மாத்திரை யல்லது செய்தி

யறியா தளித்தென் னுயிர்

எ - து: †என்று பின்னரும் என்னிடத்து‡எக்காளும் வருத்தம் மிகுகையி ஞலே அளித்தக்க என்னுடைய உயிர் மருந்தையிட்டு செய்யைக் கடைந்து வாங்கின பாலிடத்து நுகர்வார்க்குச் சிறிதும் ||பயன்படுதலில்லையாய் அவர் கைசென்று தோய்ந்து விடுகின்ற அளவாய்விட்டது; அதுவும் ஒழிய மேல் தான் செய்வதோர் செயலையும் அறியாதென்றான். எ - று.

என்றதனல், நீ என் உயிரிடத்துள்ள நன்மையை ஒருவழியாலே வாங்கிக் கொண்டு விட்டாயென்றும் அது பின்னர் நீ பயன் கொள்ளுங்காலத்து நினக்கு ஓர் இன்பங் +தருதல் ஆற்றாதென்றுங் கூறினனாயிற்று.

சூன் மடப்பிடி" அகம். ௭௮: ௮. என விலங்குகட்கும், (௯) "கடுஞ் சூன் மகளிர்" மது. ௬௱௧; (௨) "கடுஞ்சூற் சிறுவன்" (௱) "கடுஞ் சூன் மகளே" ஐங். ௩௱௧, ௩௮௬; (௭) "கடுஞ்சூன் மகளிர்" மணி. ௭: ௮௨. என மக்கட்கும் கூறப்படுதலுமன்றி. (ஏ) "கடுஞ்சூல் முண் டகங் கதிர்மணி கழாஅலவும்" சிறுபாண். ௧௪௮. என ஓரறிவுயிர்க்குங் கூறப்படுகிறது.

௧. "கடுங்களுர் - கடுங்குதற்கு ஏதுவாய அளுர்" கலி. ௫௩: ௧௮; குறள். ௧௦௮௬. உரைபார்க்க.

௨. நாகு, ஈண்டு இளமை யென்றது: நாகென்பதனை, (தொல். மர. சூ. ௩.) பெண்பாற் பெயராகக் கொள்ளாது (தொல். மர. சூ. ௨௬.) இளமைப் பெயராகக்கொண்டு இளமையையுடைய கன்றென்று பொருள்கொள்ளவேண்டுமென்று கருதிப்போலும்; இஃது இப்பொரு ளில் வருவது, "நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉம்" (நாலடி. ௧௧௫.) என்பதனாலும் அறியலாகும்.

௫. பாலைக் காய்ச்சாமலே இயந்திரத்தினுதவியால் அதிலுள்ள வெண்ணெயை யெடுத்துவிட்டு, சென்னை முதலிய இடங்களில் விற்கும் பால் உண்பவர்க்குப் பயன்படாமை இங்கே அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * தூரிய இடப்படாத. † பின்னரும். ‡ எத்தாரும். ‖ பயன்படுதலில்லையாய வாவைச்சென்று, + தருமாதலாற்றுதென்றும்.

(௬) அன்னையோ, மன்றத்துக் *கண்டாங்கே சான்றோர் மகளிரை
†யின்றி யமைமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ யெமர் காண்பர் ‡நாளையுங்
கன்றொடு சேறும் புலத்து

எ - து: அதுகேட்டவள், நீ அத்தன்மையையுடையையோ என அருள் செய்து, பலருந் திரிகின்ற மன்றத்திலே எதிர்ப்பட்ட அப்பொழுதேநின்னைப் போலன்றி அமைதியை யுடையோர் மகளிரை இவ்விடத்துப் புணர்ச்சி யின்றாயின் உயிர்வாழேனென்று நின்றாய்; இவ்விடத்து நின்றால் எம்முடையசுற்றத்தார் காண்பர்; இனிஇன்றேயன்றி நாளையும் புலத்திலே கன்று மேய்த்தற்குப் போவேம்; ஆண்டு வந்து இத்தன்மையன ‖ உற்றவை பேற் சொல்லுவாய்; நீதான்இனி கண்டுஎல்லாமற்போவென இடங்கூறினாள்.எ-று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சிவேட்கை பிறந்தது.

இது நெடுவெண்பாட்டும் × பின்னர் மூன்றுவெண்பாட்டும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்ற அகப்புறக் கலிவெண்பாட்டு. (௫0)

(௧௧௧.) (௨) தீம்பால் கறந்த கலமாற்றிக் (௫) கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த

௧. பழிதீர் முறுவல் சிறிதே தோற்றலென்பதற்கு, (அ) "அன்னையோ... ....புலத்து" என்னும் பகுதியை மேற்கோள் காட்டி, இதனுள் 'அன்னையோ' என்பது நகையொடு கூடிய சொல் என்பர் இளம் பூரணர்; தொல். களவி. சூ. ௨0. (ஆ) வறிது நகை தோற்றற்கு "அன்னையோ... ... ..சொல்லுவாய்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டுவர் நாற்கவிராசநம்பியும்; நாற்கவி. சூ. ௧௨௭.

௨. (அ) "ஆயர் வேட்டுவர்" என்னும் (தொல். அகத். ௨௧.) சூத்திர வுரையில், 'ஆயர் வேட்டுவரென்னும் இரண்டு பெயரே எடுத்து ஓதினு ரேனும் ஒன்றெனமுடித்தலான் அந்நிலங்கட்குரிய ஏனைப்பெயர்க ளான் வருவனவுங் கொள்க' என்றுகூறி, அதற்கு இச்செய்யுளை மேற் கோள் காட்டினர் நச்சினார்க்கினியர்; (ஆ) இதனைத் தலைமகள் உள்ளப் புணர்ச்சியின் உரிமைபூண்டிருந்தவாற்றிற்கும் வரைந்தெய்தக் கூறலுற்ற வாற்றிற்கும் (தொல். களவி. சூ. ௮.) (இ) * பிறதளையான் (* இயற்றளையான் என்றும் பிரதிபேதம்) வந்த கலிவெண்பாட்டுக்கும் (தொல். செய். சூ. ௧௪௯. 'ஒருபொருள்') மேற்கோள் காட்டினர் இளம்பூரணர். (ஈ) இந்நூற்பக்கம் ௭௧௨: ௧-ஆம் குறிப்பும்பார்க்க.

௩. (அ) "சிறுதாம்பு தொடுத்த பசலைக்கன்றின்" முல்லைப்பாட்டு. ௧௨.

(ஆ) "கன்று தாம்பரிந்து" சீவக. ௪௨௨.

(பிரதிபேதம்) * கண்டாங்குச் சான்றோர், † அன்றியமையலனென். ‡ காலையெல் கன்றொடு, || உற்றமேற். × பின்னிரண்டுவெண்பாட்டும், பின்னரிரண்டுவெண்பாட்டும்.

(க)பூங்கரை நீலம் *புடைதாழ மெய்யசைஇப்(உ)பாங்கரு
முல்லையுந் †தாய (ங)பாட்டங்காற் றோழிநம்
(ச)புல்லினத் தாயர் மகளிரோ டெல்லா
மொருங்கு விளையாட வவ்வழி வந்த
(ரு)குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை
‡முற்றிழை யேஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்றா னெல்லாநீ
பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காணென்றேன் ||முற்றிழாய்
(௬)தாதுசூழ் ÷கூந்தற் றகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கென்றா னெல்லாநீ
யேதிலார் தந்தபூக் ×கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் +மாதரா
யைய (எ)பிதிர்ந்த (அ)சுணங்கணி மென்முலைமேற்
றொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்

க. "பூங்கரை நீலந் தழீஇ" கலி. ககரு: க௪.

உ. 'பாங்கரும்' என்பதை நான்காமடியின் முதற்சீராகக்கொண்டு அதனை ஐஞ்சீரடியாக்கலுமாம்.

ங. "பாங்கரும் பாட்டங்காற் கன்றோடு செல்வேம்" கலி, கஙகூ: க.

௪. இந்நூற்பக்கம் ௬அஎ: க-ஆங் குறிப்புப்பார்க்க.

ரு. (அ) "குருந்தங் கண்ணிக் கோவலர்" ஐங். ௪ஙகூ. (ஆ) "குருந்தலை வான்படலை சூடிச் 'சுரும்பார்ப்ப, வாயன் புகுதரும் போழ்தினுன்" ஐந் - எழு. உஅ. (இ) "குருந்தமென் கண்ணி சூடுங் கோவலர் கொழுந்து" பாகவதம். (க௦) வேய்ங்குழலிசைத்த. ககூ.

௬. "தாதுருஞ் சுடர்தல்" என்பதனொடு, (அ) "கொய்பூந், தாதுகொண் டளகத் தப்பி" சீவக. ௨௬௪௮; (ஆ) "போதுகொண் டணியிற் பொறுக்க லாற்றுத், தாதுகொண் டிருந்த தாழிருங் கூந்தலர்" பெருங். (௧) ௪௩: ௧௪௦ - ௧௪௧. என்பவை ஒப்புநோக்கற்பாலன.

௭. (அ) "சுணங்கு பிதிர்ந்து........வெம்முலை" சிறுபாண். ௨௪ - ௨௫. (ஆ) "பிதிரு முலைமேற் சுணங்கு" திணைமொழி. ௨௮. (இ) "பிதிர் சுணங்கணி வெம்முலை" நைடத. வேற்றுரு. ௯.

௮. "சுணங்கணி வனமுலை" நற். ௯: ௬; கலி. ௬௦: ௧.

(பிரதிபேதம்) * புடைத்தாழ, † தாயப்பாட்டங்கால், ‡ முற்றிழையொணமட, முற்றிழை யேர்மட, ‖ முற்றிய. ÷ கூந்தறகை. × கொள்வானனி, ✝ ஆயிழாய்.

நான்காவது முல்லை ௧௧. ௪௧௫

*செய்புற நோக்கி யிருந்துமோ நீபெரிது
மையலை மாதோ †விடுகென்றேன் றையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவனீ
யாயர் மகளி (௧)ரியல்புரைத் (௨)தெந்தையும்
(௩)யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்.

இது தலைவி ஆயத்திடைத் தலைவனைக் கண்டவாறும் அவனைக்கூறி யனவுங்கூறி, தோழியைத் தலைவனை வரைவுகடாவி யாய்க்கு அறத்தோடு நிற்கவேண்டுமென்றது.

இதன் பொருள்.

தோழீ! இனிய பாலைக் கறந்த கலங்களை அவ்விடத்து நின்றும் எடுத்துவைத்துக் கன்றுகளையெல்லாந் தாம்பாற் கட்டி மனைக்கண்ணே நிறுத்தித் தாய்தந்த பூத்தொழிலினையுங்கரையினையுமுடைய நீலத்தையுடைய ஆடை பக்கத்தே தாழாநிற்க மெய்யை அசைத்துப் (ச) பாங்கர்க்கொடியும் முல்லைக்கொடியும்பரந்த (ரு)முற்றூட்டாகிய தோட்டத்திடத்தே நம்முடைய ஆட்டினத்தையுடைய ஆயர்மகளிரோடே(சு)மற்றை இருகூற்றில் ‡ஆயர்மகளி ரெல்லாருஞ் சேர விளையாடாநிற்ப அவ்விடத்தேவந்த குருந்தம்பூவாற் செய்த கண்ணியையுடைய பொதுவன் ||பின்னை என்னைநோக்கிச் சூழ்ந்த அணிகலங் களையும் ÷ அழகினையும் மடப்பத்தையுமுடைய நல்லாய்! நீ இழைத்து விளை யாடுஞ் சிற்றிலை யானுஞ் சிறிது புனைவேனோ என்றான்; யான் அதற்கு ஏடா!

க. 'இயல்' என்பது 'இலக்கணம்' என்னும் பொருளில் வருதல் பெரு வழக்கு. 'இயல்பு' என்பதும் அப்பொருளில்வருதலை(அ)"அந்நான்கே மொழிபுண ரியல்பே" (ஆ) "இயல்புற நாடின்" என்னுந் தொல்காப்பியப்பகுதிகட்கு இவரெழுதியிருக்கும் உரையானுமறிக.

உ. "எந்தையும்............மன்" என்பது குடவரை வரைவெதிர் கொள்ளு வித்தற்கு மேற்கோள்; நாற்கவி. சூ. கசுச.

ங. "வாவியுறையு மடவனமே யென்னுடைய, ஆவி யுவந்தளித்தா யாதி யால் - காவினிடைத், தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி" நள. சுயம்வர. ௫௨.

ச. இந்நூற்பக்கம் சுஙஅ: ௫-ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. முற்றூட்டு - சர்வமானியம்.

சு. மற்றை இருகூறு - பசுவினம், எருமையினம்.

(பிரதிபேதம்) * செய்வுற. † விடுவென்றேன். ‡ ஆயமகளிர், || பின்னேயென்னை. ÷ அழகினையுமுடையமடப்பத்தையுடைய நல்லாளே.

வரைந்துகொண்டு எமக்கு ஓரில்லை அமைத்தலறியாயாய்த் தன் சுற்றத்தார் எடுத்த இல்லிலே இவளிருக்க யாம்பெற்றேமென்று நினைத்திருக்குமவன் நீ; ஆதலால், உறுதியாக நீ உலகியலிற்கற்றதொன்றும் இல்லைக்காணென்றேன்; *அதன்பின்புமுற்றிழாய்! கட்டினமாலையை நினக்குத் தாதுசூழ்ந்தகூந்தலிலே அழகு பெறப் புனைவேனே என்றான்; யான் †அதற்கு ஏடா! நீ வரைந்து கொண்டு, விடாமற் கோதை புனைதல்அறியாயாய், (க)எஞ் சுற்றத்தார் மிகக் கொண்டுவேர்த்து சூட்டின பூவை மிகப் பூவென்றுகொள்ளுமவன் நீ; ‡ஆதலால் உலகில் உறுதியாகப் பெரிதும் பேதைத்தன்மையையுடையை என்றேன்; அதன்பின்பு ‖ மாதராய்! வியக்கத்தக்க சிதறின சுணங்கு அணிந்த மெல்லிய (உ)முலைமேலே தொய்யில்எழுதுங் குழம்பால் எழுதுவேனே என்றான்; யான் அதற்கு நீ வரைந்துகொண்டு வெளிபாக எழுதுதல் நின் மனத்து இல்லை,யாம் எப்பொழுதும் (ங) என்சுற்றத்தார் கோலஞ்செய்து எழுதுங்காலம் பார்த் ÷திருப்பேமோ? இனி இங்ஙனம் இருத்தலாற்றேம், ∴இங்ஙனங்கூறுதலின் நீ பெரிதும் மயக்கத்தையுடையை, இங்ஙனம் × அன்புள்ளார்போலக் கூறு கின்றாய், அவற்றைத்தவிர் என்று கூறினேன்; தையலாய்! அவற்றின் பின்னர் அவன் சொன்ன நெறிகளெல்லாவற்றையும் +இங்ஙனம் மாறாய் மாறாய் யான் மறுக்க, = இனிக் களவு நிகழாதென்று(ச) ** அலமந்தான் போலே மீண்டு போயினான்; அவனை நீ ஆயர்மகளிரை ††வரைந்துகொள்ளும் இலக்கணத்தை அறிவித்து, பின்னர் என்னுடைய தந்தையும் (ரு) யாயும் இக்களவொழுக்கம் அறியும்படி அறத்தொடு ‡‡ நிலைவகையால் உரைப்பை

க. "பண்ணித்தமர்தந் தொருபுறந் தைஇய, கண்ணி" கலி. ௧௦௯: ௯-௧௦.

உ. "இளமுலைமேற், றொய்யி லெழுதவும் வல்லன்" கலி. ௧௪௩: ௩௨-௩௩.

ங. "என்றோள்மேற், கருப்பெழுது தொய்யிற்கு" (கலி. ௬௩: ௬ - ௭.) என்பதனுமையால் மகளிர்க்கு அவர்களவேயன்றிச் சுற்றத்தாரும் கோலஞ்செய்தலுண்டென்பது அறியலாகும்.

௪. அலமருதல் - சுழலுதல்; என்றது, மனமயங்குதலை. இப்பொருளில் அல்லாத்தலென்னுஞ்சொல் வருதலை, (அ) "அல்லாந்தா ரலவுற"

(கலி. உக: உ) (ஆ) "அல்லாந் தவணடுந்த" (இ) "அல்லாந் தகன் கோயி லாழ்கடல்போ லாயிற்றே" (ஈ) "அலறி யல்லாப்ப போன் றூரே" (சீவக. உகஙஙடு, உகஙசச, உகஙசசு) என்பவற்றின் உரையாலும் அறிக. (உ) "அல்லாப்புற் றஞ்சினான்" (சீவக. ௩0கஎ) என்புழி, அல்லாப்பென்பதற்கு வருத்தமென்னும்பொருளும்காணப்படுகிறது.

௫. யாய் - என் தாய். (அ) "யாயு ஞாயும் யாரா கியரோ" குறுந். ச0. (ஆ) "யாயேகண்ணினும் கடுங்காதலளே" அகம். கஉ: க; (இ) "நீனின்ற

(பிரதிபேதம்) * அதன்பின்பு கட்டினமாலையை நினக்கு றூற்றினதாது, † அதற்குயரைந்து, ‡ ஆதலாலுறுதியாக, || ஆயிழாய், ÷ இருப்போமோ, ∴ அங்ஙனம், × அன்புள்ளாரைப்போல, ✝ இங்ஙனமாருயான், = இக்களவு, ** அலமாந்தான், †† யந்துகொள்ளும், ‡† இல்லவையையாயுரைப்பையாயின்.

யாயின், அவன் உற்ற நோயன்றி யான் உற்ற நோயையும் மிகப்போக்குவை; இதனைக் குறிக்கொள் என்றாள். எ - று.

இதனால், தலைவிக்கு அசைவு பிறந்தது.

இது (க)பன்னீரடியின் இகந்து தளையும் விரவி ஐஞ்சீரடியும்வந்து ஒரு பொருணுதலாது வந்த கலிவெண்பாட்டு. (கக)

(ககஉ.) யாரிவ னென்னை விலக்குவா னீருளர்

பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு நின்னொடு
சொல்லலோம் பென்றா ரெமர் ;

௫ எல்லா, கடாஅய கண்ணாற் கலைஇயநோய் செய்யு
நடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின்

விடாஅலோம் பென்று ரெமர் ;
அ கடாஅயார், நல்லாரைக் காணின் விலக்கி நயந்தவர்
பல்லித ழுண்கண்ணுந் தோளும் புகழ்பாட
நல்லது கற்பித்தார் மன்ற நுமர்பெரிதும்
வல்ல ரெமர்கட் செயல் ;
கஉ ஓஒ, வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருரையாரே லெம்மை
யிகழ்ந்தாரே யன்றோ வெமர் ;
ஒக்கு, மறிவல்யா னெல்லா விடு ;
கசு விடேன்யா, னென்னீ குறித்த திருங்கூந்தா
னின்னையென் முன்னின்று
சொல்லலோம் பென்றமை யன்றி யவனீ
புல்லலோம் பென்ற துடையரோ மெல்ல

படிவத்தா னெடியோனை முதற்பயந்த, தாயென்று முதுமறை பயி
ஆம், யாயென் றல்ல தியார்க்கு மியலமே" (தொல். செய். சூ. கசக.
பேர். உரை.மேற்கோள்) என்பவையும் இது தன்மையொடடுத்தபெய
ரென்று நல்லாடரும் தன்மையொடொட்டிய பெயரென்று நச்சினார்க்
கினியரும் எழுதியிருப்பவையும் இங்கே அறிதற்பாலன.

க. பன்னிரண்டடியின் இகந்து வரு பொருளுதலாதுவரும் கலிவெண்
பாட்டுக்கு இச்செய்யுள்மேற்கோள்; தொல். செய். சூ. கருங. பேர். நச்.

௨0. முயக்குநின் மூள்ளெயி றுண்கு மெவன்கொலோ
மாயப் பொதுவ னுரைத்த வுரையெல்லாம்
வாயாவ தாயிற் றலைப்பட்டாம் பொய்யாயிற்
சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்

ஞாயித ழுண்கண் பசப்பத் தடமென்றோள்
சாயினு மேள ருடைத்து.

இது வினவலபாங்கிற் றலைவியை ஆற்றிடைக் கண்டு வினவலபாங்கிற்றலைவன் விலக்கி நகையாடி இருவருஞ் சிலமொழி கூறியவழி அவன் கூட்டத்திற்கு உடம்பட்டது. இது (க)கைக்கிளை.

இதன் பொருள்.

(உ)யாரிவ னென்னை விலக்குவா ன்னீ(ங)ருளர்

பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
(ச)கல்லாப் பொதுவனை நீமாறு நின்னொடு

சொல்லலோம் பென்று ரெமர்

எ - து: என்னை விலக்கு வானுகிய இவன் எமக்கு என்ன உறவுடையனென(ரு)முன்னிலைப்புறமொழியாகப் †புலந்துகூறி, பின்னர் அவனைநோக்கி நீரிலே‡அசைகின்ற பொலிவையுடைய தாமரையினது பூவை எமக்கு விலை

க. (அ) "கல்லாப் பொதுவனை நீமாறு" எனப்பொதுவியர் கூறலும் "ஈடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின், விடாஅலோம் பென்று ரெமர்" எனப் பொதுவர் கூறலும் மிக்க காமத்து மிடலாகிய பெருந் திணை யாதலின் முல்லையுட் கோத்தாரென (தொல். அகத். சூ. கங.) உரையில் இவரே வேறு திணையாக எழுதியிருப்பது இங்கே ஆராயத் தக்கது.

உ. தலைவன் சொல்லெதிர் தலைவி உடம்பாடிருப்பவும் இசைவில்லா தாரைப்போல அல்ல கூற்றுக் கூறுதற்கு, 'யாரிவ னென்னை.........

.........ரெமர்' என்பதனை மேற்கோள் காட்டி, 'எவன்கொலோ......
.........எருடைத்து' என உடம்பாடு கூறினாளாதலின் முற்கூறியது அல்ல கூற்றுயிற்று என்பர் இளம்பூரணர்; தோல். களவி. சூ. ௧௧.

௫. உளர்தல் - அசைதல்.

௬. "கல்லாக் கோவலர்" (ஐங். ௩௦௪) என்பது இங்கு ஒப்புநோக்கற் பாலது.

௭. 'யாரைநீ யென்னை விலக்குவாய்' என்றது "யாரிவனென்னை விலக்குவான்" என்றது முன்னிலையிற் புறமாக மொழிந்தது.

(பிரதிபேதம்) * சிறுபூந்தாமரை. † புலாத்து. ‡ அசைகின்ற பூவையுடையதாமரை.

யாடத் தந்த, (௧)பலமலர் விரவுதலையுடைத்தாகிய தாரினையுடைய, *நினது சாதித்தன்மை கல்லாதபடி இயல்பாகப்பட்ட இடையனுர் தன்மையை உடையை; இவ்வொழுக்கம் அறிந்தாரைப்போல எம்முடைய சுற்றத்தார் நின்னோடு சிலசொல்லுதலைப் பாதுகாத்துக்கொள் என்றார்; ஆதலால் நீ ஈண்டு நில்லாது போ என்றாள். எ - று.

"எந்நில மருங்கிற் †பூவும்" (௨)என்பதனால், தாமரை கூறினர்.

௭ எல்லா, கடாஅய (௩)கண்ணாற் கலைஇயநோய் செய்யு
நடாஅக் (௪)கரும்பமன்ற தோளாரைக் காணின்
விடாஅலோம் பென்றா ரெமர்

எ - து: அதுகேட்டவன் ஏடீ! வேட்கை செலுத்தின கண்ணாலே மனத்தைக் கலக்கின காமநோயை ‡உண்டாக்கும் எழுதுகரும்பு நெருங்கின தோளினையுடைய மகளிரைக் கண்டாயாயிற் போகவிடாதே கொள்; அவர் செய்த நோயை அவரைக் கொண்டே பரிகரித்துக்கொள்ளென்று கூறினர்

எம்முடைய சுற்றத்தார் என்றான். எ - று.

அ கடாஅயார், நல்லாரைக் காணின் விலக்கி நயந்தவர்
பல்லித ழுண்கண்ணுந் தோளும் புகழ்பாட
நல்லது கற்பித்தார் மன்ற நுமர்பெரிதும்
வல்லரெமர்கட் செயல்

எ - து: அதுகேட்டவள் அங்ஙனம் பரிகரித்துக்கொள்ளென்று கூறி னவர்கள் அதுவேயன்றி நல்ல மகளிரைக் கண்டாயாயிற் போகாமல் தடுத்து விரும்பி அவருடைய (ரு) பல பூக்களையும் போலுங் கண்ணையும் புகழப்படுந்

க. (அ) "பிடவமுங்...... ..கோடலும் ....காயாவும் பிறவு, மணிகொள மலைந்த கண்ணியர்" (ஆ) "மெல்லிணர்க் கொன்றையு மென்மலர்க் காயாவும், புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங், குல்லையுங் குருந்துங் கோடலும் பாங்கருங், கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்" கலி. க0க: உ - சு; க0ங: க - ச என்பவையும் இந்நூற்பக்கம் சுஙஅ: உ-ஆம் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

உ. தொல். அகத். ரு. கக.

ங. இந்நூற்பக்கம் எ0சு: ங-ஆங் குறிப்புப்பார்க்க.

ச. "தோண்மேற், கரும்பெழுது தொய்யிற்கு" கலி. சுங. எ - அ என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

ரு. பல பூக்களென்பதற்கு, மகளிர் கண்ணுக்கு உவமையாகக் கூறப்படுமெ செந்தாமரை,குவளை,கருநெய்தல்,கருவிளை,ஈருமுதலியமலர்களென்று

பிரதிபேதம்) * சாதித்தன்மையைக்கல்லாதவடிவியல்பாக.† பூவும்புள்ளும்.

தோளையும் பாடும்படியாக நல்லதொரு தொழில் கற்பித்தார்; அவர்தாம் அறுதியாக; எம்முடைய சுற்றத்தாரிடத்து அவர் வரைவுநேர்தற்குச் செய்யுஞ்

செயலை நம்முடைய சுற்றத்தார் பெரிதும் வல்லராயிருந்தாரென்றாள். எ-று.

*இளிவு, இகழ்ச்சி.

க௭ ஓஓ (‡)வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருரையாரே †லெல்லை
யிகழ்ந்தாரே யன்றோ வெமர்

எ - து: அதுகேட்டவன் தன் மனத்தே ஓஓ! என வியந்து, பின்னர் வெயில்வெம்மையால் ஒருவரும் வழங்காத உச்சிக்காலத்தே நீ கன்று‡மேய்ப் பாய்போலப் பிறர்க்கு நோயைச்செய்து திரிகின்ற தன்மையை அறிந்திருக்கின்றவர்கள் இப்படித் திரிகின்றாளென்று எனக்கு உரையாதிருப்பாராயின் எம்முடைய சுற்றத்தார் எம்மை இகழ்ந்தாரேயல்லவோ என்றான். எ - று.

க௮ ஒக்கு, மறிவல்யா னெல்லா விடு

எ - து: அதுகேட்டவள் நீ கூறியது ஒக்கும்; எடா! இது பொய் யென்று யான் அறியவேண்டா; இக்கூற்றைக் கைவிடென்றாள். எ - று.

க௯ விடேன்யா, னென்னீ குறித்த திருங்கூந்தா
னின்னையென் முன்னின்று
சொல்லலோம் பென்றமை யன்றி யவனீ
புல்லலோம் பென்ற துடையரோ மெல்ல
௨0 ||முயங்குநின் முள்ளெயி றுண்கு மெவன்கொலோ
மாயப் பொதுவ னுரைத்த வுரையெல்லாம்

கொள்ளலாம். இவ்வுரையாசிரியர் இதழென்பதைச் சினையாகு பெயராக்கிப் பல்விதழென்பதற்கு, பல பூவென்று பொருள் கூறினர்.

இதற்கே பலவாகிய இதழினையுடையதென்று அன்மொழித் தொகையாக்கிப் பூவென்ற பொருள் கூறுவாருமுளர். 'பல்லித ழுண்கண்' என்னுந்தொடர்மொழி, (நற். உ௪௦: கக; குறுந். ௫; ஐங். கஎ௦, கக௦, ௩௩௪, ௩௫க, ௪எக; கலி. ௪௫: கக, க௦௦: க௦) பலவிடங்களிலும் வருதல்காண்க.

க. வினைவல பாங்கின ளாய தலைவியை நோக்கித் தலைவன் கூறியதற்கு, "வழங்காப் பொழுதுநீ.........வெமர்" என்பது மேற்கோள்; தொல். அகத். ௬. உ௩. நச்.

(பிரதிபேதம்) * இதைகேட்டு. † என்னை. ‡ மேய்ப்பாரைப்போலே. || மூயங்கினின் முன்னெயிறுண்டுமெயன்.

நான்காவது முல்லை கடீ. எஉக

வாபாவ தாயிற் றலைப்பிட்டாம் பொய்யாயிற்
(க)சாயலின் மார்பிற் றமழ்(உ)தார் *குழைத்தநின்
ஞயித ழுண்கண் பசப்பத் தடமென்றோள்
சாயினு மேஎ ருடைத்து

எ - து: அதுகேட்டவன் யான் நின்னை விடேன்; கரிய கூந்தலையுடையாய்! யான் கூறிய கூற்றை நீ பொய்யாகக் குறித்ததென்? யான்

பொய்கூறிற்றிலேன்; அது நிற்க, நின் சுற்றத்தார் நின்னை என்முன்னே நின்று சில சொல்லுதலைப் பாதுகாத்துக்கொள்ளெனச் சொன்னமையன்றி அவளை நீ புல்லுதலைப் பாதுகாத்துக்கொள்ளென்ற வார்த்தையை அவர் உடையரோ? இல்லையன்றே! ஆகலால் நீ மெத்தென முயங்குவாய், அப்பொழுது யான் நின் கூரிய (௩) எயிற்றை உண்பேனென்றான்; அதுகேட்டவள், இவன்கூறியது எத்தன்மைத்தோவென நெஞ்சொடு உசாவி, பின்னும் தன்னெஞ்சை நோக்கி, பொய்யை வல்ல பொதுவன் கூறிய கூற்றெல்லாம் மெய்யாயிருப்பதோர் வார்த்தை யாயில் அவனிடத்து †மனைவாழ்க்கையிலே பட்டேமாகின்றேம்; அன்றி அது பொய்யாயிற்றேல் மென்மை இனிதாகிய மார்பிற் கமழ்கின்ற மாலையை வருத்தின நின்னுடைய அழகிய இதழ்போலுங் (௪)கண்கள் பசலைநிறங் கொள்ளப் ‡பெருமையையுடைய மெல்லியதோள் பின்னர் மெலியினும் நின் மேனி இப்பொழுது பெறுகின்ற அழகையுடைத்துக் காண் எனக் கூட்டத்திற்கு உடம்பட்டுக் கூறினாள். எ - று.

குழைத்த என்னும் பெயரெச்சம் நின் என்னும் பெயரொடு முடிந்தது. கன்று மேய்ப்பாய் போ வென்பதனால், வினைவல பாங்காயிற்று. "நோயு

---

௧. (அ) "ஊரன் மார்பே,...... ..இன்சா யற்றே" (ஐங். ௧௪.) என்பதும் (ஆ) "இன்சாயன் மார்பன்" (கலி. ௬௫: ௫.) என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு அறிதற்பாலன.

௨. தார்குழைதலைக்குறித்து, சீவக. ௨௦௩௪, ௨௦௧௨; பு - வெ. பெருந். ௧௨; இவற்றில் வருபவையும் "குழைந்தநின் றாரும்" (கலி. ௧௧: ௧௧ - ௧௨.) என்பதும் அதன் குறிப்பும் இங்கே நோக்கற்பாலன.

௩. (அ) "கரும்பின், காலரி கடிகைக் கண்ணயின் றன்ன, வாலெயி றூறிய வசையி றீநீர்" குறுந். ௨௧௭. (ஆ) "முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக், கள்ளினு மகிழ்செய்யுமெனவுரைத்தும்" கலி. ௪: ௧௩ - ௧௪. (இ) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி, வாலெயி றூறிய நீர்" குறள். ௧௧௨௧. என்பவையும் (௯)இந்நூற்பக்கம் ௩௩: ௧-ஆங்குறிப்பில் இவ்விடத்துக்குப்பொருந்துவனவும் அப்பக்கம் ௩- ஆங் குறிப்பும் பார்க்க.

௪. இந்நூற்பக்கம் உஎக: ௫ - ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * குழைத்தவென், † மனையாட்கையிலே. ‡ பெருமையையுடைய தோள்.

மின்பமும்" என்னும்(க)சூத்திரத்து, "உறுப்புடை யதுபோ லுணர்வுடையது போன், மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" என்பதனால் உறுப்புடைத்தாகக் கூறினான்.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது முச்சீரடியும் இருசீரடியும் இடையேவந்த கொச்சகக் கலி. (கஉ)

(ககங.) நலமிக நந்திய நயவரு தடமென்றோ
ளலமர லமருண்க ணந்நல்லாய் நீயுறீஇ
யுலமர லுயவுநோய்க் குய்யுமா றுரைத்துச்செல் ;

௫ பேரேமுற் றார்போல முன்னின்று விலக்குவா
யாரெல்லா நின்னை யறிந்ததூஉ மில்வழி ;

௬ தாரியா லென்னறிதல் வேண்டிற் பகையஞ்சாப்
புல்லினத் தாயர் மகனேன் மற்றியான் ;

அ ஒக்குமன் ;
புல்லினத் தாயனை நீயாயிற் குடஞ்சுட்டு
நல்லினத் தாய ரெமர் ;

கக எல்லா ;
நின்னொடு சொல்லி னேதமோ வில்லைமன் ;

ஏதமன் றெல்லை வருவான் விடு ;

கச விடேன் ;
உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு
மெல்லிய வாத லறியினு மெல்லியா
னின்மொழிகொண் டியானோ விடுவேன்மற் றென்மொழிகொண்
டென்னெஞ்ச மேவல் செயின் ;
கஅ நெஞ்சேவல் செய்யா தெனநின்றாய்க் கெஞ்சிய
காதல்கொள் காமங் கலக்குற வேதிலார்
பொய்ம்மொழி தேறுவ தென் ;
உ௦ தெளிந்தேன் றெரியிழா யான் ;
உக பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமொ டாடி

---

௧. தொல். பொருளி. சூ. உ.

(பிரதிபேதம்) * ளொர்ந்தமென்பதனால், ளொர்ந்த மென்பதனால்.

நான்காவது முல்லை கக. —எஉ௩.

முல்லை குருந்தொடு மூச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற தின்னங் கழிப்பி
யரவுற் றுருமி னதிருங் குரல்போற் பொருமுரா
ணல்லேறு நாகுட னின்றன
பல்லா னினநிரை நாமுடன் செலற்கே.

இது வினைவலபாங்கிற் றலைவியை ஆற்றிடைக்கண்டு அவளை வினை

வலபாங்கிற் றலைவன் விலக்கி அவளோடு சிறிது கூறியவழி அவன் *கூட லுறுகின்றாள் கூறியது. இது கைக்கிளை.

இதன் பொருள்.

நலமிக நந்திய நயவரு தடமென்றோ

(க)ளலமர (உ)லமருண்கண ணல்லாய்†நீயுற்றி
(ங)யுலமர லுயவுநோய்க் குய்யுமா றுரைத்துச்செல்

எ - து: நன்மை மிகப் பெருகிய விருப்பம் வருகின்ற பெருமையை யுடைய மெல்லிய தோளினையும் சுழலுதலுடைய, முகத்தோடு பொருந்தின கண்ணினையும் அழகினையுமுடைய நல்லாளே! நீ ‡உற்றதனால் உழத்தலை யுடைய வருத்து நோய்க்கு (ச) உய்யும் நெறியைக் கூறிப் பின்புபோ என விலக்கிறேன். எ - று.

ச (ரு)‖பேரேமுற் றார்போல முன்னின்று விலக்குவா
யாரெல்லா நின்னை யறிந்ததூஉ மில்வழி

க. "அலமர லுண்கண்ணார்" (கலி. எங: கஉ) என்பதும் இந்நூற்பக்கம் சசகக: உ-ஆம் குறிப்பும் பார்க்க.

உ. அமர்க்கண் கலி சO: க; ஙஎ: உங.

ங. (அ) "உலமரல் வருத்த முறுதும்" அகம். கஅ: கங; (ஆ) "யா மூல மர" கலி. அங: உ.

ச. உய்யும் நெறி - தப்பிப் பிழைக்கும் வழி; உயவு நோயைப் போக்கு கின்ற வழியென்றமாம்.

ரு. (அ)எல்லான் என்பது எல்லாவென அண்மைக்கண் ஈறழிந்ததென்று கொண்டு, "பேரேமுற் றார்போல......யாரெல்லா" என்னும்பகுதியை மேற்கோள்காட்டுவர், மயிலைநாதர்; நன். பெயரி.சூ. ருO (ஆ) "எமுற

விரண்டு முளவென மொழிப" என்புழி, எழுறல் மயங்குதலை யுணர்த்திவருதற்கு, "பேரேமுற் றார்போலமுன்னின் றவிலக்குவாய்"

(பிரதிபேதம்) * உடன்படப்பட்டானாக அவன் கூறியது. இஃது, † நீயுரீஇயவுலமால், ‡ உறை சூழ்தலையுடைய, || பேரேமுற் றாய்போல.

எ - து: அதுகேட்டவள், எடா! நின்னை முன்பு கண்டு அறிந்ததாஉ மில்லாத என்னிடத்தே பெரிய பித்தேறினாரைப் போல முன்னே நின்று (௧)விலக்குகின்ற நீ யார்தான் என்றாள். எ - று.

௯ (௨)தளரியா லென்னறிதல் வேண்டிற் பகையஞ்சாப்
(௩)புல்லினத் தாயர் மகனேன் மற்றியான்

எ - து: அதுகேட்டவன், என்னை நீ அறிதலை விரும்பின் மனந்தளர் கின்ற இயல்பினையுடையாய்! யான் பகைக்கு அஞ்சாத ஆட்டினத்தை யுடைய ஆயரானவர்க்கு ஒருமகனாத * லுளேனென்று தன் செல்வக்குடிப் பிறப்பு உணர்த்தினன். எ - று.

அ † ஒக்குமன்
புல்லினத் தாயனீ யாயிற்(௪) குடஞ்சுட்டு
நல்லினத் தாய ரெமர்

எ - து: அதுகேட்டவள், அது மிகவும் ஒக்குமென அதற்குடம்பட்டு, பின்னர் நீ ஆட்டினத்தையுடைய ஆயனுந் தன்மையையுடையையாயின் எம்முடைய சுற்றத்தார் நம் இனத்திற் சிறந்த இன்னதனைக் குடம் பால் போதுமென்று கருதப்படும் பசுவினத்தையுடைய இடையரெனத்தன்செல்வக் குடிப்பிறப்பு உணர்த்தினள். எ - று.

கக எல்லா

நின்னொடு சொல்லி னேதமோ இல்லைமன்

எ - து: அதுகேட்டவன், எடீ! இங்ஙனஞ் சிறந்த நின்னோடே சில மொழி கூறின் மிகக் குற்றமோ இல்லை என்றான். எ - று.

கரு. ‡ஏதமன் றெல்லை வருவான் விடு

எ - து: அதுகேட்டவள், இருவரும் ஒத்த குடியாயிற் பின்னைச் சில ||கூறிற் குற்றமென்? யான் நாளைவருதற்கு இப்பொழுது போகவிடு ன். எ - று.

என்பது மேற்கோள்; தொல். கள. சூ. கஅ. நச். (இ) "எம்மை, முன்னைநின் றாங்கே விலக்கிய வெல்லாநீ, யென்னைமுற் றாஅய் விடு" (கலி. ககசு: உ - ச.) என்பது இதனோடு ஒப்புநோக்கற்பாலது. (ங) "பேரே முறுநர்" என்பது நற். உஉ0: எ. (உ) இந்நூற்பக்கம் சசஇ: ச-ஆம் குறிப்பும் பார்க்க.

க. "நின்னைத் தகைத்தனென்" கலி. க0அ: உ0.

உ. "தளரிய லவரொடு" கலி. கக: கஎ. என்பதும்அதன்குறிப்பும்பார்க்க.

ங. கலி. க0எ: உ. அடியையும் அதன் குறிப்பையும் பார்க்க.

ச. இந்நூற்பக்கம் கூஅஎ: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம், * உடையேனென்று, † ஒக்கும்புல்லி. ‡ஏதமன்றென்னை, ||கூறிக்குற்றமென்.

கச விடேன்

உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு

மெல்லிய *வாத லறியினு மெல்லியா [கொண்

(க) ளின்மொழிகொண் டியானோ † விடுவேன்மற் றென்மொழி

டென்னெஞ்ச மேவல் செயின்

எ - து: அதுகேட்டவன், யான் விடேனென்று கூறி, பின்னரும் (உ)என்னுடைய வார்த்தையைக்கேட்டு என் நெஞ்சம்அறியாமையிலேபுகுந்து எனக்கு ஏவலைச்செய்யுமாயின், உலகத்தில் ஒருகாரியக்கூற்றால் (ங) உடன்பட்டு மனத்தால் உடன்படாதார் கூற்றுச் செவிக்கு மெய்தென்றிருக்குநிலை அறிந்திருந்தேனாயினும், மெல்லியஇயல்பினையுடையாய்! நின்னுடைய வஞ்சமானமொழியை உண்மையாகக்கொண்டு யானோ போகவிடுவேன்; அதனாற் பெற்றதென் ? அஃது ஏவல்செய்யாதாயிற்றே என்றான். எ - று.

கக நெஞ்சேவல் செய்யா தெனநின்றாய்க் கெஞ்சிய
(ச)காதல்கொள் காமங் கலக்குற (ரு)வேதிலார்
||பொய்ம்மொழி தேறுவ தென்

எ - து: நின்னைக் கைகடந்து நின்ற காதலைக்கொண்ட காமங் கலக்குதலுறுகையினாலே என்னெஞ்சு எனக்கு ஏவலைச்செய்யாதெனச் சொல்லிநின்ற உனக்கு ஏதிலார் கூறிய பொய்யாகிய வார்த்தையைத் தெளியுந்தன்மை எங்ஙனே உண்டாயிற்று என்றான். எ - று.

க. "நின்மொழி..........செயின்" என்பது மறுத்துரைப்பதுபோல் தலைமகன் கூற்று உவகைபற்றிவந்ததற்கு மேற்கோள்; தொல். பொருளி. சூ. உ. இளம்.

உ. "அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே, நீயெமக் காகாதது" குறள். கஉகக.

ங. (அ) "மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ், சொல்லினாற் றேறற்பாற் றன்று" (ஆ) "நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ, லொல்லை யுணரப் படும்" குறன். அஉரு, அஉக.

ச. (அ) "காதற் காமங் காமத்துச் சிறந்தது" பரி. க: கச. (ஆ) "காதல் செய் காமங் கனற்ற" பு-வே. கைக்கிளை. பெண்பாற். ச.

இ. “ஏதிலார் யாதும் புகல விறைமகன், கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு - நேர்நின்று, காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை, சால்புடைத் தென்பாரு முண்டு” நீதிநெறி. ௫௫.

(பிரதிபேதம்) *ஆகலற்பினும். † விடுவேனென்மொழி, ‡ஆயினும், ||நின்மொழி.

ஏதிலாரென்றது, தான் ஏதிலேனல்லேனென்னும்பொருண்மை தோன்றப் பாய்த் தோன்றக் கூறியது. பொய்ம்மொழியென்றது தான் உண்மைகூறவும் பொய்யாகக் கொண்டாளென்பது தோன்றக் கூறியது.

௨௨ தெளிந்தேன் *றெரியிழா யான்

எ - து: அதுகேட்டவன், தெரிந்த இழையினையுடையாய்! நீ இப்பொழுது கூறிய கூற்றால் நீ முன்னர் ‘வருவான் விடு’ என்றது உண்மையென்று யான் †தெளிந்தேன் என்றான். எ - று.

௨௩ பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமொ டாடி
முல்லை குருந்தொடு முச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற ‡தின்னங் கழிப்பி
யரவுற்(க)றுருமி னதிருங் குரல்போற் பொருமுர
ணல்லேறு நாகுட னின்றன
பல்லா னினநிரை நாமுடன் செலற்கே

எ - து: என்று பின்னர், யாம் முல்லைப்பூவைக் குருந்தம்பூவோடே முடியிலே சூடிப் பலகாலுங் காட்டாற்றில் விளங்குகின்ற மணலையுடைய

குளிர்ந்த பொழிலிடத்து யாம் முன்பு || தங்கும் அகன்ற பாறையிலே ஆயத்தோடே விளையாடுகையினாலே பகற்பொழுது போய் இராப்பொழுது வந்து தோன்றிற்று; அது வருவதற்குமுன்னர்ப் போகாமல் +தாழ்க்கின் நம்மைக் கோபிப்பார்கள்; அதனை உணராது நீ இன்னங் காலங்கழியாநின்றாய்; பல பசுவினத்தினுடைய திரளுக்குள்ளே,(௨)பாய்புசேர்க்கையினாலே அதிரும் உருமினுடைய குரல்போல அதிரும் பொருகின்ற மாறுபாட்டினையுடைய நல்ல (௩)ஏறுகளுடனே தம்மிற் கூடி நின்றன; அவைபோல நாமுங்கூடிச் சேரப் போதற்குக் கூட்டத்திற்கு உடம்படுவாயாக என்றான். எ - று.

---

௧. (அ) "வானேறு வானத் துரற்ற வயமுரா, ணானேற் றெருத்த லதனோ டெதிர்செறுப்ப" கார். ௧௦. (ஆ) "இடியார் கமுழக் கேறு" தே. (இ) "இடிக்குர லானேற் றினமெதிர் செறுப்ப" கலி. ௬௮: ௧௦. (ஈ) "(அடலேறு)இடியிட்டதிர்கா ரெதிரேற்றெழுந் தாங்கு நோக்கி" திருவிளை. மாயப்பசுவை வதைத்த. ௧௭.

௨. இந்நூற்பக்கம் ௨௭௪: ௫-ஆம் குறிப்புப் பார்க்க.

௩. "மல்லல் மறலின் மடநா குடனகச், செல்லூ மழவிடைபோற் செம்மாந்து" நள. சுயம். ௧௫௪.

பிரதிபேதம்) * தெரியிழாய் எ-து, † தெரிந்தேன், ‡ இன்னும், || தங்கும்பாறையிலே
+ தாட்கின்.

"ஓங்குசினைத் தொடுத்த*வூசல் பாம்பென, முழுமுத றமிய வுருமெறிந் தன்றே"(௧)என்றார் பிறரும்.

(உ)யாங் கூட ஆயத்தோடு ஆடியெனத் தானுங்கூட ஆடினுனென்றதனுனும், பொழுது † வைகிப்போதற்குத் தாம் தமக்குரியரல்லரென்றமையானும், ஏறும் நாகுங் கூடப் போமாறுபோல நாமுங் கூடப்போக என்றமையானும், வினைவல பாங்கினராயிற்று. அரவுறவெனத் திரிக்க.

இதனுல், இருவர்க்கும் புணர்ச்சிவேட்கை பிறந்தது.

இது தரவும் இரண்டடியான் இரண்டு கொச்சகமும் தனிச்சொல்லும் குறுவெண்பாட்டும் தனிச்சொல்லும் ஓரடியான் இரண்டும் தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் சிந்தடி ‡ யோரடியா னென்றும் சொற்சீரடியும் ஐஞ்சீரும் வந்து (ங) போக்கிலக்கண ‖ மில்லாத ஆசிரியச் சுரிதகமும் பெற்ற × உறழ்கலி. (கங)

(ககச.) வாரி நெறிப்பட் டிரும்புறந் தாஅழ்ந்த
வோரிப் புதல்வ னழுதன னென்பவோ
புதுவ மலர்தைஇ யெமரென் பெயரால்
வதுவை யயர்வாரைக் கண்டு மதியறியா
வேழையை யென்றகல நக்குவந் தீயாய்நீ
தோழி யவனுழைச் சென்று ;
ஏ சென்றியா னறிவேன் கூறுக மற்றினி ;

க. அகம். கூஅ: கூ - ஏ

உ. "அடியோர் பாங்கினும்" என்னும் தொல். அகத். உங-ஆம் சூத்திர வுரையிலும் இவ்வுரையாசிரியர் தலைவனும் தலைவியும் வினைவல பாங்கின ரென்பதற்கு "பல்கால்யாங்......செலற்கே" என்னும்பகுதியை

மேற்கோள்காட்டி, இக்குறிப்புக்குச் சிறிது வேறாக "இது தாழ்த்துப் போதற்குத் தலைமையின்றிக் கடிதிற்போகல் வேண்டுமென்றமை யானும், கல்லேறும் நாகும்போல் நாமுங் கூடப் போகல் வேண்டு மென்றமையானும் தலைவன் வினைவலபாங்கின னயிற்றென்க. வினை வல்லரனென்னுதுபாங்கினென்றதனால்தமரேவல்செய்வதுபெறுதும்; இஃது அவ்வந்நிலத்து இழிந்தோர்க்கு என்றுமொன்றும் தொழிலேயாய் நிகழும்" என்று எழுதி யிருக்கிறார்.

ஙு. இது போக்கிலக்கணமில்லாத 'ஆசிரியச்சுரிதகம் பெற்று உறழ்கலி யாயிற்றென்பர் பேராசிரியரும். நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறு வர். தொல். செய். கூ. கடுகூ.

(பிரதிபேதம்) * பூதலம்பாம்பென, † வைகிற்போதற்கு. ‡ஓடியாளென்றுமஞ்சிரும். ||இல் வழிஆசிரியச், ※ஒத்தாழிசைக்கலி.

அ சொல்லறியாப் பேதை மடவைமற் றொல்லா
நினக்கொரூஉ மற்றென் றகலகலு நீடின்று
நினக்கு வருவதாக் காண்பா யனைத்தாகச்
சொல்லிய சொல்லும் வியுங்கொளக் கூறு ;

கஉ தருமணற் ருழப்பெய் தில்பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாந் தனித்தே யொழிய
வரிமணன் முன்றுறைச் சிற்றில் புனைந்த

திருநுத லாயத்தார் தம்முட் புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி னெனைத்துந்
தெருமரல் கைவிட் டிருக்கோ வலர்ந்த
விரிநீ ருடுக்கை யுலகம் பெறினு
மருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் கூடுத லில்லியல் பன்றே.

இஃது "ஆங்கதன் புறத்துப் புரைபட வந்த மறுத்தலோடுதொகைஇ (க) *என்பது, அவன் வரைவுவேண்டின †இடத்து அவ்வரைவு புறத்த தாகியவழித் தலைவி தன்னுயர்வு உண்டாகத் தோன்றிய மறுத்தலோடே முற்கூறியவற்றைத் ‡தொகுத்து" என்று பொருள்கூறி, "அதன்புறமெனவே அதற்கு அயலாகிய நொதுமலர்வரைவாயிற்று" என்றும்; உயர்வு, (உ)குடிப் பிறப்புங் கற்பும்; அதற்கேற்பப் பிறர்வரைவு மறுத்துத் ‖ தலைவன் வரையுமாறு நீ கூறெனத் தோழிக்குக் = கூறியது.

இதன் பொருள்.

வாரி நெறிப்பட் டிரும்புறந் ÷ தாஅழ்ந்த
(ங)வோரிப் புதல்வ னழுதன +னென்பவோ

க. தொல். களவி. சூ. ௨௩. இதனுரையில் இவர் இச்செய்திக்கே இச் செய்யுளைமேற்கோள்காட்டி, சிறிதுவேறுபட இக்குறிப்பையும் எழுதி யிருக்கிறார்.

உ. (அ) "இற்பிறப்பு மொழுக்கு மிழுக்க மில், கற்பும் யான்பிறர்க் கென்னைக் காட்டுகேன்" (ஆ) "இற்பிறப் பென்ப தொன்று மிரும் பொறையென்ப தொன்றுங், கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்" க. ப. சூடாமணி. ௧௭, திருவடி. ௬௨.

ரு. ஓரி-ஆண்பிள்ளையின் தலைமயிர்.

(பிரதிபேதம்) * என்றது. † இடத்தே வரைவு. இடத்தவரைவு. ‡தொகுத்தென்பதற்குப் பொருள். அதன்புறமெனவேகொதுமலர்வரைவாயிற்று. உயர்வு. || நின்னை வரையுமாறு. = கூறிருள். + தாழ்ந்த. ✢ என்பவோ வோகும்புதல.

நான்காவது முல்லை கஉ. எஉகூ

புதுவ மலர்தைஇ யெமரென் பெயரால்
வதுவை யயர்வாரைக் * கண்டு மதியறியா
வேழைமை யென்றகல நக்குவந் தீயாய்நீ
தோழீ யவனுழைச் சென்று

†எ - து: தோழீ! புதியனவாகிய மலர்களைச் சூடி எம்முடைய சுற்றத்தார் என்பெயரைச் சொல்லிப் பெண்பிள்ளைக்கலியாணஞ் செய்கின்றவர்களைக் ‡கண்டு வைத்தும் கோதி நெறித்தற்கொழிலே பட்டுப், பெரிய முதுகிலே தாழ்ந்துகிடக்கின்ற மயிரினையுடைய புதல்வன் அழுதனனென்பவோ? அங்ஙனங் கூறுவார்களாயின், நீ அவனிடத்தே சென்று இவ்வதுவை நின்னைவிட்டு அகலாநிற்க அது நின்னிடத்தே ஆம்படி வரைந்துகொள்ளும் மதியை அறியாதவேழைத்தன்மையையுடையையென்று சிரித்துவாரா||யென்றாள் எ-று.

கோதி நெறித்து முதுகிலே கிடக்கின்ற மயிரினையுடைய புதல்வனென்றதனாற் பயன், மயிர்முடி கூடி இளமை முதிர்ந்து காமச்செவ்வி அறிந்து களவொழுக்கத்திற்கு உரியனும் தான் வரைந்து கொள்ளுந் தன்மை அறியாமல் இருமுதுகுரவர்கீழே நிற்கின்ற பிள்ளையாயிருக்கின்றவனென்பது உணர்த்திற்று.

அழுதனனென்பவோ என்றது, (க)கோதுமலர்வரைவுவந் தீழியும் தான் வரைவின்முயலாது வருந்தினனென்று ஊரிலுள்ளார் கூறுவார்களோ என்றவாறு. இஃது அழுகையென்னும் மெய்ப்பாடு. பெயராலென்பது உருபுமயக்கம்.

எ சென்றியா னறிமேவன் கூறுக = மற்றினி

எ - து: அதுகேட்ட தோழி ஆண்டுச்சென்று அவனில்லையை அறிவேன்; பின்னை, அவற்குக் கூறுவனவற்றை இனிக் கூறுவாயாக என்றாள். எ - று.

அ சொல்லறியாப் பேதை மடவைமற் றெல்லா
நினக்கொருகூ ÷மற்றெவன் றகலகலு நீடின்று
நினக்கு வருவதாக் காண்பா யனைத்தாகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் × கூறு

எ - து: அதுகேட்ட தலைவி, மடவாய்! நீ அவனிடத்தே சென்று எடா! நின்குரவலை நோக்கி இவ்வதுவை என்னிடத்தே + யாகவேண்டு

க. சொதுமலர் - அயலார்.

(பிரதிபேதம்) * கண்டுவிலக்கிமதி, † எ-து. தோழி செறித்தம்........தாழ்ந்துவிடக்கின்ற புதல்வனென்றதனுற பயன்.........களவொழுக்கத்திற்கு முரியளுயும்......... மெய்ப்பாடு. தோழீ! புரியவாகிய, ‡ கண்டுவைத்துமோரிப்புதல்வன், ‖ என்றான். பெயராலென்பது, = மாற்றினி, ÷ மற்றென்றகல். எ-து: அதுகேட்ட தலைவி மடவாய் என்றான்.........விரும்பனையபற்றி. அகலநீடின்று நினக்கு. + கூறு என்பது மடவாய்நீ, × ஆகவேண்டுமென்று.

மென்று சொல்லுஞ் சொல்லை அறியாதபேதை; ஆகையினாலே *இவ்வதுவை நினக்குரித்தன்றி அகலும்; அவ்வகற்சிதான் நீட்டித்தலில்லை; அது சொது

மலர்கின்றி நினக்குவருவதாக நெஞ்சாலே காண்பாய்; அங்ஙனங் †காணுயாயின் அது நின்னை ஒருவுமென்று நீங்கு; அங்ஙனம் நீங்கும்பொழுது இவ்வதுவை தனக்குரித்தாக முயலும்படி நீ சொல்லிய சொற்றானும் முன்பு வரைவுகடாயவுஞ் ‡சொல்லாத அவன் நினையாமல்(க)நின் ஏவலை அவன் மனங் காரியமென்றே கொள்ளும்படி கூறுவாயாக ||என்றாள். எ - று.

மடவரயென்றாள், ஆண்டுக்கூறுவனவற்றைத்(உ)தான் அறியாள்போலத் தன்னை வினவினமைபற்றி.

கஉ (ந) தரு(ச)மணற் றாழப்பெய் தில்(ரு)பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாந் (சு)தனித்தே (எ)யொழிய
(அ)வரிமணன் முன்றுறைச் சிற்றில் ÷புனைந்த

க. "விரைந்து தொழில்கேட்கு ஞாலம் நிரந்தினிது, சொல்லுதல் வல்லார்ப் பெறின்" குறள். சுசஅ.

உ. "தானறிந்து கூறுந் தலைமற் றிடையது, கோனுரைத்த தென்று கூறுமால்" பாரதம்.

ந. (அ) "தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து" நெடுநல். கூ0. நற். கசந. உ. பெருங். (க) சஎ: ககஎ. (ஆ) "தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றம்" அகம். கஅஎ. கூ. (இ) "தருமணன் முற்றத்து" மது. சுஅச; பெருங். (க) நச: சO. (ஈ) "தருமணன் ஞெமிரிய திருநா றொருசிறை" மணி. கஅ: சச. (உ) "தருமணற் பேரில்" (ஊ) "தருமணற் பந்தர்" (எ) "தருமணன் ஞெமரிய தண்பூம் பந்தருள்" பெருங். (க) நந: கநச; நஅ: சக; (ச) கூ: கஉ.

ச. "வரைப்பின் மணற்றாழப் பெய்து" கலி. ககரு: கக.

ரு. (அ) "பூவலூட்டிய புனைமாண் பந்தர்க், காவற்சிற்றிற் கடிமனை" சிலப். ககூ: ரு - கூ. (ஆ) "பூவற் படுவில்" புறம். நககூ: க. (இ) "பூவலங் குன்றம்" களவழி. கஉ.

சு. "தனித்து" என்பதைத் தனிக்கவெனத் திரித்து, யான் தனியே நீங்கினனாக என்க.

எ. 'ஒழிய' என்பதற்கு அவனையன்றி வேறு சிலரிடத்தே தங்குதையி லனே என்பதைப் பொருளாகக்கொள்க; ஒழிதல் - நீங்குதல். இஃது இப்பொருட்டாதலை 'ஒழிய' 'ஒழிந்திட்டாள்' (சீவக. உ௯௬௧, உ௫௦௪) என்பவற்றுக் கெழுதியிருக்கும் உரையான் உணர்க.

அ. "வரிமணல்" பட். ௬௦. கலி. ௧௨௭. ௫.

(பிரதிபேதம்) * பின்னேஇவ்வதனை, † காணுயாயிற பின்னேஅது, ‡ சொல்லாக அயன். || என்றுன்தருமணல், ÷ புனைந்துதிருநுதல்.

நான்காவது முல்லை ௯௪. எ௯௧

திருநுத லாயத்தார் *தம்முட் புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி னெனைத்துந்
தெருமரல் கைவிட் டிருக்கோ †வலர்ந்த
விரிநீ ருடுக்கை(க)யுலகம் பெறினு
மருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் ‡கூடுத லில்லியல் பன்றே

எ-து: என்று பின்னுந்தோழியை நோக்கி, ஆராய்ந்துபார்க்கில் அறலினை யுடைத்தாகிய மணலினையுடைய (உ) துறையின்முன்னே சிற்றிலிழைத்து விளையாடிய அழகிய நுதலினையுடைய ஆயத்தார் தம்முள்ளே நின்று ||யான் தனியே நீங்கினேனாக அவன் புணர்ந்த ஒருமணத்தை நம்முடைய நெஞ்சு தான் அறியும்; அங்ஙனம் அறிந்திராநிற்கவும். (௩)கொண்டுவந்து குவித்த மணலைத் தங்கப் பரப்பி இல்லைச் (௪)செம்மண்ணைப்பூசித் தெய்வமாக வைக்க

(ரு)எருமையாகிய பேட்டின்கொம்போடே எம்முடையசுற்றத்தார்இவ்விடத்து நடத்தும் பெண்பிள்ளைக் கல்யாணமெல்லாம் அவனை யின்றி வேறுசில ரிடத்தே தங்குகையினாலே இருமணம் ÷உண்டாகாநின்றது; இவ்விருமணம் பரந்த திரை விரிகின்ற கடலை உடுக்கையாகவுடைய உலகத்தைப் பெறினும் அரிய நெறியையுடைய ஆயர்மகளிர்க்கு உண்டாதல் குடிப்பிறப்பிற்கு இயல் பன்றென்று யான் நெருமருதலைச் ×சிறிது கைவிட்டிருக்கவோ? கைவிட் டிருக்கின், குடிப்பழுதுமாய்க் கற்பும் நீங்குமன்றோ என்றாள். எ - று.

இனி, இருமணங்கூடுதல் இயல்பன்றாயிருக்க ஒருமணந்தான் அறிவு மாயிற் பெருமணமெல்லாந் தனித்தே +ஒழியச்செய்தே நெருமரல் கைவிட் டிருக்கோ என்றுற் பொருண்முடியாமை காண்க.

(இ)தனால், தலைவிக்குத் தம் மிறையால் அச்சமே தோன்றிற்று.

க. "பழியெனி, னுலகுடன் பெறினுங் கொள்ளலர்" புறம். கஅ௨: ரு - சு.

உ. "முன்றுறை" என்பதற்குத் 'துறை முன்' என்றே பொருள் கூறுவர், பிறரும்; பரி. க௨: ௩சு: புறம். க௩௪: உரு.

௩. "தாயே, புனைமா ணிஞ்சி பூவ லூட்டி, மனைமண லடுத்து மாலை நாற்றி, புவர்தினி தயரும்" அகம். ககரு: உ - ரு.

ச. "பூவலூட்டி" (அகம். ககரு: ௩) என்பதற்கு, சுவரைப் புதுக்கோலஞ் செய்து என்றும் பூவல் - சிவப்பு என்றும் குறிப்புக் காணப்படுகிறது.

ரு. இச்செய்தி வேறெங்கும் கண்டதன்று.

(பிரதிபேதம்) * தம்மிற்புணர்ந்த, † மலர்ந்த, ‡ கூறுதல். || யானிக்கினேருக. + உண்டா கின்றது, × சிறிதுக்கை, + ஒழிகைசெய்தே.

எருமைப் பெடையென்றது * "பேடையும் பெடையும்" என்னும் (க)

ருத்திரத்து நாடினென்றதனால் அமைத்தாம்.

(உ) இது வெள்ளைக்கொச்சகமும் ஓரடியானொன் றும் கொச்சகமும் போக்கிலக்கண †மில்லாத ஆசிரியச்சுரிதகமும் பெற்ற உறழ்கலி. (கச)

(கக௫.) தோழிநாங், காணாமை யுண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
புல்லினத் தாய மகன்சூடி வந்ததோர்
முல்லை யொருகாழுங் கண்ணியு மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மற் றோழியாய்
வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே
யன்னையு மத்தனு மில்லரா யாய்நாண
வன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ;
அதனை, வினவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யா
ணெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினள் யானுமென்
சாந்துளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலந் தழீஇத் தளர்பொல்கிப்
பாங்கருங் கானத் தொளித்தே னதற்கெல்லா
வீங்கெவ னஞ்சு வது;
அஞ்சல், அவன் கண்ணி நீபுனைந்தா யாயி னமரு
மவன்க ணடைசூழ்ந்தார் நின்னை யகன்கண்
வரைப்பின் மணற்றாழப் பெய்து திரைப்பில்
வதுவையு மீங்கே யயர்ப வதுவேயா
மல்கலுஞ் சூழ்ந்த வினை.

இது தலைவி கனவுவெளிப்பட்டதென்று அஞ்சித்தோழிக்குச் ‡சொல்ல, || நமர் நின்னை அவற்கே கொடுக்கச் சூழ்ந்தாரெனச் சொல்லி அச்சம் நீக்கியது.

க. தொல். மரபியல். சூ. ருச.

உ. இச்செய்யுள் போக்கிலக்கணமில்லாத ஆரியச் சுரிதகம்பெற்ற உறழ் கலிக்கு மேற்கோள்; தொல். செய். சூ. கடுகூ. பேர். நச்.

(பிரதிபேதம்) * பேடை பெடையும், பெட்டையும் பெடையும், † இல்லாயாளிரிய. சொல்லவேயின்னை. எமர்.

நான்காவது முல்லை கலி. எகூகூ

இதன் பொருள்.

(க)தோழிநாங், (உ)காணாமை(ங)யுண்ட கடுங்கள்ளை மெய்கூர
(ச)நாணாது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் (ரு)கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
(சு)புல்லினத் * தாய மகன்சூடி வந்ததோர்
முல்லை யொருகாழுங் கண்ணியு மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மற் றோழியாய்
(எ)†வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே
யன்னையு மத்தனு ‡மில்லரா யாய்நாண
வன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ

க. 'ஆயர்வேட்டுவர்' என்னும் (தொல். அகத். உக.) சூத்திரவுரையில் 'ஆயர்வேட்டுவரென்னும் இரண்டு பெயரோ எடுத்தோதினாரேனும் ஒன்றென முடித்தலான் அந்நிலக்கட்குரிய எனைப்பெயர்களான்

வருவனவுங் கொள்க' என்று கூறி, "தோழி நாங்…………மகன்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டுவர். ௩௪.

௨. (அ) "நம்மு ணுணுநர் போலத் தம்முண், மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சிபோல, வுள்ளத் துள்ளே மகிழ்ப" தொல். களவி. சூ. ௨௩. நச்; நாற். சூ. ௧௪௧. மேற். (ஆ) "கள்ளொற்றிக் கண்சாய் பவர்" குறள். ௯௨௭. (இ) "மட்டொளித் துண்ணு மாந்தர் மாண்புபோன் மறைந்து வண்ணப், பட்டொளித் தொழிய வல்குற் பசுங்கதிர்க் கலா பந் தோன்ற" சீவக. ௨௫௩௩.

௩. "அந்தீந்தேறன் மாந்தினர் மயங்கி ……………புலவிக்காலத்துப் போற்றா துரைத்த காவியங்கண்ணார் கட்டுரை யெட்டுக்கு, நாவொடு நவிலா நகைபடு கிளவியும்" சிலப். ௧௪: ௧௩௩ - ௧௩௫.

௪. "நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும், பேணாப் பெருங்குற்றத் தார்க்கு" குறள். ௯௨௪.

௫. "தலைப்பெய்து, கையொடு கண்டாய்" கலி. ௧௫: ௨௭ - ௨௮ என்பதும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

௬. "புல்லினத் தாயர்மகன்" (கலி. ௧௦௩: ௪௭) என்பதும் அதன்குறிப்பும் பார்க்க.

௭. "ஐங் கூந்த லுளரச், சிறுமுல்லை நாறியதற்கு" (கலி. ௧௦௫: ௫௩-௫௪.) என்றதற்கு, 'ஐவகைப்பட்ட கூந்தலை ஆற்ற அது வெண்ணெயின் நாற்றம் நீங்கிச் சிறிய முல்லைப்பூவின் நாற்றம் மேவி மிக நாறியதற்கு' என்று எழுதியிருக்குமுரை ஈண்டு அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * ஆயர்மகன். † வெண்ணெய்நாறு. ‡ இல்லாயாய்நாண.

*எ - து: மெல்லிய இயல்பினையுடையாய்! நம்யாட்டினத்தையுடைய (௧)ஆயர்மகன் சூடிவந்ததொரு முல்லைத்தொடையினையும் அதனாற் †செய்த கோதார்(௨)கண்ணியையுங் கூந்தலிலேயிட்டுமிகவும்‡முடித்தேன்;தோழீ! அப்பூச் செவிலித்தாய் ||வெண்ணெய்தேய்க்கவிரித்த மயிரோடே நற்றாயுந் தந்தை முதலியோரும் இல்லிடத்தேயிராநிற்க நற்றாயுங் கெட்டுநாணும்படியாகச் செவிலிமுன்னே வீழ்ந்தது; ஆகையினாலே () தோழீ! பிறர் காணாமையுண்ட (௩)கள்ளின் களிப்பு மெய்யிடத்தே தோன்றி மிகுகையினாலே பின்னை நாணமற்சென்று பிறர் நகைக்கும்படி அக்கடுங்கள்ளைத் தாமுண்டபடியை உரைத்தாற்போல ÷நாம் கரந்தகளவொழுக்கமுங் கையோடே பிடித்துக்கொள்ளப் பட்டேங் காணென்றாள். எ - று.

அதனை, +வினவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யா
ணெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினாள் யானுமென்
சாந்துளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த
(௪)பூங்கரை நீலந் தழீஇத் தளர்பொல்கிப்
(௫)பாங்கருங் கானத் தொளித்தே னதற்கெல்லா
வீங்கெவ × னஞ்சு வது

எ - து: பின்னரும் அப்பூவை வந்தபடி என்னென்று கேட்டலுஞ் செய்யாளாய்ச் சினத்தலுஞ் செய்யாளாய் நெருப்பைக் கையாலே தீண்டினவர்கள் =அக்கையைப் பிதிர்க்கு மாறுபோலக் கையைப் பிதிர்த்து நீங்கிப் புறமாகிய புறத்தேபோனாள்; அவள்போனபின்பு யானும் என்னுடைய மயிர்ச் ∴சந்தனம் பூசி உலர்த்தின மயிரை முடித்து நிலத்தே ** தாழ்ந்த பூத்தொழிலையுடைத்

---

௧. (அ) "முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்" பதிற். ௨௧: ௨0.
(ஆ) "முல்லையங் கண்ணிசிந்தக் கால்விசை முறுக்கியாய ரொல்லென வொலிப்ப வோடி" சீவக. ௪௫௮.

உ. "கூழையு ளேதிலான், கைபுனை கண்ணி முடித்தாள்" கலி. கoஎ: கசு - கூ.

க. "மெய்க்கண், மகிழா னறிப சுரு" நான்மணி. எகு.

ச. "பூங்கரை நீலம் புடைதாழ" கலி. ககக: ரு.

டு. "பாங்கரும் பாட்டங்கால்" கலி. ககக: க.

(பிரதிபேதம்) * எ - து, மெல்லியலாய் நம்மாட்டினத்தை. † செய்தவழியினையுடைய கண்ணியையும். ‡ முடித்தேன் அப்பூ. || வெண்ணெய்தேய்க்க, என்னெய்தேய்க்க () தோழி. + காங்காந்த ஒழுக்கமும். + வினவலுஞ்சொல்லான் வினவலுஞ். சொல்லான். × அஞ்சுவது அஞ்சல், எ-து: = தம்கையைப், ∴ சந்தனமெழுகியுலர்த்தின, ** தாழ்ந்துபூந்தொழிலே.

தாகிய கரையினையுடைய நீல ஆடையைக் கையாலே சிறிதேறத் தழுவிக் கொண்டு அச்சத்தால் தளர்ந்து நடந்து பக்கத்திலுண்டான செல்லுதற்கரிய கானத்திலே சென்று ஒளித்தே னென்றாள்; அதுகேட்டதோழி, எல ! அப்பூ வீழ்ந்ததற்கு நீ அவ்விடத்தே அஞ்சுவது என்னகாரியத்திற் *கென்றாள். எ-று.

கஎ அஞ்சல்; (ஃ) அவன்கண்ணி நீபுனைந்தா யாயி னமரு
மவன்க ணடைசூழ்ந்தார் நின்னை யகன்கண்
வரைப்பின் (உ) மணற்றாழப் † பெய்து திரைப்பில்
வதுவையு மீங்கே யயர்ப வதுவேயா
மல்கலுஞ் சூழ்ந்த வினை

எ - து: என்று பின்னும் நின் தலைவன் கண்ணியை நீ சூடினையாயின் அதற்கேற்ப நம்முடைய சுற்றத்தாரும் நின்னை அவனிடத்தே அடுத்தலைச் சூழ்ந்தார்; அதுவேயன்றி அகன்ற இடத்தையுடைய முற்றத்தே மணலைத் ‡ தங்கப்பெய்து திரையிட்டுக் கல்யாணமும் இப்பொழுதே செய்வார்கள்;

பகலேயன்றிப் போன இரவிலும் ஆராய்ந்த காரியம் || அக்காரியமேயாம் : ¶ அஞ்சாதேகொள்ளென்றாள். எ - று.

இதனால், தலைவிக்குப் புணர்ச்சிவகை பிறந்தது.

+இஃது ஐஞ்சீரடுக்கி வந்த தரவும் பாட்டிடை மிதசகமும் பெற்ற கலிவெண்பா. (கசு)

(கககூ.) பாங்கரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம்எந்
தாம்பி னொருதலை பற்றினை யீங்கெம்மை
முன்னை நின் றாங்கே விலக்கிய வெல்லாநீ
யென்னையே முற்றாய் விடு;

டு விடேஎன், தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டுங்
கடுவய நாகுபோ னோக்கிக் தொடுவைவா
னீங்கிச் சினவுவாய் மற்று ;

க. "நின் கூழையு ளேறவன், கண்ணிதந் திட்ட தெனக்கேட்டு..........
நின்னையப், பொய்யில் பொதுவற் கடைசூழ்ந்தார் நந்தையோ,
டையன்மா ரெல்லா மொருங்கு" கலி. க௦எ: ௩௦ - ௩௪.

உ. "மணற்குழப் பெய்து" (கலி. கக௪: கஉ) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பாதபேதம்) * என்றன அவன்கண்ணி, †பெய்து மதுவையும். ‡தக்கப்பெய்து கல்லி யாணமிப்பொழுதே. || அக்காரியமேயாமின்யஞ்சாதே. +இதனைஞ்சீரடுக்கி.

அ நீநீங்கு; கன்றுசேர்ந் தார்கட் கதவீற்றுச் சென்றாங்கு
வன்கண்ண னாய்வர லோம்பு ;
யாய்வருக வொன்றோ பிறர்வருக மற்றுநின்
கோவரினு மிங்கே வருக தளரேன்யா
னீயருளி நல்கப் பெறின் ;
நின்னையான் சொல்லினவும் பேணாய் நினை இக்
கனைபெய லேற்றிற் றலைசாய்த் தெனையதூஉ
மாறெதிர் கூறி மயக்குப் படுகுவாய்
கலத்தொடியாஞ் செல்வுழி நாடிப் புலத்தும்
வருவையா னணிமி நீ.

இது வினைவலபாங்கிற் றலைவியை ஆற்றிடைக்கண்டு விலக்கிய தலைவனோடு அவள் சில மொழிகூறிக் குறியிடங் கூறியது.

இதன் பொருள்.

(க)பாங்கரும் (உ)பாட்டங்காற் (ங)கன்றொடு செல்வேமெம்
† தாம்பி னொருதலை பற்றினை யீங்(ச)கெம்மை
முன்னைநின் றங்கே விலக்கிய வெல்லாநீ
‡ யென்னை (ரு)யே மூற்றாய் விடு

எ - து: மனைப் ||பக்கத்திற், பிறர் சேருதற்கரிய, நாம் பயிர் செய்யுந் தோட்டத்திடத்தேகன்றோடுபோகாநின்றேம்; அம்மனம்போகின்றவெம்முடைய கையில் தாம்பின் ஒரு தலையைப் பிடித்தனையாய் எம்மை இவ்விடத்தே முன் பேயும் ஒருதா நின்று விலக்கினாற்போல விலக்குதற்கு, ஏடா ! நீ என்ன பித்தேறினாய் ? நீ என்னைப் போகவிடு என்றாள். எ - று.

க. "பாங்கரும் கானத்து" கலி. ககு: கரு.

௧. "பாட்டங்கால்" கலி. ௧௧௧: ௪.

௩. "கன்றெல்லாந் தாம்பில்" கலி. ௧௧௩: ௧ - ௨. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௪. "பேரேமுற்றார்போல முன்னின்று விலக்குவாா, யாரெல்லா நின்னை யறிந்ததூஉ மில்வழி" கலி. ௧௧௩: ௪ - ௫.

௫. இந் நூற்பக்கம் ௭௨௩: ௫ - ஆம் குறிப்புப் பார்க்க

(பிரதிபேதம்) * விலக்கியமைத்தவேயோடு, † தாம்பிலொருத்தே, ‡ என்னே முற்றுஅமலிடு, || பக்கத்திற்சேருதற்கரிய காம்பயிரைச்செய்யும், ÷ முன்பேவுமொருத்தா னின்று விலக்கிருமரப்போல.

நான்காவது முல்லை ௧௩. ௭௩௭

௫ * விடேஎன், (௧)தொழீஇய செல்வார்த் தமித்தெதிர் மண்டுங்
கடு †வய நாகுபோ னோக்கித் (௨)தொடுவாயி
னீங்கிச் சினவுவாய் ‡ மற்று

எ - து: அதுகேட்டவள், யான் நின்னைப் போகவிடேன்; தன்னைத் தீண்டுதற்குச் செல்லுமவர்களை இடையே விலக்கி எதிரே மிக்குச்செல்லுங் கடிய வலியினையுடைய நாகுபோலே செறுத்துநோக்கித் தொழுவின் வாயிலி னின்றும் போந்து நின்று பின்னைச் சினப்பா ||யென்றான். எ - று.

அ நீயீங்கு, கன்றுசேர்ந் தார்கட் ÷ கத (௩)விற்றுச் சென்றாங்கு
வன்கண்ண னாய்வர லோம்பு

எ - து: அதுகேட்டவள், நீ இவ்விடத்து நின்றும் போ; அதுவென் னெனில் தன்னுடைய கன்றைச் சேர்ந்தார்மேலே கோபத்தையுடைய புனிற் றுச் ×சென்றாற்போல நீ என்மேலே வந்தது காணில் யாய் தறுகண்மையை

யுடையளாய் வந்துசிறுதலுமுண்கொண்; அவ்வாகவை நீபேணிச் +கொள்வா யென்றான். எ - று.

யாய்வருக வொன்றோ பிறர்வருக மற்றுநின்
கோவரினு மிங்கே வருக *ҳதளரேன்யா
(ச)னீயருளி நல்கப் பெறின்

க. வயாவென்பது வேட்கைப் பெருக்கத்தை யுணர்த்துமென்பதற்கு, "தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டுங், கவெயா நாகுபோ ஞேக்கி"என்பதனை மேற்கோள்காட்டி, வயாவென்பது கன்றின்மேற் காதன்மிகுதி குறித்து நின்றதென்பர், தெய்வச்சிலையார்; தொல். உரி. சூ. ௬எ. 'வயாவென்'

உ. எழுப்புதல் எடுப்புதலென வருதல்போல, தொழு, தொடுவென ழகரம் டகரமாய் வந்ததுபோலும்.

ங. (அ) "ஈற்று, அச்சப்பொருளில் ஒன்றாகக் (தொல். மெய்ப். சூ. க) கூறப்பட்டிருத்தலும் (ஆ) "கடுஞ்சூலா நாகுபோ னிற்கண்டு நாளு, நடுங்கஞ ருற்றதென் னெஞ்ச" (கலி. ககo: கச- கரு.) என்பதும் (இ) "கன்றமர் கறவை மான, முன்சமத் தெதிர்ந்ததன் றோழற்கு வருமே" (புறம்: உளரு: அ - கூ.) என்பதும் ஈண்டு அறிதற்பாலன.

ச. (அ) "நின்றோழி யென்னை, யருளியல் வேண்டுவல்" (ஆ) "களிறன் ஞன் றன்னையொரு, பெண்டி ரருளக் கிடந்த தெவன்கொலோ"

(பிரதிபேதம்) * விடேன் தொடிய செல்வோர்த். †. வயாநாகுபோஞேக்கிக் கொடுமையா. ‡ மற்று நீக்கு. எ-று: || என்றான் தன் கன்று, + கதவிற்றாய், × சென் றாய்போல, சென்றாய்போல, + கொள்ளென்றான். யாய்.

93

எ-து: அதுகேட்டவன், நீ அருள்செய்து என்னைக் கூடப்பெறின், அவ்விடத்தே ஒன்று தாய் வருக; ஒன்று அயலார் வருக; அவர்களேயன்றிப் பின்னை நின் தந்தை தான் வரினும் வருக; அதற்கு யான் வருந்தேனென் றான். எ - று.

கூ *நின்னையான் சொல்லினவும் பேணாய் நினைஇக்
(க)கனைபெய †லேற்றிற் றலைசாய்த் தெனையதூஉ
மாறெதிர் கூறி மயக்குப் படுகுவாய்
கலத்தொடியாஞ் செல்வுழி நாடிப் புலத்தும்
‡வருவையா ணணிலி நீ

எ-து: அதுகேட்டதலைவி, நின்னையான் எத்தன்மையவாகவுஞ்சொன்ன || வார்த்தைகளைப் பரிகரியாயாய்க் கூட்டத்தையே நினைந்து செறிந்த மழை யிடத்து ஏறுபோலே தலையைச் சாய்த்து யான் கூறியதற்றிற்கு எதிராகச் சில சொற்களைக் கூறி இங்ஙனம் மயக்கமுறுகின்றவனே ! நாணமில்லாதவனே ! நீ கறவைக்கலத்தோடே யாஞ் செல்லும் பசுமேய்க்கின்ற இடத்தையும் நாடி என் தமையன்மார் நிற்கும் புலத்திலும் வருவையாயிருந்தாய்; ஆண்டுக் கூடுது மெனக் குறியிடங் கூறினள். எ - று.

இதனால், ÷இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (கசு)

(கஎ) மாண வுருக்கிய நன்பொன் மணியுறீஇப்
பேணித் துடைத்தன்ன மேனியாய் கோங்கின்
முதிரா விளமுகை யொப்ப வெதிரிய
தொய்யில் பொறித்த வனமுலையாய் மற்றுநின்
கைய தெவன்மற் றுரை ;

௬ கையதை, சேரிக் கிழவன் மகளேன்யான் மற்றிஃதோர்
மாதர்ப் புலைத்தி விலையாகச் செய்ததோர்
போழிற் புனைந்த வரிப்புட்டில் புட்டிலு ளென்னுள
காண்டக்கா யெற்காட்டிக் காண் ;

(இ) "இருளுறழ் கூந்தலா ளென்னை, யருளுறச் செயினுமக் கறனுமா ராகுவே" (ஈ) "நீநல்கி னுண்டென் னுயிர்" கலி. கக: கந - கஎ, கக - உ0; கச0: ௩௩ - ௩ச; கச: கஉ.

ச. "கனைபெயல்" (கலி. சரு: ச) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * கினையான், † எற்றித் தலைசாய்த்து, ‡ வருகுவையால், || வார்த்தைகளையும். பரிகரியாய், + இருவரும் புணர்ச்சியுவகை யெய்தினர் இது அஞ்சீர்

நான்காவது முல்லைக்கலி. ௭௩௯

௧0 காணினி, தோட்டார் *கதுப்பினென் றோழி யவரொடு
காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை மற்றிவை
முல்லை யிவையாயின் முற்றிய கூழையா
யெல்லிற்றுப் போழ்தாயி னீதோளிக் கண்டேனுற்
செல்லென்று நின்னை விடுவேன்யான் மற்றெனக்கு
மொல்லிப நோரா வறிவு.

* இஃது ஆற்றிடைத் தலைவன் தலைவியைக் கையதுவினவியக் சேர்ந்தது.

இதன் பொருள்.

மாலை யுருங்கிய கன்(க)பொன் மணியுரிஇப்

மேவனித் தொடைத்தன்ன மேனியாய்(உ) கோங்கின்
முதிரா விளமுகை பொரப்ப வெதிரிய

. . . .

க. "பொன்னுரை மணியன்ன மாமைக்கண்" (கலி. ௪௮: கஎ) என்பதும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

உ. கோங்கு பாலைநிலத்துக்குரித்தாகக் கூறப்படுவது; பொரியரையுடையது; வேனிற்காலத்து மலரும் இயல்பினது; தோகதச்செய்கையில் மகளிர் குதலை கேட்டு மலர்வதாகக் கூறப்படுவது. இம்மலர் பொன்னிறமும் விரிந்து தோன்றலுமுடையதாதலால், இதற்கு விளக்கும் பொற்கிண்ணமும் பொற்றட்டும் பொற்றகடுத்தட்டும்பொற்குடையும் சுரிதகமென்னுமாபரணமும் உவமையாகக் கூறப்படுகின்றன. இவை (அ) "அமர்முலை யுதரந்தோரன கோங்கமும், மெல்லவும மெல்லடி யின்னை வுருவகைத், தலைவனோ டவ்வழிச் சார்ந்தனின்புற, நிலைபெறு பஞ்சியி னெறிக நிற்குமே" எனவும் (ஆ) "பொரியரைக் கோங்கின் பொன்மருள் பசவீ" எனவும் (இ) "இணர்நிலைக் கோங்கம பயந்த, வண்மிகு கொழுமுகை யுடையும் பொழுதே" (ஈ) "வேனிற் கோங்கின் பூம்பொருட்டு" எனவும் (உ) "சோங்க மாதர் குதலையைக் கேட்டலுர், தேங்கொள் போது சினைதொறும் பூத்தலால்" எனவும் (ஊ) "பொன்போதலர் கோங் கோங்கு சோலை" எனவும் (எ) "கோங்கின், காலுறச் சழன்ற கண்கமழ் பனிமலர், கைவிடு சுடரிற் றோன்றும்" (ஏ) "செல்சுடர் செடுங்கொடி போலப், பல்பூங் கோங்க மணிந்த காடே" எனவும (ஐ) "வள்ளப்போற் கோங்கு மலருந் திருநாடன்" எனவும் (ஒ) "கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப், பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச், செம்பொற்றட்டிற் றீம்பா லேந்திப், பைங்கிளி யூட்டுமோர் பாவையா மென்றும்" எனவும் (ஓ) "பொன்

(பிரதிபேதம்.) * இது ஆற்றிடைத்தலைவிளை.

(க)தொய்யில் பொறித்த வனமுலையாய் மற்றுநின்
கைய தெவன்மற் றுரை

எ - து: மாட்சிமைப்பட உருக்கி ஓடவைத்த நல்ல பொன்னிலே நீலமணியை அழுத்திப் பேணி ஒப்பமிட்டாற்போன்ற கரிய நிறத்தையுடையாய்! முதிராத் தோங்கினது இளைய முலைகளையொப்பத் தோன்றின தொய்யி லெழுதினவனமுலையையுடையாய்! பின்னை நின் கையிடத்தது யாதுதான் உரையென்றான். எ - று.

௬ கையதை, சேரிக் கிழவன் மகளேன்யான் மற்றிஃதோர்
மாதர்ப் புலைத்தி விலைபாகச் செய்ததோர்
போழிற் புனைந்த வரிப்புட்டில் புட்டிலு ளென்னுள
*காண்டக்கா யெற்காட்டிக் காண்

எ - து: அதுகேட்டவள், என் கையிடத்தது, இச்சேரிக்குரிய இடையர்மகளாயிருப்பேன் யான், பின்னை என் கையில் இருக்கின்ற இது காதலையுடைய புலைத்தி விற்கப்படுவதொன்றாக முடைந்ததொரு புட்டில்; அது தான் பின்பு பனங் குருத்தின் வகிராற் பொத்தின தொழிலையுடைய புட்டி லென்றாள். அதுகேட்டவன், (உ) காட்சிதக்கவளே! இப்புட்டிலுள் என்ன பண்டங்களுள? அவற்றை எனக்குக் காட்டிக்கா†ணென்றான். எ - று

செய் கன்னம் பொலிய வெள்ளி, நுண்சோ லறைகுறைந் துதிர்வன போல, வரவ வண்டின மூதுதொறும் குரவத், தோங்குசினை நறவீ கோங்கல ருறைப்ப" எனவும் (ஔ) "புல்லிதழ்க் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ" (ஃ) "குடைமாக மெனவேந்திக் கோங்கம்போதவிழ்ந்தனவே" (அஅ) "குடையவிழ்வன கொழுமலரின குளிர்களியன கோங்கம்" (ஆஆ) கோங்கு பொற்குடை கொண்டு கவித்தன" எனவும் (இஇ) "கைவல் வினைவன் றைப்புபு சொரிந்த, சுரிதக வுருவின வாகிப் பெரிய, கோங்கங் குவிமுகை யவிழ" எனவும் வருவனவற்றால் அறியலாகும். இதன் றாது பொன்னிறமுடையதென்பது கலி. ௩௩: ௧௨-ஆம் அடியாலுணரப்படும். இதன் காய் சால்போன்றதென்றும் பஞ்சுடையதென்றும் கூறுவர்; இதன் அரும்பும் மகளிர் கொங்கையும் ஒன்றற்கொன்று உவமையாகக் கூறப்படுதலை இந்நூற் பக்கம் ௩௪௪. ௨-ஆம் குறிப்பால் உணர்க.

௧. (அ) "தொய்யில் பொறித்த சுணங்கெதிரிளமுலை" மது. ௪௧௬. (ஆ) "தொய்யில் பொறித்த வனமுலை" (இ) "தொய்யில் பொறித்த வழி" கலி. ௧௭: ௧௨; ௧௪௪: ௩௪.

௨. காண் - அழகுமாம்.

(பிரதிபேதம்) *சூண்டக்காய் காட்டிக்காண். † என்றுன் தோட்டார்.

நான்காவது முல்லைக்கலி.

காணினி, (௧)தோட்டார் கதுப்பினென் றோழி யவரொடு
காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை மற்றிவை
முல்லை யிவையாயின் முற்றிய கூழையா
யெல்லிற்றுப் போழ்தாயி னீதோளிக் கண்டேனுற்

(உ)செல்லென்று நின்னை விடுவேன்யான் மற்றெனக்கு
மெல்லிய தோரா வறிவு.

எ - து: அதுகேட்டவள், இனிக்காண்பாயாக; பின்னை இவை பூத்த மாலே நிறையப்பட்ட மயிரினையுடைய என் தோழி ஆயத்தாருடனே காட்டிடத்தே பறித்த சிறுமுல்லையென்றாள்; அது கேட்டவன், முடிகூடின மயிரினையுடையாய்! யான் தனியே இவ்விடத்தே *கண்டேனல்; இருந்நறுவை முல்லைப்பூவாயின், இவை தொடுத்துமுடித்து நான் கூடுதற்குப் பொழுதாயின், ஒளி இத்தன்மைத்தாயிராநின்றது; நின் நினைவு போக்கிலையாகில் யான் போவென்று விடுவதுஞ் செய்வேன்; பின்னை எனக்கு நின்னைப் போகவிடுதலை †தோராது இவன் என் அறிவு இளைத்திராநின்றது; இனி இக் கூட்டத்திற்கு உடம்பட நில்லென்றான். எ - று.

இது (ங)‡இதோளி யதோளியெனச் சுட்டு நீண்டு நின்றது; இது சுட்டு முதலாகிய இகரவீற்று வல்லெழுத்து மிக்கு நின்றது.

க. (அ) "தோட்டார் கதுப்பினாள்" குறள். க௱ெ. (ஆ) "தோட்டார் குழலியொடு" சிலப். கடு: கக௮.

உ. "நின்மொழிகொண் டியானோ விடுவேன்மற் றென்மொழிகொண், டென்னெஞ்ச மேவல் செயின்" கலி. ககங: கஎ - க௮.

ங. "ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து வாராதாகலும் பொருள் வேறுபடுதலுமுடைய; அதோளி இதோளி உதோளி எனவும்

குயின் எனவும் நின்ற இவை ஒருகாலத் துளவாகி இக்காலத் திலவாயின. இவை முற்காலத் துளவென்பதேகொண்டு வீழ்ந்தகாலத்தும் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்த காலத்து உளவாயினும் கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்; அவற்றுக்கு இது மரபிலக்கண மாகலி னென்பது" என்ற பேராசிரியரும் "ஒருகாலத்து வழங்கிய சொற்கள் ஒருகாலத்து வழங்காதனவுமுள" என்பதற்கு, அதோளி இதோளி உதோளி குயின் என்பவற்றை மேற்கோள் காட்டி, 'இவை இடைச்சங்கத்திற் காகாவாயின'

பிரதிபேதம்) * கண்டேனு மிருந்தனை, † ஓராங்கவனன்றறிவு, ஓராங் கவனனறிவு ‡ இது தொனி யீதொனியென.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை *பிறந்தது.

என்று நச்சினார்க்கினியரும், "மரபேதானும்" என்னும் (தொல். செய். ௮௦.) சூத்திரத்தினுரையில் எழுதி யிருக்கிறார்கள்; 'இவை இடைச் சங்கத்திற் காகாவாயின' என்ற நச்சினார்க்கினியருக்குக் கடைச்சங்கத்திற் காகுமென்பது கருத்தென்று கொள்ளலாகாது; இச்சொற்கள் வழக்கி லில்லையென்பதே கருத்தென்று கொள்ள வேண்டும். ஆனால், 'சுட்டு முதலாகிய விகரவிறுதியும்' என்னும் (தொல். தொகை. ௧௭) சூத்திரவுரையில் இளம்பூரணர்சுட்டுமுதலாகிய இகரவிறுதிக்கு, அதோளி, இதோளி, உதோளி என்னுஞ் சொற்களை உதாரணங்காட்டி யிருக்கிறார். நச்சினார்க்கினியரும் அவரையே பின்பற்றி அச்சூத்திரவுரையில் அப்பகுதிக்கு அச்சொற்களையே உதாரணங்

காட்டி யிருப்பதோடு 'அதோளி - அவ்விடமென்னும் பொருட்டு' என்று குறிப்பும் எழுதியிருக்கிறார். 'ஞநமவவென்னும் புள்ளிமுன்னர், யஃகா னிற்றன் மெய்பெற் றன்றே" என்னும் (தோல். நூன்மரபு உஎ.) சூத்திரத்துரையில், இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ்செய்தலின் அக்காலத்து இந்நான்கு புள்ளிகளின் முன்னும் யகரம் வரப்பெற்று ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றாம். அவை இக்காலத்து இறந்தன என்று கூறுபவராகிய இவர், அதோளி முத லியசொற்கள் முற்காலத்துளவாகி இவர்காலத்து இலேயாயின் 'சுட்டு முதலாகிய விகரவிறுதியும்' என்னுஞ்சூத்திரவுரையிலும் 'இங்ஙனம் ஆசிரியர்சூத்திரஞ்செய்தலின் அக்காலத்துச், சுட்டுமுதல் இகரவீறான சொற்கள் உளவென்பது பெற்றாம்; அவை இக்காலத்து இறந்தன' என்றன்றோ கூறவேண்டும். இவர் கூற்றுள்ளே முன்னுக்குப் பின் முரணுகின்றதே எனின் முரணாது அமைத்துக்கொள்ளல் வேண்டும். நாமறிந்த அளவில் இச்சொற்குப் பொருளறிவித்தவர் இவரே. அங்கு, அதோளியென்பதற்கு அவ்விடமென்று பொருள்கூறி யிருப்பது போலவே இந்நூலிலும் இச்செய்யுளில் 'இதோளி' என்னுஞ் சொல் லுக்கு 'இவ்விடம்' என்று பொருள் கூறியிருக்கிறார். இவற்றையும் செய்யுளியலுரையில் இவர் எழுதியிருப்பதையும் நோக்கின், இச் சொற்கள் மிகுதியாக வழங்காமை கருதிச் செய்யுளியலில் அவ்வாறு எழுதினரென்றும் இவை அருகி வழக்குமென்பதே இவர் கருத்தென் றும் கொள்ளுதலேதகுதியாம். "கதிர்த்ததண் பூணி கம்புடாழ் பீலிக் கனைகுரா ஞரைவண் டானம்" (சீவக. உகoஅ.) என்பதனுரையில் 'பூணிகம்பு ளென்பன இறந்தவழக்கு' என்று இவர் எழுதியுள்ள (பிரதிபேதம்) * தோன்றிற்று.

*முல்லைக்கலி முற்றும்.

கருத்தையும் நோக்குக. 'இதோளி' என்னுஞ்சொல் ஒன்றே முதல் நீண்டாவது இந்நூலிற் காணப்படுகின்றது; அதோளி உதோளி யென்பன நாமறிந்தஅளவில் ஓரிடத்துங் காணப்படவில்லை. வடமலையாளமாகிய தளிச்சேரிப்பக்கத்து இப்போதும் ஒளியென்பது இடமென்னும் பொருளில் பெரியோரைச் சுட்டி உயர்சொற் கிளவியாய் வழங்குமென்ப; இச்சொற்கள்பண்டைக்காலத்தே சுற்றிகரங்குறைந்து வகர சுருயும் வழங்கின வென்பது தோல். புள்ளி. கOங-ஆம் சூத்திரவுரைகளிலுள்ள உதாரணங்களால் அறியலாகும். கன்னடத்தில் அதரொள் இகரொன் என்பன அதில் இதிலென்னும் பொருளில் வழங்குமென்பதும் இங்கேகருதத்தக்கது. அன்றியும் இக்காலத்து அவ்விடம் இவ்விடமென்னும் பொருளில் வழங்கும் அதோ இதோ என்னுஞ் சொற்களும் அதோள் இதோள் என்பவற்றின் சிதைவோஎன்றும் ஐயமுண்டாகிறது. இவற்றைப் பாகதச் சிதைவென்பாருமுளர். இவற்றுள், இதோவென்பது சிவஞானமுனிவராற் செய்யுளிலும் பல இடத்து எடுத்தாளப்படுகிறது. "மற்றிதா தோன்றுகின்ற, சோலைசூழ் வரையினெற்றி" (சீவக. கஉகஉ) என்புழி, இதா வென்பது இவ்விடமென்னும் பொருளில் சிந்தாமணியிலும் வந்துள்ளது. அங்கு 'இதா, திசைச்சொல்' என்று இவ்வுரையாசிரியர் குறிப்பு எழுதியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * முல்லைப்பாட்டு முற்றும், முல்லை முற்றும்.

உ

வருணன் துணை.

கலித்தொகை

மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

ஐந்தாவது நெய்தற்கலி.

(௧௧௮.) வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தா
னல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போற்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
வானூது கலுழ்கொண்ட வுலகத்து மற்றவ
னேனையா னளிப்பான்போ லிகலிருண் மதிசீப்பக்
குடைநிழ லாண்டாற்கு மாளிய வருவாற்கு
மிடைநின்ற காலம்போ லிறுத்தந்த மருண்மாலை;
மாலைநீ, தூவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தவென் னெழினல மெள்ளுவா
யாய்சிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போற் றளைவிட்ட
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்;
மாலைநீ, தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்

பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்
செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலங் கடிகல்லாய்;
கஎ மாலைநீ, தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்பப்
பகைமிக்க நெஞ்சத்தேம் புன்மைபா ராட்டுவாய்
94

தகைமிக்க புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலுங் கடிகல்லாய்;
எனவாங்கு;
உஉ மாலையு மலரு நோனா தெம்வயி
னெஞ்சமு மெஞ்சுமற் றில்ல வெஞ்சி
யுள்ளா தமைந்தோ ருள்ளு
முள்ளி னுள்ள முள்ளு ளுவந்தே.

இது பிரிவிடையாற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு அதனொடு புலம்பித் தோழிகேட்ப அதனொடு புலந்தது.

இதன் பொருள்.

(க)வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தா
னல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் (உ)தான்செய்த
தொல்வினைப்*பயன் றுய்ப்பத் துறக்கம்வேட்†டெழுந்தாற்போற்
(ரு)பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
ஒ வானூது ‡கலுழ்கொண்ட வுலகத்து மற்றவ

னேனையா னளிப்பான்போ லிகலிருண் ||மதிரிப்பக்

க. (அ) "வென்றிப் பல்புகழ்" மலை. கூசச (ஆ) "மறம் வீங்கு பல்புகழ்" பதிற். கஉ: அ. என்பவைகளும் (இ) இந்நூற்பக்கம் கசகூ: ச - ஆம் குறிப்பும் ஒப்புநோக்குக.

உ. (அ) "அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார், சிறந்தோ ருலகம் படருநர் போல" பரி. கக: கO - கக. (ஆ) "வினைந்தார் வினையின் விழுப்பயன் றுய்க்குந், துளங்கா விழுச்சீர்த் துறக்கம்" பரி. 'வானூர்' சக - சஎ. (இ) "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க மென்னுமீ தருமறைப் பொருளே" (ஈ) "எண்ணிய வின்ப மன்றித் துன்பங்க ளில்லை யான, புண்ணியம் புரிந்தோர் வைகுந் துறக்கமே போன்ற தன்றே" (உ) "மாண்டோர் நலத்திற் றமென் றுணர்த்துதல் வாய் மைத் தன்றால், வேண்டிய வேண்டி னெய்தி வெறுப்பின்றி விழைந்த துய்க்கு, மீண்டரும் போக வின்ப மீறில தியாண்டுங் கண்டா, மாண் டது துறக்க மஃதே யருமறைத் துணிவு மம்மா" கம்ப. நகரப். நி. சவரிபிறப்பு. க. கடறுவு. கூச.

ந. "கல்சேர் தன்றே பல்கதிர் ஞாயிறு" அகம். கஉO: நி.

(பிரதிபேதம்) * பயன்றுய்ப்பான், † உழந்தாற், ‡ கலிழ்கொண்ட, || மதிசிப்ப, மதி சிறப்ப.

ஐந்தாவது நெய்தல் க. எ ௯௩௧

குடைநிழ (க)*லாண்டார்க்கு மாளிய வருவார்க்கு
மிடைநின்ற காலம்போ லிறுத்கந்த படருண்மாலை

எ - து: (உ)பகைவரிடத்துப் போர்த்தொழில்நிகழ்த்த வல்ல விளங்கிய

ஒழுக்கத்தாலே வெல்கின்ற புகழையுடைய அரசன் நல்ல தருமநூனெறி யாலே (ங) பல்லுயிர்களையும் பாதுகாத்துத் தீவினையால் உளதான நடுக்கம் மனத்திலில்லையாம்படி தான்செய்த பழவினையின்பயனை நுகர்தற்குச் சுவர்க் கத்தை விரும்பிப் போனாற்போல பலகதிரையுடைய (ச) ஞாயிறு தனக்குப் பகையாகிய இருளைக் கெடுத்து உலகத்திற்குப் பகற்பொழுதை முறை மையாற் செலுத்தி மலையிலே சென்று சேராநிற்க, அமையாதே கலக்கங் கொண்ட உலகத்தினிடத்தே பின்னை †அவ்வரசனுக்குப்பகைவனாகிய அரசன் வந்து அவ்வுலகைச் சிறிதே அளிப்பான்போல, தனக்கு மாறுபாட்டை யுடைய இருளை மதி போக்காநிற்க, அந்தக்குடையால் நிழல்செய்து ஆண்ட அரசனுக்கும் அவ்வுலகை ஆளவரும் அரசனுக்கும் நடுவுநின்ற வருத்தந்தரு கின்ற காலம்போல வந்துவிட்ட மாலாய்! நீ மருட்சியையுடைய மாலையாய் இருந்தாயென்றாள். எ - று.

கூ மாலைநீ, (ச) ‡தூவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தவென் னெழினலமெள்ளுவாய்

க "புற்கென்று நந்தி புனைமலர்க்கண் ணரும்ப, நிற்கின்ற தந்தோ நிலங் காப்பான்-முற்கொண்,டடைகின்ற வேந்தர்க்கு மாண்டஞ்சி னோர்க்கு, மிடைநின்ற காலம்போ லின்று" நள. சுயம்வர. ௪௦௦.

உ. "விரியிருட் பகையை யோட்டித் திசைகளை வென்று மேனின், றொருதனித் திகிரியுந்தி யுயர்புகழ் நிறுவி நாளு, மிருநிலத்தெவர்க்கு முள்ளத் திருந்தன னென்ன வீந்த, செருவலி வீர னென்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான்" கம்ப. கங்கைப். ௪௭.

ங. "மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப, தன்னுயி ரஞ்சும் வினை" குறள். ௨௪௪.

ச. (அ) "விரிகதிர்பரப்பி........மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென...... ......அந்திவானத்து வெண்பிறை தோன்றிப், புன்கண்மாலைக் குறும் பெறிந்தோட்டி" சிலப். ௪: க - உ௦.

௫. (அ) "இனர்தூய்மை தூவா வரும்" (குறள். ௪௫௫.) என்பதன் விசேடவுரையில், தூவென்பது பற்றுக்கோடென்னும் பொருளில் வருதற்கு, 'தூவறத் துறந்தானை' என்பதனை மேற்கோள் காட்டுவர், பரி. தாவென்பதேயன்றித் தூவென்பதும் வலியென்னும் பொருளில் வருமென்பதை, (ஆ) "தூவறுத்தலின்" மது. ௧௮௮. (இ) "தூவெறிந்து" பதிற். ௮௪: ௫௪. (ஈ) "தூவாகாது" (உ) "தூவறத் துறந்தனன்" (ஊ) "தூவற நீபப" கலி. ௧௭: ௨௦, ௧௨௯: ௯, ௧௩௪: ௩௯.

(பிரதிபேதம்) * ஆண்டோர்தும், ஆண்டார்க்கும். † அரசனுடையபகைவருகிய. ‡ தாவற.

௭௪௮ கலித்தொகை ௧௧௮.

யாய்சிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போற் றளைவிட்ட
(க)காதலர்ப் *புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்

எ - து: அதற்குக் காரணம் என்னெனில், நமக்கு வலியில்லையாம்படி நம்மைத் துறந்தவரை நினைக்கையினாலே (உ)கயங்கள்பூத்த போதுபோலே நின்னைக்கண்டு மனங்குவிந்த என்னுடைய அழகினையுடைய நலத்தை இகழ்கின்ற நீ அழகிய † சிறகினையுடைய வண்டுகள் ஆரவாரிக்கும்படி முறுக்குநெகிழ்ந்த கோட்டுப்பூப்போலே மன ‡நெகிழ்ந்த காதலரைக் கூடியிருக்கின்ற மகளிருடைய அழகைப் போக்கமாட்டாயென்று அதன் மருட்சி கூறினள். எ - று.

||இதனால், நீ வருத்தினவர்களை வருத்தியே விடுவையென்றும் × மகிழ்ந்தவர்களை மகிழப்பண்ணியே விடுவையென்றும் அதன் அருளின்மைநோக்கி மருட்சியையுடைய மாலையாய் இருந்தாயென்றாள்.

இறுத்தந்தமாலாய்! நீ மருண்மாலையாய் இருந்தாயென மேல்வரும் 'மாலைநீ' என்பனவற்றையும் இங்ஙனங்கூட்டிப் பொருள்கூறிக்கொள்க.

௧௧. (௩)மாலைநீ, தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்

(சு)செவ்வழியாழ் நரம்பன்ன =கிளவியார் பாராட்டும்

பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலங் கடிகல்லாய்

எ - து: கோவலருடைய தனித்தகுழலோசை தையென்னும் ஓசைப்பட ஒலிப்ப அதுகேட்டுக் குறைந்த நெஞ்சத்தை ÷ யுடையேம் பக்கத்தேநின்று

என வருபவையும் வலியுறுத்தும். (எ) "தாவறந் துறத்தல்" கலி. கஉக: க-ஆம் அடிக்குறிப்புப் பார்க்க.

க. "தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்தக், காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்த,........மாலைவந் திறுத்தென" சிலப். சு: கரு - உ௦.

உ. (அ) "கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது; வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட, கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற் கூம்பு வாரை, நயப்பாரு நட்பாரு மில்" நாலடி. உகரு. (ஆ) "உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங், கூம்பலு மில்ல தறிவு" குறள். சஉரு. (இ) "நலமிக வுயர்ந்தோர் தம்மை நண்புறத் தழுவிக்கொள்க, நிலவிய கயத்துப் பூவை நிகர்தரா துயர்ந்த கோட்டி, னலரென வவர்பானிற்க வாக்கமிக் கடுத்த காலே, மலர்வதும் வறங்கூர் காலைக் கூம்பலு மொழிக ன்மந்தா" விநாயக. அரசியற்கை. ௩க.

ரு. ஞாயிறு முதலியன சொல்லுந போலவும் கேட்குந போலவும் சொல்லி ளமையப் பெறுமென்புழி, கேட்குநபோலப் பொழுதொடு

(பிரதிபேதம்) * புணர்ந்தவர்க்களிகை, † நிறையிலையுடைய, ‡ மகிழ்ந்து காதலரை. || இதநால் வருந்தின. × மகிழ்ந்தவரை, = கிளவியார்ப் பாராட்டும், ÷ உடையேமுடைய பக்கத்தே.

உயிரைக்கொள்ளாதே விளைநித்துப் பாராட்டுகின்ற நீ தங்கணவர் பிரிந்த காலத்துச் (க) செவ்வழியென்னும் பண்ணையுடைய யாழினது நரம்போசை

போலவருந்திக்கூறும் மொழியினையுடையமகளிர் அக்கணவர்(?)களருந்தின எம்போற் (உ) கனவிற் புணர்ச்சியின்றிப் பாராட்டப்படும் கனவிற்புணர்ச்சியிற் பெற்ற புதியநலத்தைக் கடியமாட்டாய். எ - று.

கஎ மாலைநீ, †தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளாரப்ப,
‡பகைமிக்க நெஞ்சத்தேம் ||புன்மைபா ராட்டுவாய்
தகைமிக்க ÷புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலுங் கடிகல்லாய்

எ - து: அழகு மிக்க தாழ்ந்த சினைகளில் தமக்கிருப்பிடத்தே(ரு)பேடுஞ் சேவலுமாகச் சேர்ந்து பறவைகள் ஆரவாரியாநிற்க, மற்றுள்ள பகைகளாலும் வருத்தமிக்க நெஞ்சத்தினை ×யுடையேம் புன்மையயாங்கள் இறந்துபடாதபடி பண்ணி விளைத்துப் பாராட்டுகின்றநீ அழகு மிக்ககூட்டத்தையுடைய + மகளிரது தாழ்ந்த கொடியினையுடைய நறிய முல்லையினுடைய முகையின் முகத்தை வண்டுகள் திறந்தாற்போல ஆடவரால் திறக்கப்படும் முறுவலையுங் கடியமாட்டாய். எ - று.

※※எனவாங்கு அசை.

உஉ ††மாலையு மலரு நோனா தெம்வயி
னெஞ்சமு மெஞ்சமற் றில்ல வெஞ்சி
‡‡ யுள்ளா தமைந்தோ ருள்ளு
முள்ளி லுள்ள முள்ளு ளுவந்தே

கூறியதற்கு, "மாலைநீ, தையெனக் கோவலர்.........பக்கம்பா ராட்டு வாய்" என்பதுமேற்கோள்; தொல். செய். சூ. கக௦. 'ஞாயிறு' இளம்.

க. "நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே, கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றே" கலி. ருக: ருகு - ருக.

உ. (அ) "என் கிளவிபோற் செவ்வழி யாழிசை" கலி. கசரு: ருஅ. (ஆ) "செவ்வழி நல்யா, ழிசையோர்த் தன்ன வின்றீங் கிளவி, யனைங்குா

லரிவையை" அகம். உகஉ: ௬ - அ.

௩.. பேடென்பது பெண்பாலையென்னும் பொருளில் இவருரைகளிலும் கம்பர் வில்லிபுத்தூராழ்வார் குமரகுருப சுவாமிகள் சீகாழி அருணசலக் கவிராயர் முதலியவர் செய்யுட்களிலும் வந்துள்ளது.

(பிரதிபேதம்) * வருந்தின் எம்போற். † தலைமிகத்தாழிசை, ‡ புரிமிக்க, || பண்பைபாராட்டுவாய், ÷ புணர்ச்சியாற்றும், புணர்ச்சியாய்தாழ், × உடையோருடைய பண்மையை, + மகளிருடைய தாழ்ந்த, ** ஆங்க. மாலை, ++ பசியுமலரு, ‡‡ உள்ளஞ்சலைமந்தோருள்ள முள்ளினுள்ள.

எ - து: நம்மைப் பிரிந்து உள்ளில்லாத உள்ளத்தாலே நம்மை நினையாமல் அமைந்திருந்தோரை உள்ளே உள்ளே உவந்து உள்ளும் நம்முடைய நெஞ்சமும் இம் மாலையையும் ஊரார் கூறும் அலரையும் பொறுதே நம்மை விட்டுப் போகாநின்றது; இனி என்செய்வேமென வருந்திக் கூறினள். எ-று.

இதனல், தலைவிக்கு இழிவு பிறந்தது.

இது "நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி" (க)என்ற இலக்கணஞ் சிதைய இடையிடை சொற்சீரடி வருதலின் ஒத்தாழிசையாகாது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய(உ)கொச்சகமாயிற்று.

இது முதலிய மூன்றுபாட்டும் (௩)மாலைக்காலத்தைக்கூறினமையின் "காருமாலையுமுல்லை" என்னும் (௪) பொதுவிதிபற்றி முல்லையுட் கோத்தல்வேண்டுமெனின், அது பெரும்பான்மைபற்றிக்கூறியது; மாலை எற்பாட்டின் பின் நிகழுங் காலமாதலின் அதற்கியைபுபட்டு நெய்தற்கும் உரித்தாயிற்று. அது

க. தொல். செய். சூ. ௧௩௫.

௨. (அ) இச்செய்யுளை 'தாழிசைதோறும் தனிச்சொற்பெற்றுவந்த நேரிசையொத்தாழிசைக்கலிப்பா' என்றுகூறி, "வெல்புகழ்... ....மருண் மாலை" இது தரவு "மாலைநீ, தூவறத்........காரிகை கடிகல்லாய்" "மாலைநீ, தையெனக்........புதுநலங் கடிகல்லாய்" "மாலைநீ, தகைமிக்க........முறவலுங்கடிகல்லாய்" இவை மூன்றுந்தாழிசை. ஆங்க-தனிச்சொல் "மாலையு...........ஞவந்தே" இது சுரிதகம் என்று விளக்கினர் இளம்; (தொல். செய். சூ. கருக. 'பேராசிரியல்') பேராசிரியர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும்இது உடம்பாடன்றென்பது. (ஆ) பேராசிரியர் இச்செய்யுள் தரவுந் தாழிசையும் போக்கும் முறையானே வந்ததாயினும் 'இடைநிலைக்கிளவி தாழிசைப்பின்னர், நடைநவின்றொழுகு மாங்கென் கிளவி' (தொல். செய். சூ. கருரு.) என்னும் இலக்கணஞ் சிதைய[ாத் தரவிறுதியினுந்] தாழிசை[யிறுதி]கடோறுஞ் சொற்சீர்பல வருதலான் ஒத்தாழிசையெனப்படாது அதன்வகைத்தாய் எண்ணிடைப்பட்டுச் சின்னங் குன்றியதூஉ(கொச்சக)மாயிற் றென்பதாலும் நச்சினார்க்கினியர் அதனையே தழுவி, "இது 'நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி' என்னும் இலக்கணஞ் சிதைய இடையிடை சொற்சீரடி பலவருதலின் ஒத்தாழிசையாகாது எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகமாயிற்று" என்ற எழுதுவதாலும்விளக்கும். தொல். செய். சூ. கருகு.

௩. "கலியுள், மாலைக்காலம் நெய்தலின்கண் வந்தது"; தொல். அகத். சூ. அ. நச்.

௪. தொல். அகத். சூ. க.

(பிரதிபேதம்) * மாலையுமிவ்வூரார் கூறும்.

"திணை மயக்குறுதலும்" என்னும் (க) சூத்திரத்து "நிலனொருங்குமயங்குத *லின்று" என்றதனாற் காலமொருங்கு மயங்குமென்றது கொண்டு சான்றோர் பலருஞ் செய்யுள்செய்தார். "கானன் மாலைக் கழிப்பூக் †கூம்ப" என்னும் (உ)அகப்பாட்டும் நெய்தற்கண் மாலைவந்தது. "தொல்லூழிதடுமாறி" என்னும் (ங) நெய்தற்கலியுட் கங்குலும் மாலையும் முன்பனியும் வந்தவாறுகாண்க. இந்நிலத்து மாலைவந்த பாட்டுக்கள் ‡பலவுமுள. பிற சான்றோர்செய்யுட்களுட் காலம் மயங்குமாறு பலவுங் கண்டுகொள்க. (க)

(கக௯.) அகன்ஞாலம் விளக்குந்தன் (ச)பல்கதிர் வாயாகப்
பகனுங்கி யதுபோலப் (ரு)படுசுடர் கல்சேர
விகன்மிகு நேமியா னிறம்போல ‖இருளிவர
(சு)நிலவுக்காண் பதுபோல வணி×மதி யேர்தரக்
கண்(எ)பாயல் பெற்றபோற் (அ)கணைக்÷கால மலர்கூம்பத்
(கூ)தம்+புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச|

க. தொல். அகத். சூ. கஉ.

உ. அகம். ௪௦.

ங. கலி. கஉக.

ச. "பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய" குறிஞ்சி. உகக.

ரு. "ஒண்சுடர் கல்சேர" கலி. கஉக: க.

சு. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி முன்னத்தான் உவமை கூறுதற்கு இவ்வடியை மேற்கோள்காட்டி, இது காணப் பிறிதாகிய பொருளோடு உவமை கூறாமையிற் பிறிதொடுபடாதாயிற் றென்றும், மதியினதெழுச்சியை நோக்குதலிற் பிறப்பொடுநோக்கிற்றென்றும் கூறுவர், இளம்; தொல் உவமை. சூ. உங. 'பிறிதொடு'

எ. "பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப" கலி. கங௪: அ.

௮. கணைக்காலென்பது, நீர்ப்பூக்களுள் நற். ௨௩௦, ஐங். ௬௮; ஆம்பலுக்கும், நற். ௨௬௨, குவளைக்கும், நற். ௧௩௮, குறுந். ௯. நெய்தலுக்கும் வருத லோடு திணைமொழி. ௩௨ - இல் மருதுக்கும் அடையாக வந்துள்ளது.

௯. (அ) "சான்றோர், புகழு முன்னர் நாணுப" குறுந். ௨௫௨. (ஆ) "கோ வெனப் பெயரிய காலை யாங்கது, தன்பெயராகலி னாணி" (இ) "பரந் தோ ரெல்லாம் புகழத் தலைபணிந், திறைஞ்சியோனே" புறம். ௧௫௨: ௨௧-௨௨, ௨௮௫: ௧௩-௧௪. (ஈ) "பிறர் தன்னைப் பேணுங்கா னாணலும் ....ஊராண்மை யென்னுஞ் செருக்கு" திரிகடுகம். ௬.

(பிரதிபேதம்) * இலையென்றதனால், † கூம்பும், கழ்பும். ‡ பலவுமுளவென்றுணர்க. பிறசான், ‖ இருள்வர, × மதிபோதரக், + காலையலர், காலலர், ╪ புகழக்கேட்டார்.

முறுவல்*கொள் பவைபோல முகையவிழ்பு புதனந்தச்
சிறு (௧)வெதிர்ங் குழல்போலச் சுரும்பிமிர்ந் (௨)திம்மெனப்
(௩)பறவைதம் பார்ப்புள்ளக் (௪)கறவைதம் பதிவயிற்
கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதி சேர மாலை வாள்கொள
(௫)வந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
செந்தீச் செவ்வழ †றொடங்க வந்ததை
(௬)வாலிழை மகளி ‡ருயிர்பொதி யவிழ்க்குங்

---

௧. "ஆரும் வெதிரும்............மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்" (தொல். புள்ளிமயங். சூ. ௬௮.) என்பதனால். வெதிர்ங் குழலென வந்தது.

௨. "இம்மென" கலி. ௩௬: ௫; ௧௨௩: ௩.

௩. பார்ப்பென்பது பறவையின் இளமைப் பெயராய் வருதற்கு, "பறவை தம்பார்ப்புள்ள" என்பது மேற்கோள்; தொல். மரபி. சூ. ௪. 'பார்ப்பும்' இளம். இச்சொல் பார்வலெனவும் வழங்கும்.

௪. (அ) "ஆன் கணங், கன்றுபயிர் குரல மன்று நிறைபுகுதர" குறிஞ்சி. உ௧௭ - உ௧௮. (ஆ) "மதவுநடை நல்லான், வீங்குமாண் செருத்த தீம்பால் பிலிற்றக், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு, மாலையும்" அகம். ௧௪: ௯ - ௧௨. (இ) "சேதா, முலைபொழி தீம்பாலெழுதுக ளவிப்பக், கன்றுநினைகுரலமன்றுவழிப்படர" மணி. ௫: ௧௩௦ - ௧௩௨. (ஈ) "கறவை கன்றுவயிற்படர" குறுந். ௧௦௮.

௫. (அ) "அந்தியந்தண ரயர" குறிஞ்சி. உஉ௫. (ஆ) "அந்தி யந்தணர் செந்தீப்பேண்" மணி. ௫: ௧௩௩. (இ) "சுருதி யந்தணர் யாவருந் தங்கடன் கழிப்பச், சுருதியென்னும் வெஞ் சாபமே லம்புகை தொடுத் துப், பருதி தன்பெரும் பகைவர்மேல் விடுத்தலிற் பரந்த, குருதி யாமென நிவந்தெழச் சிவந்தது குடபால்" வில்லி. கிருட்டினன்றூது. ௮௬. (ஈ) "(மறையவன்) வாம்பரித் தடந்தேர்ப் பரிதிவா னவன்போய் மறிதிரைக் குடகடல் குளிப்ப, வாம்பல்வா யவிழு மாலையங் காலத் தந்திவந் தினைத்தொழின் முடித்துத், தீம்புனற் றுறைநின் றகன்று" பிரமோத்தர. உமாமகேசுவரபூசை. ௭.

௬. "மாலையோவல்லை" என்னுங் குறளின் விசேடவுரையில் "வாவிழை மகளிருயிர்பொதி யவிழ்க்குங், காலை" என்றாற்போல ஈண்டுப் பொதுமையாற் கூறப்பட்டதென்பர் பரி; குறள். ௧௨௨௪.

(பிரதிபேதம்) * சொல்பவர்போல, † துடங்க, ‡ உயிர்ப்பொறி.

ஐந்தாவது நெய்தல் ௨. ௭௫௩

கடு காலை யாவ தறியார்

(௧)மாலை (௨)யென்மனார் மயங்கி யோரே.

இது பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்றாத தலைவி தோழிக்கு உரைத்தது.

---

௧. மன் அசைநிலைக்கண் வந்ததற்கு, "மாலை யென்மனார் மயங்கியோரே" என்பது மேற்கோள்; நன். இடை. சூ. ௧௫. மயிலை. இவ்வடியே குறுந். ௨௩௪ - ஆம் செய்யுளிலும் மூன்றாம் அடியாக வந்துள்ளது.

௨. (அ) என்மனா ரென்பது, இடைச்சொல் தான்சாரப்படுஞ் சொல்லிற்கு வேறாய் வருதலே யன்றி அதற்கு உறுப்பாயும் வருமென்பதற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. ௧. சே. (ஆ) "என்மனா ரென்பது செய்யுண் முடிபெய்தி நின்றதோ ராரீற்று எதிர்கால முற்றுச்சொல்,... ....என்ப என்னு முற்றுச் சொல்லினது பகரங் குறைத்து மன்னும் ஆருமென இரண்டிடைச்சொற்பெய்து விரித்தாரென்று உரையாசிரியர் கூறினாராலெனின்;-என்மனாரென்பது இடர்ப்பட்டுழிச் சிறபான்மை வாராது, நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும், இசைநிறையென்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசைநிறையென்றல்மேற்கோண்மலைவாதலானும் அவர்க்கு அதுகருத்தன்றென்க. மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணரவைத்தல் அவர்க்கு இயல்பாகலாற் செய்யுண்முடிபென்பது கூறாராயினார்" (தொல். கிளவி. சூ. ௧.) என்றும் (இ) இதனை வினைத்திரிசொல் லென்பாருமுள ரென்றும். (தொல். எச்ச. சூ. ௧.) கூறுவர் சேனாவரையர்; (ஈ) "என்பவென்னு முற்றுச்சொல் 'குறைக்கும்வழிக் குறைத்தலும்' என்பதனாற் பகரங்குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்'. என்பதனால் 'மன்' 'ஆர்' என்பன இரண்டிடைச்சொற் பெய்து விரித்து, என்மனா ரென்றாயிற்று" என்று

(இறை. சூ. க.) இறையனா ரகப்பொரு ளுரைகாரரும் (தொல். களவி. சூ. க) கல்லாடனாரும் (உ) என்பவென்னுமொழி, ஈற்றுப் பகரங்கெட்டு மன் ஆரென்னும் இடைச்சொற்களைப்பெற்று என்மனா ரென முடிந்ததென்று (யா - வி. சூ. உசு.) யா - வி. உரைகாரரும் உரையாசிரியரெனப் பேர்பெற்ற இளம்பூரணர் கொள்கையையே பின்பற்றுவர்; (௬) "என்மனாரென்பது செய்யுண்முடி பாயதோ ரார்ற்று முற்றுச்சொல்; மன் எதிர்காலவிடைநிலை. அது 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரைய ருரையானுமறிக" என்று கூறுவர் சிவஞானமுனிவர்; சிவஞான போத மாபாடியம். சூ. க. உரை.

95

இதன் பொருள்.

அகன்ற (க)உலகத்தை எவ்வுயிர்க்குந் தோற்றுவிக்குந் தன்னுடைய பல கிரணங்களைத் தனக்கு வாயாகக்கொண்டு (உ)சான்ற பகற்காலத்தை மீண்டும் அவ்வாயாலே விழுங்கினாற்போல அவற்றைச் சுருக்கிக்கொண்டு படுகின்ற சுடர் அத்தகிரியைச் சேர்கையினாலே போரின்கண் மிகுகின்றசக்கரப்படையை யுடைய மாயோனிறம்போல இயல்பாகவுள்ள இருள் பரந்துவாராநிற்க, அதனைப் பொறாதே தன் நிலவாலே ஓட்டிப் புறங்காண்பாரைப்போலே அழகினையுடைய மதி தோன்ற, கணவரைக் கூடித் துயிலைப்பெற்ற கண்கள் போலே திரண்ட தண்டுகளையுடையவாகிய தாமரை (௩) முதலியன குவிய, தம்புகழ்களைக் கேட்ட சான்றோரைப்போலே தலையைச் சாய்த்து மரங்கள்

துயில, சிறுதூறுகள் பிரிந்த மகளிரை (ச)இகழ்ந்து சிரிப்பவைபோலே முகைகள் அவிழ்ந்து விளங்க, சிறிய மூங்கிலாகிய குழல்போலச் சுரும்புகள் ஆர்ப்பரவஞ்செய்து பாட, புட்கள் தம் பார்ப்புக்களை நினைத்துக் குடம்பையைச் சேர, பசுக்கள் தாந் தங்கும் ஊர்களிடத்திற் கன்றின்மேல் அமர்ந்த விருப்பத்தோடே மன்றுக ணிறையப் புகுதலைச்செய்ய, மாக்கள் தாந் தங்குமிடத்தே சென்று தங்க, அந்தணர் தாஞ் செய்யுந் தொழில்களைச் செய்து அந்திக் காலத்தை எதிர்கொள்ள, (ரு)மகளிர் செந்தீயால் உண்டான விளக்கை ஏற்றத் தொடங்க, மாலை விளக்கங்கொள்ள வந்ததனை அறிவுகெட்டோர் வாலிய இழையினையுடைய மகளிருயிரை அதனைப் பொதிந்துநின்ற உடலினின்றும்

க. "இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தாலன்றிக், கருதுநிலைப்பல்பொருளுங் காண்டலரிதாம்" திருக்குற்றலப். நூற்பயன். க.

உ. (அ) "வெயில்கான் றிருள்சீத் தெழுவெங்கதிர்ச் செல்வன் மைந்தன்" கூர்ம. இராவணவதை. கஎ. (ஆ) "பாயிருள் பருகுப் பகலைக்கான் றெழுங், காயெரிக் கதிரவன்" திருவானைக்கா. தீர்த்தவிசேடப். சுகூ.

ங. முதலியனவென்றது, குவளை நெய்தல்களை; இவை காலை மலர்ந்து மாலைக் குவிவனவென்றே பண்டைநூல்கள் கூறுகின்றன; இதற்கு மாறாக, குவளை மாலை மலர்ந்து காலைக் குவியுமென்று பிற்காலத்து நூல்கள் கூறுகின்றன. இவற்றின் உண்மை நோக்கி அறியத்தக்கது.

ச. "முல்லைத், தொகுமுகை யிலங்கெயி றாக, நகுமே தோழி" குறுந். கஉசு.

ரு. (அ) "வளமனைப், பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி, யந்தி யந்தண ரயர" குறிஞ்சி. உஉங - உஉரு. (ஆ) "உள்ளினே னல்லனோ யானே யுள்ளிய, வினைமுடித் தன்ன வினியோள், மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே" நற். ங: எ - கூ. (இ) "எல்லை மகளிர் மணிவிளக் கெடுப்ப, மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென" சிலப். ச: கக - உ௦.

போக்கும் காலத்தினது இயல்பிராவதறியாராய் மாலைக்காலமென்று அதுவும் ஒருகாலமாகக் கூறுநிற்பரென ஆற்றுளாய்த் தோழிக்குக் கூறினாள். எ - று.

கல்சேர்கையினாலே * இருள் இவராநிற்க † அதுபொழுது மதிதோன்ற என ஒருவினையாகமுடிக்க. "பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் ‡ பருதி" (௬) என்றார் பிறரும்.

|| மதியேர்தா என்பது முதலிய செயவெனெச்சங்களெல்லாம் நிகழ்கால முணர்த்திநின்று ÷ மாலைவாள்கொள[ா] என்னுஞ்செய[யா]வெனெச்சத்தோடு முடிந்தன. அது பின் வந்ததை என்னுந் தொழிற்பெயர்த்திரிசொல்லோடு முடிந்தது.

மயங்கியோர் என்றது தோழியைக்கருதி. × "திணை மயங்குறதலும்"(௨) என்றதனாற் கருப்பொருண்மயங்குதலும் அமைத்தாம்.

இனி மாலை ╪ வாழ்கொளவென்று பாடமாயின் அப்பாடத்திற்கு, மாலை தான் வாழ்தல்கொள்ள வந்ததனை என்க.

** அளறுடங்க என்பதும் பாடம்.

இதனால், தலைவிக்கு இழிவுபிறந்தது.

இஃது அடக்கியலின்றி அடிநிமிர்ந்தோடிய கொச்சகவொருபோகின் பகுதியாய்த் தனிச்சொல்லும் அடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடி நிமிர்ந்தோடிய †† அகநிலைக்கொச்சகம். (௨)

(௧௨௦.) அருமைர்ந்த காட்சியா னறனேக்கா னயஞ்செய்யான்

வெருவுற வுய்த்தவ னெஞ்சம்போற் பைபய

விருநிர்பு புலம்பூரக் கலைசுடர் கல்சேர

வுரவுத்தகை மழுங்கித்தன் னிடுப்படையா லொருவனை

ரு யிரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறிக்
கரப்பவ னெஞ்சம்போன் மரமெல்லா மிலைகூம்பத்
தோற்றஞ்சால் செக்கருட் பிறைநுதி யெயிறாக
நாற்றிசையு நடுக்குறாஉ மடங்கற் காலைக்
கூற்றுநக் கதுபோலு முட்குவரு கடிமாலை;

க. பெரும்பாண். உ.

உ. தொல். அகத். சூ. கஉ.

(பிரதிபேதம்) * இருள்வாராகிற்க, † அது பொருமதி, ‡ பரிசு. ‖ மதிபோதர, ÷ மாலை வளர்கொளா வென்னுஞ் செய்யாவென னெச்சத். × நிலைமயக்குறுதலும் என்பதனுற் றரும்பொருண், ┼ வாழ்கொளவென்ற பாடத்திற்கு மாலைதான் வாழ்தல், ** அழுமடங்க. †† மலைக்லைக்.

கO மாலைநீ,உள்ளங்கொண்டகன்றவர் துணைதாராப்பொழுதின்கண்
வெள்ளமா னிறநோக்கிக் கணைதொடுக்குங் கொடியான்போ
லல்லற்பட் டிருந்தாரை யயர்ப்பிய வந்தாயோ

கரு மாலைநீ, ஈரமில் காதல ரிகந்தருளா விடனோக்கிப்
பேர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ
லாரஞ ருற்றாரை யணங்கிய வந்தாயோ ;

கசு மாலைநீ, கந்தாதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண்

வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போற்
காய்ந்தநோ யுழப்பாளைக் கலக்கிய வந்தாயோ;
எனவாங்கு;
இடனின் றலேத்தரு மின்னுசெய் மாலை
துனிகொ டியர்தீரக் காதலர் துனை தர
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
யொல்லென நீக்கி யொருவாது காத்தோம்பு
நல்லிறை தோன்றக் கெட்டாங்
கில்லா கின்று விருளகத் தொளித்தே.

இது பிரிவிடையாற்றுத தலைவி, மாலைப்பொழுதுகண்டு கழிய ஆற்றளாயின இடத்துத் தலைவன்வரவும் அவளது அகமலர்ச்சியுங் கண்டார் கூறியது.

இதன் பொருள்.

அருமைர்ந்த காட்சியா னறனோக்கா *னயஞ்செய்யான்
வெருவுற வுய்த்தவ னெஞ்சம்போற் பையபய
விருப்பு புலம்பூரக் (க)கனைசுடர் கல்சேர
வுரவுத்தகை (உ)மழுங்கித்தன் னிடும்பையா லொருவனை
யிரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறிக்
கரப்பவ னெஞ்சம்போன் பரமெல்லா மிலேகூம்பத்

க. (அ) "கனைசுடர் கல்சேர்பு மறைய" அகம். சஎ: க. (ஆ) "படுசுடர் கல்சேர" (இ) "ஒண்சுடர் கல்சேர" (ஈ) "கல்சேர்பு ஞாயிறு கதிர் வாங்கி மறைதலின்" கலி. ககக: உ, கஉக: க, கந௪: ச.

உ. மழுங்க லென்பது 'மழுகல்' எனவும் 'மாழ்கல்' எனவும் வழங்கும். (பிரதிபேதம்) * அறஞ்செய்யான், பயஞ்செய்யான்.

தோற்றஞ்சால் செக்கருட் (க)பிறைநுதி யெயிறாக
நாற்றிசையு நடுக்குறூஉ மடங்கற் காலைக்
கூற்றுநக் கதுபோலு முட்குவரு கடுமாலை

எ - து: (உ)அருள் ஒருகாலத்தும் இல்லையான அறிவாலே (ரு) அறஞ்செய்தல் இருமைக்கும் பயன்றருமென்று கருதானாய், பண்புஞ்செய்யானாய், எல்லாரும்வெருவுதலுறும்படி தனக்குள்ளநாளைப் பயன்படாமற்செலுத்தினவனுடைய நெஞ்சின் மருட்சிபோலே, மெத்தெனமெத்தென இருளாலே உலகம் நிறைந்து கணவரைப் பிரிந்தோர்க்குத் தனிமைமேலிடும்படி செறிந்த சுடரையுடைய ஞாயிறு *அத்தகிரியைச்சேர, மிடியாலே இரத்தற்கஞ்சினவன் வலியின்றகைமை கெட்டுச்சென்று ஒருவனை வேண்டுகின்றவனுடையநெஞ்சு போலே, மயமெல்லாம் முற்றப் பொலிவழிந்து, பின்பு அம்மயமெல்லாம் இரப்பாரைக்கண்டுஇருந்தவிடத்தினின்றும் எழுந்திருந்துபோய் மறைகின்றவனெஞ்சு கண்ணோடாதுகுவியுமாறுபோல, இலைகளெல்லாங் குவிய வருகின்ற மாலாய்! நீதான் நாலுதிக்குஞ் சேர நடுக்கமுறும் ஊழிமுடிவாகிய காலத்திலே கூற்றுவன் விளக்கம் அமைந்த செக்கர்வானிடத்துத் தோன்றின நுதியையுடைய பிறைதனக்கு எயிறாகக்கொண்டு(ச)பல்லுயிரையுஞ் செகுக்குங்காலத்துக்கு நக்காற்போலும் உட்குதலையுடைய கடியமாலையாயிருந்தாய். எ - று.

க. (அ) "ஒன்றேயெயிற்ற தொருபெரும்பேயுலகம் விழுங்க வங்காந்து, நின்றாற்போல நிழலுமிழ்ந்து நெடுவெண்டிங்களெயிறிலங்க, வின்றே

குருதி வானவா யங்காங் தென்னை விழுப்குவா, னன்றே வந்து திம்மாலை யஙிியே ஞவி யாதாய் கொல்" சீவக. ககஅ௦. (ஆ) "விரி மலர்த் தென்றலாம் வீசுபாசமு, மெரிந்தச செக்கரு மிருளுநங் காட்டலா, வரியவட் கனறரு மந்தி மாலையாய, கருகிறச் செம் மயிர்க் காலன் ருேன்றினன்" கம்ப. மிதிலைக்காட்சிப். கூ௨. (இ) "கூற்றங் கரந்து கொடியபுன் மாலை வடிவுகொண்டு, தோற்றுஞ் சிறு பிறை யேயெயி றாகத் துறையிருந்து, தேற்றந் தரும்பெடை யன்ன முஞ் சேவலுஞ் சேக்கைபுகு, மாற்றந் திறமறி யேனவ ரோசென் றகன் றனவே" அம்பிகாபதிகோவை. ககச.

௨. (அ) "மெல்லெ, னருளிற் பிறக்கு மறநெறி" நான்மணி. ஏ. (ஆ) "அறனு, மருளுடையான் கண்ணதே யாகும்" சிறுபஞ்ச. ௩.

௩. (அ) "தருமமென் றொருபொரு ளுளது பாவிகா, விருமையி னின்பமு மெளிதி னுக்குமால்" கந்த......... (ஆ) "அறமே, யிருமை யுந்துணை யாகுவ தன்றிமற் றில்லை"

௪. (அ) "மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையு, நின்னொடு தூக்கிய" புறம். கக: ௩ - ௪. (ஆ) எருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த் தொகை, யொருபக லெல்லையி னுண்ணு மென்ப, தரிய வரச

(பிரதிபேதம்) * அத்தமலிரியை.

எ௩அ கவித்தொர்கை க௨௦.

முன்னர் நின்றமாலை உட்குதலையுடைய மாலையெனப் பின்னர் வந்த * மாலை விசேடித்துநின்றது.

கO மாலைநீ, உள்ளங்கொண்டகன்றவர் துணைதாராப்பொழுதின்கண்
வெள்ளமா (க)னிறநோக்கிக் கணைதொடுக்குங் கொடியான்போ
லல்லற்பட் டிருந்தாரை யயர்ப்பிய வந்தாயோ

எ - து: இங்ஙனங் கடிய நீ என்னெஞ்சத்தைத் தம்மிடத்தே கொண்டு நீங்கினவர் எனக்குத் துணையாந்தன்மையைத் தாராத காலத்திலே வெள்ளத்திலே அகப்பட்டுக் கரையேற மாட்டாத மானினது மருமத்தைப் பார்த்து அம்பைத் தொடுக்குங் கொடியவனைப்போல அல்லலிலே அழுந்தியிருந்த வென்னைக் கையறவெய்துவிக்க வந்தாயோ ? எ - று.

மாலை நீ என வருகின்றவற்றையும் தாவொடு கூட்டி முற் கூறியவாறே பொருளுரைக்க.

கரு. மாலைநீ, ஈரமில் காதல ரிகந்தருளா (உ)விடனோக்கிப்
(ங)போர்(ச)தோலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ
லாரஞ ருற்றாரை யணங்கிய வந்தாயோ

எ - து: இங்ஙனங் கடிய நீ அருளில்லாத காதலர் விட்டுநீங்கி அருளா திருந்த காலத்தைப் பார்த்துப் (ரு) போரிலே தோற்றிருந்தவர்களை அவர்கள் பட்ட தோல்வியை இகழ்ந்து சிரிப்பாரைப்போலே பொறுத்தற்கரிய வருத்த முற்ற என்னை வருத்துவிக்கவந்தாயோ ? எ - று.

ரமர்க்களத் தறிய, நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்" சிலப்: உசு: உகரு - உகஅ.

க. (அ) "சிலைமாண் கடுவிசை கலைநிறத் தழுத்தி" (ஆ) "வரிமர ஞேன் ஞாண் வன்சிலைக் கொளீஇ, யருநிறத் தழுத்திய வம்பினர் பலருட, னண்ணல் யானை வெண்கோடு கொண்டு" (இ) "வெள்வே, லாத னெழினி யருநிறத் தழுத்திய, பெருங்களிற் றெவ்வம் போல" என்பவையும் இந்நூற்பக்கம் ருகசு: க - ஆம் குறிப்பும் பார்க்க.

உ. இடன் - காலம். கலி. கஉக: உரு.

ங. "போர்.........வந்தாயோ" என்பது செய்கை யல்லாத மாலைப்

பொழுதினைச் செய்யா மரபிற் றொழிற்படுத்தடக்கி உவமவாயிற்படுத்த தென்பர். நச; தொல். பொருளி. சூ. உ.

ச. "ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும், புதுவ தன்று" புறம். எசு: க - உ.

கூ. (அ) " தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே " புறம். உஅச: அ;

(ஆ) "வானக மண்ணு மெல்லா நகுநெடு வயிரத் தோளா, ரனகும் (பிரதிபேதம்) * மாலையை விசேடித்தது.

ஐந்தாவது நெய்தல் ௬. எஙகூ

போர்தொலைந்திருந்தார், தொழிலின்றொழில் தொழிலுடையதன்மேல் நின்றது.

கசு (க) மாலைநீ, காதல் சான்றவர் கைதாராப் பொழுதின்கண்

(உ) வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்

காய்ந்தநோ யுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ [போற்

எ - து: இங்ஙனம் *கடிய நீ எனக்குப் பற்றுக்கோடாதலை அமைந்தவர் என் வருத்தத்தைப் போக்குதலைச்செய்யாத காலத்தே முன்பேவெந்ததொரு புண்ணிலே பின்பு ஒருவேலைக்கொண்டு சொருகுவானைப்போலே மெய் வெதும்புதற்குக் காரணமான காமநோயிலே அழுந்துகின்ற என்னையுள்ளி உள்ள அறிவையுங் கலங்குவிக்க வந்தாயோ ? எ - று.

† என வாங்கு

எ - து: என்று அவள் கூறும்படியாக. எ - று.

ஆங்கு, அசை.

இடனின் றலைத்தரு மின்னுசெய் மாலை
துனிகொ டுயர்தீரக் காதலர் துனைதர
(ங) மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
யொல்லென நீக்கி யொருவாது ‡ காத்தோம்பு
நல்லிறை தோன்றக் கெட்டாங்
கில்லா கின்று விருளகத் தொளித்தே

பகைவ வெல்லா கருவென் றதற்கு நாணன்" கம்ப. கும்ப. கக. (இ) "முன்னை வைகலின் முரிந்தன னென்றே, பன்னு மோர்வகை பரந்ததுமன்றிப், பின்னு மிப்பகல் பிழைத்தன னென்று, லென்னை யாவர்களு மெள்ளுவர் மாதோ" கந்த. மூன்றுநாட்பானு. கசஅ.

க. பொழுதொடு கேட்குநபோலக் கூறியதற்கு, "(மாலைநீ ....) காய்ந்த நோயுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ [..............மாலை]" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. உ00. நச்.

உ. (அ) "மாலை, வெந்துயர்க் கண்ணின் வேலிட்டதுபோல், வந்திறத் தன்றால் வலியெனக் கில்லென" (பெருங். (க) நங: கச - கஉ.) என்பதும் (ஆ) "வெந்தபுண் வேலெறிந் தற்றால்" (கலி. அங: ந0) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. "நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி, னல்லது மலைந்திருந் தற நெறி நிறக்கல்லா, மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர, வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை" கலி. கஉக: ச-எ.

(பிரதிபேதம்) * கூடியவீ, † எனவாங்கென் றநில ஆங்கவை. ‡ காத்தாற்று நல்லிறை.

*எ-து: ஆற்றுதற்கோரிடமின்றாக அலைத்தலைச்செய்யும் பொல்லாங்கே செய்யும் மாலைக்காலத்தாலே வெறுப்புக்கொண்ட வருத்தந்தீரும்படி காதலர் விரைந்து வருகையினாலே, அம்மாலை இராக்காலத்திடத்தே சென்றொளித்து. நாற்படையாலே இளைத்த †அரசன் இளைத்த பருவத்தே அவனுக்கு மேலாய் வந்த ‡கடியபகையானது அந்தப் பகைமையை விரையப்போக்கி நீங்காமல் நின்று காத்து நடத்தும் நல்ல இறைவன் வந்து தோன்றக் கெட்டுப்போனாற் போலே, இல்லையாகாநின்றதெனக் கண்டோர் கூறினார். எ - று.

|| பகை கெட்டாங்கு மாலை ஒளித்து இல்லாகின்றதென்க.

இதனால், கண்டோர்க்கு ஆக்கம்பற்றிய மருட்கை பிறந்தது.

(க)இஃது இடையிடை சொற்சீரடிவந்து எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகம். (ரு)

(கஉக.) ஒண்சுடர் கல்சேர வுலகூருந் தகையது

தெண்கட லழுவத்துத் திரைநீக்கா வெழுதரூஉந்
தண்கதிர் மதியத் தணிநிலா நிறைத்தரப்
புள்ளின மிரைமாந்திப் புகல்சேர வொலியான்று
வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழி
பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப;
எ தாங்கருங் காமத்தைத் தணந்துநீ புறமாறத்
தூங்குநீ ரிமிழ்திரை துணையாகி யொலிக்குமே
யுறையொடு வைகிய போதுபோ லொய்யென
நிறையானா திழிதரூஉ நீர்நீந்து கண்ணாட்கு;
கக வாராய்நீ புறமாற வருந்திய மேனிபாட்
டாரிருட் டுணையாகி யசைவளி யலைக்குமே

க. (அ) இச்செய்யுளுக்கு (தொல். செய். சூ. கருரு. நச்.) இக்குறிப்பே

சிறிது வேறுபடக் காணப்படுகின்றது; (ஆ) பேராசிரியரும் "அருடீர்த்த காட்சியா னறனோக்கா னயஞ்செய்யான்" எனவும்........... அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியது போலும் கொச்சகம் வருங் கால், ஒத்தாழிசையும் வண்ணகமும்போலத் தனிச்சொற்பெற்றும் பெறாதும் வரும்" என்று கூறி, இதனைத் தனிச்சொற் பெற்று வந்த தற்கு உதாரணங்காட்டினர்; தொல். செய். சூ. ௧௫௫.

(பிரதிபேதம்) * எ-து என்று அவன் கூறும்படியாகஆற்றுதற்கு, † அரசினிலைத்த, ‡ கடியபகையறிந்து, அப்பகை, கடியபகையான அந்தப்பகை, || பகைகெட்டாங் கென்க மாலை.

காம்புதண்டா துகிர்ந்தீ வூழுற்ற கோடல்வீ
யிதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு;
இன்றுணை நீநீப்ப விரவினுட் டுணையாகித்
தன்றுணைப் பிரிந்தயாஅந் தனிக்குரு குசவுமே
பொண்சுடர் ஞாயிற்று விளக்கந்தா னொளிசாம்பு
நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு;
எனவாங்கு;
எறிதிரை தந்திட விழிந்தமீ னின்றுறை
மறிதிரை வருந்தாமற் கொண்டாங்கு நெறிதாழ்ந்து
சாயினள் வருந்தியா ளிடும்பை
பாய்பரிக் கடுந்திண்டேர் களைமினோ விடனே.

இது தலைவன் ஒருவழித் தணந்தவிடத்துத் தலைவி ஆற்றாமைகூறி வரையக் கருதினையாயின் இஃதிடமெனச்சொல்லியது.

இதன் பொருள்.

ஒண்(௧)சுடர் கல்சேர வுலகூருந் தகையது
தெண்(௨)கட லழுவத்துத் திரை *நீக்கா வெழுதரூஉந்
தண்கதிர் மதியத் தணிநிலா †நிறைத்தரப்
புள்ளின மிரைமாந்திப் புகல்சேர வொலியான்று
(௩) வள்ளிதழ் கூம்பிய (௪)மணிமரு ளிருங்கழி
பள்ளி‡புக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப

எ - து: ஒள்ளிய ஞாயிறு அத்தகிரியைச் சேர்தலானும் உலகெல்லாந் தன் ஒளிபரக்குந் || தன்மையதாகித் தெளிந்த கடற்பரப்பிற் றிரையைநீக்கித்

௧. இந்நூற்பக்கம் ௭௬௯: ௧ - ஆம் குறிப்புப் பார்க்க.

௨. (அ) "கடலழுவ நீந்தி" சீவக. ௫௦௬. (ஆ) "கருங்கட லழுவத்து" பெருங். (௧) ௪௫: ௮௮.

௩. பிறிது பொருளோடு உவமை கூறாது பொருள்தோற்றிய விடத்தோடு நோக்கி முன்னமரபால் உவமை கூறியதற்கு, "வள்ளிதழ்...... ..தண் சேர்ப்ப" என்பது மேற்கோள்; தொல். உவமை, சூ. ௨௩. 'பிறிதொடு' இளம்.

௪. "இனமீ னிருங்கழி யோத முலாவ, மணிநீர் பரக்குந் துறைவ" திணைமொழி. ௪௪.

(பிரதிபேதம்) * நீக்காவெழுதருக். †நிறுத்தர, நிவத்தர. ‡ புக்கபோலும், ||தகைமையதாகி.

தோன்றுந் தண்ணியதாகிய கதிரையுடைய மதியத்ினது அழகையுடைய நிலாவிருத்தலைச்செய்கையினாலும் (க)பறவைகள்இரையை நிறையத்தின்று தாந் தங்கும்(உ)புகல்களைச் சேர்கையினாலே தன்னிடத்து ஆரவாரம் அடங்கப்பட்டு வளவிய இதழ்களுங் குவிந்த நீலமணியென்று மநளும் பெரியகழி துயில் கொண்ட தன்மையை யொக்குங் கடலையுடைய குளிர்ந்த சேர்ப்பனே! எ-று.

தகையதாகி எழுதரும் மதி. ஞாயிறு படுதலும் மதியந் தோன்றுதலும் பறவைகள் புகல்சேர்தற்குக் காரணமென்றுகொள்க.

அவை சேர்கையினாலே ஒலியவிந்து *போயவதைப் பள்ளிபுக்காற்போலே இருந்ததென்றது தன்குறிப்பை அதன்மேலேற்றிக்கூறியதோர்உவமவிசேடம். இஃது "ஓரீஇக்கூறலுமரீஇயபண்பே" என்னும்(ங)உவம†வியற்சூத்திரத்தில் அடக்கினும். இதழ் கூம்புதலும் துயிற்கு அடையாய் நின்றது.

ஞாயிறு கல்சேர்ந்ததனைத் தலைவன் இட்டுப்பிரிந்து தன் மனையிலே சேர்ந்திருத்தலிற் களவு புலப்படாத தன்மையாகவும் மதியத்தின் நிலாப் பரந்ததனை அவ்விடத்துக் காவலின் விளக்கமாகவும் பறவைகளின் ஆரவாரங் கெட்டதனை இவ்விரண்டினாலும் அலர்தூற்றுகின்ற மகளிரொலி அவிந்து இவ்வூர் துயில்கின்றாற்போலிருந்த தன்மையாகவும் உள்ளுறை யுவமங்கூறுக.

எ தாங்கருங் காமத்தைத் தணந்துநீ புறமாறத்
தாங்குநீ ரிமிழ்திரை துணையாகி யொலிக்குமே
(ச)புறையொடு வைகிய போதுபோ லொய்யென
(ரு)நிறையாற் றிழிதரூஉ (சா)நீர்நீந்து கண்ணட்கு

எ - து: நீ இட்டுவைத்துப் பிரிந்து நின்னூரிடத்தே உறைந்து முன்பு நின்னெஞ்சில் தாங்குதற்கரிதாய்ப் போந்த காமத்தை நின்னிடத்தினின்றுங் கைவிடுகையினாலே துளியோடே தங்கின பூப்போலே சிறக்குமளவில் அமையாதே விரைய விழும் நீரிலேகிடந்து நீந்துகின்ற கண்ணையுடையவட்கு

க. "பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே" சிலப். எ: சஉ.

உ. புகலென்றது, புகுமிடமாகிய மரப்பொந்து கூடு முதலியவற்றை.

ங. தொல். உவம. சூ. ஙங.

ச. "நீலங் கரெதிர் பவைபோ, வினைநோக் குண்கண் ணீர்நில் லாவே" (கலி. எ: கக - கஉ) என்பதும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

ரு. "நிறைநிலா நோய்கூர நெடுங்கணீ ருகுத்தனவே" சிலப். எ: சஉ.

சு. (அ) "உள்ளம்போன் றுள்வழிச் செல்கற்பின் வெள்ளநீர், நீந்தலமன்னோ வென் கண்" குறள். ககஎ0. (ஆ) "நெடும்பெருங்க ணீர்நின நீர்" பு - வெ. பெருந்திணைப். பெண்பாற். அ.

பிரதிபேதம்)* பொய்கைபள்ளி, † இயலிலடக்கிறும்.

ஐந்தாவது நெய்தல் ச. எகூங.

அசைகின்ற கடலிலே எழுந்து முழங்குகின்ற திரைதான் துணையாகி நின்று ஆரவாரியாநிற்கும். எ - று.

(க) *வருத்துகின்ற திரை தான் துணையாக †ஒலிக்குமென்ற அஃது (உ)இறந்துபடுத்தாது நின்றமைபற்றிக் கூறினன்.

கக (ங)வாராய்நீ புறமாற வருந்திய மேனியாட்
காரிருட் டுணையாகி யசைவளி யலைக்குமே
கமழ்தண்டா துதிர்ந்துக (ச)வூழுற்ற கோடல்வீ
யிதழ்‡சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு

எ - து: நீ ஈண்டு வாராயாய் நின்மனையிடத்தே இருந்து வருந்திய மேனியையுடையவட்கு நீ வைத்த வேட்கை நின்னிடத்தினின்றுங் கைவிடு

கையினாலே கமழ்கின்ற தண்ணிய தர்து உதிர்ந்து சிந்தும்படி முறைமையுற்ற இகழ்கள்வீழும் குலையினையுடைய கோடல்வீபோல இறையினின்றும் கழலும் வளையினையுடையாட்கு நிறைந்து இராக்காலத்தே அசைந்து வருகின்ற காற்றுத்தான் துணையாகின்று வருத்தாநிற்கும். எ - று.

இனி மேனியாட்கு வருந்திய நீ வாராயாய்ப்புறமாற என்றுமாம்.

கஇ இன்றுணை நீப்ப விரவினுட் டுணையாகித்

தன்றுணைப் ||பிரிந்தயாஅந் தனிக்(ரு)குரு தசவுமே

க. "கத்துங் கடலும் ....பெரும்பகை யாய்விட்ட வாமொரு பைந் தொடிக்கே" என்பது இங்கே கருதற்பாலது.

உ. இறந்து படுத்தல் - இறந்துபடச் செய்தல்.

ந. வேற்றுமைமயக்கினுள் இருருபு ஒருபொருண்மேற் பலவடுக்கிவந்து ஒரு வினையான் முடிதற்கு, "வாராய்நீ... ... ..வளையாட்கு" என்னும் பகுதியை மேற்கோள்காட்டி. 'இதனுள் நான்காவது அடுக்கிவந்து அலைக்குமென்பதனோடு முடிந்தவாறு கண்டுகொள்க' என்பர், தெய்; தொல். வேற்றுமைமயங்கி. சூ. கஅ. 'உருபுதொடர்ந்து'

ச. "அலங்கிதழ்க் கோடல் வீயுகுபவைபோ, லிலங்கே ரெல்வளை யிறையூ ருமமே" (கலி. எ: கடு - கசு) என்பதும் அதன் குறிப்பும் இந்நூற் பக்கம் சுகக: சு-ஆம் குறிப்பும் பார்க்க.

ரு. குருகு: நெய்தனிலத்துக்குரித்தாகக் கூறப்படும் ஒருபறவை; கரிய காலையும் வெண்ணிறத்தையும் உடையது; பனைமடலிற் கூடுகட்டிக் கொண்டு வதிவது; மீன் யாமை முதலிய நீர்வாழுயிர்களை யுண்டு உயிர் வாழ்வது; துணைபிரிந்திருப்பின் வருந்தி அதனை அழைக்கும் இயல் பினது; நள்ளிரவில் உயவுவது; இதற்குச் சங்கும் இதன் காலுக்குத் (பாடபேதம் * வருததுகின்றதுதான். † ஒலிக்குமென்றது இறந்து. ‡ சேரும். || பிரிந்தயாம்

.பொன்சுடர் * ஞாயிற்று விளக்கத்தா னொளிசாம்பு
† நண்பகன் மதியம்போ லலஞ்சாய்ந்த வணியாட்கு

நினையரிதாளும் வெண்டாழம்பூவுக்கும் வெண் கூதாளம்பூவுக்கும் இதுவும் உவமையாகக் கூறப்படும்; இதனிறகும் தூவியென்று அருகி வழங்கும்; இதனைக் கொக்கென்பாரும் நாரையென்பாரும் அன்ன மென்பாருமுளர்; இப்பெயர் நீர்வாழ் பறவைக்கெல்லாம் பொதுவாய் வருமாயினும் (அ) "கொக்கினங்காள் குருகினங்காள்" என வேறு வேறு விளிக்கப்படுதலின், கொக்கு அன்றென்றும் கருங்கால் கூறப் படுதலின் நாரையும் அன்னமும் அன்றென்றும் துணியலாகும். இதன் இன்குரலுக்கு யாழொலியும் இதன் கூட்டத்தின் ஆர்ப்புக்குத் தேர்மணியொலியும் உவமையாகக் கூறப்படுகின்றன. இது வெண் ணிறமுடைமையால் வெள்ளாங்குருகென்றும் வழங்கும். அதனோடு சிறுமையென்னும், அடையுமடுத்துச் சிறுவெள்ளாங் குருகென்றும் வழங்கும்; அது யானையங் குருகினும் இது சிறிதென்பது பற்றிப் போலும். (ஆ) "புன்னை, வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளு, மல்குறு கான லோங்குமண லடைகரை" (இ) "கருங்கால் வெண் குருகு"(ஈ)"பெண்ணை, வீங்குமடற் குடம்பைப் பைதல்வெண் குருகு, நள்ளென் யாமத் துயவுதோ றுருகி" (உ) "பெண்ணைத் தோடுமட லேறிக், கோடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய, வுயிர்செலக்

கடைஇப் புணர்துணைப், பயிர்த லாஞ் பைதலங்குருகே"(ஊ)"நெய்த் தலைக் கொழுமீ னருந்த வினக்குருகு, குப்பை வெண்மணல் லேறி" (எ) "குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை" (ஏ) "கோடுதுணர்ந் தன்ன குருகொழுக்கு" (ஐ) "தினைத்தா ளன்ன சிறுபசுங் கால, வொழுகுநீ ராரல் பார்க்கும், குருகுமுண்டு" (ஒ) "தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை" (ஓ) "தாழை வெண்பூக், குருகென மலரும் பெருந்துறை" (ஔ)"பிணர்முடத் தாழை விரிமலர் குருகென, நெடுங் கழிக் குறுங்கயல் கெய்தலுண மறைந்தும்" (ஃ) "குருகிருந் தன்ன, வண்பிணி யவிழ்ந்த வெண்கூ தாளத், தலங்குகுலை யவரி" (அஅ)

"துறைபோ கறுவைத் தூமடி யன்ன, நிறங்கிளர் தூவிச் சிறு வெள்ளாங் குருகே" (ஆஆ) "யாழ், நரம்பிசைத் தன்ன வின்குரற் குருகின்" (இஇ)"விருந்தின் வெண்குரு கார்ப்பின்.........பண்ணமை நெடுந்தேர்ப் பாணி யொலிக்குந், தண்ணந் துறைவன்" (ஈஈ)"வெள்

ளாங்குருகின் பிள்ளை" (உஉ) "யானையங் குருகின் கானலம் பெருந் தோ, டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங், குட்டுவன் மரந்தை" என வருபவை இங்கே அறிதற்பாலன. வடமொழியில் 'க்ரௌஞ்சகிரி' என்பது தமிழில் 'குருகுபெயர்க் குன்றம்' என்று கூறப்படுதலானும்

(பிரதிபேதம்) * ஞயிற்றுவினக்கத், † கன்பகல்.

ஐந்தாவது நெய்தல் (ரு). எகூ(ரு)

எ - து: இனிய துணையாகியநீ கைவிட்டு உன்மனையிடத்தே இருக்கையி னலே ஒள்ளிய சுடரையுடைய (க)ஞாயிற்றினது மிக்க ஒளியாலே தன் ஒளி கெடுகின்ற உச்சிக்காலத்து மதிபோலே நன்மைகெட்ட முகத்தினையுடை யாட்கு இராக்காலத்திடத்தே தன் சேவலைப் பிரிந்து வருந்துந் *தனிக்குருகு தான் துணையாகி உசாவாநிற்கும். எ - று.

எனவாங்கு, அசை.

உ0 எறிதிரை தந்திட விழிந்தமீ னின்றுறை
மறிதிரை வருந்தாமற் கொண்டாங்கு நெறிதாழ்ந்து
சாயினள் வருந்தியா ளிடும்பை
பாய்பரிக் கடுந்திண்டேர் களையினோ விடனே

எ - து: இனிய துறையிடத்தே எறிகின்ற திரை எறக் கொண்டுவந்து †போகடுகையினால் எக்கரிலேகிடந்த மீனை மீள்கின்ற அத்திரை வருந்தாதபடி கைக்கொண்டுபோன தன்மைபோலே நீ முன்பு நடத்தின நெறி தாழ்கையி னாலே மெலிந்தனளாய் வருந்தினவளுடையவருத்தத்தைப் பாய்ந்துசெல்லும் பரிபூண்ட கடிய திண்ணிய தேர் வெளியாக வரைவோடே வந்து களையு மாயின் நல்லகாலமென வரைவுகடாயினாள். எ - று.

இதனால், தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக் கலி. (௪)

(௩உஉ.) கோதை யாயமு மன்னையு மறிவுறப்
போதெழி லுண்கண் புகழ்நல னிழப்பக்
காதல்செய் தருளாது துறந்தார்மாட் டேடின்றிச்
சிறிய துனித்தனை துன்னுசெய் தமர்ந்தனை
பலவுநூ றடுக்கினை யினைபேங்கி யழுதனை
யலவலை யுடையை யென்றி தோழீ ;
கேளினி;

க்ரௌஞ்சமென்பது அன்றிலின் பெயரென்பாதலாலும் அன்றி

லுக்கு (ஊஊ) "தடவுநிலைப்பெண்ணைக், கொழுமடலிழைத்தசிறுபொற் குடம்பைக், கருங்காலன்றிற் காமர் கடுஞ்சூல், வயவுப்பெடை யகவும் பாஅட்ங்கங்குல்" எனப் பனைமடல்வாழ்க்கையும் கருங்காலுடைமையும் துணைபிரியா வியல்பும் கூறப்படுதலாலும் குருகென்பது அன்றிலா யிருக்கலாமென்று தோற்றுகிறது; இன்னும் ஆராய்தற்பாலது. அன்றிலின் செய்தி கலி. கஉக: கஉ-ஆம் அடிக்குறிப்பிற் காணலாகும்,

க. (அ) "பகலாங்கட் பையென்ற மதியம்போல்" கலி. ௩சஙு: உ; (ஆ) "விரிகதிர்ப் பரிதி முன்னர் வெண்மதி மழுங்கும்" நைடத. போர். உ.

(பிரதிபேதம்) * தனிக்குருகுதணை. †போமேகையினுலே.

நலித்தொகை கஉஉ.

அ மாணெழின் மாதர் மகளிரோ டமைந்தவன்
காணும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினும்
பேணி யவன்சிறி தளித்தக் காலென்
ணுணி னெஞ்ச நெகிழ்தலுங் காண்பல் ;
கஉ இருளுற ழிருங்கூந்தன் மகளிரோ டமைந்தவன்
றெருளும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினு
மருளி யவன்சிறி தளித்தக் காலென்
மருளி நெஞ்ச மகிழ்தலுங் காண்பல் ;

கசு ஒள்ளிழை மாதர் மகளிரோ டமைந்தவ
னுள்ளும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினும்
புல்லி யவன்சிறி தளித்தக் காலென்
னல்ல னெஞ்ச மடங்கலுங் காண்பல் ;
உ0 அதனால்;

யாம நடுநாட் டுயில்கொண் டொளித்த
காம நோயிற் கழீஇய நெஞ்சந்
தானவர் பாற்பட்ட தாயி
னாமுயிர் வாழ்தலோ நகைநனி யுடைத்தே.

இது காமஞ்சாலா இளமையோள்வயிற் பின் களவொழுக்கம் ஒழுகிய தலைவன் இடையிட்டுப் பிரிந்து தொன்முறை மனைவியரொடு புணர்ச்சி யெய்தி இருந்தானாக, அதனையறிந்து ஆற்றளாய தலைவி *ஆற்றாமையைக் கண்டு வினவிய தோழிக்கு அத்தலைவி அவனொழுகுகின்றவாறுந் தன்னெஞ்சு அவன் வயத்ததாயவாறுங் கூறியது. "மறையின் வந்த மனையோள் செய்வினை, பொறையின்று பெருகிய †பருவரற் கண்ணும்" (க) என்பதனானும் "பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை" என்னும் (உ) சூத்திரத்தானு முணர்க.

இதன் பொருள்.

கோதை யாயமு மன்னையு மறிவுறப்
போதெழி லுண்கண் புகழ்நல னிழப்பக்
காதல்செய் தருளாது துறந்தார்மாட் டேதின்றிச்

க. தொல். கற். சூ. ௧௦.
உ. தொல். கற். சூ. ௩௧.
(பிரதிபேதம்) * ஆற்றாமைகண்டு, † பருவரற்கண் என்பதனானும்.

ஐந்தாவது நெய்தல் ரு. ௱௨௭

சிறிய துளித்தலை துன்னுசெய் தமர்ந்தனை
பலவுநா றடுக்கினை பின்னேங்கி யழுதனை
பலவலை யுடையை யென்றி தோழீ

கேளினி

எ-து: (க) கோதைபோல ஒழுங்குவிட்டு விளையாடும் ஆயத்தாரும் தாயும் அறிதலுறும்படி பூவினது அழகையுடைய கண்கள் புகழ்ந்த நலத்தை இழக்கும்படி முன்னர் நம்மிடத்தே மிக்க காதலை நிகழ்த்திப் பின்னர் நமக்கு அருளாதே ஒருகாரணமுமின்றி நம்மைத் துறந்தாரிடத்தே முன்னர்ச்சிறியவாக வெறுத்தனை; பின்னர் அவர் நமக்குப் பொருந்தாக் குறைகளைச் செய்கையினாலே அக்குறைகள் பல நூறுமாக அடுக்கிக்கூறி அதிலே அமர்ந்தனை; அதுவேயுமன்றி வருந்திஏங்கி அழுவதுஞ்செய்தாய்; ஆகலான்நீ (உ) அலமருதலையுடையையாயிருந்தாயென்று சொல்லாநின்றாய்; தோழீ! இனி அலமரலைக் கேளென்றாள். எ - று.

எது, வடமொழி திரிந்து விகாரமாய் நின்றது.

அ (ங)மாணெழின் மாதர் மகளிரோ டமைந்தவன்
காணும்பண் பிலனுத லறிவேன்மன் னறியினும்
பேணி யவன்சிறி தளித்தக் காலென்
னாணி னெஞ்ச நெகிழ்தலுங் காண்பல்

க. (அ) "திணிநிலைக் கடம்பின் றிரளரை வளைஇய, துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்" குறிஞ்சி. ககசு-ககஎ. (ஆ) "கோதை யாயமொடோரை தழீஇ" அகம். சக: கக. (இ) "கடம்பு சூடிய கன்னிமாலை போற், றொடர்ந்து கைவிடாத் தோழி மாரொடும்" சீவக. கஙO.

உ. அலவல்-அலமருதல் போலும்; "அலவுற்று" (குறிஞ்சி. எ) என்பதற்கு, 'அலம் வந்து' என்று பொருளெழுதப் பட்டிருத்தலும் காண்க. 'அலவலை' எனின் மனத்திற் றோன்றியதை ஆராயாது செய்தலாம்; "அலவலை யில்லாக் குடியும்" திரிகடுகம். நச. "அலவலைச் செய்திக் 'கஞ்சினன்" மணி எ: ௬க. 'அலவலை நீர்த்தா லத்தைநின் னலறென"

பெருங். (க) ரு௬: ௫அ௬. எனவருதல்காண்க. "அலவலைத்து வாழ்பவர்" பழ. ௩உ௬. என்பதற்கு, 'நாணமில்லாததன்மையைச் செய்து வாழ்பவர்' என்று பொருள்செய்திருப்பது நோக்கி அலவலை யென்பதற்கு, நாணமின்மை யென்று பொருள் கொள்வாருமுளர். பின் "நாணி னெஞ்சம்" என வருதலும் நோக்குக.

௫. கலி. ௬எ - ஆம் செய்யுட்டாழிசைகள் இங்கே ஒப்புநோக்கற்பாலன. (பிரதிபேதம்) * இன்றியே நம்மை.

எ - து: மாட்சிமையையுடைய அழகினையுங் காதலையுமுடையமனைவியரோடே அவன் பொருந்தி நம்வருத்தத்தைப் பார்க்குங் குணமிலனாயிருத்தலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் வந்து என்னைப் (க) பேணிச் சிறிதாக அளிக்க என்னுடைய நாணமில்லாத நெஞ்சம் என்வயத்ததன்றி அவனிடத்தே நெகிழ்ந்து செல்லுதலையுங் கண்டிருப்பேன். எ - று.

௧௨ (உ)இருளுற ழிருங்கூந்தன் மகளிரோ டமைந்தவன்
றெருளும்பண் பிலனாத லறிவேன்மன் னறியினு
மருளி யவன்சிறி தளித்தக் காலென்
மருளி நெஞ்ச மகிழ்தலுங் காண்பல்

எ - து: இருளோடே மாறுபடுகின்ற கரிய கூந்தலையுடைய தொன்முறை மனைவியரோடே அவன் பொருந்தி நம் வருத்தத்தைத் தெளியுங் குணமிலனாயிருத்தலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் ஒருகால் அருள் பண்ணி அவன் சிறிதாக அளிக்க என்னுடைய மருளியாகிய *நெஞ்சம் அதற்கு மகிழ்தலையுங் கண்டிருப்பேன். எ - று.

௧௩ ஒள்ளிழை மாதர் மகளிரோ டமைந்தவ

னுள்ளும்பண் பிலனாத லறிவேன்மன் னறியினும்
புல்லி யவன்சிறி தளித்தக் காலென்
னல்ல னெஞ்ச மடங்கலுங் காண்பல்

எ-து: ஒள்ளிய இழையினையுங் காதலையுமுடைய தொன்முறைமனைவியரோடே அவன் பொருந்தி நம்மை நினைக்கும் குணமிலனாதலை † மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் சிறிதாகப்புல்லி அளிக்க என்னுடைய வருத்தத்தையுடைய நெஞ்சம் வருத்தமீளுதலுங் கண்டிருப்பேன். எ - று.

௨௦ அதனால்

(௩)யாம நடுநாட் டுயில்கொண் டொளித்த
காம நோயிற் கழீஇய(௪)நெஞ்சந்

க. "துனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார, வினிதமர் காதல னிறைஞ்சித்தன் னடிசேர்பு, நனிவிரைந் தளித்தலி னகுபவள் முகம்போல" கலி. எக: ௪ - ௬.

௨. "இருளற ழிருங்கூந்த லிவண்மாட்டு" கலி. ௪௧: ௧௮.

௩. "யாமத்துந் துயிலலள் அலமரு மென்றோழி" (கலி. ௪௫: ௧௮.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௪. கலி. ௬௭: ௧௧-௨௧, எஎ: ௨௧-௨௪-ஆம் அடிகளும் அவற்றின் குறிப்புக்களில் இவ்விடத்துக்குப் பொருந்துவனவும் இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * நெஞ்சமகிழ்தலையும், † மிகவறிவேன்.

* தானவர் பாற்பட்ட தாயி
னாருயிர் வாழ்தலோ நகைநனி யுடைத்தே

எ - து: ஆகையினாலே காமநோயாலே மிக்க நெஞ்சந்தான்(க)நனோன்

யாமத்தில் நாங்கொள்ளுந் துயிலைவாங்கிக் கொண்டு ஒளித்தவர் பகுதியிலே பட்டுவிட்டதாயின், இனி நாமிருந்து உயிர்வாழ்கையோ மிகப் பிறர் சிரித்தலையுடைத்தென்று தோழி வரைவுகடாவுதற்குக் கூறினாள். எ - று.

இதனால், 'தன்வயினுரிமையும் அவன்வயிற் பரத்தையும்' (உ) கூறினாள்.

இதனால், தலைவிக்கு †இழிவு பிறந்தது.

இது, கேளினி எனச் சொற்சீரடிவந்தமையிற் கொச்சகம். (௭)

(கஉ௩.) (௩)கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசைதொறுஞ்
சுரும்பார்க்குங் குரலினை டீருந்தும்பி யிசைபூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கடல் றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்;
௫ காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
மாணநோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
காணவும் பெற்றாயோ காணாயோ மடநெஞ்சே;
௯ கொல்லேற்றுச் சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
புல்லவும் பெற்றாயோ புல்லாயோ மடநெஞ்சே;
கஉ. வெறிகொண்ட புள்ளினம் வதிசேரும் பொழுதினுற்
செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றாய்மற் றவனைநீ
யறியவும் பெற்றாயோ வறியாயோ மடநெஞ்சே;

எனவாங்கு;

க. நடுநாள் - இடையாமம்; "நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்" புறம். கஅ௯: ௩.

உ. தொல். கள. சூ. உ௦.

௩. இச்செய்யுள், தரவகப்பட்ட மரபிற்றாகித் தாழிசை வந்ததற்கும்

(தோல். செய். சூ. கஙௌ. பேர்.) தாவிற்கு அடிவயக்தாகச சுரிதகம் நான்கடியாய்ச் சுருங்கி வந்ததற்கும் (தோல். செய். சூ. கஙௌ. பேர்) மேற்கோள்.

(பிரதிபேதம்) * தாமவர், † இளிவு.

97

கக எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லூ
ழுரும்பட சவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் றடுமாறி
வருந்தினை யளியவென் மடங்கெழு நெஞ்சே.

இது காப்புமிகுதிக்கண் ஆற்றத தலைவி தலைவன்பாற்சென்ற நெஞ்சினை நோக்கி அழிந்து கூறியது.

இதன் பொருள்.

(க)கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை *மிசைதொறுஞ்
சுரும்பார்க்குங் குரலினோ (உ)டிருந்தும்பி †யிமையாக
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால்(ங)‡யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கட றுயில்கொள்ளும் வண்டியிர் நறுங்கானல்

எ - து: கரியகொம்பினையுடைய ||புன்னையின் சிறிய சினையில் நறியதாகிய ÷மலர்தோறும் (ச)மலருஞ்செவ்வி பார்த்து நுகருதற்குச் சுரும்பினம்

ஆரவாரிக்கும் ஓசையோடே ✠கரிய தும்பிகளும் ஒருங்கியைந்து ஊத'எழுந்த குரலுஞ் சேர இம்மெனும் ஓசைபட ஒலிக்கையினுலே அவற்றைக்கேட்டு யாவராலும் பெறுதற்கரியபொருளாகிய முறைமையினையுடைய திருமால்

க. (அ) "இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை" (ஆ) "கருங்கோட்டுப் புன்னை மலரிற் றாதருந்தி, யிருங்களிப் பிரச மூத" நற். உசக: க, ருகக: கூ - கO; (இ) "கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில்" குறுந். கஉரு. (ஈ) "கருங்கோட்டுப் புன்னைத் தங்குந் துறைவற்கு" ஐங். கசுக; (உ) "பெருங்காற் புன்னைக் கருங்கோட்டு" பெருங். (க) சO: கூஅ. (ஊ) "இரும்புகவைத் தன்ன கருங்கோட்டுப் புன்னை" கல். ருகூ: கக என்பவற்றால் புன்னை கருங்கோட்டதென்பது விளங்கும். அம்மரத்தைப்பற்றிய மற்றைச் செய்திகள் கலி. கருகூ: கரு - ஆம அடிக்குறிப்பிற் காணலாகும்.

உ. (அ) "இருந்தும்பி யியையூத" கலி. கஉஎ: ருக. (ஆ) "திருந்தி ளிளிவண்டு பாட விருந்தும்பி, யின்குழ லூதும் பொழுது" கார். கடு.

ரு. யாழ் கேட்டா னென்னு மிடத்து யாழிற் பிறந்த இசையை யாழென் றலால், அது பிறந்தவழிக் கூறலென்னும் ஆகுபெயரென்பர் தெய் வச்; தொல். வேற்றுமைமயங்கி. ரு. கூO. 'முதலிற்'

ச. "மலராக்காற், செல்லாவாஞ் செம்பொறி வண்டினம்" நாலடி. உஅரு.

(பிரதிபேதம்) * மீமிசைச் சரும்பார்க்குங் குழலிரேடு, † இசையூத, ‡ யாழ்கொளக்கிடக், ‖ புன்னையி னுடைய சிறிய, + மலர்மிசைதொறும், ✠ கரியதாகிய.

ஐந்தர்வது நெய்தல் சு. எள்க

பாட்டோடே யாழையுங்கேட்டுப் பள்ளிகொண்டவனைப்போலப் பெரிதாகிய கடலும் ஒலியவிந்து உறக்கத்தைக்கொள்ளும் வண்டு ஒலிக்கின்ற கானலின் கண்ணே. எ - று.

நெஞ்சே சென்றாய் என மேலே கூட்டுக.

ஓதம் வடிந்தகாலத்து மிக்க ஒலியின்மை பற்றிக் கூறிற்று.

புன்னை மலருஞ் செவ்விபார்த்து அவற்றை நுகர்தற்குரியன நுகர்கின்றமையுங் கண்டு யாமுங் காமச்செவ்வி அறிந்து நந் தலைவர் நுகரப்பெற்றிலேமேயென்று வருந்தியும், பாட்டையும் யாழையும்போலும் ஓசைகேட்டுக் கடலுட்படத் துயில்கின்ற காலத்தே யாமும் அவற்றைக் கேட்டுத் தலைவனிடத்தே துயிலப் பெறுகின்றிலேமேயென்று வருந்தியும், நெஞ்சுசென்றதென மேலே வருகின்ற இரங்கற்பொருட்கு முன்னின்ற கருப்பொருள் இறைச்சிப் பொருளாய் நின்று உபகாரப்பட்டு நின்றது. இஃது, "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" (க) என்பதனான் உணர்க.

கூ (உ)காணாமை யிருள்பரப்பிக் கையற்ற * கங்குலான்
(ங)மாணாநோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனை(ச)நீ
காணவும் பெற்றாயோ காணாயோ மடநெஞ்சே

எ - து: அறியாமையுடைய நெஞ்சே! கானலின்கண்ணே பொருள்களைக் கண்கள் காணாதபடி இருளைத்தான் பரப்பி உயிர்களெல்லாஞ் செயலறுதற்குக் காரணமான கங்குலிடத்தே ஒரு மருந்தாலும் மாட்சிமைப்படாத காமநோயைச் செய்தவனிடத்தே †போனாய்; போன நீ பின்னை அவனைக் கண்ணாற் காண என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ, அவனைக் காணா திருந்தாயோ கூறென்றாள். எ - று.

உம்மை இழிவுசிறப்பு. ‡இனிக் காணப்பெற்றாயோ இல்லையோ என ||ஓகாரத்தைஐயமாக்கி உரைத்தனிற்க, நீஅவனாற் காணப்பட்டாயெனக்கூறி ÷ஓகாரத்தினை இரக்கமாக்கிக் கூறலுமாம்.

இது + நடுயாமத்துச் சென்றமை கூறினாள்.

க. தொல். பொருளி. சூ. ௩௫.

௨. "காணாமை............காணாயோ மடநெஞ்சே" என்பது தாழிசை யெனவும் இடைநிலைப் பாட்டெனவும் படுமென்பர் பேராசிரியர்; தொல். செய். சூ. ௧௩௨' நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறுவர்;

தொல். செய். சூ. ௧௩௭.

௩. (அ) "மாணாநோயுழப்பதை" கலி. ௧௩௨: ௧௧. மாணாமை அளவிறத்த லென்னும் பொருளிலும் வரும்.

௪. நெஞ்சொடு கேட்குந போலக் கூறியதற்கு "நீ...... ......நெஞ்சே" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. ௨௦௦. நச்.

(பிரதிபேதம்) * கங்குல்வாய், † போனாய்நீ, ‡ இனிப்பெற்றாயோ, || ஓகாரமைய, ÷ இரக்கமாகக்கூற, + நடுவியாமத்து.

௧. (௧)கொல்லேற்றுச் (௨)சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனோய் செய்தான்கட் சென்றாய்மற் றவனை நீ
புல்லவும் பெற்றாயோ புல்லாயோ மடநெஞ்சே

எ - து: மடநெஞ்சே! கானலின்கண்ணே கொல்கின்ற(௩)ஏறாகியசுறவி னுடைய திரள் போவாரைப் போகாமற்காத்தலைக்கொண்ட மயக்கத்தை யுடைய மாலைக்காலத்தே வருத்தத்தையுடைய காமநோயைச் செய்தவனிடத் தேபோனாய்; போன நீ பின்னை அவனைப் புல்லஎன்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ, புல்லாதிருந்தாயோ கூறென்றாள். எ - று.

இனிப் புல்லப்பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்ததுநிற்க, *நீ அவனாற் புல்லப்பட்டாயெனக்கூறிஓகாரத்தினை இரக்க மாக்கிக் கூறலுமாம்.

௨. †வெறிகொண்ட (௪) புள்ளினம் ‡வதிசேரும் பொழுதினாற்
செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றாய்மற் றவனை(௫)நீ

யறியவும் பெற்றுயோ வறியாயோ மடநெஞ்சே

க. தொல். செய். சூ. கஅசு. நச். மேற்கோளில் 'கொல்லேற்று' என்னும் தாழிசை மூன்ருவதாகவும் 'வெறிகொண்ட' என்னும்தாழிசை இரண்டாவதாகவும் காணப்படுகின்றது.

உ. "செழுங்கதிர் மண்டில, மால்வரை மறைய............மல்குகழித், துணைச்சுறு வழங்கலும் வழங்கும்"

ஈ. (அ) "கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே" தொல். மர. சூ. க. (ஆ) "சுறவுப்பிற ழிருங்கழி நீந்தி" தொல். கள. சூ. உஈ. நச். மேற்கோள். என்பனவும் (இ) "கோட்சுறு வினத்தொடு" (சீவக. கடு) என்பதன் விசேடவுரையில் 'முன்னே கழியணைந்தமைபெறுதலின், சுறவு கூறினர்' என்று எழுதியிருப்பதும் (ஈ) கடல் 'மகராலயம்' என்று கூறப்படுதலும் நோக்க, சுறவு நெய்தனிலத்திற்கே உரியதென்று கொள்ளலாகும். (உ) மேலுள்ள தொல்காப்பியச் சூத்திரத்தின் இளம்பூரணருரையில், 'பிள்ளைச்சுறவு, யாற்றுச் சுறவு உண்மையின், செய்யுட்காவது கடல்வாழ் சுறவொன்றே யெனப் பிரித்தான்' என ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. இச்செய்தி ஆராய்தற்பாலது.

௪. "புள்ளின மிரைமாந்திப் புகல்சேர" கலி. கஉஉ: ௪.

ரு. "நீ..................நெஞ்சே" என்பது உணர்வுடையதுபோல் நகை பற்றிக் கூறியதற்கு மேற்கோள்; தொல். பொருளி. சூ, உ. நச்.

(பிரதிபேதம்) * தானவனைப் புலப்புட்டா, † பொறிகொண்ட, நெறிகொண்ட. ‡ பசி சேரும்போழ்திறுல்.

ஐந்தாவது நெய்தல் சு.

எ - து: மடநெஞ்சே! அக்கானலின்கண்ணே ஒழுங்குகொண்ட பறவைத்திரள் தாந் தங்கும் இடத்தே சென்றுசேரும் மாலைக்காலத்தே முன்பு செறிந்தவளை கழலப் பண்ணினானிடத்தே போனாய்; போன நீ பின்னை அவனை மனத்தினை *அறிய என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ, அது தானும் அறியாதிருந்தாயோ கூறென்றாள். எ - று.

இனி அறியப் பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்தலுநிற்க, நீதான் அவனாலறியப்பட்டாயென உரைத்து ஓகாரத்தை இரக்கமாக்கலுமாம்.

†எனவாங்கு அசை.

கக. எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லூழ்
(க)அரும்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் (உ)றடுமாறி
வருந்தினை ‡யளியவென் மடங்கெழு நெஞ்சே

எ - து: அது கூறுமையின், பின்னும் அறியாமை பொருந்திய அளிக்கத் தக்க என்னெஞ்சே! பொறுத்தற்கரிய வருத்தத்தையுடைய காமநோயைச் செய்தவனிடத்தே பகலுமிரவுந் துயிலைக் கைவிட்டுக் கரியகழியில் ஓதம் போவதுவருவதாய்த் தடுமாறுந்தன்மைபோல நீயும் பலமுறையாகச் சென்றும் வந்துந் தடுமாறி அவனைப் பெறுதல் நச்சி முடிவில் வருந்திவிட்டாய்; ‖ஈதன்றோ நீபெற்றதென நெஞ்சினைநோக்கி அழிந்துகூறினாள். எ - று.

இஃது "உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன், மறுத்துரைப் பதுபோ ÷னெஞ்சொடு புணர்த்தும்" (ரு.) என்பதனாற்கூறியது.

க. "அரும்படரவலநோ யாற்றுவ ளென்றோது" (கலி.உஅ:கO.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "மணிநிற நெய்த லிருங்கழிச் சேர்ப்ப; னணிநல முண்டகன்று னென்றுகொ லெம்போற், றிண்மண லெக்கர்மே லோதம் பெயரத்,

துணிமுக்நீர் துஞ்சா தது" (ஆ) "பறைவா யொலியோதம் பந்த ருகளுக், துறைசேர் சிறுகுடியார் துஞ்சினுந் துஞ்சாய், நிறையின் மருண்மாலை யெம்போல நீத்த, துறைவ னுடையையோ நீவாழி வீராய்" (இ) "வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய், பொருதி புலம்புதி நீயுங் - கருதுங்கால், பண்டினை யல்லையாற் பாழித்தோட் கோதை யைக், கண்டனையோ வாழி கடல்" (ஈ) "போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி, நாவாய் குழற நடுங்குறுவாய்..........ஆர்கலியே"

கூ. தொல். பொருளி. சூ. உ.

(பிரதிபேதம்) * நீ அறிய, † ஆக்க எல்லையும், ‡ அணியையென். ‖ இதையன்றே. ÷ நெஞ்சொடு கிளத்தலென்பதனுல்.

இதனுல், தலைவிக்கு இழிவு தோன்றிற்று.

இஃது ஒத்தாழிசைக்கலி. (க)

கஉசு.) ஞாலமூன் றடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய
நீலநீ ருடைபோலத் தகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப;

ஊரல ரெடுத்தரற்ற வுள்ளாய்நீ துறத்தலிற்
கூருந்தன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லெல்லாக்கால்;
இணைபிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலிற்

புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகைபெற்ற தொன்னல மிழந்தினி
யணிவனப் பிழந்ததன் னணைமென்றோ ளல்லாக்கால் ;

கரு. இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்
வென்றவே லுதியேய்க்கும் விறனல னிழந்தினி
நின்றுநீ ருகக்கலுழ நெடும்பெருங்க ணல்லாக்கால்;

கள அதனால்;

பிரிவில்லாய் போலநீ தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்னா துணிந்தவ ளாய்நலம் பெயர்தரப்
புரியுளைக் கலிமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே.

இது "வெளிப்பட வரைதல் படாமை வரைதலென், றாயிரண்டென்ப வரைத லாறே" (க) என்பதனுற் களவு வெளிப்பட்டபின் வரையாது போநுள்வழிப் பிரிந்துவந்தானைத் தோழி எதிர்ப்பட்டுநின்று தலைவியது ஆற்றமை கூறி வரைவுகடாயது.

இதன் பொருள்.

க. தொல். கள. சூ. சக.

ஐந்தாவது நெய்தல் எ. எஎடு

(கஉச.) ஞாலமூன் றடித்தாய முதல்வற்கு முதுமுறைப்

(க)பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய
(உ)நீலநீ ருடைபோலத் தகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயக்குநீர்த் தண்சேர்ப்ப

எ-து: (ங)உலகமூன்றையும் தன் திருவடியாலே அளந்த எப்பொருட்கும் அடியாயிருக்கின்றவனுக்கு மூத்தமுறைமையினையுடைய(ச)நம்பிமூத்தபிரான் அழகுபெற உடுத்த நீலத்தினது நீர்மையையுடைய ஆடையை ஒக்கும்படி அழகைப்பெற்ற வெண்டிரையினையுடைய கடல் வெண்மையையுடைய இடுமணலிடத்தே வந்து சூழ்ந்து விளங்குகின்ற † நீரையுடைய தண்ணிய ‡சேர்ப்பனே. எ - று.

வெண்மை திரைக்கு அடையாய்த் திரை ஆகுபெயராய் நின்றது; || நீலவுடைக்கு வெண்மை ஒப்பன்மையின்.

கடல் தன்கரையை இகவாமை நிற்கின்ற சேர்ப்பனென்றதனால், நீயும் குடிப்பிறந்தார்க்குவரைந்துகொண்டுஇல்லறநிகழ்த்தவேண்டுமென்று + கூறிய கரையைக் கடவாமல் வரைந்துகோடல் வேண்டு+மென்று உள்ளுறையுவமங் கொள்க.

(ங) ஊரல ரெடுத் ×தாற்ற வுள்ளாய்நீ (ரு)துறத்தலிற்
கூருந்தன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்

க. "பாணிற வண்ணன்போல்" கலி. க0ச: அ.
உ. (அ) "அலத்தான் முன்னம் பிளந்தபகை யடர்ப்பான் கருதிப் பிளப்புண்ட, சலத்தால் யமுனை பிணித்ததெனத் தயங்கும் படிசேர் தானையினன்" வில்லி. கிளைபதி. சO. (ஆ) "துளங்கொளி நீலநுண் டுகிலுடுத்தகல், விளங்கனி தன்னவல் விராமனேடு" (இ) "கொய்யுசாண்மலர் விரைகமழ் யமுனை கொய்யாத, செய்ய பொற்றணர்த் தேர்தொடை யொன்றொடு செறித்த, செய்யி ருங்குழ லிரேவதி

கொழுநற்கு நெய்யா, வைய நீலநுண் டுகிலிரண் டளித்தனையன்றே"
பாகவ. அக்குரூரன்வர்த: கக. நம்பிமூத்தபிரான் கோகுல. அ.

ங. "மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத், தாவியசே வடி"
சிலப். கஎ.

ச. இந்நூற்பக்கம் கசச: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. "தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை, யென்னையு மறைத்தா ளென் றோழி" (கலி சச; அ - க) என்பதும் அதன் குறிப்புக்களில் இவ்விடத்திற்கு ஒத்தனவும் இங்கே ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) * உடையேபோற்றகை, † நிரையையுடைய, ‡ சேர்ப்பனே கடல் தன் கரையை ....உளளுறை உவமங்கொள்க வெண்டிரை நிரைக்கு. || நீலயாடைக்கு. = ஒப்பன்மையின் ஊரலர், ÷ கூறிச் கரையை. + என்ற உள்ளுறை, × ஆர்ப்பவுன்னாய்.

எஎரு கலித்தொகை கஉச.

காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
(க) பேரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால்

எ - து: காரிகைபெற்ற *தன் அழகு கெடும்படி மனங்கலங்குதலாலே அப்பொழுதே பீர்க்கினது பூவினது அழகைத் தன்னிடத்தேகொண்ட பிறைபோலும் நுதலல்லாத இடத்து, இவ்வூரிலுள்ளார் அலரை உயர்த்துக் கூப்பிடும்படி நீ இவளைக் கைவிடுகையினாலே மிகுகின்ற தன்னுடைய வருத்தத்தையுடைய (உ) காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? நுதல் புலப்படுத்தா †நின்றதே. எ - று.

காரிகைபெற்ற தன் கவின் - பிறர் இவளழகைப் பெறுதற்குக் காரணமான தன் அழகு; என்றது ‡பிறர் (ங) மகளுக்கு ஒப்புக் கூறுமிடத்து இவள் உவமையாய் நிற்பளென்பதாம்.

சு இணையில்லு ரலர்தூற்ற (ச)வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகை||பெற்ற தொன்னல மிழந்தினி
யணிவனப் +பிழந்ததன் (ரு)னணைமென்றோ ளல்லாக்கால்

க. "நுதல், பீரல ரணிகொண்ட பிறைவனப் பிழவாக்கால்" (கலி. கூ. கச - கரு.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. "என் றுதன் னகம்புடை யியலக் காளையா, லொன்றிய வுள்ளநோ யொளிக்க லுற்றன, ளின்றிவ ளகத்தது காமநோ யெனப், பொன் றவழ் பசலைமெய் புகல லுற்றதே" சூளா. கல்யாண. உகக.

ங. (அ) "உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும், பிறர்க்கு நீ வாயி னல்லது நினக்குப், பிறருவம மாகா வொருபெரு வேந்தே" பதிற். எங: க - ங. என்பதும் (ஆ) "சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர்மிகு பொருந" (திருமுருகு. உஎரு. கூ.) என்புழி, "பொருந" என்பதற்கு,'உவமிக்கப்படுவோய்' என்று உரையும்,'பொருவப்படுமவன், பொருநனென நின்றது' என்று விசேடவுரையும் (இ) "பொருப்பிற் பொருந" (மது.சஉ) என்புழி, "பொருந" என்பதற்கு 'ஒப்பற்றவனே' என்று உரையும் 'பொருநனென்றது தான் பிறர்க்கு உவமிக்கப்படுவா னென்னும் , பொருட்டு' என்று எழுதியிருக்கும் விசேடவுரையும், (ஈ) "ஒரு வீரரு முவமைக்கெதி ரில்லாவிற லுரவோன்" வில்லி. மணிமான். உ அ என்பதும் ஈண்டு அறிதற் பாலன.

ச. "எய்யா மையே யறியா மையே" தொல். உரி. கூ. சச.

ரு. "அணைமென்றோள்" பரி. எ: ரு. இந்நூல் சOO: ச.குறிப்புப் பார்க்க.

(பிரதிபேதம்) * தன்கவின் பிறர் இவ............கிற்பனென்பதாம். தன் அழகு கெடும்படி † நின்றதே இணையில்லூர்,‡பிரமசுளுக்கு.|| பெறத்தொன், ✢இழந்தன்னவினை,

எ - து: தோழியர் தோள்களில் அழகுபெற்ற இயற்கை நலத்தையும் இப்பொழுது இழந்து, நீ அணிதலாற் பெற்ற செயற்கை நலத்தையும் இழந்த தன்னுடைய அணைபோன்ற மெல்லியதோ ளல்லாத இடத்து, தம்மிற்கூடி இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இவள் வருத்தத்தை நீ அறியாயாய் நீ துறக்கையினாலே * உண்டான தனக்கு உவமை கூறவொண்ணாத வருத்தத்தையுடைய காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? தோள் புலப்படுத்தா நின்றதே. எ - று.

கசு. இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்
வென்றவே லுறிபேய்க்கும் விறனல னிழந்தினி
†நின்றுநீ ருகக்கலுழ நெடும்பெருங்(க)க ணல்லாக்கால்

எ - து: வென்றவேலினது முனையையொக்கும் வெற்றியினையுடைய நலத்தை இப்பொழுது இழந்து நீர் நின்று உகும்படியாக அழுத நெடிய பெரியகண் அல்லாத இடத்து, இன்று இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இவள் வருத்தத்தை அறியாயாய் நீ துறக்கையினாலே தன்னிடத்தே நின்ற எவ்வநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்; கண் புலப்படுத்தாநின்றதே. எ - று.

கஎ அதனால்

பிரிவில்லாய் ‡போலநீ தெய்வத்திற் றெளித்தக்கா
ளரிதென்னா துணிந்தவ (உ)ளாய்நலம் பொய்ர்தாப்
புரியுளைக்|| கலிமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே

எ - து: அலர்ந்த குளிர்ந்த மாலையினையுடைய அகற்சியையுடைய மார்பனே! அவ்வருத்தத்தாலே பிரிவில்லாதாரைப்போலே நீ இயற்கைப் புணர்ச்சிப் பின்னர்த் தெய்வத்தாலே பிரியேனென்று தெளிவிக்க, அப்பிரி

வின்மை அரிதென் றுகருதாளாய் அதனை உண்மை என்று துணிந்தவளுடைய கெட்ட நலம் பண்டுபோலே நன்றும்படி நின்னெஞ்சிலே புரிந்த உழையினையுடைய கலிமாப்பூண்ட தேரைச்செலுத்தாநின்று எம்மனையிடத்துச் செல்லும் நின் செலவை விரைவாயாகவென வரைவுகடாயினள். எ - று.

க. "கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்கண், ணுரைக்கலுறுவதொன் றுண்டு" குறள், கஉஎக.

உ. "மாணிழை யரிவை காணிய வொருநாட், பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்" பதிற்- அக: ௩க - ௩உ.

(பிரதிபேதம்) * உண்டானதுக்கு உவமை, † நின்றநீ ருகக்கவிழும், ‡ போலத் தெய்வத் திற்றெளித்தசொல், || பரிமான், வயமான், செவிமான்.

அதனால் விரைகவென்க. ஆய்நலம் - நுணுகியநலம்.

இதனால், தலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது (க) *நான்கடியே நான்கடித் தரவிற்கு மரபென்றதனுற் கொண்ட நான்கடித் தாழிசையும் நடைநவிலாது பொருள்பெற்ற தனிச்சொல்லும் தரவியலொத்து இறுதிநிலையுரைத்த சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.(எ)

(கஉரு.) கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பினு மறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின்
வண்பரி நவின்ற வயமான் செல்வ
நன்கதை யறியினு நயனில்லா நாட்டத்தா

லன்பிலே யெனவந்து கழறுவ லேபகேள்;

அ மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூ ழிளமுலை
முகிழ்செய முள்கிய தொடர்பவ ளுண்க
ணவிழ்பனி யுறைப்பவு நல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க கொடியை காணீ;

கஉ இலங்கே ரெல்வளை யேர்தழை தைஇ
நலஞ்செல நல்கிய தொடர்பவள் சாஅய்ப்

க. (அ) "இடைநிலைப்பாட்டே, தரவகப்பட்ட மரபின தென்ப" என்னும் தோல். செய். கஙௌ-ஆம் சூத்திரவுரையில் 'தரவிற் சுருங்கு மென்னுது அகப்படுமென்றான், தரவோடு ஒத்து வருந் தாழிசை என்ப தூஉங் கோடற்கு. என்னே? மக்களகத்துப் பிறந்தான் என்றவழி அச்சாதியோடொக்கப் பிறந்தானென்பது படுமாகலின்' என்றுகூறி, அதற்கும் தோல். செய். கங௭ - ஆம் 'சூத்திரவுரையில் அளவியலாற் சுரிதகமொத்ததென்பதற்கும் இச்செய்யுளை மேற்கோள் காட்டுவர் பேராசிரியர். (ஆ) நச்சினார்க்கினியர் தோல். செய். கங௭ - ஆம் சூத்திரவுரையில், 'இது நாலடி யிழிபாகிய நான்கடித்தரவிற்கு மரபென்ற இலேசாற்கொண்டநான்கடித்தாழிசை தம்முள் அளவொத்து வந்து நடை நவிலாது பொருள்பெற்ற தனிச்சொல்லும்பெற்றுத் தரவியலொத்து இறுதிநிலை யுரைத்த சுரிதகமும்பெற்ற வொத்தாழிசைக்கலிப்பா' என்று இங்குள்ள செய்தியையே தெளிவாக எழுதியிருக்கிறார்.

(பிரதிபேதம்) *. ஈசன்கடிபோய நான்கடித்.

புலந்தழப் புல்லாது விடுவா
யிலங்குநீர்ச் சேர்ப்ப கொடியை காணீ;
கசு இன்மணிச் சிலம்பிற் சின்மொழி யைம்பாற்
பின்னொடு கெழீஇய தடவர லல்கு
னுண்வரி வாட வாராது விடுவாய்
தண்ணந் துறைவ தகாஅய் காணீ;
எனவாங்கு;
உக அணைய வென் றனிப்படர் பெருஅ நின்னின்
றிறைவரை நில்லா வளைய ளிவட்கினிப்
பிறைபுரை சுடர் நுதற் பசலை
மறையச் செல்லுநீ மணந்தனை விடினே.

இது வரைவுநீட ஆற்றாத தலைவிநிலைமை தலைவற்குத் தோழி கூறி அவனை நெருங்கி வரைவுகடாயது.

இதன் பொருள்.

(க) கண்டவ ரில்லென *வுலகத்துணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
ணெஞ்சறிந்த கொடியவை †மறைப்பினு மறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின்
வண்பரி நவின்ற வயமான் செல்வ
நன்கதை யறியினு நயனில்லா (உ)நாட்டத்தா
லன்பிலை யெனவந்து கழறுவ லையகேள்

க. (அ) "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், றன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்னும் குறளின் உரையில் நெஞ்சு கரியாதற்கு,

"கண்டவ ரில்லென.........கரியில்லை யாகலின்" என்னும் அடிகளை மேற்கோள்காட்டி, 'பொய்மறையாமையின் அது கூறலாகாதென்பது இதனாற் கூறப்பட்டது' என்பர், பரி; குறள். உகரு.(ஆ)"தன்னைத்தன் னெஞ்சங் கரியாகத் தானடக்கிற், பின்னைத்தானெய்தா நலனில்லை" அறநெறி. உ௦எ. (இ) "வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும், வஞ்சித்தோமென்று மகிழன்மின் -வஞ்சித்த, வெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி, யங்கங் குலைவ தறிவு" நீதிநெறி. கச.

என்பவை இங்கே அறிதற்பாலன.

௨. நாட்டம் - ஆராய்ச்சி. ௧ுறம். ருகு: கச. எ௦: கக.

(பிரதிபேதம்) * உலகத்துணராதார், † மறைப்பவு மறையாவா னெஞ்சத்திற குறிய.

எ - து: அறியாதவர்கள் தம் மனம் இதீ செய்யலாகாதென்று மீளாதே வேறு விலக்குவாரும் இன்றி உலகத்திற் கண்டவர்களும் இல்லையென்று கருதித் தாஞ் செய்யுந் தீவினைகளுள் தாம் நெஞ்சறியவே செய்த கொடிய தீவினைகளைப் பின்பு பிறர் அறியாமல் மறைத்தார்களாயினும் தாஞ் செய்தமையை அறிந்திருக்கின்றவர்கள் தம்முடைய நெஞ்சத்திற்காட்டில் அணுகிய சான்று வேறில்லையாகையினாலே வளவிய பரியிலேபயின்ற வலியினையுடைத் தாகியகுதிரையையுடைய செல்வனே! நின்னை யான் கழறவேண்டுவதில்லை, அக்கழறவேண்டாமையை நன்றாக அறிந்தேனாயினும் நின்னோடு யான் கொண்ட நலம்பாடில்லாத ஆராய்ச்சியாலே.நீ அன்புடையை யல்லையென்று சொல்லிவந்து நின்னைக்கழறுவேன்; ஐயனே! நீஅதனைக்கேள். எ-று.

நயன் - உறவு(மாம்.)

அ (க)மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூ ழிளமுலை

முகிழ்செய (உ)*முள்கிய தொடர்பவ ளுண்க
(ஙு) ணவிழ்பனி யுறைப்பவு நல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க கொடியை காணீ

எ - து: மகிழ்ச்சியைச் செய்கின்ற †இனிமையுடைத்தாகிய மொழியினை யுடையாளுடைய தொய்யில் எழுதின இளையமுலை தோன்றுதலைச் ‡செய்யா நின்ற இளமைப்பருவத்தே நீ கூடிய தொடர்ச்சியை, அவள்கண் தோற்றுவித்தநீர் துளியாகவிழவும் அதுகண்டும்நல்காது விடுகின்றவனே! ஒலிக்கின்ற திரையையுடைய கொண்கனே! நீ மிகக் கொடியைகாண். எ - று.

கஉ (ச)இலங்(ரு)கே ரெல்வளை யேர்தழை தைஇ
நலஞ்செல நல்கிய தொடர்பவள் சாஅய்ப்
‖புலந்தழப் புல்லாதுவிடுவா
(கூ)யிலங்குநீர்ச் சேர்ப்ப ×கொடியை காணீ

க. தோழி தலைவனை "அன்பிலை கொடியை" என்றற்கு, "மகிழ்செய் ....சேர்ப்ப கொடியை காணீ" என்னும் பகுதிகள் மேற்கோள்; தொல்' கற்பி. சூ. கரு. 'பரத்தைவாயில்' இளம்.

உ. முள்குதல் - கூடுதல்: சீவக. சஉ0, கூஅஎ, கசகங, கருகச, ககஅகூ, உகஅச.

ங. வகர மகரமும் தய்முள் ஒன்றர்கொன்று எதுகையெனப்படும். உயி ரெதுகை, மூன்றா மெழுத்தொன்றெதுகை யென்பாருமுளர்.

ச. "இலங்கே ரெல்வளை" கலி. எ: கசு; சசு: உஎ.

ரு. இந்நூர்பக்கம் கருஅ: ச - ஆம் குறிப்புப் பார்க்க.

கூ. "இலஙகுநீர்த் தண்சேர்ப்ப" கலி. கஉகூ: ரு.

(பிரதிபேதம்) * மூழ்கிய, † இனிமையையுடைத்தாகிய, ‡ செய்யா நிற்கின்ற. ‖ புலந்தழு " வலந்தழீஇப் புல்லாது(என்பது தொல். பிரதிபேதம்). × வலியை.

எ-து: எல்லாவினையுடையாளது அழகையுடைய (க)தழையை உடுத்து இலங்குகின்ற இளமைப்பருவத்து * எழுச்சியினுடைய நலம் மேன்மேல் வளர்ந்துசெல்லும்படி நீ நல்கிய தொடர்ச்சியை, அவள்மேனிசாய்ந்து நின்னை வெறுத்து அழாநிற்க அது கண்டும் பொருந்தாதே கைவிடுகின்றவனே இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே! நீ மிகக்கொடியைகாண். எ - று.

கசு (உ.) † இன்மணிச் (ரு)சிலம்பிற் (ச)சின்மொழி யைம்பாற்
பின்னொடு ‡ கெழீஇய தடவர லல்கு
லுண்வரி வாட வாராது விடுவாய்
(ரு)தண்ணந் துறைவ தகாஅய் காணீ

எ - து: இனிதாகிய உள்ளிடுமணியையுடைத்தாகிய சிலம்பினையுடைய சிலவாகிய மொழியினையுடையாளுடைய மயிரைப் பின்னிமுடிக்கின்ற இளமைப்பருவத்தே வந்து பொருந்தின உறவின்பெருமை இடையறுது வாராநிற்க, அவளல்குலின் நுண்ணிய வரி வாடும்படி அவள்பால் வாராமல் அவளைக் கைவிடுகின்றவனே! தண்ணந்துறைவனே! நீ இனித் தகுதிப்பாடுண்டாகாய் காண். எ - று.

எனவாங்கு, அசை.

உக அனையலை யென் றளிமதி பெரும நின்னின்
றிறைவரை நில்லா வளைய ||ளிவட்கினிப்
பிறையேர் சுடர்நுதற் + பசலை
மறையச் செல்லுநீ மணந்தனை விடுமே.

எ - து: பெரும! அவளை யான் கூறிய அத்தன்மையையுடையாளென்று உட்கொண்டு அளிப்பாய்; அளித்துவரைந்து தோள்மணந்தனையாய்

(க. தழை, இன்னதென்பதும் அதனை இளையமகளிர் குடுப்பரென்பதும்

இந்நூற்பக்கம் ௬௩௩: ௧-ஆம் குறிப்பால் அறியலாகும்.

௨. தாழிசையில்லாத இடைநிலைப் பாட்டுக்கு "இன்மணிச்.........
தகாய் காணீ" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. ௧௩௨. பேர்.
சூ. ௧௩௭. ௩௪.

௩. "ஆய்சிலம் பெழுந்தார்ப்ப வஞ்சில வியலுநின், பின்னுலிட் டிருளிய
வைம்பால்கண்டு" நலி. ௫: ௯ - அ.

௪. இந்நூற்பக்கம் ௧௫௯: ௯ ஆம் குறிப்புப் பார்க்க.

௫. விரிக்கும்வழி விரித்தலுக்கு, "கண்ணளந் துறைவன்" என்பது மேற்
கோள்; தொல். எச்ச. சூ. ௪௦௩. சேனா.

(பிரதிபேதம்) *எழிச்சி. †இன்மொழிச்சிலம்பின். இன்னொலிச் சிலம்பினின். இன்னரிச்சிலம்பின். ‡ தழீஇயதட. || அவட்கின். + பயமே.

எ௮௨ கலித்தொகை ௧௨௯.

விடின் நின்னையின்றி *இறையினெல்லையில்லாமற் கழன்ற வளையினையுடைய இவட்கு இனிப் பிறையையொக்குந்திருநுதலிற் றோன்றியபசலை ஒருகாலமும் வாராமல் மறையும்படியாகப் போமென வரைவுகடாயினாள். எ - று.

இதனால், தலைவற்குப் புணர்ச்சியுவகை † பிறந்தது.

இது "பரத்தை மறுத்தல்வேண்டியும்" என்னும் (௧) சூத்திரத்தாற் கைகோளிரண்டற்கும் பொதுவாகப் பொருள் கூறவும் பெறும்.

இது தாழிசையல்லா இடைநிலைப் பாட்டுப்பெற்றுப் புல்லாது விடுவாயெனக் குறைந்துவருதலின் யாப்பின்வேறுபட்டகொச்சகம். (அ)

(௧௨௯.) பொன்மலை சுடர்சேரப் புலம்பிய விடனோக்கித்
தண்மலர் துலகேத்தத் தகைமதி யேர்தரச்
செக்கர்கொள் பொழுதினா லொலிநீவி யினநாரை

/முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
லெக்கர்மே லிறைகொள்ளு மிலங்குநீர்த் தண்சேர்ப்ப;
அணிச்சிறை யினக்குரு கொலிக்குங்கா னின்றிண்டேர்
மணிக்குர லென்னிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யுள்ளான்ற வொலியவா யிருப்பக்கண் டவைகானற்
புள்ளென வுணர்ந்துபிற் புலம்புகொண் டிணையுமே;

நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கா னின்மார்பிற்
றார்நாற்ற மெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யலர்பதத் தசைவளி வந்தொல்கக் கழிப்பூத்த
மலரென வுணர்ந்துபின் மம்மர்கொண் டிணையுமே;

நீணகர் நிறையாற்று ணினையுநள் வதிந்தக்காற்
றோண்மேலா யெனநின்னை மதிக்குமன் மதித்தாங்கே
நனவென்று புல்லுங்காற் காணளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துபிற் கையற்றுக் கலங்குமே;
எனவாங்கு;

க. தொல். கற்.சூ கஎ. இச்சூத்திரத்தினுரையிலும் இவர் இச்செய்யுளை இச்செய்திக்கே மேற்கோள்காட்டி, இதனைக் கைகோ ளிரண்டிற்குங் கொள்கவென்பர்.

(பிரதிபேதம்) * இனி இறைபினெல்லை. † பிறந்தது. இது தாழிசை............கொச்சகம். இவ பரத்தை மறுத்தலேவேண்டியும்.

கரு பலநிலைத் திணையும் மைபடு நெஞ்சி
னலமர மேனியு முழக்குபெண் ரோழி
மதிமருள் வாண்முகம் விளங்கப்
புதுநல மேர்தரப் பூண்கதின் றேமே.

இது தோழி தலைவியது ஆற்றமை கூறித் தலைவனை வரைவுகடாயது.

இதன் பொருள்.

பொன்மலை (௩)சுடர்சேரப் புலம்பிய விடனோக்கித்
தன்மலைந் துலகேத்தத் *தகைமதி யேர்தரச்
செக்கர்கொள் பொழுதினா லொலிநீவி யினநாரை
முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
லெக்கர்மே லிறைகொள்ளு (௨)மிலங்குநீர்த் தண்சேர்ப்ப

எ-து: (௩)பொன்னையுடைய அத்தகிரியிலே ஞாயிறு சென்றுசேர, அஞ்ஞாயிறு †உடனேபட, ஞாயிறின்றி வருந்தின உலகைநோக்கி உலகங்கொண்டாடும்படியாகத் தகைமையினையுடைய மதி எழாநிற்க, செக்கர்வானத்தைக் கொண்ட அந்திக்காலத்தின்கண்ணே, (௪) முக்கோலைக் கையிலே கொண்ட அந்தணர் முதியமொழியை நினைக்கின்றவர்களைப்போலே, இனமான நாரைகள் ஆரவாரத்தைக் கைவிட்டு இடுமணன்மேலே இறுத்தலைச் செய்யும் இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே! எ - று.

(௫) அந்தணர், காஷாயம் போர்த்த குழாங்கள். முதுமொழி - பிரணவம்.

பெரியநாரைசிறகுசிவந்திருத்தலானும்மூக்குக்‡தரையிலேசென்று||குத்தலானும் அதனை முக்கோலை யூன்றியிருந்தஅந்தணரோடு ÷ ஒப்புரைத்தார்.

(௬)நாரை பகற்பொழுதெல்லாம் பல்லுயிர்க்கு வருத்தஞ்செய்து இரைகவர்ந்து அந்திக்காலத்து ஓர் ஆரவாரமின்றித் தீங்குசெய்யாதாரைப் போலே

௧. "தினக ரன்கரந் திகழ்க மண்டலம், பனிகொள் செக்கர்தம் படமதாகவே, யினிய வந்தனைக் கெறியும் வேலைசேர், புனித ரொத்ததப்

புன்கண் மாலையே" வில்லி. சூதுபோர். கசஉ.

உ. "இலங்குநீர்ச் சேர்ப்ப" கலி: கஉ௫: க௬.

௩. "அத்தமென்னும், பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும்" இறை. ரு. கஅ. மேற்கோள்.

௪. இந்நூற்பக்கம் ௩அ: உ - ஆம் குறிப்புப் பார்க்க.

௫. "சிறுமீன் கவுட்கொண்ட செந்தாவி நாராய்" ஐந் - எழு. கஅ.

௬. "கூர்வாய்ப் பறைதபு பெருங்கிழ நாரை, வஞ்சினை தூங்கி யார வுண்ணு, நீங்காப் பழனப் பெருநகர்க் கூடல்" கல். ௩௧: உ - ௪.

(பிரதிபேதம்) * நறைமறி, † உடனேபட்டு. ‡ நறையிலே. || குத்துதலாலுமுக்கோலை, ÷ ஒப்புத்தார்.